மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு

விளக்கக் குறிப்பு

லட்சம் என்பது நூறு ஆயிரம் ; கோடி என்பது நூறு லட்சம்.

T.F.P.—A-1

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு

பொது விவரம்

பொருளடக்கச் சுருக்கம்

முகவுரை.	பக்கம்.
1. சமுதாய வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும் : அணுகு முறையும் கண்ணோட்டமும்	1
2. முதலாவது இரண்டாவது திட்டங்களால் அடைந்த முன்னேற்றம்	19
3. மூன்றாவது திட்டப் பொது விவரம்	28
4. திட்ட ஆதாரங்கள்	51
5. கொள்கையும் அமைப்பும்—	67
(1) நிர்வாகமும் பொதுமக்கள் ஒத்துழைப்பும் ..	67
(2) கிராமப் பகுதியிலுள்ள ஆள் பலத்தைப் பயன் படுத்துதல்.	77
(3) சீரான பிரதேச வளர்ச்சி	82
(4) வெளிநாட்டு வாணிகம்	92
(5) வேலை வாய்ப்பு	98
(6) தொழிலாளர் நலக் கொள்கை	103
(7) நிலச் சீர்திருத்தம்	109
6. மனித ஆற்றலும் சமூகப் பணியும்—	115
(1) பொதுக் கல்வி	115
(2) தொழில் நுட்பக் கல்வி	120
(3) சுகாதாரம்	127
(4) வீட்டு வசதி	138
(5) மக்கள் நலத் திட்டங்கள்	144
7. தொழில் நுட்ப ஆள் பலமும் விஞ்ஞான ஆராய்ச்சியும்—	
(1) திட்டத்தில் பயிற்சிக்கான ஏற்பாடுகள்	153
(2) விஞ்ஞான—தொழில் நுட்ப ஆராய்ச்சி	162

		பக்கம்.
8.	வேளாண்மையும் கிராமாந்திரப் பொருளாதாரமும்—	
	(1) வேளாண்மை உற்பத்தி	169
	(2) சமுதாய நல வளர்ச்சி	178
	(3) கூட்டுறவு	188
	(4) கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, மீன் வளம் ..	195
	(5) காடுகளும் மண் வளப் பாதுகாப்பும்	200
9.	பாசனமும் மின்சாரமும்	206
10.	கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் ..	226
11.	தொழில்களும் கனிப் பொருள்களும்	237
12.	போக்கு வரத்தும் செய்தித் தொடர்பும்	279
	பொருள் குறிப்பு	295

பொருளடக்கம்.

பக்கம்:

முகவுரை.

அத்தியாயம் 1.

சமுதாய வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும்— அணுகு முறையும் கண்ணோட்டமும்.

1. திட்டமிடுவதில் சமுதாய நோக்கங்கள் 1
2. நீண்ட கால வளர்ச்சியிலுள்ள அடிப்படை விஷயங்கள் .. 4
   வளர்ச்சி முறையும் முதன்மைத் தேவைகளும் .. 6
3. மூன்றுவது திட்டத்தை அணுகும் முறை 11
   ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல் 14
   விலைவாசிக் கொள்கை 16

அத்தியாயம் 2.

முதலாவது, இரண்டாவது திட்டங்களால் அடைந்த முன்னேற்றம். 19

திட்டச் செலவும் முதலீடும் 19
தேசீய வருமான அதிகரிப்பு 20
வேளாண்மை 21
தொழில்துறையும் கனிப் பொருள்களும் 22
மின் சக்தி 25
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் 25
சமூகப் பணிகள் 26
தொழில் நுட்பக் கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும். .. 27
விலைவாசியும் வேலை வாய்ப்பும் 27

அத்தியாயம் 3.

மூன்றுவது திட்டப் பொது விவரம் 28

முதன்மை வேலைகள் 28
திட்டச் செலவு—முதலீட்டு விவரம் 31
அரசாங்கத் துறையில் திட்டச் செலவு 33
அந்நியச் செலாவணி 35
வேலைத் திட்டங்களை முறைப்படி அமைத்தல் 35
திட்ட இலக்குகள் 37
தேசீய வருமானமும் வேலை வாய்ப்பும் 38
சீர்மைப்பாடும் நீக்குப்போக்கும் 38
வேளாண்மையும் பாசனமும் 39
தொழில் துறையும் மின் சக்தியும் 40
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் 43

	பக்கம்.
சமூகப் பணிகள்	43
இணைப்பு: உற்பத்தியும் வளர்ச்சியும் : முன்னேற்றமும் இலக்குகளும்.	45

அத்தியாயம் 4.

திட்ட ஆதாரங்கள்	51
செலவில் சிக்கனம்	52
அந்நிய செலாவணி முட்டுப்பாடும் விலைகளை நிலைப்படுத்தலும்	53
சாதகமான விஷயங்கள்	53
நிதித் திட்டம் : அரசாங்கத் துறை	54
அதிகப்படியான வரி விதிப்பு	58
தனியார் முதலீடு	60
வெளிநாட்டு ஆதாரங்கள்	61
மற்ற அம்சங்கள்	65

அத்தியாயம் 5.

கொள்கையும் அமைப்பும்—	67
1. நிர்வாகமும் பொது மக்கள் ஒத்துழைப்பும்—	67
நிர்வாகத் திறமை	67
அரசாங்கம் மேற்கொள்ளும் தொழில்கள்	70
கட்டுமானச் செலவில் சிக்கனம்	72
பொது மக்கள் ஒத்துழைப்பு	74
2. கிராமப் பகுதியிலுள்ள ஆள் பலத்தைப் பயன்படுத்துதல்.	77
3. சீரான பிரதேச வளர்ச்சி—	82
மாநிலத் திட்டங்கள் ஆற்றவேண்டிய பணி	84
விசேஷப் பகுதிகளுக்குரிய வேலைத் திட்டங்கள்	84
தொழில் அமைக்கும் இடங்களும், தொழில்களைப் பரவலாக அமைத்தலும்	85
மூன்றாவது திட்டத்தில் கொண்டுள்ள கொள்கை ..	87
பிரதேச அபிவிருத்தி ஆராய்ச்சிகள்	90
4. வெளிநாட்டு வாணிகம்—	93
இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்றுமதி அதிகரிப்பு ..	93
மூன்றாவது திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்	94
5. வேலை வாய்ப்பு	98
6. தொழிலாளர் நலக் கொள்கை	103
7. நிலச் சீர்திருத்தம்—	109
இடைத் தரகர் முறையை ஒழிப்பது	110
குடிவாரச் சீர்திருத்தங்கள்	111
நில உடைமை உச்சவரம்பு	112
வேளாண்மைத் தொழிலாளர்கள்	113

பக்கம்.

அத்தியாயம் 6.

மனித ஆற்றலும் சமூகப் பணியும்	115
1. பொதுக் கல்வி	115
துவக்கக் கல்வி	116
உயர்நிலைக் கல்வி	119
பல்கலைக் கழகக் கல்வி	121
சமூகக் கல்வி	122
கல்வியில் ஒழுக்க அறிவும், சமூக அறிவும்	123
தேசப் பணி	123
மற்ற வேலைத் திட்டங்கள்	123
2. தொழில் நுட்பக் கல்வி	123
3. சுகாதாரம்	127
கிராமப் பகுதியில் குடி தண்ணீர் வசதி	128
நகரப் பகுதியில் குடி தண்ணீர் வசதி	130
ஆரம்பச் சுகாதார யூனிட்டுகள், மருத்துவ மனைகள், மருந்துச் சாலைகள்	131
தொத்து நோய்கள்	132
பொதுச் சுகாதாரப் பணிகள்	134
பயிற்சி வசதிகள்	135
நாட்டு மருத்துவ முறைகள்	136
குடும்பக் கட்டுப்பாடு	137
4. வீட்டு வசதி	138
வேலைத் திட்டங்களை ஆராய்தல்	139
தொழிற்சாலைத் தொழிலாளருக்கு வீட்டு வசதி	139
குறைந்த வருமானமுள்ளவருக்கு வீட்டு வசதி	140
சேரி ஒழிப்பும், சேரி அபிவிருத்தியும்	141
நில ஆர்ஜிதமும், அபிவிருத்தியும்	141
கிராம வீட்டு வசதி	142
வேளாண்மைத் தொழிலாளர் வீட்டு வசதிக்குரிய மனைக் கட்டுகள்	144
5. மக்கள் நலத் திட்டங்கள்	144
பின்னிலை வகுப்பினர் நலன்	145
ஷெட்யூல்டு மலை ஜாதியினர்	145
ஷெட்யூல்டு ஜாதியினர்	147
குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட மலை ஜாதியினர்	148
சமூக நலன்	149
மது விலக்கு	152
புனர் வாழ்வளிப்பு	152

பக்கம்.

அத்தியாயம் 7.

தொழில் நுட்ப ஆள்பலமும் விஞ்ஞான ஆராய்ச்சியும். 153

1. திட்டத்தில் பயிற்சிக்கான ஏற்பாடுகள் 153
இஞ்சினீரிங் பணியாளர்கள் 153
தொழில் வினைஞர்கள் பயிற்சி 155
இதர பயிற்சித் திட்டங்கள் 156
தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு ஆசிரியர்கள் பயிற்சி .. 157
விஞ்ஞானப் பணியாளர்கள் 157
வேளாண்மையும் கிராம நல வளர்ச்சியும் 158
கல்வி இதர சமூக நலப் பணிகளுக்கான அலுவலர்கள் .. 160
நிர்வாகமும் புள்ளி விவரமும் 161

2. விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சி 162
விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கவுன்சில் 163
விஞ்ஞான ஆராய்ச்சி கலாசார விவகார அமைச்சரகம் .. 164
தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பொரேஷன் 165
விஞ்ஞானக் கருவிகளும் இதர திட்டங்களும் 166
அணு சக்தி 166
இதர ஆராய்ச்சித் திட்டங்கள் 168

அத்தியாயம் 8.

வேளாண்மையும் கிராமாந்திரப் பொருளாதாரமும். 169

1. வேளாண்மை உற்பத்தி 169
முதலாவது இரண்டாவது திட்டங்களின் கீழ் முன்னேற்றம். 169
விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேலைத் திட்டம் 172
வேளாண்மை உற்பத்தியின் லட்சிய அளவுகள் 176
மூன்றாவது திட்டத்தில் செலவுகள் 177

2. சமுதாய நல வளர்ச்சி 178
வரிசைக் கிரமமும் ஸ்தாபனமும் 180
கிராம உற்பத்தித் திட்டங்கள் 182
திட்டமிடுவதிலும் அபிவிருத்தியிலும் வட்டாரம் ஒரு யூனிட் 184
ஜனநாயக நிறுவனங்கள் 185
சமூக நல வளர்ச்சியும் வசதிக் குறைவான மக்களும் .. 187

3. கூட்டுறவு 188
கூட்டுறவு கடன் வசதி 190
கூட்டுறவு விற்பனை வசதி 192
கூட்டுறவு பதன தொழிற்சாலைகள் 192
உபயோகிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 193
கூட்டுறவுப் பயிற்சி 193
கூட்டுறவுப் பண்ணை முறை 193

	பக்கம்.
4. கால் நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன் அளம் ..	195
கால்நடை வளர்ப்பு	195
ஆடுகளும் கம்பள அபிவிருத்தியும்	197
கோழி வளர்ப்பு	198
பால் பண்ணையும் பால் வழங்கலும்	198
மீன் அளம்	199
5. காடுகளும் மண்வளப் பாதுகாப்பும்	200
காடுகள்	200
மண் வளப் பாதுகாப்பு	203

அத்தியாயம் 9.

பாசனமும் மின்சாரமும்	206
பாசனம்	206
முதலாவது இரண்டாவது திட்ட வேலைகள்	207
மூன்றாவது திட்டத்திற்கான வேலைத் திட்டம்	207
வருமானங்கள்	209
பரிசீலனை ஆராய்ச்சி அமைப்பு	213
மின்சாரம்	213
தற்போதுள்ள அபிவிருத்திகள்	215
உற்பத்தி சக்தி அதிகரிப்பும், உற்பத்தி அளவும்	216
மூன்றாவது திட்டத்துக்கு வேலைத்திட்டம்	218
கிராமங்களுக்கு மின்சார வசதி	219
இதர அம்சங்கள்	221
இணைப்பு 1. *முன் தொடர்ச்சி திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள்.*	224
இணைப்பு 2. *பல்வேறு மாநிலங்களில் மின்சார உற்பத்தித் திறன்.*	225

அத்தியாயம் 10.

கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்	226
முன்னேற்றம் பற்றி பரிசீலனை	226
மூன்றாவது திட்டத்துக்கான வேலைத் திட்டங்கள்	229
அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள்	232

அத்தியாயம் 11.

தொழில்களும் கனிப் பொருள்களும்	237
நோக்கங்களும் முதலிட வரிசைக்கிரமும்	237
கைத்தொழில் கொள்கை	239
தொழில் முதலிட வரிசை	239

பெற்றால் ஒழிய, நகரப் பகுதிகளில் இவர்களுக்கு நல்ல வேலை கிடைக்காது. குறைந்த ஊதியமுள்ள வேலைகளில் கூட இவர்கள் ஓரளவுதான் அமரமுடியும். கிராமப் பகுதியில் நாணயக் கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும், பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களும், அபிவிருத்தியடைந்து ஜனநாயக நிறுவனங்கள் வேரூன்றி, விஞ்ஞான முறையில் வேளாண்மை அபிவிருத்தி ஏற்பட்டால், கிராமப் பகுதியிலேயே இவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருக்கும். இந்த நிறுவனங்களை நடத்துவதில் பயிற்சி அளிப்பதற்காக கிராமப் பகுதி இளைஞர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்தால் இந்த நிலை விரைவிலேயே ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி அடைய அடைய, நாளாவட்டத்தில் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகும். நகரத்தில் உள்ளவர்கள் உண்மைப் பண மதிப்பில் பெறும் ஊதியம் கிராமத்தில் இந்த வேலைகளில் அமர்ந்திருப்பவர்களுக்கும் கிடைக்கும். இப்போது கிராமத்திலே கற்றறிந்த வாலிபர்கள் வேலை வாய்ப்பை நாடி பட்டணங்களுக்கு வந்துவிடுகிறார்கள். மேற்கூறிய வகைகளில் அபிவிருத்தியேற்பட்டால், இந்த வாலிபர்கள் கிராமங்களிலேயே தங்குவர். அவர்களுடைய தலைமையையும் பணியையும் கிராமம் இழக்காது.

(7) இருக்கும் தொழிலாளர் ஒரு சிலருக்கு விசேஷப் பயிற்சி அளித்து விசேஷக் காரியங்களைச் செய்வதற்காக, உள்ளூர் தொழிலாளர்களுடன் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்கு இவர்களை அனுப்பிவைக்கலாம் அல்லது குறித்த வேலையைச் செய்யத் தகுதி பெற்ற தொழிலாளர் ஓர் ஊரில் இல்லாத போது அவ் வேலையைச் செய்ய இவர்களை அங்கு அனுப்பிவைக்கலாம். இதற்காக முன்னோடித் திட்டம் அமைத்துச் செயலாற்றி ஓரளவு அனுபவம் பெறலாம். இந்த வேலைத் திட்டத்தைச் செய்வதற்குத் தகுந்த வகை வேலை நிறுவனம் எது என்று கண்டுபிடிக்க இது மிகவும் பயன்படும்.

74. மேற்கூறிய வழிவகைகளால் அனைவருக்கும் பலன் கிடைத்துவிடும் என்று சொல்ல முடியாது. ஒரு சிலருக்கு வேலையற்ற நிலை தொடர்ந்திருக்கும். இப்போதுள்ள பொருளாதார நிலையில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியாது. முதலீடு செய்துள்ள அளவுக்கு ஏற்ற பலன் கிடைத்து, வருமானமும் செல்வமும் அதிகரித்து, சமுதாயத்தில் பயன் தரு ஆஸ்திகள் அதிகமானால் தான் இவர்களுக்கு விடிவு உண்டு. விசேஷ வேலைத் திட்டம் ஆரம்பிப்பது குறித்து ஏற்கெனவே சொல்லியுள்ளோம். சிறிய பாசன அபிவிருத்தி, காடு வெட்டி கழனி திருத்துதல், மண் அரிப்பைத் தடுப்பதற்காகச் சம உயரக் கரை கட்டுதல், பெருமளவில் மரம் நடுதல், கிராமச் சாலைகள் அமைத்தல், அபிவிருத்தி செய்தல், கிராமக் குடிசைகள் கட்டுதல், சமுதாயத் தேவைகளுக்குப் பயன்படும் வகையில் கிடங்குகளைக் கட்டுதல் முதலிய பயன் தரு நடவடிக்கைகளில் ஈடுபட நல்ல வாய்ப்பு உள்ளது. இத்தகைய வேலைகளுக்கு

	பக்கம்.
இயந்திரங்கள் உற்பத்திக்கான வேலைத் திட்டங்கள்	240
கைத் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள்	241
அரசாங்கத் தொழில் துறை வேலைத் திட்டங்கள்	242
தனியார் துறை வேலைத் திட்டங்கள்	257
இணைப்பு 1. அரசாங்கத் தொழில் துறையில் கைத் தொழில்கள் கனி வளங்கள் பிரிவில் வேலைத் திட்டங்கள்	266
இணைப்பு 2. பெரிய ஸ்தாபனத் தொழில்கள், கனி வளங்கள் உற்பத்தியின் முன்னேற்றமும் லட்சிய அளவுகளும் ..	270

அத்தியாயம் 12.

போக்கு வரத்தும் செய்தித் தொடர்பும்	279
ரயில்வேக்கள்	280
சாலைகள்	284
சாலைப் போக்குவரத்து	287
கப்பல் போக்குவரத்து	288
துறைமுகங்கள்	289
உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து	290
கலங்கரை விளக்குகள்	291
சிவில் விமானப் போக்குவரத்து	291
செய்தித் தொடர்பு	292
உல்லாசச் சுற்றுப் பிரயாணங்கள்	293
ஒலி பரப்பு	294
பொருள் குறிப்பு	295

திட்டக் கமிஷன்

ஜவஹர்லால் நேரு
தலைவர்

V. T. கிருஷ்ணமாச்சாரி
துணைத்தலைவர்

குல்சாரிலால் நந்தா
மொரார்ஜி R. தேசாய்
V. K. கிருஷ்ண மேனன்
C. M. திரிவேதி
ஸ்ரீமன் நாராயண்
T. N. சிங்
A. N. கோஸ்லா
P. C. மஹலநோபிஸ்
உறுப்பினர்கள்

விஷ்ணு ஸஹாய்
செயலாளர்

தர்லோக் சிங்
கூட்டுச் செயலாளர்

முகவுரை

கடந்த பதினெட்டு மாதங்களாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்துச் செய்துவந்த ஆராய்ச்சியின் பயனே இந்தப் பொது விவரம். திட்டக் கமிஷனும் மத்திய அமைச்சுகளும், மத்திய அரசாங்கத்தில் அமைத்த ஆய்வுக் கோஷ்டிகளும் செயற்குழுக் களும், மாநிலங்களிலுள்ள ஆய்வுக் கோஷ்டிகளும், செயற்குழுக் களும் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த ஆராய்ச்சிகள் அமைந்துள்ளன. இந்த நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களும் வெவ்வேறு அம்சங்கள் குறித்து, தகவல் அனுப்பித் துணை புரிந்துள்ளன. தேசீய வாழ்வின் பல நிலையிலும் திட்டத்தைப் பற்றிய அக்கறை பரவலாக இருந்தது திட்டக் கமிஷனுக்குப் பேருதவியாக அமைந்தது.

திட்டத்தின் பொதுவான அமைப்பை இப் பொது விவரத்தில் கொடுத்துள்ளோம். இந்த அமைப்பை 1960-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கூடிய தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் ஆலோசனை செய்தோம். இதன் முக்கிய அம்சங்களை அமைச் சரவையும் பரிசீலனை செய்தது. நமது அடிப்படை, சமூக, பொருளாதார நோக்கங்களையும் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தையும் கருதிப் பார்த்தே இப் பொது விவரத்தை அமைத்துள்ளோம்.

இரண்டு நோக்கங்கள் இதன்கண் அமைந்துள்ளன. முதலாவ தாக, பாராளுமன்றமும் மாநிலச் சட்ட மன்றங்களும் பொது மக்களில் பல பிரிவினர்களும் மூன்றாவது திட்டத்தின் நோக்கங் களையும் முதன்மைத் தேவைகளையும் பல்வேறு அபிவிருத்தித் துறைகளில் அடையவேண்டிய இலக்குகளையும் ஆராய்வதற்கு அடிப்படையாக அமைவதுடன், அடுத்து வரும் ஆண்டுகளில் எந்த அளவுக்குத் தேசீயப் பெரு முயற்சி அவசியம் என்பதை இது சுட்டிக் காட்டும். இரண்டாவதாக, அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மூன்றாவது திட்டத்தின் முடிவான அறிக்கையைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மத்திய அமைச்சுகளும், மாநில அரசாங்கங்களும் நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களும் இதற்காகத் தங்களுடைய விரிவான வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்தப் பொது விவரம் துணை செய்யும்.

இந்தப் பொது விவரத்திலுள்ள மதிப்பீடுகள் அனைத்தும் உத்தேசமானவையே. மேற்கொண்டு நடத்தப்போகும் ஆராய்ச்சிகள், கிடைக்கும் கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்து வரும் மாதங்களில் இதை மீண்டும் பரிசீலனை செய்து உரிய முறையில் மாற்றியமைப்போம்.

சமுதாய, சமூக, பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், முக்கிய கட்டமாக விளங்குகிறது. இந்தப் பொது விவரத்தில் கூறியுள்ள இலக்குகளை அடையும் திறமை நமக்கு இருக்கிறது. மூன்றாவது திட்டத்தின் ஐந்தாண்டுகளில் அடையவேண்டிய முன்னேற்றத்தின் அளவையே இவை குறிக்கின்றன.

1960-ம் ஆண்டு
ஜுன்மீ 20-ம் தேதி.

V. T. கிருஷ்ணமாச்சாரி,
துணைத் தலைவர், திட்டக் கமிஷன்.

அத்தியாயம் 1

சமுதாய வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும்: அணுகு முறையும் கண்ணோட்டமும்.

1. திட்டமிடுவதில் சமுதாய நோக்கங்கள்.

கடந்த பத்தாண்டுக் காலமாக, ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் இயற்கை வளங்களையும், மனித உழைப்பினையும் தேசிய வளர்ச்சிக்காக இந்தியா ஈடுபடுத்தி வந்திருக்கிறது. திட்டமிட்ட வளர்ச்சியின் நோக்கம் அதிக உற்பத்திபெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரம் அடைவதுமட்டும் அல்ல என்று ஆதியிலிருந்தே வலியுறுத்தியுள்ளோம். சுதந்திரம், ஜன நாயகம் ஆகியவற்றின் அடிப்படையில், சமுதாய, பொருளாதார அமைப்பு ஒன்றைப் பெறுவதே நோக்கமாகும். "இந்த அமைப்பில், தேசீய வாழ்க் கையின் பல அம்சங்களிலும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி தழுவி நிற்கும்". சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே திட்டத்தின் தலையாய நோக்கமாகும். அதே சமயத்தில் பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் மனிதருக்குள்ள ஸ்தானத்தையும் வலியுறுத்துவதும் அதன் நோக்கமாகும். சுதந்திரம் அடைவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே இவை தேசீய சுதந்திரப் போராட்டத்தில் வெளிப்பட்டன. திட்டமிட்ட வளர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்தியவர்களின் எண்ணம் இவற்றின் அடிப்படையிலேயே எழுந்தது.

2. "சமதர்மப் பாணியிலுள்ள சமூகத்தை" அடைவதே பொருளா தாரக் கொள்கையின் பொதுவான நோக்கமாயிருக்க வேண்டுமென **1954**-ம் ஆண்டு டிசம்பரில் பாராளுமன்றம் அறிவித்தது. அவ்வண் ணமே சமுதாயக் கொள்கைகளை நிர்ணயிக்கும் அடிப்படைக் கோட்பாடு களும், பொருளாதார முன்னேற்ற வழி வகைகளும், தனியார் லாபம் கருதி அல்லது ஒரு சிலரின் நன்மையைக் கருதி இருக்கக்கூடாது. அவை சமுதாயம் முழுவதன் நன்மைக்காகவும் இருக்க வேண்டும். எனவே, இப்போதுள்ள சமுதாய, பொருளாதார நிறுவனங்கள் தேசீய வளர்ச்சியில் கொண்டுள்ள பங்கினைக் கருதிப் பார்த்தே அவற்றை மதிப்பிட வேண்டும். நாம் கொண்டுள்ள சமுதாயக் காரியங்களுக்கு அவை உகந் தவையாயிராத வரையில் அவற்றை மாற்றியமைக்க வேண்டும்; அல்லது புதிய கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும். சமுதாய, பொருளாதார நிறுவனங்களைச் சீர்திருத்தி அமைப்பதில் சமுதாயம் முழுவதன் சார்பாக வும் அரசாங்கமே பெரும் பொறுப்பேற்கவேண்டிவரும். அரசாங்கம் தனக்கு வேண்டிய மூலதனத்தைத் தானே திட்டமிட்டுத் தேடிக்கொள்ள வேண்டும். தனியார் துறையில், பொருளாதார நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி அதைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவரவேண்டும்.

அப்போதுதான் கிடைக்கும் ஆதாரங்களை எல்லாம் ஒருங்கிணைத்து அபி விருத்தி செய்ய முடியும். சமுதாயத்திலுள்ள எளிய பிரிவினர்களின் நலனை, தான் மேற்கொள்ளும் கொள்கைகள் மூலம் பாதுகாத்து அவர் களும் மற்றவர்களின் நிலைக்கு விரைவில் உயரும்படிச் செய்யவேண்டும். சமதர்மப் பாணியிலுள்ள சமுதாயம் அதிக உற்பத்தியின் அடிப்படையிலும், வருமானத்தையும் செல்வத்தையும் நியாயபபடி பங்கிட்டுக் கொடுப்பதன் அடிப்படையிலும் அமையவேண்டும். இந்த அதிக உற்பத்தி நவீன விஞ்ஞானத்தையும் தொழிலியலையும் பயன்படுத்துவதன் மூலம் கிட்டும். உற்பத்திப் பிரச்சினைகளை விரிவான சமுதாய விஷயங்களினின்றும் வேறு படுத்தித் தனியாகக் கவனிக்க முடியாது. ஏனெனில், உற்பத்தி அமைப்பு நிறுவப்படும் முறையே பெருமளவிற்கு வருமானம் பங்கிடப்படும் விதத் தையும், அதன் நன்மைகள் சமுதாயத்தின் பற்பல பிரிவினருக்குச் சேரும் விதத்தையும் நிர்ணயிக்கும். அரசாங்கத்தின்கீழ் அல்லது அர சாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் முதலீடு செய்யும் திட்டங்கள் பொருளாதார, சமு தாய விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்டவையாயிருந்தாலும், வேளாண்மை, தொழில் சம்பந்தப்பட்டவையாயிருந்தாலும், அவற்றின் நேரடி விளைவுகளால் மட்டுமன்றி எதிர்காலத்தில் பொருளாதார, சமுதாய முன் னேற்றம் எந்த வகைகளில் ஏற்படும் என்பதையும் அவை நிர்ணயிப்ப தால், அவை மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

3. இவையெல்லாம் அரசியலமைப்பின் நெறிமுறைக் கோட்பாடுகளி லிருந்து பெறப்படுகின்றன. இவற்றை முதலாவது திட்டத்தில் பொது வாகக் கூறினேம். அதில் சொல்லியிருப்பதாவது : வாழ்க்கைத்தரம் நியாயமான அளவு உயர்ந்திருப்பதற்கு ஏற்ற நிலைமைகளை ஏற்படுத்து வதும் வாழ்வு வளம் பெறுவதற்கும், பணி புரிவதற்கும் குடி மக்களில் ஆண், பெண் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கவேண்டுமென்பதும் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். எனவே, உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்பு, அபிவிருத்தி, பொருளாதாரச் சமத்துவம், சமூகத்தில் நீதி ஆகிய இவற்றைத் திட்டத்தில் சமநிலையில் வலியுறுத்தியுள்ளோம். அபிவிருத்திப் பாணியும், பொருளாதார நடவடிக்கையை நெறிப்படுத்துகிற வழி வகைகளும் ஆரம்பத்திலிருந்தே சமுதாயம் கொண்டுள்ள அடிப் படை நோக்கங்களுடன் இணைக்கப்பட வேண்டுமெனவும் இரண்டாவது திட்டத்தில் வலியுறுத்தினேம். குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள், சமுதாயத்தில் உள்ள ஏழை மக்களுக்கும், பின்னிலை வகுப் பினருக்கும் அதிகம் கிடைக்க வேண்டும். வருமானம், செல்வம், பொரு ளாதாரச் சக்தி ஒரு சிலரிடத்திலேயே குவிந்திருப்பது படிப்படியாகக் குறைய வேண்டும்.

4. சமதர்மப் பாணியில் சமுதாயம் இருக்கவேண்டுமென இந்தியத் திட்டங்களில் சொல்லியிருப்பதனுலேயே, பொருளாதாரத் திட்டங்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்பது பொருளல்ல. உண்மையில் சொல்லப்போனுல், தேசீய வளர்ச்சியில் தனியார் துறை முக்கிய அங்கம் வகிக்க இடமுள்ளது. தனியார் துறை, தேசீயத் திட்டத்தி

னுள்ள பொதுக் கொள்கைகளையும், வரையறைகளையும் ஏற்றுக்கொண்டு, அரசாங்கத் துறையுடன் ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டுமென்ற அடிப் படையிலேயே இவ்வாறு ஏற்பாடு செய்துள்ளோம். தனியார் துறை என்று எண்ணும்போது, திட்ட வட்டமான முறையில் அமைந்துள்ள பெரிய யூனிட்டுகளை மட்டுமன்றி, முக்கியமாகப் பல லட்சக்கணக்கான குடியான வர்கள், கைப்பணியாளர்கள், வர்த்தகர்கள், சிறுதொழில் அதிபர்கள் ஆகியவர்களை எல்லாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். தனியார் துறை யில் இவர்களே பெரும்பான்மையினராயிருக்கின்றனர். தொழிலிலும் வர்த்தகத்திலுமுள்ள பெரிய யூனிட்டுகள் தொழிலியல் காரணங்களாலும் மற்றக் காரணங்களாலும், பொருளாதார வளர்ச்சியில் கணிசமான முக்கி யம் உள்ளவை. என்றாலும், விருப்பு வெறுப்பற்ற நிலையில் மதிப் பிட்டுப் பார்த்தோமானால், தனியார் துறை என்பதும் தொழிலிலும் வர்த்தகத்திலுமுள்ள பெரிய யூனிட்டுகள் என்பதும் ஒன்றல்ல என்பது தெரியவரும். சிறு அளவு உற்பத்தியாளர்களின் . தேவைகளைச் சமதர்ம சமுதாயப்பாணி சிறப்பாக வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக, வேளாண்மையிலும், நடுத்தர, சிறு அளவுத் தொழிலிலும், வர்த்தகத் திலும், பங்கீட்டு முறையிலும், சமூகச் சேவையின் பலதுறைகளிலும், கூட்டுறவுத் துறை வேகமாக வளரும் என எதிர்பார்க்கிறோம். கூட்டுறவு நிறுவனங்களில் இரு துறைகளின் நன்மைகளும் கலந்து பரிணமித்துள் ளன: தனியார் முன்வந்து முயற்சி எடுக்கும் தன்மையும், சிறு அளவுப் பாணியும் அவற்றில் உள்ளன. பெரிய அளவில் நிர்வாகம் இருப்பது, பெரிய அளவில் திட்டமிடுவது ஆகியவற்றின் நன்மையும் அவற்றில் இருக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் சமுதாயம் நிலைத்து நிற்பதற் கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாது இருக்க வேண்டிய ஓர் அமைப்பாகும். அரசாங்கத் துறையுடனும் சமுதாய உணர்வோடு கூடிய தனியார் துறையுடனும் சேர்ந்து, கூட்டுறவு நிறுவனங்கள் பொதுநலத் திற்கு அடிப்படையாய் அமைகின்றன. அடிப்படைப் பொருளாதார, சமு தாயக் குறிக்கோள்களை அடைவதென இந் நாடு உறுதி பூண்டுள்ளது. சகல தொழில் முயற்சிகளும், அவை அரசாங்கத் துறையில் இருந்தாலும் சரி, தனியார் துறையில் இருந்தாலும் சரி, இந்தப் பொது நலனிற்கு உகந்த வகையில்தான் இருக்கவேண்டும். பொருளாதார வளர்ச்சியில் அரசாங்கத்துறை பெரும் பணியாற்ற வேண்டியுள்ளது. அது திட்டமிட்ட தனியார் துறையுடன் அறுதியாகவும் ஒப்பு முறையிலும் வளருமென எதிர்பார்க்கிறோம்.

5. சிறுகால அளவில் வளர்ச்சித் திட்டத்தின் பொருளாதார நோக்கங் களுக்கும், சமுதாய நோக்கங்களுக்கும் இடையில் சில சமயம் முரண்பாடு இருக்கலாம். பொருளாதார நிலையிலும் சமூக நிலையிலும் சமத்துவம் வேண்டும்; அதிக வேலை வேண்டும் என்பவற்றையும், உற்பத்தித் தேவைகளையும் இணைக்கவேண்டும். எல்லாத் துறைகளிலும் சமமையான முறையில் முன்னேற்றம் கண்டால்தான் நல்ல பலன் விளையுமென்பது முதலிரண்டு திட்டங்கள் நிறைவேறியதில் இருந்து தெரிய வருகிறது.

சமதையான முறை என்ன என்பது அப்போதைய தேவைகளுக்கும் பொருளாதார சூழ்நிலைக்கும் ஏற்ப வேறுபடும். நாம் கொள்ளவேண்டிய லட்சியங்கள் இன்னதென்பதை, அடைய வேண்டிய இலக்குகள் என்ன என்பதைச் சமுதாயம் ஏற்றுக்கொண்ட நிலையில், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஜனநாயக வழி முறைகளும், விருப்ப சுதந்திரமும் நமது குறிக்கோள்களைப் பேரளவு நிறைவேற்றுவதற்குச் சிறந்த வழி வகைகள் ஆகும்.

6. அரசியலமைப்பில் கண்ட அரசாங்க நிர்வாக நெறிமுறைக் கோட்பாடுகளில் குறிப்பிட்டுள்ளதாவது: வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வேலை வசதிகளைத் தேடித்தர வேண்டும். வேலை செய்வதற்கும், கல்வி பெறுவதற்கும் உரிமையிருக்க வேண்டும். வேலையின்மை, முதுமை, நோயுடைமை, ஊனமுடைமை ஆகிய நிலைகளிலும், ஏனைய தகாவறுமை நிலைகளிலும் பொதுவிலிருந்து உதவிபெற உரிமை இருக்க வேண்டும். இந்த நோக்கங்கள் எய்தப்பெற, சமூகத்தின் பொருட் சாதனங்களின் உடைமையும் அவற்றின் ஆட்சியும் சிறந்த முறையில் பொது நலனிற்குப் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பொருளாதார முறை பயன்படுவதன் விளைவாகச் செல்வமும், பொருளாதாரச் சக்தியும் ஒரு சிலரின் கையில் குவியக்கூடாது. இந்த நாடு அடுத்தடுத்து மேற்கொள்கிற ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும்.

2. நீண்டகால வளர்ச்சியிலுள்ள அடிப்படை விஷயங்கள்

7. வளர்ச்சி குன்றியுள்ளதற்குரிய காரணங்கள் மிகப் பல. குறைந்த அளவு உற்பத்தி, குறைந்த அளவு வருமானம், குறைந்த வாழ்க்கைத் தரம், மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் வேளாண்மையில் ஈடுபட்டிருத்தல், பெருமளவு மக்களுக்குப் போதிய வேலை கிடைக்காதிருத்தல், சாதனங்களுக்கும் தொழில் நுட்ப அறிவுக்கும் அதிக முன்னேற்றமடைந்த நாடுகளை நம்பியிருத்தல், போதிய அளவு வளர்ச்சியின்மை ஆகியவை அக் காரணங்களாகும். இவற்றையெல்லாம் திட்டத்தில் ஆராய்ந்து சீர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. இவற்றிற்குத் தீர்வு காண வேண்டுமானால், நீண்ட கால அளவில் திட்டமிட்டு அபிவிருத்தியடைய வேண்டும். ஒரு நாடு ஏழ்மை நிலையிலிருந்து ஆற்றலுடன் கூடிய வளர்ச்சி பெற வேண்டுமானால், வெகுகாலம் விடாப்பிடியாக முயற்சி செய்துதான் ஆகவேண்டும். அந்தக் காரணத்தை முன்னிட்டுத்தான் முதலாவது திட்டத்தில் அபிவிருத்திப் பிரச்சினையை 25 அல்லது 30 ஆண்டுக் காலத்தில் கவனிப்பதென முடிவு செய்தோம். இந்தப் பேரளவுக் கால எல்லையில் முதல் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன செய்வதென்றும் நிர்ணயித்தோம்.

8. சில காரியங்களுக்கு அபிவிருத்தி நிலைகளைச் சிறு சிறு கால அளவுக்கென வகுத்துக்கொள்வது வசதியானது. என்றாலும், உண்மையில் அது தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு

கால அளவுக்குமுள்ள நோக்கங்களும், முதலில் கவனிக்க வேண்டிய வேலைகளும் பேரளவு நோக்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆக, முதலாவது, இரண்டாவது திட்டங்கள் இந் நாட்டின் சமுதாய, பொருளாதார நீண்ட கால வளர்ச்சியின் நிலைகளாக வகுக்கப்பட்டன. 1950–51 முதல் 1980–81 வரையுள்ள முப்பதாண்டுக் கால அளவில் பொருளாதார வளர்ச்சி எப்படியிருக்கும் என்பதை முதல் திட்டம் எடுத்துக் காட்டுகிறது, மக்கள் பல்கிப் பெருகும் வீதம், வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் மீண்டும் முதலீடு செய்யக்கூடிய தேசீய வருமான அதிகரிப்பு வீதம், ஏற்கெனவே செய்த முதலீட்டிலிருந்து அதிக உற்பத்தி மூலம் கிடைக்கக் கூடிய வருமானம் ஆகியவை குறித்து ஒரு சில அனுமானங்களை உத்தேசமாக வைத்துக்கொண்டு, 1950–51-ம் ஆண்டில் இருந்த தேசீய வருமானம் 1971–72-ம் ஆண்டில் இரு மடங்கு ஆகும் என்றும், தனி நபர் வருமானம் 1977–78-ம் ஆண்டில் இருமடங்கு ஆகும் என்றும் கருதினோம். முதலாவது திட்டத்தில் கிடைத்த அனுபவத்தின் மூலம் முன்பு செய்த மதிப்பீடுகளையும் அனுமானங்களையும் இரண்டாவது திட்டத்தில் திருத்தியமைத்தோம். 1950–51-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக வைத்துக் கொண்டோமானால், தேசீய வருமானம் 1967–68-ம் ஆண்டில் இருமடங்கு ஆகுமெனவும், தனி நபர் வருமானம் 1973–74-ம் ஆண்டில் இருமடங்கு ஆகும் எனவும் 2-வது திட்டத்தில் குறிப்பிட்டோம். இப்போதுள்ள மக்களில் 69 முதல் 70 சத வீதத்தினர் வேளாண்மையையே நம்பியுள்ளனர். இவர்களை ஐந்தாவது திட்ட முடிவில் 60 சத வீதத்தினராக்குவது மற்றொரு திட்ட நோக்கமாகும்.

9. இரண்டாவது திட்ட மதிப்பீடுகளில் குறிப்பிட்டுள்ள இலக்குகளை எய்துவது இரு தொகுதி விஷயங்களைப் பொறுத்திருக்கும்—என்ன வீதப்படி மக்கள் பெருகுகிறார்கள் என்பது ஒன்று; அடுத்த மூன்று திட்டக் கால அளவுகள் ஒவ்வொன்றிலும் எந்த அளவில், எந்த முறையில் எவ்வளவு தீவிரமாக முயற்சி செய்யப்படுகின்றதென்பது மற்றொன்று. மக்கள் பெருக்கத்தைப் பொறுத்த வரையில், 2-வது திட்டம் வெளியிட்ட பிறகு முக்கிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் கால அளவில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளதைவிட அடுத்த 15 ஆண்டுகளில் மக்கள் பெருக்கம் அதிகமாயிருக்குமென இப்போது செய்துள்ள ஆராய்ச்சிகளினின்றும் தெரிய வருகிறது. மத்தியப் புள்ளி விவர நிறுவனம் தயாரித்துள்ள மக்கள் பெருக்க மதிப்பீடுகள் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பெற்றுள்ளன. மூன்றாவது திட்டம் தயாரிப்பதற்கு இவையே தாற்காலிக அடிப்படையாய் அமைந்துள்ளன. 2-வது திட்ட அறிக்கையில் உள்ள புள்ளி விவரத்தையும் இவற்றுடன் கொடுத்துள்ளோம்.

(ரூபாய் கோடிக் கணக்கில்)

	1951	1956	1961	1966	1971	1976
இரண்டாவது திட்ட மதிப்பீடுகள் ..	36·2	38·4	40·8	43·4	46·5	50·0
மத்தியப் புள்ளி விவர .. .. நிறுவன மதிப்பீடுகள்	36·2	39·1	43·1	48·0	52·8	56·8

மத்தியப் புள்ளி விவர நிறுவனத்தின் மதிப்பீடுகள் இயல்பாகவே உத்தேசமானவையாக இருக்கும். அவை அடியிற்கண்ட பிறப்பு, இறப்பு, வளர்ச்சி வீதங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன :—

(ஆண்டு ஒன்றுக்கு 1,000 என்ற கணக்கில்)

	1951-1956	1956-1961	1961-1966	1966-1971	1971-76.
பிறப்பு வீதம்	41·7	40·7	39·6	32·9	27·3
இறப்பு வீதம்	25·9	21·6	18·2	13·9	12·6
வளர்ச்சி வீதம்	15·8	19·1	21·4	19·0	14·7

இந்த மதிப்பீடுகளின்படி 1951 முதல் 1976 வரையுள்ள கால அளவில் மக்கள் தொகை மொத்த உயர்வு 20·6 கோடியாக இருக்கும். ஆனால், இரண்டாவது திட்டத்தில் இந்த எண்ணிக்கை 13·8 கோடியாக இருக்கு மென்றுதான் மதிப்பிட்டோம். மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப, தொழிலாளரின் எண்ணிக்கை 1951-ம் ஆண்டில் 14·1 கோடியாக இருந்தது 1976-ம் ஆண்டில் 22·2 கோடியாக உயருமென மதிப்பிட்டுள்ளோம். 1961 முதல் 1976 வரையுள்ள 15 ஆண்டுக் கால அளவில் தொழிலாளர் எண்ணிக்கை 6 கோடி உயரும். இவர்களில் மூன்றில் இரு பகுதியின ருக்கு மேற்பட்டவர் வேளாண்மையல்லாத மற்றத் துறைகளில் வேலை பெற வேண்டிருக்கும்.

10. குறைந்த வருமான அளவும், குறைந்த அளவு உட் கொள்ளு தலும் உடைய ஒரு பொருளாதாரத்தில் மக்கள் தொகை வேகமாக அதிகரித்தால் பொருளாதார வளர்ச்சி வேகம் குன்றும். மக்கள் தொகை அதிகரிப்பதால் அவர்களுக்கு அதிக உணவு தேவைப்படும். வளர்ந்து வரும் தொழிலாளர் சமூகத்திற்குப் பயன்தரு வேலை தேடும் சிரமம் அதிகமாகும். தனி நபர் வருமானம், வேளாண்மையை நம்பியிருக்கும் மக்கள் சத வீதத்தைக் குறைத்தல் ஆகிய இரு துறைகளில் நாம் கொண்டுள்ள நீண்டகால நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானால், மூல தனச் சேமிப்பு கணிசமாக அதிகரிக்க வேண்டும். பிறப்பு வீதங்களைக் குறித்து மேலே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளை மக்களின் நோக்கம் மாறும், குடும்பக் கட்டுப்பாடு முறை நல்ல வெற்றியடையும் என்று அனுமானித்தே செய்துள்ளோம். இப்பொழுதிருக்கும் மக்கள் தொகையை அதே நிலையில் வைத்து வருவதென்ற நோக்கம் அபிவிருத்தித் துறையில் முக்கிய மான அம்சமாக நிச்சயம் கருதப்படவேண்டும்.

வளர்ச்சி முறையும் முதன்மைத் தேவைகளும்

11. அடுத்த மூன்று திட்டக் கால அளவுகளில் ஆண்டு ஒன்றுக்குத் தேசீய வருமானம் 5 சத வீதம் அதிகரிக்குமென 2-வது திட்டத்தில் மதிப்பிட்டோம். ஒவ்வொருவரும் செலவிடும் அளவு படிப்படியாக உயர வேண்டுமென்பது நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தின் தலையாய பொருளாதார நோக்கமாகும். உற்பத்தி தொடர்ந்தும் பெருமளவிலும் அதிகரித்தால் தான் இந் நோக்கம் நிறைவேறும். இதையே வேறு சொற் களில் கூறுவதானல், பொருளாதாரம் விரைவாக விரிவடைந்து மிகக் குறுகிய கால அளவுக்குள் தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையில்

தன் நிறைவு அடையும் வண்ணம் அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கி அமைக்க வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால், அடியிற்கண்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்படவேண்டும் :—

(அ) முதலீட்டு வீதம்.—இரண்டாவது திட்டத்தில் வலியுறுத்திக் கூறியுள்ளவாறு, மொத்த தேசீய வருமானத்தில் முதலீட்டு வீதாச்சாரம் படிப்படியாக உயர்ந்து வர வேண்டும். இதை இரண்டாவது திட்டத்தில் செய்துள்ள மதிப்பீடுகளினின்றும் விளக்கிக் கூறலாம். முதலாவது திட்ட முடிவில் தேசீய வருமானத்தில் 7 சத வீதமாக முதலீட்டு வீதம் உயருமென்றும் இது 2-வது திட்ட முடிவில் 11 சத வீதமாக உயருமென்றும், மூன்றாவது திட்ட முடிவில் இது 14 சத வீதமாக உயருமென்றும், 4, 5-வது திட்ட முடிவில் முறையே 16, 17 சத வீதமாக உயருமென்றும் கணக்கிட்டோம்.

(ஆ) அடிப்படைத் தொழில்களும் கன ரகத் தொழில்களும்.— பொருளாதாரம் விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டுமானால், உருக்கு, எரிபொருள், மின்சக்தி, இயந்திரக் கட்டுமானம் போன்ற அடிப்படைத்தொழில்கள் பெருமளவில் அமைக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யா விட்டால், நம் நாட்டிலுள்ள ஆதாரங்களைக் கொண்டே போதுமான அளவிற்கு நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்க முடியாது ; தன்னிறைவு உள்ள வளர்ச்சி இருக்க முடியாது. அதிக மக்கள் தொகையும், வளமான ஆதாரங்களும் உள்ள இந்திய நாட்டில் இதன் விளைவு மகத்தானதாயிருக்கும். ஆனால், மிகக் குறைந்த கால அளவில் இத் துறையில் விரைந்து முன்னேற்றம் காண வேண்டி இருக்கும்.

(இ) வேளாண்மை.—இந்நாட்டின் பொருளாதார அமைப்பிலேயே கிடைக்கிற ஆதாரங்களை முழுதும் பயன்படுத்தி மிகவும் முன்னேறக்கூடிய அபிவிருத்தித் துறைகளில் இயன்றவரையில் பேரளவு அபிவிருத்தி அடைய வேண்டும். எனவே, இந்நாடு பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேறவேண்டுமானால், நாட்டுப்புறத்திலுள்ள ஆள் பலத்தையும், உள்ளூர் ஆதாரங்களையும் பெருமளவில் பயன்படுத்துவது என்ற அடிப்படையில் வேளாண்மை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். தற்போதைய அபிவிருத்தி நிலையில், போதுமான அளவு உணவுத் தானியங்களை உற்பத்தி செய்வதே மிக அவசரத் தேவையாகும். குறுகியக் கால அளவில் வேண்டிய அளவு உற்பத்தி செய்யும் திறன் ஏற்பட்டுவிட்டால், சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப உற்பத்தித் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். குறித்த கால அளவில் நிறைவேற்றவேண்டிய நோக்கங்கள் அடியிற்கண்டவையாகும் : பல துறையில் பாகுபாடு செய்யப்பட்ட தீவிரமான வேளாண்மை முறை, கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, இறைச்சி உற்பத்தி, மீன்வளம், கோழிப்பண்ணை முதலியவை அபிவிருத்தி செய்தலும், மக்கள் தொகை முழுவதற்கும் சமன் செய்யப்பட்ட உணவு வழங்கலும், வளர்ந்து வரும் தொழில் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் வேண்டிய அளவு வணிகப் பயிர்களை அபிவிருத்தி செய்தலும் அந்த நோக்கங்களாகும்.

வேளாண்மையை அபிவிருத்தி செய்யவேண்டுமானால், பெருமளவிற்குப் பாசன வசதி ஏற்படுத்த வேண்டும். ரசாயன உரங்கள் அதிகம் உற்பத்தி செய்யவேண்டும்.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில், அடியிற்கண்டவற்றில் ஏற்படும் வெற்றியைப் பொறுத்தே வேளாண்மை அபிவிருத்தி அடையும் :—

(1) தொழிலியல் மாற்றங்கள் ஏற்படுத்துதல் ; வேளாண்மைத் துறையில் விஞ்ஞான முறைகளையும் சிறந்த கருவிகளையும் மற்ற சாதனங்களையும் பயன்படுத்துதல் ;

(2) கிராமப் பகுதிகளிலுள்ள ஆள்பலத்தை நன்கு பயன்படுத்துதலும், பேரளவுக்கு உள்ளூர் முயற்சிகளை ஊக்குவித்தலும் ;

(3) கிராமப் பொருளாதாரத்தைக் கூட்டுறவு முறைகளில் சீர்திருத்தி அமைத்தல், பணி புரிதல், கடன் வசதி செய்து தருதல், விற்பனை வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், தொழில் முறை கற்றுத் தருதல், பங்கீட்டு முறை ஏற்பாடு செய்தல், கூட்டுறவு உற்பத்தி முறையை அமுலுக்குக் கொண்டுவருதல், வேளாண்மையையே நம்பியிருக்காமல் வேறு சில தொழில்களும் கற்றுத் தருதல் ஆகியவைகளும் இதில் அடங்கும்.

சமுதாய வளர்ச்சி இயக்கத்தின் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி மூலமாகவும் இந்த இலக்குகளை நோக்கி முன்னேறி வருகிறோம். இன்னும் தீவிர முயற்சி செய்யவேண்டும்.

(ஈ) சமூகச் சேவைகளும் சம வாய்ப்பும்.—நாடு முழுவதற்குமாக உற்பத்தி அளவை உயர்த்துவதற்குச் செம்மையான, விரைவான வழிவகைகளை உருவாக்குவது நீண்ட காலத் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். அப்படிச் செய்தால்தான் பொது நலன் பெருகும். இந்த முயற்சியின் அடிப்படையில் நாட்டின் ஆள்பலத்தைச் சிறப்பாகக் கல்வித் துறையிலும் சுகாதாரத் துறையிலும், வலுப்படுத்துவதற்குரிய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும், திறமை, தொழில் நுட்ப அறிவு, விஞ்ஞான அறிவு ஆகியவற்றின் நிலைகளை உயர்த்துவதற்காகவும் விஞ்ஞான, தொழிலியல் ஆராய்ச்சிக்காகவும் உள்ள வேலைத் திட்டங்களும் இருக்கின்றன. இந்த நோக்கத்துடன் மூன்றுவது திட்டக் கால அளவில் 6–11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க உத்தேசித்துள்ளோம். 14 வயது வரை, அனைவருக்கும் கல்வி வழங்குவதே அடுத்த நடவடிக்கையாகும். இந்த நோக்கம் 4-வது, 5-வது திட்டக் கால அளவில் நிறைவேறவேண்டும்.

மூன்றுவது திட்டக் கால அளவில் குறைந்த அளவு வசதிகள் செய்து தருவதற்குரிய வேலைத் திட்டத்தைக் குறித்தும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம். குடிதண்ணீர் வழங்கல், அணுகு சாலைகள் அமைத்தல், சமுதாய நிலையமாகப் பயன்படக்கூடிய கிராமப் பள்ளிக்கூடம் கட்டுதல் ஆகியவை இதில் அடங்கும். கிராம நூல் நிலையத்திற்கான வசதிகள் ஏற்படும். ஒவ்வொரு கிராமத்தையும் அடுத்துள்ள முக்கிய சாலையுடன் அல்லது ரயில் நிலையத்துடன் இணைப்பதற்குச் சாலை போடப்படும். மக்கள் ஆதர

வுடனும் அவர்கள் எடுத்துக்கொள்ளும் பங்குடனும் மேற்கொள்ளப்படுகிற இந்த அபிவிருத்தித் திட்டங்கள், மற்ற அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை மூலமாக எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை, சிறப்பாக உணவு, குடிதண்ணீர், உடை, துவக்கக் கல்வி, சுகாதாரம், துப்புரவு, வீட்டு வசதி, படிப்படியாக அனைவருக்கும் வேலை ஆகியவற்றைச் செய்து கொடுக்க முயலு கிறோம்.

12. பொருளாதாரத்தின் முதலீட்டுத் தேவைகள்.—எதிர்கால முதலீடு களைப்பற்றிய மதிப்பீடுகள் இயல்பாகவே பற்பல விஷயங்களைப் பொறுத்து இருக்கும். சமுதாயத்தின் தற்போதைய வருமானத்தில் மூலதன முதலீட் டிற்குப் பயன்படுத்தக்கூடிய அளவு, செய்துள்ள முதலீட்டிலிருந்து அதிக உற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானம், வெளி நாட்டிலிருந்து கிடைக்கக் கூடிய உதவியின் அளவு, பொருத்தமான மற்ற விஷயங்கள் ஆகியவை அவற்றில் அடங்கும். திட்டக் கமிஷன் மேற்கொண்ட பூர்வாங்க ஆராய்ச்சி களிலிருந்து விளங்குவது என்னவென்றால்: 1960–61-ம் ஆண்டில் (1958–59 விலைகளின்படி) தேசீய வருமானம் ரூ. 13,000 கோடியிலிருந்து 1965–66-ம் ஆண்டில் ரூ. 17,000 கோடியாக உயரவேண்டுமானால், மூன் றாவது திட்டக் கால அளவில் ரூ. 10,000 கோடி நிகர முதலீடு செய்ய வேண்டியிருக்கும். முதல் திட்டத்தில் ரூ. 3,360 கோடி மொத்த முதலீடு செய்யப்பட்டது; 2-வது திட்டத்தில் இந்த மொத்த முதலீடு ரூ. 6,750 கோடியாக இருந்தது. தேசீய வருமானத்தை 4-வது திட்ட முடிவில் ரூ. 22,000 கோடியாகவும், 5-வது திட்ட முடிவில் ரூ. 30,000 கோடியாக வும் உயர்த்தவேண்டுமானால், 4-வது திட்டக் கால அளவில் ரூ. 15,000—16,000 கோடியும், 5-வது திட்டக் கால அளவில் ரூ. 21,000—22,000 கோடியும் நிகர முதலீடு செய்யவேண்டியிருக்கும்.

13. வெளிநாட்டு உதவியின் முக்கியத்துவம்—தேசீய வருமானம் விடாப்பிடியாகவும் தொடர்ந்தும் அதிகரித்துவர வேண்டுமானால், முதலீடு செய்யும் அளவு தேசீய வருமானத்தில் படிப்படியாக அதிகரித்து வருதல் மிகவும் அவசியமாகும். முதலீடு செய்வதற்கு வேண்டிய தொகையில் பெரும்பகுதி உள்நாட்டு ஆதாரங்களில் இருந்தே கிடைத்துவிடும். ஆனால் அந்நியச் செலாவணி போதிய அளவு இல்லாதிருப்பதால், குறுகியக் கால அளவில், இந்த நாட்டின் உள்ளடங்கு ஆற்றலைப் பயனுள்ள செல்வமாக மாற்றக்கூடிய அளவு குறைந்து போகிறது. வெளி நாட்டு ஆதாரங்களை நம்பியிருப்பதைக் குறைப்பதற்காக உள்நாட்டு மூலதனப் பொருள்களையும், இடைத்தரப் பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்வதும் குறைந்து விடுகிறது. இந்த நாட்டுப் பொருளாதாரம் இன்றுள்ள நிலையில் இக் குறை பாடு இயல்பாகவே உள்ளது. வழக்கமான ஏற்றுமதிகள் மூலம் அந்நியச் செலாவணி பெறுவதற்குரிய சாத்தியக்கூறுகளை முழு அளவிற்கு அபி விருத்தி செய்யவேண்டும். எனினும், இந்த நாட்டில் அடிப்படைத் தொழில்களையும் கனரகத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வது, யந் திரம் கட்டும் தொழிலை அபிவிருத்தி செய்வது என்ற முயற்சியை மேற் கொள்ளும்போது இந்த அந்நியச் செலாவணிப் பிரச்சினை மேலும் சிக்கல்

நிறைந்ததாகிவிடுகிறது ; இந்தச் செலாவணியின் பற்றுக்குறை அதிகமாகி விடுகிறது. இறக்குமதியைக் குறைக்க வேண்டுமானால், நாட்டில் உற்பத்தித் திறனை அதிகரிக்கத்தான் வேண்டும். இந்த நாடு தனது ஆதாரங்களை ஒருங்கு திரட்டி, தொழில் துறையில் முன்னேற நினைக்கும்போது, இரு தலைக்கொள்ளி நிலை ஒன்று ஏற்படுகின்றது. தொழில் துறையில் முன்னேற வேண்டுமானால், முதற்கண் வெளி நாட்டிலிருந்து யந்திரங்கள், சாதனங்கள், உலோகங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்தாகவேண்டும். தான் ஏற்றுமதி செய்வதிலிருந்து கிடைக்கிற பணத்தைக்கொண்டு ஒரு குறித்த கால அளவு வரையில் இந்த வெளி நாட்டு இறக்குமதிகளுக்குப் பணம் கொடுக்க முடியாமலிருக்கும். இந்த நிலையில் வெளி நாட்டு உதவி அவசியம் தேவைப்படுகிறது. இந்த உதவி இந்தியாவிற்கு ஏற்கெனவே கிடைத்துவருவதால், இந்தியாவின் பொருளாதாரம் துரித கதியில் வளர்ச்சியடைந்து வருகிறது. வெளிநாட்டு உதவியின் மதிப்பை மிகைப்படுத்திக்கூற முடியாது. வெளிநாட்டு உதவியை நம்பியிருக்கும் நிலை இயன்ற விரைவில் நீங்கவேண்டுமானால், உள்நாட்டுப் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். அதற்கு முதற்கண் வெளிநாட்டு உதவி அவசியம். வெளிநாட்டு உதவியை நம்பியிருக்கும் இந்த நிலை நீங்கவேண்டுமானால், ஏற்றுமதிஊக்கு விக்கும்—இறக்குமதி தவிர்க்கும் தொழில்களுக்கு முதலிடம் அளிக்கவேண்டும். உள்நாட்டு உற்பத்தியிலிருந்து வேண்டிய உபரிப் பொருள்களைப் பெறுவதற்கும் அவற்றை வெளி நாடுகளில் குறைந்த விலைகளில் விற்பதற்கும் பயன்படுகிற கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரம் அடுத்த இரண்டு திட்டங்களில் முன்னேற்றமடைந்து, ஆதாரத் தன்னிறைவு பெற்று வளமான பொருளாதார நிலையை அடைய வேண்டுமானால், ஏற்றுமதியை அதிகரிப்பதற்குரிய இந்த அம்சங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

14. ஆராய்ச்சியும் அளவீடும்.—விஞ்ஞானத்திலும், தொழிலியலிலும் மாற்றங்களும் பெருமளவு முன்னேற்றங்களும் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. எனவே, தொழில் அபிவிருத்தித் திட்டங்களும் அதனுடன் இணைந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் எப்போதும் பரிசீலனையிலேயே இருந்து வரவேண்டும். அவ்வப்போது புதிதாக ஏற்படுகிற சாத்தியக் கூறுகளைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். உதாரணமாக, கனரக ரசாயனம், உலோகத் தொழில்கள், மின்சக்தி அபிவிருத்தி முதலிய துறைகளில் இப்படிச் செய்ய வேண்டும். இந்த நாட்டில் பெருந் தொழில்களிலும் சிறு தொழில்களிலும் உள்ள பற்பல பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் தீவிரமாக ஆராய்ச்சி செய்வது அவசியம். அவ்வண்ணமே, ஆராய்ச்சியின் பயன்களை நடைமுறையில் பயன்படுத்தவேண்டும். எல்லாத் துறைகளிலும் அடிப்படை ஆராய்ச்சி செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். உற்பத்தித் துறையில் ஏற்படும் சீர்திருத்தம் சிறிதாக இருக்கலாம் ; ஆனால், பல கோடிக்கணக்கான மக்கள் வேலை செய்வதால் மொத்த உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் ; எனவே, அபிவிருத்தித் துறையின் ஒவ்வொரு நிலையிலும் இது விசேஷக் கவனம் பெறவேண்டும்.

15. இயற்கை வளங்களை ஆராய்வதற்காகவும், அளவிடுவதற்காகவும், முதல், இரண்டாவது திட்டங்களில் ஏற்பாடு செய்திருந்தோம். தண்ணீர் மின்சக்தி ஆராய்ச்சி மத்தியக் கழகம், இந்திய நில ஆராய்ச்சி சர்வே நிலையம், சுரங்க ஆராய்ச்சி நிலையம், மண் எண்ணெய் இயற்கை வாயு ஆராய்ச்சிக் கழகம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், மாநில அரசாங்கங்கள், இதர நிறுவனங்கள் ஆகியவை ஏற்கெனவே பயன்மிக்க ஆராய்ச்சிகள் பல செய்துள்ளன. நீண்ட காலத் திட்டமிட வேண்டுமானால், இப்போதுள்ள ஆதாரங்களைப்பற்றிய விரிவான தகவல் முதற்கண் தெரிந்திருக்கவேண்டும். பாசனம், மின்சக்தி, உருக்கு, நிலக்கரி, மண்ணெண்ணெய், கனி வளம், நிலவளம், காட்டுவளம், பொதுவாக இயற்கை வளப்பாதுகாப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதன் நீண்ட கால நோக்கங்கள் விஷயமாய் இப்போதுள்ள தகவல் என்ன, என்னென்ன விஷயம் தெரியாமல் உள்ளது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ப தெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். எனவே, ஆராய்ச்சி செய்வதற்கும் சர்வே செய்வதற்கும், முறையான வேலைத் திட்டங்களை வகுத்து அதற்கு வேண்டிய நிறுவனங்களைப் பலப்படுத்த வேண்டும். இயற்கைவள ஆராய்ச்சியை ஒருங்கிணைந்த முறையில் திட்டமிட்டுத் தொடர்ந்து செய்வ தற்கும், அவ்வப்போது கிடைத்த முடிவுகளைப் பரிசீலனை செய்வதற்கும் தகுந்ததொரு நிறுவனமொன்றை இப்போது அமைத்தாகவேண்டும். இந்த நிறுவனம் நெறியாளர் குழு வடிவில் இருக்கலாம். மேற்கூறிய பல்வேறு நிறுவனங்களின் தொழில் நுட்பத் தலைவர்கள் இதில் அங்கம் வகிப்பர். தலைசிறந்த விஞ்ஞானிகள் சிலரும் இதில் பங்கு கொள்வர். மிகச் சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்களும் இதற்கு உதவி செய்வர். இதுபற்றிய விவரங்களை வெகு விரைவிலேயே தயாரிக்க முடியும் என நம்புகிறோம்.

3. மூன்றாவது திட்டத்தை அணுகும் முறை.

16. மூன்றாவது திட்டத்தின் நோக்கங்கள், முதலில் எடுத்துக்கொள்ள வேண்டிய வேலைகள், இலக்குகள் ஆகியவற்றை வரையறுப்பதில் தீர் மானமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அடியிற்கண்டவையாகும். மேலே விவரித்துள்ள சமுதாய நோக்கங்கள், திட்டக் கால அளவின் பொரு ளாதாரத் தேவைகள், நீண்டகால அபிவிருத்திக் கண்ணோட்டத்தில் இத் திட்டம் அமைக்கப்படவேண்டிய முறை, முதலிரு திட்டங்களில் கண்ட முன் னேற்றம் ஆகியவை அவ் விஷயங்களாகும். முதலாவது, இரண்டாவது திட்டக் கால அளவில் தேசீய வருமானம் 42 சத வீதம் உயருமென எதிர் பார்த்துள்ளோம். மூன்றாவது திட்டக் கால அளவில் ஆண்டு ஒன்றுக்கு தேசீய வருமானம் 5 சதவீதம் உயரும். எனவே, 1951 முதல் 1966 வரையில் 15 ஆண்டுக் கால அளவில் தேசீய வருமானம் மொத்தம் 80 சத வீதம் உயர்ந்துவிடும். இது நிறைவேறவேண்டுமானால், இரண் டாவது திட்டக் கால அளவில் தேசீய வருமானத்தில் 11 சத வீதமாக யிருந்த முதலீடு மூன்றாவது திட்ட முடிவில் 14 சதவீதமாக உயரவேண்டும்.

17. தன்னிறைவு பெற்ற வளர்ச்சியடைவதே மூன்றாவது திட்டத்தின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். தன்னிறைவு பெற்ற வளர்ச்சி யென்றால் பொருளாதாரத்திலுள்ள மிச்சமும் முதலீடும் வருமான வளர்ச்சி வீதமும் உயர்ந்த நிலையிலேயே தொடர்ந்து இருக்கக்கூடிய முறையில் அதிகரிக்கவேண்டுமென்பதே பொருளாகும். உத்தேச அளவில் முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனப் பொருள்களையும் சாதனங்களையும் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்துவதே இப் பிரச்சினையின் முக்கியமான அம்சமாகும். இதற்கு வேண்டியவாறு திட்ட மிட்டு நிறைவேற்றும் திறமையும் இதில் அடங்கும். ஏற்கெனவே விளக்கி யுள்ளவாறு, பொருளாதார முன்னேற்றம் அடைந்திராத ஒரு நாடு மிகக் குறுகிய கால அளவுக்குள் 'தனக்கு வேண்டிய சாதனங்கள் எல்லாவற் றையும் வாங்குவதற்கு ஏற்ற வகையில் ஏற்றுமதியை அதிகரிக்க முடியாது. அந்நியச் செலாவணி ஈட்டக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதில் முழு மூச்சுடன் முனையவேண்டும். நமது வெளி நாட்டு நிதி நிலையைச் சமன செய்வதற்கு இது அத்தியாவசியமாகும். எனினும், பொருள்களை இறக்கு மதி செய்வதற்குப் பதிலாக, உள்நாட்டிலேயே மூலதனப் பொருள்களை யும் சாதனங்களையும் அதிக அளவில் உற்பத்தி செய்து அந்நியச் செலா வணிப் பற்றுக் குறையைச் சீர் செய்ய வேண்டும். மூன்றாவது திட்டத்தில் முதலீட்டு அளவையும் முறையையும் நிர்ணயிக்கையில் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் நமது வெளி நாட்டு நிதி நிலை சீர்திருந்தி கட்டுபடியாகும் நிலையில் இருக்குமாறு பார்த்துக்கொள்வதற்கு முதலிடம் அளித்து அந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டும்.

18. மூன்றாவது திட்டத்துக்கு அதிக அளவில் அந்நியச் செலாவணி வேண்டியிருக்கும். இதை வெளிநாட்டு உதவி மூலமாகத்தான் பெற வேண்டும். விசேஷ உதவியை நம்பியிருக்கவேண்டிய அவசியம் இராத வகையில், மிகக் குறுகிய கால அளவுக்குள் முதலீட்டு முறையை இப்போ திருந்தே மாற்றியமைக்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து நமக்கு மூல தனம் கிடைப்பது சாதாரணமாக மற்ற நாடுகளிடையே நடைபெறும் முறை யிலேயே இருக்கவேண்டும். இதில் பெறப்படுவது என்னவென்றால் : வேண்டியுள்ள இயந்திரங்களையும் சாதனங்களையும் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயலவேண்டும். வளர்ச்சி வேகத்திற்கு வேண்டியுள்ள உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்யவேண் டும். வேளாண்மைத் துறையும் தொழில் துறையும் சீரான அபிவிருத்தி யடைந்தால்தான் தன்னிறைவுள்ள வளர்ச்சி பெறமுடியும். தொழில் வளம் பெருகாமல் வருமானமும் வேலை வாய்ப்பும் போதிய அளவில் அதிகரிக்க முடியாது. வேளாண்மை உற்பத்தியில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டாலொழிய தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு வழியில்லை. மூலதன அடிப்படையை விரிவாக்கவேண்டுமென்றும் உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் அதிகம் உற்பத்தி செய்யவேண்டுமென்றும் மூன் றாவது திட்டத்தில் சொல்லியுள்ளோம். எனவே, தன்னிறைவு பெற்ற வளர்ச்சியில் பல அம்சங்கள் இருக்கின்றன. முதலீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, படிப்படியாகச் சேமிப்பு அதிகரிக்கவேண்டும். அடிப்

படைத் தொழில்களும் மூலதனப் பொருள் தொழில்களும் விரைவாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். நமது வெளிநாட்டு நிதி நிலை பற்றுக் குறையைப் பூர்த்தி செய்யவேண்டும். இத்தகைய முன்னேற்றம் ஏற்படவேண்டுமானல், ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளவாறு வேளாண்மை செவ்வனே முன்னேறவேண்டும்.

19. முதலிரு திட்டங்களின அனுபவத்தைக் கொண்டும் மேலே கூறியவற்றை ஆலோசனை செய்தும் அடியிற்கண்ட நோக்கங்களை மூன்று வது திட்டத்தில வகுத்துள்ளோம் :—

(1) மூன்றுவது திட்டக் கால அளவில் ஆண்டு ஒன்றுக்கு தேசீய வருமானத்தை 5 சத வீதம் உயர்த்தவேண்டும் ; அடுத்துவரும் திட்டக் கால அளவுகளில் இந்த வளர்ச்சி வீதத்துக்கு ஏற்ற வகையில் முதலீட்டு முறையையும் மாற்றி அமைக்க வேண்டும் ;

(2) உணவுத் தானிய விஷயத்தில் தன்னிறைவு பெறவேண்டும் ; தொழிலுக்கும் ஏற்றுமதிக்கும் வேண்டியுள்ள அளவையும் பூர்த்தி செய்யும் வகையில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் ;

(3) உருக்கு, எரிபொருள், மின்சக்தி முதலிய அடிப்படைத் தொழில் களை விரிவுபடுத்தவேண்டும் ; இயந்திர நிர்மாணத் திறமையை ஏற்படுத்தவேண்டும் ; அப்போதுதான் மேற்கொண்டும் தொழில் வளத்துக்கு வேண்டியுள்ள தேவைகளை அடுத்த பத்தாண்டுக் கால அளவுக்குள் இந்த நாட்டு ஆதாரங்களி லிருந்தே பெற முடியும் ;

(4) இந்த நாட்டின் ஆள்பலத்தை இயன்ற அளவுக்குப் பயன் படுத்தவேண்டும். வேலை வாய்ப்பு வசதியைக் கணிசமாக அதி கரிக்கவேண்டும் ;

(5) வருமானத்திலும் செல்வத்திலும் மக்களிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, பொருளாதாரச் சக்தியைச் சீரான நிலையில் பரவியிருக்கச் செய்யவேண்டும்.

20. இந்த நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் மூன்றுவது திட்டம் முக்கியமான கட்டமாகும். இதனை வலியுறுத்தவேண்டும். முதலிரண்டுத் திட்டக் கால அளவில் வேளாண்மை அபிவிருத்திக்கு வேண்டிய நிர்வாகச் சாதனமும் வெளித்துறை நிறுவனமும் மிகவும் பலப்படுத்தப் பட்டுள்ளன. உருக்குத் தொழில், சுரங்கத் தொழில், மின்சக்தி, போக்கு வரத்து ஆகியவை அபிவிருத்தியடைந்துள்ளன. எனவே, தொழில்வளம் பெருகுவதற்கு ஏற்ற வசதி ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள அபி விருத்தி வேகம் மூன்றுவது திட்டத்தில் இன்னும் அதிகரிக்க வேண்டும். நான்காவது திட்டத்தில் பின்னும் அதிகரிக்க வேண்டும். இந்தப் பத் தாண்டுக் காலத்தில் ஏற்படும் வெற்றியே மக்களின் வாழ்க்கைத் தரத்தை யும் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியையும் தீர்மானிக்கும்.

ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்.

21. தேசீய வருமான வளர்ச்சி, வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு, தொழிலபிவிருத்தி, ஆள் பலத்தைப் பயன்படுத்துதல், வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரித்தல் ஆகியவை விஷயமாய் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களைப் பொருத்தமான அத்தியாயங்களில் விரிவாக விவரித்துள்ளோம். வருமானத்திலும், செல்வத்திலும் மக்களிடையே யுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, பொருளாதாரச் சக்தியை சீரான முறையில் பரவலாக்குவதன் நோக்கத்தை இங்கு ஓரளவு கூறலாம்.

22. வருமானத்திலும், செல்வத்திலும் மக்களிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் பிரச்சினையில் இரண்டு அம்சங்கள் உள்ளன. இப்போதுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சீராக்குவது ஓர் அம்சமாகும். பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள் பெரிதும் குறைந்துகொண்டு வரும்போதே விரைவான வளர்ச்சி ஏற்படக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்து வதன் அவசியமே அதிக முக்கியமுள்ள அம்சமாகும். இதற்காகப் பல துறைகளிலும் ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இந்த நடவடிக்கைகளின் பயனாய், பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள் பெரிதும் குறைந்துள்ளன. மூன்றுவது திட்டத்தில் இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கிறோம். கிராமப் பொரு ளாதாரத்தை எடுத்துக்கொண்டோமானால், ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் நிலச் சீர்திருத்தம் முக்கிய பணியாற்றி வருகிறது. இதில் நல்ல முன்னேற் றம் ஏற்பட்டுள்ளது. குடிவார உரிமையை உறுதிப்படுத்தியுள்ளோம். குத்தகை அளவைக் குறைத்துள்ளோம். அடுத்த இரண்டு மூன்றாண்டு களில் வேளாண்மை நில உச்ச வரம்புச் சட்டம் எங்கும் அமுலுக்கு வந்து விடும். குடியானவர்கள் அனைவரும் தங்கள் உரிமையிலேயே நிலச் சொந்தக்காரர்களாகிவிடுவர். பாசன வசதியில்லாமல் பற்றாக்குறை இருந்த பகுதிகளில் கிராமச் சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலிருந்த சில பிரிவினர்களின் வாழ்க்கைத் தரம் இப்போது பாசன வசதி கிடைத்துள்ள தால் உயர்ந்துள்ளது. இப்போதுள்ள நிலையில் பின்னிலை வகுப்பினர்கள்— ஷெட்யூல்டு மலை ஜாதியினரும், ஷெட்யூல் டுவகுப்பினரும், மற்றவர்களும்— பொதுவான வளர்ச்சித் திட்டங்களிலிருந்து தங்களுக்குரிய பயன்களைப் பெற முடிவதில்லை. இவர்களுடைய நலனை முன்னிட்டு வேலைத் திட்டங் கள் ஆரம்பித்துள்ளோம். சமுதாயத்துக்குள் சம வாய்ப்பு நிலை இருக்க வேண்டுமானால், சில வசதிகள் இருந்தாக வேண்டும். இந்த வசதிகள் எவையென்றால் : துவக்கக் கல்வி அதிக அளவில் பரவ வேண்டும். இது மூன்றுவது திட்டக் கால அளவில் 6—11 வயதுள்ள தொகுதியினர் அனைவருக்கும் கிடைக்கும். உபகாரச் சம்பளங்களும் மற்ற உதவிகளும் அதி கரிக்க வேண்டும். ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லாக் கிராமப் பகுதிகளிலும் குடி தண்ணீர் வசதி இருக்க வேண்டும். மலேரியா போன்ற நோய்கள் ஒழிக்கப்பட வேண்டும். சிறப்பாக மகளிருக்கும் சிறுவருக்குமாகச் சுயேச்சை சமூகச் சேவை நிறுவனங்களின் நலக் காப்பு நடவடிக்கைகள் விரிவான முறையில் இருக்க வேண்டும். வாழ்க்கைத்

தரத்தை • உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்து வதற்காகவும், வாழ்க்கை வசதி அதிகம் பெற்றிராத பிரிவினர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகப்படுத்தவும் சமுதாய வளர்ச்சி இயக்கம் நாளுக்கு நாள் அதிகம் தேவைப்படுகிறது. பல பகுதிகளில் கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் மின்சார வசதி ஏற்பட்டுள்ளது. இவற்றால் பயனுள்ள வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். இத்தகைய பல தரப்பட்ட நடவடிக்கைகள் பொது மக்களின் பெரும் ஆதரவுடன் நிறை வேற்றப்படுவதால், இவற்றின் பயன் மக்கள் தொகையில் பெரும்பான்மை யினருக்குக் கிட்டும். வேகமான அபிவிருத்திக்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடுவதற்காகச் சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அவரவர்கள் சுமக்கக்கூடிய வரிப்பளுவை சுமக்க வேண்டிய நியாயமான அடிப்படையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எனவே, பழைய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதிலும், வளர்ச்சியினூடேயே புதிய ஏற்றத் தாழ்வுகள் ஏற்படாதவாறு தடுப்பதிலும் இவை பெரிதும் துணைபுரியும்.

23. மூன்றாவது திட்டத்தில் தொழில் துறையிலே தனியார் துறைக்கு நல்ல இடம் கொடுத்துள்ளோம். அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகப் பொருளாதாரம் விரிவடைந்து வாய்ப்புகள் பெருகியிருப்பதே இதற்குக் காரணமாகும். இவ்வாறு தனியார் துறைக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்புகளைச் சிறிய தொழிலதிபர்களும் நடுத்தர தொழிலதிபர்களும் பெரு மளவு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பொருளாதாரச் சக்தி ஓரிடத் திலேயே குவிவதை ஆரம்ப நிலையிலேயே தடுத்துவிட வேண்டும். இவையே இக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும். இப்போதுள்ள அபிவிருத்தி நிலையில் முன்னரே நிலைபெற்றுள்ள வர்த்தக நிலையங்கள் ஸ்தாபன முறையிலும் சிறப்பான அறிவாற்றலிலும் சில அனுகூலங்களைப் பெற்றுள்ளன. இவை தமக்கு வேண்டிய மூலதனத்தை எளிதில் தேடிக் கொள்ள முடியும். அந்நிய நாட்டு முதலாளிகளுடன் கூட்டு சேர முடியும். இவைகள் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் அல்லது செல்வாக்கின் கீழ் உள்ள தொழில்களிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் பெருமளவு நிதி பெற முடியும். சில துறைகளில் நவீனத் தொழிலியலும், பெருமளவு வர்த்தக நிலையங்கள் அல்லது யந்திர சாலைகளிருப்பதற்கே அனுகூலமாக யிருக்கிறது. ஆனால், பொதுவான சமுதாயக் கோணத்தில் பார்ப்போ மானால், தனியார் துறையில் ஒருவரே பல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கக் கூடாது. புதிதாகத் தொழில் துறையில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அதே சமயத்தில் பொருளாதாரச் சக்தி ஒரே இடத்தில் குவிவதையும், ஏகபோகச் சக்தி தலையெடுப்பதையும் செவ்வனே தடுத்து நிறுத்த வேண்டும். மின் சக்தி, போக்குவரத்து, கன ரகத் தொழில்கள் ஆகிய பல்வேறு துறைகளில் அரசாங்கத் துறை வளர்ச்சியடைந்துள்ளதால், பொது நலனை முன்னிட்டுப் பொருளாதார நடவடிக்கையை நல்ல முறை யில் நெறிப்படுத்த அரசாங்கத்தாருக்கு வசதி ஏற்பட்டுள்ளது. மேலும், நடுத்தர, சிறு தொழில்களுக்கு ஆதரவாக உருவான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவைகளுக்கு விசேஷ வசதிகளும் உதவியும் அளிக்க

வேண்டும். இந்திய அரசாங்கத்தார் நிறுவியுள்ள தொழில் நிதிக் கார்பொரேஷனும், தொழிலியல் நிறுவனங்களும் சிறப்பாக முயற்சி யெடுதது இவைகளுக்கு உதவிசெய்ய வேண்டும். புதிய வர்த்தக நிலையங்கள் ஏற்படுவதற்கு அனுகூலமாகவும் நடத்தர, சிறுதொழில்கள் ஏற்படும் வண்ணமும் லைசென்ஸ் கொடுக்கவேண்டும். பெருமளவு தொழில்கள் விரிவடையாமலிருக்கின்றனவா என விழிப்புடன் கவனித்து வரவேண்டும்.

24. வரி விதிப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் முக்கியமான பணி யொன்று செய்யவேண்டியுள்ளது. வருமானத்திலும், செல்வத்திலும் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வண்ணம் அந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மேற்கூறிய நோக்கங்கள் நிறைவேறு மாறு பார்த்துக்கொள்வதற்காக, அரசாங்க நிறுவனங்கள் பலவும் ஒன்றுகக்கூடி ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டும். கம்பெனிச் சட்ட நிர்வாகம், தொழிலுக்கு லைசென்ஸ் அளிப்பது, மூலதன முதலீட்டைக் கவனித்துக்கொள்வது, இறக்குமதிக் கொள்கையைக் கவனித்துக் கொள்வது ஆகியவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் இதில் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். பல தொழில்களில் முதலீடு, பல தொழில்களில் நெறியாளராக இருத்தல் இவை போன்ற பல பிரச்சினைகள் கம்பெனி நிர்வாகத்தில் உள்ளன. இவற்றைச் சீர்திருத்து வதற்கு வேண்டிய சட்டம் செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் நடை முறையில் என்ன பலன் ஏற்படுமென்பதையும் கவனிக்க வேண்டும். தனியார் முதலீட்டுக்கு வரிச் சலுகைகளும் ஊக்கமும் அளிக்கப்படுகின்றன. இவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பரிசீலனை செய்வது மற்றொரு பிரச்சினையாகும். இவை தங்களுக்குள்ள பணியை ஆற்ற வேண்டியதுதான். ஆனால், அவை திட்டத்தில் உள்ளதை அனுசரித்து பல்வேறு தொழில்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை மதிப்பிட வேண்டும். வருமானத்திலும் செல்வத்திலும் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, பொருளாதாரச் சக்தி ஓரிடத்தில் குவிவதைத் தடுக்கும் பிரச்சினைகள் சிக்க லானவை. இவை விரைவான வளர்ச்சிப் பிரச்சினையுடன் நெருங்கிய தொடர் புள்ளவை. எனவே, மேற்கூறிய அம்சங்களைக் கவனமுடன் ஆராய வேண்டும். அப்போதுதான் தேசீயத் திட்டத்தின் சமூக, பொரு ளாதார நோக்கங்களைப் பூரணமாக் நிறைவேற்ற முடியும்.

விலைவாசிக் கொள்கை

25. மூன்றுவது திட்டத்தில் மற்றொரு முக்கியமான அம்சம் உள்ளது. இது குறித்து இப்போது விசேஷக் கவனம் செலுத்தி வருகிறோம். அதை யும் இங்கே கூறிவிடலாம். இந்த அம்சமே விலைவாசிக் கொள்கையாகும். தற்போதைய திட்டப்படி முதலீடு வரவர அதிகரிப்பதால் விலைவாசிகள் ஓரளவு ஏறத்தான் செய்யும். இந்த நிலை இருந்தபோதிலும், முக்கிய மாக அன்றுட உபயோகத்திலுள்ள பொருள்களின் விலைகள் ஒரே நிலையில் நீடித்திருக்குமாறு செய்வதே இந்த விலைவாசிக் கொள்கையின் வேலையாகும்.

26. விலைவாசிகள் இருக்கும் நிலைமை பல விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. மொத்தத் தேவையின் அடிப்படையில் சில விலைவாசிகளிருக்கின்றன. தனிப்பட்ட பொருளின் தேவைக்கும் இருக்கும் அளவுக்கும் ஏற்ற வகையில் சில விலைவாசிகள் உள்ளன. எனவே, விலைவாசிக் கொள்கை, பல நிலைகளில் செயல்பட வேண்டும். வரி விதிப்பு நடவடிக்கை மூலமாகவும் நிதிக் கொள்கை மூலமாகவும் அவசியமானபோது நேரடி ஒதுக்கீடு, கட்டுப்பாடு ஆகியவை மூலமாவும் செயல்பட வேண்டும். இத்தகைய பலதரப்பட்ட துறைகளிலும் ஒருங்கு சேர்ந்து நடவடிக்கை எடுத்தால்தான், நிலையான விலைவாசிகளுடன் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியும்.

27. உணவுத் தானியங்கள், துணி, சர்க்கரை முதலியவற்றின் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கவேண்டுமெனத் திட்டத்தில் சொல்லியுள்ளோம். மூலதன முதலீட்டு முறையை நிர்ணயிக்கும்போதே, அவசியமான உபயோகத் தேவைகளை இயன்ற வரையில் மனத்திலிருத்தியே நிர்ணயித்துள்ளோம். எனினும், அவ்வப்போது தேவைப்படும் அளவும், இருக்கும் அளவும் ஒத்துப் போகாதிருக்கலாம். விரும்பத்தகாத நிலையைச் சீர் செய்ய உரிய காலத்தில் உறுதியான நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். உணவுத் தானிய விலைகளின் விஷயத்தில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், உணவுத் தானிய விலை ஏறினால் சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் இருப்பவர்களை மிகவும் பாதிப்பதோடு எல்லாப் பண்டங்களின் விலை வாசியையும், விற்பனைவிலை, அடக்க விலை அமைப்பையும் பாதிக்கும்.

28. வேண்டியுள்ள அளவுக்கு உள்நாட்டு உணவுத் தானிய உற்பத்தி உயருகிற வரையில் உள்ள கால அளவில், உணவுத் தானியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இறக்குமதி செய்வது அவசியம். அண்மையில் அமெரிக்க அரசாங்கத்துடன் P.L. 480 உடன்படிக்கை செய்துள்ளோம்; இதன்படி தற்போது வேண்டிய உணவுத் தானியங்கள் இறக்குமதியாகும். எதிர்காலத்திலும் வேண்டியளவு கோதுமையைக் கையிருப்பில் வைத்திருப்பதற்காக இறக்குமதி செய்யப்படும். விலைவாசிகளைச் சீர் செய்ய இந்த உணவுத் தானிய இறக்குமதி பெரிதும் பயன்படும்.

29. ஆயினும், விலைவாசிக் கொள்கையில் விரிவான அம்சங்கள் பல இருக்கின்றன. வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் விலையேற்றத்தைத் தடுப்பதற்கு வேண்டிய வழி வகைகள் உள்நாட்டிலிருப்பது அவசியம். உள் நாட்டில் விளையும் கோதுமையுடன் வேண்டியளவு கோதுமை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும். ஆனால், அரிசிப் பற்றாக்குறை இருக்கக்கூடும். ஓராண்டில் பயிர் சரியாக விளையாமலிருக்கலாம்; பின்னர் விலையேறும் என்ற நம்பிக்கையில் தானிய இருப்பை முடக்கி வைத்திருக்கலாம். கடந்த சில ஆண்டுகளாக வேறொரு சிக்கலும் ஏற்பட்டுள்ளது. ஒரு வட்டாரத்துக்கும் மற்றொரு வட்டாரத்துக்குமிடையே உணவுத் தானிய விலையில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை நல்ல வழியில் சீர்படுத்தவேண்டுமானால், அரசாங்க நடவடிக்கை மூலம் விலைக் கட்டுப்பாடு,

அரசாங்க வணிகம், விற்பனை முதலியவற்றை மேற்கொள்ளத்தான் வேண்டும். மேலும், உணவுத் தானிய விலைக் கொள்கையைப் பொருளாதாரத்தின் மற்ற பண்டங்களின் விலைவாசியுடன் இணைத்தே பார்க்க வேண்டும். பல துறைகளிலும் விலைவாசிகளுக்கிடையில் அதிக ஏற்றதாழ்வு இருக்கக்கூடாது. விலைக் கட்டுப்பாடு, மண்டல ஏற்பாடு, குறைந்த விலை-அதிக விலை நிச்சயிப்பு, அரசாங்க வர்த்தகம் முதலிய நடவடிக்கைக்களில் எவற்றை மேற்கொண்டால் பேரளவு பயன் விளையுமென்பதை கவனமுடன் ஆராய்வது அவசியமாகும். இந்தப் பிரச்சினைகளை தேசீய அபிவிருத்திக் கவுன்சிலின் குழு ஒன்று இப்போது ஆராய்ந்து வருகிறது.

30. வரி விதிப்பை அதிகரிக்க வேண்டுமெனத் திட்டத்தில் சொல்லியுள்ளோம். பயன்படுத்தும் பொருள்களை வரி விதிப்பின் மூலம் கட்டுப்படுத்துவது இத் திட்டத்தின் இன்றியமையாத ஓர் அம்சமாகும். அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் கிடைக்கும் உபரித் தொகையை முடிந்த அளவு அதிகப்படுத்தவேண்டும். தகுந்த விஷயங்களில் விலைகளை மாற்றி அமைப்பதன் மூலம் இதைச் செய்ய வேண்டும். திடீரென அல்லது ஏறுமாறாக விலை ஏறுவதைத் தவிர்ப்பது மிகவும் முக்கியமாகும். விலைவாசிக் கொள்கையும் விலைக் கட்டுப்பாட்டு உத்திகளும் சிக்கலான பிரச்சினைகளை எழுப்புகின்றன. ஒன்றுக்கொன்று முரணான பல கோரிக்கைகளைச் சரி செய்யவேண்டியுள்ளது. விலைவாசிகளும், வருமானமும், அடக்க விலையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகும். எனவே, மேற்கொள்கிற விலைவாசிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒருங்கிணைந்த முறையில் செவ்வனே நடைபெறுமாறு பார்த்துக்கொள்வது அவசியமாகும். விலைகளுக்கிடையில் அதிக ஏற்றதாழ்வு இல்லாதிருப்பதற்காகப் பயன்படுத்தும் உத்திகளை வரையறைக்குட்பட்டு மாற்றியமைக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டால், எல்லா முக்கிய நிலைகளிலும் கட்டுப்பாட்டினைச் செவ்வனே நிறைவேற்றக் கூடிய நிலையில் அரசாங்கத்தார் இருக்க வேண்டும்.

அத்தியாயம்—2

முதலாவது இரண்டாவது திட்டங்களால் அடைந்த முன்னேற்றம்

முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்தியாவின் திட்டமிட்ட வளர்ச்சியின் பொருளாதார, சமூக நோக்கங்கள் நிறைவேறியுள்ள முதல் படியைக் குறிக்கின்றன.

2. அடிப்படையில் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது முதல் திட்டத்தின் உத்தேசமாயிருந்தது. போரினாலும், நாட்டுப் பிரிவினையாலும் ஏற்பட்ட சேதத்தைச் சீர் செய்வது முதல் நடவடிக்கையாகும். இரண்டாவதாக, விரைவான அபிவிருத்தி ஏற்படுவதற்குச் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் மேற் செலவுகளைச் செய்வதற்கு வகை செய்ய வேண்டும்; மூன்றாவதாக, அரசியலமைப்பில் நிர்ணயித்துள்ள அரசாங்க நிர்வாக நெறி முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில், பொருளாதார வளர்ச்சிக்காக அடிப்படைச் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். இக் கால அளவில் எடுத்துக் கொண்ட முக்கியமான நடவடிக்கைகளில் இரண்டினை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம். சமுதாய அபிவிருத்தி இயக்கமும், நிலச் சீர்திருத்த வேலைத் திட்டங்களும் இந்த இரண்டு நடவடிக்கைகளாகும்.

3. முதல் திட்டத்தில் விவரித்துள்ள நோக்கங்களை வைத்துக்கொண்டும் புதிய திட்டங்களை மேற்கொண்டும் இரண்டாவது திட்டத்தில் உற்பத்தி, முதலீடு, வேலை வாய்ப்பு ஆகியவற்றைப் பெருமளவில் அதிகரிக்கவேண்டுமென்பதே உத்தேசமாகும். அதே சமயத்தில், பொருளாதார, சமூக நோக்கங்களைப் பொறுத்தவரையில், நாட்டின் பொருளாதாரத்தை இயங்கு ஆற்றல் அதிகம் உள்ளதாகச் செய்ய உத்தேசித்தோம். அடிப்படைத் தொழில்களை வளர்ப்பது, விவசாயச் சீர்திருத்தம், சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு ஆகியவை மூலம் கிராமப் பொருளாதாரத்தைச் சீர்திருத்துவது இவற்றின் மூலமாக அப்படிச் செய்ய உத்தேசித்தோம். தேசீயப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகப்படுத்துவது, வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவது, வருமானத்திலும் செல்வத்திலும் மக்களிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது, பொருளாதாரச் சக்தி ஓரிடத்தில் குவிவதைத் தடுப்பது ஆகியவற்றைத் திட்டத்தில் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

திட்டச் செலவும் முதலீடும்

4. முதலிரண்டுத் திட்டக் கால அளவில், பொருளாதாரத் துறையில் சற்றேறக் குறைய ரூ. 10,000 கோடிக்கு மேல் மொத்த முதலீடு செய்

துள்ளோம். அரசாங்கத் துறையில் திட்டச் செலவு ரூ. 6,560 கோடியாக இருக்கும். கீழே விவரம் கொடுத்துள்ளோம்.

அட்டவணை 1—முதலாவது இரண்டாவது திட்டங்களில் திட்டச் செலவும் முதலீடும்.

(ரூபாய் கோடிக்கணக்கில்)

	முதல் திட்டம். 1951-56.	இரண்டாவது திட்டம். 1956-61. (எதிர்பார்ப்பது.)	மொத்தம் 1951-61.
அரசாங்கத் துறை திட்டச் செலவு	1960	4600	6560
அரசாங்கத் துறை முதலீடு	1560	3650	5210
தனியார் துறை முதலீடு	1800*	3100*	4900
மொத்த முதலீடு	3360	6750	10,110

தேசிய வருமான அதிகரிப்பு

5. முதலாவது திட்டக் கால அளவில் வேளாண்மை உற்பத்தி அதிகரித்ததன் விளைவாகவே தேசிய வருமானம் 18 சத வீதம் உயர்ந்தது. இரண்டாவது திட்டம் முதல் திட்டத்தை விட பெரிய அளவிலும் விரிவான அடிப்படையிலுமிருந்தது. இக் கால அளவில் மேற்கொண்ட பல திட்டங்களின் பயன்கள் மூன்றாவது திட்ட ஆரம்ப ஆண்டுகளில் கிடைக்கும். அந்நியச் செலவாணி நிலைமை சீராக இராததால், இரண்டாவது திட்டத்தை 1958–59-ம் ஆண்டில் மாற்றியமைத்தோம். முன்னர் அரசாங்கத் துறையில் ரூ. 4,800 கோடி திட்டச் செலவு ஆகுமென மதிப்பிட்டிருக்க, பின்னர் அதை ரூ. 4,500 கோடியாகக் குறைத்தோம். திட்டக் கால முடிவில் திட்டச் செலவு ரூ. 4,600 கோடியாயிருக்குமென இப்போது கணக்கிட்டுள்ளோம். இரண்டாவது திட்டக் கால அளவில் தேசிய வருமானம் 20 சத வீதம் உயர்ந்திருக்கும். 1951 முதல் 1961 வரையிலுள்ள பத்தாண்டுக் கால அளவில் (நிலையான விலைகளின்படி) தேசிய வருமானம் 42 சத வீதம் உயர்ந்திருக்கும். தனி நபர் வருமானம் 20 சத வீதம் உயர்ந்திருக்கும். தனி நபர் செலவு 16 சத வீதம் உயர்ந்திருக்கும். பொருளாதாரத்தின் உள்ளீட்டு அமைப்பைக் கணிசமாக வலுப்படுத்தியுள்ளோம். இதனால் எதிர்காலத்தில், விரைவான அபிவிருத்தி ஏற்படுவதற்கு வேண்டிய நிலைமைகள் உண்டாகும். பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் அடைந்த முன்னேற்றத்தைக் கீழே சுருக்க வகையில் காட்டியுள்ளோம். விரிவான புள்ளி விவரம் 3-வது அத்தியாயத்தின் இணைப்பில் கொடுத்துள்ளோம்.

---

* பின்னர் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் மதிப்பீடுகளை இவ்வாறு திருத்தியுள்ளோம். அரசாங்கத் துறையிலிருந்து மாற்றப்படுகிற தொகைகள் இவற்றில் அடங்கா. முதல் திட்டத்தில் இது ரூ. 1,600 கோடியாயிருக்குமென்றும் இரண்டாவது திட்டத்தில் ரூ 2,400 கோடியாயிருக்குமென்றும் முன்னர் மதிப்பிட்டிருந்ததற்குப் பதிலாக, இப்போது இவ்வாறு மதிப்பிட்டுள்ளோம்.

இந்தப் புள்ளிவிவரத்தில் அரசாங்கத் துறையிலிருந்து மாற்றப்பட்ட நிதியைக்கொண்டு செய்த முதலீடுகள் அடங்கமாட்டா.

வேளாண்மை.

6. 1949–50-ம் ஆண்டு முதல் உள்ள வேளாண்மை உற்பத்தி நிலைகளைக் கீழே அட்டவணையில் சுருக்கித் தந்துள்ளோம்:—

அட்டவணை 2 : வேளாண்மை உற்பத்திக் குறிப்பீடு (1949–50=100.)

	1950–51.	1955–56.	1958–59.	1960–61 (எதிர்பார்ப்பது.)
சகல பொருள்களும்	95·6	116·9	132·0	135·0
உணவுப் பயிர்கள்	90·5	115·3	130·0	131·0
மற்ற பயிர்கள்	105·9	120·1	136·0	143·0

உற்பத்தி உயர்ந்து வருவதையே அட்டவணை காட்டுகிறது. வேளாண்மைப் பொருள் உற்பத்தி 1950–51 முதல் 1960–61 வரையில் உள்ள கால அளவில் 40 சத வீதம் உயரும். ஆண்டுக்காண்டு உற்பத்தி அளவு கணிசமாக மாறுபட்டுள்ளது. முக்கிய வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பை இங்கு காட்டியுள்ளோம்.

அட்டவணை 3 : முக்கியப் பயிர்களின் உற்பத்தி அளவு

பொருள்.	யூனிட்.	1950–51.	1960–61 (எதிர்பார்க்கும் சாதனை).
உணவுப் பொருள்கள் (தானியங்களும், பருப்பு வகைகளும்).	லட்சம் டன் ..	522*	750
எண்ணெய் வித்துகள்	லட்சம் டன ..	51	72
கரும்பு—வெல்லம்	லட்சம் டன் ..	56	72
பருத்தி	லட்சம் பேல் ..	29	54
சணல்	லட்சம் பேல் ..	33	55

7. வேளாண்மை வேலைத் திட்டங்களைப் பரவலான முறையில் நிறைவேற்றியுள்ளோம். சமுதாய நல அபிவிருத்தி இயக்கத்தின் இன்றியமையா அங்கமாக நாடு முழுவதிலும் நலப் பரப்புப் பணிகளை ஏற்படுத்த முடிவு செய்ததே முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பட்ட மிக முக்கியமான முடிவாகும். முதல் திட்ட முடிவில் 1,064 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களில் இப் பணிகளை நிறுவினோம். இவற்றின்கீழ் 1,50,000 கிராமங்கள் அடங்கின. எட்டு கோடி மக்கள் இதன்கீழ் வந்தனர். இரண்டாவது திட்ட முடிவில் சமுதாய அபிவிருத்தி இயக்கம் 3,100 வளர்ச்சி வட்டாரங்களில் பரவியிருக்கும். இவற்றில் 4,00,000 கிராமங்கள் இருக்கும். இருபது கோடி மக்கள் இவற்றின்கீழ் வருவர். 1963-ம் ஆண்டு அக்டோபருக்குள் இந்த வேலைத் திட்டம் இந்த நாட்டிலுள்ள எல்லாக் கிராமப் பகுதிகளிலும் பரவி விடும். இரண்டாவது திட்ட முடிவில் வட்டார நிலையிலும், கிராம நிலையிலும் நலப் பரப்பு நிறுவனத்தில் 31,000 கிராம

* 1956–57-ம் ஆண்டு வரையில் புள்ளி விவர மாறுதல் முதலியவற்றை முன்னிட்டு உற்பத்தி மதிப்பீட்டைத் திருத்தியமைத்துள்ளோம்.

நிலை ஊழியர்களும், 28,000 நலப் பரப்பு அதிகாரிகளும் வட்டார நிலையில் இருப்பர். இவர்கள் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மற்ற அபிவிருத்தித் துறைகள் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்வார்கள்.

8. கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ந்துள்ளது. ஆரம்ப வேளாண்மைச் சங்கங்கள் 1951-ம் ஆண்டில் 1,05,000 ஆக இருந்தன. 1958–59-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 1,83,000 ஆக அதிகரித்தது. கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளதெனபது இதிலிருந்து தெரிய வரும். இக் கால அளவில் இச் சங்க உறுப்பினர் எண்ணிக்கை 44 லட்சத்திலிருந்து 120 லட்சமாக உயர்ந்தது. கிராமப் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை 83,000-த்திலிருந்து 1,78,000 ஆக உயர்ந்தது.

9. 1950–51-ம் ஆண்டில் 5 கோடியே 15 லட்சம் ஏகரா நிலங்கள் பாசன வசதி பெற்றன. இந்த எண்ணிக்கை 1960-61-ம் ஆண்டில் 7 கோடியாக உயரும். சாகுபடி செய்யப்படும் பகுதி முழுவதிலும் தரமான நெல் வகைகளைப் பயிரிடுவது என்ற வேலைத் திட்டத்தின் அங்கமாக இரண்டாவது திட்டக் கால அளவில் 4,000 விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி வருகிறோம். 1950–51-ம் ஆண்டில் 55,000 டன் நைட்ரஜன் உரம் பயன்படுத்தப்பட்டது. 1960–61-ல் 3 லட்சத்து 60 ஆயிரம் டன் நைட்ரஜன உரம் பயன்படுத்தப் படும். முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இதர வேளாண்மைத் திட்டங்களுள் அடியிற்கண்டவற்றையும் குறிப்பிடலாம். 39 லட்சம் ஏகரா தரிசு நிலம் விளை நிலமாயிற்று. இரண்டு கோடியே இருபது லட்சம் ஏகரா நிலத்தில் பசுந்தழை எரு பயன்படுத்தினோம். 27 லட்சம் ஏகரா பரப்பில் மண் வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தை மேற்கொண்டோம். நகரப் பகுதி களிலும், கிராமப் பகுதிகளிலும் கலவை எரு தயாரிக்கும் திட்டத்தில் கணிசமாக முன்னேற்றம் கண்டுள்ளோம். கால்நடை, மீன் வளம், பால் வழங்கல், காய்கறி, பழ வகை உற்பத்தி, காட்டுவளம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்.

தொழில் துறையும் கனிப்பொருள்களும்.

10. 1951-ம் ஆண்டு முதல் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைக் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம்.

அட்டவணை 4 : தொழிலியல் உற்பத்திக் குறிப்பீடு.

	1951	1955	1956	1959.
எல்லாப் பொருள்களும்	100	122·4	132·6	151·1
பருத்தித் துணிகள்	100	111·9	117·5	111·5
இரும்பும் உருக்கும	100	113·3	119·4	163·1
யந்திரம்	100	163·9	215·0	424·3
ரசாயனப்பொ ருள்களை	100	159·0	171·1	214·9

கடந்த பத்தாண்டுக் கால அளவில் அடிப்படை மூலதனத் தொழில் களிலும், முதலீட்டுப் பொருள் தொழிலிலும், முக்கியமாக யந்திரத் தொழி லிலும், பொறியியல் (என்ஜினீரிங்) தொழிலிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டி

ரூப்பதாகக் கூறலாம். அரசாங்கத் தொழில் துறையில் மூன்று உருக்குத் தொழிற்சாலைகளைப் புதிதாகக் கட்டி முடித்தோம். இதனால் வேலை நிறைவு பெற்ற 45 லட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யப்படும். இந்த அளவு முதல் திட்ட ஆரம்ப காலத்தில் 10 லட்சம் டனாகவும், இரண்டாவது திட்டக் கால ஆரம்பத்தில் 13 லட்சம் டன்னாகவும் இருந்தது ஒப்பு நோக்கத்தக்கதாகும். சிமிட்டி, நிலக்கரி, அலுமினியம் போன்ற முக்கிய தொழில்பொருள்களின் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. வேளாண்மை, பருத்தித் துணி ஆலை, சணல் தொழில், சிமிட்டித் தொழில், தேயிலை, சர்க்கரை, தாவர எண்ணெய் தொழில்கள் ஆகியவற்றிற்கு வேண்டிய யந்திரக் கருவிகளையும், யந்திரங்களையும் இந்த நாட்டிலேயே பெருவாரியாகத் தொடர்ந்து உற்பத்தி செய்துவருகிறோம். ரயில்வேக்கு வேண்டியுள்ள சாதனங்களில் பெரும்பாலானவை இரண்டாவது திட்டக் கால முடிவில் இந்த நாட்டிலேயே செய்து முடிக்க முடியும். 1951-ம் ஆண்டில் இந்த நாட்டில் உற்பத்தி செய்த சகலவகை தொழில் யந்திரங்களின் மதிப்பு 11 கோடி ரூபாயாக இருந்தது. இது 1958-ம் ஆண்டில் ரூ. 79 கோடியாக உயர்ந்துள்ளது. மின்சார சாதனத்தை எடுத்துக்கொண்டால், இந்தப் புள்ளி விவரம் முறையே ரூ. 20 கோடியாகவும், ரூ. 71 கோடியாகவும் இருந்தது. கனரக மின்சார சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். ரசாயனப் பொருள்கள், மருந்துச் சரக்குகள், மருந்துப் பொருள்கள், உரங்கள் முதலியவை உட்பட ரசாயனத் தொழில்கள் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளன. இரண்டாவது திட்டத்தின் கீழ் சணல் ஆலைத் தொழிலையும் பருத்தித் துணி ஆலைத் தொழிலையும் நவீனப்படுத்தும் வேலையை மேற்கொண்டுள்ளோம். பற்பல தொழில்களிலும் இறக்குமதி செய்ய வேண்டியவற்றைக் கணிசமாகக் குறைத்துள்ளோம்.

11. 1960–61-ம் ஆண்டில் முக்கிய முதலீட்டுப் பொருள் உற்பத்தியில் என்ன முன்னேற்றம் ஏற்படக்கூடுமென்பதைக் கீழே அட்டவணையில் கொடுத்துள்ள புள்ளி விவரத்திலிருந்து அறிந்துகொள்ளலாம் :—

அட்டவணை 5 : முதலீட்டுப் பொருள்கள்.

பொருள்.	யூனிட்.	1950–51.	1960–61 (எதிர்பார்க்கும் உற்பத்தி அளவு.)
வேலை நிறைவு பெற்ற உருக்கு	லட்சம் டன்கள் ..	10	26
அலுமினியம்	1,000 டன்கள ..	37	17
டீசல் என்ஜின்கள	1,000 கணக்கில்	5·5	33
மின்சாரக் கேபிள்கள் (ACSR) கடத்திகள்.	டன் கணக்கில் ..	1,674	18,000
நைட்ரஜன் உரங்கள் (N)	ஆயிரம் டன்கள் ..	9	210
கந்தகஅமிலம்	1,000 டன்கள் ..	99	400
சிமிட்டி	லட்சம் டன்கள் ..	27	88
நிலக்கரி	லட்சம் டன்கள் ..	320	530
இரும்புக் கனி	லட்சம் டன்கள் ..	30	120

அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய முக்கியமான பொருள்களைத் தயாரிக்கும் தொழிலில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பைக் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம் :—

அட்டவணை 6 : அன்றாட வாழ்கைக்கு வேண்டிய பொருள்கள்.

பொருள்.	யூனிட்.	1950–51.	1960–61 (எதிர் பார்க்கும் உற்பத்தி அளவு.)
பருத்தித் துணி—ஆலைத் துணி	கோடி கஜம ..	372	500
சர்க்கரை	லட்சம் டன் ..	11·0	22·5
காகிதமும், காகித அட்டையும்	ஆயிரம் டன் ..	114	320
சைக்கிள் (ஸ்தாபன ரீதியிலமைந்த துறை மட்டும்).	ஆயிரக் கணக்கில்.	101	1,050
மோட்டார்	எண்ணிக்கை ..	16,500	53,500

தொழிற்சாலை கொதிகலன்கள், அரைக்கும் யந்திரங்கள், மற்றவகை யந்திரக் கருவிகள், டீசல் சாலை உருளை யந்திரங்கள், தொழில் துறை வெடி மருந்துகள், ஸல்பா மருந்துகள், கிருமி முரணி மருந்துகள் **(Antibiotic drugs)**, டி.டி.டி. **(D.D.T.)** மருந்துகள், பத்திரிகைக் காகிதம் முதலியவை இந்த நாட்டிலேயே இப்போதுதான் முதன் முதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. 1950–51-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக வைத்துக்கொண்டு பார்ப்போமானால், தொழில் துறை வளர்ச்சி 1960–61-ம் ஆண்டில் 120 சத வீதம் உயர்ந்திருக்கும்.

12. பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றை வளர்ப்பதுடன் கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும் பெரிதும் வளர்க்கப்பட்டுள்ளன. இவற்றை வளர்ப்பதற்காக, முதலாவது, இரண்டாவது திட்டங்களில் விசேஷ நடவடிக்கைகளை மேற்கொண்டோம். 1950–51 முதல் 1960–61 வரையுள்ள கால அளவில் கைத்தறித் துணி உற்பத்தி 74·2 கோடி கஜத்திலிருந்து 212.5 கோடி கஜமாக அதிகரிக்கும். கதர்த் துணி உற்பத்தி 70 லட்சம் கஜத்திலிருந்து 8 கோடி கஜமாக அதிகரிக்கும். கச்சாப் பட்டு உற்பத்தி 20 லட்சம் ராத்தலிலிருந்து 37 லட்சம் ராத்தலாக அதிகரிக்கும். கட்டிட இரும்புச் சாமான்கள், கைக் கருவிகள், தையல் யந்திரங்கள், மின்சார விசிறிகள், சைக்கிள் முதலிய சிறு தொழில் துறைகளிலும் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. சிறு தொழில் பணி நிலையங்கள் எல்லா மாநிலங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத் தொழில்களுக்கு இணைவாக 42 நலப் பரப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளோம். இரண்டாவது திட்டக் கால முடிவில் 60 தொழில் பண்ணைகள் அமைத்து விடுவோம். இவற்றில் 700 சிறு தொழிற்சாலைகள் இருக்கும்.

மின் சக்தி

13. 1950–51-ம் ஆண்டில் 23 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய யந்திர நிறுவனம் இருந்தது. 1960–61 முடிவில் 58 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதற்கு வேண்டிய சாதனம் இப்போது உள்ளது. 1950–51-ம் ஆண்டில் 3,687 நகரங்களும், கிராமங்களும் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. 1960–61-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 19,000 ஆக அதிகரித்துவிடும்.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்.

14. 1951–61 பத்தாண்டுக் காலஅளவில், போக்குவரத்துத் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. போரினாலும் நாட்டுப் பிரிவினையினாலும் கஷ்டத்துக்கும், நஷ்டத்துக்கும் உள்ளாகியிருந்த ரயில்வேத் துறைக்குப் புத்துயிர் ஊட்டி அதை வளர்ப்பதே முதல் திட்டத்தின் முக்கிய நோக்க மாயிருந்தது. இரண்டாவது திட்டக் கால அளவில் உருக்கு, நிலக்கரி, சிமிட்டி போன்ற அடிப்படைத் தொழில்களின் வளர்ச்சியுடன் ரயில்வேயும் விரிவான அபிவிருத்தி வேலையை மேற்கொண்டது. 1950–51-ம் ஆண்டில் 9 கோடியே 10 லட்சம் டன் சாமான்களே ரயில்களில் ஏற்றப்பட்டன. இந்த எண்ணிக்கை இரண்டாவது திட்டக் கால முடிவில் 16 கோடியே 20 லட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கிறோம். 1960–61 முடிவுக்குள், 1,200 மைல் அளவுக்குப் புதிய இருப்புப் பாதைகள் போடப்படும். 1,300 மைல் அளவுக்கு இருப்புப் பாதைகள் இரண்டு போடப்படும். 880 மைல் அளவுக்கு மின்சாரப் பாதை போடப்படும். 1950–51-ம் ஆண்டில் 8,200 என்ஜின்கள் இருந்தன. 1960–61 முடிவிற்குள் இவற்றின் எண்ணிக்கை 10,600 ஆக அதிகரிக்கும். ரயில் பெட்டிகளின் எண்ணிக்கை 19,200 லிருந்து 28,900 ஆகவும், வாகன்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 99 ஆயிரத்திலிருந்து 3,54,100 ஆகவும் அதிகரிக்கும்.

15. சாலை அபிவிருத்தியிலும் கணிசமான முன்னேற்றம ஏற்பட்டுள்ளது. 1950–51-ம் ஆண்டில் 97,500 மைல் அளவுக்குச் சாலைகள் இருந்தன. 1960–61–ம் ஆண்டில் இநத அளவு 1,44,000 மைலாக அதிகரிக்கும். இக் கால அளவில் இந்த நாட்டில் வியாபார வண்டிகளின் எண்ணிக்கை இரு மடங்காகும். 1950–51-ம் ஆண்டில் 1,16,000 ஆக இருந்தது 1960–61-ம் ஆண்டில் 2,00,000 ஆகுமென்று மதிப்பிட்டுள்ளோம். கப்பல் டன்னளவு இக் கால அளவில் 3,90,000 ஜி. ஆர். டன்னிலிருந்து 9,00,000 ஜி. ஆர். டன் ஆக அதிகரிக்கும்.

16. முதலாண்டுத் திட்டக் கால அளவில் செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் 1950–51-ம் ஆண்டையும் 1960–61-ம் ஆண்டையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்த்தோமானால், தபாலாபீஸ்களின் எண்ணிக்கை 36,000–லிருந்து 75,000 ஆகவும், தந்தி ஆபீஸ்களின் எண்ணிக்கை 3,600–லிருந்து 6,300 ஆகவும், டெலிபோன்களின் எண்ணிக்கை 1,68,000–லிருந்து 4,75,000 ஆகவும் அதிகரித்துள்ளது.

டெலிபோன் தொழில், வானிலை ஆராய்ச்சி, கடல் கடந்த நாடுகளுடன் செய்தித் தொடர்புப் பணிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்.

17. ஒலிப்பரப்புத் துறையிலும் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. முதலாவது திட்டத்தில் ஒவ்வொரு மொழிப் பகுதியிலும் ஒலிப்பரப்பு நிலையம் ஒன்றேனும் ஏற்படுத்தியுள்ளோம். இதனால், இந்த நிலையங்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்தது. இரண்டாவது திட்டக் கால அளவில் உள் நாட்டு நிலையங்களை அதிகப்படுத்தியதுடன் வெளி நாட்டு ஒலிப்பரப்புப் பணிகளையும் வலுப்படுத்தியுள்ளோம். கிராமப் பகுதிகளில் பலரும் இருந்து கேட்பதற்குரிய பொதுவான ரேடியோ செட் அமைக்கும் வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறோம். 1950-ம் ஆண்டில் 5,50,000 ரேடியோ லைசென்சுகள் வழங்கப்பட்டன. இந்த எண்ணிக்கை 1959-ம் ஆண்டில் 18,80,000 ஆக அதிகரித்தது.

சமூகப் பணிகள்

18. கல்வி, சுகாதாரம், சமூக நலன் ஆகிய வசதிகள் நாட்டு மக்களின் வசதிகளைப் பெருக்குவதில் முக்கிய தொண்டாற்றுகின்றன. இவ் வசதிகளை இக் கால அளவில் கணிசமாக அதிகரித்துள்ளோம். துவக்க அடிப் படைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1950–51-ம் ஆண்டில் 2,23,000 ஆக இருந்தது 1960–61-ம் ஆண்டில் 3,85,000 ஆக அதிகரிக்கும். 6–11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களில் பள்ளி செல்லும் சிறுவர் களின் சத வீதம் 1950–51-ம் ஆண்டில் 43 ஆக இருந்தது 1960–61-ம் ஆண்டில் 60 ஆக அதிகரிக்கும். உயர்நிலை, உயர் இடைநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1950–51-ம் ஆண்டில் 7,288 ஆக இருந்தது, 1960–61-ம் ஆண்டில் 14,000 ஆக உயரும். கலைக் கல்லூரிகள், விஞ்ஞானக் கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 516-லிருந்து 1,050 ஆக அதி கரிக்கும். பள்ளிகளில் படிக்கும் மாணுக்கர்களின் எண்ணிக்கை 75 சத வீதம் கூடும். பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணுக்கர்களின் எண்ணிக்கை 140 சத வீதம் பெருகும்.

19. சுகாதாரத் துறையில் மருத்துவ மனைகள், மருந்துச் சாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 1950–51-ம் ஆண்டில் 8,600 ஆக இருந்தது. இது 1960–61-ம் ஆண்டில் 12,600 ஆக மாறும். மருத்துவ மனைப் படுக்கைகளின் எண்ணிக்கை 1,13,000 ஆக இருந்தது 1,60,000 ஆக உயரும். மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 30-லிருந்து 55 ஆக உயரும். பதிவு பெற்ற மருத்துவரின் எண்ணிக்கை 59,000-லிருந்து 84,000 ஆக உயரும். முதலாவது திட்டக் காலத்தில் குடும்ப கட்டுப் பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தோம். இத் திட்டம் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. 1955–56-ம் ஆண்டில் 147 குடும்பக் கட்டுப் பாட்டு நிலையங்களே இருந்தன. இந்த எண்ணிக்கை 1960–61-ம் ஆண்டில் 1,800 ஆக உயரும்.

தொழில் நுட்பக் கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

20. தொழில் நுட்பக் கல்வி பெறுவதற்குரிய வசதியைப் பெரிதும் பெருக்கியுள்ளோம். பொறியியலிலும் தொழிலியலிலும் பட்டப் படிப்பும் டிப்ளமா படிப்பும் படிக்கிற மாணுக்கர்களின் எண்ணிக்கை இப்போது நான்கு மடங்கு பெருகியுள்ளது. 1950–51-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 10,000 ஆக இருந்தது. 1960–61-ம் ஆண்டு முடிவிற்குள் இது 37,000 ஆக உயரும். வேளாண்மைக் கல்லூரிகளிலும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் சேர்த்துக்கொள்ளப்படும் மாணுக்கர்களின் எண்ணிக்கை 1950–51-ம் ஆண்டில் 1,500 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை 1960–61-ம் ஆண்டில் 5,800 ஆக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

21. இந்தியா விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலும் தொழிலாராய்ச்சித் துறையிலும், முன்னேறுவதற்கு வேண்டிய அடிப்படை நடவடிக்கைகளை முதலாவது இரண்டாவது திட்டக் கால அளவிலே எடுத்துக்கொண்டோம். ஆராய்ச்சி நிறுவனங்கள் பல புதிதாக ஏற்படுத்தியுள்ளோம். 20 தேசீய ஆய்வுக் கூடங்களும், 3 பிரதேச ஆராய்ச்சி நிலையங்களும் இவற்றில் அடங்கும். பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைகளையும் வலுப்படுத்தியுள்ளோம். அணு ஆற்றல் ஆராய்ச்சித் துறையிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்.

விலைவாசியும் வேலை வாய்ப்பும்

22. இரண்டாவது திட்டத்திலுள்ள இரண்டு அம்சங்களை இங்கு சுருக்கமாகக் கூறலாம். இதனால் எதிர் காலத்தில் நல்ல பயன் விளையும். திட்டத்தின் முதல் நான்காண்டுக் காலம் முழுவதிலும் உணவுத் தானிய விலைகளும் வேளாண்மை மூலப் பொருள் விலைகளும் பற்பல தொழிற் பொருள் விலைகளும் பல நிலைகளில் படிப்படியாக உயர்ந்துகொண்டே இருந்தன. 1952–53-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக வைத்துக் கொண்டால், (1952–53=100) முதல் திட்ட முடிவில் 99.2 என்ற நிலையிலிருந்த மொத்த விற்பனை விலைக் குறிப்பீடு இரண்டாண்டுக்குப் பின் 106.1 ஆக உயர்ந்தது. அதன் பின்னர் 1958–59-ம் ஆண்டில் அது 112.1 ஆக உயர்ந்தது. 1959–60 முடிவில் அது 118.6 என்ற அளவில் இருந்தது.

23. தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரித்த அளவுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகவில்லை. அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் விளைவாக, வேளாண்மை அல்லாத மற்றத் துறைகளில் 80 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்குமென நம்பினேம். இக் கால அளவில் 65 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக இப்போது மதிப்பிட்டுள்ளோம்.

அத்தியாயம் 3

மூன்றுவது திட்டப் பொது விவரம்

மூனருவது திட்ட நோக்கங்களேயும், அதன அளவையும் முதலீட்டு முறையையும் நிர்ணயிக்கிற பொதுவான பொருளாதார விஷயங்களேயும் முன் அத்தியாயங்களில் விவரித்துளளோம். இநதத் திட்டத்தில் முதன் மையாக எந்தெந்த வேலேகளே எடுத்துக்கொள்ள வேண்டுமெனச் சுருக்க மாகக் கூறுவதும், பறபல துறைகளிலும் எவ்வளவு செலவிட வேண்டு மென்பதை எடுத்துக் காட்டுவதும் இத் திட்டததில் உத்தேசித்துள்ள இலக்கு களேப் பூர்வாங்கமாக மதிப்பிடுவதும் இந்த அத்தியாயத்தின் நோக்கங் களாகும். மத்திய அரசாங்கத் திட்டத்திலும், மாநில அரசாங்கத் திட்டங் களிலும் எவ்வளவு செலவு செய்யப்படுமென்பதையும் எடுத்துக் காட்டி யுள்ளோம். பறபல துறைகளில காட்டியுள்ள இலக்குகள் தாறகாலிக மானவையே. மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் மேற் கொண்டும் ஆராய்ச்சி செய்வதற்கு உபயோகப்படவே இந்த இலக்குகளேக் குறிப்பிட்டுள்ளோம். திட்டங்கள், வேலேத திட்டஙகள் ஆகியவற்றின் ஆராய்ச்சிகளும் அவறறை எவ்வாறு நடத்துவது என்ற முறையும் அடுத்த சில மாதங்களில் தீர்மானிக்கப்படும். இவை முடிவான அறிக்கையில் இடம் பெறும.

முதன்மை வேலேகள்.

2. ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொண்டுள்ள முதலீட்டு முறை, முதலில் கவனிக்கவேண்டிய வேலேகளேக் குறிப்பிடுவதுடன் திட்டக் கால அளவில் எந்தெந்தத் துறையை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென் பதையும் நிர்ணயிக்கிறது. தற்போதைய பொருளாதார நிலேமை, எதிர் காலப் போக்கு ஆகியவற்றிலிருந்தும் இந்த நாட்டின் அடிப்படைப் பொருளாதார, சமூகப் பிரச்சினேகளேயும், நீண்ட கால இலட்சியங்களேயும் மதிப்பிடுவதிலிருந்தும் இவை பெறப்படுகின்றன. எனவே, பல விஷயங் களேயும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

3. அபிவிருத்தித் திட்டததில் வேளாண்மைக்கு இயல்பாகவே முத லிடம் கொடுக்க வேண்டும். உணவுத் தானியங்களில் தன்னிறைவு பெறு வது முக்கியமாகும். தொழில் துறைக்கும் ஏற்றுமதிக்கும் வேண்டிய வற்றை உற்பத்தி செய்ய வேண்டும். இது மூன்றுவது திட்டத்தின் முக்கிய மான நோக்கங்களில் ஒன்றுகும். வேளாண்மை உற்பத்தியை முடிந்த அளவு அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் கிராம மக்களின் வருமானமும் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து அவர்கள் மற்றவர்களுடன் சமநிலே அடைவார்கள். வேளாண்மை உற்பத்தி அளவைப் பொறுத்தே பொதுவான பொருளாதார வளர்ச்சி அமையும். வேளாண்மைப் பொரு ளாதாரம் வளர்ச்சி அடைவதற்கும் கிராமப் பகுதிகளில் ஆள் பலத்தையும்

மற்ற ஆதாரங்களையும் ஒருங்கு திரட்டுவதற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. எனவே, வேளாண்மையையும் கிராமப் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய, போதுமான நிதி ஒதுக்க முயன்றுள்ளோம். கிராமப் பொருளாதார அமைப்புக்குள் அதிக வளர்ச்சி ஏற்படுவதற்கு, பின்னர் அவசியம் ஏற்பட்டால் வேண்டிய நிதி உதவி அளிக்கப் படும்.

4. தொழில் துறை, மின்சக்தித்துறை, போக்குவரத்துத் துறை ஆகிய வற்றிற்குத் திட்டத்தில் எவ்வாறு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது என் பதை இரண்டாவதாகக் கருதிப் பார்க்கவேண்டும். பொருளாதார நிலை உயர்ந்து, பொருளாதாரம் துரித கதியில் வளர்ச்சி அடைய வேண்டுமானால், இத் துறைகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். ஓரளவுக்குப்பின் வேளாண்மை அபிவிருத்தியும் மனித ஆற்றல் அபிவிருத்தியும் தொழில் துறையில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே இருக்கும். வேளாண் மையையும் தொழில் துறையையும் அபிவிருத்தியின் இரு கூறுகளாகவே எப்போதும் கருத வேண்டும். பொருளாதாரத் துறையில் தன்னிறைவு பெறும் வரையில் தொழில் துறை அபிவிருத்திக்கு அந்நியச் செலாவணி அதிகம் வேண்டியிருக்கும்.

5. பெரிய திட்டங்களில் செய்துள்ள முதலீட்டிலிருந்து பலன் கிடைக்க வெகுகாலம் காக்க வேண்டியிருக்கும். அதன் பின்னரே உற்பத்தி அதி கரிக்கும். எனவே, எதிர்காலத்துக்காகவும் திட்டமிட வேண்டும். குறுகிய காலத்துக்காகவும் திட்டமிட வேண்டும். நீண்ட காலத் திட்டங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையே. குறுகிய கால அளவில் பலன் தரும் திட்டங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவைதான். ஒவ்வொரு திட்டக் காலத் திலும் இருவகைத் திட்டங்களும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

6. தொழில், மின்சக்தி, போக்குவரத்து ஆகிய ஒவ்வொரு துறையிலும் எந்தெந்த வேலைகளை முதலில் கவனிக்கவேண்டுமென நிச்சயிக்கவேண்டும். அப்போதுதான் நமக்கு வேண்டியபடி அவற்றை மாற்றியமைத்துக் கொள்ள முடியும். இரண்டாவதாக, இத் துறைகளைச் சேர்ந்த வேலைத் திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் வகுக்கவேண்டும். ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ள திட்டங்களை ஒன்ருகவே நிறைவேற்றி வைக்கவேண்டும். அப்போதுதான் இணைவான முறையில் வேலை நடத்த முடியும். இப்படிச் செய்தால்தான் ஒவ்வொரு திட்டத்துக்கும் செலவழித்த தொகையிலிருந்து பெரும் பயன் விளையும்.

7. தொழில் துறையில் தேசப் பொருளாதாரம் முழுவதன் தேவை களையும் முதன்மைகளையும் கருதிப் பார்த்து திட்டமிட்டு வருகிருேம். அர சாங்கத் துறையையும் தனியார் துறையையும் ஒருங்கு சேர்த்தே கவனிக் கிருேம். இந்த நாட்டில் இயற்கை வளங்கள் ஏராளமாய் உள்ளன.

ஏராளமான அடிப்படைத் தொழிற் பொருள்கள் தேவைப்படுகின்றன. எனவே, உருக்கு, யந்திர நிர்மாணம், எரிபொருள், மின்சக்தி முதலிய அடிப்படைத் தொழில் விஷயமாய் அதிகக் கவனஞ் செலுத்தி வருகிறேம். எதிர்காலத்தில் தன் ஆதாரத்தைக் கொண்டு பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடிய திறமை இத் தொழில்களிலும் வேளாண்மையிலும் ஏற்படக் கூடிய முன்னேற்றத்தையே பெரிதும் பொறுத்திருக்கும்.

8. சமூகப் பணிகளுக்கும் தொடர்பான வளர்ச்சித் துறைகளுக்கும் மூன்றுவது திட்டத்தில் அடிப்படையாக முதலிடம் கொடுத்துள்ளோம். பொருளாதார, சமூக வளர்ச்சி சீராக இருக்க வேண்டுமானுல் இவை அவசியமாகும். இந்த நாட்டிலுள்ள ஆள் பலத்தை அபிவிருத்தி செய் வதிலும் திட்டங்களை நன்கு புரிந்து கொண்டு பங்கு கொள்வதற்குப் பெரு வாரியான அளவில் பொது மக்களைத் தூண்டுவதிலும் கல்வியும் இதர சமூகப் பணிகளும் பெரும் பணியாற்ற வேண்டியுள்ளது. இதன் முக்கியத் துவத்தை மிகைப்படுத்திக கூறமுடியாது.

9. இத் தொகுதியில் சேர்த்துள்ள சில வேலைத் திட்டங்கள், உதாரண மாக, விஞ்ஞான ஆராய்ச்சி, தொழில் நுட்பக் கல்வி, கைப்பணியாளர் பயிற்சி, தொழிற் பகுதிகளில் வீட்டு வசதி, நகர அமைப்பு ஆகியவை பொருளாதார அபிவிருத்தியுடன் நேரடித் தொடர்புள்ளவையாகும். கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்வது, நோய்களைக் கட்டுப்படுத்துவது, சுகாதார மருத்துவப் பணிகளை ஏற்படுத்துவது, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கொண்டுவருவது, நகரப் பகுதியிலும் கிராமப் பகுதியிலும் குடி தண்ணீர் வசதி செய்து தருவது, சமுதாயத்தில் பின்னிலையிலுள்ள மக்களின் நலனைக் கவனித்துக் கொள்வது ஆகியவை பொதுவான சமூகக் கருத்தில் பார்த்தோமானுல் மிகவும் அவசியமானவை. கிடைக்கும் நிதி ஆதாரத்துக்குள் இவற்றிற்கு வேண்டிய நிதியை ஒதுக்கியுள்ளோம். திட்டம் நிறைவேற்றப்படும்போது சில துறைகளில் அதிக அபிவிருத்தி பெற முழு முயற்சி செய்வோம்.

10. பொருளாதாரத்தின் பல துறைகளில் உற்பத்தி அளவும் சமுதாயச் சேமிப்பு அளவும் ஆண்டுதோறும் தொடர்ந்து அதிகரித்து வர வேண்டிய தன் அவசியத்தை உத்தேசித்து, அதற்கு ஏற்ற வகையில் மூன்றுவது திட்டச் செலவுகளை அமைத்துக் கொள்வதிலும் கவனஞ் செலுத்தியுள் ளோம். சமுதாய ஆஸ்திகளைக் கட்டி விட்டால் மட்டும் போதாது. அவற்றை உடனடியாகப் பயன் படுத்தவும் வேண்டும். கட்டி முடித்ததற்கும் பயன் படுத்துவதற்கும் இடையில் நீண்ட காலம் வறிதே செல்லக்கூடாது. அரசாங்கத் துறையிலாகிலும் தனியார் துறையிலாகிலும் கடந்த காலத்தில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்தும் மூன்றுவது திட்டக் காலத்தில் செய் யப்படும் முதலீடுகளிலிருந்தும் பேரளவு உற்பத்தி பெறுவது முக்கிய குறிக் கோளாய் இருக்கவேண்டும்.

திட்டச் செலவு—முதலீட்டு விவரம்.

11. அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் ஆகும் செலவுகளைத் திட்டத்தில் சேர்த்துள்ளோம். அரசாங்கத் துறையில் முதலீட்டுச் செலவு என்பதையும் நடை முதல் செலவு என்பதையும் வேறுபடுத்தியுள்ளோம். நடைமுதல் செலவு என்பதில் பணியாளர் செலவு, உதவித் தொகை முதலியவை அடங்கும். ரூ. 10,200 கோடி மொத்த முதலீடு செய்ய மூன்றுவது திட்டத்தில் உத்தேசித்துள்ளோம். இதில் ரூ. 6,200 கோடி அரசாங்கத் துறையிலும், ரூ. 4,000 கோடி தனியார் துறையிலும் முதலீடு செய்யப்படும். நடைமுதல் செலவு ரூ. 1,050 கோடி மதிப்பிட்டிருப்பதையும் சேர்த்து அரசாங்கத் துறையில் மொத்த திட்டச் செலவு ரூ. 7,250 கோடியாக இருக்கும். தனியார் துறையில் மூலதன அமைப்புக்காக அரசாங்கத் துறையிலிருந்து நிதி உதவி செய்ய ரூ. 200 கோடி ஒதுக்கியுள்ளோம். இத் தொகையும் அரசாங்கத் துறை முதலீட்டில் சேர்ந்துள்ளது. கீழே 1-வது அட்டவணையில் மூன்றுவது திட்டச் செலவையும் முதலீட்டையும் இரண்டாவது திட்டச் செலவுடனும் முதலீட்டுடனும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளோம்.

அட்டவணை 1 : இரண்டாவது மூன்றுவது திட்டங்களின் திட்டச் செலவும் முதலீடும் *

	அரசாங்கத் துறை			தனியார் துறை.**	மொத்த முதலீடு.
	திட்டச் செலவு.	நடைமுதல் செலவு.		முதலீடு.	
	1	2	3	4	5
	(ரூபாய் கோடிக் கணக்கில்).				
இரண்டாவது திட்டம்	4,600	950	3,650	3,100	6,750
மூன்றுவது திட்டம்	7,250	1,050	6,200	4,000	10,200

மொத்த முதலீடு 51 சத வீதம் அதிகரிப்பதற்கு மூன்றுவது திட்டத்தில் வகை செய்துள்ளோம். அரசாங்கத் துறையில் செய்த முதலீடும் செலவும் முறையே 70 சத வீதமும் 58 சத வீதமும் அதிகரிக்கும். தனியார் துறை முதலீடு 29 சத வீதம் அதிகரிக்கும்.

---

* இதில் அடிக்கடி பயன்படுத்துகிற இரு சொற்றொடர்களைச் சுருக்கமாக விளக்கிக் கூறுவது நல்லது :

(1) முதலீடு என்பது (கட்டிடங்கள், யந்திரம், சாதனம் போன்ற) ஆஸ்திகளை ஏற்படுத்துவதற்குச் செய்யும் செலவாகும். இந்த ஆஸ்திகளை ஏற்படுத்துவதற்கு வேண்டியுள்ள பணியாளர் செலவும் இதில் அடங்கும். பொதுவாகச் சொல்லப்போனால், இச் சொற்றொடர் மூலதனக் கணக்கில் ஏற்படும் செலவைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

(2) நடைமுதல் செலவு என்பது, திட்ட வேலைகளின் ரெவின்யூக் கணக்கில் ஏற்படும் செலவெனப் பொதுவாகக் கூறலாம். மூலதனச் செலவு என்று வகைப்படுத்தியுள்ள செலவு நீங்கலாக மற்றச் செலவுகள் இதில் அடங்கும்.

** அரசாங்கத் துறையிலிருந்து மாற்றப்பட்ட நிதியைப் பயன்படுத்திச் செய்த முதலீடுகள் இப் புள்ளி விவரத்தில் அடங்கா.

12. மூன்றுவது திட்டத்திலுள்ள திட்டச் செலவு விவரத்தையும் முத லீட்டையும் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம்:—

அட்டவணை 2: மூன்றுவது திட்டத்தில் திட்டச் செலவும், முதலீடும்.

தொகுதி.	அரசாங்கத் துறை: திட்டச் செலவு.	அரசாங்கத் துறை: நடை முதல் செலவு.	அரசாங்கத் துறை: முதலீடு.	தனியார் துறை முதலீடு.	மொத்த முதலீடு.
	(ரூபாய கோடிக் கணக்கில்).				
1. வேளாண்மையும் சிறிய பாசனமும் சமுதாய வளர்ச்சியும்.	1,025	350	675	800	1,475
2. பெரும் பாசனமும நடுத்தர பாசனமும.	650	10	640	..	640
3. மின்சக்தி	925	..	925	50	975
4. கிராமத் தொழிலும் சிறு தொழில்களும்.	250	90	160	275	435
5. தொழில் துறையும் கனிப் பொருள்களும்.	1,500	..	1,500	1,000	2,500
6. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்.	1,450	..	1,450	200	1,650
7. சமூகப் பணிகள்	1,250	600	650	1,075	1,725
8. கையிருப்புச் சாமான்கள்	200	..	200	600	800
9. மொத்தம்	7,250	1,050	6,200	4,000	10,200

13. பொருளாதாரத்தின் முதலீடு முதல் திட்டத்தில் ஆண்டுதோறும் ரூ. 500 கோடியிலிருந்து, கிட்டத்தட்ட ரூ. 850 கோடியாக அதி கரித்தது. இரண்டாவது திட்ட முடிவில் இது ஆண்டுதோறும் ரூ. 1,450 கோடி முதல் ரூ. 1,500 கோடி வரை இருக்குமென எதிர்பார்க்கிறோம். மூன்றுவது திட்ட முடிவில் ஆண்டு முதலீடு ரூ. 2,500 கோடி என்ற அள வில் இருக்கும். அரசாங்க அதிகாரச் சபைகளின் முதலீடு முதல் திட்ட முடிவில் ரூ. 200 கோடியிலிருந்து ரூ. 450 கோடியாக உயர்ந்தது. இது இரண்டாவது திட்ட முடிவில் ரூ. 800 கோடியாக உயரும். இது மூன்றுவது திட்ட முடிவில் ரூ. 1,500 கோடியாக உயருமென எதிர் பார்க்கிறோம்.

14. இரண்டாவது திட்டத்தில் பொதுவாக இருந்த முதலீட்டு முறையையே மூன்றுவது திட்டத்திலும் கடைப்பிடித்துள்ளோம். ஆனால், அரசாங்கத் துறை, வேளாண்மை, தொழில், மின்சக்தி, சமூகப் பணிகளில் சில அம்சங்கள் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தி

யுள்ளோம். இரண்டாவது திட்டத்திலும், மூன்றாவது திட்டத்திலும் பல்வேறு துறைகளில் திட்டச் செலவு எவ்வாறு இருந்தது என்பதையும் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம்:—

அட்டவணை.—3 : அரசாங்கத் துறையில் திட்டச் செலவு விவரம்.

		திட்டச் செலவு.		சத வீதம்.	
		இரண்டாவது திட்டம்.	மூன்றாவது திட்டம்.	இரண்டாவது திட்டம்.	மூன்றாவது திட்டம்.
		(ரூபாய் கோடிக் கணக்கில்.)			
1	வேளாண்மையும் சிறிய பாசனமும்.	320	625	6·9	8·6
2	சமுதாய வளர்ச்சியும் கூட்டுறவும்.	210	400	4·6	5·5
3	பெரும் பாசனமும் நடுத்தரப் பாசனமும்.	450	650	9·8	9·0
4	1, 2, 3 ஆகியவற்றின் மொத்தம்.	980	1,675	21·3	23·1
5	மின்சகதி	410	925	8·9	12·8
6	கிராமத் தொழிலும் சிறு தொழிலும்.	180	250	3·9	3·4
7	தொழில் துறையும் கனிப் பொருள்களும்.	880	1,500	19·1	20·7
8	போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்.	1,290	1,450	28·1	20·0
9	5, 6, 7, 8 ஆகியவற்றின் மொத்தம்.	2,760	4,125	60·0	56·9
10	சமூகப் பணிகள்	860	1,250	18·7	17·2
11	கையிருப்புச் சாமான்கள் ..	..	200	..	2·8
12	பெரு மொத்தம்	4,600	7,250	100	100

15. தனியார் துறையில் பொதுவாக இரு வகைகளில் முதலீடு செய்யப் படுகிறது : (அ) சுரங்கத் தொழில், மின்சாரம், போக்குவரத்து போன்ற ஸ்தாபன ரீதியிலுள்ள தொழிலில் செய்யும் முதலீடு ; (ஆ) வேளாண்மை, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், நகர வீட்டு வசதி, கிராம வீட்டு வசதி முதலிய துறைகளில் பரவலாகச் செய்யும் முதலீடு. இரண்டாவது பிரிவு பற்றிய புள்ளி விவரம் தோராயமானதாகவே இருக்கும். ஸ்தாபன ரீதியில் அமைந்த தனியார் துறை விஷயமாக, கடந்த சில ஆண்டுகளில் திட்டவட்டமான புள்ளி விவரம் கிடைத்துள்ளது. பல்வேறு தலைப்புகளில் தனியார் துறை முதலீட்டு விவரங்களை ஆதாரங்கள் என்ற அத்தியாயத்தின்கீழ் கொடுத்துள்ளோம்.

அரசாங்கத் துறையில் திட்டச் செலவு

16. இப்போது உத்தேசித்துள்ள நிதி ஒதுக்கீடுகள் தாற்காலிகமானவையே. மத்திய, மாநில அரசாங்கங்கள் தங்கள் வேலைத் திட்டங்களையும், மற்ற திட்டங்களையும் விரிவாக ஆராய்ந்து ஒவ்வொரு துறையிலும் முதலில் கவனிக்க வேண்டிய வேலைகளை நிர்ணயிப்பதில் உதவி செய்வதற்காகவே இவற்றைக் கொடுத்துள்ளோம். அரசாங்கப் பொறுப்பின்

கீழுள்ள திட்டத் துறைகளுக்கு முடிவாக ஒதுக்கும் நிதி அளவு மாநில அரசாங்கங்கள் வகுக்கும் திட்டங்களைப் பொறுத்திருக்கும். பல்வேறு திட்ட வேலையின் முக்கியத்துவ தாரதம்மியங்களையும் கிடைக்கும் நிதி ஆதாரத்தையும் கருதிப் பார்த்து எந்தெந்த வேலைத் திட்டத்தை முதலில் மேற்கொள்ளவேண்டுமென அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்பதையும் பொறுத்தே இந்த நிதி அளவு இருக்கும். சில துறைகளில் திட்ட இலக்குகள் மாவட்ட, வட்டாரத் திட்டங்களைப் பொறுத்திருக்கும். வேளாண்மைத் திட்டங்கள், கூட்டுறவு அபிவிருத்தி, கிராமத் தொழில்கள், கிராமப் பகுதிகளில் தண்ணீர் வசதி, கிராமப் பகுதியிலுள்ள ஆள் பலத்தை முழுவதும் பயனபடுத்துவதற்குரிய வேலைத் திட்டங்கள் ஆகிய வைகளே இத் துறைகளாகும். இந்தப் பொது விவரத்தில் பொருத்தமான பிரிவுகளிலே சில துறைகளில் விரைவான வளர்ச்சி ஏற்படுவதை முன்னிட்டு இப்போதுள்ள இலக்குகளை அதிகரித்து அவற்றிற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமெனச் சுட்டிக் காட்டியுள்ளோம். வேளாண்மை, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள, ஆரம்பக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, ஆள் பலத்தைப் பயன்படுத்துவதற்குரிய விசேஷ வேலைத் திட்டஙகள் ஆகியவற்றை மாநில அரசாங்கங்களும், மத்திய அரசாங்க அமைச்சுகளும் செய்த பரிசீலனைகளின் விளைவாக, அவற்றிற்கு அதிக நிதி உதவி இந்த நாட்டிலிருந்தே கிடைக்க வேண்டுமெனத் தெரியவந்தால், அவற்றின்கீழுள்ள வேலைத்திட்டஙகளுக்கும் இலக்குகளுக்கும் வேண்டிய நிதி உதவி அளிக்கப்படும். ஏற்றுக்கொண்ட திட்டங்கள் சிலவற்றிற்கு வெளி நாட்டு நிதி உதவி கணிசமாக வேண்டியிருந்து, அந்த வெளி நாட்டு உதவி கிடைக்குமானால், இந்த நாட்டிலிருந்தே கொடுக்க வேண்டிய நிதித் தொகை அவற்றிற்கு நிச்சயமாகத் தரப்படும்.

17. மத்திய திட்டச் செலவும், மாநிலங்களின் திட்டச் செலவும் மாநிலத் திட்டங்களை அவர்களுடன் கலந்தாலோசித்து நிச்சயித்த பிறகே தெரியவரும். மாநிலங்கள் தங்கள் திட்டங்களைத் தீட்டுவதில் பயன்படு மெனக் கருதி கீழ்க்கண்ட திட்டச் செலவு விவரத்தை உத்தேசமாகக் குறிப்பிட்டுள்ளோம்:—

அட்டவணை 4, மத்திய. மாநில திட்டச் செலவு விவரம்.

	மொத்தம்.	மத்திய அரசாங்கம்.	மாநில அரசாங்கங்கள்.
	(ரூபாய் கோடிக் கணக்கில்.)		
1. வேளாண்மையும், சிறிய பாசனமும் சமுதாய வளர்ச்சியும்.	1,025	175	850
2 பெரும் பாசனமும் சிறிய பாசனமும்	650	5	645
3 மின் சக்தி	925	125	800
4 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் ..	250	100	150
5 தொழில் துறையும் கனிப் பொருள்களும் ..	1,500	1,470	30
6 போககு வரத்தும், செய்தித் தொடர்பும் ..	1,450	1,225	225
7 சமூகப் பணிகள்	1,250	300	950
8 கையிருப்புச் சாமானகள்	200	200	..
9 மொத்தம்	7,250	3,600	3,650

" மாநில அரசாங்கங்கள் நிறைவேற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் மாநிலத் திட்டங்களில் அமைந்திருக்கும். ஒரு சில வகையைச் சேர்ந்த திட்டங்களே, இந்திய அரசாங்க அமைச்சுகளின் திட்டங்களில் மத்திய அரசாங்கத்தார் சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்களாகக் காட்டப்படும்" என்ற பொதுக் கொள்கையை அனுசரித்து செலவு விவரம் காட்டியுள்ளோம். இம் முறையில் மாநிலத் திட்டங்களின் வரம்பினை விரிவு படுத்த உத்தேசித்துள்ளோம். அப்போதுதான் மாநிலத் திட்டங்களை ஒருங்கிணைத்து நிறைவேற்ற முடியும்.

அந்நியச் செலாவணி

18. பல்வேறு அபிவிருத்தித் தலைப்புகளின்கீழ் முதலீடு செய்வதற்கு வேண்டிய அந்நியச் செலாவணியை அரசாங்கத் துறைக்கும் தனியார் துறைக்கும் சேர்த்து கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம். முதலீட்டு அளவையும் அதில் குறித்துள்ளோம் :—

அட்டவணை ; 5 தேவைப்படும் அந்நியச் செலாவணி.

		முதலீடு.	அந்நியச் செலாவணி.
		(ரூபாய் கோடிக் கணக்கில்).	
1	சிறு தொழில்கள் உள்பட தொழில்களும் கனிப் பொருள்களும்.	2,935	1,190
2	மின் சக்தி	975	270
3	போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்	1,650	300
4	வேளாண்மையும் சமுதாய வளர்ச்சியும் பாசனமும்	2,115	75
5	சமூகப் பணிகள் (நிர்மாணம் உள்பட)	1,725	80
6	கையிருப்புச் சாமான்கள்	800	..
7	மொத்தம்	10,200	1,915 அல்லது 1,900

வேலைத் திட்டங்களை முறைப்படி அமைத்தல்

19. மூன்றுவது திட்டம் பெரிய அளவிலுள்ள அபிவிருத்தித் திட்டமாகும். எனவே, வேலைத் திட்டங்களையும் செலவையும் நல்ல முறையில் அமைப்பது மிக முக்கியமாகும். அப்படிச் செய்யாவிட்டால் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்ற முடியாது. ஆண்டுதோறும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் கிடைக்கும் நிதி ஆதாரத்துக்குள் முதலீடு செய்ய முடியாது. திட்டத்தின் ஒவ்வொரு நிலையிலும் விரைவில் பயனளிக்க வல்ல பல வேலைத்திட்டங்கள் இருக்கவேண்டும். திட்டமிடுவதும் பயன் கிடைப்பதும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். வேலைத் திட்டங்களை எந்த முறையில் அமைப்பது என்பதை விளக்கிக் கூற சில பொதுவான கோட்பாடுகளைக் கீழே கொடுத்துள்ளோம் :—

(1) திட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளுக்கேற்ப வேலை முறைகளைச் சரியானபடி அமைக்க வேண்டும்; முக்கியமாக ஆள் பலத்தைத் திட்டமிடுவதிலும், மின் சக்தி, போக்குவரத்து உட்பட பல பொருள்களையும் துணைப் பணிகளையும் ஏற்படுத்துவதிலும் இப்படிச் செய்யவேண்டும் ;

(2) நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களுக்கும் இரண்டாவது திட்டத்தில் நிறைவேற்றப்படாது எஞ்சியுள்ள திட்டங்களுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். இந்த வேலைத் திட்டங்களுக்கு ஆண்டுத் திட்டத்தில் போதிய நிதிவசதி அளிக்கவேண்டும். அப்போதுதான் குறைந்த கால அளவுக்குள் அவற்றை நிறைவேற்றி வைக்க முடியும் ;

(3) ஆண்டுதோறும் தொடர்ந்து உற்பத்தி அதிகரித்து வர வேண்டும். முதலீட்டின் ஒவ்வொரு நிலையிலும் நல்ல பயன் கிடைக்கும் முறையில் திட்டத்தை அமைக்க முடியும் ; நிறைவேற்றுவதற்கு நீண்ட காலம் ஆகும் திட்டங்களும் குறுகிய கால அளவில் நிறைவேற்றக் கூடிய திட்டங்களும் நியாயமான அளவு திட்டத்தில் பங்கு பெறவேண்டும் ;

(4) பொருளாதாரத்தை மொத்தமாகக் கருதிப் பார்க்கும்போது பல்வேறு திட்டங்களில் எதை எதை எப்போது எடுத்துக்கொள்ளுவது என்று நிச்சயிக்கையில் அடியிற்கண்ட தொகுதியிலுள்ள வேலையினங்கள் முதலிடம் பெறவேண்டும் :—

(அ) வேளாண்மை உற்பத்தி வளர்ச்சிக்கு வேண்டிய முக்கிய இனங்கள் ; இதற்கு உதாரணம், உர உற்பத்தி ;

(ஆ) சரியான சமயத்தில் இருக்காவிட்டால் நெருக்கடியை ஏற்படுத்திவிடக்கூடிய இனங்கள் ; உதாரணம் : போக்குவரத்து, மின் சக்தி, உலோகங்களை உருக்குவதற்கு வேண்டிய நிலக்கரி முதலியவை.

(இ) ஏற்றுமதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய இனங்கள் ;

(ஈ) தவிர்க்கவொண்ணு இறக்குமதிகளுக்குப் பதிலாக உத்தேசிக்கப்படும் இனங்கள் ; உதாரணம் : வெண்கலம், கலப்பட உருக்கு, கருவி உருக்கு முதலியவை ;

(உ) தொழில் நுட்பக் கல்வியும் பயிற்சி வேலைத் திட்டங்களும்.

20. ஒவ்வொரு துறைக்குள்ளும் வேலைத் திட்டங்களை முறையாக அமைப்பதை மேற்கண்ட விஷயங்கள் நெறிப்படுத்துமென்றாலும், திட்டம் முழுவதும் எடுத்துக்கொண்டு பார்த்தால், முறைப்படுத்திய திட்டத்தினால் (அந்நியச் செலாவணி உட்பட) மேற்கொண்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆதாரங்களை ஆண்டுத் திட்டம் மூலம் பெற வேண்டியது அவசியமாகும். இவ்வாறே உருக்கு, சிமிட்டி, மின்சாரம், மற்ற முக்கியப் பொருள்கள் ஆகியவற்றின் முக்கிய ஆண்டு இலக்குகளை எய்துவது அவசியம்.

21. நமது தேசீய அபிவிருத்தித் திட்டம் ஐந்தாண்டு அளவுள்ளதாயிருக்கிறது. முதற்கண் இதற்கு ஒதுக்குகிற நிதித் தொகை பொதுவான அமைப்புதான். இந்த அளவுக்குள் பல நிறுவனங்களும் தங்களுக்கு வேண்டிய வேலைத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றலாம். ஆண்டுதோறும் ஒதுக்கும் நிதி அளவு ஒவ்வோர் ஆண்டிலும் வேலை விரைந்து செவ்வனே

நிறைவேற்றப்படுவதையும் நடைமுறைச் சாதனைகளையும் பொறுத்துள்ளது. எனவே, ஒவ்வொரு அபிவிருத்தித் துறையிலும் செய்த செலவுக்குப் பேரளவு பயன் பெறவேண்டுமென்பதே முக்கிய விஷயமாகும். ஒவ்வொரு துறையிலும் முக்கிய நோக்கங்களை, இரண்டாந்தர நோக்கங்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் ஏற்படுத்தும் ஆஸ்திகள் அல்லது அபிவிருத்தி செய்யப்படும் பணிகள் மிக விரைவில் மிக அதிக பலன் தர வேண்டும்.

22. பல துறைகளில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் போது மானியமும் உதவித் தொகையும் அளித்து வருகிறோம். உதவித் தொகை கொடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் விஷயமாய் அந்த வேலைத் திட்டத்தின் நோக்கத்துக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் உதவித் தொகை முழுவதையும் நிறுத்திவிட முடியுமா அல்லது குறைத்துவிட முடியுமா என்று நிர்ணயிப்பதற்காக அந்த வேலைத் திட்டம் செயலாற்றப்படுவதைப் பரிசீலனை செய்ய உத்தேசித்துள்ளோம். பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் உள்ளூர் சமுதாயத்தினரின் உழைப்பினைப் பெற முடியும் அல்லது அவற்றால் பயனடைவோரிடமிருந்து நிதி உதவி பெறமுடியும். இவ் விஷயங்கள் சரிவர கவனிக்கப்படவில்லையென அறிகிறோம். இந்த அம்சத்தை விழிப்புடன் கவனித்துவரவேண்டும். முடிவாக, மற்றொரு விஷயத்தையும் வலியுறுத்திக் கூறவேண்டும். ஒவ்வொரு வேலைத் திட்டத்தின் கட்டிட அமைப்பினை திட்டம் தீட்டும் காலத்திலேயே நன்கு பரிசீலனை செய்யவேண்டும். அப்போதுதான் கட்டுமான அமைப்பில் பேரளவு சிக்கனம் செய்ய முடியும்.

திட்ட இலக்குகள்

23. பல அபிவிருத்தித் துறைகளில் இப்போது உத்தேசித்துள்ள இலக்குகள் பூர்வாங்கமானவையே. தனியார் துறைகளிலும் பல்வேறு தொழிற்சாலை பிரதிநிதிகளுடன் இப்போது கலந்தாலோசித்து வருகிறோம். இது முடிந்தவுடன் அரசாங்க, தனியார் துறைகளிலும் சேர்த்து தொழில் திட்டம் பெருமொத்தமாக எப்படி இருக்கவேண்டுமென்பதைக் கவனிக்க முடியும். தொழில், கனிப் பொருள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றின் கீழ் வேலைத் திட்டங்களை அமைப்பது மத்திய அமைச்சுகளின் பொறுப்பாகும். இவை விஷயமாய் பூர்வாங்க வேலைகளை விரைந்து செய்து வந்தபோதிலும், இவற்றை இன்னும் விரிவாக வகுக்கவில்லை. வேளாண்மை, சிறு தொழில்கள், சாலை அமைப்பு, சமூகப் பணிகள் போன்ற சில முக்கியத் துறைகளில் மாநில அரசாங்கத் திட்டப் பொதுவிவரம் 1960–ம் ஆண்டு செப்டம்பர்—நவம்பரில் தான் கிடைக்கும். இது மாவட்ட நிலையில் தயாரிக்கப்படும் திட்டங்களை அனுசரித்தும், மேற்கொண்டு செய்யப்படும் ஆராய்ச்சியின் அடிப்படையிலும் திருத்தப்படும். இந்த நிலைமைகளில் இந்தப் பொது விவரத்தில் குறிப்பட்டுள்ள இலக்குகள் மூன்றாவது திட்டத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சியின் பொது அளவையே குறிக்கின்றன. திட்டம்

பொதுவாக எப்படி இருக்குமென்பதை நாம் இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம். முரண்பாடுகளும் குறைபாடுகளும் நமக்குப் புலனு கின்றன. இதுவே இதனால் நமக்குக் கிடைக்கும் பயனுகும்.

தேசிய வருமானமும் வேலை வாய்ப்பும்

24. பல்வேறு துறைகளில் உத்தேசித்துள்ள அபிவிருத்தி இலக்குகளை ஆராய்ந்து பார்த்தோமானால், தேசீய வருமானம் மூன்றுவது திட்டக் காலத்தில் ஆண்டு தோறும் 5 சதவீதம் உயர வேண்டுமெனத் தெரிய வரும். மூன்றுவது திட்டக் கால அளவில் 150 லட்சம் பேருக்குப் புதிதாக வேலை கிடைக்க வேண்டும். இவர்களில் 105 லட்சம் பேருக்கு வேளாண்மை அல்லாத மற்றத் துறைகளில் வேலை கிடைக்கும்; 35 லட்சம் பேர் வேளாண்மைத் துறையில் வேலை பெறுவர்.

சீர்மைப்பாடும் நீக்குப் போக்கும்

25. திட்டத்தின் பொது அமைபபை வகுக்கையில் பொருளாதாரத்தில் ஒவ்வொரு முக்கிய நிலையிலும் பல விஷயங்களையும் சீர் செய்ய முயன்றுள் ளோம். உருக்கு, நிலக்கரி, மின் சக்தி, மற்றப் பொருள்கள் ஆகிய வற்றின் தேவைகளை, கவனமாக மதிப்பிட்டு திட்டத்தில் அவற் றிற்கு ஏற்பாடு செய்ய முயற்சி செய்துள்ளோம். இவ் வண்ணமே ரயில்வேத் திட்டத்தை நிர்ணயிக்கையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களினுல் ஏற்படக்கூடிய அதிகப் போக்குவரத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டுள் ளோம். இந்தப் பூர்வாங்க நிலைக்கு அப்பால் வேலைத் திட்டங்களை முறை யாக அமைக்கும் வேலையையும் பல்வேறு பிரதேசங்களின் தேவைகளையும் அங்கு கிடைப்பவற்றையும் கருதிப் பார்க்கும்போது, உத்தேச இலக்குகளை மாற்றவேண்டியிருக்கும்; அதற்கு ஏற்ப நிதி ஒதுக்கவேண்டி வரும்.

26. முன்னரே கூறியுள்ளவாறு, சில துறைகளில் வேலைத் திட்டங்களை முறையாக அமைப்பதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் அந்நியச் செலாவணி எவ்வளவு கிடைக்கிறது என்பதேயாகும். அந்நியச் செலாவணி எவ்வளவு கிடைக்குமென்பது நீண்டகால அளவில் தான் தெரியவரும். எனவே, இந்த நிலையில் அந்நியச் செலாவணி தேவைப்படுகிற வேலைத் திட்டங்களை நீக்குப் போக்கு உள்ளவையாய் அமைத்துள்ளோம். அப்போதுதான் கிடைக்கும் அந்நியச் செலாவணிக்கு ஏற்ப அவற்றை மாற்றிக் கொள்ள முடியும். தொழில்களும் கனிப் பொருள் களும் என்னும் அத்தியாயத்தில் விளக்கியுள்ளவாறு தொழில் துறை வேலைத்திட்டங்களை கீழ்க்கண்ட ஐந்து வகைகளாகத் தொகுத்துள்ளோம் :

(1) நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்களும், இரண்டாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படாது எஞ்சியுள்ள வேலைத் திட்டங் களும் ;

(2) வெளி நாட்டு உதவி ஏற்கெனவே வாக்களிக்கப்பட்டுள்ள புதிய வேலைத் திட்டங்கள் ;

(3) திட்டத்தில் சேர்ந்துள்ளவையாக தற்போதைக்குக் கருதக் கூடிய புதிய வேலைத் திட்டங்கள் ; இவற்றைத் திட்டமிடும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது ; இவற்றிற்கு வேண்டிய அந்நியச் செலாவணிக்கு இனித்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் ;

(4) பூர்வாங்க வேலை எல்லாம் செய்து முடிக்கப்படாமலும் அந்நியச் செலாவணி வாக்களிக்கப்படாமலுமுள்ள மற்ற புதிய வேலைத் திட்டங்கள். இவற்றைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது பற்றி திட்ட வட்டமாக முடிவு எதுவும் இன்னும் எடுக்கவில்லை. இவற்றை மேற் கொண்டும் நன்கு ஆராய்ந்து காலக் கிரமத்தில் அவற்றைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாமா என்று ஆலோசனை செய்வதே நமது உத்தேசமாகும் ;

(5) எதிர்கால அபிவிருத்தியைப் பொறுத்து மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள். இவற்றை இப்போது தெளிவாக நிர்ணயிக்க முடியாது.

27. மூன்றாவது திட்ட முக்கிய இலக்குகளையும் முதலிரு திட்டத்தின் முன்னேற்றப் புள்ளி விவரங்களையும் இந்த அத்தியாயத்தின் கடைசியில் சேர்த்துள்ள இணைப்பில் சுருக்கமாகக் கொடுத்துள்ளோம். இங்கு சில முக்கியமான அம்சங்களைக் குறித்து ஆலோசனை செய்வதே போதுமானதாகும்.

வேளாண்மையும் பாசனமும்

28. அந்தந்தப் பகுதி வேளாண்மைத் திட்ட அடிப்படையில் முடிவாக நிச்சயிக்கக் கூடிய இலக்குகளைப் பொறுத்து வேளாண்மை உற்பத்தியை 30 முதல் 33 சதவீதம் வரை அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். சில முக்கிய வேளாண்மைப் பொருள்களை எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது பற்றிய இலக்குகளைக் கீழே கொடுத்துள்ளோம்:

பொருள்.	யூனிட்.	அதிக உற்பத்தி.	அதிகரிப்பு சத வீதம்.
உணவுத் தானியங்கள்.	லட்சம் டன்	250—300	33—40
எண்ணெய் வித்துக்கள்.	ஷை	20—23	28—32
பருப்பு வெல்லம்	ஷை	181—20	25—28
பருத்தி	லட்சம்பேல்	18	33
சணல்	ஷை	10	18

பழங்கள், காய்கறிகள், பால், மீன், இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருள்களையும் தேங்காய், பாக்கு, முந்திரி, மிளகு, ஏலக்காய், புகையிலை, அரக்கு, வெட்டுமரம் போன்ற மற்றப் பொருள்களையும் அதிக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

29. ஆள் ஒன்றுக்கு தினம் ஒன்றுக்கு 15 அவுன்ஸ் தானியங்கள், 3 அவுன்ஸ் பருப்புகள் என்ற அளவில் கணக்கிட்டு உணவுத் தானிய இலக்குகளை நிச்சயித்துள்ளோம். நெருக்கடி நிலைகளையும் உத்தேசித்து

அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். ஆள் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 17·5 கஜம் பருத்தித் துணி கிடைப்பதற்கு ஏற்ற வகையிலும் அதைத் தவிர ஓரளவு ஏற்றுமதி செய்யக் கூடிய வகையிலும் கச்சாப் பருத்தி இலக்கு நிச்சயித்துள்ளோம்.

30. வேளாண்மை அபிவிருத்திக்குரிய குறிப்பிட்ட வேலைத் திட்டங்களைப் பொருத்தவரையில், பெரிய சிறிய பாசன வேலைகளினால் மேற்கொண்டும் பயனடையக் கூடிய நிலப்பரப்பு 2 கோடி ஏகராவாகும். பழைய பாசன வேலைகள் முழுவதுமோ ஒரு பகுதி மட்டுமோ பயனற்றுப் போவது, இது போன்ற மற்றைய விஷயங்கள் ஆகியவைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்ட பிறகே இவ்வாறு மதிப்பிட்டுள்ளோம். மூன்றாவது திட்டக் கால முடிவில் நிகரமாய்ப் பாசனம் பெறும் நிலப் பரப்பு 9 கோடி ஏகராவாக இருக்கும். நான்கு கோடி ஏகரா பரப்பு புன்செய்ச் சாகுபடி அமைப்பிலிருக்கும் மேற்கொண்டும். 130 லட்சம் ஏகரா பரப்பில் மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். பத்து லட்சம் டன் நைட்ரஜன் உரமும் 4 முதல் 5 லட்சம் பாஸ்பேட் உரமும் பயன்படுத்தப்படும். ஐந்து கோடி ஏகரா நிலப்பரப்பில் பசுந்தழை எரு உபயோகிக்கப்படும். 7·5 கோடி ஏகரா பரப்பில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

31. 1963-ம் ஆண்டு அக்டோபருக்குள் கிராமப்பகுதி முழுமையிலும் சமுதாய அபிவிருத்தித் திட்டம் பரவிவிடும். கூட்டுறவு அபிவிருத்தி வேலைத் திட்டத்தை 1958-ம் ஆண்டு நவம்பரில் தேசீய அபிவிருத்திக் கவுன்சில் நிர்ணயித்துள்ள முறையிலேயே தீவிரமாக நடத்துவோம். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் நிதி உதவி பெரும் பணியாற்றும்.

தொழில் துறையும் மின் சக்தியும்

32. தொழில் துறையில் தன்னிறைவு ஏற்படுத்தக் கூடிய தொழில்களை அபிவிருத்தி செய்ய விசேஷக் கவனம் செலுத்தியுள்ளோம். உருக்கு, யந்திர நிர்மாணம், முதலீட்டுப் பொருள்கள் ஆகியவை இதற்கு உதாரணங்களாகும். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையாயுள்ள பொருள்களின் உற்பத்தி அதிகரிப்புக்கும் அவசியமான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

33. இரும்புத் தொழிலும் உருக்குத் தொழிலும் 102 லட்சம் டன் உருக்குக் கட்டிகளும் 15 லட்சம் டன் தேனிரும்பும் விற்பனைக்குக் கிடைக்கும் விதத்தில அவற்றை அபிவிருத்தி செய்ய உத்தேசித்துள்ளோம். இது அரசாங்கத் துறையிலேயே முழுவதும் நிறைவேறிவிடுமென எதிர்பார்க்கிறோம். பிலாய், ரூர்கேலா, துர்காபூர் உருக்கு ஆலைகளை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளோம். இவை கூட்டாகச் சேர்ந்து 55 லட்சம் டன் உருக்குக் கட்டிகளை உற்பத்தி செய்யும். பொகாராவில் அரசாங்கத் துறையில் நான்காவது உருக்கு ஆலை ஒன்றை ஏற்படுத்தவும் திட்டத்தில்

வகை செய்துள்ளோம். தனியார் துறையில் பரவலான முறையில் உருக்கு உலைகள் அமைக்க உத்தேசித்துள்ளோம். இவைகளில் துண்டு இரும்பு மின்சார உலை மூலம் 2 லட்சம் டன் உருக்குக் கட்டிகளும், லோ ஷாப்ட் ஊது உலை மூலம் 2 லட்சம் டன் தேனிரும்பும் கிடைக்கும். கலப்பட உருக்கு, கருவி உருக்கு, விசேஷ உருக்கு ஆகியவை 2 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

34. யந்திரத் துறையிலும் பொறியியல் துறையிலும் மூன்றாவது திட்டக் கால அளவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இத் துறையில் மேற்கொள்ளும் சில வேலைகள் பின்வருமாறு : கனரக யந்திர நிர்மாணச் சாலை, யந்திர வார்ப்படச் சாலை, நிலக்கரிச் சுரங்க யந்திர சாதனங்கள், கனரகக் கட்டுமான சாதனம், கனத் தகடு வேலைகள், பாத்திர வேலைகள், கனரக யந்திரக் கருவித் தொழிற்சாலை, பங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் யந்திரக் கருவித் தயாரிப்புச் சாலை உற்பத்தியை இருமடங்காக்குதல், போப்பாலில் கனரக மின்சார வேலைத் திட்டத்தை விஸ்தரித்தல், அதிக அமுக்க அளவு உள்ள கொதிகலன்களையும் நுண்ணிய அளவீட்டுக் கருவிகளையும் உற்பத்தி செய்வதற்குரிய திட்டங்கள், கனரக மின்சாரக் கருவிச் சாலைகள் இரண்டினையும் மேற்கொண்டு அமைத்தல்.

35. தனியார் துறையில் யந்திர நிர்மாண வேலைத் திட்டங்கள், அரசாங்கத் துறையிலுள்ள முயற்சிக்கு உதவியாயிருக்கும். துணி ஆலை, சர்க்கரை ஆலை, சிமிட்டி ஆலை காகித ஆலை, ஆகியவற்றிற்கு 1965–66-ம் ஆண்டில் வேண்டியிருக்கும் யந்திரத் தேவைகளை எதிர்பார்த்து சில வேலைத் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். இதனால் அந்தந்தத் தொழில்களில் முழு யந்திரங்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது குறையும்.

36. இரண்டாவது திட்ட முடிவில் 210,000 டன் நைட்ரஜன் உரம் உற்பத்தியாகும். இது மூன்றாவது திட்ட முடிவில் 10 லட்சம் டன்னாகப் பெருகும். பாஸ்பாடிக் உர உற்பத்தியையும் கணிசமாக அதிகரிக்க உத்தேசித்துள்ளோம்.

37. இரண்டாவது திட்டத்தில் 6 கோடி டன் நிலக்கரி உற்பத்தி செய்வதென உத்தேசித்திருந்தோம். இப்போது 9·7 கோடி டன் அதாவது, முன்பு உத்தேசித்ததைத் காட்டிலும் 3 கோடி 70 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளோம்.

38. நிச்சயமாக எண்ணெய் வளம் இருக்கிறதென தெரிந்ததன் அடிப்படையில் நகரகாட்டியா பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 27·5 லட்சம் டன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் (க்ரூட் ஆயில்) உற்பத்தி ஆகுமென எதிர்பார்க்கிறோம். நகரகாட்டியா எண்ணெயைச் சுத்திகரிக்க நூன்மதி, பரௌனி ஆகிய ஊர்களில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைக் கட்டி முடிக்கவும் ஏற்பாடு செய்துள்ளோம். காம்பேயிலும், எண்ணெய் கிடைக்குமெனத் தெரிகிற மற்ற இடங்களிலும் எண்ணெய் வள ஆராய்ச்சியைத் தீவிரமாக மேற்கொள்வோம்.

39. நாங்கள் உத்தேசித்துள்ள மற்ற முக்கிய இலக்குகள் பின்வருமாறு :—

	யூனிட்.	ஆண்டு உற்பத்தி. 1960-61.	1965-66.
அலுமினியம்	ஆயிரம் டன்	17	75
சிமிட்டி	லட்சம் டன்	88	130
காகிதம்	ஆயிரம் டன்	320	700
கந்தக அமிலம்	ஆயிரம் டன்	400	1,250
காஸ்டிக் சோடா	ஆயிரம் டன்	125	340
சர்க்கரை	லட்சம் டன்	22·5	30
பருத்தித்துணி, ஆலைத்துணி ..	கோடி கஜம்	500	580
சைக்கிள்—ஸ்தாபனரீதியில் அமைந்த துறை ..	ஆயிரக்கணக்கில்	1050	2,000
தையல் யந்திரங்கள்	ஆயிரக்கணக்கில்	300	450
மோட்டார்	எண்ணிக்கை	5,3500	100,000

40. இரண்டாவது திட்ட முடிவில் 58 லட்சம் கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. இந்த எண்ணிக்கை மூன்றுவது திட்ட முடிவில் 118 லட்சம் கிலோவாட்டாக உயரும். 3 லட்சம் கிலோவாட் அணுசக்தி உற்பத்தி செய்யவும் திட்டமுள்ளது. மூன்றுவது திட்டக் கால அளவில் 15,000 நகரங்களிலும் கிராமங்களிலும் மின்சார வசதி ஏற்படுத்தப்படும். இதனுல் இவற்றின் மொத்த எண்ணிக்கை 34,000 ஆகும்.

41. அடியிற்கண்ட சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக மாநில அரசாங்கங்களும் அகில இந்தியக் கழகங்களும் திட்டம் வகுத்து வருகின்றனர். தொழில் பண்ணைகள், (அம்பர் கதர் உட்பட) கதர், கிராமத் தொழில்கள், கைத்தறி, கைப்பணிகள், பட்டு, கயிறு ஆகியவையே அச் சிறு தொழில்களாகும். தனியார் துறை மூலமாகவும் கூட்டுறவுத் துறை மூலமாகவும் உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிப்பதே உத்தேசமாகும். பயிற்சி வசதி, தொழில் முறை வசதி, கடன் வசதி மூலப் பொருள் வழங்கல் முதலிய பலவித வசதிகள் செய்து கொடுக்கப்படும். பரவலான துறையில், அதாவது, கைத்தறி, விசைத்தறி, கதர் துறைகளில் துணி உற்பத்தி 1960-61-ம் ஆண்டில் 261 கோடி கஜமாக இருந்தது. இதை 1965-66-ம் ஆண்டில் 350 கோடி கஜமாக உயர்த்த உத்தேசித்துள்ளோம். கச்சாப் பருத்தி உற்பத்தி 37 லட்சம் ராத்தலிலிருந்து 50 லட்சம் ராத்தலாக அதிகரிக்கும். இரண்டாவது திட்டக் காலத்தில் 60 தொழில் பண்ணைகள் இருந்தன. இவை மூன்றுவது திட்டத்தில் 360 ஆக அதிகரிக்கும். சிறு தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்போதும் சிறு நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் அவற்றை ஏற்படுத்துவதற்கும் பெரும் தொழில்களுக்கு துணைத் தொழில்களாக அல்லது கிளைத் தொழில்களாக இவற்றை இணைப்பதையும் வலியுறுத்துவோம். கைப்பணித் தொழிலிலும், கயிறுத் தொழிலிலும் உற்பத்தித் தரத்தையும் அளவையும் உயர்த்தி ஏற்றுமதிக்கு வேண்டிய அளவு உற்பத்தி ஏற்படும் விதத்தில் திட்டங்களை வகுப்போம்.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்.

42. மூன்ருவது திட்டத்தின் கடைசி ஆண்டில் 23·5 கோடி டன் அளவுக்கு ரயில்வேக்கள் சாமான்களை ஏற்றிச்செல்ல முடியுமென எதிர் பார்க்கிருேம். 1960–61-ம் ஆண்டில் 16·2 கோடி டன் சாமான்களையே அவை ஏற்றிச்செல்லுமென உத்தேசித்துள்ளோம். 1,200 மைல் அளவுக்குப் புதிய இருப்புப்பாதை போடப்படும். 1960–61-ம் ஆண்டில் 144,000 மைல் அளவுக்குச் சாலைகள் இருக்குமென எதிர்பார்க்கிருேம். மூன்ருவது திட்டத்தில் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20,000 மைல் அளவுக்குச் சாலை போட உத்தேசித்துள்ளோம். பஸ் போக்குவரத்து முக்கியமாய் தனியார் துறையில்தான் ., விஸ்தரிக்கும். வர்த்தக வண்டிகளின் எண்ணிக்கை மூன்ருவது திட்டக் காலத்தில் 2 லட்சத்திலிருந்து 3 லட்சமாக அதிகரிக்குமென உத்தேசமாய் மதிப்பிட்டுள்ளோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கப்பல் போக்குவரத்து டன்னளவு 9 லட்சம் டன் G.R.T-யாக இருந்தது. இந்த எண்ணிக்கை இப்போது மேற்கொண்டும் இரண்டு லட்சம் G.R.T. அதிகரிக்கும். இந்த இலக்கு போதுமானதெனக் கருதுகிருேம். இதை மீண்டும் பரிசீலனை செய்வோம்.

சமூகப் பணிகள்.

43. சமூகப் பணிகளுக்கு இப்போது அதிக நிதி தேவைப்படுகிறது. மக்களும் இவற்றின் மூலம் அதிக நன்மை எதிர்பார்க்கின்றனர். கடந்த ஆண்டுகளில் சமூகப் பணித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையே அவை குறிக்கின்றன. சில துறைகளில் மூன்ருவது திட்டக் காலத்தில் மேற்கொண்டும் நல்ல முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கிருேம். 6–11 வயதுத் தொகுதியிலுள்ள அனைவருக்கும் இலவசக் கட்டாய துவக்கக் கல்வி அளிக்க உத்தேசித்துள்ளோம். சில பின்னணிப் பகுதிகளில் மகளிர் கல்வித் துறையில் அவ்வளவு அதிக முன்னேற்றம் ஏற்படாதென வைத்துக் கொண்டாலும், 6–11 வயதுத் தொகுதியினரில் மாணுக்கரின் சதவீதம் 60-லிருந்து 80 ஆகவும், 11–14 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களில் மாணுக்கரின் சதவீதம் 23-லிருந்து 30 ஆகவும், 14–17 வயதுத் தொகுதியினரில் மாணுக்கரின் சதவீதம் 12-லிருந்து 15 ஆகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கிருேம். 1960-ல் பள்ளிக்குச் செல்லும் மாணுக்கரின் எண்ணிக்கை 410 லட்சமாக இருந்தது. இது 1965–66-ல் 650 லட்சமாக உயரும்.

44. விஞ்ஞானக் கல்வி கற்பிக்கவும் தொழில் நுட்பக் கல்வி கற்பிக்கவும் ஏற்பாடு செய்து அதிக நிதி உதவி அளிப்போம். கல்லூரிகளில் விஞ்ஞானப் பாடம் எடுத்துக் கொள்ளும் மாணுக்கரின் எண்ணிக்கை மொத்ததில் 30-லிருந்து 40 சதவீதம் உயரும். இரண்டாவது திட்ட முடிவில் பொறியியல் கல்லூரிகளிலும் பலதொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணுக்கரின் எண்ணிக்கை 37,000 ஆக இருந்தது. இது மூன்ருவது திட்ட முடிவில் 52,500 ஆக அதிகரிக்கும். தொழில் நுட்பப் பயிற்சி வசதிகள் ஏற்படுத்துவதற்காக விஞ்ஞான

ஆய்வுக் கூடங்களுக்கும் பொறியியல் நிறுவனங்களுக்கும் உதவிசெய்து ஊக்கமளிப்போம். பகுதிநேரக் கல்வி கற்பிக்கவும் தபால் மூலம் கல்வி கற்பிக்கவும் விசேஷ ஏற்பாடு செய்வோம்.

45. சுகாதாரப் பணித்துறையை எடுத்துக்கொண்டால் பதிவுபெற்ற மருத்துவரின் எண்ணிக்கை 84,000-லிருந்து 1 லட்சத்து 3,000 ஆகவும், மருத்துவ மனைப் படுக்கைகளின் எண்ணிக்கை 160,000-லிருந்து 190,000 ஆகவும், மருத்துவமனைகள், மருந்துச்சாலைகள் ஆகியவைகளின் எண்ணிக்கை 12,500-லிருந்து 14,600 ஆகவும் அதிகரிக்கும். ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 2,800-லிருந்து 5,000 ஆகவும் உயரும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு முதலிடம் அளிப்போம். குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்களின் எண்ணிக்கை 1,800-லிருந்து 8,200 ஆகப் பெருகும். குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டுவசதி, தொழில் துறைத் தொழிலாளருக்கு வீட்டுவசதி, சேரி ஒழிப்பு, வீட்டுவசதிக்காக நில ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்வது ஆகிய வேலைத்திட்டங்களை விரிவாக்கி வீட்டுவசதித் திட்டங்களுக்கு வேண்டிய நிதி உதவி வீட்டுவசதி நிதிக் கார்ப்பொரேஷனுக்கு வழங்கப்படும்.

46. கிராமப் பகுதிகளிலெல்லாம் குறைந்தபட்ச வசதிகள் சில இருப்பதற்காக மூன்றுவது திட்டத்தில் ஸ்தல அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் சேர்த்துள்ளோம். போதிய அளவு குடிதண்ணீர் வசதி, ஒவ்வொரு கிராமத்தையும் அடுத்துள்ள முக்கிய சாலையுடன் அல்லது ரயில்வே நிலையத்துடன் இணைக்கும் சாலைகள், சமுதாய நிலையமாக விளங்கி கிராம நூல் நிலையத்துக்கும் வேண்டிய வசதி ஏற்படுத்துவதற்காக கிராமப் பள்ளிக் கூடம் கட்டிடம் ஆகியவை அவ் வசதிகளாகும்.

47. இப்போது மூன்றுவது திட்டத்தில் நாம் உத்தேசித்துள்ள இலக்குகள் நிறைவேறுமானல், தன்னிறைவு வளர்ச்சிநிலை விரைவில் ஏற்படும். நான்காவது திட்டத்தில் விரைந்த வளர்ச்சி ஏற்படவும் அவை அடிப்படையாக அமையும். ஏற்கெனவே பெருமளவில் முதலீடு செய்துள்ளோம். எனவே, ஏற்படுத்தியுள்ள ஆஸ்திகள் நன்கு பயன்படுமாறு பார்த்துக்கொள்வது அவசியம். வளர்ச்சி ஏற்படுவதாலேயே உற்பத்தி பெருகவும் வேலை வாய்ப்பு அதிகமாவதற்கும் புதிய வாய்ப்புகள் ஏற்படும். சமுதாய ஆள்பலம், சமுதாயச் சேமிப்பு ஆகியவற்றைப் பூரணமாக உபயோகிப்பதை உறுதிப்படுத்தி இந்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இணைப்பு.

உற்பத்தியும் வளர்ச்சியும் : முன்னேற்றமும் இலக்குகளும்.

இனம்.	யூனிட்.	1950–51.	1955–56.	1960–61 எதிர்பார்ப்பது.	1965–66 இலக்கு.	1950–51ல் இருந்ததை விட 1960–61ல் அதிகரிப்பு (சதவீதம்).	1960–61ல் இருந்ததை விட 1965–66ல் அதிகரிப்பு (சதவீதம்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. வேளாண்மையும் சமுதாய வளர்ச்சியும்—							
1.1 வேளாண்மை உற்பத்தி—							
உணவுத் தானியங்கள்	லட்சம் டன்	522*	658*	750	1,000–1,050	44	33–40
பருத்தி	லட்சம் பேல்	29	40	54	72	86	33
கரும்பு—வெல்லம்	லட்சம் டன்	56	60	72	90–92	29	25–28
எண்ணெய் வித்துகள்	லட்சம் டன்	51	56	72	92–95	41	28–32
சணல்	லட்சம் பேல்	33	42	55	65	67	18
தேயிலை	லட்சம் ராத்தல்	6,130	6,780	7,250	8,500	18	17
புகையிலை	ஆயிரம் டன்கள்	257	298	300	325	17	8
மீன்	லட்சம் மெட்ரிக் டன்	7	10	14	18	100	29
பால்	லட்சம் மணங்கு	4,660	5,280	6,000	6,900	29	15
கம்பளி	லட்சம் ராத்தல்	600	650	720	900	20	25
1.2 வேளாண்மைப் பணிகள்—							
பாசனப் பிரதேசம் (நிகர மொத்தம்)	லட்சம் ஏகரா	515	562	700	900	36	29
நிலமீட்சி (அதிகப் பகுதி)	லட்சம் ஏகரா	..	27	12	10	..	..
மண் வளப் பாதுகாப்பு (பயன்பெற்ற அதிகப் பகுதி).	லட்சம் ஏகரா	..	7	20	130	..	..

* 1956–57 வரையில் புள்ளி விவர மாறுதல்களையும் மதிப்பீட்டு முறை மாறுதல்களையும் முன்னிட்டு உற்பத்தி மதிப்பீட்டைத் திருத்தி அமைத்துள்ளோம்.

இணைப்பு—தொடர்ச்சி

உற்பத்தியும் வளர்ச்சியும் : முன்னேற்றமும் இலக்குகளும்—தொடர்ச்சி.

இனம்.	யூனிட்.	1950–51.	1955–56.	1960–61 எதிர்பார்ப்பது.	1965–66 இலக்கு.	1950–51ல் இருந்ததை விட 1960–61ல் அதிகரிப்பு (சதவீதம்.)	1960–61ல் இருந்ததை விட 1965–66ல் அதிகரிப்பு (சதவீதம்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.2 வேளாண்மைப் பகுதிகள்—தொடர்ச்சி							
பயன்படுத்திய நைட்ரஜன் உரங்கள்	ஆயிரம் டன் N	55	105	360	1,000	555	178
பயன்படுத்திய பாஸ்பாடிக உரங்கள்	ஆயிரம் டன் P_2O_5	7	13	67	400–500	857	497-646
விதைப் பண்ணைகள்	எண்ணிக்கை	..	..	4,000	4,500	..	13
1.3 சமுதாய வளர்ச்சி—							
வட்டாரங்கள்	எண்ணிக்கை	..	1,064	3,112	5,217	..	68
அடங்கும் கிராமங்கள்	ஆயிரம்	..	150	400	550	..	38
பயனடையும் மக்கள்	லட்சக் கணக்கில்	..	780	2,000	3,740	..	87
2. மின்சாரம்—							
மின்சாரம் (நிறுவப்பட்ட அளவு)	லட்சம் கிலோவாட்	23	34	58	118	152	103
மின்சார உற்பத்தி	கோடி கிலோவாட் (h)	657·5	1,100	2,070	4,225	215	104
மின்சார வசதி பெற்ற நகரங்களும், கிராமங்களும்.	ஆயிரம்	3·7	7·4	19	34	414	79
3. கனிப் பொருள்கள்—							
இரும்புக் கனி †	லட்சம் டன்	30	47	120	320	300	167
நிலக்கரி †	லட்சம் டன்	320	380	530	970	66	83
4. பெருந் தொழில்கள்—							
4.1 உலோக இயல் தொழில்கள்—							
வேலை நிறைவு பெற்ற உருக்கு	லட்சம் டன்	10	13	26	69	160	165
தேனிரும்பு (விற்பனை)	லட்சம் டன்	3·5	3·8	9	15	157	67
செம்பு	ஆயிரம் டன்	..	7·3†	7·9	18·4	..	133
அலுமினியம்	ஆயிரம் டன்	3·7	7·3	17	75	359	341

4.2 யந்திர, மின்சார என்ஜினீரிங்—							
சிமிட்டித் தொழில யந்திரங்கள்	மதிப்பு லட்ச ரூபாயில்	..	34†	80	450	..	463
சர்க்கரை ஆலே யந்திரங்கள	மதிப்பு லட்ச ரூபாயில்	..	19	440	1,000	..	127
யந்திரக கருவிகள (தரப்படுத்தப்பட்டவை) ..	மதிப்பு லட்ச ரூபாயில் ..	29	72†	550	3,000	1,797	445
உருக்காலான சிறு குண்டுகள்	லட்சக் கணக்கில்	1	9	24	120**	2,300	400
டீசல் எனஜின்கள	ஆயிரம்	5·5	10	33	66	500	100
யந்திரக கலப்பைகள்	எண்ணிக்கை	..	..	2,000	10,000	..	400
மின்சார மோட்டார்கள் (200 தடைக குதிரை திறனும் அதற்குக் கீழும்). ..	ஆயிரம் குதிரைத் திறன்	100	270	800	2,500‡	700	213
மின்சார ட்ரான்ஸ்பாமர்கள் (33 கிலோவாட்டும் அதற்குக கீழும்). ..	1000 கிலோவாட் ..	179	625	1,350	3,500	654	159
மின்சார கேபிள் (ACSR) கடத்திகள்	1000 டன்	1·7	8·7	18	44	959	144
4.3 ரயில்வே என்ஜின்கள்—							
நீராவி, டீசல் என்ஜின்கள்	எண்ணிக்கை	n.a.	500§	5,250§	1,609§	..	29
மின்சார என்ஜின்கள்	எண்ணிக்கை	..	..	..	232§	..	..
4.4. ரசாயன உரங்கள்—							
(நைட்ரஜன் இருப்பளவில்).	1000 டன்	9	79	210	1,000	2,233	376
நைட்ரஜன் உரங்கள்							
பாஸ்பாடிக் உரங்கள் (P_2O_5 இருப்பளவில்) ..	1000 டன்	9	12	70	400–500	678	471–614
கந்தக அமிலம்	1000 டன்	99	164	400	1,250	304	213
சோடா உப்பு	1000 டன்	45	81	240	450	433	88
காஸ்டிக் சோடா	1000 டன்	11	35	125	340	1,036	172
சல்பா மருந்துகள்	டன்	..	83†	150	1,000	..	567
(D.D T) டி.டி.டி.	டன	..	284	2800	2,800	..	..

* 1956–57 வரையில் புள்ளி விவர மாறுதல்களையும் மதிப்பீட்டு முறை மாறுதல்களையும் முன்னிட்டு உற்பத்தி மதிப்பீட்டைத் திருத்தி அமைத்துள்ளோம்.

† காலண்டர் ஆண்டுககு உரியது.

‡ முன்னூறு குதிரைத் திறனும் அதற்குக் கீழும்.

** மூன்று ஷிப்டுகளில் முழு அளவுக்கு வேலே செய்வதன மூலம்.

§ திட்டக் கால அளவுக்குச் சம்பந்தப்படுவது.

இணைப்பு—தொடர்ச்சி

உற்பத்தியும் வளர்ச்சியும்: முன்னேற்றமும் இலக்குகளும்—தொடர்ச்சி.

இனம்.	யூனிட்.	1950–51	1955–56.	1960–61 எதிர்பார்ப்பது.	1965–66 இலக்கு.	1950–51ல் இருந்ததை விட 1960–61ல் அதிகரிப்பு (சதவீதம்).	1960–61ல் இருந்ததை விட 1965–66ல அதிகரிப்பு (சதவீதம்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
4.5 மற்ற தொழில்கள்—							
தையல் யந்திரங்கள் (ஸ்தாபன ரீதித் துறை மட்டும்).	ஆயிரம்	33	111·2	300	450	809	50
சைக்கிள்கள் (ஸ்தாபன ரீதித் துறை மட்டும்) ..	ஆயிரம்	101	513	1,050	2,000	940	90
மோட்டார்	ஆயிரம்	16·5	25·3	53·5	100	224	87
பருத்தித் துணிகள் (ஆலையில் தயாரித்தவை).	கோடி கஜம்	372	510·2	500	580	34	16
சர்க்கரை	லட்சம் டன்	11	19	22·5	30	105	33
உருக்குக் கட்டுமான அமைப்பு	ஆயிரம டன்	..	90	250	1,000	..	300
சிமிட்டி	லட்சம் டன	27	46	88	130	226	48
பெட்ரோலியப் பொருள்கள்	லட்சம் டன	..	36	46	74	..	61
காகிதமும் காகித அட்டையும்	ஆயிரம் டன்	114	187	320	700	181	119
5. கிராமத தொழில்களும் சிறு தொழில்களும்—							
கதர் (சாதாரண கதர்)	லட்சம் கஜம்	73	289	480	350 (கோடி).	558	..
அம்பர் கதர்	லட்சம் கஜம்	..	..	320		..	..
கைத்தறித் துணி	கோடி கஜம்	74·2	147·1	212·5		186	34
விசைததறித் துணி	கோடி கஜம்	14·8	27·3	40·5		174	..
பட்டு வளர்ப்பு (கச்சாப் பட்டு)	லட்சம் ராத்தல்	19	31†	37	50	95	35
6. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்—							
6.1 போக்குவரத்துப் பணிகள்—							
ரயில்வே—பிரயாண வண்டிகள் சென்ற மைல் அளவு.	லட்சம்	950	1,090	1,240	1,430	31	15
எடுத்துச் சென்ற சாமான்கள்	லட்சம் டன்	910	1,140	1,620	2,350	78	45

சாலைகள்—தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட சாலைகளின் நீளம்.	ஆயிரம் மைல்கள் ..	97·5	122	144	164	48	14
கப்பல் போக்குவரத்து	லட்சம் (G.R.T) ..	4	5	9	11	125	22
6.2 செய்தித் தொடர்பு—							
தபாலாபீஸ்கள்	ஆயிரக் கணக்கில் ..	36	55	75	95	108	27
தந்தி ஆபீஸ்கள்	ஆயிரக் கணக்கில் ..	3·6	5·1	6·3	8·3	75	32
டெலிபோன் எண்ணிக்கை	ஆயிரக் கணக்கில் ..	168	280	475	675	183	42
7. கல்வி—							
7.1 பொதுக் கல்வி—							
பள்ளி மாணுக்காகள்	லட்சக் கணக்கில்	235	315	411	648	75	58
அந்தந்த வயதுத் தொகுதியைச் சேர்ந்த சிறுவர்களில் பள்ளி செல்லும் சிறுவர்களின் சத வீதம்—							
ஆரம்ப நிலை	6—11 வயது	43	51	60	80	40	33
இடை நிலை	11—14 வயது	13	16	23	30	77	30
உயர் இடை நிலை	14—17 வயது	5	8	12	15	140	25
நிறுவனங்கள்—							
ஆரம்ப ஜூனியர் அடிப்படைப் பள்ளிகள் ..	ஆயிரக் கணக்கில் ..	209·7	278·1	354·9	500	69	41
இடைநிலை சீனியர் அடிப்படைப் பள்ளிகள்	ஆயிரக் கணக்கில் ..	13·6	21·7	30	45	121	50
உயர்நிலை உயர் இடைநிலைப் பள்ளிகள் ..	ஆயிரக் கணக்கில் ..	7·3	10·8	14	18	92	29
பல நோக்கப் பள்ளிகள்	ஆயிரக் கணககில் ..	..	0.4	1·6	1·8	..	13
7.2 தொழில் நுட்பக் கல்வி—							
பொறியியலும் தொழிலியலும் பட்டப் படிப்பில் (சேர்க்கப்படுவோர்).	எண்ணிக்கை	4,119	5,888	13,165	18,500(b)	220	41
டிப்ளமா படிப்பில் (சேர்க்கப்படுவோர்) ..	எண்ணிக்கை	5,903	10,484	24,020	34,000(b)	307	42

* திட்டக் கால அளவுககுச் சம்பந்தப்படுவது.
(b) இவற்றுடன் கூட, பகுதி நேரப் படிப்புக்காகவும் வசதி செய்யப்படும்.
† காலண்டர் ஆண்டுக்கு உரியது.

இணைப்பு—தொடர்ச்சி.

உற்பத்தியும் வளர்ச்சியும் : முன்னேற்றமும் இலக்குகளும்—தொடர்ச்சி.

இனம்.	யூனிட்	1950-51.	1955-56.	1960-61 (எதிர்பார்ப்பது)	1965-66 இலக்கு.	1950-51ல் இருந்ததை விட 1960-61ல் அதிகரிப்பு (சதவீதம்).	1960-61ல் இருந்ததை விட 1965-66ல் அதிகரிப்பு (சதவீதம்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
வேளாண்மை :							
பட்டப்படிப்பில் (சேர்க்கப்படுவோர்)	எண்ணிக்கை	1.060	1,989	4,500	6,000	325	33
கால் நடை மருத்துவப் படிப்பு— பட்டப்படிப்பில் (சேர்க்கப்படுவோர்)	எண்ணிக்கை	434	1,269	1,300	1,550	200	19
8. சுகாதாரம்—	..						
8-1. நிறுவனங்கள்—	..						
மருத்துவ மனைகளும் மருந்துச் சாலைகளும்	ஆயிரக்கணக்கில் ..	8·6	10	12·6	14·6	47	16
மருத்துவ மனைப் படுக்கைகள்	ஆயிரக்கணக்கில் ..	113	125	160	190	42	19
ஆரம்ப சுகாதார யூனிட்டுகள்	எண்ணிக்கை	..	725	2,800	5,000	..	79
குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள்	எண்ணிக்கை	..	147	1,797	8,197	..	356
8-2. பணியாளர்—							
மருத்துவக் கல்லூரிகள் (சேர்க்கப்படுவோர்)§	எண்ணிக்கை	2,854	3,655	4,790	..	68	..
மருத்துவர்கள் (பதிவு பெற்றோர்)	ஆயிரக்கணக்கில் ..	59	70	84	103	42	23
செவிலிகள் (பதிவு பெற்றோர்)	ஆயிரக்கணக்கில் ..	17	22	32·5	52·5	91	62
மருத்துவச்சிகள்* (பதிவு பெற்றோர்) ..	ஆயிரக்கணக்கில் ..	18	27	40	70	122	75
தாயிகளும், செவிலியர் தாயிகளும் (பதிவு பெற்றோர்).	ஆயிரக்கணக்கில் ..	2·2	6·8	12	42	445	250
சுகாதார உதவியாளர்களும் துப்புரவுப் பார்வையாளர்களும்.	ஆயிரக்கணக்கில் ..	3·5	4	7	14	100	100

காலண்டர் ஆண்டுக்கு உரியது.

† மருத்துவச்சிகளாகவும் துணைச் செவிலியர் மருத்துவச்சிகளாகவும் பதிவு பெற்ற செவிலியர்கள் (நர்சுகள்) உட்பட.

அத்தியாயம் 4

திட்ட ஆதாரங்கள்.

முன்னரே கூறியுள்ளவாறு மூன்றுவது திட்டத்தில் மத்திய, மாநில அரசாங்கங்களும் அரசாங்கத் துறையிலுள்ள தொழில் நிறுவனங்களும் ரூ. 7,250 கோடி செலவு செய்யும். இதில் ரூ. 1,050 கோடி நடை முதல் செலவாகும். சமூகப் பணிகளை அதிகரிப்பதற்காகவும் சில நிர்வாக மேற் செலவுகளுக்காகவும் ஐந்தாண்டுக் காலத்தில் இது நடைமுதல் செலவாக இருக்கும். மத்திய, மாநில அரசாங்கங்கள், இச் செலவைச் செய்யும். ரூ. 6,200 கோடி மூலதன முதலீடாயிருக்கும். ரூ. 10,200 கோடி முதலீட்டுச் செலவாக இருக்கும். தனியார் துறையில் ரூ. 4,000 கோடி முதலீடு செய்யப்படுமென மதிப்பிட்டுள்ளோம். எனவே, இக் கால அளவில் அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் நிகர முதலீடு ரூ. 10,200 கோடியாக இருக்கும்.

2. அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் சேகரிக்க வேண்டிய ஆதாரங்களின் அடிப்படையில் இவ்வாறு மதிப்பிட்டுள்ளோம். அரசாங்க முதலீட்டுச் செலவாகிய ரூ. 6,200 கோடியில் முதலீட்டுச் சேகரிப்புக்காக, தனியார் துறைக்குக் கொடுக்கும் ரூ. 200 கோடியும் அடங்கும்.* வேளாண் மையாளர்களுக்கும் சிறு தொழில்களுக்கும் ஸ்தாபன ரீதியில் அமைந்த தொழில்களுக்கும் வழங்கும் கடன்கள் இதில் அடங்கும். இக் கடனில் ஒரு பகுதி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மூலமாகவும் மற்றொரு பகுதி இக் காரியங்களுக்காக அமைக்கப்படும் நிதி நிறுவனங்களுக்கு மூலதனம் அளிப்பது மூலமாகவும் வழங்கப்படும். எனவே, அரசாங்கத் துறையில் ரூ. 6,000 கோடியும் தனியார் துறையில் ரூ. 4,200 கோடியும் முதலீடு செய்யப்படும்.

3. இரண்டாவது திட்ட முடிவில் முதலீட்டு அளவு தேசீய வருமானத் தில் 11 சத வீதமாக இருந்ததை மூன்றுவது திட்ட முடிவில் 14 சத வீத மாக உயர்த்துவதே திட்டத்தின் நோக்கமாகும். இப்போது தேசீய வரு மானத்தில் சேமிப்பு வீதம் 8 சத வீதமாக இருக்கிறது. இது மூன்றுவது திட்டத்தில் 11 சத வீதமாக உயர வேண்டும். மேலும் வேண்டியுள்ள தொகை வெளி நாட்டு உதவி மூலம் கிடைக்கும். வெளி நாட்டு உதவி உள் நாட்டுச் சேமிப்புக்குத் துணையாயிருக்கும். அவசியமாயுள்ள இறக்கு மதித் தேவைகளுக்கும் ஏற்றுமதி வாய்ப்புக்குமிடையேயுள்ள வித்தியா சத்தைப் போக்க இது உதவும்.

4. நமது வெளிநாட்டு நிதி நிலைமையை முக்கியமாகக் கருத்தில் கொண்டு ஆதாரப் பிரச்சினையை ஆராயும்போது, ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மொத்தமாக எவ்வளவு வேண்டுமென்று மட்டும் கருதிப் பார்க்காமல்

---

* கூட்டுறவு நிறுவனங்களுக்கும் மற்ற நிதி உதவும் நிறுவனங்களுக்கும் ரிஸர்வ் பாங்க் கொடுக் கும் கடன் வேறு இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டுக்கும் திட்டச் செலவுக்கு எவ்வளவு தேவை என்பதையும் கருதிப் பார்க்க வேண்டும். ஆண்டுத் தேவையைப் பல விஷயங்களை ஆலோசித்துப் பார்த்து முடிய செய்ய வேண்டும். மேற்கொண்டுள்ள வேலைத் திட்டத்தை இயன்றவரை நிறைவேற்றி முடிக்க வேண்டியதன் அவசியம்; வரையறுத்துள்ள உற்பத்தி அளவுகளை அடைவதற்குகந்த வகையில் உரிய காலத்தில் புதிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல்; அந்நியச் செலாவணி கிடைக்கக்கூடிய அளவு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். திட்டச் செலவை எவ்வாறு வகுப்பதென்று முடிவாக நிச்சயிப்பதற்கு முன் அடுத்துவரும் மாதங்களில் மேற்கொண்டும் பல வேலைகளைச் செய்ய வேண்டும். நமது அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க வேண்டுமானால், வெளிநாட்டு உதவியைப் பெறவேண்டியதுமன்றி உள்நாட்டு நிதி ஆதாரங்களைச் சேகரிப்பதில் முழு முயற்சி செய்யவேண்டும்.

செலவில் சிக்கனம்.

5. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 6,750 கோடி* முதலீடு செய்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் மொத்தம் ரூ. 10,200 கோடி முதலீடு செய்ய உத்தேசித்துள்ளோம். இது நிறைவேற வேண்டுமானால், உள்நாட்டு நிதி ஆதாரங்களைச் சேகரிப்பதில் பெருமுயற்சி செய்ய வேண்டும். ஆண்டுக்கு 5 சத வீதம் என்ற அளவில் மூன்றாவது திட்டக் காலத்தில் தேசீய வருமானம் அதிகரிக்குமென எதிர்பார்க்கிறோம். முதலீடு செய்வதற்கும் செலவு செய்வதற்கும் வேண்டியுள்ள தொகையை இந்த அதிகரிப்பிலிருந்துதான் பெற வேண்டும். நமது பொருளாதார அமைப்பில் செலவுத் தேவைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. மக்கள் தொகை பெருக்கவீதம் அதிகரித்து வருகிறது. மக்கள் நகரப் புறங்களை நாடிச் செல்வது, தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டுமென அதிகம் விரும்புவது ஆகியவையே இதற்கு காரணங்களாகும். உணவுத் தானியங்கள், துணி முதலிய அன்றாட வாழ்க்கைக்கு அவசியம் தேவையான பொருள்களின் உற்பத்தி மூன்றாவது திட்டக் காலத்தில் கணிசமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கிறோம். எனினும், முதலீட்டுத் தேவைக்குப் போதுமான நிதி கிடைக்க வேண்டுமானால் செலவைச் சிக்கனப்படுத்துவது அவசியமாகும்.

6. செலவுச் சிக்கன வீதம் எப்படியிருக்க வேண்டுமென்பது பொருள் உற்பத்தியை என்ன அளவுக்கு அதிகரிக்க வேண்டும் என்பதைப் பொறுத்துள்ளது. தேசீய வருமானம் மேற்கூறியவாறு ஆண்டு ஒன்றுக்கு 5 சத வீதம் அதிகரிக்க வேண்டுமென்று வைத்துக்கொண்டால், சேமிப்பு வீதத்தை தேசீய வருமானத்தில் 8 சத வீதத்திலிருந்து 11 சத வீதத்துக்கு உயர்த்த வேண்டும் இக் கொள்கைக்கு முரண்படாமல் செலவு வீதத்தை ஆண்டு ஒன்றுக்கு 4 சத வீதம் அதிகரிக்க முடியும். எனவே, செலவு வீதம் கணிசமாக உயரும். இப்போது மக்கள் செய்யும் செலவைக் குறைக்கும் உத்தேசமில்லை. திட்டத்தில் கூறியுள்ள அளவுக்கு அது மேற்படாமலிருக்கும்படிப் பார்த்துக் கொள்வதே இப்போது செய்ய

* 'திட்டச் செலவு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டிராத ரூ. 150 கோடி முதலீடு இதில் அடங்காது.

வேண்டிய காரியமாகும். உணவுத் தானியங்கள், துணி, சர்க்கரை, மருந்துச் சாமான்கள், மருந்துகள், சைக்கிள் முதலிய அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களின் உற்பத்தி வேண்டிய அளவு அதிகரிக்க மூன்றுவது திட்டத்தில் வகை செய்துள்ளோம். ஆனால், இவை அவ்வாறு அதிகரிப்பது முதலீடு எந்த அளவு அதிகரிக்கிறது என்பதையே பொறுத்திருக்கும். நமது பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டுமானால், செலவீட்டுத் தேவையைவிட முதலீட்டுத் தேவைக்கே முதலிடம் அளிக்கவேண்டும். திட்டத்தில் கூறியுள்ள அபிவிருத்தி முயற்சி வெற்றி அடைய வேண்டுமானால், அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் சேமிப்பு கணிசமாக அதிகரிக்க வேண்டும். இவ்வாறு சேமிப்பு அதிகரிப்பதற்கு உகந்த வகையில் வரிவிதிப்பு நடவடிக்கைகளையும் நிதி நடவடிக்கைகளையும் மற்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

அந்நியச் செலாவணி முட்டுப்பாடும் விலைகளை நிலைப்படுத்தலும்.

7. மூன்றுவது திட்ட ஆதார மதிப்பீடுகளைக் குறிப்பிடுவதற்கு முன், இந்த நிலையில் இரண்டு முக்கிய விஷயங்களைக் கூறுவது அவசியமாகும். முதலாவதாக, முதலிரு திட்டங்களைப் போலன்றி மூன்றுவது திட்டத் தொடக்கக் காலத்தில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைவாகவே உள்ளது. எனவே, மூன்றுவது திட்டக் காலத்தில் முடிந்த அளவு இறக்குமதியைக் குறைக்க வேண்டும். முடிந்த அளவு ஏற்றுமதி அதிகரித்து அந்நியச் செலாவணி ஈட்ட வேண்டும். இரண்டாவதாக, இப்போதுள்ள விலைவாசிகள் இரண்டாவது திட்டத் துவக்கக் காலத்தில் இருந்ததைவிட 20 சத வீதம் அதிகமாயுள்ளன. எனவே, மூன்றுவது திட்டக் காலத்தில் தகுந்த விலைவாசிக் கொள்கையை உருவாக்கி அமுல் நடத்த வேண்டியது அவசியமாகும். பண வீக்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ள அரசாங்கச் செலவுகளை முடிந்த வரையில் குறைக்க வேண்டும். வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை இல்லாதிருக்குமாறு பார்த்துக்கொள்வது மட்டும் போதாது. அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் மொத்தமாகப் பணப் பெருக்கம் நியாயமான அளவுக்கு நிலையான விலைவாசிகள் அடிப்படையில் பொருளாதாரம் பயன்படுத்தக்கூடிய அளவில் தான் இருக்கவேண்டும்.

சாதகமான விஷயங்கள்.

8. பெருமளவு அபிவிருத்தித் திட்டம் எதையும் இவற்றையெல்லாம் ஆலோசித்தே அமைக்கவேண்டும். முந்திய திட்டங்களைவிட இப்போதைய திட்டத்தில் உள்நாட்டு நிதி ஆதாரங்களைச் சேகரிப்பதற்குச் சாதகமான நிலை உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் முதலீடு கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் உற்பத்தி அளவு உயர்ந்துள்ளது. உற்பத்தி உள்ளடங்கு ஆற்றலும் கணிசமாகப் பெருகியுள்ளது. பாசனம், மின்சக்தி, போக்குவரத்து ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்தில் துவக்கப்பட்ட பற்பல தொழில் திட்டங்களின் முழுப் பயனும் மூன்றுவது திட்டக் காலத்தில் கிடைக்கும். அரசாங்கத் துறை வேலைத் திட்டங்கள் பலவும் இரண்டாவது திட்டக் காலத்தில் கட்டப்

படும் நிலையிலிருந்தன. மூன்றுவது திட்டக் காலத்தில் இவை செயல் படத் தொடங்கி நல்ல பலன் கொடுக்கும். இதனுல் கிடைக்கும் உபரித் தொகையை மேற்கொண்டும் முதலீடு செய்யப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வி வசதியும், பயிற்சி வசதியும் ஏற்கெனவே பெருகி யுள்ளன. இத் துறையில் மூன்றுவது திட்டக் காலத்தில் மேலும் முன் னேற்றம் ஏற்படும். எனவே, அடுத்து வரும் ஆண்டுகளில் இவற்றிலிருந்து நல்ல பலன் கிடைக்கும். தொழில்களை முன்வந்து ஆரம்பிப்பதற்குரிய திறமையும், நிர்வாக அனுபவமும் மற்ற திறமைகளும் இப்போது பெருகி வருவது நாம் குறிப்பிடத்தக்க மற்றேர் அம்சமாகும்.

9. ஒரு திட்டத்துக்கு நிதி ஆதாரம் தேடும் பிரச்சினையை நிலையான அல்லது முடங்கிக் கிடக்கும் ஓரிடத்திலிருந்து வேண்டிய தொகையை எடுத்துக்கொள்வதாகக் கருதக்கூடாது. பொருளாதாரம் வளர வளர நிதி ஆதாரங்களும் அபிவிருத்தி அடையும். கடந்த சில ஆண்டுகளில் இத் துறையில் பல கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டிருந்தபோதிலும், இந்த ஆண்டுகளில் நாம் அடைந்த சாதனையின் அடிப்படையில் அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் விரிவாக முயற்சி எடுக்க முடியும். ஒன்றில் முதலீடு செய்து பயன் காண வேண்டுமானுல், சிறப்பாக அடிப்படை வகையைச் சேர்ந்த தொழிலில் முதலீடு செய்து பயன் காண வேண்டுமானுல், ஒரு சில ஆண்டுகள் ஆகும். இது எல்லாருக்கும் தெரிந்ததே. ஏழ்மையும் குறைந்த அளவுச் சேமிப்பும் முதலீடு செய்வதுமான விஷச் சக்கரத்தை முறிக்க வேண்டுமானுல், உள்ளடங்கு ஆற்றல்களைச் செம்மையாகச் சேக ரித்து, உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பலனைத் தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டும். நமது நாட்டில் இதுவரை பயன் படுத்தப்படாத ஆள் பலமே முக்கியமான உள்ளடங்கு ஆற்றலாகும். பொருள்களை உற்பத்தி செய் வதில் இதைப் பெருமளவுக்குப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

நிதித் திட்டம்—அரசாங்கத் துறை.

10. கடந்த சில மாதங்களில் மூன்றுவது திட்டத்திற்குரிய ஆதாரங்களை விரிவாக ஆராய்ந்துள்ளோம். கடந்த காலப் போக்கின் அடிப்படையிலும், மூன்றுவது திட்டக் காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையினும் இவ்வாறு ஆராய்ந்துள்ளோம். இந்த மதிப்பீடுகளை அனுசரித்தே மூன்றுவது திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கியுள்ளோம். 1959–60 வரவு-செலவுத் திட்ட அடிப்படையில் கடந்த ஆண்டு முடிவில் முதற்கண் ஆதாரங்களை மதிப்பிட்டோம். 1959–60 திருத்த மதிப்பீடுகளை யும், 1960–61 திட்ட மதிப்பீடுகளையும் அனுசரித்து அவற்றை இப்போது மாற்றியமைத்துள்ளோம். எனினும், இந்த மதிப்பீடுகளைப் பூர்வாங்க மதிப்பீடுகளாகவே கருத வேண்டும். மாநில அரசாங்கங்களின் செல்வா தார நிலையை 1960-ம் ஆண்டு ஆகஸ்டிலும் செப்டம்பரிலும் விரிவாக ஆராய்வோம். கடைசியாகவுள்ள நிதி ஆதாரப்போக்கின் அடிப்படையில் 1960 முடிவில் மத்திய அரசாங்க நிதி ஆதாரங்களையும் மதிப்பிடுவது அவசியமாகும். அரசாங்கத் துறையில் தொழில் நிறுவனங்களிலிருந்து பெறக்கூடிய உபரித்தொகை போன்ற, கீழே குறிப்பிட்டுள்ள சில

ஆதாரங்களை மேற்கொண்டும் பரிசீலனை செய்யவேண்டும். இதன் பயனுய், வரவுப் பக்கத்திலும், செலவுப் பக்கத்திலுமுள்ள தனிப்பட்ட இனங்களின் முடிவான மதிப்பீடுகள் ஓரளவு மாறுபடும். பொதுவாகக் குறிப்பிட்டுள்ள நிதி அளவு மூன்றுவது திட்டத்தில் வேண்டியுள்ள நிதிக்கு ஒவ்வொரு பெரும் ஆதாரத் துறையிலிருந்தும் இடைக்க வேண்டிய நிதி அளவாகக் கொள்ளலாம்.

11. இதுவரை செய்துள்ள ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அரசாங்கத் துறையில் மூன்றுவது திட்டச் செலவுக்கு வேண்டிய நிதி ஆதாரங்களைக் கீழே அட்டவணையில் கொடுத்துள்ளோம். ஒப்பிட்டுப் பார்ப்பது சௌகரியமாயிருப்பதற்காக, ஒவ்வொரு ஆதாரத்திலிருந்தும் இப்போது எதிர்பார்க்கிற அளவுப்படி இரண்டாவது திட்டத்தில் இடைக்கிற நிதி ஆதாரத்தையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளோம்.

அட்டவணை 1—நிதி ஆதாரங்கள்.

(ரூபாய் கோடிக்கணக்கில்.)

(1)	இரண்டாவது திட்டம். (2)	மூன்றுவது திட்டம். (3)
1 தற்போதைய வரிவிதிப்பின் அடிப்படையில் ரெவின்யூக் கையிருப்பு.	(—)100	350
2 தற்போதைய அடிப்படையில் ரயில்வே கொடுக்கும் பங்கு ..	150*	150
3 தற்போதைய அடிப்படையில் மற்ற அரசாங்கத் தொழில் நிறுவனங்களிலிருந்து இடைக்கும் உபரி.	†	440
4 பொதுமக்களிடமிருந்து வாங்கும் கடன்	800	850
5 சிறு சேமிப்பு	380	550
6 எதிர்காலச் சகாய நிதி, அபிவிருத்தி வரி, உருக்கு சமன்பாட்டு நிதி பலவகை மூலதன வருவாய்,	213	510
7 அரசாங்கத் தொழில் நிறுவனங்களின் உபரியை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் உட்பட அதிகப்படியான வரி விதிப்பு.	1,000	1,650
8 வெளிநாட்டு உதவிக்கு நிகரான வரவு-செலவுத் திட்ட வருவாய்.	982	2,200
9 பற்றுக்குறை நிதி முறை	1,175	550
10 மொத்தம்	4,600	7,250

மேலே காட்டியுள்ள மதிப்பீடுகளைப்பற்றி அடுத்து வரும் பாராக்களில் சுருக்கமாக விவரித்துள்ளோம்.

12. **ரெவின்யூக் கையிருப்பு.**—மூன்றுவது திட்டக் கால அளவில் இப்போது மதிப்பிட்டுள்ளபடிக் இடைக்கக்கூடிய ரெவின்யூ வருவாயிலிருந்து ஏற்கெனவே "ஒப்புக்கொண்டுள்ள" உத்தேசச் செலவைக் கழித்தால், இக்கால அளவில் ரெவின்யூக் கையிருப்பு ரூ. 350 கோடியாக இருக்கும். வருவாயை மதிப்பிடுவதற்காக, மூன்றுவது திட்டக் காலத்தில் முக்கியமான துறைகளில் உற்பத்தி அதிகரிப்பையும், மொத்தமாகப் பார்க்கும்போது தேசீய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பையும் கணக்கில் எடுத்துள்ளோம். செலவுத் துறையை எடுத்துக் கொண்டால், கடந்தகாலச் செலவுகளை அனுசரித்து எதிர்காலச் செலவுகளை மதிப்பிட்டுள்

* பிரயாணிகள் கட்டண அதிகரிப்பும் சாமான் கட்டண அதிகரிப்பும் உட்பட.
† மேலே (1)-ல் சேர்ந்துள்ளது.

ளோம். இரண்டாவது திட்டக் கால முடிவுக்குள் நிறைவேற்றப்படும் திட்டங்களைப் பராமரித்து வருவதற்காகவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

13. ரயில்வே கொடுக்கும் பங்கு.—ஆண்டுதோறும் தேய்மானச் செலவுக்காக ரூ. 65–70 கோடி ஒதுக்கி, இப்போதுள்ள ஏற்பாடுகளை அனுசரித்து வட்டியையும் ஈவுத் தொகையையும் கொடுத்த பிறகு, ரயில்வேக்களுக்கு ஏற்படுகிற நடை முதல் செலவுகளுக்குப் போக எஞ்சியுள்ள உபரியே இத் தொகையாகும். மேலே நடைமுதல் செலவு என்பதில் முதலீட்டுச் செலவு அடங்காது.

14. மற்ற அரசாங்கத் தொழில் நிறுவனங்களின் உபரி.—(இரும்பு, உருக்கு, உரங்கள், எண்ணெய் எடுத்தலும் சுத்திகரித்தலும், தபால் தந்தி முதலிய) மத்திய அரசாங்கத் தொழில் நிறுவனங்களிலிருந்து ரூ. 300 கோடியும் (மின்சாரக் கழகங்கள், பஸ் போக்குவரத்து முதலிய) மாநில அரசாங்கத் தொழில் நிறுவனங்களிலிருந்து ரூ. 140 கோடியும் உபரியாகக் கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். அரசாங்க நிறுவனங்களின் நடைமுதல் செலவையும் தேய்மானச் செலவையும் கழித்த பிறகே இவ்வளவு உபரித் தொகை கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். சில விரிவான அனுமானங்களின் அடிப்படையிலேயே இவ்வாறு மதிப்பிட்டுள்ளோம். எனவே, இந்த மதிப்பீடுகள் உத்தேசமானவையே. மூன்றாவது திட்டத்தைத் திட்டவட்டமாக முடிவு செய்வதற்குமுன் மத்திய அமைச்சுகளையும் மாநில அரசாங்கங்களையும் கலந்தாலோசித்து இந்த மதிப்பீடுகளை விரிவாக ஆராய உத்தேசித்துள்ளோம்.

15. பொதுமக்களிடமிருந்து வாங்கும் கடன்.—இரண்டாவது திட்டக் காலத்தில் பொதுமக்களிடமிருந்து ரூ. 800 கோடி கடன் கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். P.L. 480 நிதி வைப்பீட்டிலிருந்து ஸ்டேட் பாங்க் அரசாங்க ஈடுகளை வாங்கியிருப்பதும் இதில் அடங்கும். மூன்றாவது திட்டத்துக்கு P. L. 480 ஆதாரம் உட்பட சகல வெளிநாட்டு உதவியிலிருந்தும் கிடைக்கும் ஆதாரங்களை, "வெளிநாட்டு உதவிக்கு நிகரான வரவு-செலவுத் திட்ட ஆதாரங்கள்" என்பதன்கீழ் வரவு வைத்துள்ளோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 850 கோடி கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷனிலிருந்தும் பல்வேறு எதிர்காலச் சகாய நிதியிலிருந்தும் அதிகத் தொகை கிடைக்குமென்ற அடிப்படையிலேயே இவ்வாறு மதிப்பிட்டுள்ளோம். பரிசுப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் தொகையும் இதில் அடங்கும்.

16. சிறு சேமிப்பு.—மூன்றாவது திட்டக் காலத்தில் ஆண்டுதோறும் சிறு சேமிப்பு மூலம் ரூ. 110 கோடி வசூலிப்பதென உத்தேசித்துள்ளோம். இரண்டாவது திட்டக் காலத்தில் கிடைத்த வசூலை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் இது அதிகம்தான். எனினும், இதன்மூலம் அதிகத் தொகை பெறுவதற்கு முழுமூச்சுடன் வேலை செய்ய வேண்டும்.

17. எதிர்காலச் சகாய நிதிகள், அபிவிருத்தி வரிகள் முதலியவை.—எதிர்காலச் சகாய நிதிகளில் நிகரமாய்ச் சேர்ந்துள்ள ரூ. 230 கோடி, அபிவிருத்தி வரிகள் மூலம் ரூ. 75 கோடி, உருக்கு சமன்பாட்டு நிதியிலிருந்து

ரூ. 160 கோடி, செலவுக்குமேல் பலவகை மூலதனச் வருவாய், கையிருப்பு மூலம் ரூ. 45 கோடி ஆகியவை இதில் அடங்கும்.

18. **வெளிநாட்டு உதவிக்கு நிகரான வரவு-செலவுத் திட்ட வருவாய்.**—மூன்றுவது திட்டத்துக்கு வெளிநாட்டு உதவி மொத்தம் ரூ. 3,200 கோடி தேவையென மதிப்பிட்டுள்ளோம். நமது வெளிநாட்டு நிதிநிலை குறித்து பின்னர் கூறியுள்ளதிலிருந்து இது விளங்கும். ஏற்கெனவே பெற்ற வெளி நாட்டு உதவியை மூன்றுவது திட்டக் காலத்தில் கொடுத்துத் தீர்ப்பதற்காக ரூ. 450–500 கோடி வேண்டியிருக்கும். தனியார் துறைக்கு ரூ. 300 கோடி கொடுக்கவேண்டியிருக்கும். வெளிநாட்டுக்காரர்கள் தனிப்பட்ட முறையில் செய்யும் முதலீடுகளும், உலக பாங்க், சர்வதேச நிதிக் கார்ப் பொரேஷன், அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதி பாங்க் போன்ற நிறுவனங்க ளிடமிருந்து கிடைக்கும் கடன் ஆகியவை இதில் அடங்கும். கடைசியாக, நாம் அமெரிக்காவுடன் அண்மையில் செய்துகொண்ட உடன்படிக்கையின் கீழ் P.L. 480 உதவி மூலம் ரூ. 608 கோடி கிடைக்கும். இதில் ரூ. 200 கோடி எதிர்கால நெருக்கடியை முன்னிட்டுக் கையிருப்பில் வைத்திருக்கப் படும் உணவுத் தானிய மதிப்பாக இருக்கும். (இந்த உணவுத் தானியங்கள் 40 லட்சம் டன் கோதுமையும் 10 லட்சம் டன் அரிசியுமாகும்.) இவற்றை விற்கப்போவதில்லையாகையால் இதிலிருந்து ரூபாய் கணக்கில் தொகை எதுவும் கிடைக்காது. ரூ. 3,200 கோடி வெளி நாட்டு உதவி கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். இத்தொகை முழுவதும் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், இதிலிருந்து மேலே சொல்லிய மூன்று இனங்களின் மொத்த மதிப்பாகிய ரூ. 1,000 கோடியைக் கழித்துவிட வேண்டும். எஞ்சி யுள்ள ரூ. 2,200 கோடி அரசாங்கத் துறையில் வரவு-செலவுத் திட்ட ஆதாரமாகக் கிடைக்கும்.

19. **பற்றுக்குறை நிதி முறை.**—ஏற்கெனவே கூறியுள்ளவாறு, மூன் றுவது திட்டக் காலத்தில் பற்றுக் குறை நிதி முறையை மேற்கொள்ளும் வாய்ப்பு மிகச் சிறிது. தீங்கு எதுவும் நேராமல் எந்த அளவுவரை பற்றுக் குறை நிதி முறையை மேற்கொள்ளலாம் என்பதை மதிப்பிடுவதற்குத் திட்டவட்டமான வழி எதுவுமில்லை. வரவு–செலவுத் திட்டம் மூலமாகவும், பாங்க் முறையில் அதிகச் செலாவணி உற்பத்தி மூலமாகவும் பணப் புழக்கத்தை அதிகரிப்பதை ஒருங்கிணைத்துப் பார்க்கவேண்டும். மொத்த உற்பத்தியின் விவரங்களைப் பொதுவாக ஆராய்ந்து பார்த்தால், மூன்றுவது திட்டக் காலத்தில் விலைவாசிகளை மிகவும் பாதிக்காமல், பணப் புழக்கத்தை 33 சத வீதம் அதிகரிக்க முடியும். இரண்டாவது திட்ட முடிவுக்குள் இருக்கும் பணப் புழக்க மதிப்பீட்டின் அடிப்படையில் மூன்றுவது திட்டக் காலத்தில் ரூ. 950 கோடி புதிய நோட்டுக்கள் அச்சடித்துப் பணப் புழக்கத்தை அதிகரிக்கலாம். இரண்டாவது திட்டக் கால முடிவில் பணப் புழக்கமும் மொத்த உற்பத்தியும் சமமாக இருக்குமென்ற நமது அனு மானம் சரியாக இருந்தால்தான் இது சாத்தியமாகும். பணப்புழக்க அதி கரிப்பு ஓரளவு பாங்க் முறை மூலம் ஏற்படுகிறது. இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தோமானால், மூன்றுவது திட்டக் காலத்தில் வரவு-செலவுத் திட்ட பற்றுக்குறை ரூ. 550 கோடியிருக்கலாம், எனினும்,

அவ்வப்போதுள்ள பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப, எந்த அளவுக்கு பற்றுக்குறை நிதி முறையை மேற்கொள்ளலாம் என்பதை முடிவு செய்ய வேண்டும். சிறப்பாக, வேளாண்மை உற்பத்தி எவ்வளவு அதிகரிக்கிற தென்பதையும் பணவீக்கம் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப்படுகிறதென் பதையும் அனுசரித்தே அதை முடிவு செய்யவேண்டும்.

அதிகப்படியான வரி விதிப்பு.

20. மூன்றுவது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமானால், ரூ. 1,650 கோடி கிடைக்கும் விதத்தில் அதிகப்படியான வரி விதிக்க வேண்டும். இப்போது இந்தியாவில் வரி மூலம் கிடைக்கும் வருவாய் தேசீய வருமானத்தில் 8·5 சத வீதமாக இருக்கிறது. தேசீய வருமானம் அதிகரித்தால் வரி வருவாயும் அதிகரிக்கும். இதையும் மூன்றுவது திட்டக் காலத்தில் உத்தேசித்துள்ள அதிகப்படி வரி விதிப்பையும் கணக்கிட்டுப் பார்த்தோமானால், இந்த வீதாச்சாரம் 11 சத வீதமாக உயரும். அரசாங் கத்தார் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைகள் விரைவாக அதிகரித்துக் கொண்டே போகும்போது, இந்த வரி விதிப்பு சுமக்க முடியாத வரிப் பளு என்று கூறுவதற்கில்லை. எனினும், அதிக வரி விதிப்பு மூலம் ரூ. 1,650 கோடி கிடைக்கவேண்டுமானால், மத்திய, மாநில அரசாங்கங்கள் தங்கள் வரி விதிப்பு அமைப்பை விரிவுபடுத்தப் பெருமுயற்சி செய்யவேண்டும். இதுவரை செய்துள்ள மதிப்பீடுகளின் அடிப்படையில் மேலே கூறியுள்ள மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மாநில அதிக வரிவிதிப்பு மூலம் பெறுவதே இலக்காயிருக்கவேண்டும்.

21. குறித்த கால அளவில் எந்த அளவுக்கு வரி விதிக்கலாமென் பதை முதலீட்டுத் தேவைகளையும் மற்ற அபிவிருத்திச் செலவுகளையும் மட்டுமே கருதிப் பார்த்து முடிவு செய்வதற்கில்லை. ஆனால், போதுமான அளவு வரி விதித்தாலன்றி நாம் கருத்தில் கொண்ட மகத்தான திட்டத்தை நிறைவேற்றமுடியாது. எனவே, இப் பிரச்சினையின் இரண்டு அம்சங்களை யும் அதாவது, தேவைகளையும் நடைமுறைச் சாத்தியக்கூறுகளையும் ஒருங் கிணைத்துப் பார்க்கவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் பொருளாதார அம்சத் தையும் மற்ற அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மொத்த மாகப் பார்ப்போமானால், அதிகப்படி வரி விதிப்பு இலக்காகிய ரூ. 1,650 கோடி பெறுவது நடைமுறை சாத்தியமே. ஏனெனில், தேசீய வருமானம் அதிகரிக்கும். சிறப்பாக வேளாண்மை உற்பத்தி அதிகரிக்கும். நாம் ஏற்றுக்கொண்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்கு ஒவ்வொரு நிதி ஆதாரத்திலிருந்தும் முடிந்த அளவு தொகை பெறவேண்டும். வரி விதிப்புத் துறையில் நாம் குறைந்த அளவு பெற வேண்டிய தொகை இதுவாகும்.

22. மேற்கொள்ளவேண்டிய வரி விதிப்பு நடவடிக்கைகளின் விவரங் களை அவ்வப்போதுள்ள பொருளாதார நிலைகளை அனுசரித்து முடிவு செய்ய வேண்டும். மூன்றுவது திட்டம் நிறைவேற வேண்டுமானால், நேரடி வரி விதிப்பையும், மறைமுக வரி விதிப்பையும் அதிகரிக்கவேண்டும்; அரசாங் கத் தொழில் நிறுவனங்களின் உபரியைப் பெருக்குவதற்கும் நட வடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

23. கார்ப்பொரேஷன் வரிகளிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பெருக்கு வதற்கு வரி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவேண்டும். கம்பெனி களின் செலவுக் கணக்கை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். வரி கொடுக் காமல் ஏமாற்றுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மறைமுக வரியை அதிகப்படுத்தி, அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் உற்பத்தியாகும் பொருள்களின் விலையையும் அதிகரித்தால், அப் பொருள் களின் விற்பனை விலையும் அடக்க விலையும் அதிகரிக்கும். மூன்றாவது திட்டம் நிறைவேற வேண்டுமானால் நாம் இந்த விலை கொடுக்கவே வேண்டும்.

24. மறைமுக வரிகளும், பற்றாக்குறை நிதி முறையும் விலைவாசிகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஒப்பு நோக்குவதும் அவசியமாகும். பற்றாக்குறை நிதி முறை ஏறுமாறாகவும் அதிகம் பாதிப்பதாகவும் இருக்கும் போது, மறைமுக வரிகள் சமுதாயத்தில் மக்களிடையே உள்ள வாங்கும் உபரி சக்தியைப் பயன்படுத்திக்கொள்கின்றன. மறைமுக வரி விதிப்பில் பொருள்களின் விலை ஏறுவதால் பணவீக்கம் அடிபட்டுப் போகிறது. பற்றாக்குறை நிதி முறையால் பண வீக்கம் பின்னும் அதிகரிக்கிறது. இடைத் தரகர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மற்றப்படி போய்ச் சேரக் கூடிய அதிக லாபத்தை அரசாங்கத் துறைக்குத் திருப்பிவிடுவதால், மறை முக வரிவிதிப்பு சில சந்தர்ப்பங்களில் ஏற்ற வழியாக இருக்கும்.

25. அபிவிருத்தி அடையும் பொருளாதாரத்தில் முதலீட்டுத் தேவைகளை அனுசரித்து வரம்பு கட்டியுள்ள அளவில் செலவை நிறுத்திவைப்பதே வரி விதிப்பின் முக்கிய அலுவலாகும். நேரடி வரி விதிப்பு, செலவழிக் கத்தக்க வருமானத்தைக் குறைப்பதன் மூலம் இந்த விளைவை ஏற்படுத் தும். மறைமுக வரி விதிப்பு செலவழிக்கிற வருமானத்துக்கு வாங்கக் கூடிய பொருள்களின் அளவைக் குறைப்பதன் மூலம் இந்த விளைவை ஏற்படுத்தும். இந்த வரி விதிப்புகளின் வரம்புகளை நடைமுறை சாத்தி யத்தை அனுசரித்தே நிர்ணயிக்கவேண்டும். நேரடி வரி விதிப்பாயினும் மறைமுக வரி விதிப்பாயினும், வரி விதிப்பின் விளைவுகள் சிக்கலானவை. வரிகளை விதிக்கும்போது பொருளாதார அமைப்பு சீர்கேடடையாமல் பார்த் துக்கொள்வதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். போதுமான அளவு வரி விதிக்காவிட்டால், அபிவிருத்தி வீதம் குறைந்துவிடும் அல்லது வாங்கும் சக்தி அதிகமாகி பொருள்களின் விலை ஏறிவிடும். இதை நாம் வலி யுறுத்தவேண்டும். நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பயன் கிடைத்தாலும், உடனடியாக ஏதோ பெருமளவு தியாகம் செய்வதுபோல் தோன்றக்கூடிய துறைகளில் வரிவிதிப்புத் துறையும் ஒன்றாகும். அபிவிருத்தியினால் சமுதாயத்தில் எல்லாப் பிரிவினரும் நன்மை பெறுகிறார்கள் என்பது வெளிப்படை. பெரும்பாலான மக்களைப் பொறுத்த வரையில் மேலே கூறியுள்ள அதிக வரி விதிப்புக்குப் பிறகும், அவர்கள் அதிகச் செலவு செய்யக்கூடிய நிலை இருக்கும். எனவே, இந்தத் தியாகம் நபருக்கு நபர் அளவில் வேறுபடும். இது அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. அரசாங்கத் துறையில் அதிகம் முதலீடு செய்யவேண்டியுள்ளது. இதற்கு,

பொதுமக்கள் சேமிக்கும் தொகை பெருமளவில் அதிகரிக்க வேண்டும். எந்த அபிவிருத்தித் திட்டத்திலும், வரிவிதிப்பும், அரசாங்கத் தொழில் நிறுவன உபரியும் முக்கிய அம்சங்களாய் விளங்கும்.

தனியார் முதலீடு.—

26. தனியார் துறை முதலீடு என்பது, ஸ்தாபன ரீதியாய் அமைந்த தொழில், சுரங்கத் தொழில், மின்சாரத் தொழில், போக்குவரத்து ஆகியவை மட்டுமன்றி, வேளாண்மை, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், கிராம வீட்டு வசதி, நகர வீட்டு வசதி முதலான பெரிய துறைகளும் பரவலான துறைகளும் அடங்கும். இப்போதுள்ள புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு, இத் துறையில் முதலீடு செய்வதற்குப் பொருள் பொதிந்த திட்டமொன்றை உருவாக்க முடியாது. கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் இப்போது செய்யக்கூடிய முதலீட்டு அளவைப் பொதுவாக நிச்சயிக்கவேண்டும். மூன்றுவது திட்டக் காலத்தில் தனியார் துறையில் பெரும் தலைப்புகளின்கீழ் உத்தேச முதலீட்டு அளவுகளையும் இரண்டாவது திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடுகளையும் ரிஸர்வ் பாங்க் செய்துள்ள ஆராய்ச்சியின் பயனும் இப்போது திருத்தியுள்ள முதலீட்டு மதிப்பீடுகளையும் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம்.

அட்டவணை 2 : தனியார் துறையில் முதலீடு.

	இரண்டாவது திட்டம்.		மூன்றுவது திட்ட மதிப்பீடுகள்.*
	மூல மதிப்பீடுகள்.	திருத்திய அடிப்படையில் முதலீட்டு மதிப்பீடு.*	
	(ரூபாய் கோடிக்	கில்).	
1. வேளாண்மை (பாசனம் உள்பட) ..	275	675	850
2. மின்சக்தி	40	40	
3. போக்குவரத்து	85	135	200
4. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்.	100	225	325
5. பெரிய தொழில்களும், சிறிய தொழில்களும் கனிப் பொருள்களும்.	575	700†	1,050†
6. வீட்டு வசதியும் மற்ற நிர்மாணமும்.	925	1,000	1,125
7. கையிருப்புச் சாமான்கள்	400	525	600
8. மொத்தம்	2,400	3,300	4,200

27. இப்போது மதிப்பிட்டுள்ளபடி இரண்டாவது திட்டத்தில் இருப்பதை விட, தனியார் துறை முதலீடுகள் மூன்றுவது திட்டத்தில் பெருமளவு அதிகரிக்கும். குறிப்பாக, பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் துறையில் ரூ. 700 கோடியிலிருந்து ரூ. 1,050 கோடியாக இது அதிகரிக்கும். மற்றத் துறைகளில் காட்டியுள்ள அதிகரிப்பு குறைவானதே. இதற்கு வேண்டிய பணம் அடியிற்கண்ட இயல்பான ஆதாரங்களிலிருந்து

* தனியார் துறையில் செய்யும் மொத்த முதலீடுகளை இந்த இலக்கங்கள் குறிக்கின்றன. அரசாங்கத் துறையிலிருந்து மாற்றப்பட்ட ஆதாரம் மூலம் செய்த முதலீடும் இதில் அடங்கும்.

† நவீனப்படுத்துவதிலும், புதிய யந்திரங்கள் வாங்குவதிலும் செய்த முதலீடு இந்த இலக்கங்களில் அடங்காது.

கிடைக்குமென உத்தேசித்துள்ளோம். விவசாயிகளின் சேமிப்பு, கலைப் பணிகளிலும், கைப்பணிகளிலும், வர்த்தகத்திலும், சிறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்கள் செய்யும் சேமிப்பு, ஸ்தாபன ரீதியில் அமையாத, ஓரளவு ஸ்தாபன ரீதியில் அமைந்த கடன் கொடுக்கும் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன் தொகை, ஓரளவுக்கு அரசாங்கத்திடமிருந்தும், ரிசர்வ் பாங்கிட மிருந்தும் கிடைக்கும் உதவி ஆகியவை இவற்றில் அடங்கும். தனக்கு வேண்டிய நிதியைத் தானே தேடிக்கொள்ளுதல் அல்லது பற்பல ஆதாரங் கள் மூலம் வேண்டிய நிதியைப் பெறுதல், ஆகியவையே இத் துறை களில் செய்யும் மொத்த முதலீட்டு ஆதாரங்களில் கணிசமான அளவாய் இருப்பதால், இந்த ஆதாரம் ஒவ்வொன்றின் விஷயமாகவும் உள்ள வாய்ப்பையும் கிடைக்கக்கூடிய தொகையையும் திட்டவட்டமாகக் குறிப்பது கஷ்டமாகும்.

28. பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றிற்குரிய முதலீட்டு வேலைத் திட்டத்துக்கு வேண்டியுள்ள நிதியே இப்போதுள்ள பிரச்சினையாகும். இங்கும் பெருமளவு யூகித்துத்தான் கூறியுள்ளோம். என்றாலும், பொதுவான மதிப்பீடுகள் சிலவற்றை, தொழில்களும் கணிப் பொருள்களும் என்ற அத்தியாத்தில் கொடுத்துள்ளோம். தனியார் துறை யில் மொத்த முதலீடாகிய ரூ. 4,200 கோடியில் ஏற்கெனவே கூறியுள்ள வாறு ரூ. 200 கோடி அரசாங்கத் துறையிலிருந்து ஆதார மாற்றத்தின் மூலம் கிடைக்கும். வேளாண்மை, சிறு தொழில்கள், தனியார் துறை சம்பந்தப்பட்ட சில நிதிக் கார்ப்பொரேஷன்கள் ஆகியவற்றிற்கு ரிஸர்வ் பாங்க் மூலம் கணிசமான அளவு நிதி அளிக்க உத்தேசித்துள்ளோம். மேலும், தனியார் துறைக்கு வெளிநாட்டு உதவியாக ரூ. 300 கோடி கிடைக்கும். இரண்டாவது திட்டக் காலத்தில் தனியார் துறையில் செய்த முதலீடு, அபிவிருத்தி வளர வளர ஏற்பட்டுள்ள புதிய வாய்ப்புகளைப் பயன் படுத்திக்கொள்ள தனியார் துறை சித்தமாயிருப்பது ஆகியவற்றைக் கவ னிக்கும்போது, தனியார் துறையில், நாம் உத்தேசித்துள்ள அளவு முதலீடு செய்வதில், கடக்கமுடியாத கஷ்டம் எதுவும் ஏற்பட்டுவிடாது எனநம்பலாம்.

29. முடிவாகப் பார்த்தோமானால், இந்தப் பிரச்சினை முதலீடு செய்வ தற்குச் சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய மொத்த ஆதாரங்களைப் பொறுத் திருக்கும். அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் முதலீடு செய்ய வேண்டிய நிதியை உள்நாட்டு சேமிப்பிலிருந்தும் கிடைக்கக்கூடிய வெளி நாட்டு உதவியிலிருந்தும் பெறவேண்டும். இந்த இரு துறைகளிலும் போதிய அளவு நிதி கிடைக்கப் பெருமளவு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

வெளி நாட்டு ஆதாரங்கள்.

30. ஐந்தாண்டுக் காலத்தில் நமது வெளி நாட்டு நிதி நிலைமை எப்படி யிருக்குமென ஊகித்துக் கூறுவது கஷ்டமாகும். மூன்றுவது திட்டத்துக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டு ஆதாரத்தை மதிப்பிட இவ்வாறு ஊகித்துக் கூறவேண்டும். இதிலுள்ள கஷ்டங்கள் உள்நாட்டு ஆதாரத்தை மதிப்பிடுவதில் உள்ளதைவிட அதிகமானவை. ஏற்றுமதியிலும், இறக்கு

மதியிலும் அண்மையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகள், உள்நாட்டு உற்பத்தி யிலும் தேவையிலும் மூன்றுவது திட்டக் காலத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்கள் ஆகியவற்றின் பொது விவரத்தைக் கீழே காட்டியுள்ளோம்.

அட்டவணை 3 : மூன்றுவது திட்டக கால அளவில் நமது வெளிநாட்டு நிதி நிலை மதிப்பீடுகள்.

	ஆண்டுச் சராசரி 1956–57 முதல் 1958–59 வரை.	1961–62	ஐந்தாண்டு மொத்தம 1960·62 முதல 1965–66 வரை.	ஆண்டுச் சராசரி 1961·62 முதல் 1965-66 வரை.
		(ரூபாய் கோடிக கணக்கில.)		
1. ஏற்றுமதி	602	650	3,450	690
2. கண்ணுக்குத் தெரியாதவை (நிகரம்) (அரசாங்க நன்கொடை இதில் சேராது).	101	45	120	24
3. மூலதன விவகாரங்கள் (நிகரம்) (அரசாங்கக் கடன் மூலம் புதிதாகக் கிடைக்கும் வருவாயும் தனியார் வெளிநாட்டு முதலீடும் இவற்றில் அடங்கா).	—22*	—150	—500	—100
4. இறக்குமதிக்குக் கிடைக்கக்கூடிய கூடிய அந்நியச் செலாவணி ஆதாரம் (1+2+3).	681	545	3,070	614
5. பராமரிப்புக்கு வேண்டிய இறக்குமதி.	728	730	3,570	714
6. அபிவிருத்தி இறக்குமதிக்குக் கிடைக்ககூடிய அந்நியச் செலாவணி ஆதாரம் (இனம் 4—இனம் 5).	— 47	—185	—500	—100

31. மூன்றுவது திட்டக் கால அளவில் ஏற்றுமதி மூலம் மொத்தம் ரூ. 3,450 கோடி கிடைக்குமென மதிப்பிட்டுள்ளோம். ஆண்டுதோறும் சராசரியில் ரூ. 690 கோடி கிடைக்கும். 1958–59-ம் ஆண்டில் ரூ. 576 கோடிதான் கிடைத்தது. 1959–60-ம் ஆண்டில் ரூ. 645 கோடிதான் கிடைத்தது. மூன்றுவது திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 650 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதியாகுமென மதிப்பிட்டுள்ளோம். மூன் றுவது திட்டக் கால அளவில் உற்பத்தி அளவு அதிகரிக்குமென எதிர் பார்க்கிறோம். இத்துடன் ஏற்றுமதியை அதிகரிக்கத் தொடர்ந்து முயற்சி செய்வோமானல், அடுத்துவரும் ஆண்டுகளில் ஏற்றுமதி தொடர்ந்து அதி கரிக்கக்கூடும். உண்மையில் சொல்லப்போனல், மேலே காட்டியுள்ளதை விட ஏற்றுமதி மூலம் அதிகம் சம்பாதிப்பது நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

32. கண்ணுக்குத் தெரியாத நிகர வருவாய் கடந்த சில ஆண்டுகளாகக் குன்றந்து வருகிறது. வெளிநாட்டில் வாங்கிய கடன்களுக்கு வட்டியாக அதிகத் தொகை செலுத்துவதும் ஸ்டர்லிங் நிலுவை குறைந்துள்ளதும்

* இதில் சர்வதேச நிதியிலிருந்தும் P.L. 480 உதவியிலிருந்தும் கிடைக்கும் தொகை அடங்காது. ஆனல், தனியார் கணக்கிலுள்ள மூலதன விவகாரங்கள இதில் அடங்கும்.

இதற்குக் காரணங்களாகும். இரண்டாவது திட்டக் காலத்தில் வாங்கிய கடன்களுக்காகவும் மூன்றுவது திட்டத்தில் வாங்கவிருக்கிற கடன்களுக் காகவும் செலுத்தவேண்டிய வட்டித் தொகை பெருமளவில் இருக்கும். இந்தப் பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இத் துறையில் மற்ற வருவாய்களையும் செலவுகளையும் கருதிப் பார்த்தால், ஐந்தாண்டுக் கால அளவில் கண்ணுக்குத் தெரியாத நிகர உபரி ரூ. 120 கோடியாக இருக்கும். அதாவது, ஆண்டுச் சராசரி ரூ. 24 கோடியாக இருக்கும். ஆனால், 1956–57 முதல் 1958–59 வரை இத் துறையில் ஆண்டுச் சராசரி ரூ. 101 கோடியாக இருந்தது.

33. இரண்டாவது திட்ட முடிவு வரையில் வாங்கிய கடனுக்காக மூன் றுவது திட்டக் காலத்தில் செலுத்த வேண்டிய தொகை ரூ. 420 கோடி யாகும். இதைத் தவிர மூன்றுவது திட்டக் காலத்தில் வாங்கிய கடனையும் ஓரளவுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டியிருக்கும். முக்கியமாக, தனியார் கணக்கிலுள்ள இதர மூலதன விவகாரங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், மூலதனக் கணக்கில் ரூ. 500 கோடி திருப்பிக்கொடுக்கவேண்டும்.

34. ஏற்றுமதி, கண்ணுக்குத் தெரியாத வகையில் வருவது ஆகிய வற்றிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து மேலே கண்ட மூல தனக் கணக்கில் சொல்லியுள்ள தொகையைக் கழித்துவிட்டால் இறக்கு மதிக்குக் கிடைக்கும் தொகை ரூ. 3,070 கோடியாகும். தவிர்க்க முடி யாத இறக்குமதிப் பொருளாகிய மூலப் பொருள்கள், இடைத்தரப் பொருள் கள், சாதாரண விற்பனைக்கு உணவுத் தானியங்கள், பழைய யந்திரங் களுக்குப் பதிலாகப் புதிய யந்திரங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்ய ரூ. 3,570 கோடி வேண்டியிருக்கும்.

35. எனவே, நமக்குள்ள பற்றுக்குறை ரூ. 500 கோடியாகும். இது நாம் இப்போது கொடுத்துத் தீர்க்கவேண்டிய தொகைக்குச் சரியாக இருக் கிறது. திட்டத் தேவைகளைக் கவனிப்பதற்குமுன் இந்தத் தொகை நமக் குக் கிடைத்தாகவேண்டும். மூன்றுவது திட்டத் தொடக்க ஆண்டுகளில் பெருமளவுக்குக் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டியிருப்பதால், பற்றுக் குறை அதிகமாக இருக்கும். அதன் பின், இரும்பு, உருக்கு, யந்திரக் கட்டுமானங்கள், ரசாயனப் பொருள்கள் முதலியவை அதிகம் உற்பத்தி செய்யப்படுமாதலால், இந்தப் பற்றுக்குறை குறைந்துபோகும். உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பதால் ஓரளவு இறக்குமதி குறையும் என்பது உண்மைதான். ஆனாலும், பொருளாதாரம் வளர வளர புதிய வகை இறக்குமதிகள் அதிகரிக்குமென்பதை மறந்துவிடக்கூடாது.

36. திட்டத்திலுள்ள பல்வேறு வேலைத் திட்டங்களை எவ்வாறு அமைக் கிறோம் என்பதைப் பொறுத்தே அரசாங்கத் துறையிலும் தனியார் துறை யிலும் மூலதனத் திட்டங்களுக்கு அந்நியச் செலாவணி எவ்வளவு தேவை என்பது தெரியவரும். அடுத்து வரும் மாதங்களில் இதைக் குறித்து நல்ல முயற்சிகள் எடுக்கவேண்டும். உள் நாட்டில் உற்பத்தி செய்த மூலத தனப் பொருள்களையும் சாதனங்களையும் பெருமளவுக்குப் பயன்படுத்தவேண்டு மென்னும் அடிப்படையில்—இதுவும், திட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில்

இறக்குமதியைத் தவிர்க்கும் வேலைத் திட்டங்களுக்கு, அந்நியச் செலாவணி கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது—திட்டத்துக்கு மொத்தம் ரூ. 1,900 கோடி அந்நியச் செலாவணி வேண்டியிருக்குமென மதிப்பிட்டுள்ளோம். இதைத் தவிர, ரூ. 200 கோடி மதிப்புள்ள யந்திரப் பகுதிகளையும், சமன்பாட்டுச் சாதனங்களையும் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வது அவசியமாகும். இவை உள்நாட்டிலேயே மூலதனப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமாகும். இந்த வகை இறக்குமதிகளைத் திட்டத்தில் சேர்த்துள்ள குறித்த வேலைத் திட்டங்களுக்கு நேரடியாகச் சம்பந்தப்படுத்த முடியாது. இந்த நாட்டில் தயாரிக்க முடியாத சில யந்திர பாகங்களும் மூலதனப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டியுள்ள ஓரளவு நிறைவு பெற்ற பொருள்களும், இடைத்தரப் பொருள்களும் இந்த வகை இறக்குமதிப் பொருள்களாகும்.

37. எனவே, திட்டத்திற்கு மொத்தம் வேண்டியுள்ள வெளிநாட்டு உதவி ரூ. 2,600 கோடியாகும். இதன் விவரம் பின்வருமாறு :—

	(ரூபாய் கோடிக் கணக்கில்).
1. 30-வது பாராவில் காட்டியுள்ளவாறு வரவுக்கு மேல் கொடுக்கவேண்டிய தொகைக்காக	500
2. திட்ட வேலைக்கு வேண்டிய யந்திரங்கள், சாதனங்கள், ஆகியவற்றிற்காக.	1,900
3. உள்நாட்டிலேயே மூலதனப் பொருள்களுக்கு வேண்டிய யந்திர பாகங்கள் இடைத்தரப் பொருள்கள் முதலியன	200
4. மொத்தம்	2,600

(1), (3) இனங்களை நமது வெளிநாட்டு நிதி நிலைக்கு ஆதரவாகக் கொள்ளலாம். கொடுக்க வேண்டிய கடனை நீண்ட காலக் கடனாக மாற்றிக் கொள்வது மூலமாகவோ புதிய கடன் வாங்குவதன் மூலமாகவோ (1) இனத்தின் தேவையைப் பூர்த்தி செய்யலாம். (3) இனத்தின் கீழ் வேண்டியுள்ள உதவி இப்போதைய உற்பத்தி நிலையை அப்படியே வைத்து வருவதற்கல்ல. மூலதன உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி அளவைப் படிப்படியாக உயர்த்துவதற்கே என்பதை வலியுறுத்தவேண்டும்.

38. இந்த மொத்தத் தொகையுடன் P. L. 480 உதவி மூலம் கிடைக்கிற வருவாயைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். 1965–66-ம் ஆண்டுக்குள் உணவுத் தானிய விஷயத்தில் தன்னிறைவு பெறுவதே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியமானதொரு நோக்கமாகும். எனினும், உள்நாட்டு உற்பத்தி போதுமான அளவில் அதிகரிக்கிற வரையில், உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யத்தான் வேண்டும். அண்மையில், நாம் அமெரிக்காவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் விளைவாக 1 கோடியே 70 லட்சம் டன் உணவுத் தானியங்கள் நமக்குக் கிடைக்கும். இவற்றின் மதிப்பு ரூ. 608 கோடியாகும். இந்த உதவித் தானியங்களின் ஒரு பகுதி நடைமுறை ஆண்டிலேயே நமக்குக் கிடைக்குமென்றாலும், இந்த இறக்குமதி முழுவதும் மூன்றாவது திட்டக் காலத்துக்குச் சம்பந்தப்படுவதாய் வைத்துக் கொள்ளலாம். அந்த அடிப்படையில், மூன்றாவது திட்டக் காலத்தில் நமது அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ரூ. 3,200 கோடியாக இருக்கும்.

39. இந்த அளவு வெளிநாட்டு உதவி கிடைக்குமா என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. திட்டம் நீக்குப்போக்குள்ளதாய் இருக்க வேண்டும். வெளிநாட்டு உதவி நிச்சயம் கிடைக்கும் என்று தெரிந்தால் தான் திட்டத்தில் அந்நியச் செலாவணி வேண்டியிருக்கிற வேலைத் திட்டங்களைச் சேர்த்துக்கொள்ளலாம். அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் வேலைத் திட்டங்களைத் துவக்குவதும், நிறைவேற்றுவதும் வெளிநாட்டு உதவி கிடைப்பதைப் பொறுத்துள்ளன. எனவே, வெளிநாட்டு உதவி கிடைத்தவுடன் நிறைவேற்றுவதற்காக, போதுமான எண்ணிக்கையுள்ள வேலைத் திட்டங்களைச் சித்தமாக வைத்திருக்க வேண்டும். கிடைக்கும் வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், மூன்றுவது திட்டக் கால அளவிலும் அக் கால முடிவிற்குள்ளும் உற்பத்தி அதிகரிப்பு இலக்குகள் தவறிப்போகும்.

40. இப்போது இந்த நாட்டிலுள்ள அந்நியச் செலாவணிப் பிரச்சினை தாற்காலிகமானதல்ல, யதேச்சையாக ஏற்பட்டுள்ளதும் அல்ல. அபிவிருத்தி முறையிலேயே, இது ஊடும் பாவுமாக பின்னிக் கிடக்கிறது. குறித்த கால அளவு வரையில் அதிக இறக்குமதித் தேவைகளை வெளிநாட்டு உதவி பெற்று இறக்குமதி செய்யவேண்டிவரும். ஆனால், இந்தப் பற்றுக்குறை நிலையைப் படிப்படியாகக் குறைத்து, குறித்த கால அளவுக்குள் அதை அறவே நீக்குவது நமது நோக்கமாக இருக்க வேண்டும். இப்படிச் சொல்வதால், இந்தக் கால அளவுக்குப் பிறகு அந்நிய நாட்டு உதவி கிடைத்தால் அதை நாம் விரும்பமாட்டோம் என்பது பொருளல்ல. இயல்பான முறையில் வெளிநாட்டிலிருந்து மூலதனம் தொடர்ந்து வரும். ஆனால், விசேஷ வெளி நாட்டு உதவியை நம்பியிருப்பது படிப்படியாகக் குறையவேண்டும். குறித்த கால அளவுக்குப் பிறகு இப்படி நம்பியிருப்பதை அறவே விட்டு விடவேண்டும்.

41. இந்த நாட்டு ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியதன் அவசியமே மேலே கூறியவற்றிலிருந்து தெளிவாகிறது. தொடர்ந்து ஏற்றுமதி அதிகரித்தால்தான் அதிக அளவு இறக்குமதி செய்யமுடியும். எனவே, ஏற்றுமதியைப் பெருக்குவது நமது பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சமாயிருக்கவேண்டும். ஏற்றுமதிக்கு அதிக உபரிப் பொருள்கள் கிடைக்கவேண்டும். இதற்குகந்த வகையில், வரி விதிப்பு நடவடிக்கைகளையும் நிர்வாக நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்ற அம்சங்கள்.

42. இத் திட்டத்துக்கு வேண்டிய உள் நாட்டு, வெளிநாட்டு ஆதாரங்களை எந்த வகையில் பெறலாம் என்பதை எடுத்துக் கூறுவதே இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும். நிதி பெறுவதற்குக் குறித்த முறையை அல்லது ஆதாரத்தை நம்பியிருக்கும் அளவு அவ்வப்போதுள்ள பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடுவது சாத்தியமே. அவ்வாறு மாறுபடுவதை ஓரளவு தவிர்க்கவும் முடியாது. இது வரையில் கூறப்பட்டிராத வகைகளிலும் நிதி தேடுவது சாத்தியமே. அரசாங்கத் துறையில் ஓரளவு நிதி சேர்ப்பதற்காக, இப்போதுள்ள அல்லது இனி மேல்

ஏற்படவிருக்கிற அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் தனிப்பட்டோர் மூலதனம் போட்டு பங்கு கொள்வதை ஊக்குவிக்கலாம் எனக் கூறப் படுகிறது. அதை இப்போது ஆராய்ந்து வருகிறோம்; சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்குரிய வழி வகைகளையும், அதை வேண்டிய துறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய வழி வகைகளையும் ஆலோசிக்கலாம். உற்பத்திப் பெருக்கு, சிறப்பாக, வேளாண்மை உற்பத்திப் பெருக்கு மிக முக்கியமாகும். இதுவே, முழு முதலீட்டு முயற்சியின் அடிப்படை யாக அமைந்துள்ளது.

43. அபிவிருத்தி அடையும் நாட்டில் நிதி ஆதாரத்தைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும். கிடைக்கும் உபரியை உரிய காலத்தில் பெருமளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வப்போது நிலைமை மாறிவிடுவதற்கேற்ப, வரி விதிப்புக் கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்கச் செய்து அதைப் பெறுவதற்குரிய வழி வகைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இதனால் கிடைத்த பயன்களை அவ்வப்போது பரிசீலனை செய்ய வேண்டும். திட்ட வேலைகளிலும் மற்ற அரசாங்கச் செலவுகளிலும் செலவைச் சிக்கனப் படுத்துவதற்கு சம முக்கியத்துவம் அளிக்க வேண்டும். வரையறைக்குட்பட்ட பொருளில் இது ஆள் குறைப்புப் பிரச்சினையோ சிக்கனப் பிரச்சினையோ அல்ல. நாம் உத்தேசிக்கிற முடிவான நோக்கங்களைப் பரிசீலனை செய்து அவற்றைக் குறைந்த அளவு செலவில் நிறைவேற்றுவதற்குரிய வழி வகைகளைக் காண்பதே முக்கியமாகும். திட்டத்தில் கட்டிட வேலைக்கும் மற்ற சீரமைப்பு வேலைக்கும் அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. இந்த இனங்களில் ஏற்படும் செலவை முடிந்த அளவு குறைக்க வேண்டும். கட்டிட அமைப்பை எளிதாக்குவது மூலமாகவும், கிடைப்பது அரிதாயிருக்கும் பொருள்களைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தை மேற்கொண்டும், அலங் கார வேலைகளைத் தவிர்ப்பது மூலமாகவும் செலவை முடிந்த அளவு குறைக்கவேண்டும். தனியார் துறையிலும்கூட செலவைக் குறைப்பதே முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும். உள் நாட்டில் விலை வாசிகளை ஒரு நிலையில் கட்டுப்படுத்தி வைக்கவும் வெளி நாட்டு மார்க்கெட்டில் நம் நாட்டுப் பொருள்கள் குறைந்த விலையில் நல்ல முறையில் விற்பனை யாகவும் இது அவசியமாகும்.

44. சுருங்கக் கூறுவதானால், பொருளாதார அமைப்பில் முதலீட்டு முயற்சியை எவ்வளவு அதிகரிக்க முடியும் என்பதே அடிப்படை பிரச்சினை யாகும். இது உற்பத்தி முயற்சி எவ்வளவு திறமையுடன் மேற்கொள்ளப் படுகிறதென்பதையும், நிதி ஆதாரங்களைத் தேடுவதில் வரி விதிப்பு முறை களும் மற்ற வழி வகைகளும் நடைமுறையில் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதையும் பொறுத்ததாகும். அபிவிருத்தி குன்றிய நிலையில் தேவைக்கேற்ற நிதி ஆதாரம் கிடைக்காமலிருப்பது இயல்பேயாகும். கிடைக்கும் நிதி ஆதாரத்தைச் செம்மையாகச் சேகரித்துப் பயன்படுத்துவதே திட்டமிட்ட அபிவிருத்தியின் அடிப்படையாகும். இதற்கு வேண்டியுள்ள நிறுவன வேலைகளை மேற்கொள்ளச் சித்தமாயிருப்பது அவசியமாகும்.

அத்தியாயம் 5

கொள்கையும் அமைப்பும்

1. நிர்வாகமும் பொது மக்கள் ஒத்துழைப்பும்.

நிர்வாகத்தைச் சீர்திருத்தி நல்ல முறையில் அமைப்பதற்காகவும், திட்ட வேலைகளை நிறைவேற்றுவதில் பொது மக்கள் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளுமாறு செய்வதற்காகவும் முதலாவது, இரண்டாவது திட்டங்களிலே பல ஆலோசனைகள் கூறினோம். செம்மையாக நிறைவேற்றினால் தான் மூன்றாவது திட்டம் வெற்றியடையும். முதலாவது, இரண்டாவது திட்டக் கால அளவில் செய்த முதலீட்டிற்கு இப்போது முழுப் பயன் கிடைப்பதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதுடன் தொழில், போக்குவரத்து, மின் சக்தி முதலியவற்றின் அபிவிருத்திக்காகவும் கல்வி, சமூகப் பணிகளுக்காகவும் பெருமளவு முதலீடு செய்யவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். பெருமளவில் பொருளாதார, சமூக அபிவிருத்தி நாட்டில் ஏற்படவேண்டுமானால் சில முக்கியமான நிபந்தனைகள் அனுசரிக்கப்படவேண்டும். உயர்ந்த தரமுள்ள நிர்வாகம் இருக்க வேண்டும். அரசாங்கத் துறையில் ஆரம்பிக்கப்படுகிற தொழில்கள் செம்மையாக நிறைவேற்றப்பட்டுப் பெருமளவு பலன் தரத்தக்கவையாயிருக்க வேண்டும். இவற்றின் கடுமையான வேலைத் திட்டமும் செலவும் குறைந்த அளவில் இருக்கவேண்டும். தேசீய வளர்ச்சியின் பல்வேறு துறைகளிலும் பொது மக்களின் ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த அம்சங்களெல்லாம் இப் பிரிவில் ஆராயப்படுகின்றன.

நிர்வாகத் திறமை.

2. திட்ட வேலைகளைத் திறமையுடன் விரைந்து நிறைவேற்றவேண்டும். பொது மக்கள் தொடர்புள்ள எல்லா இடங்களிலும் நிர்வாகம் நாணயமுள்ளதாக இருக்கிறதென்ற நம்பிக்கை பரவலாக ஏற்படவேண்டும். இவையே பொருளாதார வளர்ச்சியின் முக்கிய பிரச்சினைகள் என்று எப்போதும் வலியுறுத்தியுள்ளோம். அபிவிருத்தி நடவடிக்கைகளின் வேகம் அதிகரித்துள்ளது. அரசாங்க வேலைகள் பல்கிப் பெருகியுள்ளன. இந்த நிலையில், இந்த நிர்வாகச் சீர்திருத்த அம்சங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. எனவே, இவற்றை விரைந்து செய்து முடித்தல் வேண்டும். பொது நிர்வாகத்தில் அடையவேண்டிய முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

(1) அரசாங்கத்தார் கொள்கைகளைத் திட்ட வட்டமான வகையில் வரையறுக்கவேண்டும் ; அவற்றைத் தொடர்ந்து நிறைவேற்றுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும் ;

(2) அமைச்சர், செயலாளர், துறைத் தலைவர் உட்பட ஒவ்வொரு நிலையிலும் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு என்ன, எய்த வேண்டிய நோககங்கள் யாவை என்பவற்றை நன்கு உணர்ந்து பொறுப்பு வகுத்துக் கொடுக்கவேண்டும் ;

(3) (அ) பணியாளர்களுக்குத் தகுந்த பயிற்சி யளிப்பது, (ஆ) நடைமுறைகளை எளிதாக்குவது, (இ) ஒவ்வொரு நிலையிலும் வேலையைச் செம்மையாக மேற்பார்வையிடுவது ஆகியவை உட்பட வேலை அன்றுடம் விரைவாகவும் உடனடியாகவும் செய்து முடிக்கப்படு மாறு பார்த்துக்கொள்ளவேண்டும் ;

(4) முக்கியக் கட்டுமான வேலைகளில் செய்யும் செலவுக்கு மிக நல்ல பலன் கிடைக்குமாறும், எல்லா நிலைகளிலும் நாணயமும் சிக்கனமும் இருக்குமாறும் பார்த்துக்கொள்ளவேண்டும் ;

(5) பொது மக்களுடன் நல்ல முறையில் தொடர்பு இருக்குமாறும், பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்குமாறும், பொது மக்களுடன் ஒத்துழைக்குமாறும், எல்லா மக்களிடமும் பணிவன்புடன் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும் ;

கடந்த சில ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் வாயிலாகவும், இது விஷயமாய் அண்மையில் மத்திய அரசாங்கத்தார் மேற்கொண்ட பரிசீலனைகளின் விளைவாகவும் பல ஆலோசனைகள் உருப்பெற்றுள்ளன. இப் பிரிவில் அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட உத்தேசித்துள்ளோம்.

3. இப்போது நிர்வாகம் உள்ள முறையில், வேலை விரைவாக நிறைவேறுவதில் சில சிரமங்கள் உள்ளன. இவற்றைப் போக்குவதற்காக உரிய முறையில் கவனம் செலுத்தவேண்டும். குறித்த கால அளவுக்குள், அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும், அனுசரித்து யார் யார் என்னென்ன வேலைகளைக் கவனித்து முடிக்க முடியுமென்பதற்குக் குறிப்பிட்ட பொறுப்பு ஏற்படுத்துவது மிக முக்கியமாகும் ; இது வலியுறுத்தப்பட வேண்டும். இவ்வாறு பொறுப்பு ஏற்படுத்துவதைச் சில நிர்வாகப் பழக்கவழக்கங்கள் தடை செய்கின்றன. உதாரணமாக, செயலாண்மைத் துறையினர், முதற்கண் பெருமளவில் மூல வேலையைத் தாங்களே செய்யத் தலைப்பட்டுள்ளனர். ஆனுல், கொள்கைகளை வகுத்தல், நிர்வாகத்தை மேற்பார்வையிடுதல், நல்ல தரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் ஆகியவையே இவர்கள் பணியாய் இருக்கவேண்டும். குறித்த சில விஷயங்களில் தவிர, நிர்வாக வேலைகளை அந்தந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள துறையினருக்கும், அதிகாரிகளுக்கும் விட்டு விடவேண்டும். நிர்வாகத் துறைகளும், கார்பொரேஷன்களும், அரசாங்கக் கம்பெனிகளும் வலுவூட்டப்பட வேண்டும். அவைகள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே செம்மையாகச் செயலாற்ற அவைகளைத் தூண்ட வேண்டும். இது மிகவும் அவசியமாகும். இரண்டாவதாக, அரசாங்கப் பணியாளர் ஒருவருக்குச் சட்டம் மூலமாகவோ, விதிகள் மூலமாகவோ, நிர்வாக

ஆணை மூலமாகவோ வகுத்துக் கொடுத்துள்ள துறையில் அவருடைய முடிவுகளில் குறுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது. ஓர் அதிகாரி தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றத் தவறினால், அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். நிர்வாக நலனை முன்னிட்டு அரசாங்கத்தார் அல்லது உயர் அதிகாரி தலையிட வேண்டிய விஷயங்களில் அந்த உரிய சட்டம் அல்லது விதிகள் அல்லது நிர்வாக ஆணைகளைத் திருத்த வேண்டும். மூன்றாவதாக, வேலை தொடங்கப் பெறுமுன், பற்பல துறையினரும் மகாநாடு கூடிப் பேசுவது, ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்வது, கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வது முதலிய வற்றைப் பெருமளவு குறைத்துவிட வேண்டும். ஏனெனில், இவற்றால் பலரிடம் பொறுப்பு சிதறிப் போய் விடுகிறது; பொறுப்புள்ள அதிகாரிகள் தாங்களாகவே முன் வந்து செயலாற்றுவது குறைந்து போகிறது.

4. அரசாங்க அலுவல் மிகவும் விரிவடைந்துள்ளது. உயர் நிலையில் வேலைப்பளு அதிகமிருப்பதால் ஒவ்வொரு துறையிலும் இடை நிலைப் பணியாளர்களுக்கு இவர்கள் போதிய அளவு எப்போதும் ஆலோசனை கூற முடிவதில்லை. இந்த இடை நிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி அவர்களை நன்கு பயிற்று விப்பது மிக முக்கியமாகும். அப்போதுதான் அவர்கள் அன்றாட நிர் வாகத்தில் திறம்படப் பெரும் பொறுப்பேற்க முடியும்.

5. முதலாவது திட்டத்தில் நிர்வாகப் பெரு நோக்கங்கள் எய்தப்பட வேண்டுமென வலியுறுத்தினோம். இதற்கு நிர்வாகத் திறமையும் நல்ல தரமும் தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்வதற்குத் தகுந்த தலை வர்கள் அந்த நிர்வாக அமைப்பிலேயே இருந்துவர வேண்டும். அரசாங்கப் பணிகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இத் தலைவர்களாக விளங்கவேண்டும். இக் கருத்தை உருவாக்குவது குறித்து தற்போது மத்திய அரசாங்கத்தார் ஆலோசனை செய்து வருகிறார்கள். மாநிலத்திலும் இத்தகைய அமைப்பு இருக்கவேண்டும். தலைமைச் செயலாளர் உட்பட மூத்த அதிகாரிகள் ஒரு சிலர் ஒருங்கு சேர்ந்து நிர்வாகக் குழுவாகச் செயலாற்ற வேண்டும். இக் குழு தலைமை அமைச்சருக்கும், மாநில அமைச்சரவைக்கும் அவ்வப் போது அறிக்கைகள் அனுப்ப வேண்டும். நிர்வாகத் தரத்தை உயர்த்து வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதும், பல்வேறு துறையினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை ஆராய்வதும் இக் குழுவின் பொறுப்பாய் இருந்துவரவேண்டும்.

6. மாவட்ட நிலையிலும், வட்டார நிலையிலும், கிராம நிலையிலும் நிர் வாகம் திறமையுடனும் நாணயத்துடனும் இருந்தால்தான் கிராம அபி விருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற முடியும். பல்வேறு மாநிலங்களில் மாவட்ட நிர்வாகப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு வருகின்றன. மாவட்ட நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. சிறப்பாக, வட்டார நிலையில் பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சபைகள் அமைக்கப்பட்டுள்ளதால், அந்தந்த இடத்திலுள்ள ஆள் பலத்தையும் மற்ற ஆதாரங்களையும் ஒருங்கு திரட்டுவதற்கு ஏற்ற

வசதி இப்போது புதிதாக ஏற்பட்டுள்ளது. எனினும், சமுதாய வளர்ச்சி பற்றிய பிரிவில் கூறியுள்ளவாறு, மூன்றாவது திட்டக் கால அளவில் வட்டாரங்களிலுள்ள பஞ்சாயத்துச் சமிதிகள் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி வசதிகள் ஏற்படுத்துவதற்குரிய திட்டங்களில் அவ்வளவு அதிகக் கவனம் செலுத்தலாகாது. தத்தம் பகுதிகளில் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற அமைப்புகளாக இவை செயல்பட வேண்டும். மேலிடத்திலிருந்து ஆலோசனை பெறுவதற்கும் எந்தெந்த வேலை இனங்களை எந்த வரிசைக் கிரமத்தில் எடுத்துக் கொள்வது என்பதை நிர்ணயிப்பதற்கும் உட்பட்டு, வட்டார வளர்ச்சி வேலைக்குரிய பொறுப்பு வட்டாரப் பஞ்சாயத்துச் சமிதியைச் சேர்ந்ததாகும். இந்த நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும்.

7. நிர்வாகத் திறமையை உயர்த்துவது தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒன்றாகும். வரவர அதிகச் சிக்கல் நிறைந்த பெரிய வேலைகளை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டி வரும். பற்பல துறைகளில் புதிய முறைகளை உருவாக்க வேண்டியிருக்கும். வேலையை முறையாக ஆராய்வது, எதையும் ஒரு முறை செய்துபார்ப்பது என்ற நோக்கத்துடன் வேலை செய்தால் இத் துறையில் அபிவிருத்தி ஏற்பட முடியும்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தொழில்கள்.

8. முதலாவது, இரண்டாவது திட்டக் கால அளவில் அரசாங்கத் துறையின் வரம்பு வரவர அதிகரித்துள்ளது. இப்போதுள்ள நிலையில் அரசாங்கத் தொழில்கள் மூலம் தேசீய வருமானம் ஓரளவே அதிகரித்துள்ளது என்றாலும், மூன்றாவது திட்டக் கால அளவில் இதனால் தேசீய வருமானம் பெருமளவு அதிகரிக்கும். தொழில் நிறுவனங்கள், பாசனத் திட்டங்கள், மின் சக்தித் திட்டங்கள், ரயில்வே, சாலைப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து முதலிய பற்பல பெருந் தொழில்கள் அரசாங்கத் துறையில் உள்ளன. ரயில்வேயின் முதலீடு 1950–51-ம் ஆண்டில் ரூ. 970 கோடியாக இருந்தது. இது 1960–61-ம் ஆண்டில் ரூ. 1,560 கோடியாக உயர்ந்துள்ளது. மூன்றாவது திட்டக் கால முடிவில் ரூ. 2,300 கோடியாக இது உயருமென எதிர்பார்க்கிறோம். அரசாங்கத் துறையில் மின்சார நிறுவனங்களிலே செய்துள்ள மொத்த முதலீடு 1951-ம் ஆண்டில் ரூ. 70 கோடியாக இருந்தது. இது 1956-ம் ஆண்டில் ரூ. 330 கோடியாக உயர்ந்தது. மூன்றாவது திட்டக் கால முடிவில் இது ரூ. 1,700 கோடியாக உயரும். அரசாங்கத் துறையிலுள்ள தொழில்களைக் குறித்த ஆராய்ச்சி ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. இதிலிருந்து தெரியவருவது என்னவென்றால்: மத்திய அரசாங்கத்தார் மேற்கொண்டு, கட்டி முடித்துச் செயலாற்றி வருகிற 19 தொழில் நிறுவனங்களின் மொத்த முதலீடு ரூ. 171 கோடியாக உள்ளது. ஹிந்துஸ்தான் உருக்கு நிறுவனம் உட்பட 7 பெரும் தொழில் நிறுவனங்கள் இன்னும் கட்டப்பட்டு வரும் நிலையில்தான் உள்ளன. இவற்றின் மொத்த முதலீடு ரூ. 562 கோடியாகும். இந்தத் தொழில்

நிறுவனங்கள், வெகுகாலமாகவே இயங்கி வரும் ரயில்வே, தபால்-தந்தி ஆகியவை நீங்கலாக, மத்திய அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள மற்றும் 20 தொழில் நிறுவனங்களில் செய்துள்ள மொத்த முதலீடு 1958–59-ம் ஆண்டில் ரூ. 175 கோடியாக இருந்தது. இவற்றுடன் மாநில அரசாங்கங்களும் ஏராளமான தொழில் நிறுவனங்களை நிர்வகித்து வருகிறார்கள்.

9. பற்பல மாநிலத் தொழில் நிறுவனங்கள் ஏற்கெனவே லாபம் சம்பாதித்து வருகின்றன. இந்தத் தொழில் நிறுவனங்களை மத்திய அரசாங்கத்தார் அல்லது மாநில அரசாங்கத்தார் நேரடியாக நிர்வகித்தாலும், கார்ப்பொரேஷன்கள், கம்பெனிகள் மூலமாக நிர்வகித்தாலும், அந்த நிறுவனங்கள் எல்லாவற்றிலிருந்தும் முடிந்த அளவு லாபம் சம்பாதிப்பதே பொதுக் கொள்கையாக ஏற்கப்பட்டுள்ளது. எனவே, மூன்றாவது திட்டத்தில் இந்தத் தொழில் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் உபரித் தொகை பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிதிக்காகப் பயன்படும். இந்த உபரித் தொகை முழுதும் கிடைத்து, தேசியத் திட்டத்திற்கேற்ப அபிவிருத்திக்குக் கிடைக்கும்படிச் செய்வதற்காக, இரு முக்கியத் துறைகளில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். முதலாவதாக, அரசாங்கத் தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குப் போதுமான அளவு நடவடிக்கை சுதந்திரம் இருக்கவேண்டும். இவர்கள் தங்கள் வேலைகளை விரைந்து செய்யத்தக்க நிலையில் இருக்கவேண்டும். நிர்வாக அதிகாரங்களையும், மற்ற அதிகாரங்களையும் அரசாங்கத்தார் இத் தொழில் நிறுவனச் சபைகளுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும். அச் சபைகள் அவற்றைப் பொது நிர்வாகிக்கும், நிர்வாகத்தினுள்ளேயே பற்பல நிலையிலுள்ளவர்களுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும். இது விஷயமாகப் பாராளுமன்ற மதிப்பீட்டுக் குழு அறிக்கைகளிலும், மற்ற விசாரணைகளிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் கட்டுமான நிலையிலும் பின்னரும் செய்து முடித்துள்ளவற்றை முறையாகத் தணிக்கையிடுவது அவசியமாகும். கட்டுமான நிலையில் கட்டப்பட்டுள்ள ஆஸ்திகள் முதற்கண் மதிப்பிட்டுக் காட்டியுள்ள முறையிலேயே இருக்குமாறு பார்த்துக்கொள்வது அவசியமாகும். இதற்காகத் தனிப்பட்ட யூனிட்டுகள் இருக்கவேண்டும். இவை குறித்த சில விஷயங்களில் செய்துள்ள சாதனைகளைச் சோதித்துப் பார்க்கவேண்டும். இந்த யூனிட்டுகள் செயல் முறைத் திட்ட ஏற்பாட்டிலேயே அமைந்திருக்க வேண்டுமென்பது விதி முறையாக இருக்கவேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நிலையிலும் திறமையையும், சிக்கனத்தையும், நாணயத்தையும் நிலைநாட்டுவதில் பொறுப்பான அதிகாரிகளுக்கு இவை துணைபுரிய முடியும். இச் சந்தர்ப்பத்தில் மற்றொரு விஷயத்தையும் வலியுறுத்துவது அவசியமாகும். அரசாங்கத் துறையிலுள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்தும் திறமை, உற்பத்தியளவு ஆகியவற்றைக் காட்டுகிற தகுந்த சோதனைகள் அல்லது குறியீடுகளை அபிவிருத்தி செய்து அவற்றைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே போவதில் சிறப்பாகக் கவனம் செலுத்தவேண்டும்.

கட்டுமானச் செலவில் சிக்கனம்.

10. பற்பல அபிவிருத்தித் துறைகளின் செலவில் கணிசமான பகுதி கட்டுமானச் செலவாக இருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் அரசாங்கத் துறையிலே கட்டுமானச் செலவு மொத்தத் திட்டச் செலவில் 6-ல் ஒரு பகுதியாக அல்லது 7-ல் ஒரு பகுதியாக இருக்குமென மதிப்பிட்டுள்ளோம். 1958-ம் ஆண்டு நவம்பரிலே தேசிய அபிவிருத்திக் கவுன்சில் வலியுறுத்திக் கூறியதாவது : கட்டிடச் செலவைச் சிக்கனப் படுத்துவதற்காக இரண்டாவது திட்டத்தில் முதற்கண் உத்தேசித்திருந்ததைவிடக் குறைந்த கட்டிடங்களே கட்டப்படவேண்டும். கட்ட உத்தேசித்துள்ள கட்டிடங்களை எளிய முறையிலேயே கட்டவேண்டும். இரண்டாவது திட்டத்தில் உத்தேசித்துள்ளதைவிட மூன்றுவது திட்டத்தில் திட்டச் செலவு அதிகமிருக்கும். எனவே, செய்த செலவுக்கு முடிந்த அளவு பெரும் பயன் பெறுவது மிக அவசியமாகும். கட்டிடச் செலவைச் சிக்கனப்படுத்துவது குறித்து மத்திய அமைச்சுகளும், மாநில அரசாங்கங்களும் ஆலோசனை செய்து அடியிற்கண்ட முடிவுகளை வெளியிட்டன :—

(1) ஒவ்வொரு துறையிலும் இன்றியமையாமல் வேண்டியுள்ள கட்டிடங்களையே கட்டவேண்டும். அனுமதித்துள்ள கட்டிட வேலைகளைக் குறைந்த செலவில் அவசியமான அலுவல் தேவைகளுக்கேற்பக் கட்டி முடிக்கவேண்டும். இயன்ற அளவில், தற்காலிக அல்லது ஓரளவு நிலையான கட்டிடங்களையே கட்டவேண்டும்.

(2) மாநில, மத்திய அமைச்சுகளின் திட்டங்களுடன் மொத்தம் எவ்வளவு கட்டிடங்கள் கட்டவேண்டும், அவற்றிற்கு வேண்டிய பொருள்கள் யாவை என்ற தகவலையும் சேர்த்து அனுப்ப வேண்டும். வேண்டிய பொருள்கள் யாவை என்பதைத் திட்டமிடுவதால் கணிசமான அளவு சிக்கனம் செய்யமுடிகிறது. விரிவான முறையில் திட்டமிடுவதற்கேற்ற வகையில் போதுமான கால அளவு முன்னதாகவே கட்டிட வேலைத் திட்டத்தை நிர்ணயித்தால்தான் இவ்வாறு திட்டமிடும் வேலையைச் செவ்வனே செய்ய முடியும்.

(3) ஒரே மாதிரியான முறையில் கட்டிடம் கட்டுதல், சிறந்த உத்திகளைக் கையாளுதல், கட்டிடத்திற்குப் பயனுள்ள அங்கங்களாக அமையாதவற்றைக் கட்டுப்படுத்தல் அல்லது கட்டாது விடுதல் ஆகியவை மூலமாகப் பெரும் அளவில் சிக்கனம் செய்ய முடியும். பல்வேறு மாநிலங்களின் நிலைமைகளுக்குப் பொருத்தமான மாதிரி கட்டிட வடிவங்கள் உருவாக்கப்படவேண்டும். பள்ளிக்கூடங்கள், விடுதிகள், சேமிப்புக் கிடங்குகள், மருத்துவ மனைகள், அலுவலகங்கள், குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றிற்கான கட்டிடங்களைப் பெருமளவில் கட்ட வேண்டியிருப்பதால், இவ்வாறு செய்வது பயனுள்ளதாகும். இவ்வகைக் கட்டிடங்களுக்கும், மற்றவகைக் கட்டிடங்களுக்கும் ஆகும் செலவு விவரத்தைக் கவனமுடன் நுணுகி ஆராய்ந்து, பொருத்தமான கால அளவுகளில் முக்கியச் செலவினங்களைப் பரிசீலனை செய்யவேண்டும். மக்கள் தொகை மிகுந்த இடங்களில் நில விலை அதிகமாயிருக்குமாதலால்,

அத்தகைய இடங்களில் கட்டிடம் கட்டுவதைத் தவிர்ப்பது மூலமாக வும் செலவைச் சிக்கனப் படுத்தவேண்டும்.

(4) கட்டிடங்களைக் கட்டும்போது மதிப்பீட்டுச் செலவைவிடப் பெரும் பாலும் நடை முதற் செலவு அதிகமாகிவிடுகின்றது. இவ்வாறு செலவு அதிகரிப்பதற்குப் பற்பல காரணங்கள் இருக்கின்றன. கூலி உயர்வு, பற்பல பொருள்களின் விலை உயர்வு, இவற்றுடன் கூடத் தவருக மதிப்பிடுதலும், குறைபாட்டுடன் நிறைவேற்று வதும், முடிவாகப் பணக் கோரிக்கையைக் கொடுத்துத் தீர்ப்பதி லுள்ள நிர்வாக நடைமுறைக் கோளாறும் செலவு அதிகரிப் புக்குக் காரணங்களாகும். திட்டமிடும் காலத்திலேயே பொருத்த மான எல்லா விவரங்களைக் குறித்தும் போதுமான கவனம் செலுத்துவதில்லை. பின்னர் திட்டத்தில் உள்ளதை மாற்றுவ தாலும், புதிய இனங்களைப் புகுத்துவதாலும் வீண் செலவுதான் ஏற்படுகிறது.

(5) கட்டிட நடவடிக்கை வேலைபற்றிய ஆராய்ச்சி அண்மையில் நடத்தப்பட்டது. பற்பல பொதுப்பணி நிறுவனங்களின் வேலை யைப் பரிசீலனை செய்வதன் அவசியம் இதிலிருந்து விளங்கிற்று. அப்படிப் பரிசீலனை செய்தால்தான், இப்போதுள்ளதைவிட மூன்றுவது திட்டத்தில் கட்டிட வேலையை அதிகத் திறமையுடனும், மேலும் சிக்கனமாகவும், விரைவாகவும் கட்டி முடிக்க முடியும். அப்போதுதான், கட்டிட மனையிலே, கட்டிட வேலை நிறுவனத்தில் அபிவிருத்தி செய்யவும், கட்டிடப் பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பார்த்துக் கொள்ளவும், தொழிலாளர் வேலை அளவை அதிகப்படுத்தவும் முடியும்.

(6) ஒப்பந்தக்காரர்கள் மூலம் கட்டிடங்கள் கட்டுவதாயிருந்தால், கட்டிட மனையை உரிய காலத்தில் தயார் செய்வது, விரிவான வரைப்படங்களை சித்தப்படுத்துவது, முக்கியப் பொருள்களைக் கொடுப் பதற்கும், கொடுக்கவேண்டிய பணங்களை உடனடியாகக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் செம்மையான ஏற்பாடுகளைச் செய்வது ஆகியவை மூலம் செலவில் மிச்சம் பிடிக்கமுடியும்.

(7) ஒப்பந்தக்காரர்களையே பெரிதும் நம்பியிருப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் கிடைக்காதபோது அல்லது அவர் கள் அவ்வேலையைச் செய்வதற்கு அதிகப் பணம் கேட்கும்போது, அப்பகுதிகளில் அவ்வேலையை அரசாங்கத் துறையினரே செய்து முடிக்கவேண்டும். அரசாங்கத்தார் அமர்த்திக்கொளகிற வேலை யாட்களுக்கு, செய்த வேலைக்கேற்ற கூலி என்ற முறையில் ஊதியம் தரவேண்டும். கட்டிட வேலையை மேற்கொள்வதற்கு ஏற்ற வசதி கள் உள்ள தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கட்டிட வேலைகளைக் கட்டி முடிக்கத் தாங்களாகவே முன்வருகிற நிறுவனங்களுக்கும் உற்சாகமூட்டி அவை கட்டிட வேலைகளை மேற் கொள்வதற்கு உதவி செய்யவேண்டும். தொடர்ந்து வேலை பெற

முடிகிற, நன்கு அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களின் நலனுக்காகவும், பயிற்சிக்காகவும் அதிகப் பணி புரியமுடியும்.

(8) சிறந்த பயிற்சிக்கு வசதி ஏற்படுத்துவதன் மூலம் தொழிலாளர் செய்யும் வேலை அளவை அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். கட்டிடத் தொழிலில் இப்போதுள்ள திறமை அளவை மேம்படுத்தச் சிறப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(9) தேவையான அளவு கிடைக்காத அல்லது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிற பொருள்களின் விலை அதிகமாயிருப்பதைத் தவிர்ப்பதற்காக, தகுந்த விஷயங்களில் அத்தகைய பற்றுக்குறைப் பொருள்களை அரசாங்கத்தாரே விலைக்கு வாங்கி ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுப்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.

11. கட்டிடச் செலவைச் சிக்கனப் படுத்துவதில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தியைக் கணகாணிப்பதற்காகத் துறைகளுக்கிடையே குழுக்கள் அமைக்க வேண்டுமென மாநில அரசாங்கங்களுக்கு ஆலோசனை கூறியுள்ளோம். மத்திய அரசாங்கத்திலும் இத்தகைய குழு ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம். அபிவிருத்தித் திட்டம் அல்லது வேலை அனுமதிக்காக வரும்போது, கட்டிடச் செலவையும் தீர ஆலோசிக்குமாறு வற்புறுத்தவேண்டும். இப்படிச் செய்யவேண்டுமானுல், மேற்கூறிய குழுவை நிறுவுவதும், மேலே சொல்லியுள்ள பல்வேறு ஆலோசனைகளைப் பின்பற்றுவதும் அவசியமாகும். மேலும், ஒவ்வொரு துறையிலும் உள்ள கட்டிட வேலைத் திட்டம் மிக அதிகச் சிக்கனம் ஏற்படும் வகையில் அமைக்கப்படுமாறு பார்த்துக்கொள்வதற்கும் இது உதவி செய்யும்.

பொதுமக்கள் ஒத்துழைப்பு.

12. தேசிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதன் முக்கியத்துவம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தியுள்ளோம். குறிப்பாக அந்தந்தப் பகுதியிலுள்ள தொகுதியினரின் நலனைப் பெரிதும் சார்ந்துள்ள வேலைகளைத் தாங்களாகவே முன்வந்து மேற்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் திறம்படச் செய்யமுடியும். இப்படி எதிர்பார்த்தது பெருமளவில் நிறைவேறியுள்ளது. ஏராளமானவர்கள், முக்கியமாக மகளிர் தாங்களாகவே முன்வந்து புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு பணிபுரிய வந்துள்ளார்கள். இத்தகைய நிறுவனங்களுக்குக் குறிப்பிட்ட வேலைத் திட்டத்தில் மத்திய அரசினரும், மாநில அரசினரும் ஓரளவு உதவி புரிய முடிந்துள்ளது. இதனுல் பல்வேறு நடவடிக்கைகளை நடத்தப் பயிற்சி பெற்ற முழு நேர ஊழியர் பலர் கிடைத்தனர். கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு டிரஸ்ட், ஹரிஜன சேவக சங்கம், காந்தி நினைவு நிதி, பாரத சேவக சமாஜம், இந்திய சமூகப் பணிக் கழகம், இந்திய சிறுவர் நலக் கழகம்,

மற்றும் இவை போன்ற தலை சிறந்த சுயேச்சை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஒத்துழைப்புக்கான தேசிய ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். இக் குழு பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குரிய வேலைத் திட்டங்களில் அறிவுரை வழங்கியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களில் பொதுமக்கள் பங்கு பெறுவதைக் குறித்த பிரச்சினைகளை ஆராய்வதற்குரிய அரங்கமாகவும் இது விளங்குகிறது. அபிவிருத்தித் திட்டங்களில் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெருமளவில் பெறுவதற்கான வழிவகைகளை உருவாக்குவதற்கும், செய்து காட்டுவதற்கும் முன்னோடித் திட்டங்களும், ஆராய்ச்சி வேலைகளும் நடத்த உத்தேசித்துள்ளோம்.

13. நகரப் பகுதிகளில் பற்பல சுயேச்சை நிறுவனங்கள் பயனுள்ள வேலை செய்துள்ளன. நகரங்களிலும், மாநகர்களிலும் சுகாதாரமற்ற குடிசைகள் இருப்பதை அகற்றுவது பொதுமக்கள் ஒத்துழைக்கக் கூடிய சிறந்ததொரு துறையாகும். உதாரணமாக, அங்குள்ளவர்களுக்குக் குடி தண்ணீர், பாதுகாப்புடன் கூடிய உறையுள், சுகாதாரம், துப்புரவு முதலிய அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கலாம். இது விஷயமாய் டெல்லி நகராண்மைக் கழகம் போன்ற நகராட்சிச் சபைகளும், மத்தியச் சமூக நலக் கழகமும், பாரத் சேவக சமாஜமும், இந்திய சமூகப் பணிக் கழகமும் பயனுள்ள திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளன. நகரப் பகுதிகளில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் பொதுமக்கள் பெரிதும் பங்கு கொள்ள முடியும் என்பது இந்த வேலைத் திட்டங்களை நிறைவேற்றியதிலிருந்து தெரியவருகிறது.

14. மேலும், பற்பல சுயேச்சை நிறுவனங்கள் கிராமப் பகுதிகளில் பணிபுரிவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. மத்தியச் சமூக நலக் கழகமும், மாநிலச் சமூகநலக் கழகமும் மேற்கொண்டுள்ள நலப் பரப்புத் திட்டங்கள் சமுதாய வளர்ச்சி இயக்கத்தின் அங்கமாக உள்ளன. இவை ஏராளமான மகளிர் கிராமப் புறங்களில் பணிபுரிவதற்கு வாய்ப்பு அளித்துள்ளன. சர்வ சேவா சங்கம், ஹரிஜன சேவக சங்கம், பாரதீய ஆதிமஜாதி (ஆதிவாசி) சேவக சங்கம், கஸ்தூரிபா காந்தி நினைவு டிரஸ்ட் முதலிய தலை சிறந்த நிறுவனங்களின் வேலை பெரிதும் கிராமங்களில் தான் உள்ளது. பாரத் சேவக சமாஜம் தனது லோக காரிய க்ஷேத்ர வேலைத்திட்டத்தின் மூலம் சிறந்த பயிற்சி பெற்ற முழு நேர சுயேச்சை ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து வளர்ச்சி வட்டாரங்களில் வேலை செய்வதற்கு அனுப்பி வைக்க முற்பட்டுள்ளது. இந்த ஊழியர்கள் உள்ளூர் வசதிகளை நன்கு பயன்படுத்தச் செய்வதில் அந்தந்தப் பஞ்சாயத்துகளுடனும் கூட்டுறவுச் சங்கங்களுடனும் சேர்ந்து பணிபுரிவர். சமுதாய வளர்ச்சி இயக்கமும், கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கும் வேலைத் திட்டங்களும்—இந்த வேலைத் திட்டங்களைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்—உள்ளூர் ஊழியர்களும், சுயேட்சை நிறுவனங்களும் பயனுள்ள வகையில் பணிபுரிவதற்கு நல்லதொரு வாய்ப்பளிக்கின்றன.

15. கடந்த சில ஆண்டுகளாகவே, நவ இந்தியாவை நிர்மாணிக்கும் வேலைகளில் வாலிபர்களையும் மகளிரையும் ஈடுபடுத்துவதில் தொண்டு முகாம்களும், சமூகப் பணி முகாம்களும் பெரும்பங்கு கொண்டுள்ளன. இரண்டாவது திட்டத் தொடக்கத்திலிருந்து தேசீய மாணவர் படை, மாணவர் துணைப்படை, பாரத சாரணர் படை, பாரத சேவக சமாஜம் மற்ற நிறுவனங்கள் ஆகியவை 5,000 முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்தன என்று தெரிகிறது. இவற்றில் 5,00,000 வாலிபர்களும் மகளிரும் பங்கு கொண்டுள்ளனர். தேசீய மாணவர் படை இப்பொழுது விரிவடைந்துள்ளது. இதில் இப்பொழுது 50,000 அதிகாரிகளும், கிட்டத்தட்ட 2,00,000 படையினரும் இருக்கின்றனர். மாணவர் துணைப்படையில் முதல் திட்ட முடிவில் 3,00,000 பேர் இருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை 8,00,000 ஆக உயர்ந்துள்ளது.

16. முன்னரே கூறியுள்ளவாறு, கட்டிட வேலைக்கு வேண்டிய சாதனங்களுடன் கூடிய சுயேச்சை நிறுவனங்கள், கட்டிடச் செலவைக் குறைப்பதில் பயனுள்ள பணிபுரிய முடியும். பாரத சேவக சமாஜம் கோசியிலும் நாகார்ஜுன சாகரிலும் மற்ற இடங்களிலும் செய்துள்ள வேலையிலிருந்து விளங்குவது என்னவென்றால் : சுயேச்சை நிறுவனங்கள் பங்கு கொண்டால் செலவு சிக்கனமாகும். பணியாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். உள்ளூரில் வசதிகள் ஏற்படுத்த ஆதாரங்களைப் பெருக்க முடியும். இதே முறையில் நாட்டின் பற்பல பகுதிகளிலும் இவ் வேலையைத் தொடர்ந்து நடத்தலாம்.

17. பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் திட்ட அரங்குகளின் எண்ணிக்கை 400-க்கும் மேல் உயர்ந்துள்ளது. இந்த அரங்குகள் திட்டத்தின் பல அம்சங்களைக் குறித்து கருத்தரங்குகள் நடத்தியுள்ளன. கிராமங்களில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளன. சிறு சேமிப்பு, சேரி ஒழிப்பு முதலிய பல வேலைகளில் பங்கு கொண்டுள்ளன. பொதுவாகச் சொல்லப் போனால், தேசீய இலக்குகளை அடைவதில் மாணவர் சமூகத்தைப் பயன்படுத்தும் பணி புரிந்துள்ளன.

18. மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் தங்களது திட்டத்திற்கு விளம்பரம் கொடுக்கும் வேலையை மேற்கொண்டன. தேசீய நிலையில், மாநில நிலையில், உள்ளூர் நிலையில் திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதை நன்கு புரிந்துகொள்வதற்கு இது உதவி புரிந்தது.

19. அபிவிருத்தித் துறை ஒவ்வொன்றிலும் பல வகைகளில் பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெருக்க முடியும். அரசாங்கத் துறையினர், தன்னாட்சி உள்ளூர்க்கழகங்கள், சுயேச்சை நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், வர்த்தகச் சங்கங்கள், மற்ற சங்கங்கள் ஆகியவை, ஒவ்வொரு உள்ளூர் தொகுதியினரின் முக்கியத் தேவைகளை அறிந்துகொண்டு கூட்டு முறையில் பணி புரிவதற்கேற்ற துறைகளை அறிந்து கொள்வதே அவைகளின் பொதுப்பணியாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்கள் தங்களுள் அதிக ஒற்றுமைகொண்டு பொதுவான சமூக நோக்குள்ளவர்களாய் விளங்க முடியும்.

2. கிராமப் பகுதியில் உள்ள ஆள் பலத்தைப் பயன்படுத்துதல்.

20. 1949-50 முதல் 1958-59 வரையுள்ள 10 ஆண்டுக் கால அளவில் வேளாண்மை உற்பத்தி எந்த அளவில் அதிகரித்ததோ, அதைப்போல் இருமடங்கு மூன்றாவது திட்டத்தில் அதிகரிக்கவேண்டும். எனவே, திட்டத்தின் இப் பகுதியை நிறைவேற்ற வேண்டுமானால், தீவிரமாகவும் தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும். பல லட்சக்கணக்கான குடியானவர் குடும்பங்கள், கிராம உற்பத்தித் திட்டங்கள், பெருமளவு பாசனத் திட்டங்கள், மண்வளப்பாதுகாப்பு, புன்செய் சாகுபடி, உள்ளூர் எருவகை அபிவிருத்தி ஆகியவற்றில் ஈடுபட்டால்தான், பற்பல வேளாண்மை நோக்கங்கள் நிறைவேற முடியும். இன்று இந்தியாவிலுள்ள நிலைமைகளில், கிராமப் பகுதியிலுள்ள ஆள்பலத்தை, அபிவிருத்தித் திட்டத்திற்குச் செவ்வனே பயன்படுத்துவது எப்படி என்பதே இப்போதுள்ள பிரச்சினையாகும். இந்தியாவின் பற்பல பகுதிகளிலும் வேளாண்மைக்கு மழையையே பெரிதும் நம்பியிருப்பதாலும், வேளாண்மை நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகச் சிதறிக் கிடப்பதாலும், வேளாண்மை ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு போதிய ஊதியம் பெற முடியாது. ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து வேலை இருப்பதற்கில்லை. இதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், மக்கள் தொகை விரைந்து பெருகிவருவதால், இந்தப் பிரச்சினை பின்னும் சிக்கல் நிறைந்ததாகி உள்ளது. வேளாண்மைத் தொழிலாளர் இரண்டாவது விசாரணையாலும், திட்ட மதிப்பீட்டு நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளாலும் இது நன்கு விளங்குகிறது. எனவே, நாம் அடைய வேண்டிய நோக்கங்கள் இரண்டு. வேலை செய்ய விரும்புகிற அனைவருக்கும் அதிக வேலை கிடைக்கவேண்டும். கிடைக்கும் ஆள் பலத்தை வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், சமுதாய ஆஸ்திகளை ஏற்படுத்தவும் பெருமளவிற்குப் பயன்படுத்தவேண்டும். நல்ல வகையில் வளர்ச்சி அடையாத பொருளாதாரத்தில் இவ்விதமாகத்தான் மூலதனத்தைச் சேகரிக்க முடியும்.

21. விஞ்ஞானமுறை வேளாண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்வது, கிராமப்பொருளாதார அமைப்பைப் பலகூறுகளாக்கி வலுப்படுத்துவது ஆகியவை மூலமாகவே ஆள்பலத்தைப் பயன்படுத்தும் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணவேண்டும். இந்த வகைகளில் உள்ள வேலைத்திட்டங்களே மூன்றாவது திட்டமாக அமைந்துள்ளன. ஆள்பலத்தை நன்கு பயன்படுத்துவதற்காகக் கிராமப் பகுதிகளில் விரிவான வேலைத் திட்டங்கள் இருக்கவேண்டுமென உத்தேசித்துள்ளோம். ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் வேலைத் திட்டங்களைத் தயாரித்தலே அதன் ஐந்தாண்டுத் திட்டத்தின் இன்றியமையாத அம்சமாகும். வட்டார நிறுவனம் மூலமாகப் பலதுறையினரும் மேற்கொள்கிற வேலைகள் யாவும் வட்டாரத் திட்டத்தில் அடங்கும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழுள்ள வேலைத் திட்ட வரவு-செலவுத் திட்டத்தில் சேர்ந்துள்ள வேலைகளும் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பெருமளவு நடுத்தரப் பாசனத் திட்டங்கள், சாலை அபிவிருத்தி முதலிய மாநிலப் பொதுத் திட்டத்தின்கீழ் வரும்

வேலைகளும் இதில் அடங்கும். இந்த வட்டாரத் திட்டம் பின்னர் கிராமத் திட்டங்களாகக் கூறுபோடப்படும். இந்த வடிவில் இத் திட்டம் எல்லாக் குடும்பங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு பகுதியிலுள்ள வேலைத் திட்டத்தில் சாதாரணமாக ஐந்து வகை வேலைகள் அடங்கியிருக்க வேண்டும்.

I. மாநிலத் திட்டங்களிலும், ஸ்தல ஸ்தாபனத் திட்டங்களிலும் சேர்ந்துள்ள வேலைத் திட்டங்கள் ; இத் திட்டங்களுக்குக் கைத்திறன் வேண்டாத தொழிலாளர்களையும் ஓரளவு கைத்திறன் வேண்டியுள்ள தொழிலாளர்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

II. சமுதாயத்தினர் அல்லது பயன் துய்ப்போர் சட்டத்தில் நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்குட்பட்டு மேற்கொள்கிற வேலைகள்.

III. உள்ளூர் அபிவிருத்தி வேலைகள் ; இவற்றிற்கு உள்ளூர் மக்கள் உழைப்பினை நல்குவர். அரசாங்கத்தாரும் ஓரளவு உதவி புரிவர்.

IV. ஊதியம் அளிக்கவல்ல ஆஸ்திகளை நிர்மாணிப்பதைக் கிராம சமுதாயத்தினருக்குச் சாத்தியமாக்கும் திட்டங்கள்.

V. வேலையின்மை அதிகமுள்ள பகுதிகளில் ஏற்படுத்த வேண்டிய துணைவேலைத் திட்டங்கள்.

22. **I-ம் வகை வேலைகள்.**—கைத்திறன் வேண்டியிராத அல்லது ஓரளவு கைத்திறன் வேண்டியுள்ள தொழிலாளர்கள் பெருமளவு தேவைப்படுகின்ற திட்டங்கள் பல மாநிலத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பாசன-வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், நிலமீட்சித் திட்டங்கள், உவர் நிலத்தை மீட்கும் திட்டங்கள், காடுவளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் முதலியவை இதற்கு உதாரணங்களாகும். இந்தத் திட்டங்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பெருமளவு வேலை கொடுக்க வேண்டுமானால், அந்தத் திட்டங்களை அந்தந்த வட்டாரத்திலுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தவேண்டும். பஞ்சாயத்துச் சமிதியும் கிராமப் பஞ்சாயத்துக்களும் இந்த நிறுவனங்களில் அடங்கும். சாத்தியமான இடங்களில் ஒருசில தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவேண்டும். இத்தகைய தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கருவிகளை வழங்கவேண்டும் ; உரிய துறையினரிடமிருந்து ஒப்பந்தங்கள் பெறவேண்டும். பல்வேறு கிராமங்களிலிருந்து தொழிலாளர்களைத் தொகுதி தொகுதியாகச் சேர்த்து அவர்களுடைய இல்லங்களிலிருந்து சிரமமின்றிச் செல்லக் கூடிய தொலைவில் அவர்களை வேலை செய்யச்செய்து வேலை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும்.

23. கிராமப் பகுதிகளில் வேலை அதிகமிருக்காத காலங்களில் இவ் வகைகளில் இவ் வேலைத்திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிடவேண்டும். வேலையில்லாக் காலம் தொடங்குவதற்கு முன்னரேயே இவற்றைத் திட்டமிட வேண்டும். அப்போதுதான் உரிய வட்டார வளர்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்பைப் பெற முடியும். கிராமங்களில் மேற்கொள்கிற வேலைகளுக்கு கிராம வீதப்படியே ஊதியம் வழங்க வேண்டும். பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மற்ற சுயேச்சை நிறுவனங்கள் ஆகியவற்றின்

சேவையை முழு அளவிற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு வட்டாரத்தில் வேலைத் திட்டங்களை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பு வட்டார வளர்ச்சி அதிகாரியிடமும், வட்டார நலப்பரப்புக் கோஷ்டியிடமும் இருக்க வேண்டும். ஒப்பந்தக்காரர்களுக்குப் பதிலாகக் கிராமத்தினர் வேலை செய்யவேண்டியிருக்கிற வேலைத் திட்டங்களை நிறைவேற்றும்போது, வேலையைச் செய்வதற்குச் சாதாரணமாகக் கொடுக்கவேண்டியதைவிட இவர்களுக்கு அதிகக் கால அளவு அளிக்கவேண்டும். அவர்களுடைய வேலையை உடனடியாக அளவிட்டு அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை உடனே கொடுக்கவேண்டும். இத்தகைய வேலைகளுக்கு வேண்டியுள்ள சில வேலையாட்கள் அந்த ஊரில் கிடைக்கமாட்டார்கள் என்று தெரிய வந்தால், வேலையை ஆரம்பிப்பதற்குமுன் அத்தகைய வேலையாட்களை வெளியூரிலிருந்து அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பயிற்சி பெற்ற தொழிலாளர் பிரிவு ஒன்றை நிறுவி, இத்தகைய வேலையை மேற்கொள்ளும் வட்டாரங்களுக்கு அவர்களைக் குறித்த கால அளவிற்கு அனுப்புவதுபற்றி மாநில அரசாங்கங்கள் ஆலோசனை செய்யவேண்டும். இவ் வகையில் மாநிலங்களின் பற்பல பகுதிகளிலும் கிடைத்த அனுபவத்தைப் பயன்படுத்திப் பின்னர் செய்யவேண்டிய வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்கலாம்.

24. II-ம் வகை வேலைகள்.—பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதில் தாமதம் நேரிடுகிறதென முதலாவது, இரண்டாவது திட்டங்களிலிருந்து தெரியவந்தது. இவற்றுல் பயன் துய்ப்போர் கண்ணி வாய்க்கால்களை வெட்டாததே இதற்குப் பெரிதும் காரணமாகும். இவ்வண்ணமே சிறிய பாசன வேலைகளைப் பராமரிக்கத் தவறிவிட்டிருக்கின்றனர். இந்த நிலையில் உள்ளூர் தொகுதியினர்களுக்கும், பயன் துய்ப்போர்களுக்கும் சட்டப்படி சில பொறுப்புகளை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிப்பது அவசியம். இந்தியாவின் பற்பல பகுதிகளிலும் கண்ணி வாய்க்கால்களைப் பராமரிக்கும் பொறுப்பு நீண்டகாலமாகவே இருந்து வந்திருக்கிறது. இந்தப் பொறுப்பைக் குறித்து ரெவின்யூ பதிவுகளில் எழுதப்பட்டிருக்கிறது. குடி மராமத்துப் பொறுப்புகள் இப்போது நிறைவேற்றப்படாமல் உள்ளன. எனவே, இந்தப் பொறுப்பைச் சட்டத்தின் மூலம் வரையறுத்துக் கூறுதல் அவசியமாகின்றது. பயன் துய்ப்போர் சிறிய பாசன வேலைகளைப் பராமரித்துவர வேண்டும், கண்ணி வாய்க்கால்களை வெட்டவேண்டும், சம உயரக்கரை கட்டவேண்டும் என்று சில மாநிலச் சட்டங்களில் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

25. பாசன வேலைகள் விஷயமாய் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புகள் பின்வருமாறு :—

(1) பெரிய பாசன வேலைகளும் நடுத்தரப் பாசன வேலைகளும்—

(அ) **நிர்மாண நிலை.**—பாசனம் பெறும் நிலச் சொந்தக்காரர்கள் குறித்த கால அளவுக்குள் கண்ணி வாய்க்கால்களை வெட்ட வேண்டும்.

(ஆ) **பராமரிப்பு.**—பயன் துய்ப்போர் கண்ணி வாய்க்கால்களை நல்ல நிலையில் ஆண்டுதோறும் வைத்துவரவேண்டும்.

(2) **சிறிய பாசனம்**—

(அ) கால்வாய்களில் தூர் எடுத்தலும், கால்வாய்களைப் பராமரித்து வருதலும் ;

(ஆ) ஏரிக்கரைகளைப் பராமரித்தல் ;

(இ) ஏரிப்படுகையில் தூர் எடுத்தல் (நீண்ட காலமாகத் தூர் எடுக்காமல் விட்டிருந்தால், அந்த வேலையை அரசாங்கத்தாரே நேரடியாகச் செய்யவேண்டும்).

பயன் துய்ப்போர் இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றச் செய்வதற்குக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமளித்துச் சட்டம் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். பயன் துய்ப்போர் இவ் வேலைகளை உரிய காலத்தில் செய்து முடிக்கத் தவறினால், பஞ்சாயத்துக்கள் அவற்றைச் செய்து முடித்து அவற்றிற்கான செலவை அவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டும். பஞ்சாயத்தே அவ் வேலையைச் செய்யத் தவறினால், அரசாங்கத்தார் அல்லது அவர்கள் சார்பில் வட்டாரப் பஞ்சாயத்துச் சமிதி அவ் வேலைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவற்றிற்கான செலவைப் பயன் துய்ப்போரிடமிருந்து முடிவில் வசூலிக்க வேண்டும்.

26. சிறப்பாக, பாசனம் பெறாத பகுதிகளில், வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்காக, சம உயரக்கரை கட்டுவதும், மண் வளப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதும் அவசியமாகும். ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காடு வளர்த்துப் பாதுகாக்க நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியம். இதற்காக அடியிற்கண்ட வகைகளில் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளோம் :—

(1) ஓர் ஆறு அல்லது ஓடை செல்லும் பகுதியில் அல்லது தொகுதியாயுள்ள ஒரு சில கிராமங்களுக்குச் சம உயரக் கரை கட்டும் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும், அத் திட்டத்திற்குள்ள ஆட்சேபணைகளைக் கூறுமாறு அறிக்கையிடுதற்கும் ஒரு சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு அதிகாரமிருக்க வேண்டும். ஆட்சேபணைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்த பிறகு அவசியமாயுள்ள மாறுதல்களுடன் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

(2) அனுமதிக்கப்பட்ட எத் திட்டத்திலும் (i) நீர்ப்பிடிப்புப் பகுதியில் காடு வளர்ப்பதற்கும், (ii) ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்குரிய பொதுவான வேலைகளுக்கும் ஆகும் செலவை அரசாங்கத்தாரே மேற்கொள்ளவேண்டும்.

(3) ஒரு கிராமத்திற்குள், கிராமம் முழுவதற்கும் பொதுவான வேலைகளுக்காகும் செலவை அவ் வேலையிலிருந்து பயனடைவோர் வைத்துள்ள நிலத்திற்கேற்ப அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும். இதனால் பயனடைவோருக்கு அரசாங்கத்தார் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்கலாம். இக் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய கால அளவு 5 முதல் 10 ஆண்டுகள் வரை இருக்கலாம் ;

(4) தனிப்பட்ட கைப்பற்று நிலங்களில் செய்து முடிக்கவேண்டிய வேலைகளை அவற்றால் பயனடைவோரே செய்துகொள்ள வேண்டும்.

மேலே (3), (4) இனங்களிலே செய்யவேண்டிய வேலையைச் செய்து, அதற்கான செலவைப் பாசனத் திட்டங்கள் விஷயமாய் சொல்லியிருப்பதைப் போலவே வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

27. III-ம் வகை வேலைகள்.—கிராமப் பகுதிகளில் சில வசதிகளை ஏற்படுத்துவது மூன்றாவது திட்டத்திலுள்ள ஒரு முக்கியமான வேலையாகும். இந்த வசதிகளாவன: (அ) குடிதண்ணீர் வழங்கல், (ஆ) ஒவ்வொரு கிராமத்தையும் அடுத்துள்ள முக்கிய சாலையுடன் அல்லது ரயில் நிலையத்துடன் இணைப்பதற்காகச் சாலை போடுதல், (இ) கிராமப் பள்ளிக்கூடத்துக்குக் கட்டிடம் கட்டுதல். இக் கட்டிடம் சமுதாய நிலையமாகவும் பயன்படும். கிரா ால் நிலையமும் இதில் அமைந்திருக்கலாம். திட்டத்திலே இவற்றிற்காக ப கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். ஒவ்வொரு கிராமமும் இவ் வசதிகளைத் தானே செய்துகொள்ளக்கூடிய வகையில் உதவி செய்யப்படும். உள்ளூர் வாசிகள் தங்கள் பங்காக உழைப்பினை நல்குவர்; முடிந்த அளவுக்குப் பண உதவியும் செய்வர். முதலாவது, இரண்டாவது திட்டங்களிலே மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் வேலைகளை அபிவிருத்தி செய்வதே மூன்றாவது திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கும் வேலைத் திட்டமாக அமையவேண்டும். இந்தத் திட்டங்களினால் கிடைக்கும் நன்மைகளைக் கிராமத்தினர் நன்குணர்ந்து அவற்றில் மனப்பூர்வமாக பங்கு கொண்டனர் என்றே கூறவேண்டும். இந்தப் புதிய வேலைத் திட்டம் கிராமப் பகுதிகளில் நிறைவேற்றப்படும். எனினும், சமுதாய நல வளர்ச்சித் திட்டம் எல்லாக் கிராமங்களிலும் அமுலாகிற வரையில், மாநில அரசாங்கங்கள் தங்கள் நிதியில் பெரும் பகுதியை அடியிற் கண்டவைகளுக்காக ஒதுக்கிவைக்கவேண்டும். (அ) முன்னேற்றமடையாமல் பின்னிலையிலுள்ள பகுதிகள், (ஆ) சமுதாயநல வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வராத பகுதிகள் (இ) நலப்பரப்புக்கு முற்பட்ட நிலையிலுள்ள வட்டாரங்கள், (ஈ) சமுதாய நல வளர்ச்சி வேலைத் திட்டத்தில் முதலாவது இரண்டாவது நிலைகளைக் கடந்துள்ள வட்டாரங்கள. வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ஒதுக்கப்படுகிற தொகையிலிருந்து மேற்கூறிய வசதிகளைச் செய்து கொடுக்கவே முதலில் செலவு செய்ய வேண்டும். அந்த வட்டாரத்திலுள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகே மற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

28. IV-ம் வகை வேலைகள்.—கிராமக் குளங்கள், ஏரிகள், மீனளங்கள், விறகு மரக்காடுகள், பொது மேய்ச்சல் தரைகள் போன்று கிராமம் முழுவதற்கும் சொந்தமான, ஊதியம் அளிக்கவல்ல பொருளாதார ஆஸ்திகளைக் கிராம சமுதாயத்தினரே படைப்பதற்கேற்ற திட்டங்கள் இத் தொகுதியில் உள்ளன. வட்டாரம் முழுவதற்குமான தேவைகளின் அடிப்படையிலும் ஒவ்வொரு கிராமத் தேவைகளின் அடிப்படையிலும் இந்த வேலைத் திட்டங்களை வகுக்க வேண்டும். இத் திட்டங்களைக் ...

நிறைவேற்றி வைக்கவேண்டும். உரிய துறையினர் வேண்டிய தொழில் நுட்ப உதவி அளிப்பர்; பிறகு மரக் காடு வளர்க்க சிறு கன்றுகள் வழங்குவர் ; மீன் வளர்ப்புக்கு வேண்டிய மீன் குஞ்சுகள் தருவர். இந்த வகை வேலைத திட்டத்தினுள் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் ஆண்டுதோறும் குறித்த அளவு வருமானம் பெறவேண்டும் என்பதே பொது நோக்கமாகும.

29. **V-ம் வகை வேலைகள்.**—வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்துள்ள பகுதிகளில விசேஷ வேலைத் திட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென்ற ஆலோசனைக்கு தேசிய அபிவிருத்திக் கவுன்சில் 1959-ம் ஆண்டு எப்ரலில் அனுமதியளித்தது. இத் திட்டங்களை நாட்டாட்சிக் கழகங்களும் (ஸ்தல ஸ்தாபனங்களும்) மாநில அரசாங்கங்களும் உருவாக்கி நடத்த வேண்டும். செய்த வேலைக்குக் கிராம வீதப்படியே ஊதியம் அளிக்க வேண்டும். தீவிர வேளாண்மை அபிவிருத்திக்காக அண்மையில் தேர்ந்தெடுத்த மாவட்டங்களிலும் மக்கள் தொகை மிகுந்துள்ள கிராமப் பகுதிகளிலும் இத்தகைய திட்டங்களை நடத்தி அனுபவ அறிவு பெறவேண்டியது அவசியமாகும். இந்த முன்னோடி வேலைத் திட்டங்களை இரண்டாவது திட்டத்தின் இறுதி ஆண்டில் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய் தால்தான், மூன்றுவது திட்டத்தில் இவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய முடியும்.

30. **சமுதாய ஆஸ்திகளைப் படைப்பதில் மக்கள் உழைப்பினை நல்குதல்.**—சில மாநிலங்களில் பஞ்சாயத்துச் சட்டத்தில் பஞ்சாயத்துகளுக்குச் சிறப்பான அதிகாரம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அக் கிராமப் பஞ் சாயத்து அச் சமுதாயத்திலுள்ள வயது வந்த ஆண் மகன் ஒவ்வொரு வனும், சட்டத்தில் நிரணயிக்கப்பட்டுளள வரையறைக்கு உட்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு எத்தனை நாள் இலவச உழைப்பு நல்கவேண்டுமென நிர்ணயிக்க முடியும். சமுதாய ஆஸ்திகள் உண்டாக்குவதை வசதிப்படுத்துவதே இச் சட்டத்தின் நோக்கமாகும். இரண்டு விஷயங்கள் குறித்து இப்போது மாநில அரசாங்கங்களைக் கலந்தாலோசித்து வருகிறோம். அவையாவன : (1) கணிசமான மதிப்புள்ள சமுதாய ஆஸ்திகளை ஏற்படுத்தும் வகையில், நிர்ணயிக்கப்பட்டுள்ள வேலை நாட்களை அல்லது வேலை மணி நேரத்தை அதிகப்படுத்தலாமா எனபது ஒனறு ; (2) சமுதாயத்தின் பேரளவு சம்மதத்துடன், இந்த முறையைப் பெருமளவில் எவ்வாறு பரப்புவது என்பது மற்றொன்று.

31. **சீரான பிரதேச வளர்ச்சி.**—நாட்டிலுள்ள பற்பல பகுதிகளும் சீரான.—வளர்ச்சி அடையவேண்டும் என்பதும் மிகப் பின்னிலையிலுள்ள பகுதிகளை முதற்கண் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதும் அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைகளாகும். இக் கொள்கைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் 1956-ம் ஆண்டு எப்ரலில் வெளியிட்ட தொழிற் கொள்கைத் தீர்மானத்திலும் இடம் பெற்றுள்ளன. திட்டத்தில் சேர்த்துள்ள வேலைகளைநிறைவேற்றுவது மூலமாகவே இந்த நோக்கங்களை எய்தவேண்டும். எனினும், அவ்வப்போது அதிகப்படியான வேலைத் திட்டங்கள் மாநிலத்

திட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. இந்த வேலைத் திட்டங்கள் விசேஷப் பிரச்சினைகளுள்ள பகுதிகளுக்கெனத் தனி முறையில் உத்தேசிக்கப்பட்டவையாகும். சீரான பிரதேச வளர்ச்சி நிறைவேற வேண்டு மானால், அடியிற்கண்ட முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:—

(1) சமுதாய வளர்ச்சி, பாசனம், சிறப்பாகச் சிறிய பாசனம், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் முதலிய வேலைத் திட்டங்களை முதன்மையாக மேற்கொள்ள வேண்டும். இவை மிகக் குறுகியக் கால அளவில் அப் பகுதி முழுவதிலும் பரவக்கூடியவையாகும்;

(2) தொழில் துறையில் பின்தங்கியுள்ள அல்லது வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கு அதிக அவசியமுள்ள பகுதிகளில் மின் சக்தி, தண்ணீர் வழங்கல், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, பயிற்சி நிலையங்கள் முதலிய வசதிகள் ஏற்படுத்தவேண்டும் ;

(3) கிராமத் தொழில்களையும் சிறு தொழில்களையும் வளர்ப்பதற் குரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் ;

(4) அரசாங்கத் துறையிலாயினும் தனியார் துறையிலாயினும் புதிய தொழில்களை எங்கு அமைப்பது என்று ஆராயுங்கால், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், சீரான பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் அத் தொழில்களை அமைக்க வேண்டும். குறிப்பாக, மூலப் பொருள்கள் அல்லது இதர இயற்கை வளங்கள் இருப்பதை மட்டும் எண்ணிப் பார்த்து தொழிலிடத்தை நிர்ணயிக்காதபோது, மேற்கூறிய அம்சத்தைக் கருதிப் பார்த்து அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கூறிய நடவடிக்கைகளுடன் இரண்டாவது திட்டத்தில் மேற் கொண்டும் சொல்லியுள்ளது என்னவென்றால்; நாட்டின் பற்பல பகுதிகளிலும் வேண்டிய இடங்களில் தொழிலாளர் போய் வருவதற் கேற்ற வசதி செய்து கொடுக்க வேண்டும். மக்கள் தொகை மிகுந்த இடங்களிலிருந்து மக்கள் தொகை குறைந்த இடங்களுக்கு மக்கள் குடி யேறவும் அவர்களைக் குடியமர்த்தவும் திட்டங்கள் வகுக்க வேண்டும். ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை எப்போதும் சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ச்சி செய்துவர வேண்டும். அந் தந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கண்காணிக்க ஏற்ற வழி முறைகளை வகுக்க வேண்டும்.

32. பிரதேச வளர்ச்சி என்பது மாநில வளர்ச்சி என்றே எண்ணப் படுகிறது. இவ்வாறு எண்ணுவது இயல்பே. மாநில அரசாங்கங்கள் வகுக்கும் திட்டங்கள் ஆற்ற வேண்டிய பெரும்பணி ஒன்று உள்ளது. மாநிலத் திட்டங்களில் சேர்க்கப்பட்டு மாநிலங்கள் நிறைவேற்றுகிற வேலைத் திட்டங்கள் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. எனினும், ஒரே மாநிலத்திலும்கூட ஒரு சில பகுதிகள் மற்றப் பகுதிகளைவிட மிகவும் பின்தங்கியுள்ளன. மாநில அரசாங்கங்கள் திட்டங்களை வகுக்கையில், இருக்கிற ஆதாரத்துக்குள் அப் பகுதிகளுக்கெனச் சிறப்பான வேலைத் திட்டங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

33. நமது திட்டங்கள் மேற்கூறிய நோக்கத்தின் அடிப்படையிலேயே பெரும்பாலும் அமைநதுளளன. முதலாவது, இரண்டாவது திட்டங்களின் அனுபவத்தைப் பரிசீலனை செய்வதில் மூன்று அம்சங்களை ஆலோசனை செய்வது பயனுள்ளதாயிருக்கும் ; அவையாவன : (1) தேசீயத் திட்டத்தின அங்கமாக அமைந்துள்ள மாநிலத் திட்டங்கள் ஆற்றியுள்ள பணியும், இத் திட்டஙகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசாங்கம் கொடுத்த உதவித் தொகையும் ; (2) குறித்த சில பகுதிகளில் மேற்கொண்ட அதிக வேலைத் திட்டங்கள் ; (3) தொழில் அமைக்குமிடங்களும், தொழில்களைப் பரவலாக அமைத்தலும் ;

மாநிலத் திட்டங்கள் ஆற்றவேண்டிய பணி

34. மக்களின் பொது நலனுடன் நெருங்கிய தொடர்புள்ள பெரும் பாண்மையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மாநிலத் திட்டத்தில் அடங்கியுள்ளன. எனவே, வேளாண்மை, சமுதாய வளர்ச்சி, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், பாசனம், மின்சக்தி, சமூகப் பணிகள் அனைத்தையும் பெரும்பாலும் மாநிலத் திட்டங்களிலேயே சேர்த் துள்ளோம. இத் திட்டங்களை வகுக்கையில், மாநிலம் பயன்படுத்தக்கூடிய ஆதாரங்களைத் தவிர, அடியிற்கண்ட முக்கிய விஷயங்களையும் ஆலோசனை செய்தோம். முதல் திட்டத்தில் முழுதும் நிறைவேற்ற முடியாமல் அடுத்த திட்டத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ள வேலைத் திட்டங்களின் அளவு, உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய சாத்தியக்கூறுகள், மாநிலம் வசம் இருக்கும் நிர்வாகத் தொழில் நுட்பப் பணியாளர், உண்மையில் ஏற்பட்ட வளர்ச்சி வேகம் ஆகியவையே அவ் விஷயங்களாகும். எனினும், வேளாண்மை, பாசனம், மினசக்தி, முதலிய வேலைத்திட்டங்களை வகுக்கையில், பின்னிலேயிலுள்ள பகுதிகளின் விசேஷத் தேவைகளை இயன்ற வரையில் கருத்தில் கொண்டுள்ளோம். முதலிரு திட்டங்களில், மாநிலத் திட்டங்களில் மட்டும் ரூ. 3,800 கோடி மொத்த முதலீடு செய்ய வகை செய்யப்பட்டிருந்தது. இதில் ரூ. 2,200 கோடி மத்திய அரசாங்கத் திடமிருந்து உதவித் தொகையாகக் கிடைக்கும். பற்பல மாநிலத் திட்டங்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் முக்கிய அங்கம் வகித் தன. ஹிராகூட், கோசி, சம்பல், ரீஹண்டு, நாகார்ஜுன சாகர், பக்ரா, நங்கல் போன்ற பல காரியத் திட்டங்களுக்குப் பெருமளவில் முதலீடு செய்துள்ளோம். இந்தத் திட்டங்களை மேற்கொள்ள முடிவு செய்கையில் அவற்றுல் பயன் பெறும் பற்றுக்குறைப் பகுதிகளுக்கு வளமான பொருளா தார நிலேயும் செழிப்பும் ஏற்படுத்துவதே முக்கியக் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. இதையே இங்கு சிறப்பாக வலியுறுத்த வேண்டும். சிறிய பாசனம், அதற்குத் துணையான வேலைத் திட்டங்கள் ஆகியவற்றின் விஷயத்திலும் இது பொருந்தும்.

விசேஷப் பகுதிகளுக்குரிய வேலைத் திட்டங்கள்

35. மாநிலத் திட்டங்களில் ஏற்பாடு செய்துள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களுடனகூட சிரமமான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியுள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்கென விசேஷ வேலைத் திட்டங்களும் அவ்வப்போது

வகுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 1953-54-ம் ஆண்டில், ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், பீஹார், பம்பாய், சென்னை, மைசூர், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலே பற்றுக் குறையுள்ள குறித்த சில பகுதிகளில் நிலையான சில அபிவிருத்தி செய்ய, வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. அப்போது மொத்தம் ரூ. 40 கோடி செலவு ஆயிற்று. இந்த வேலைத் திட்டத்தில் நடுத்தரப் பாசனத் திட்டங்களும், சிறிய பாசனத் திட்டங்களும், வெள்ளக் கட்டுப் பாட்டுக்காகக் கரை கட்டும் திட்டங்களும், நில மீட்புத் திட்டங்களும், சம உயரக் கரைகட்டும் திட்டங்களும் அடங்கியிருந்தன. 1957-ம் ஆண்டில் பல மாநிலங்களில் பற்றுக்குறை நிலை ஏற்பட்டபோது விசேஷ விசாரணை செய்து, அதிக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டோம்.

36. மாநிலங்களின் ஆண்டுத் திட்டச் செலவுகளை நிர்ணயிக்கையில், அதிக அபிவிருத்தி அடைந்திராத பகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப் படுகிறது. விதர்ப்பா, மராத்துவாடா, உத்திரப் பிரதேசத்தின் கிழக்கு மாவட்டங்களும், இதர பின்னிலைப் பகுதிகளும், உத்திரப் பிரதேசத்திலும், பஞ்சாபிலும் உள்ள மலைப்பகுதிகள் ஆகியவை இதற்கு உதாரணங் களாகும். மலைப் பகுதிகளைப் பொறுத்த வரையில், அந்தந்த மாநிலங்கள் உள்ளூர் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிப்பதற்குரிய அமைப்பு ஒன்றை நிறுவியுள்ளன. அவர்களுடைய உதவியுடன் அப் பகுதிகளுக்கு அபி ருத்தித் திட்டங்களை வகுத்து வருகின்றன. இத் திட்டம் வேண்டிய இடத்தில், வேண்டிய வகையில் பயன்படும். இத் திட்டத்தால் இப் பகுதியிலுள்ள நிலைமை சீர்திருந்தும்; அதிக நன்மை ஏற்படும். மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் மலைஜாதியினர் வசித்து வரும் பகுதிகளில் அவர்களது நன்மைக்கென விசேஷத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகள், செய்தித் தொடர்பு, பல காரிய வளர்ச்சி வட்டாரங்கள், காட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள், மாற்றுச் சாகுபடி கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆகியவை இவற்றில் அடங்கும். குறைந்த வருமானமும், வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந் தும் உள்ள பகுதிகள் இந் நாட்டில் எங்கெங்கு உள்ளன என்பதை நிர்ணயிப்பதற்காக உணவு—வேளாண்மை அமைச்சு சின்னாட்களுக்கு முன் மேற்கொண்ட விசாரணையையும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம். பற் பல மாநிலங்களிலும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளின் பிரச்சினைகளை ஆராய்வதிலும் உணவு—வேளாண்மை அமைச்சு ஈடுபட்டுள்ளது.

தொழிலமைக்கும் இடங்களும் தொழில்களைப் பரவலாக அமைத்தலும்

37. ஓரிடத்தில் தொழில் அமைப்பதால் அதிகச் செலவாகுமெனச் சொல்வது, அந்த இடத்தில் அடிப்படை வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுவதாக இரண்டாவது திட்டத்தில் கூறி யுள்ளோம். ஓரிடத்தில் தொழிலை அமைப்பதென்று முடிவு செய்து அடிப்படை வளர்ச்சி ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டால், ஆரம்ப நிலையிலுள்ள கஷ்டங்கள் படிப்படியாக மறைந்து விடும். இந்தக் கண்ணோட்டத்தில்,

தொழில் அபிவிருத்திக்குரிய இடங்கள் பல இருப்பது அவசியம். அர சாங்கத் துறையில் பல வேலைகளை எங்கு ஆரம்பிப்பது என்று ஆலோசனை செய்யும்போதும், தனியார் துறையில் புதிய தொழில் யூனிட்டுகளுக்கு லைசென்ஸ் அளிக்கும் போதும் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்தே வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பிலாய், ரூர்கேலா ஆகிய இடங்களில் உள்ள உருக்கு ஆலைகளும், போப்பாலில் உள்ள கனரக மின்சார யந்திரச் சாலையும் நிபுணர் குழு அடிப்படையிலும் பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டும் அந்தந்த இடங்களில் அமைக்கப்பட்டன என்றாலும், இதுவரை தொழில் துறையில் பின்னிலையில் இருந்த இடங்களிலேயே இத்தகைய தொழில் திட்டங்கள் அமைந்துள்ளன. இவ்வாறுள்ள இதர பகுதிகளும் இப்போது பயனடைந்து வருகின்றன. இங்குள்ள கனி வளங்களை இதுவரை வெட்டி எடுக்கவில்லை, அல்லது வெட்டி எடுக்கும் வேலை இதுவரை சரிவர அபிவிருத்தி செய்யப்படவில்லை. நெய்வேலி பழுப்பு நிலக்கரி, சேலத்திலுள்ள பாக்சைட், ராஜஸ்தானில் ஈயம், துத்தநாகம், செம்பு ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.

38. அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களையும், வாழ்க்கையில் அன்றாடம் பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களையும், மற்றப் பொருளாதார வசதிகளும் நிரம்பியுள்ள இடத்திற்கருகிலே அமைக்க வேண்டுவது முக்கியமென்றாலும், வாழ்க்கையில் அன்றாடம் பயன்படுத்துகிற மிகப் பெரும்பாலான பொருள்களையும் வேலை முறைக்குட்படுத்தும் தொழில்களையும், பிரதேசப் பாணியில் அபிவிருத்தி செய்ய முடியும். துணி, சர்க்கரை ஆகியவையும், சைக்கிள், தையல் யந்திரம், மின்சார மோட்டார், ரேடியோ ரிசீவர்கள் முதலிய பொறியியல் தொழில்களும், அலுமினியக் கட்டிகளிலிருந்து வேலை நிறைவுபெற்ற பொருள்களைத் தயாரித்தல், பிளாஸ்டிக் வார்ப்பட மாவு, வேலை முறையிலுள்ள மற்ற இடைப் பொருள்கள், பெருவாரியான முறையில் மருந்துச் சரக்குகள் ஆகியவை இதற்கு உதாரணங்களாகும். இத்தகைய பொறியியல் தொழில்களுக்கு எல்லா ரயில் நிலையங்களிலும் உருக்கினை ஒரே விலையில் வழங்குவது என்ற முடிவு இரண்டாவது திட்டத்தில் தொழில்களைப் பரவலாக அமைக்க எடுத்துக்கொண்ட முக்கியமான நடவடிக்கையாகும். இந்த நாட்டின் தெற்குப் பகுதியில் சர்க்கரை ஆலைத் தொழில் வளர்ந்துள்ளதென்றால், புதிய யூனிட்டுகளை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் அளிப்பதிலும், வேண்டிய சாதனங்களை இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணி அளிப்பதிலும் பின்பற்றிய கொள்கையே அதற்குக் காரணமாகும். இவ்வாறே, இதுவரை பருத்தித் துணி ஆலைகள் வளர்ந்திராத பகுதிகளில் இத் தொழில் புதிதாக வளர்வதற்கும் ஊக்கமளித்துள்ளோம்.

39. புதிய வேலை முறையை அபிவிருத்தி செய்வதும், புதிய மூலப் பொருள்கள் பயன்படுத்துவதை அபிவிருத்தி செய்வதும், தொழில் பரவுவதற்கு ஓரளவு துணை புரியும். உதாரணமாக, காகிதம் செய்

வதற்குக் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகப் பயன்படுத்த முயற்சி எடுத்துள்ளோம். இதனால் கரும்பு விளைவிக்கும் பகுதிகளில் நாளா வட்டத்தில் காகிதம் உற்பத்தி செய்யும் சாலைகள் ஏற்படும். இதற்கு முன் பெட்ரோலுடன் கலப்பதற்காகத்தான் சாராயம் பயன்பட்டு வந்தது. இப் போது இதை உபயோகித்துச் செயற்கை ரப்பர் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றை உத்திரப் பிரதேசத்தில் அமைத்து வருகிறோம். லோ ஷாப்ட் ஊது உலை முறையை அனுசரித்துத் தேனிரும்பு உற்பத்தி செய்ய தேசீய உலோக ஆய்வுச் சாலையில் முன்னோடித் திட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக நிறைவேறினால், குறைந்த தர நிலக்கரியுள்ள பகுதி களில் எல்லாம் சிறு அளவில் இரும்பு உற்பத்தித் தொழிற்சாலை அமைக்க முடியும்.

40. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் விரவிக் கிடக்கின்றன. மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங் களை அனுசரித்து எல்லாப் பகுதிகளிலும் மத்திய அரசினரும் மாநில அரசாங்கங்களும் பலவகையான உதவி அளித்து வருகிறார்கள். தொழில் பண்ணைகளைப் பரவலாக அமைக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மூன்றாவது திட்டத்தில் கொண்டுள்ள கொள்கை

41. பிரதேசங்களைச் சீரான வகையில் அபிவிருத்தி செய்வதற்காக இரண்டாவது திட்டத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றாவது திட்டத்திலும் தொடர்ந்து நடத்தப்படும். இக் கால அளவில் மாநிலத் திட்டங்கள் அனைத்திற்குமாக ரூ. 3,650 கோடி மொத்தச் செலவு செய்ய வேண்டியிருக்கும். முதலாவது, இரண்டாவது திட்டங்களின்கீழ் மாநிலங் களெல்லாம் சேர்ந்து செய்த செலவுக்கு இது சமமாயிருக்கும். மாநிலங் களுக்கு மத்திய அரசினர் மொத்தம் ரூ. 2,500 கோடி உதவி அளிக்க வேண்டியிருக்கும். மாநில அரசாங்கங்கள் தங்கள் திட்டங்களை வகுக்கை யில், குறைந்த அபிவிருத்தியுள்ள பகுதிகள் விஷயமாய் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும். இப் பகுதிகளுக்கு அனுமதிக்கப்படுகிற வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிர்வாக ஏற்பாடு முதலான பல ஏற்பாடுகளும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

42. இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தோமானால், கிராமப் பகுதிகளுக்கு மிகவும் முக்கியமான இரண்டு வேலைத் திட்டங்கள் மூன்றாவது திட்டத்தில் இருப்பது தெரிய வரும். 6-11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் கல்வி கற்பிக்கும் திட்டம் ஒன்று. இதை இப் புத்தகத்தின் பின்பகுதியிலும் குறிப்பிட்டுள்ளோம். கிராமப் பகுதிகள் அனைத்திற்கும் சில அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதே இரண்டாவது வேலைத் திட்ட மாகும். குடி தண்ணீர் வழங்கல், ஒவ்வொரு கிராமத்தையும் அடுத்துள்ள முக்கிய சாலையுடன் அல்லது ரயில் நிலையத்துடன் இணைத்தல், சமுதாய நிலையமாகவும் பயன்படக்கூடிய முறையில் கிராமப் பள்ளிக்கூடத்துக்குக் கட்டிடம் கட்டுதல் ஆகியவையே அவ் வசதிகளாகும்.

43. மாநில, பிரதேசத் திட்டங்களை உருவாக்கும்போது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விசேஷக் கவனம் செலுத்தப்படவிருக்கிற முக்கிய மான விஷயங்களில் அடியிற்கண்டவையும் ஒரு சிலவாகும்:

(1) **தொழிலமைக்கும் இடங்களும் அபிவிருத்திப் பகுதிகளும்:—** தொழில்களைப் பரவலாக அமைக்கும் முயற்சி மூன்றுவது திட்டத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கிராமப் பகுதிகளில் சிறு தொழில் களையும் குடிசைத் தொழில்களையும் பேணி வளர்ப்பதில் பெருங் கவனம் செலுத்தப்படும். தொழில் பண்ணைகளைச் சிறு நகர்களிலும் ஓரளவு கிராமப் பாங்குள்ள பகுதிகளிலும் அமைக்க வேண்டுமென வலியுறுத்தப் படும். தொழில் துறையில் பின்னடைந்துள்ள வட்டாரங்களில் "தொழில் வளர்ச்சிப் பகுதிகள்" அமைக்கவும் திட்டமிட்டுளளோம். இப் பகுதிகளில் மின்சக்தி, தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் படும். தொழிற்சாலை அமைக்கக்கூடிய இடங்களை உருவாக்கி, தொழிற்சாலை தொடங்க முன் வருபவர்களுக்கு விற்பனை செய்யப்படும் அல்லது நீண்ட காலக் குத்தகைக்கு விடப்படும். பெரும்பாலான தொழில்கள் பரவலாக அமைவதற்கேற்ற வகையில் லைசென்ஸ் கொடுக்கும் கொள்கையைப் பயன் படுத்த வேண்டும்.

(2) **கல்வியும் பயிற்சியும்.—**முன்னேற்றமடையாத பகுதிகளை அபி விருத்தி செய்ய வேண்டுமானுல், தொழில் நுட்பப் பயிற்சி வசதிகள் பெருக வேண்டும். ஆனுல், இப் பகுதிகளில் அடிப்படைக் கல்வியே போதிய அளவில் பரவவில்லை. எனவே, ஆரம்ப நிலையில் கட்டாய இலவசக் கல்வி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முன்னேற்ற மடையாத பகுதிகளில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள ஆதாரங்களை அவை செம்மையாகப் பயன்படுத்திக்கொள்வதன் பொருட்டுப் போதிய நிதி வசதி வழங்க வேண்டும். தொழிலியல் நிபுணர்கள், என்ஜினீர்கள், மருத்துவர்கள், வேளாண்மை நிபுணர்கள் இவர்களைப் போன்ற மற்றவர்கள் ஆகியவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வி அளிக்கும் வசதி நாடெங்கிலும் இருக்க வேண்டுமென்பதை ஏற்கெனவே அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். போதிய அளவு அபிவிருத்தியடையாத பகுதி களில் புதிய தொழில் நிறுவனங்களை அமைக்கையில் அப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளை, மாநில அரசாங்கங்கள் தொழில் நுட்ப, வேலை, இடைநிலைக் கல்வித் திட்டங்களை வகுக்கையில் கருத்தில் கொள்ள வேண்டும்.

(3) **அபிவிருத்தி செய்யும்போது ஒன்றுக்கொன்று உதவியாயுள்ள வேலைத் திட்டங்கள்.—**பின்னடைந்துள்ள பகுதிகளில் அமைக்கப்படுகிற பெரிய தொழில் நிறுவனங்கள் போன்ற வேலைத் திட்டங்கள் அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்கையில் பெரும் உதவி செய்யுமாறு பார்த்துக் கொள்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அத் திட்டங்களோடு தொடர்புடைய, அவற்றுக்கு உதவியாயுள்ள துணைத் திட்டங்களை மேற்கொண்டால் அப் பகுதியிலுள்ள மக்களுக்கு இப்பெரு திட்டங்களால் பெரும்பயன் ஏற்படும். அப் பெருந் திட்டம் அப் பகுதி

முழுவதையும் அபிவிருத்தி செய்வதற்கு அடிப்படையாக அமைய வேண்டும். உதாரணமாக, புதிய பாசன வேலைத் திட்டம் ஒன்றை எடுத்துக் கொண்டால், வேளாண்மை, தோட்டக்கலை, விற்பனை நிலையங்கள், ஆகிய வற்றை அபிவிருத்தி செய்கிற பல திட்டங்களையும் வேலைமுறைத் தொழில் களையும் மற்ற தொழில்களையும் அபிவிருத்தி செய்ய முடியும். அவ் வண்ணமே ஓரிடத்தில் உருக்குத் தொழிற்சாலை அமைத்தால் அதைச் சுற்றிலும் தொழிற் பண்ணைகளை அமைக்க முடியும். அதற்குத் துணை யான இதர நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்ய முடியும். தொழிற் பண்ணைகளில் பொறியியல் வகையைச் சேர்ந்த நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள், பள்ளிக்கூடங்கள், தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை அமைக்கலாம்.

(4) தொழிலியல் முன்னேற்றத்திலிருந்து விளையும் பயன்கள்.—தொழிலியல் விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாக ஏற்படக்கூடிய பயன்களைக் கருத்தில் கொண்டு, அபிவிருத்தி செய்வதற்குப் பல்வேறு பகுதிகளின் உள்ளடங்கு ஆற்றலை ஆராய வேண்டும். உதாரணமாக, சில பகுதிகளில் நிலக்கரியும் எண்ணெயும் கிடைக்காததால் அவற்றை இது வரை அபிவிருத்தி செய்ய முடியாமலிருந்தது. நீர் மின்சாரமும் அணு ஆற்றலும் கிடைக்கும்போது இந்தக் குறை தீர்ந்து போய் இப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய முடியும். அவ் வண்ணமே சில பகுதிகள் வெகு தொலைவில் இருந்தமையால் அவைகளை அபிவிருத்தி செய்ய முடியாம லிருந்தது. இப்போது போக்குவரத்து வசதி அபிவிருத்தி அடைந்துள்ளமை யால் அப் பகுதிகளும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

(5) தொழிலாளர் போக்குவரத்து.—நாட்டின் சில பகுதிகளில் தொழி லாளர்கள் தாராளமாக எங்கு வேண்டுமானாலும் போகக் கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக, பீகார் தொழிலாளிகள் அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களில் பணி புரிகின்றனர். ராஜஸ்தானத் தொழிலாளிகள் பஞ்சா பிலும் மற்ற இடங்களிலும் சாலை அமைப்பு வேலைகளிலும் பாசனத் திட்டங் களிலும் வேலையிலமர்ந்துள்ளனர். மத்திய அரசாங்கததிலும் மாநிலங் களிலும் தொழிலாளர்களை வேண்டியவாறு பயன்படுத்திக் கொள்வதற் கென தனிப்பட்ட நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் அதிக முன்னேற்ற மடைந்திராத பகுதிகளுக்கு வேண்டிய தொழிலாளர்கள் செல்வதற்கு உதவி செய்கிறது. எனினும், கைத்திறனற்ற தொழிலாளர்கள், இந்த நாட்டிலே மக்கள் தொகை மிகுந்த பகுதிகளிலிருந்து மக்கள் தொகை குறைந்த பகுதிகளுக்குப் பெருமளவில் செல்லக்கூடிய வாய்ப்பு குறை வாகவே இருக்கிறது. கைத்திறனுள்ள, ஓரளவு கைத்திறனுள்ள தொழி லாளிகள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அதிகச் சிரமமின்றிச் சென்று வேலை செய்ய முடியும். அவர்கள் போகுமிடங்களில் உள்ளூர் பொருளாதாரம் விரிவாக அபிவிருத்தியடையும்போது அவர்களுக்கு எளிதில் வேலை கிடைக்கும். எனவே, மக்கள் தொகை நெருக்கம் மிகுந் துள்ள பகுதிகளில் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டத்தை விரிவுபடுத்தி அங்கு பயிற்சி பெற்ற வேலையாள்களுக்கு மற்ற இடங்களில் வேலை

வாய்ப்பு கிடைக்கச் செய்ய உத்தேசித்துள்ளோம். அப் பகுதிகளுக்குத் திட்டம் வகுக்கையில் மாநில அரசாங்கங்கள் இந்த அம்சத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(6) **தரமான நிர்வாகம்.**—தரமான நிர்வாகமிருப்பதும், புதிதாகத் தொழில் தொடங்குவதற்குத் திறமையுள்ளவர்களும், தொழில் நுட்ப அறிவும் பல்வேறு பகுதிகளில் முக்கியமாகும். இவை ஒவ்வொரு பகுதியிலும் இருந்து தீர வேண்டியவைகளாகும். இவை விஷயமாய் போதிய அளவு கவனம் செலுத்தவேண்டும்.

44. **சீரான பொருளாதார வளர்ச்சி என்றல்:** அபிவிருத்தி செய்வதற்கு ஒவ்வொரு பகுதியிலுமுள்ள உள்ளடங்கு ஆற்றலை நன்கு பயன் படுத்திக்கொள்ளும் விதத்தில் முதலீட்டு முறை அமைந்திருக்க வேண்டும். வாழ்க்கைத்தரத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள், முக்கியமாக கல்வி, தண்ணீர் வசதி, சாலை வசதி போன்றவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும். முன்னேற்றமடைந்திராத பொருளாதாரத்தில் அபிவிருத்தியின் ஆரம்ப நிலைகளில் இந்த நோக்கம் மெதுவாகத் தான் நிறைவேறும். ஏனெனில், அத்தகைய பொருளாதாரத்தில் கிடைக் கக்கூடிய ஆதாரங்களையெல்லாம் முதற்கண் தேசீய வருமானத்தை முடிந்த அளவு அதிகப்படுத்துவதற்கே பயன்படுத்த வேண்டியிருக்கும். எனினும், ஆதாரங்கள் பெருகி, அபிவிருத்தித் திட்டங்கள் விரிவடைந்து பலதரப்பட்ட நிலையில் அபிவிருத்தி ஏற்படும்போது, பெரும் பகுதியில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு வழி உண்டாகும். எல்லாப் பகுதிகளிலும் வாழ்க்கைத் தரம் உயரும். பொருளாதாரம் இவ்வளவு விரைவாக வளர்ந்து வரும் நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற வீதத்தை அனுசரித்து சீரான வளர்ச்சிப் பிரச்சினையை ஆராய வேண்டும். இத்தகைய கொள்கையைக் கையாண்டால், நீண்ட கால அளவில்தான் பயன் விளையுமென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

பிரதேச அபிவிருத்தி ஆராய்ச்சிகள்.

45. சீரான நிலையில் பிரதேச அபிவிருத்தியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காகப் பற்பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி வீதங்களைக் குறியீடுகள் கணக்கில் நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகும். மாநில வளர்ச்சியைக் காட்ட பற்பல குறியீடுகள் இருக்க வேண்டுமென உத்தேசித்துள்ளோம். வேளாண்மை அபிவிருத்தி, தொழிற்துறை உற்பத்தி, முதலீடு, வேலையின்மை, பாசனம் பெற்ற பகுதி, புதிதாகப் போடப்பட்ட சாலைகளின் அளவு, ஆரம்ப, இடை நிலைக் கல்வி, எந்தெந்தத் தொழிலில் எவ்வளவு மக்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்ற புள்ளி விவரம் ஆகியவை இவற்றில் அடங்கும். மாநில வருமான மதிப்பீட்டு ஆராய்ச்சியைப் பற்பல மாநிலங்களிலுள்ள புள்ளி விவரத் துறைகள் மேற் கொண்டுள்ளன. பற்பல மாநிலங்களுக்கும் ஒப்பு மதிப்பீடுகளை எடுத்துக் காட்டக்கூடிய நிலை இன்னும் ஏற்படவில்லை. இத் துறையில் செய்யப்பட் டுள்ள வேலையை தொழில் நுட்பப் பணித் தொகுதி ஒன்று ஆராய்ந்து

வருகிறது. இந்த ஆராய்ச்சி விஷயமாய் முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியம் மாநில நிலையில் தேவையுள்ள அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதுதான்.

46. குறித்த குறியீடுகள் விஷயமாகப் புள்ளி விவரம் சேகரிப்பது பயனுள்ளதாயிருக்குமென்றாலும், பல்வேறு பகுதிகளின் பிரச்சினைகளை இனங் கண்டு கொள்வதற்காகவும் அவற்றின் தேவைகளையும் உள்ளடங்கு ஆற்றல்களையும் மதிப்பிடுவதற்காகவும் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டியது அவசியமாகும். இந்திய நில உட்பொருள் ஆராய்ச்சிக் கழகம், சுரங்க ஆராய்ச்சி நிலையம், எண்ணெய்-இயற்கை வாயு ஆராய்ச்சிக் கழகம், தண்ணீர் மின்சக்தி ஆராய்ச்சி மத்தியக் கழகம் போன்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் பல்வேறு துறைகளில் தொழில் நுட்ப ஆராய்ச்சி செய்து வருகின்றன. பெரும்பாலான மாநிலங்களிலும் யூனியன் நேரடி ஆட்சிப் பரப்பிலும் தொழில் நுட்பப் பொருளாதார ஆராய்ச்சிகளை, செயல் முறைப் பொருளாதார ஆராய்ச்சி தேசீயக் கழகம் மேற்கொண்டுள்ளது. இது கண்டறிந்த உண்மைகள் அடுத்த ஆண்டில் வெளியாகும். மைசூரிலும், கேரளத்திலும் திட்டக் கமிஷன் இந்தியப் புள்ளி விவர நிறுவனத்தின் மூலம் பிரதேச ஆராய்ச்சிகளையும் தொடங்கிவைத்துள்ளது. பல்வேறு அபிவிருத்தி நிலைகளில் கிராமப் பகுதிகளின் பிரச்சினைகளைக் குறித்து ஏராளமான தகவல்கள் பெஞ்ச்மார்க் அளவீடு (**Bench Mark Survey**) மூலமாகவும் திட்டவேலை மதிப்பீட்டு நிறுவன ஆராய்ச்சி மூலமாகவும் கிடைத்துள்ளன. ஆராய்ச்சி வேலைத் திட்டக் குழுவினர் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நகர ஆராய்ச்சிகளிலிருந்தும் மற்ற ஆராய்ச்சிகளிலிருந்தும் நகர வளர்ச்சிப் பிரச்சினைகளைக் குறித்தும் பிரதேச வளர்ச்சிப் பிரச்சினைகளைக் குறித்தும் பயனுள்ள புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன. இந்த ஆராய்ச்சிகளினால் பிரதேச அபிவிருத்திப் பிரச்சினைகளை எந்த அளவு தீர்க்க முடியுமெனக் கண்டு பிடிப்பதற்காக அடுத்த சில ஆண்டுகளில் இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளியிட உத்தேசித்துள்ளோம்.

47. மேலும் சீரான நிலையில் பிரதேச அபிவிருத்தி பெற வேண்டுமானால், பல்வேறு பகுதிகளில் பொருளாதார நிலைகளையும் வளர்ச்சி வீதங்களையும் முன்னேற்றமடையாத பகுதிகளுக்குரிய வேலைத் திட்டங்களையும் தொடர்ந்து அளவிட்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும். முன்னேற்றம் குன்றிய பகுதிகள் எவை என்பதையும் நிர்ணயிக்க வேண்டும். அவற்றின் ஆதாரங்களை அளவிட்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவற்றின் அபிவிருத்தி விஷயங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். எனவே, இந்த நோக்கத்துடன் மாநில அரசாங்கங்கள் மற்றவர்கள் ஆகியவர்களுடைய கூட்டுறவுடன் விசேஷச் செயற் குழு ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளோம். இக் குழு பிரதேச வளர்ச்சியின் அம்சங்களை ஆராய்ச்சி செய்யும். அந்தந்த இடங்களிலுள்ள ஆதாரங்களையும் குறியீட்டு விஷயங்களையும் ஆராயும். நாட்டின் பற்பல பகுதிகளையும் சீரான நிலையில் அபிவிருத்தி செய்வதற்காக இப்போதுள்ள வேலைத் திட்டங்களை எந்த வகையில் மாற்றியமைக்க வேண்டுமென்பதைக் குறித்தும் மேற்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்தும் இக் குழு ஆலோசனை கூறும்.

4. வெளிநாட்டு வாணிபம்.

48. கடந்த சில ஆண்டுகளாக இந்திய அபிவிருத்தி முயற்சி துரிதகதியில் இயங்கி வருவதால், இறக்குமதி பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. இரண்டாவது திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1,050 கோடி மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 610 கோடியாக இருந்தது. எனவே, ஏற்றுமதி அதிகரிக்கப் பெரு முயற்சி செய்ய வேண்டுமென்பது வெளிப்படையாகும்.

49. முதலிரண்டுத் திட்டக் கால அளவில் பல துறைகளில் உற்பத்தி அதிகரித்துள்ளதால், வெளிநாட்டு இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டுப் பொருள்களையே ஓரளவு பயன்படுத்த முடிந்தது. எனினும், வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பிலே மூலப் பொருள்கள், இரும்பு கலவாத உலோகங்கள், மண்ணெண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள், தொழில் நுட்பச் சாதனங்கள் ஆகியவற்றின் இறக்குமதி அதிகரிக்கத் தான் செய்யும். சில துறைகளில் உள்நாட்டுப் பொருள் உற்பத்தி அதிகரிப்பதால், அப் பொருள்களின் இறக்குமதி குறையுமென்றாலும் வேறு சில பொருள்களின் இறக்குமதி அதிகரிக்கிறது. மொத்தமாகப் பார்க்கப் போனுல் இறக்குமதி குறையாது. அது அதிகரிக்கத்தான் செய்யும். மூலதனப் பொருள்களையும் சாதனங்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய திறமையை அதிகரிப்பது, அதே சமயத்தில் இந்த நாட்டிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடிய திறமையை அதிகரிப்பது ஆகியவற்றின் அடிப்படையில்தான் நமது வெளிநாட்டு நிதிநிலை சீர்பெற முடியும்.

50. அடுத்து வரும் ஆண்டுகளில் ஏற்றுமதியைப் பெருமளவுக்கு அதிகப்படுத்தக்கூடிய வகையில் வாணிகக் கொள்கை அமைந்திருக்க வேண்டும். இறக்குமதியை இயன்ற அளவு கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியமாகும். இறக்குமதித் தேவைக்கும் ஏற்றுமதி அளவுக்குமுள்ள இடையீட்டை உடனடியாகச் சரி செய்ய முடியாது. படிப்படியாகத்தான் இந்த நிலையைச் சீர்செய்து இறக்குமதிக்கேற்ற வகையில் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும். பத்தாண்டுக்கால அளவுக்குள் நமது வெளிநாட்டு நிதி நிலையைச் சீர்படுத்துவதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்றுமதி அதிகரிப்பு.

51. இயன்ற அளவு ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதியைக் குறைப்பதன் அவசியத்தை இரண்டாவது திட்டத்தில் வலியுறுத்தினேம். கொரியா யுத்த காலத்தில் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்தக் கட்டுப்பாடுகளில் பெரும்பாலானவை இப்போது நீக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருள்களைப் பங்கு முறைக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துள்ளோம். ஏற்றுமதித் தீர்வைகள் அனைத்தையும் நீக்கியுள்ளோம் அல்லது ஓரளவு குறைத்துள்ளோம்.

ஏற்றுமதிப் பொருள்களைத் தயாரிப்பதில் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்கள் மீது செலுத்திய சுங்கத் தீர்வைகளைத் திரும்பப் பெறுவதற்குரிய நடைமுறைகளை எளிதாக்கியுள்ளோம். ஏற்றுமதிக்கான நிறைவுபெற்ற பொருள்களைத் தயாரிப்பதற்கு வேண்டியுள்ளவற்றை இறக்குமதி செய்வதற்குத் தாராளமாக லைசென்ஸ் வழங்கியுள்ளோம். அந்நியச் செலாவணி பற்றுக்குறையிருந்த போதிலும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக இப்படிச் செய்துள்ளோம். ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்கள் சிறப்பாக வழங்கியுள்ளோம். ஏற்றுமதிப் பொருள்களை ரயில் மூலமாகவும் கப்பல் மூலமாகவும் அனுப்பிவைக்க விசேஷ வசதிகள் செய்து தருகிறோம்.

52. நிறுவன அமைப்புத் துறையில், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக 11 கழகங்கள் அமைத்துள்ளோம். வெளிநாடுகளில் மார்க்கெட் தேடுவதற்கும், விற்பனை உத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும் வெளிநாட்டுத் தேவைகளை அனுசரித்துப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதே இவைகளின் அலுவலாகும். வார்னிஷுக்கு வேண்டிய அரக்கினையும், மைக்காவையும் ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும் கழகங்கள் அந்தந்தத் துறைகளில் ஏற்றுமதியாளர் சங்கங்களை நிறுவுதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம். தேயிலை போர்டு (Tea Board), காப்பி போர்டு, கயிறுத் தொழில் போர்டு போன்ற போர்டுகள் ஏற்றுமதியை அதிகரிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தியுள்ளன. கைத்தறித் துணியையும் கைப்பணிப் பொருள்களையும் ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்காகத் தனித்தனி நிறுவனங்கள் அமைத்துள்ளோம்.

53. பல நாடுகளுக்கும் பல பொருள்களையும் ஏற்றுமதி செய்வதற்காக 25 நாடுகளுடன் வாணிப உடன்படிக்கை செய்து கொண்டோம். வெளிநாடுகளில் நமது வாணிபப் பிரதிநிதிகள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். உலகச் சந்தைகளிலும் பொருட்காட்சிகளிலும் இப்போது இந்தியா பெருமளவில் பங்கு கொண்டு வருகிறது. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக நெறியாளர் நிறுவனம் ஒன்று அமைத்துள்ளோம். இந்த நிறுவனத்தைச் சேர்ந்த வெளித்துறை அதிகாரிகள் பல துறைமுகங்களில் இருந்து கொண்டு, ஏற்றுமதியாளர்களுக்குப் பல தரப்பட்ட பணிபுரிந்து வருகின்றனர். ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். அரசாங்கத்துக்கும் வணிகர்களுக்கும் முறையான தொடர்பு இருப்பதை வசதிப்படுத்துவதற்காக உற்பத்தியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் கொண்ட ஆலோசனைச் சபைகள் பல ஏற்படுத்தினோம். ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குரிய ஆலோசனைக் கழகத்தின் நிலையான குழு குறித்த காலத்துக்கு ஒரு முறை சபை கூடிச் செயலாற்றி வருகிறது.

54 கடன் அடிப்படையில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காகவும் புதிய சந்தைகள் பிடிப்பதற்காகவும் ஏற்றுமதி நஷ்ட இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஒன்றை 1957-ம் ஆண்டில் ஏற்படுத்தினோம். இரண்டாவது

திட்டக் கால அளவில் வெளிநாட்டு வணிகத் துறையில் அரசாங்க வணிகக் கார்ப்பொரேஷன் நிறுவப்பட்டது முக்கியமான அபிவிருத்தியாகும். ஏற் கெனவேயுள்ள வாணிப நிறுவனங்களின் வேலையில் இவை துணைபுரியும். வாணிப இடர்பாடுகளைத் தீர்க்கும். விரிவான அடிப்படையில் ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும். நீண்ட கால அளவில் இரும்புக் கனி ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய உடன் படிக்கை இக் கார்ப்பொரேஷன் முயற்சியால் தான் ஏற்பட்டது. மூன்ருவது திட்டத்திலும் அதன் பின்னரும் இரும்புக்கனி ஏற்றுமதியின் மூலம் ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கும். இந்த உடன்படிக்கை யைத் தொடர்ந்து சுரங்கத் தொழிலிலும், ரயில்வே போக்குவரத்து வசதி யிலும், துறைமுக வசதிகளிலும் கணிசமாக முதலீடு செய்ய முடிவு செய்துள்ளோம்.

55. இந்த நடவடிக்கைகளின பயன் நீண்ட கால அளவில் கிடைக்கு மென்ருலும், ஏற்றுமதி வருமானம் ஓரளவுக்கு அதிகரித்துள்ளது. இரண்டாவது திட்டக் கால அளவில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 588 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுமென மதிப்பிட்டிருக் கையில், இரண்டாவது திட்டக் கால அளவின் முதல் நான்காண்டுகளில் ஆண்டுதோறும் ரூ. 610 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1957–58-ம் ஆண்டில் அமெரிக்காவிலும், ஐரோப்பா விலும் பொருளாதார மந்தம் ஏற்படாதிருந்தால், நமது ஏற்றுமதி இன்னும் அதிகரித்திருக்கும்.

மூன்ருவது திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்.

56. இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை இயன்ற அளவுக்கு அதிகரிப்பது மூன்ருவது திட்டக் கால அளவில் நமது வெளிநாட்டு வாணிபக் கொள்கையின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும். ஆதாரங்கள் பற்றிய அத்தியாயத்தில் 1956–57 முதல் 1958–59 வரையில் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 602 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்திருக்க, மூன்ருவது திட்டக் கால அளவில் இது ரூ. 690 கோடியாக உயரும். எனவே, இக்கால அளவில் மொத்தமாக ரூ. 3,450 கோடி மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும். மூன்ருவது திட்டத்தில் சொல்லியுள்ளவாறு பொருள் உற்பத்தி அதிகரித்து, பொருத்தமான வரி விதிப்புக் கொள்கையும் நிதிக் கொள்கையும் மேற்கொண்டு, ஏற்று மதியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால், இங்கு மதிப்பிட்டுள்ளதைவிட அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியும்.

57. இந்தியாவின் வழக்கமான ஏற்றுமதிப் பொருள்களை அதிக அள வில் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, இந்தியத் தேயிலை விற்பனையை எடுத்துக் கொண்டால், அத் தேயிலையைப் பற்றி அதிகம் தெரிந்திராத பகுதிகளில் அல்லது சமீபத்தில்தான் இத் தேயிலையை வாங்கத் தொடங்கிய பகுதிகளில் இதன் விற்பனையைக் கணிசமாக அதி கரிக்க முடியும். இந்தியக் காப்பிக் கொட்டைக்கு வெளிநாடுகளில் நல்ல

கிராக்கியிருக்கிறது. வேண்டிய அளவு நாம் வழங்க முடியவில்லை. உட்கொள்ளத்தக்க, உட்கொள்ளத்தகாத தாவர எண்ணெய் வகைகளை இப்போதுள்ளதைக் காட்டிலும் அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியும். இந்தியப் பருப்பு வகைகள் அண்டை நாடுகளில் விரும்பி வாங்கப்படுகின்றன. பழங்கள், காய் கறிகள் ஆகியவற்றின் வியாபாரத்தையும் பெருக்க முடியும். குட்டை இழைப் பருத்தி போதிய அளவு கிடைத்தால் அதன் ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும். சுங்கானில் போடக்கூடிய இந்தியப் புகையிலையை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்ய முடியும். ஏலக்காய், லவங்கம் போன்ற வாசனைப் பொருள்களை வெளி நாடுகளில் அதிகம் விற்பனை செய்ய முடியும்.

58. இப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்தால்தான், அதிக ஏற்றுமதி செய்ய முடியும். எனவே, மூன்றாவது திட்டத்தில் வேளாண்மை, தொடர்பான துறைகள் ஆகியவற்றில் காட்டியுள்ள உற்பத்தி அளவில் உள்நாட்டுத் தேவைகள் மட்டுமன்றி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களும் அடங்கும். பொருள்களை அப்படியே ஏற்றுமதி செய்வதன் அல்லது அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட சாமான்களை ஏற்றுமதி செய்வதன சாத்தியக் கூறுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, மூன்றாவது திட்டக் காலத்தில் கச்சா சணல் (65 லட்சம் பேல்) தேயிலை (85 கோடி ராத்தல்), கச்சாப் பருத்தி (72 லட்சம் பேல்), காப்பி (80,000 டன்), தாவர எண்ணெய் வித்துக்கள (92–95 லட்சம் டன்), புகையிலை (3,25,000 டன்), மிளகு (30,000 டன்), அரக்கு (62,000 டன்) உற்பத்தி செய்வதென இலக்குகள் அமைத்துள்ளோம். எனவே, உணவு உற்பத்தி அதிகரிப்பைப் போலவே வாணிபப் பயிர் உற்பத்தி அதிகரிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இரண்டாவது திட்டக் காலத்தில் எதிர்பார்த்ததைவிட கச்சாப் பருத்தி, தாவர எண்ணெய் வகைகள் ஏற்றுமதி குறைவாய் இருந்தது. உற்பத்திக் குறைவும் உள் நாட்டுத் தேவை அதிகரிப்புமே இதற்குக் காரணங்களாகும். மூன்றாவது திட்டக் காலத்தில் இப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும்; இந்த அடிப்படையிலேயே உற்பத்தி இலக்குகளை நிச்சயித்துள்ளோம். எனினும், இப் பொருள்களின் உற்பத்தி தற்காலிகமாகக் குறைந்துவிட்டாலுங்கூட உள் நாட்டுத் தேவைகளைக் குறைத்துக்கொண்டு ஏற்றுமதியை அதே அளவில் வைத்திருக்கப் பெரு முயற்சி செய்ய வேண்டும்.

59. மீன் உற்பத்தியின் இலக்கு 18 லட்சம் டன்னாகும். கச்சாக் கம்பளி இலக்கு 9 கோடி ராத்தலாகும். ஆடு மாடுகளின் தோல் ஏற்றுமதி விஷயமாக, குறிப்பாகப் பதப்படுத்தப்பட்ட தோல் ஏற்றுமதி விஷயமாக, கால் நடைகளைப் பயன்படுத்துவதில் விஞ்ஞான முறையை மேற்கொண்டால் ஏற்றுமதி கணிசமாக அதிகரிக்கும். பதனிடுவதற்கும் வேலை நிறைவு செய்வதற்கும் அதிக அளவு கச்சாத் தோல் கிடைப்பதுடன், இறைச்சி, எலும்பு, கூடுகள், கொம்புகள், குளம்புகள் போன்ற பிராணிப் பொருள்களை அடிப்படையாக வைத்து சிறு அளவு ஏற்றுமதித் தொழில்களை வளர்க்க முடியும்.

60. 1959–60-ம் ஆண்டில் 30 லட்சம் டன் இரும்புக் கனி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. சுரங்கம் வெட்டி எடுப்பதற்கும், ரயிலிலும் கப்பலிலும் அனுப்பி வைப்பதற்கும் வசதிகள் செய்ய திட்டத்தில் ஏற்பாடு செய்துள்ளபடியால், இந்த ஏற்றுமதி அளவு மூன்றாவது திட்டக் கால முடிவில் ஒரு கோடி டன்னாக உயர முடியும். தேனிரும்பு, இரும்பு கலவா மாங்கனீயம், சுத்தப்படுத்தப்பட்ட மைகா ஆகியவற்றின ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும்.

61. தயாரிப்புப் பொருள்களில் சணல் பொருளகளும் பருத்தித் துணி வகைகளும் பெருமளவில் அந்நியச் செலாவணி ஈட்டுகின்றன. மூலப் பொருள்களைத் தாராளமாகக் கிடைக்கச் செய்து, இத் தொழில்களுககு புத்துயிர் ஊட்டி, அவற்றை நவீன மயமாக்கினால், இப் பொருள்களின் தயாரிப்புச் செலவு குறைவதுடன அவற்றின் தரம் உயர்ந்து, ஏற்றுமதியும் கணிசமாக அதிகரிக்கும். பருத்தி ஆடைகளின் விஷயத்தில் காரீகத்தை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, வேலை நிறைவு பெற்ற துணிகளையும், தைத்த ஆடைகளையும் அதிக அளவில் ஏற்றுமதி செய்வது அவசியமாகும்.

62. வழக்கமான ஏற்றுமதியை அதிகரிப்பதுடன் புதிய பொருள்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும். பொறியியல் (எனஜினீரிங்) பொருள்கள், ரசாயனப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் ஆகிய புதிய பொருள்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும். பொறியியல் பொருள்களில், வேளாண்மைப் பொருள்கள், கட்டிட இரும்புச் சாமான்கள், டீசல் என்ஜின்கள், மின்சார மோட்டார்கள், பம்பு செட்டுகள், தையல் யந்திரகள், குளிர் அறைச் சாதனம், குளிர் பொருள் சாதனம், போன்ற வீட்டு மின்சார சாதனங்கள் ஆகியவற்றைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இப்போது இத்தகைய ஏற்றுமதி ஓரளவே உள்ளது. ஆனால், இந்த ஏற்றுமதியைப் பெருமளவு அதிகரிக்க முடியும். மொத்த ஏற்றுமதி அளவில் இப் பொருள்களின் வீதாசாரம் அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக அதிகரிக்க வேண்டும். இப்போதுள்ளதை விட மூன்றாவது திட்டக் கால அளவில் இவற்றின் ஏற்றுமதி ஐந்தாறு மடங்கு பெருகுமென எதிர்பார்க்கிறோம்.

63. ஏற்றுமதியைக் கணிசமாக அதிகரிப்பதற்கு அதிக அளவில் பொருள்களை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது. மற்ற நாட்டுப் பொருள்களை விட நம் நாட்டுப் பொருள்களின் விலை குறைவாயிருந்தால் தான் நம் நாட்டு ஏற்றுமதி அதிகரிக்கும். உற்பத்திச் செலவு விஷயமாகவும் போதிய கவனம் செலுத்த வேண்டும். இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் மற்ற நாட்டுப் பொருள்களை விட விலை குறைவாயிருக்கும் விதத்தில் இந்த நாட்டு வரி விதிப்புக் கொள்கையையும் நிதிக் கொள்கையையும் அமைத்துக்கொள்ள வேண்டும். உள்நாட்டில் பயன்படுத்தும் பொருள்களுக்கு கலால் வரி விதிப்பது ஏற்றுமதி அதிகரிப்புக்குத் துணை செய்யும். நமது ஏற்றுமதிக்கு வெளிநாடுகளிலுள்ள கஷ்டங்களை நீண்டகாலக்

கண்ணோட்டத்திலும் சிறுகாலக் கண்ணோட்டத்திலும் ஆராய்ச்சி செய்து, அந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய, தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தாரே வாணிபம் செய்யும் வாய்ப்பைக் கவனமுடன் ஆராய வேண்டும்.

64. ஒரு நாடு வளர்ச்சியுறும் ஆரம்ப நிலையில் அது இதுவரையில் இறக்குமதி செய்து வந்த பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயலுவது இயல்பாகும். உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது; ஏற்றுமதி அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் திட்டமிட வேண்டும் என்பது கடந்த சில ஆண்டு அனுபவத்திலிருந்து தெரியவருகிறது. இதற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இப்போதுள்ள மார்க்கெட்டுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். புதிய மார்க்கெட்டுகளைத் தேடிப் பிடிக்க வேண்டும். வளர்ச்சி அடைந்துவரும் நாடு உலக வாணிபம் வளர வளர அதனால் ஓரளவு பயன் பெறும். ஆனால், இது போதாது. புதிதாக வளர்ந்துவரும் நாடுகளில் ஏற்றுமதி அதிகரிப்பதற்குச் சில கஷ்டங்கள் உள்ளன. தொழில் துறையில் அதிக முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் தாராளமான வாணிபக் கொள்கையை மேற்கொண்ட போதிலும், இந்த நிலை நீடித்து வருகிறது. பற்பல நாடு களும் இதுவரை பயன்படுத்தாத ஆதாரங்களைப் பயன்படுத்தி அபி விருத்தி செய்ய ஆரம்பித்தவுடன், எந்த நாடுகளுக்கு எந்தப் பொருள் களை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்கிற நிலை மாறத்தான் செய்யும். இரண்டாவது உலகப் போருக்குப் பின் சர்வதேச வியாபார முறையும் அமைப்பும் மாறியுள்ளன. புதிய வியாபாரத் தொகுதிகள் ஏற்பட்டுள்ளன அல்லது ஏற்பட்டு வருகின்றன. இவை தங்களுக்குள்ளேயே வியாபாரம் செய்துகொண்டு வியாபாரத் துறையில் குறுகிய மனப்பான்மையுடன் இருக்கக் கூடாதென்று வளர்ந்து வரும் நாடுகள் விரும்பும். அடுத்து வரும் ஆண்டுகளில் இந்தியா காமென்வெல்த் நாடுகளுக்கு மட்டுமன்றி மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். கிழக்கத்திய நாடுகளுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும். சமீப ஆண்டுகளில் இந்தியாவின் வர்த்தகத் தொடர்புகள் அரசாங்க வாணிக நாடுகளுடன் வலுப் பெற்றுள்ளன. இந்த உறவு முறை இரு சாரருக்கும் பயன் தரத்தக்க வகையிலுள்ளது. இதனால் வாணிக வளர்ச் சிக்கு அதிக வாய்ப்பு ஏற்படுமென எதிர்பார்க்கிறோம். வாணிகக் கொள் கைகளை உருவாக்கும்போது ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள அண்டை நாடுகளுடனும் லத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் நெருங்கிய வாணிக உறவு ஏற்படுவதன் சாத்தியக் கூறுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

65. நமது வெளிநாட்டு நிதிநிலை சீர்பட வேண்டுமானால், ஏற்று மதியை அதிகரிக்கத் தொடர்ச்சியாகவும், விடாப்பிடியாகவும் முயற்சி செய்ய வேண்டும். இது வாணிகக் கொள்கை மட்டுமன்று; முதலீட்டுக் கொள்கை, விலைவாசிக் கொள்கை, வரி விதிப்புக் கொள்கை ஆகியவற்றுடனும்

தொடர்பு கொண்டுள்ளதாகும். உள்நாட்டுக்கு வேண்டிய தேவைப் பொருள்கள் குறைவுபட்ட போதிலும், வெளிநாட்டு ஏற்றுமதியை அதிகரிப்பதே உடனடிக் கொள்கையாக இருக்க வேண்டும். நீண்ட காலக் கண்ணோட்டத்தில் பார்ப்போமானால், அடித்தளத்திலேயே பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். மூலதனப் பொருள்களையும் யந்திர நிர்மாணப் பொருள்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்போது தான் நாம் திட்டமிடக்கூடிய பெருமளவு முதலீட்டுக்கு உள்நாட்டிலேயே ஆதாரம் கிடைக்கும். ஏற்றுமதிக்காக உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். புதிய மார்க்கெட்டுகளைத் தேடுவதற்குத் தகுந்த நிறுவனங்களை அமைக்க வேண்டும். எனவே, வேளாண்மைத் தொழிலையும் மற்றைய யந்திரத் தொழிலையும், உள்நாட்டுத் தேவைகளை மட்டும் கருதிப் பார்க்காமல், வெளி நாட்டு ஏற்றுமதியையும் அவசரத் தேவைகளையும் உத்தேசித்து அபிவிருத்தி செய்யவேண்டும்.

5. வேலை வாய்ப்பு.

66. பொருளாதார வளர்ச்சியின் நோக்கமும் பயனும் பூரண வேலை வாய்ப்பேயாகும். பொருளாதாரத் துறையில் பின்னடைந்துள்ள நாட்டில் வேலை வாய்ப்பின்மை வெளிப்படையாகவும் இருக்கும், மறைமுகமாகவும் இருக்கும். இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 2 சத வீதம் மக்கள் தொகை அதிகரித்து வருவதால், இந்தப் பிரச்சினை சிக்கலாகியுள்ளது. இதனால் தொழிலாளர் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

67. கிராமப் பகுதிகளில் வேலையின்மை வெளிக்குத் தெரிவதில்லை யென்று, தேசீய மாதிரி அளவீட்டு நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியி லிருந்து தெரியவந்துள்ளது. ஆனால், கிராமப் பகுதிகளில் போதிய வேலையில்லை என்பதென்னவோ உண்மைதான். வேளாண்மையிலும் தொடர்பான வேலைகளிலும் இருப்போர்களுக்கு பருவ காலங்களில் மட்டுமே வேலை இருந்துவருகிறது. பயன்படுத்தும் முறைக்கிணங்க போதிய வேலையின்மையின் அளவு இடத்துக்கு இடம் மாறுபடும். இப்போதுள்ள வளர்ச்சி நிலையில் ஒவ்வொருவரும் அன்றாடம் இத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்றும், அதற்குக் குறைந்து வேலை செய்பவர்கள் போதிய வேலையற்று இருக்கிறார்கள் என்றும் நிர்ணயிப்பது பொருத்த மாகாது. அதிக வேலையை விரும்பி வரவேற்கிறார்களா எனப் பார்ப்பது சிறந்த வழியாகும். இந்த வகையில் போதிய வேலையற்று இருப்பவர்கள் நகரப் புறங்களிலும் நாட்டுப் பகுதிகளிலும் 1·5 கோடி இருக்கிறார்கள் என்பது தேசீய மாதிரி அளவீட்டு நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது. இவர்களுக்கு முழு நேர வேலை கிடைக்க எந்த அளவுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்பதை மதிப்பிடுவது சிரமமாகும். ஏராளமானவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே வேலை செய்கிறார்கள். பயனுள்ள வேலை போதிய அளவுக்கு இவர்களுக்குக் கிடைப்பதாகக் கூற முடியாது. இவர்களது விஷயத்தில் வேலையின்மைபற்றிய கருத்து பயன்

68. பொருளாதாரத் துறையில் போதிய முன்னேற்றமடைந்திராத நாட்டில் கிடைக்கும் வேலையை எல்லோருக்கும் பங்கிட வேண்டும் என்ற போக்கு உள்ளது. இந்தப் போக்கு கிராமப் பகுதிகளில் மிகுந்து காணப் படும். இப்படிப் பங்கிட்டுக் கொடுப்பதால் போதிய அளவு வாழ்க்கை வசதி ஏற்படாவிட்டால் மக்களில் ஒரு பகுதியினர் வேலை தேடி பட்டணங் களை நாடிச் சென்று விடுவர். கிராம மக்களின் ஒரு பகுதியினராக உள்ள நிலமில்லாத வேளாண்மைத் தொழிலாளாகள மற்றவாகளுக்காக வேலை செய்து கூலி பெற்று வாழ்ந்து வருகிறார்கள். இவர்களிடையே அதிக வேலையின்மை காணப்படுகிறது. வேளாண்மைத் தொழிலாளர் முதல் ஆராய்ச்சியிலும் (1950–51) இரண்டாவது ஆராய்ச்சியிலும் (1956–57) கிடைத்த முடிவுகளாவன : இவர்களுடைய நிலைமை மோசமாகி யுள்ளது. இவர்களுககுப் போதிய அளவு ஊதியம் கிடைக்கவில்லை. வேலையின்மை என்ற சொல்லை, தொழில் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளில் என்ன பொருளில் உபயோகிக்கிறார்களோ அதே பொருளில் அதை நகரப் புறங்களில் தான் நமது நாட்டில் நல்ல முறையில் உபயோகிக்க முடியும்.

69. ஏற்கெனவேயுள்ள தொழிலாளர் போக, புதிய தொழிலாளர் களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படும் வகையில் வேலைவாய்ப்பை அதிகப் படுத்த இரண்டாவது திட்டத்தில் உத்தேசித்தோம். இந்த நோக்கம் உத்தேசித்த அளவுக்கு வெற்றியடையவில்லை. எனவே, மூன்றாவது திட்டத் தில் முன்னர் நிறைவேற்றாத வேலை வாய்ப்பு அளவையும் சேர்த்து அதிக அளவு வேலை வாய்ப்பளிக்க முயல வேண்டும். இதனால் 20 லட்சம் தொழிலாளர்களுக்கு அதிக அளவு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். மூன்றாவது திட்டக் கால அளவில் 1·5 கோடி தொழிலாளர் புதிதாக ஏற்படுவர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர் நகரப் பகுதிகளில் இருப்பர். நகரப் பகுதிகளில் இடை நிலைக் கல்வி அல்லது ஓரளவு கல்லூரிக் கல்வி பெற்று முடித்துள்ள இளைஞர்கள் பெருமளவில் வேலையற்றிருக் கின்றனர் என்பதை மாதிரி அளவீடுகள் தொடர்ந்து காட்டி வந்துள்ளன. இவர்களுடைய பிரச்சினையைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும்.

70. பொதுவாகப் பார்க்குமிடத்து, வேளாண்மை உற்பத்தி உயர்ந்தால் போதிய வேலையின்மை குறையுமே ஒழிய கிராமப் பகுதிகளில் புதிய வேலைகள் ஏற்படமாட்டா. தொழில் துறை உற்பத்தி அதிகமாவதாலேயே வேலை வாய்ப்பு வசதிகள் அவற்றிற்கேற்ப அதிகமாவதில்லை. ஏனெனில், பெரும் தொழில்களில் பயன்படுத்தப்படுகிற புதிய வேலை முறைகள் அதிக உற்பத்தி உத்திகளின் அடிப்படையிலே அமைந்துள்ளன. முன்னேற்ற மடையாத பொருளாதார அமைப்பில் ஏராளமானவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பார்கள். வாணிகம் பெருகினால் போதிய வேலையின்மை குறையுமே ஒழிய புதிய வேலை வாய்ப்பு ஏற்படாது. இந்த நிலையில் முழு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டுமானால் அதிக காலம் பிடிக்கும்.

71. தேசீயப் பொருளாதாரத்தை உயர்ந்த வீதப்படி, தொடர்ந்து விரிவு படுத்த வேண்டும். அப்போதுதான் நகரப் பகுதிகளில் போதுமான அளவில்

வேலை வாய்ப்புகள் ஏற்படும். வேளாண்மை உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கும். அதனால் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் அவர்களைப் போன்ற மற்றவர்களுக்கும் போதிய வேலையின்மை குறைவதுடன் வேலை வாய்ப்புகளும் அதிக அளவில் கிடைக்கும். வேளாண்மை விரைவில் அபிவிருத்தியடைவதற்காகவும் நவீனத் தொழில்கள் வளர்ச்சியடைவதற்காகவும் பல ஆண்டுகள் முனைந்து வேலை செய்வதே வேலையில்லாத் திண்டாட்டம் தீர்வதற்கேற்ற ஒரே வழியாகும். இடைக்கால அளவில் அதிகத் தொழிலாளரை வைத்துப் பொருளுற்பத்தியில் ஈடுபட வேண்டும். பொருளாதாரத் துறையில் உற்பத்திக் குறைவு ஏற்படாத வரையில் இந்த நிலை நீடிக்கத்தான் வேண்டும். இரண்டாவது திட்டத்தில் இக் கொள்கையை ஏற்றுக் கொண்டோம். இதே கொள்கை மூன்றாவது திட்டத்திலும் அடுத்து வரும் திட்டங்களிலும் தொடர்ந்து இருக்க வேண்டும்.

72. மூன்றாவது திட்டக் கால அளவில் முதலீட்டுக் அளவையும் முறையையும் கருத்தில் கொண்டு வேளாண்மைத் துறையில் 35 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுமென்றும் மற்றத் துறைகளில் 105 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுமென்றும் இப்போது மதிப்பிட்டுள்ளோம். வேளாண்மைத் துறையிலும், சிறு தொழில் துறையிலும் வர்த்தகத் துறையிலும் போதிய வேலையின்மை ஓரளவுக்குக் குறையும். இது என்ன அளவில் ஏற்படுமென்பதைத் தீர்மானமாகக் கூற முடியாது. திட்டக் கால அளவில் வேலை வாய்ப்பு, நிலைமை இன்னும் மோசமாகாதிருக்க வேண்டுமானால், 10 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்பட வேண்டும்.

73. எனவே, பற்றாக்குறைப் பொருள்கள், விசேஷத் திறமை அல்லது அந்நியச் செலாவணி வேண்டியிராத நடவடிக்கைகளில் பயனுள்ள வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வது அவசியமாகும். இதற்காகப் பல துறைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றில் முக்கியமான சிலவற்றை கீழே குறிப்பிட்டுள்ளோம் :—

(1) இரண்டாவது திட்ட முடிவில் 19,000 நகரங்களிலும் கிராமங்களிலும் மின்சார வசதி ஏற்பட்டிருக்கும். மூன்றாவது திட்ட முடிவில் இந்த எண்ணிக்கை 34,000 ஆக உயர்ந்துவிடும். இக் கால அளவுக்குள் 5,000 முதல் 20,000 வரை மக்கள் தொகையுள்ள எல்லாச் சிறு நகரங்களிலும் மின்சார வசதி ஏற்படுமென எதிர்பார்க்கிறோம். மின் சக்தியைப் பயன்படுத்தி, சிறு தொழில்களை வளர்ப்பதற்கு இதனால் ஏற்பட்டுள்ள வாய்ப்பைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கைப்பணியாளர்களுக்கும் சுயேச்சைத் தொழிலாளர்களுக்கும் உரிய காலத்தில் போதிய அளவு தொழில் நுட்பப் பயிற்சி அளித்தால் இது இன்னும் எளிதாக நிறைவேறும்.

(2) உற்பத்தியில் பெரும் பகுதி சிறு நிறுவனங்கள் அல்லது குடும்ப அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் பெரும் தொழிற்

சாலைகளில்) உற்பத்தி முறையை எவ்வாறு பரவலாக்குவது என்பதை முறையாக வகுத்துக் காட்ட மூன்றாவது திட்டத்தில் உத்தேசித்துள்ளோம். சிறு சிறு பகுதிகள் உற்பத்தி செய்வதை சிறு தொழில் நிறுவனங்களுக்கு வகுத்துக் கொடுத்து உற்பத்தி முறையைப் பரவலாக்கச் செய்வதை அரசாங் துறையிலும் தனியார் துறையிலும் நிறைவேற்ற முடியும்.

(3) பொருத்தமான வேலை முறைத் தொழில்களை இயன்ற வரையில் கிராமப் பகுதிகளில் அமைக்க வேண்டும். அக்கம்பக்கத்திலுள்ள நகரப் பகுதிகளின் பலதரப்பட்ட தேவைகளைக் கிராமங்கள் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(4) உற்பத்திச் செலவு, உற்பத்திக் கால அளவு குறையக்கூடிய வேலைகளில் யந்திரங்கள் பயன்படுத்துவதைக் குறைத்து தொழிலாளர் களைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பினை அதிகப் படுத்த முடியும். தனித் தனித் திட்டங்கள் வகுக்கும்போது இந்த அம்சத்தைத் தீர்மான மாக ஆராய வேண்டியது அவசியமாகும்.

(5) வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை பொதுவாக நாடு முழு வதன் அடிப்படையில் அல்லது தனித்தனி மாநிலம் போன்ற பெரிய பகுதிகளின் அடிப்படையில் நுணுகி ஆராயப்படுகிறது. மாவட்ட நிலையிலும், வட்டார நிலையிலும் வேலை வாய்ப்பு பிரச்சினையை நுணுகி ஆராய்வதில் இது வரை போதிய கவனம் செலுத்தப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத் துக்கும் வேளாண்மை, பாசனம், மின் சக்தி, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், செய்தித் தொடர்பு, சமூகப் பணிகள் ஆகியவை போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உள்ளன. இந்த வேலைத் திட்டங்களால் அம் மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கை அதிகப் படும். பொதுவாக உற்பத்தி அதிகரிக்கும். இந்த வேலை திட்டங்கள் நேரடி வேலை வாய்ப்பினை அளிப்பதுடன் தனிப்பட்ட குடியானவர்கள், கைப்பணியாளர்கள், சிறுதொழில் அதிபர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இவற் றைப போன்ற இதர நிறுவனங்கள் ஆகியவர்களின் நடவடிக்கைக்கு உறு துணையாயிருந்து ஊக்கமளிக்கும். இந்த வேலைத் திட்டங்களை நன்கு பயன் படுத்திக் கொண்டால், மாவட்ட நிலையிலும் வட்டார நிலையிலும் வேலை வாய்ப்புகளை அபிவிருத்தி செய்ய முடியும். சில நடவடிக்கைகளை அந்த அந்த இடங்களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்ற வேண்டியிருக்கும் அல்லது விரிவுபடுத்த வேண்டியிருக்கும். மாநில அரசாங்கங்கள் வேலை யில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை மாவட்ட வாரியாக வகுத்துக் கொண்டு அப் பிரச்சினையை மாவட்ட, வட்டாரத் திட்டங்களின் உதவியுடன் முடிந்த வரையில் நேரடியாகத் தீர்க்க வேண்டும்.

(6) மாவட்ட நிலையில் வேலையில்லாப் பிரச்சினை குறித்து ஆராய்ச்சி செய் யப்பட்டது. வேலையில்லையென்று பதிவு செய்துள்ளவர்களில் பெரும்பான்மை யினர் வாலிபர்களாவர். இவர்கள் எட்டாவது முதல் கல்லூரிக் கல்வி இரு ரண்டு ஆண்டு வரை படித்தவர்களாவர். கிராமப் பகுதிகளில் கல்வி நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டுவருவதால் இவர்களுடைய எண்ணிக்கையும் அதி கரித்து வருகிறது. இவர்கள் ஏதாவதொரு வகையில் தொழிற் பயிற்சி

உள்ளூர் வீதப்படி கூலி கொடுக்க வேண்டியதில்லை. அதை விடக் குறைந்த கூலி கொடுத்தால் போதும். இதனால் வேலைகளுக்காகும் செலவு குறையும். உதாரணமாக 5 லட்சம் தொழிலாளர்களுக்கு இம் முறையில் வேலை கொடுத்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12·5 கோடிதான் அதிகப்படி செலவாகும். திட்டக் கால அளவிலே கூட உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்த வகை வேலையை மேற்கொள்ளலாம். அந்த அளவுக்கு அதற்காகத் திட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டும். இந்தத் திட்டம் வெற்றியடையுமானால், கிராமப் பகுதிகளிலே வேலை தேடுகிற பெரும்பாலானவர்களுக்குப் படிப்படியாக பலன்தரு வேலை அளிப்பதற்கு வசதியேற்படும். இதனால், கிராம மக்களிடையே ஏற்படும் விளைவு மகத்தானதாயிருக்கும் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தை மனப்பூர்வமாய் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். இத்தகைய வேலைகளை நாடு முழுவதிலும் நடத்த முடியுமா என்பதே இப்போதுள்ள பிரச்சினையாகும். இதைப் பெரிய அளவில் சோதித்துப் பார்ப்பதற்காக மூன்றாவது திட்டத்தில் நிதி ஒதுக்க உத்தேசித்துள்ளோம்.

6. தொழிலாளர் நலக் கொள்கை

75. சுதந்திரமடைந்ததற்குப் பின்பும் முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் தொடங்கி வைக்கப்பட்ட தொழிலாளர் நலக் கொள்கை இரண்டாவது திட்டக் கால அளவில் திட்டவட்டமான முறையில் உருப் பெற்று அபிவிருத்தியடைந்தது. இக் கால அளவில் தொழிற் கொள்கை வளர்ச்சியடைந்து அடிப்படை நோக்கங்கள் நிறைவேறின.

தொழிற் துறையில் அமைதி நிலவுவதற்கென கடந்த பத்து ஆண்டுகளாக அரசாங்கம் சில அதிகாரங்களை எடுத்துக் கொண்டுள்ளது. தொழிற் தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்காக வசதிகள் ஏற்படுத்தும் பொறுப்பை தானே மேற்கொண்டது. தொழிற் துறையில் அமைதியை நிலைநாட்டுவதற்காகத் தலையிடும் அதிகாரத்தையும் மேற்கொண்டது. இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்தார் தலையிடுவது தவிர்க்க முடியாதென்றாலும், மாறிவரும் நிலைமைகளுக்கேற்ப தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ளாகவே கூட்டுறவு ஏற்பாடுகளை மேற்கொண்டால் நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும் தொழிற் துறையில் அமைதி நிலவ வேண்டுமென்பது மட்டும் நமது நோக்கமல்ல ; தொழிலியல் திறமை உயர வேண்டும் ; பாடுபடும் பாட்டாளிகளின் வாழ்க்கைநிலை உயர வேண்டும் என்ற நேக்கங்களைக் கருதிப் பார்க்கும் போது, இந்த வகையில் தொழில் உறவு இருப்பதன் அவசியம் தெற்றென விளங்கும்.

76. அண்மையில் ஏற்பட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது அவசியம். மூன்றாவது திட்டத்தில் தொழிலாளர் விஷயமாய், என்னென்ன துறைகளில் என்னென்ன செய்யவேண்டுமென்பதற்கு இவை வழிகாட்டிகளாய் அமையும். தொழிற் துறை ஒழுங்கு நியதிகளை மத்தியத் தொழிலாளர் நிறுவனங்களும் தொழிலதிபர்களும் ஏற்றுக் கொண்டனர். அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் 1958-ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இவை பயன்பட்டு வருகின்றன

நிர்வாகத்தினர் பொறுப்புகளையும் தொழிலாளர் பொறுப்புகளையும் இந்த நியதிகளில் நிர்ணயித்துள்ளோம். எல்லா நிலைகளிலும் தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்குமிடையில் உருவான வகையில் கூட்டுறவு ஏற்படுத்துவது, வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பது, வழக்காடுவதைத் தவிர்ப்பது, தகராறுகளையும், குறைபாடுகளையும பரஸ்பர பேச்சு வார்த்தை, சமரசம், தாங்களாகவே நடுவர் ஆலோசனைக்கு விடுவது ஆகியவை மூலம் தீர்த்துக் கொள்வது, தொழிற்சங்கங்கள் இடையூறின்றி வளர்வதற்கு வசதி ஏற்படுத்துவது, தொழிலாளர் கவனமின்றி வேலை செய்வதையும், வேலையில் அசட்டையாயிருப்பதையும் ஒறுப்பது, பயமுறுத்தலையும் பலாத்காரத்தையும் தொழிலுறவுகளில் தவிர்ப்பது ஆகியவையே இவற்றின் நோக்கங்களாகும். சிக்கல் நிறைந்த ஒரு துறையில் இத்தகைய புரட்சிகரமான நோக்கங்கள் நிலை பெறவேண்டுமானால் நீண்டகாலம் முழு முயற்சியுடன் இதற்காக வேலை செய்ய வேண்டும். இதுவரை ஏற்பட்டுள்ள பலன்கள் உற்சாக மூட்டுகின்றன. வேலை நிறுத்துவதால் இழக்கப்படும் வேலை நாட்கள் குறைந்துள்ளன. தொழிலுறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொழிலிலும் தொழிலாளரிடையேயும் போட்டிச் சங்கங்கள் இருப்பதால் ஏற்படுகிற தீமைகள் அனைவருக்கும் தெரியும். இரண்டாண்டுகளுக்கு முன் தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்கு நடைமுறை விதிகளால் இத் தீமைகள் ஓரளவுக்குக் குறைந்துள்ளன. செய்துகொண்ட உடன்படிக்கைகளையும் ஏற்பட்ட தீர்ப்புகளையும் ஒரு சாரார் நிறைவேற்றவில்லையென மற்றொரு சாரார் புகார் கூறுகின்றனர். இந்த நிலை நீடித்தால் இந்த விதிகளிருந்து பயனில்லை. இந்த விதிகள், சட்டங்கள், உடன்படிக்கை ஆகியவற்றின் மூலம் ஏற்படும் பொறுப்புகளை இரு கட்சிக்காரர்களும் அனுசரித்து நடக்கும்படிச் செய்வதற்காக மத்திய அரசாங்கத்திலும் மாநிலங்களிலும் நிறைவேற்று—மதிப்பீட்டு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

77. மற்றும் இரு துறைகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் தொழில் வாழ்விலே நல்லதொரு திருப்பம் ஏற்படும். தொழிலாளர் கல்வித் திட்டமும் தொழிலாளர்கள் தொழில் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்வதும் இப் புதிய அம்சங்களாகும்.

78. இக் கருத்துக்கள் இரண்டாவது திட்டக் காலத்தில் சோதித்துப் பயனுள்ளவையென எண்பிக்கப்பட்டன. அடுத்த ஐந்தாண்டுகளில் இவற்றின் பயன் தெளிவாகத் தெரியும். தொழிலாளர் விஷயமாய் திட்டத்தில் கூறியுள்ள சிபாரிசுகள் கூட்டு ஆலோசனையின் பயனாய் விளைந்துள்ளவையே. தொழிலாளர் நிறுவனப் பிரதிநிதிகளும் தொழிலதிபர் பிரதிநிதிகளும் ஒருங்கு சேர்ந்து செய்துகொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இவை அமைந்துள்ளன. இது விஷயமாய் மூன்றாவது திட்டக் கொள்கையும் வேலைத் திட்டமும் இதே முறையில் அமைந்துள்ளன. பல விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

79. நீதி மன்றங்களிலும் நடுவர் மன்றங்களிலும் தொழில் வழக்கு களை எடுத்துக் கொள்வதை முடிந்த அளவு குறைக்க முயற்சி செய்யப் படும். தகராறுகளைத் தீர்ப்பதில் ஏற்படும் தாமதத்தையும் இதன் மூலம் தவிர்க்க முடியும். தொழிலாளருக்கும் தொழிலதிபர்களுக்குமிடையில் உள்ள கருத்து வேற்றுமையை அவர்களாகவே முன்வந்து நடுவர் தீர்ப்புக்கு விடும் முறையைப் பெரிதும் பயன்படுத்துவதற்குரிய வழிகள் கண்டு பிடிக்கப்படும். செயற்குழுக்கள் ஊ க்குவிக்கப்படும். ஏற்றுக் கொண்ட குறிப்பிட்ட துறைச்குள் தொழிலாளர் விஷயங்களை ஜனநாயக முறையில் கவனிப்பதற்கு இவை ஏற்ற நிறுவனங்களாக அமையும். எல்லாத் தொழில் நிறுவனங்களுக்கும் "குறை தீர்ப்பு நடை முறை" ஒன்றைத் தகுந்த விதத்தில் மேற்கொள்ள விசேஷக் கவனம் செலுத்தப்படும்.

80. தொழிற் சங்க போட்டாபோட்டியின் சில கேடான அம்சங்களை நீக்க மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். தொழிலாளர் களுக்குச் சுயேச்சையான தீவிரமுள்ள நிறுவனங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் தொழிலுறவுகளில் கூட்டு பேரத்திற்கு உரிய இடமிருக்கும். தொழிலாளர் அந்தஸ்தும் நாட்டுப் பொருளாதார வாழ்வில் தொழி லாளர் உருவான வழியில் பணியாற்றுவதும் இதைப் பொறுத்திருக்கும்.

81. அரசாங்கத்தார் ஓரளவு தன்னாட்சியுள்ள கழகம் ஒன்றின் மூல மாகத் தொழிலாளர் கல்வித் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இதைப் பலரும் பாராட்டியுள்ளார்கள். முதலாளிகள்-தொழிலாளிகள் நிறுவனங்களின் முழு ஒத்துழைப்புடன் இத் திட்டம் நடத்தப்படுகிறது. மூன்றாவது திட்டக் கால அளவில் இக் கல்வித் திட்டம் பெருமளவுக்கு விஸ்தரிக்கப்படும். தொழிலாளர் கல்வி பெற்றால் தொழிலில் ஜனநாயகம் வலுப்பெறும்; பொருளாதார அமைப்பு நல்ல முறையிலிருக்கும்.

82. ஒரு தொழில் யூனிட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைத் தொழி லாளர்களுக்கு ஏற்படுத்துவதற்காகவும் அதிக உற்பத்தியில் அவர்களுக் குள்ள அக்கறையை அதிகப்படுத்துவதற்காகவும் இரண்டாவது திட்டக் கால அளவில் தொழிலாளர்கள் தொழில் நிறுவன நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இது வரையில் 24 தொழில் யூனிட்டுகளில் கூட்டு நிர்வாகக் கவுன்சில்கள் அமைக்கப்பட் டுள்ளன. தொழில் நிறுவனம் செயல்படுவதைக் குறித்து, தகவல் கேட்டுப் பெற இக் கவுன்சில்களுக்கு உரிமை உண்டு. வேலையாட்களின் நலன், பயிற்சி, தொடர்பான விஷயங்கள் ஆகியவற்றில் இவைகளுக்கு நேரடி நிர்வாகப் பொறுப்பு இருக்கிறது. தொழில் உறவுகளைப் பாதிக்கிற முக்கிய மான பிரச்சினைகளில் தொழிலாளர்களையும் தொழிலதிபர்களையும் பரஸ் பரம் கலந்தாலோசிக்கச் செய்வது இவைகளின் முக்கிய அலுவலாகும். 1960-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசாங்கங்கள், பற்றுள்ள மற்றவர்கள் இதில் கலந்துகொண்டு, கூட்டுக் கவுன்சில் செயலாற்றியதில் ஏற்பட்ட அனுபவங்களையும் குறித்த பிரச்சினைகளுக்குத் தாங்கள் உருவாக்கி

யுள்ள தீர்வுகளையும் பரிசீலனை செய்தனர். இந்த அமைப்பு படிப்படியாக விஸ்தரித்து முடிவில் தொழில் துறையில் இருக்க வேண்டிய சாதாரண அம்சமாகிவிடும். இத்தகைய அமைப்பு, தொழில் துறையில் அமைதி, உற்பத்தி அதிகரிப்பு, தொழிலாளர் வாழ்க்கை நிலை உயர்வு ஆகியவற்றிற்கு எவ்வளவு தூரம் பயன்படுகிறதென்பதைப் பொறுத்தே இதன் வெற்றி அமைந்திருக்கும்.

83. உற்பத்தி அளவை அதிகரிக்கும் நோக்கம் எப்போதும் நம் கவனத்தில் இருந்து வர வேண்டும். தொழிலாளர் வேலைத் திறமை-நலன் விதிகளை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இதனால் நிர்வாகத்தினரும் தொழிலாளிகளும் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் பழக முடியும். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அவர்களுடைய பொறுப்புகள் இன்னவை என்பதைத் திட்டவட்டமான முறையில் இது நிர்ணயிக்கும். உள்ள சாதனத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது, வேலை அளவு, வேலை முறை, நிர்வாகத்தின் அலுவல்கள் இவற்றைச் சீர்திருத்துவது ஆகியவை மூலம் உற்பத்திப் பொருளின் தரத்தை உயர்த்தி உற்பத்திச் செலவையும் பெருமளவு குறைக்க முடியும். இந்தச் சாத்தியக் கூறுகளையெல்லாம் நன்கு ஆராய வேண்டும். சிக்கனச் சேமிப்பு ஒழுங்காகவும் ஏற்றுக் கொண்ட கொள்கைகளை அனுசரித்தும் நிறைவேற்றப் படுகிறதா எனப் பார்த்துக் கொள்வதற்காகத் தொழில் நுட்பக் குழுக்களை அமைக்க வேண்டும். இதற்கு ஊதியச் சபைகளின் அறிக்கைகள் ஊக்கமளிக்கும். நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே இருக்க வேண்டிய உறவின் முக்கிய அம்சங்களை நிர்வாகத்தினருக்கு நல்ல முறையில் கற்பிப்பதிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

84. குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்படி குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிப்பது அரசாங்கப் பொறுப்பாகும். இதைத் தவிர கூட்டு பேரம், சமரசம், மத்தியஸ்தத் தீர்ப்பு, நடுவர் தீர்ப்பு ஆகியவை மூலமாகவும் ஊதியம் நிர்ணயிக்கப்படும். ஒரு தொழில் பெரும் பகுதிகளில் அமைந்துள்ள போது ஊதிய சபைகளை அமைப்பதே இதற்குச் சிறந்த வழியாகுமெனத் திட்டத்தில் சிபாரிசு செய்துள்ளோம். இந்த நடைமுறையை இது வரையில் பருத்தித் துணி ஆலைகள், சிமிட்டி, சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் விஷயத்தில் பயன்படுத்தியுள்ளோம். சந்தர்ப்பங்களுக்கேற்றாற் போல், இந்த நடைமுறையை மற்ற தொழில்களுக்கும் பயன்படுத்துவோம். தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் தொழிலதிபர் பிரதிநிதிகளும் இந்த நடைமுறையை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஊதியச் சபையின் ஒரு முகமான சிபாரிசுகள் முழுவதையும் நிறைவேற்ற ஒப்புக் கொண்டுள்ளனர். நியாய ஊதியக் குழு அறிக்கையில் ஊதியத்தை நிச்சயிப்பதற்குச் சில பொதுவான விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவர்களுடைய உடன்படிக்கையை அனுசரித்து, இந்தியத் தொழிலாளர் மகாநாடு ஊதியத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு தேவை அடிப்படையில் அமைந்த குறைந்த அளவு ஊதியம் எதுவாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. எழுந்த சில பிரச்சினைகளின் அடிப்படையில் இதை மீண்டும் ஆராய்ந்

தோம். தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தின் ஊட்டச் சத்து தேவைகள் யாவை என்பதை இத் துறையில் தலை சிறந்த விஞ்ஞானப் புள்ளிவிவரத்தின் அடிப்படையில் மீண்டும் பரிசீலனை செய்யலாமென யாவரும் ஒப்புக் கொண்டனர். கைத்திறனுள்ள தொழிலாளர்களும் கைத் திறனற்ற தொழிலாளர்களும் சம்பாதிக்கும் ஊதியம் இப்போது கிட்டத் தட்ட ஒரே நிலையில் உள்ளது. (அ) ஊதிய வேறுபாடு; (ஆ) உற்பத்தி அளவின் அடிப்படையில் ஊதியத்தை நிர்ணயிப்பது; (இ) உற்பத்தி அளவை நிச்சயிப்பதற்குரிய உத்திகள்; (ஈ) உற்பத்தி லாபத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய முறை ஆகியவைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்ய உத்தேசித்துள்ளோம்.

85. போனஸ் கிடைப்பது நிச்சயமற்றதாயிருப்பதால், அது மனக் கசப்புக்கும் தகராறுக்கும் இடமளிக்கிறது. ஊதியச் சபை போன்ற கழகம் ஒன்று போனஸ் பிரச்சினையை ஆராய்ந்து, பின்பற்ற வேண்டிய கொள்கைகளையும் விதிமுறைகளையும் உருவாக்க வேண்டுமெனத் தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

86. இப்போதுள்ள பல்வேறு சமூக நலப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சமூக நலப் பாதுகாப்புப் பெருந் திட்டத்தில் ஒருங்கு சேர்த்து பொதுவான திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டுமென ஆராய்ச்சிக் குழு ஒன்று சிபாரிசு செய்துள்ளது. இத்தகைய ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை இனிமேல்தான் உருவாக்கவேண்டும். எதிர்காலச் சகாய நிதிக்குச் செலுத்த வேண்டிய வீதத்தை $6\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து $8\frac{1}{3}$ சத வீதத்துக்கு உயர்த்த வேண்டுமென்பதை அரசாங்கத்தார் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளனர். பல்வேறு தொழில்களில் பொருளாதார வசதி ஒரே நிலையில் இல்லாததால், இந்த அதிகச் செலவுப் பளுவை ஏற்க முடியாத தொழில்கள் இருக்கின்றனவா என நிர்ணயித்து அறிவதற்காகத் தொழில் நுட்பக் குழு ஒன்று அமைத்துள்ளோம். வேலையாள் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டம் பெருமளவுக்கு விஸ்தரிக்கப்படும். மூன்றாவது திட்டக் கால அளவில் அவசியமான இடங்களிலெல்லாம் விசேஷ மருத்துவ மனைகள் ஏற்படுத்துவோம். நோய் தடுப்புக்காக இப்போதுள்ளதை விட அதிகக் கவனம் செலுத்தி அதிகப் பணம் செலவழிக்க உத்தேசித்துள்ளோம்.

87. ஒப்பந்தத் தொழிலாளர் பற்றிய ஆராய்ச்சி இப்போது நடந்தேறி வருகிறது. இந்த ஆராய்ச்சி முடிவுகளின் பயனாய் ஒப்பந்தத் தொழிலாளர்களைச் சில தொழில்களில் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாதெனத் தடுக்க முடியும். சில தொழில்களில் இப்படித் தடை செய்ய முடியாத போதிலும், அத் தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயிக்க முடியும்.

88. உதவி பெற்ற வீட்டு வசதித் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த போதிலும் தொழிலாளர் வீட்டு வசதி நிலை சீர்திருந்தவில்லை. இந்தப் பிரச்சினையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும்.

தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைகள் அவர்களுடைய சுகாதாரத்தையும் திறமையையும் பிரதிகூலமாகத் தொடர்ந்து பாதிக்காமலிருப்பதற்காக இப்படிச் செய்யவேண்டும். இதே நோக்கத்துடன் பலவகைத் தொழிலாளர்களுக்கும் கேளிக்கை, விளையாட்டு வசதிகளைப் பெருமளவில அதிகரிக்கவேண்டும்.

89. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளருக்குரிய நலக் காப்பு நிறுவனத்தின் உதவியுடன் சுரங்கத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். சில தொழில் கேந்திரங்களில் தொழிலாளர் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கஙகளுமிருக்கின்றன. பொதுவாகச் சொல்லப்போனால், தொழிலாளரைப் பொறுத்த வரையில் கூட்டுறவு முறை பெருமளவுக்கு அமுலுக்கு வரவில்லை. பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களால் தொழிலாளர்கள் பெரு நன்மை பெற முடியும். மூன்றுவது திட்டக் கால அளவில் இந்த விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதிலும் அவர்களுடைய கோரிக்கையிலும், நலக் காப்பிலும் தொழிற்சங்கங்களும் சுயேச்சை நிறுவனங்களும் அதிக அக்கறை காட்டி உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

90. 1950–51–ம் ஆண்டிலும் 1956–57–ம் ஆண்டிலும் மேற்கொண்ட வேளாண்மைத் தொழிலாளர் ஆராய்ச்சிகளால் அவர்களுடைய மோசமான வேலை நிலைமைகளும் குறைவான வாழ்க்கைத் தரமும் வெளிப்பட்டன. முதலாவது திட்டக் கால அளவில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் பயனாய் ஏற்பட்ட விளைவைப் பொதுவாக மதிப்பிடும் முயற்சி இரண்டாவது ஆராய்ச்சியில் மேற்கொள்ளப்பட்டது. பொருளாதார அபிவிருத்தியின் பலன்களை வேளாண்மைத் தொழிலாளரும் துய்க்கவேண்டும். இதற்காக அவர்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் பற்றி மூன்றுவது திட்டக் கால அளவில் விசேஷக் கவனம் செலுத்தவேண்டும்.

91. மூன்றுவது திட்டக்கால அளவில் ஏராளமாகக் கைப் பணியாளர்கள் வேண்டியிருக்கும். இரண்டாவது திட்டக் கால ஆரம்பத்தில் 10,500 கைப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க முடிந்தது. இந்த எண்ணிக்கை இரண்டாவது திட்டக் கால முடிவில் 40,000 ஆகவும், மூன்றுவது திட்டக் கால முடிவில் 1,00,000 ஆகவும் அதிகரிக்க முடியும். பயிற்சியின் தரத்தை உயர்த்துவதில் கவனஞ் செலுத்தவேண்டும். சிறப்பாக, தொழிற்சாலையிலேயே பயிற்சி அளிக்கப் போதிய வசதி செய்யப்படும். வேலை கற்றுக்கொள்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விஷயம் இப்போது திருப்திகரமாக இல்லை. எந்தெந்த வகையில் இதைச் சீர்திருத்தச் சட்டமியற்ற வேண்டும் என்று ஆலோசனை செய்து வருகிறோம்.

92. தொழிலாளர் விஷயமாய் ஆராய்ச்சி வசதிகளை விஸ்தரிப்பதற்காகத் திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. அப்போதுதான் தொழிலாளர் நிறுவனங்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் குறித்து நாம் அறிந்திராத விஷயங்கள் தெரியவரும்.

7. நிலச் சீர்திருத்தம்.

93. முதலாவது, இரண்டாவது திட்டங்களில் நிலச் சீர்திருத்த வேலைத் திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தோம். இவற்றிற்குக் குறிப்பாக இரண்டு நோக்கங்கள் உள்ளன. பழங்காலத்திலிருந்தே இருந்துவரும் கிராம அமைப்பால் வேளாண்மை உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள இடர்பாட்டினை அகற்றுதல் முதல் நோக்கமாகும். இப்படிச் செய்தால் அதிக உற்பத்தியும், திறமையும் மிக்க வேளாண்மைப் பொருளாதாரம் இயன்றவரையில் உருவாகக் கூடிய வசதி ஏற்படும். இரண்டாவது நோக்கம், முதல் நோக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகும். வேளாண்மை அமைப்பிலுள்ள சுரண்டல் சக்திகளையும் சமூக அநீதியையும் அகற்றுவது, நிலத்தில் உழைப்பவருக்குப் பாதுகாப்பு அளிப்பது, கிராம மக்களில் எல்லாப் பிரிவினருக்கும் சம நிலையும், சம வாய்ப்பும் அளிப்பது ஆகியவையே இரண்டாவது நோக்கத்தின் அம்சங்களாகும்.

94. இந்த நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானால், அடியிற்கண்டவற்றைச் செய்யவேண்டும் :—இடைத் தரகர் முறையை, அதாவது, இடையில் குத்தகை பெறும் முறையை ஒழிக்கவேண்டும். குடிவார முறையைச் சீர்திருத்தவேண்டும். குத்தகையை முறைப்படுத்திக் குறைக்கவேண்டும். குடியானவர்களின் குடிவார உரிமையைப் பாதுகாக்கவேண்டும். குத்தகைக்காரர்களை நிலச் சொந்தக்காரர்களாக்குவதும் இந்தச் சீர்திருத்தத்தின் மற்றொரு நடவடிக்கையாகும்.

95. நிலம் வைத்திருப்பதிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு இரண்டாவது நோக்கத்தை அனுசரித்து நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளோம். நிலப் பகுதி குறைந்து, அதை நம்பி அதிக மக்களும் உள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தகைய கொள்கை அவசியமென அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வேளாண்மை நிலங்கள் இப்போது பிரிந்துள்ள வகையிலும், சிறு பண்ணைகள் அதிகமிருப்பதாலும் நில உயர் வரம்புக்கு மேற்பட்டு, பங்கிடுவதற்குக் கிடைக்கக் கூடிய நிலம் ஓரளவே இருக்குமென்பதும் நன்கு உணரப்பட்டுள்ளது. ஆனால், கூட்டுறவு முறையில் முன்னேற்றக் கிராமப் பொருளாதாரத்தை அமைக்க வேண்டுமானால் இந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது அவசியமாகும். தரிசு நிலங்களில் குடி அமர்த்துவதற்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொண்டோம். இவற்றுடன் கூட நிலமில்லா மக்களுக்கு நிலம் பங்கிட்டுக் கொடுக்க இந்த உபரி நிலம் ஓரளவு பயன்படும். இவர்களுடைய பிரச்சினைகள், முதலாவது, இரண்டாவது திட்டங்களில் விசேஷக் கவனம் பெற்றுள்ளன. நிலச் சீர்திருத்தத் திட்டத்தின் கொள்கைகள், நிலத்தை நம்பியுள்ள மக்களிடையேயிருக்கும் நலன்களைச் சரிக்கட்டுவதன் அடிப்படையில் மட்டும் அமைந்திருக்கவில்லை. இவை விரிவான, சமூக, பொருளாதாரக் கண்ணோட்டத்தின் அம்சமாக அமைந்துள்ளன. இவை பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஓரளவு பயன்படுத்தப்படவேண்டும்.

96. மேலே குறித்த வகைகளில் நிலச் சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான குடியானவர்கள் சொந்தத்தில் நிலம் வைத்துள்ள குடியானவர்களாகி விடுவார்கள். நாணயக் கூட்டுறவுச் சங்கங்களும், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும், வேலை முறைக் கூட்டுறவுச் சங்கங்களும், பங்கீட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும் அவர்களுடைய சம்மதத்துடன் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படுவதற்கு அவர்களுக்கு உதவி அளிக்கப்படும். இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும்படி அவர்கள் தூண்டப்படுவார்கள். கிராம நிலையில் இத்தகைய சீர்திருத்தம் செய்யப்படுகிற அளவுக்குக் கட்டுப்படியாகாத நில உடைமை மூலம் ஏற்படுகிற கஷ்டங்கள் குறையும். சமுதாயத்தில் எளிய நிலையிலுள்ளவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இதனால் உதவி செய்ய முடியும். நிலச் சீர்திருத்தத்தின் ஒவ்வொரு நிலையும் நிறைவேற்றப்பட்டவுடன் வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பதற்கும், கிராமப் பொருளாதாரத்தை விரிவாக்குவதற்கும் குடியானவர்களுக்கு முழு உதவி அளிக்க முடியும் என்பதை எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம். குடியானவர்களுக்குள் அதிக அளவில் கூட்டுறவு ஏற்பட்டு, கிராமச் சமுதாயம் வலுப்பட்டவுடன் உள்ளூர் முயற்சி பெருகும்; பொருளாதார, சமூக முன்னேற்றமும் விரைவில் ஏற்படும்.

97. இரண்டாவது திட்டத்தில் கூறியுள்ள நிலச் சீர்திருத்தம் பொதுவான நோக்கத்தையே குறிப்பிடுகிறது. நாட்டின் பற்பல பகுதிகளிலும் வெவ்வேறு நிலைமைகளிருப்பதால் ஒவ்வொரு மாநிலமும் அங்குள்ள நிலைமைகளுக்கேற்ப, நிலச் சீர்திருத்தத்தை தனக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொண்டு இதன் முக்கிய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்.

98. இரண்டாவது திட்டத்தில் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் மாநிலங்கள் அண்மையில் மேற்கொண்டுள்ள சட்டங்களிலே சில கொள்கைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றை இயன்ற விரைவில் நிறைவேற்றுவதே மூன்றுவது திட்டக் காலத்தில் செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும்.

99. இத் திட்டத்தின் முடிவான அறிக்கையில் இவ் விஷயத்தை விரிவாக ஆராய உத்தேசித்துள்ளோம். அப்போது நிலச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சுகளும் மாநில அரசாங்கங்களின் கருத்துக்களும் கிடைத்துவிடும். இரண்டாவது திட்டக் கால அளவில் நிலச் சீர்திருத்த வேலைத் திட்டம் அமுலாக்கப்பட்டதன் சில விசேஷ அம்சங்களை இப்போது கவனிக்க வேண்டும். இவற்றைச் சுருக்கமாக இந்த அத்தியாயத்தில் எடுத்துக் கூறுவதே இதன் நோக்கமாகும்.

இடைத் தரகர் முறையை ஒழிப்பது.

100. ஜமீன்தாரிகள், ஜாகீர்கள், இனுமகள் போன்ற இடைநிலைக் குடிவார உரிமைகள் இந்த நாட்டில் பெரும் பகுதிகளில் நிலவிவந்தன. இந்த உரிமைகளை ஒழித்துக்கட்ட சட்டம் இயற்றியுள்ளோம். ஒரு சில

விஷயங்களில் தவிர பெரும்பாலான விஷயங்களில் இது நிறைவேற்றப் பட்டுள்ளது. நஷ்ட ஈட்டினை நிர்ணயித்துக் கொடுத்துத் தீர்க்கும் பிரச் சினையை மாநில அரசாங்கங்கள் கவனித்து வருகின்றன. நஷ்ட ஈடு கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளை மாநில அரசாங்கங்கள் விரைந்து செய்து முடிக்கவேண்டும். நஷ்ட ஈட்டினை ரொக்கமாகவோ, அரசாங்கப் பத்திரங் கள் வடிவிலோ, இன்ன தேதிக்குள் கொடுத்துத் தீர்க்க வேண்டுமென மாநில அரசாங்கங்கள் இயன்ற வரையில் தேதி குறிப்பிட வேண்டும்.

குடிவாரச் சீர்திருத்தங்கள்.

101. **குத்தகை.**—எல்லா மாநிலங்களிலும் குத்தகையை ஒழுங்கு படுத்துவதற்காகச் சட்டமியற்றப்பட்டுள்ளது அல்லது மசோதாக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. பல மாநிலங்களில் உயர்ந்த அளவுக் குத்தகை நாலில் ஒரு பங்காவோ இன்னும் குறைவாகவோ நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனினும், சில மாநிலங்களில் திட்டத்தில் கூறியுள்ளவாறு குத்தகை அளவைக் குறைக்க வேண்டியுள்ளது. சில விஷயங்களில் குத்தகை ஒழுங்குபடுத்தும் ஷரத்துக்கள் சரிவர நிறைவேற்றப்படவில்லையென்பது முன்னர் செய்த நிலச் சீர்திருத்த ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந் துள்ளது. புதிய குத்தகை அளவுகள் பெரும்பாலும் அனுஷ்டிக்கப்படுவதாக வும், குற்றங் குறை ஏதேனும் தெரியவந்தால் அவை நுணுகி ஆராயப்படுவ தாகவும், மாநில அரசாங்கங்கள் அறிக்கை அனுப்பியுள்ளன. மாநில அரசாங்கங்கள் இந்த விஷயத்தை உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டு மென்பது வெளிப்படை.

102. **குடிவார உரிமையை உறுதிப்படுத்துவது.**—குடிவார உரிமையை உறுதிப்படுத்துவதற்கேற்ற விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற் குரிய சட்டத்தைப் பல மாநிலங்கள் இயற்றியுள்ளன. வேறு சில மாநிலங் கள் இதற்கான மசோதா கொண்டுவந்துள்ளன. மசோதா சட்டமாக்கப் படும் வரையில் குத்தகைக்காரர்களை நிலத்திலிருந்து வெளியேற்று வதைத் தடுத்துள்ளோம். சில மாநிலங்களில் பெருவாரியான அளவில் குத்தகைக்காரர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள். இதனால் இப்படிச் சட்டம் செய்வதில் சில கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. குத்தகைக்காரர்கள் அந்த நிலங்களைத் தாங்களாகவே ஒப்படைத்தார்களா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம்தான். பொருளாதார ஏழ்மையும், குடிவார உரிமையை உறுதிப் படுத்துவதற்காகச் சட்டம் வருகிறதென அவர்கள் அறியாததும், சட்டத் தில் சில குறைபாடுகள் இருப்பதும், போதுமான நிலப் பதிவுகள் இல்லா திருப்பதும், நிர்வாக ஏற்பாடுகளில் குறையிருப்பதும் இதற்குக் காரணங்க ளாகும். இவ்வாறு அவர்கள் நிலங்களைக் கைவிடுவதைக் குறைப்பதற் காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு யோசனை கூறினோம். அவர்கள் நிலங்களைக் கைவிட்டால், அதைக் குறித்து ரெவின்யூ அதிகாரி கள் பதிவு செய்ய வேண்டுமென்றும், அப்படியே கைவிட்டாலுங்கூட, நிலச் சொந்தக்காரர்கள் சொந்தச் சாகுபடிக்கு மேற்கொள்ளக்கூடிய

அளவுள்ள நிலத்தை மட்டுமே பெறுவதற்கு உரிமையுள்ளவராவர் என்றும், எஞ்சியுள்ள நிலத்தை அரசாங்கத்தாரே மேற்கொள்ள வேண்டு மென்றும் ஆலோசனை கூறிஞேம். சில மாநிலங்கள் இவற்றை அனு சரித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளன.

103. **குத்தகைக்காரர்களுக்கு நில உரிமை.**—நிலச் சொந்தக்காரர்கள் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலங்களின் குத்தகைக் காரர்களை அரசாங்க நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென்றும், அவர்கள் நஷ்ட ஈடு அளிப்பதன் மேல் அந்த நிலங்களில் முழு உரிமை யுள்ளவர்களாகச் செய்யவேண்டுமென்றும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டததில் ஆலோசனை கூறிஞேம். இத் துறையில் பெரும்பாலான பகுதி களில் எடுக்கப்பட்ட நடவடிக்கை போதுமானதாயில்லை. நிலச் சொந்தக் காரர்கள் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலங்களின் குத்தகைக்காரர்கள் அனைவரும் குறித்த கால அளவுக்குள் அந்த நிலங் களின் சொந்தக்காரர்களாகும்படிப் பார்த்துக்கொள்வது அவசியமாகும். இரண்டாவது திட்டத்தில் சொல்லியுள்ள இந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்காக, குத்தகைக்காரர்களுக்கும், குத்தகை பெறும் நிலச் சொந்தக் காரர்களுக்கும் உள்ள உறவைத் துண்டித்து, குத்தகைக்காரர்களை அர சாங்க நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்.

நில உடைமை உச்சவரம்பு.

104. எதிர்காலத்தில் குறித்த அளவுக்கு மேல் நிலம் அடையக் கூடா தென உச்ச வரம்பு கட்டுவதற்காகப் பெரும்பாலான மாநிலங்கள் சட்ட மியற்றியுள்ளன. சில மாநிலங்கள் இதற்காகச் சட்டம் இயற்றிவருகின்றன. இப்போதுள்ள நில உடைமைக்கு உச்ச வரம்பு ஏற்படுத்துவதற்குரிய சட்டம் சில மாநிலங்களில் இயற்றப்பட்டுள்ளது. பெரும்பாலான மாநிலங் கள் இதற்காக மசோதா கொண்டுவந்துள்ளன. உச்ச வரம்பு அளவும் நில மாற்றங்களும் இதிலுள்ள முக்கியப் பிரச்சினைகளாகும்.

105. மூன்று குடும்ப நில உடைமை அளவில் உச்ச வரம்பு ஏற்படுத்தலா மென்பது திட்டத்தில் நாம் கூறியுள்ள ஆலோசனையாகும். உச்ச வரம்பு அளவைக் குறித்த அளவு வருமானத்துடன் ஒப்பிட்டுப் பேசும்போது உச்ச வரம்பு ஏற்படுத்துவதன் நோக்கம் பொதுவாகக் கிராமப் பகுதிகளில் வருமானத்துக்கு எல்லை கட்டுவதாகும் என்றும், கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு இதனுல் சம வாய்ப்பு மறைமுகமாக மறுக்கப்படுகிறதென்றும் தோன்றும். ஆனுல், உண்மை அதுவல்ல. உச்ச வரம்பு நிர்ணயித்து உரிய அளவுக்கு மேற்பட்ட நிலத்தை எடுத்துக்கொண்ட பிறகு, நிலச் சொந்தக்காரர் தம்மிடம் எஞ்சியுள்ள நிலங்களைத் தம்மிடமே வைத்துக் கொள்ள உரிமை உண்டு. அவர் வைத்துள்ள நில உடைமையின் மதிப்பும் அதிலிருந்து கிடைக்கிற வருமானமும் அவர் செய்யும் சீர் திருத்தத்திஞல் பின்னர் உயர்ந்த போதிலும் அவர் அந்த நிலத்தின் ஒரு பகுதியைக் கைவிட வேண்டுமெனக் கேட்கப்பட மாட்டார். விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்தால் இப்போதுள்ளதைவிட அதே நிலத்தி லிருந்து படிப்படியாக அதிக வருமானம் பெற முடியும்.

106. கடந்த சில ஆண்டுகளாக நிலச் சீர்திருத்தச் சட்டங்களை முறியடிப்பதற்காகவே சிலர் தங்கள் நிலங்களை மற்றவர் பெயருக்கு மாற்றியுள்ளனர். இவ்வாறு கெட்ட எண்ணத்துடன் நில மாற்றம் செய்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலோசனை கூறினோம். நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட நில மாற்றங்கள் யாவை, கெட்ட எண்ணத்துடன் செய்யப்பட்ட நில மாற்றங்கள் யாவை என்று இனங் கண்டுபிடிப்பது கஷ்டமாகும் எனவே, நில உடைமை உச்ச வரம்பு உத்தேசம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அல்லது உள்ளூர் நிலைமைகளை முன்னிட்டு நிர்ணயிக்கப்படக் கூடிய அதற்கும் முற்பட்ட தேதியிலிருந்து செய்யப்பட்ட நில மாற்றங்களை எல்லாம், ஒரு நபர் அல்லது குடும்பம் வைத்துக்கொள்ளக்கூடிய நில உடைமை உச்ச வரம்பைக் கணக்கிடுகையில் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதே விரும்பத்தக்கதாகும். எனினும், பாகம் பிரித்தலையும் நில மாற்றத்தையும் தனித்தனியே வேறுபடுத்த வேண்டும். பாகம் பிரித்தல் என்பது கூட்டுப் பங்குதாரர்களுக்கு மொத்தமாக உள்ள பங்குகளை அவர்களிடையே பிரித்துக்கொள்வதாகும். எனவே, சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டிருந்தால் அதை அசட்டை செய்ய வேண்டுமென ஷரத்து ஏற்படுத்த வேண்டியதில்லை.

வேளாண்மைத் தொழிலாளர்கள்.

107. வேளாண்மைத் தொழிலாளர் இரண்டாவது ஆராய்ச்சியின் முடிவுகள் இப்போது வெளியாகியுள்ளன. வேளாண்மைத் தொழிலாளர்களின், சிறப்பாக நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களின் நிலைமைகளைச் சீர்திருத்துவதில் முதலிரு திட்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்பதை இப்போது நாம் அறிந்துகொள்ள முடியும். நிலமற்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்ட மனைகள் கொடுத்தல், உபரி நிலங்களை மீண்டும் பங்கிட்டுக் கொடுத்தல், குறைந்தபட்ச ஊதிய வீதங்களை அமுலுக்குக் கொண்டுவருதல், வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், கிராமத் தொழில்களை வளர்த்தல் ஆகியவற்றைக் கடந்த காலத்தில் வலியுறுத்தியுள்ளோம். கடந்த சில ஆண்டுகளில் நிலமற்ற தொழிலாளர்களுக்குச் சாகுபடிக்கேற்ற 30 லட்சம் ஏகரா தரிசு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்துள்ளோம். பூதானமாகவும், கிராம தானமாகவும் கிடைத்த கிட்டத்தட்ட 10 லட்சம் ஏகரா நிலங்களைப் பங்கீடு செய்துள்ளோம். கிராமப் பகுதியிலுள்ள ஆள் பலத்தைப் பயன்படுத்துவதற்கும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கும் உரிய வேலைத் திட்டங்களை மூன்றாவது திட்டத்தில் வலியுறுத்திக் கூறியுள்ளோம். இந்த வேலைத் திட்டங்களை மேற்கொண்டால், வேளாண்மைத் தொழிலாளர்களுக்குப் போதிய வேலையின்மை இருப்பது குறைந்து போகும்; அவர்களுடைய வாழ்க்கை நிலை உயரும். சமுதாய அபிவிருத்தி இயக்கம் சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

108. பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பயன்கள் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் கிடைப்பதற்காக, கிராமச் சமுதாயத்தில் இவர்களுடைய பிரச்சினைகளை மாவட்ட நிலையிலும் வட்டார நிலையிலும் இன்னும் உயர்ந்த நிலையிலும் ஒருங்கிணைந்த முறையில் கவனிக்க வேண்டும். இது விஷயமாய் இரண்டாவது திட்டத்தில் ஓர் ஆலோசனை கூறினோம். இதை தேசீய அபிவிருத்திக் கவுன்சிலும் ஏற்றுக்கொண்டது. இதன்படி நிலமற்ற தொழிலாளர்களைக் குடியமர்த்தும் திட்டங்கள் மீது ஆலோசனை கூறுவதற்காகவும் இவ் விஷயத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை அவ்வப்போது பரிசீலனை செய்வதற்காகவும் ஒவ்வொரு மாநிலத்திலும் கழகம் ஒன்று நிறுவ வேண்டும். இதில் அரசாங்கச் சார்பற்ற, தலைசிறந்த பணியாளர்கள் இருக்க வேண்டும். நிலமில்லாத தொழிலாளர்களை நிலத்தில் குடியமர்த்துவது விஷயமாகப் பொதுக் கொள்கைகளையும் இருக்க வேண்டிய அமைப்பையும் ஆராய்வதற்காக தேசீய நிலையிலும் இத்தகைய கழகம் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம். இக் கழகங்கள் நிலமில்லாத தொழிலாளர்கள் பிரச்சினைகளையும் அவர்கள் நலனை முன்னிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் விரிவான முறையில் கவனிக்க வேண்டும்.

அத்தியாயம் 6

மனித ஆற்றலும் சமூகப் பணியும்

1. பொதுக் கல்வி.

1. 6-11 வயதுத் தொகுதியில் உள்ளவர்கள் அனைவருக்கும் கல்வி கற்பிப்பது, நடுத்தரக் கல்வி நிலையிலும், பல்கலைக் கழக நிலையிலும் விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதை அபிவிருத்தி செய்வது, பலதரப்பட்ட ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பது, தொழில் நுட்பக் கல்வியைப் பரப்புவது, ஆகியவையே கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இவற்றை முக்கியமாக வலியுறுத்தியுள்ளோம். துவக்க நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி, பலகலைக் கழகக் கல்வி, ஆகியவற்றின் வேலைத் திட்டங்களை இநதப் பிரிவில் ஆராய்நதுள்ளோம். தொழில் நுட்பக் கல்வி வேலைத் திட்டங்களை அடுத்த பிரிவில் ஆராய்ந்துள்ளோம்.

2. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப பிறகு எல்லா நிலைகளிலும் கல்வி வசதி குறிப்பிடத் தக்க அளவு அபிவிருத்தி அடைந்துள்ளது. பிரச்சினையின் அளவையும், இந்த நாட்டிலுள்ள மனிதர்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்வதன் அவசியத்தையும் அனைவருக்கும் சம வாய்ப்பு கிடைக்கச் செய்வதன் அவசியத்தையும் கருதிப் பார்த்தோமானால், இத் துறையில் இன்னும் அதிக அபிவிருத்தி ஏற்பட வேண்டியது அவசியமாகும். எனவே, மூன்றாவது திட்டக் காலத்தில் 6—11 வயதுத் தொகுதியிலுள்ள அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதென முடிவு செய்துள்ளோம். இந்த முடிவை நிறைவேற்றுவதற்காக எல்லா மாநிலங்களிலும் விரிவான கல்வி ஆராய்ச்சியை மேற்கொண்டோம். பள்ளிக்கூடங்கள் செயல்பட வேண்டிய பகுதிகளை நிர்ணயிப்பதும், புதிய பள்ளிகளை எங்கு ஏற்படுத்துவதென நிர்ணயிப்பதும், பள்ளிகள் இருக்கின்ற பகுதிகளை வரையறுப்பதும் இந்த ஆராய்ச்சியின் நோக்கங்களாகும்.

3. தொழில் நுட்பக் கல்வி உட்பட, கல்வி வேலைத் திட்டங்களுக்கு இரண்டாவது திட்டத்தில் ரூ. 273 கோடி செலவாகுமென எதிர்பார்த்தோம். மூன்றாவது திட்டத்தில் இதற்கென ரூ. 500 கோடி ஒதுக்கியுள்ளோம். இதில் ரூ. 370 கோடி பொதுக் கல்விக்கு உரியதாகும். ரூ. 130 கோடி தொழில் நுட்பக் கல்விக்குரியதாகும். இரண்டாவது திட்டத்தில் இவற்றிற்கு முறையே ரூ. 213 கோடியும், ரூ. 60 கோடியும் மட்டுமே ஒதுக்கியிருந்தோம். துவக்க நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, மற்ற பொது வேலைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கிடையே இத் தொகையை எவ்வாறு பங்கிடுவது என்பதை மாநிலங்கள் வகுத்துக் கொடுக்கும் திட்டங்களை அனுசரித்தே செய்வோம். ஆனால், இப்போது தோராயமாக அடியிற் கண்டவாறு செய்ய உத்தேசித்துள்ளோம். துவக்கக் கல்விக்கு ரூ. 180 கோடி ஒதுக்கப்படலாம். உயர்நிலைக் கல்விக்கு ரூ. 90 கோடி ஒதுக்கப்படலாம். பல்கலைக் கழகக் கல்விக்கு ரூ. 75 கோடி ஒதுக்கப்படலாம். மற்ற

வேலைத் திட்டங்களுக்கு ரூ. 25 கோடி ஒதுக்கப்படலாம். இரண்டாவது திட்டத்தில் இத் துறைகளில் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் செலவினங்களோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கலாம். இரண்டாவது திட்டத்தில் துவக்கக் கல்விக்கு ரூ. 92 கோடியும், உயர்நிலைக் கல்விக்கு ரூ. 45 கோடியும், பல்கலைக் கழகக் கல்விக்கு ரூ. 44 கோடியும் மற்ற வேலைத் திட்டங்களுக்கு ரூ. 32 கோடியும் செலவாகும்.

4. முதலிரண்டு திட்டக் கால அளவுகளில் துவக்கக் கல்வியிலும், உயர் நிலைக் கல்வியிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் மூன்றாவது திட்ட இலக்குகளையும் கீழே அட்டவணையில் சுருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளோம். (பொருத்தமான நிலையில் ஒவ்வொரு வயதுத் தொகுதியிலும் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறுவர்களின் வீதாச்சாரத்தை அட்டவணையில் காட்டியுள்ள சத வீதம் குறிக்கிறது.)

மாணாக்கர்களைச் சேர்த்தல்.

ஆண்டு.	சேர்த்தல் (லட்சக் கணக்கில்).			சத வீதம்.		
	6–11 வயதுத் தொகுதி.	11–14 வயதுத் தொகுதி.	14–17 வயதுத் தொகுதி.	6–11 வயதுத் தொகுதி.	11–14 வயதுத் தொகுதி.	14–17 வயதுத் தொகுதி.
1950–51	192	31	12	43·1	12·9	5·4
1955–56	252	43	20	51·0	16·3	8·1
1960–61 (எதிர்பார்ப்பது).	330	61	30	60·0	22·6	12·0
1965–66 (இலக்கு).	504	100	44	80·0	30·0	15·0

இந்த இலக்குகளை எய்தப் பெறுவதற்காக மாநிலங்கள் விரிவான திட்டங்களை வகுக்க வேண்டும். இலக்கை எய்த வேண்டுமானால், 3-வது பாராவில் குறிப்பிட்டுள்ள தொகைகளை மாற்றி அமைக்க வேண்டும் என மாநில அரசாங்கங்கள் பின்னும் ஆராய்ச்சி செய்து கூறுவார்களாயின் அத் தொகைகள் அவ்வாறே மாற்றி அமைக்கப்படும்.

துவக்கக் கல்வி.

5. துவக்கக் கல்வியை, பொதுவாக இரண்டு நிலைகளாகப் பிரித்துள்ளோம். அவையாவன :—(அ) 6—11 வயதுத் தொகுதியினருக்கு ஆரம்பக் கல்வி (ஆ) 11—14 வயதுத் தொகுதியினருக்கு இடைநிலைக் கல்வி. 6—11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களில் 60 சத வீதத்தினர் இரண்டாவது திட்ட முடிவில் பள்ளிக்கூடங்களில் படித்துவருவார்களென மதிப்பிட்டுள்ளோம். 1950–51-முதல் 1960–61 வரையுள்ள கால அளவில் இத் தொகுதியினரில் பள்ளிக்கூடம் போகும் மாணவர்களின் சத வீதம் 60-லிருந்து 79 ஆகவும், மாணவியரின் சத வீதம் 20-லிருந்து 40 ஆகவும் அதிகரித்துள்ளது. மாணவரும், மாணவியரும் பள்ளிக்கூடம்

போவதிலுள்ள ஏற்றத்தாழ்வு வரவரக் குறைந்துவருகிறதென்ருலும் மாணவியரை விட மாணவர்களே அதிகம் பேர் பள்ளிக்கூடம் செல்கிருர்கள். இதை உத்தேசித்தும், சில பகுதிகள் மிகப் பின்னிலேயில் இருப்பதை உத்தேசித்தும், மூன்ருவது திட்ட முடிவில் 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த சிறுவர்களில் பள்ளிக்கூடத்துக்குப் போவோர்களின் எண்ணிக்கை 80 சத வீதத்திற்கு மேற்படாதென மதிப்பிட்டுள்ளோம். மாணவரின் விஷயத்தில் இக் கால அளவுக்குள் எல்லா மாணவர்களேயும் படிக்க வைக்க முடியும். மாணவிகளின் விஷயத்தில் இந்த எண்ணிக்கை 60 சத வீதமாகத்தான் இருக்கும். எனவே, ஆரம்பக் கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 30 லட்சத்திலிருந்து 5 கோடியாக உயரும். இந்த வேலேத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 4 லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வேண்டியிருக்கும்.

6. 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மாணவிகள் பள்ளிக்குச் செல்லும் வீதாச்சாரம் மற்ற மாநிலங்களில் உள்ளதை விட மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய ஆறு மாநிலங்களில் குறைவாகவே உள்ளது. மூன்ருவது திட்டக் கால அளவில் இத் துறையில் அனேத்திந்திய வீதாச்சாரம் 80 சத வீதமாக உயரும் வரையில் இம் மாநிலங்களில் ஆரம்பக் கல்வி வேலேத் திட்டங்களுக்கு வேண்டிய வசதிகளும் நிதி உதவியும் செய்து தரப்படும்.

7. 1951-61 வரையிலுள்ள பத்தாண்டுக் கால அளவில் 11-14 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மாணுக்கர்களின் வீதாச்சாரம் 13 சத வீதத்திலிருந்து 23 சத வீதமாக அதிகரிக்கும். இத் தொகுதியிலும்கூட படிக்கும் மாணவர்கள் வீதாச்சாரத்திற்கும், மாணவிகளின் வீதாச்சாரத்திற்கும் உள்ள ஏற்றத் தாழ்வு குறைந்துவருகிறதென்ருலும், இன்னும் அது கணிசமாகவே இருக்கிறது. இரண்டாவது திட்ட முடிவில் அதே வயதுத் தொகுதி உள்ளவர்களில் 34 சத வீதம் பிள்ளேகள் படிக்கிருர்களென்ருல் பெண்களில் 11 சத வீதத்தினர்தான் படிக்கிருர்கள். மூன்ருவது திட்டக் கால அளவில் 11-14 வயதுத் தொகுதியைச் சேர்ந்த சிறுவர்களில் பள்ளிக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை இரு மடங்காகும். இது இந்த வயதுத் தொகுதியினர்களில் 30 சத வீதமாயிருக்கும். இவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்க உரிய வசதி செய்து கொடுப்பதுடன் தொடர்ந்து கல்வி கற்பதற்கும் இவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். 11 வயது வரை கல்வி கற்கிற சிறுவர்களுக்கு எளிய முறையில் தொழில் நுட்பப் பயிற்சியளிக்கும் திட்ட மொன்றை, தொழிலாளர்—வேலே வாய்ப்பு அமைச்சு வகுத்துள்ளது. 11-14 வயதுத் தொகுதியிலுள்ளவர்களுக்குக் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் நோக்கம் அரசியலமைப்பு நெறி முறைக் கோட்பாட்டில் சொல்லியுள்ளவாறு நிறைவேறுவதற்காக நான்காவது ஐந்தாவது திட்டக் கால அளவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

8. துவக்கப் பள்ளிகள் அனேத்தையும் அடிப்படை முறையில் அமைக்க ஏற்கெனவே முடிவு செய்துள்ளோம். இரண்டாவது திட்டக் கால முடிவில்

24 சத வீத துவக்கப் பள்ளிகள் அடிப்படை முறையில் அமைந்திருக்கும். மூன்றாவது திட்டக் காலத்தில் இந்த வேலை தொடர்ந்து நடக்கும்.

9. இதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அவசியமாகும். எனவே, ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பது குறித்து மூன்றாவது திட்டத்தில் வலியுறுத்திக் கூறியுள்ளோம். பெரும்பாலான ஆசிரியர்கள் இப்போது அடிப்படை முறைகளில் பயிற்சி பெற்றுவருகிறார்கள். பயிற்சி நிறுவனங்களில் 70 சத வீதம் உள்ளவை 1960–61-க்குள் அடிப்படைக் கல்வியில் பயிற்சி அளிக்கும். மூன்றாவது திட்ட முடிவுக்குள் மிச்சமுள்ள நிறுவனங்களும் இத் திட்டத்தின்கீழ் வந்துவிடும். புதிய பயிற்சி நிறுவனங்கள் யாவும் அடிப்படை முறையிலேயே அமைந்திருக்க வேண்டும். இப்போதுள்ள நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமாகவே இயன்ற வரையில் பயிற்சி வசதிகளை விரிவுபடுத்துவோம். அப்போதுதான், மூன்றாவது திட்ட முடிவுக்குள் 80 சத வீத ஆசிரியர்களேனும் இத் துறையில் பயிற்சி பெற்றவர்களாயிருப்பார்கள். மற்றவர்கள் சிறுகாலப் பயிற்சி பெறுவார்கள். மூன்றாவது திட்டக் கால அளவில் துவக்கப் பயிற்சி ஆசிரியர்களின் பயிற்சிக் கால அளவு எல்லா மாநிலங்களிலும் இரண்டாண்டுகளாக இருக்கவேண்டுமென உத்தேசித்துள்ளோம். ஏராளமான பயிற்சிப் பள்ளிகளில் நலப் பரப்புத் துறைகள் அமைக்கப்படும். இப்போதுள்ள பயிற்சிப் பள்ளிகளில் உள்ள சாதனங்களையும் நூலகங்களையும் மற்ற வசதிகளையும் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

10. சாதனங்களையும் பள்ளிக் கட்டிடத்தையும் சமுதாயத்தினரே கொடுக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற்கு அருகே அபிவிருத்தி நடக்கைவடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அந்த இடங்களுக்கு மாணாக்கர்களை அழைத்துச் சென்று நேர்முகக் கல்வி கற்பிக்க இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால், கற்பிக்கப்படும் கல்வியின் தரமும் உயரும்; நிலம், சாதனம், இவற்றிற்காகப் பள்ளிக்கூடம் செய்ய வேண்டிய அதிகப்படி செலவும் குறைந்து விடும்.

11. அடிப்படைக் கல்வி கற்பிக்க ஏராளமான ஆசிரியர்கள் வேண்டும். இப்போதுள்ள ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் அடிப்படைக் கல்வி முறையில் பயிற்சி பெறவில்லை. எனவே, எல்லாப் பள்ளிகளையும் அடிப்படைக் கல்வி முறையில் மாற்றியமைக்கவேண்டுமானால் வெகுகாலம் பிடிக்கும். ஆனால், எல்லாப் பள்ளிகளையும் அடிப்படை முறையில் மாற்றியமைக்கவேண்டுமென்னும் கொள்கையை மத்திய அரசாங்கத்தாரும் மாநில அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இத் துறையில் இரண்டாவது திட்டக் காலத்திலேயே ஓரளவு முன்னேற்றம் கண்டோம். மூன்றாவது திட்டக் கால அளவில் பழைய பள்ளிகள் யாவும் அடிப்படைக் கல்வி முறையில் மாற்றியமைக்கப்படும்; இக் கால அளவில் ஆரம்பமாகும் புதிய பள்ளிகள் அடிப்படை முறையிலேயே அமைந்திருக்கும். முடிந்த அளவுக்கு சமுதாய முயற்சியுடனும் திட்டத்தில் இதற்காக அரசாங்கத்தார் ஒதுக்கியுள்ள நிதி உதவியைக் கொண்டும் அடிப்படைக் கல்வி முறையில் செய்ய முடிந்தவற்றை இப் பள்ளிகள் செய்யத் தொடங்கும்.

12. இப்போதிருக்கும் அடிப்படை நிறுவனங்களிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்தே அடிப் படைக் கல்வித் துறையில் முன்னேற்றமிருக்கும். எனவே, போதிய பயிற்சி அளிக்கவேண்டும். கல்வி கற்பிக்கும் முறைகளைச் சீர்திருத்த வேண்டும். திறமையாகப் பார்வையிடவேண்டும். வேண்டிய புத்த கங்களை வாங்கித் தரவேண்டும். வேளாண்மை, கிராமத் தொழில்கள், சமுதாய வளர்ச்சி, சமூகக் கல்வி முதலிய துறைகளில், அடிப்படைக் கல்வி நடவடிக்கைகளையும் உள்ளூர் சமுதாய நடவடிக்கைகளையும் இணக்க ஊக்கமுடன் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். பள்ளி நட வடிக்கைகளையும் ஸ்தல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் நல்ல முறையில் இணைப்பதற்காக, பொறுக்கியெடுத்த வளர்ச்சி வட்டாரங்களில் மாதிரி சீனியர் அடிப்படைப் பள்ளிகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம்.

அடிப்படைக் கல்வி கிராமப் பகுதிகளிலேயே பெரும்பாலும் இருப்பதால், அது பெருமளவில் வளர முடிவதில்லை. எனவே, இக் குறையைப் போக்க நகரப் பகுதியிலும் மாதிரி அடிப்படைப் பள்ளிகளை அமைக்க உத்தேசித்துள்ளோம்.

உயர்நிலைக் கல்வி.

13. 14—17 வயதுத் தொகுதியினரில் உயர்நிலைக் கல்வி பெறும் மாணுக்கர்களின் சத வீதம் முதல் திட்டத்துக்கு முன் 5 சத வீதமா யிருந்தது. 1960–61-க்குள் இது 12 சதவீதமாக உயரும். மூன்ருவது திட்டக் கால முடிவில் இது 15 சத வீதத்துக்குமேல் அதிகரிக்குமென நம்புகிறோம். துவக்கக் கல்வி விஷயத்தில் இருப்பதைப்போலவே இடை நிலைக் கல்வி விஷயத்திலும் படிக்கும் மாணவ மாணவியரின் எண் ணிக்கையில் வேறுபாடு உள்ளது. ஒரே வயதுத் தொகுதியினரில் 24·5 சத வீத பிள்ளைகள் இடைநிலைக் கல்வி கற்கிருர்கள். ஆனுல், பெண் களின் விஷயத்தில் இது 6·7 சத வீதமாகவே உள்ளது.

14. மூன்ருவது திட்டக் கால அளவில் உயர்நிலைக் கல்வியை மூன்று துறைகளில் சீர்திருத்தி அமைக்க உத்தேசித்துள்ளோம். (அ) விஞ்ஞானக் கல்வி வசதிகளை அதிகரிப்பது ; (ஆ) இரண்டாவது திட்டக் கால அளவில் ஏற்படுத்திய பல நோக்குப் பள்ளிகளை அபிவிருத்தி செய்து ஓரளவு அவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது; (இ) புதிய இடை நிலைப் பள்ளிகளை உயர் இடைநிலைப் பள்ளிகளாக அமைப்பதும், இப் போதுள்ள இடைநிலைப் பள்ளிகளை முடிந்த அளவுக்கு இம் முறைக்கு மாற்றுவதுமாகும்.

15. இரண்டாவது திட்டக் கால முடிவில் மொத்தமுள்ள 14,000 இடை நிலைப் பள்ளிகளில் 11,500 பள்ளிக் கூடங்களுக்கு விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதற்குரிய வசதிகள் கிடைக்கும். மூன்ருவது திட்டக் கால முடிவில் இப் பள்ளிகளின் எண்ணிக்கை 18,000 ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கிறேம். ஆய்வுக் கூடங்களுக்காக விசேஷ உதவி அளித்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து இப் பள்ளிகள் எல்லாவற்றிலும் பொது விஞ்ஞானப் படிப்பு ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும். பொது

விஞ்ஞானப் படிப்புடன் விஞ்ஞானத்தைத் தேர்ந்தெடுத்த பாடமாகப் பள்ளிகளில் கொண்டுவர முடிந்த அளவு முயற்சி செய்யவேண்டும். இதற்கு, கற்பிக்கும் வசதிகளின் தரம் உயர்ந்திருக்கவேண்டும். பொது விஞ்ஞானப் படிப்பு கற்பிக்கப்படுகிற 4,000 பள்ளிகளில் இந்த முறை அமுலுக்கு வரும். ஆய்வுக்கூட வசதி ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, போதிய தகுதியும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் வேண்டிய அளவு இல்லாமையே விஞ்ஞானப் படிப்பை அபிவிருத்தி செய்வதிலுள்ள முக்கிய கஷ்டமாகும். இது குறித்து அனைத்திந்திய இடைநிலைக் கல்விக் கழகம் அண்மையில் உருவான யோசனைகள் பல கூறியுள்ளது. விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் ஆய்வுக்கூட உதவியாளர்களுக்கும் விசேஷப் பயிற்சி அளிக்கும் திட்டங்களும் விஞ்ஞான ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாமலிருப்பதைப் போக்க எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளும் இக் கழகம் கூறிய ஆலோசனைகளில் அடங்கும். விஞ்ஞானக் கருவிகளை ஒத்த தரமுள்ளவைகளாகச் செய்ய வேண்டுமென்றும் இச் சாதனங்களைக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டுமென்றும் இக் கழகம் சிபாரிசு செய்துள்ளது. விஞ்ஞானக் கருவிகள் பிரச்சினைகளை ஒரு குழு அண்மையில் ஆராய்ந்தது. பள்ளிகளுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் வேண்டியுள்ள விஞ்ஞானக் கருவிகளை முடிந்த அளவுக்கு இந்த நாட்டிலேயே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும், இவற்றை இந்த நாட்டில் தயாரிப்பவர்களையும் தயாரிக்கக்கூடியவர்களையும் இப் பள்ளிகளுக்கு இன்னும் பல ஆண்டு வேண்டியுள்ள விஞ்ஞானக் கருவிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வதென்றும் முடிவு செய்துள்ளோம்.

16. இரண்டாவது திட்டக் கால அளவில் 1,550 உயர்நிலைப் பள்ளிகள் பல நோக்கப் பள்ளிகளாக மாற்றியமைக்கப்படும். சிறப்பாகச் செயல் முறைக் கல்வி அளிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பெறுவதில் இந்த நிறுவனங்கள் கஷ்டப்படுகின்றன. பல நோக்கப் பள்ளிகள் சில அமைக்கப்படலாமென்றாலும், ஏற்கெனவேயுள்ள நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதையும் அப் பள்ளிகளில் கல்வி கற்பிப்பதற்குப் போதுமான வசதிகளை ஏற்படுத்துவதையும் மூன்றுவது திட்டத்தில் வலியுறுத்த வேண்டுமென ஆலோசனை கூறியுள்ளோம். வேண்டிய அளவு ஆசிரியர்கள் கிடைப்பதற்காக நான்கு வட்டாரப் பயிற்சிக் கல்லூரிகள் அமைப்பதெனவும் முடிவு செய்துள்ளோம்.

17. புதிய இடைநிலைப் பள்ளிகள், உயர் இடைநிலை முறையில் அமைந்திருக்க வேண்டுமென யாவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். இரண்டாவது திட்டக் கால முடிவுக்குள் 2,550 இடைநிலைப் பள்ளிகள் இந்த முறைக்கு மாறும். இப்போதுள்ள 2,000 பள்ளிகளின் தரத்தை உயர்த்தி 4,000 புதிய பள்ளிகள் ஏற்படுத்தினால் மூன்றுவது திட்டக் கால முடிவுக்குள் 9,000 உயர் இடைநிலைப் பள்ளிகள் ஏற்பட்டுவிடும். இந்த எண்ணிக்கை இடைநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கையில் செம்பாதியாக இருக்கும்.

18. பின்னர் வேலை கிடைப்பதற்கேற்ற வகையிலும் நடை முறைக்கு உகந்த வகையிலும் இடைநிலைக் கல்வி இருக்க வேண்டுமென்பதற் காகவே இடைநிலைக் கல்வியைச் சீர்திருத்தி வருகிறோம். இதுவே இந்தச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கைப்பணிப் பயிற்சியை முக்கிய பாடமாகக் கொண்டுவருவது மூலமாகவும் பல நோக்கப் பள்ளிகளில் பட்டறைப் பயிற்சி அளிப்பதன் மூல மாகவும் இந்த நோக்கத்தை நிறைவேற்றி வருகிறோம். போதிய ஆசிரியர்கள் இல்லாததாலும் தகுந்த சாதனங்கள் கிடைக்காததாலும் கைப்பணிகள் கற்பிக்கும் வேலை இப்போது சரிவர நடக்கவில்லை. மாநிலத் திட்டங்களில் இப் பிரச்சினைகளைத் தீர்க்க உரிய கவனஞ் செலுத்த வேண்டு மென்று ஆலோசனை கூறுகிறோம்.

19. கல்வி ஆராய்ச்சியின் அவசியத்தை மிகவும் வலியுறுத்தி வரு கிறோம். மத்தியக் கல்வி நிறுவனத்திலும் மாநிலங்களில் பல பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆராய்ச்சி வசதிகளை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளோம். தேர்வு முறையைச் சீர்திருத்துவது பற்றிய பிரச்சினைகளைக் கவனமுடன் ஆராய்ந்து ஒரு திட்டம் வகுத்து வருகிறோம்.

பல்கலைக் கழகக் கல்வி.

20. இரண்டாவது திட்டக் கால முடிவில் 41 பல்கலைக் கழகங்களும் 1,050 கல்லூரிகளும் இருக்கும். இக் கல்விக்கூடங்களில் கலைப் பிரிவிலும் விஞ்ஞானப் பிரிவிலும், வாணிகப் பிரிவிலும் 1955–56-ம் ஆண்டில் 6,34,000 ஆக இருந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 1960–61-ம் ஆண்டில் 9,00,000 ஆக அதிகரித்தது. எனினும், விஞ்ஞான மாணாக்கர் களின் எண்ணிக்கை இரண்டாவது திட்ட முடிவில் 2,09,000-லிருந்து 2,70,000 ஆக மட்டுமே உயரும். வீதாச்சாரத்தைக் கணக்கிட்டுப் பார்த் தால், 1956-க்கும் 1961-க்கும் இடையில் விஞ்ஞான மாணாக்கர்களின் வீதாசாரம் குறைந்திருப்பது தெரியவரும். எனவே, விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதற்குரிய வசதிகளை அதிகப்படுத்துவதே மூன்றாவது திட்டத்திலுள்ள மிக முக்கிய வேலைகளில் ஒன்றாயிருக்கவேண்டும். விஞ்ஞான மாணாக் கரின் வீதாச்சாரத்தை 40 சத வீதமாக அதிகரிக்கவேண்டும். பள்ளி களுக்கு விஞ்ஞான ஆசிரியர்கள், பொறியியல் நிறுவனங்களுக்கும் மற்ற தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும் மாணவர்கள், தொழில் துறை முதலிய பல துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இது அவசிய மாகும். ஆய்வுக்கூட வசதிகளை அதிகரிக்கவும் கல்வி கற்பிப்பதற்குப் போதிய ஆசிரியர்களைப் பெறவும் உடனடியாக முனைந்து முயற்சி எடுத்துக் கொண்டால் இந்த நோக்கம் நிறைவேறும். பல்கலைக் கழக மானியக் கழகம் இந்தப் பிரச்சினையில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது.

21. பல்கலைக் கழகக் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்காகக் கடந்த சில ஆண்டுகளில், பல்கலைக் கழக மானியக் கழகமும், பல்கலைக் கழகங்களும், மற்ற அதிகார சபைகளும் பல நடவடிக்கை எடுத்துள்ளன. மூன்றாண்டுப் பட்டப் படிப்பு முறையை அமுலுக்குக் கொண்டு வந்தது, நூல் நிலையங்களையும் ஆய்வுக் கூடங்களையும் அபிவிருத்தி செய்தது,

பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தது, மாணவர் விடுதி வசதி ஏற்படுத்தியது, திறமை உபகாரச் சம்பளமும், ஆராய்ச்சி உபகாரச் சம்பளங்களும் ஏற்படுத்தி வழங்கியது, ஆசிரியர்களின் ஊதிய வீதங்களை உயர்த்தியது, ஆசிரியர் போதனு சாலைகள், கருத்தரங்குகள் அமைத்தல், மாணுக்கர்களின் நலன்களைத் கவனித்தல் ஆகியவை இந்த நடவடிக்கைகளில் ஒரு சிலவாகும். உபகாரச் சம்பளம், ஆசிரியர் உபகாரச் சம்பளம், ஆராய்ச்சி மாணவர்கள் முதலியவர்களுக்காக அதிக நிதி ஒதுக்க உத்தேசித்துள்ளோம். பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள நெருக்கடியைக் குறைப்பதற்காக மாலைக் கல்லூரிகளையும், தபால் மூலம் கல்வி கற்பிப்பதையும், வெளித் தேர்வுகளையும் பெருமளவில் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம்.

22. பல்கலைக் கழகக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இரண்டாவது திட்டக் கால அளவில் கொண்டுவரப்பட்ட பல திட்டங்கள் மூன்றாவது திட்டக் காலத்தில் பெரிதும் நிறைவேற்றப்படும். தேர்வு முறை சீர்திருத்தம், ஆசிரியர்–மாணுக்கர் வீதாச்சார அபிவிருத்தி, ஆராய்ச்சி செய்வதற்கும் புத்தகங்கள் வெளியிடுவதற்கும் மானியங்கள், முக்கிய பிரச்சினைகளை விவாதிப்பதற்காகக் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்துதல், மாணுக்கர்களுக்கு வசதிகளையும் சௌகரியங்களையும் ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இதில் அடங்கும். இவற்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், மாணுக்கர் ஒழுங்கீனப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணமுடியும்.

23. மூன்றாவது திட்டத்தில் பல்கலைக் கழகக் கல்விக்கு ரூ. 75 கோடி நிதி ஒதுக்கியுள்ளோம். இதற்கு இரண்டாவது திட்டத்தில் ரூ. 44 கோடியும், முதலாவது திட்டத்தில் ரூ. 15 கோடியும் மட்டுமே ஒதுக்கியிருந்தோம். விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதற்குரிய வசதிகள் ஏற்படுத்தல், ஆசிரியர்களின் ஊதிய வீதங்களை அதிகரித்தல், ஆய்வுக் கூடங்களையும் நூலகங்களையும் அபிவிருத்தி செய்தல், பட்ட மேற்படிப்புக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் ஏற்பாடு செய்தல், உபகாரச் சம்பளமும் கடனும் வழங்கல், மாணவர் விடுதிகளும் ஆசிரியர் விடுதிகளும் கட்டுவதற்கு உதவி அளித்தல், கிராம நிறுவனங்கள், மாலைக் கல்லூரிகள், தபால் மூலம் கல்வி கற்பித்தல், முன்னேடித் திட்டங்கள் இவற்றிற்கு உதவி அளித்தல் ஆகியவை மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களில் ஒரு சிலவாகும்.

சமூகக் கல்வி.

24. இரண்டாவது திட்டக் கால அளவில் சமூகக் கல்வி வேலையில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். எழுதப் படிக்கக் கற்பிக்கும் நிலையங்கள், சமுதாய நிலையங்கள், படிப்பகங்கள், நூல்நிலையங்கள் ஆகியவைகளைப் பெருமளவில் ஏற்படுத்தியுள்ளோம். பெருவாரியான மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைகளையும் அதிலுள்ள பிரச்சினைகளையும் தேசீய மூலாதாரக் கல்வி நிறுவனமும், அனைத்திந்திய காட்சி - கேள்வி கல்வி நிறுவனமும் ஆராய்ந்து வருகின்றன. இந் நாட்டின் பற்பல பகுதிகளிலும் அடிப்படை வேலைகளைச் செய்து பலர் ஏற்கெனவே வழிகாட்டி

யுள்ளனர். இதன் அடிப்படையில் சிறப்பாக முதியோருக்குக் கல்வி கற்பிக்கும் நோக்கத்துடன் சமூகக் கல்வித் திட்டத்தை உருவான முறையில் வகுக்க முடியும். இது குறித்து முடிவான அறிக்கையில் விரிவாக ஆராய உத்தேசித்துள்ளோம்.

கல்வியில் ஒழுக்க அறிவும் சமூக அறிவும்.

25. கல்வியின் எல்லா நிலைகளிலும் மாணுக்கருக்குக் ஒழுக்க அறிவையும் சமூக அறிவையும் போதிப்பதன் அவசியத்தை இங்கு ஓரளவு குறிப்பிடலாம். இத் துறைகளில் மாணவர் அறிவு பெற்றுலொழிய வெறும் கல்வி அறிவால் பலன் இருக்காதென பலரும் உணர்ந்து வருகிருர்கள். இவ் விஷயத்தை அண்மையில் சிறப்புக் குழு ஒன்று ஆலோசனை செய்தது. இக் குழுவின் சிபாரிசுகளை மத்தியக் கல்வி ஆலோசனைக் கழகம் பொதுவாக ஏற்றுக்கொண்டது. ஒழுக்க நெறிகளிலும் சமூக நெறிகளிலும் பற்றும் நம்பிக்கையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் புத்தகங்கள் இருக்க வேண்டு மென்றும், உயர் ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கவேண்டுமென்றும் கூட்டாக வேலை செய்வது உட்பட திட்டமான முறையில் சமூகப் பணி புரிவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் அக் குழு சிபாரிசு செய்துள்ளது.

தேசப் பணி.

26. கற்றறிந்தவர்களின் ஆற்றலை அதிகரிப்பதற்காகக் கட்டாயத் தேசப் பணித் திட்ட மொன்றை அமுலுக்குக் கொண்டு வரலாமாவென்று சில காலமாக யோசித்து வருகிறோம். இத் திட்டப்படி வாலிபர்களின் ஆற்றல் நல்ல வழியில் பயன்படுத்தப்படும். நாட்டின் பொருளாதார, சமூகக் காரியங்களில் அவர்கள் பங்கெடுத்துக்கொண்டு நாட்டின் பாதுகாப்பிலும் அக்கறை உள்ளவர்களாவதற்கு இத் திட்டம் பயன்படும். இது முக்கிய மாகக் கல்விச் சீர்திருத்தமே ஆகும். இதனுல் மாணுக்கரிடையே ஒழுக்க உணர்வும் தேசீய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் சமூகச் சேவா உணர்வும் உழைப்பின் பெருமையில் மதிப்பும் ஏற்படும்.

மற்ற வேலைத் திட்டங்கள்.

27. மொழி அபிவிருத்தி, பண்பாட்டு அபிவிருத்தி, இளைஞர் வேலைத் திட்டம், தேசீய மத்திய மேற்கோள் நூல் நிலையம் அமைத்தல் ஆகிய வேலைத் திட்டங்களுக்கு மூன்றுவது திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளோம். இத் திட்டங்கள் இரண்டாவது திட்டக் காலத்திலேயே துவக்கப்பட்டவையாகும்.

2. தொழில் நுட்பக் கல்வி.

28. இரண்டாவது திட்டக் காலத்தில் தொழில் நுட்பக் கல்வி வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளது. பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 65-லிருந்து 97 ஆக உயர்ந்துள்ளது. இவைகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 5,888லிருந்து 13,165 ஆக அதிகரித்தது. பல தொழில் பயிற்சிப் பள்ளிகள் 114-லிருந்து 197 ஆகப் பெருகின. இவைகளில் ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளும் மாணவர் களின் எண்ணிக்கை 10,484லிருந்து 24,020 ஆக உயர்ந்தது. இத் தகைய பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்க ஐந்தாண்டுக் காலமும் டிப்ளமா படிப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்க மூன்றுண்டுக் காலமும் ஆவதால்

ஆண்டுதோறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 4,000லிருந்து 8,300 ஆகவும், டிப்ளமா வாங்குபவரின் எண்ணிக்கை 4,000 லிருந்து 10,000 ஆகவும் மட்டுமே உயர்ந்துள்ளது. எனினும், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இப்போதுள்ள பொறியியல் கல்லூரிகளின் மூலம் ஆண்டுதோறும் பட்டம் பெறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 1965-ம் ஆண்டு முடிவுக்குள் 11,500 ஆகவும், பல தொழில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 18,900 ஆகவும் உயர்ந்துவிடும்.

29. இரண்டாவது, மூன்றுவது, நான்காவது திட்டக் காலத்தில் பொறியியல் பட்டதாரிகளும் டிப்ளமா பெற்றிருப்பவர்களும் எவ்வளவு பேர் வேண்டியிருக்கும், எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்ற விவரத்தைக் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம். மூன்றுவது திட்டக் காலத்தில் அதிக வசதி ஏற்பட்டுள்ளதன் அடிப்படையில் நான்காவது திட்டக் காலத்தில் எவ்வளவு பேர் பயிற்சி நிறைவு பெறுவரெனக் கணக்கிட்டுள்ளோம்.

வகை.	2-வது திட்டம் 1956—61		3-வது திட்டம் 1961—66		4-வது திட்டம் 1966—71	
	தேவைப் படுவோ.	கிடைப் போர்.	தேவைப் படுவோர்.	கிடைப் போர்.	தேவைப் படுவோர்.	கிடைப் போர்.
1. பட்டதாரிகள் ..	28,000	26,060	45,000	51,000	75,000	75,275
2. டிப்ளமா .. பெற்றுள்ளோர். ..	54,000	32,000	80,000	76,000	1,20,006	1,17,500

30. பயிற்சி பெறுவதற்கு இப்போதுள்ள வசதிகளை அனுசரித்து 3-வது திட்டத்திற்கு எவ்வளவு பேர் கிடைப்பர் என்பதை மதிப்பிட்டுள்ளோம். மூன்றுவது திட்டத்தில் வேண்டியுள்ள பொறியியல் பணியாளர்கள் 45,000 பட்டதாரிகளென்றும் 80,000 டிப்ளமா பெற்றிருப்பவர்களென்றும் மதிப்பிட்டுள்ளோம். வேண்டிய அளவு இவர்கள் கிடைப்பார்கள்; டிப்ளமா பெற்றிருப்பவர்கள் வேண்டிய அளவு கிடைப்பதில் ஓரளவு குறை இருக்கும். இதை நிறை செய்ய மூன்றுவது திட்டக் காலத்தில் இயன்ற வரையில் அதிகப் பயிற்சி வசதி செய்யப்படும்.

மூன்றுவது திட்டத்திலும் அடுத்து வரும் திட்டங்களிலும் யந்திரப் பொறியியல், மின்சாரப் பொறியியல், ரசாயனப் பொறியியல் ஆகியவை வலியுறுத்தப்படும். சுரங்க வேலே, உலோக வேலே, மற்ற தொழில்களில் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் அவசியமும் வலியுறுத்தப்படும். இதற்கேற்ற வகையில் மூன்றுவது திட்டக் கால அளவில் இத் துறைகளில் சேர்க்கப்படும் மாணவரின் எண்ணிக்கையை அதிகரிப்போம்.

31. மூன்றுவது திட்டக்காலத்தில் பட்டப் படிப்பு படிப்பதற்காக ஆண்டுதோறும் 6,000 மாணவர் சேர்த்துகொள்ளப்படுவர். இவர்களில் 5,000 பேர் பொறியியல் கல்லூரிகளில் சேருவர். ஆயிரம் பேர் பகுதி நேரப் படிப்பு மூலமாகவும் தபால் கல்வி மூலமாகவும் பயிற்சி பெறுவர். ஆண்டுதோறும் இவ்வாறு சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை 1961-ம் ஆண்டில் 13,200 ஆக இருந்தது 1966-க்குள் 19,200 ஆக அதிகரிக்கும்.

எனவே, நான்காவது திட்டக் காலத்துக்கு வேண்டியுள்ளவர்களென நாம் மதிப்பிட்டுள்ள 75,000 பொறியியல் பட்டதாரிகள் பொறியியல் கல்லூரிகள் மூலமாகவும், பகுதி நேரப் படிப்பு, தபால் கல்வி ஆகியவை மூலமாகவும் பயிற்சி பெறுவதற்குக் கிடைப்பர்.

இவ் வண்ணமே, டிப்ளமா படிப்பில் ஆண்டுதோறும் சேர்க்கப்படு வோரின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகப்படுத்த உத்தேசித்துள்ளோம். இவர்களில் 10,000 பேர் பல தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேருவர். மீதி 5,000 பேர் பகுதி நேரப் படிப்பிலும் தபால் மூலம் கல்வி பெறு வதிலும் ஈடுபடுவர். இரண்டாவது திட்டக் கால முடிவில் ஆண்டுதோறும் சேர்க்கப்படுபவரின் எண்ணிக்கை 24,000 ஆக இருக்க, இது மூன்றாவது திட்ட முடிவில் 39,000 ஆக உயரும். நான்காவது திட்டக் கால அளவில் 1,20,000 டிப்ளமா பெற்றவர்கள் தேவையென மதிப்பிட்டுள்ளோம். இத் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த ஏற்பாடுகள் போதுமானவையெனக் கருதுகிறோம். ஆனால், நடை முறையில் இந்தத் தேவை அதிகப்படலாம். அப்போது அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

ஆராய்ச்சி ஆய்வுக் கூடங்களிலும் பாதுகாப்பு, ரயில்வே, நீர்ப்பாசனம் மின் சக்தி, போக்குவரத்து-செய்தித் தொடர்பு ஆகிய இந்திய அரசாங்க அமைச்சுகள், பொதுப்பணித் துறை ஆகிய அரசாங்க நிறுவனங்களிலும், அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழில் நிறு வனங்களிலும் பட்டதாரி நிலையிலும் டிப்ளமா நிலையிலும் மேற்கொண்டும் பணியாளர்களுக்குப் பயிற்சி •அளிப்பதற்குள்ள - வசதிகளைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்போதுள்ள பொறியியல் கல்லூரிகளையும் பல தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் விஸ்தரித்து அவற்றில் ஆண்டுதோறும் அதிக எண்ணிக் கையில் மாணுக்கர்களைச் சேர்த்துக்கொள்வோம். அவசியமானபோது இத் துறையில் புதிய கல்லூரிகளையும் பள்ளிகளையும் நிறுவுவோம்.

32. தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற் காக மூன்றாவது திட்டத்தில் ரூ. 130 கோடி உத்தேசமாக ஒதுக்கியுள்ளோம். இரண்டாவது திட்டத்தில் இதற்கென ரூ. 60 கோடியும் முதல் திட்டத்தில் ரூ. 20 கோடியும் மட்டுமே ஒதுக்கியிருந்தோம்.

கட்டிடச் செலவைச் சிக்கனப் படுத்துவதிலும் கட்டிட வேலைகளை முடிந்த அளவு குறைப்பதிலும் விசேஷக் கவனம் செலுத்தி விரிவான மதிப்பீடுகளைத் தயாரிக்கவேண்டும். இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும். விரி வான திட்டங்களைப் பரிசீலனை செய்து முடித்த பிறகு, மேற்கொண்டு நிதி தேவையெனத் தெரிந்தால் மேற்கொண்டு நிதி ஒதுக்கித் தருவோம்.

33. இத் துறையில் மூன்றாவது திட்டக் கால அளவில் மேற்கொள்ள வேண்டிய வேலைகள் அடியிற்கண்டவையாகும். தன்பாதிலுள்ள சுரங்க வேலை செயல்முறை நில இயல் பள்ளியை அபிவிருத்தி செய்வது

டெல்லியிலுள்ள பல தொழில் பயிற்சிப் பள்ளியை அபிவிருத்தி செய்வதுக; கரக்பூரிலுள்ள இந்தியத் தொழிலியல் நிறுவனத்தையும் இரண்டாவது திட்டக் காலத்தில் பம்பாயிலும், கான்பூரிலும், சென்னையிலும் அமைக்கப் துள்ள தொழிலியல் நிறுவனங்களையும் அபிவிருத்தி செய்வது; அச்சுத் தொழிலைக் கற்பிப்பதற்கு இப்போதுள்ள நான்கு பள்ளிகளையும் நக ரமைப்பு—கிராம அமைப்பு நிறுவனத்தையும் மேற்கொண்டும் அபி விருத்தி செய்வது; செயல் முறைப் பயிற்சிக்காக உபகாரச் சம்பள மளிப்பது, ஆராய்ச்சிப் பயிற்சிக்காக உபகாரச் சம்பளமளிப்பது ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவோம். ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பயிற்சி அளிப்பவர்களுக்கு விடுதிகள் கட்டவும் ஏற்பாடு செய்துள்ளோம். எட்டு வட்டாரப் பொறியியல் கல்லூரிகளிலும் 27 பல தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் முன்னரே மேற்கொண்டுள்ள வேலைகளைத் தொடர்ந்து நடத்துவோம். தேர்ந்தெடுத்த சில நிறுவனங் களில் வசதிகளை அதிகரிக்கும் வேலையை இரண்டாவது திட்டத்தில் மேற் கொண்டோம். இதை இப்போது தொடர்ந்து நடத்தி நிறைவேற்றுவோம். பொறியியலில்-தொழிலியலில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் படிப்பு முறையை பல நிறுவனங்களில் அமுலுக்குக் கொண்டு வருவோம். பழங் காலத்திய சாதனங்களுக்குப் பதிலாக, புதிய சாதனங்கள் ஏற்படுத்தவும் போதிய அளவு சாதனம் பெற்றிராத புதிய நிறுவனங்களில் சாதனங்களை அதிகரிக்கவும் இத் திட்டத்தில் வகை செய்துள்ளோம். இரண்டாவது திட்டத்தில் 25 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகளை ஏற்படுத்தினோம். பல தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்குத் துணையாக மேற்கொண்டு 100 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகளை ஏற்படுத்தத் திட்டத்தில் வகை செய்துள்ளோம். இவற்றுடன் கூட, அதிக அளவில் பொறியியல் பணி யாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் உபகாரச் சம்பளங்கள் கொடுக்கவும் விடுதிகள் கட்டவும் ஆசிரியர்களின் சம்பள வீதங்களை உயர்த்தவும் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளோம்.

34. மேலே கூறியுள்ளவாறு இப்போதுள்ள நிறுவனங்களை விஸ்தரிப் பது மூலமாகத்தான் அவற்றில் அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள் வோம். இத் துறையில் நன்கு நிலைபெற்றுள்ள நிறுவனங்கள் இப் போது ஆண்டு தோறும் 240-300 மாணவர்களைத்தான் சேர்த்துக் கொள்கின்றன. இந்த எண்ணிக்கையை 400 ஆக உயர்த்த முடியு மெனப் பலரும் கருதுகிருர்கள். கற்பிக்கும் தரத்தைக் குறைக்காமல் இன்னும் அதிக அளவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளமுடியும். இத் துறையில் கல்வி நிறுவனங்களைப் புதிதாக ஏற்படுத்துவதானுல், முடிந்த வரையில் அவற்றைத் தொழிற்சாலைப் பகுதியிலேயே அமைக்க வேண்டும். அப்போது தான் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கும் பெரிய தொழிற்சாலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு வலுப்படும்.

35. தொழில் நுட்பக் கல்வி பெருகுவதிலுள்ள ஒரு சிரமம் போதிய அளவு ஆசிரியர் கிடைக்காததுதான். இப்பாது இந்தக் குறைபாடு பட்டக் கல்லூரிகளில் 33 சதவீதமாகவும் டிப்ளமா நிறுவனங்களில் 25 சதவீத

மாகவும் இருக்கிறது. குறித்த சில பொறியியல் கல்லூரிகளில் ஆசிரிய உபகாரச் சம்பளத்துடன் பயிற்சி பெறுவதையும், பின்னர் ஆசிரியர் பணியில் அமரவேண்டுமென்னும் ஒப்பந்தத்தின்பேரில் பட்டதாரிகளை வெளிநாடுகளுக்கனுப்பி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதையும் இரண்டாவது திட்டத்தில் மேற்கொண்டோம். மூன்றாவது திட்டத்திலும் இவற்றைத் தொடர்ந்து நடத்துவோம். அனைத்திந்திய தொழில் நுட்பக் கழகம் இத் துறையிலுள்ள ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் தரவேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளது. இதனால் இத் துறையில் ஆசிரியர் வேலைக்குப் பலரும் விரும்பி வருவரென எதிர்பார்க்கிறோம்.

பொறியியல் கல்வி நிலையங்களில் உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு அதிக நிதி கொடுக்க உத்தேசித்துள்ளோம். உபகாரச் சம்பளங்களைக் கடனாகக் கொடுக்கவும் உத்தேசித்துள்ளோம். இவற்றைப் பெறும் மாணவர் கடனைப் பல தவணைகளில் திருப்பித்தரவேண்டும்.

36. பொறியியலிலும் தொழிலியலிலும் பட்டமேற்படிப்பு 21 நிறுவனங்களில் ஏற்படுத்தியுள்ளோம். பட்டமேற்படிப்பு—ஆராய்ச்சி வசதிகளை ஒருங்கிணைத்து அவற்றைப் பின்னும் அபிவிருத்தி செய்யும் விஷயத்தை விசேஷக் குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது.

3. சுகாதாரம்.

37. இரண்டாவது திட்டத்தில் செய்ததைப் போலவே மூன்றாவது திட்டத்திலும் சுகாதார வேலைத் திட்டங்களை ஆறு பெருந் தொகுதிகளாகப் பிரிக்கலாம்:—

(1) சூழ்நிலைச் சுகாதாரத்தை, முக்கியமாகக் கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் தண்ணீர் வழங்கும் வசதியை, அபிவிருத்தி செய்வது ;

(2) தொத்து நோய்களைக் கட்டுப்படுத்துவது ;

(3) சுகாதாரப் பணிகளை அமைக்க அடிப்படையாக விளங்குவதற்குப் போதுமான நிறுவன வசதிகளை ஏற்படுத்துவது ;

(4) மருத்துவ, சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிகள் ஏற்படுத்துவது ;

(5) குடும்பக் கட்டுப்பாடு ;

(6) பொதுச் சுகாதாரப் பணிகள் ; தாய்-சேய் நலம், சுகாதாரக் கல்வி, ஊட்டச் சத்து ஆகிய விஷயங்கள் இவற்றில் அடங்கும்.

முதலாவது இரண்டாவது திட்டங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாய், பொதுவாக, மக்களின் தேகாரோக்கிய நிலையில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது ; நோய் ஏற்படுவது குறைந்துள்ளது ; சிசு மரணம் குறைந்துள்ளது ; மரண வீதம் பொதுவாகக் குறைந்துள்ளது ; முன்னைக்காட்டிலும் மக்கள் இப்போது அதிக காலம் வாழ்கிறார்கள். முதலிரு திட்டங்களில் ஆரம்பித்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து

செய்வதுடன், நோய்த் தடுப்பு பொது சுகாதாரப் பணிகளையும் தொத்து நோய் ஒழிப்பதையும் கட்டுப்படுத்துவதையும் மூன்றாவது திட்டத்தில் வலியுறுத்த உத்தேசித்துள்ளோம். எலும்புருக்கிநோய், தொழுநோய் போன்ற நோய்களின் விஷயத்தில் நிறுவனக் கவனிப்புக்கு வசதி ஏற்படுத்துவதைக் காட்டிலும் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுப்போம்.

38. முதல் திட்டத்தில் சுகாதார வேலைத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 140 கோடி செலவாகிறது. இது இரண்டாவது திட்டத்தில் ரூ. 225 கோடியாக உயருமென எதிர்பார்க்கிறோம். மூன்றாவது திட்டத்தில் இதற்கென ரூ. 300 கோடி உத்தேசமாக ஒதுக்கியுள்ளோம். மூன்று திட்டங்களிலும் பல்வேறு துறைகளில் செலவு விவரத்தைக் கீழே அட்டவணையில் காட்டியுள்ளோம். மூன்றாவது திட்டச் செலவு விவரம் பொதுவாக ஏற்படக் கூடிய செலவையே குறிக்கிறது. பல்வேறு வேலைத் திட்டங்களுக்கும் உண்மையிலே வேண்டியுள்ள தொகைகளை மாநிலங்கள் வகுக்கிற திட்டங்களின் அடிப்படையில்தான் பின்னர் நிர்ணயிக்க வேண்டும்.

அட்டவணை 1 : திட்டச் செலவு விவரம்.

வேலைத் திட்டம்.	முதல் திட்டம்.	இரண்டாவது திட்டம். (எதிர்பார்க்கும் செலவு).	மூன்றாவது திட்டம். (உத்தேசச் செலவு).
		(ரூபாய் கோடிக் கணக்கில்).	
தண்ணீர் வழங்கலும் சுகாதாரமும் (கிராமப் பகுதியிலும் நகரப் பகுதியிலும்)	49·0	72·0	80·0
ஆரம்ப சுகாதார யூனிட் மருத்துவ மனைகளும் மருந்துச் சாலைகளும் ..	25·0	37·0	50·0
தொத்துநோய்க் கட்டுப்பாடு	23·1	69·0	92·0
கல்வியும் பயிற்சியும்	21·6	35·0	38·0
நாட்டு மருத்துவ முறைகள்	0·4	4·0	8·0
குடும்பக் கட்டுப்பாடு	0·7	3·0	25.0
மற்ற திட்டங்கள்	20·2	5·0	7·0
மொத்தம்	140·0	225·0	300·0

கிராமப் பகுதியில் குடிதண்ணீர் வசதி.

39. கிராமப் பகுதியில் குடி தண்ணீர் வழங்கும் பிரச்சினை ஒவ்வொரு பிரதேசத்திலும் மாறுபடுகிறது. சில சமயம் ஒரே பிரதேசத்திலும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. கிராமப் பகுதிகளில் நல்ல குடிதண்ணீர் வழங்கும் பொறுப்பு மாநில அரசாங்கங்களையும் யூனியன் நேரடி ஆட்சிப் பரப்பு நிர்வாகத்தினரையும் சேர்ந்ததாகும். மாவட்டக் கழகங்கள் (ஜில்லா போர்டுகள்) ஏற்பட்டதிலிருந்தே, கிராமங்களில் குடிதண்ணீர் வழங்குவதை அபிவிருத்தி செய்யும் கடமை அதனுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாய் உள்ளது. இந்தப் பிரச்சினை மிகப் பரந்து இருப்பதால், கிராமப் பகுதிகளில் எந்த அளவுக்குக் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது என்பதைக் காட்டும் புள்ளிவிவரம் பெறுவது எளிதல்ல. பல மாநிலங்களில் இப்போது புள்ளிவிவரம் எடுத்து வருகிறோம்.

40. கிராமங்களில் நல்ல குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்கு முதலாவது இரண்டாவது திட்டங்களில் முதலிடம் கொடுத்தோம். வெவ்வேறு வகையான நான்கு திட்டங்களின்கீழ் கிராமப் பகுதியில் குடி தண்ணீர் வசதி வேலை மேற்கொண்டுள்ளோம். அவையாவன.—(அ) சமுதாய அபிவிருத்தி, (ஆ) ஸ்தல அபிவிருத்தி வேலைகள், (இ) மாநிலச் சுகாதாரத் துறைகளின் தண்ணீர் வழங்கு-சுகாதார வேலைத் திட்டம், (ஈ) பின்னணி வகுப்பார்களின் நலனுக்குரிய வேலைத் திட்டம். ஸ்தல ஸ்தாபனங்களின் முயற்சிகளுக்குத் துணை செய்யவே இவ் வேலைத் திட்டங்களை ஆரம்பித்து, போதிய நிதி ஒதுக்கியுள்ளோம். எளிய வகை தண்ணீர் வசதித் திட்டங்களுக்கு, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் ஸ்தல வேலைத் திட்டத்தின் கீழும் உதவி செய்து வருகிறோம். பின்னணி வகுப்பினர் பெருவாரியாக உள்ள பகுதிகளில் அவர்களின் நலனைக் கவனிக்கத் திட்டம் வகுத்துள்ளோம். தேசியத் தண்ணீர் வழங்கு—சுகாதார வேலைத் திட்டம், மத்தியச் சுகாதார அமைச்சுடன் தொடர்புடையதாகும். இந்த வேலைத் திட்டத்துக்கு அமைப்பிலும் நிர்மாணத்திலும் தொழில் நுட்பத் திறமை தேவையாகும். பல தொகுதி கிராமங்களுக்குக் குழாய் நீர் வழங்குவது, மிக ஆழத்தில் குழாய்க் கிணறு இறக்கி வெளியே நீர்க் குழாய்களை அமைப்பது, மேல் மட்ட நீராதாரங்களை மருந்து போட்டுச் சுத்தப்படுத்துவது, அவற்றிலுள்ள தண்ணீரை வடிகட்டுவது ஆகியவை இந்த வேலைத் திட்டத்தில் அடங்கும். குடிதண்ணீர் பற்றுக்குறை மிகுந்த பகுதிகளுக்கும், நரம்புச் சிலந்தி போன்ற நீரினால் ஏற்படும் நோய் மிகுந்துள்ள பகுதிகளுக்கும் இவ் வேலைத் திட்டத்தில் முதலிடம் அளித்துள்ளோம்.

41. இரண்டாவது திட்டத்தில் கிராமக் குடிதண்ணீர் வசதிக்காக மேற்கொண்ட வேலைத் திட்டங்களை மூன்றாவது திட்டத்திலும் தொடர்ந்து நடத்துவோம். விரிவான அளவில் உள்ள கிராமக் குடிதண்ணீர் வசதிகளுக்குச் சுகாதாரம் என்பதன்கீழ் குறைந்த தொகையே ஒதுக்கியுள்ளோம். என்றாலும், இந்த வேலைத் திட்டம் அடியிற்கண்டவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்:—(அ) ஸ்தல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், (ஆ) சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் (இ) பின்னணி வகுப்பினர் நலனுக்குரிய ஏற்பாடுகள். ஸ்தல அபிவிருத்தி வேலைத் திட்டம் என்பதன் கீழ் கிராமப் பகுதியில் முக்கியமான சில வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ. 50 கோடி ஒதுக்கியுள்ளோம். இந்த வசதிகளை ஏற்படுத்துவதில் கிராமச் சமுதாயத்தினர் பெரும்பாலும் உழைப்பினை நல்குவர். ஓரளவு பணமும் தருவர். போதிய அளவு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்துவது இந்த வசதிகளில் முதன்மை வாய்ந்ததாகும். அடுத்த சில மாதங்களில் வளர்ச்சி வட்டாரங்கள் தயாரிக்க வேண்டிய திட்டங்களில் கிராமக் குடி தண்ணீர் வசதித் திட்டம் முக்கிய இடம் பெறும். வட்டார வளர்ச்சித் திட்டங்கள் முடிவில் மாநிலத் திட்டத்தின் அங்கமாக அமையும். கிராமக் குடிதண்ணீர் வசதிக்கு பல்வேறு துறைகளில் நிதி ஒதுக்கி உள்ளதால் மாநிலங்களிலே இந்த வேலைத் திட்டத்தை மாவட்டநிலையிலும் வட்டார நிலையிலும் ஒருங்கிணைத்துப் பார்க்க வேண்டும். அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் தாங்களாகவே முன்வந்து இவ் வேலை

களைச் செய்யுமாறு அவர்களை ஊக்குவது நல்லது. மேற்கூறிய வகைகளில் நடவடிக்கை எடுத்து, வேலைத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றினால், இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் நல்ல குடிதண்ணீர் வசதி ஏற்படும். எனினும், சில பகுதிகளில் நிலைமை மோசமாயிருக்கக்கூடும். இப் பகுதிகளுக்கென விசேஷத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்.

நகரப் பகுதியில் குடிதண்ணீர் வசதி

42. நகரப் பகுதியில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவது பெரிதும் நகராட்சியின் பொறுப்பாகும். யுத்த காலத்தில் நகர மக்களின் தொகை பெருவாரியாக அதிகரித்ததாலும், அண்மையில் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் காரணமாக அப் பகுதியில் ஏராளமான மக்கள் குடியமர்ந்துள்ளதாலும் இந் நகராட்சிகள் தங்கள் ஆதாரங்களைக்கொண்டே போதுமான அளவில் குடிதண்ணீர் வசதியைத் தாங்களாகவே ஏற்படுத்த முடியாது. எனவே, மத்திய அரசினர் மாநில அரசாங்கங்களுக்கு இதற்கெனக் கடன் வழங்குவர். மாநில அரசாங்கங்கள் இதிலிருந்து நகராண்மைக் கழகங்களுக்கும் மற்ற நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி செய்வார்கள். அவை அந்த உதவியைக்கொண்டு குடிதண்ணீர் வசதித் திட்டங்களையும் வடிகால் அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றும். முதல் திட்ட முடிவில் நகரப் பகுதிகளில் பெருமளவில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தை மேற்கொண்டபோது, எந்தெந்தப் பகுதிகளை முதலில் கவனிக்கவேண்டுமென்பதை அடியிற்கண்ட முறையில் நிச்சயித்தோம் :

(1) நல்ல குடிதண்ணீர் ஏற்பாடு இல்லாத நகராட்சிப் பகுதிகள் ;

(2) இப்போதைய ஏற்பாடுகள் போதுமானவையாயிராத அல்லது சுகாதாரக் கண்ணோட்டத்தில் கேடான வசதியுள்ள நகராட்சிப் பகுதிகளில் இப்போதுள்ள குடிதண்ணீர் வசதியைச் சீராக்குவது அல்லது அபிவிருத்தி செய்வது ;

(3) யாத்திரீகர் ஸ்தலங்கள் ;

(4) குழாய்த் தண்ணீர் வசதியுள்ள பகுதிகள் ; இப் பகுதிகளில் புதிய சாக்கடைக்கால் அமைக்க வேண்டும் ; அல்லது ஏற்கெனவே உள்ளவற்றைச் சீர்திருத்த வேண்டும். அப்போதுதான் கழிவு நீர் வெளியேறி, பொதுச் சுகாதார ஆபத்துகள் நீங்கும்.

நகரப் பகுதியில் குடித் தண்ணீர் வசதிக்கென முதல் திட்டத்தில் ரூ. 12 கோடி ஒதுக்கியிருந்தோம். இரண்டாவது திட்டத்தில் ரூ. 58 கோடி ஒதுக்கினோம். 650 குடிதண்ணீர் வசதித் திட்டங்களை ரூ. 100 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொண்டோம். இவற்றால் நகரப் பகுதியிலுள்ள 1 கோடியே 20 லட்சம் மக்களுக்கு நல்ல குடி தண்ணீர் வசதி கிடைக்கும்.

ஏற்கெனவே, வேலை தொடங்கியுள்ள 200 திட்டங்களுக்கு மூன்றாவது திட்டக் காலத்தில் பெருமளவு செலவு செய்யவேண்டியிருக்குமாதலால் நகரப் பகுதியில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்கு ஒதுக்கியுள்ள தொகையை வைத்துக்கொண்டு மேலும் புதிய திட்டங்களை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு குறைவாகத்தான் இருக்கும்.

43. இரண்டாவது திட்டக் காலத்தில் நகரப் பகுதியில் குடிதண்ணீர் வசதித் திட்டங்களை நிறைவேற்றிய அனுபவத்திலிருந்து மூன்று முக்கிய விஷயங்கள் பெறப்படுகின்றன. முதலாவதாக, நகரப்பகுதிகளில் பெருமளவு மேற்கொள்ளும் குடிதண்ணீர் வசதிகளைச் சரியான முறையில் அமைக்கவேண்டும். ஒரு திட்டத்தின் பல பகுதிகளும் ஒன்றுக்கொன்று இருக்கவேண்டிய தொடர்பான முறையில் அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நிலையிலும் செய்த செலவுக்கேற்ற வகையில் ஓரளவு பயன் கிடைக்கும். தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால், திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தொழில் நுட்ப முறையில் நுணுகிப் பார்த்து ஆராய்ச்சி செய்வது முக்கியமாகும். இரண்டாவதாக, கிடைக்கும் நிதியை நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக, ஏராளமான திட்டங்கள் ஒவ்வொன்றிலும் சிறு சிறு தொகை ஈடுபடுத்துவதைத் தவிர்க்க வேண்டும். எனவே, தகுந்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் நகரப் பகுதி குடிதண்ணீர் வசதிகளைக் கவனமுடன் தேர்ந்தெடுக்கவேண்டும். மூன்றாவதாக, ஒரு வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டவுடன் நகராட்சி மன்றம் அதை பராமரிப்பதற்குள்ள பொறுப்பை மேற்கொள்வதுடன், அந்த வசதி ஏற்படுத்தும் செலவையும் ஓரளவு கொடுக்கவேண்டும். இது எவ்வளவு என்பதை மாநில அரசாங்கம் நிச்சயிக்கும். முடிவாக, குடிதண்ணீர் வசதித் திட்டங்களை ஏற்படுத்துகையில், வடிகால் சாக்கடைக்கால் விஷயம் சில சமயம் போதுமான அளவு கவனிக்கப்படுவதில்லை. தண்ணீர் வசதியையும் வடிகால் வசதியையும் இயன்ற வரையில் ஒருங்கிணைந்த வேலைத் திட்டமாகவே மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கொசு உற்பத்தி பெருகும், நகரங்களில் சுகாதார நிலை சீர்கேடு அடையும்.

ஆரம்பச் சுகாதார யூனிட்டுகள், மருத்துவ மனைகள், மருந்துச் சாலைகள்.

44. ஆரம்பச் சுகாதார யூனிட்டுகளை அமைக்கும் வேலைத் திட்டம் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்துடன் இணைந்துள்ளது. இரண்டாவது திட்ட முடிவுக்குள் இத்தகைய யூனிட்டுகள் 2,800 அமைக்கப்படும். சமுதாய அபிவிருத்தி இயக்கம் விஸ்தரிக்கப்படுகையில் வளர்ச்சி வட்டாரங்களில் ஆரம்பச் சுகாதார யூனிட்டுகள் அமைக்கப்படும்.

45. 1951-ம் ஆண்டில் 8,600 மருத்துவ மனைகளும், மருந்துச் சாலைகளும் இருந்தன. இவற்றின் எண்ணிக்கை 1961-ம் ஆண்டில் 12,600 ஆக உயரும். இதே காலத்தில் மருத்துவ மனைப் படுக்கைகளின் எண்ணிக்கை 1,13,000-லிருந்து 1,60,000 ஆக உயரும். மூன்றாவது திட்டக்

காலத்தில் 14,600 மருத்துவ மனைகளும் மருத்துவச் சாலைகளும் 1,90,000 மருத்துவ மனைப் படுக்கைகளும் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். மாவட்ட நிலையிலும் சப்டிவிஷன் (உள்கோட்ட) நிலையிலும் உள்ள மருத்துவ மனைகள் ஆரம்பச் சுகாதார யூனிட்டுகளுக்குப் போதுமான அளவு உதவி செய்யவேண்டும். மருத்துவப் பணி கற்பிக்கும் மருத்துவ மனைகளுக்கும் மற்ற மத்திய மருத்துவ மனைகளுக்கும் பற்பல கிராமப் பகுதிகளில் பணி புரியும் ஆரம்பச் சுகாதார யூனிட்டுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்ப தற்கு இது அவசியமாகும்.

தொத்து நோய்கள்

46. தொத்து நோய்களைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் மலேரியா, யானைக்கால் சுரம், எலும்புருக்கி, தொழுநோய், பெரியம்மை, மேக நோய் பற்றிய திட்டங்களும் அடங்கும்.

47. **மலேரியா.**—மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் இத் தொகுதியில் முக்கியமான வேலைத் திட்டமாகும். இதை முதலாவது திட்டக் காலத்தில் மேற்கொண்டோம். முதல் திட்ட முடிவில் 133 கட்டுப்பாட்டு யூனிட்டுகள் செயலாற்றிவந்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் இந்த எண்ணிக் கையை முதற்கண் 200 ஆக அதிகரித்தோம். பின்னர் மலேரியா கட்டுப் பாட்டுத் திட்டத்தை மலேரியா ஒழிப்புத் திட்டமாக மாற்றியபோது இந்த யூனிட்டுகளின் எண்ணிக்கையை 390 ஆக அதிகரித்தோம். மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்படி மூன்றாண்டுக் காலம் தீவிரமாக மருந்து தூவ வேண்டும். பின்னர் இரண்டாண்டுக் காலம் அதன் பயனைக் கவனித்துவர வேண்டும். மூன்றுவது திட்டக் காலத்தில் மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு ரூ. 55 கோடி செலவு செய்யவேண்டியிருக்கும். மலேரி யாவை ஒருதரம் ஒழித்துவிட்டால் அது பின்னர் ஏற்படாதவாறு தவிர்ப் பதற்கு நடைமுதல் செலவு அதிகம் வேண்டியிருக்காது. பொதுவாக உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால், மலேரியா ஒழிப்பு அவசியமாகும். ஏனெனில், நாட்டின் பற்பல பகுதிகளிலும் ஏராளமானவர்கள் கடந்த காலத்தில் இந்த நோய்வாய்ப்பட்டனர், பலர் அதற்கு இரையானார்கள்.

48. **யானைக்கால் சுரம்.**—யானைக் கால் சுரத்தைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தை முதலாவது இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொண்டோம். இதுவரையில் 46 கட்டுப்பாட்டு யூனிட்டுகளை ஏற்படுத்தியுள்ளோம். இவற் றைத் தொடர்ந்து வைத்திருப்பதுடன், மூன்றுவது திட்டக் காலத்தில் யானைக் கால் பரவியுள்ள பகுதிகளில், கல்வி கற்பிக்கும் மருத்துவ மனை களில், யானைக்கால் சுர மருந்தகங்களை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். யானைக்கால் சுரத்தை கட்டுப்படுத்துவதில் உதவியாக இருப்பதற்காக கழிவு நீர் வடிகால் திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

49. **எலும்புருக்கி நோய்.**—எலும்புருக்கி நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்து வருகிறதென்பது அண்மையில் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது. எனினும், கிராமப் பகுதியிலும்

நகரப்பகுதியிலும் இந்த நோயினால் அவதியுறுபவரின் எண்ணிக்கை அப்படியேதான் இருந்துவருகிறது. இந்த நோய் கண்டுள்ள மக்கள் குடியிருக்குமிடங்களுக்கே சென்று அவர்களுக்கு மருந்து கொடுத்து இந்த நோயைப் பெருமளவில் குணப்படுத்த முடியுமென பரீட்சார்த்தத் திட்டங்களிலிருந்து அறிந்தோம். எனவே, குறித்த ஒரு மருத்துவ மனையில் வைத்து அவர்களைக கவனித்துக்கொள்வதற்குப் பதிலாக, பொதுச் சுகாதார முறையில் பரவலாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, எலும்புருக்கி நோயைக் கட்டுப்படுத்த அடியிற் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.—

(1) தீவிரமாக பி.ஸி.ஜி. (B.C.G.) ஊசி போடுதல ; அப்படிச் செய்தால தான் இந்த நோய் ஏற்படக் கூடிய மக்களுக்கெல்லாம் இந்தத் திட்டக் காலத்திற்குள் ஊசி போடமுடியும் ;

(2) எலும்புருக்கி நோய் குணப்படுத்தும் நிலையங்களை விஸ்தரித்தல் ; பத்து லட்சம் மக்களுக்கு இத்தகைய நிலையம் ஒன்றேனும் அமைப்பது நோக்கமாயிருக்கவேண்டும்.

(3) இத்தகைய நிலையங்களைச் சுற்றிலுமுள்ள, இந்த நோய்வாய்ப் பட்ட மக்களுக்கு அவர்களுடைய இருப்பிடங்களுக்கே சென்று மருத்துவ வசதி ஏற்படுத்தித் தருதல் ;

(4) எலும்புருக்கி நோய் பயிற்சி நிலையங்களையும் செயல்முறைக் காட்சி நிலையங்களையும் அமைத்தல்.

இரண்டாவது திட்ட முடிவுக்குள், 12 கோடி மக்களுக்கு பி.ஸி.ஜி. ஊசி போடப்படும். மூன்றாவது திட்டக் கால அளவில் இவர்களின் எண்ணிக்கை மேலும் 10 கோடி அதிகரிக்கும். 1961 முடிவுக்குள் மருத்துவ மனைப் படுக்கைகளின் எண்ணிக்கை 25,000 ஆக அதிகரித்திருக்கும். மூன்றாவது திட்டக் காலத்தில் மேலும் 5,000 படுக்கைகள் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். பயிற்சி - செயல் முறைக் காட்சி நிலையங்களின் எண்ணிக்கை இரண்டாவது திட்ட முடிவில் 10 ஆக இருந்தது, மூன்றாவது திட்ட முடிவில் 15 ஆக உயரும். இந்த நிலையங்களில் பயிற்சி அளிப்பதுடன் பெங்களூரிலுள்ள தேசீய எலும்புருக்கி நோய் குணப்படுத்தும் நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்படும்.

50. **தொழு நோய்.**—இரண்டாவது திட்ட முடிவுக்குள் சிறப்பான சிகிச்சை வசதிகளுடன் தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையங்கள் 100 அமைக்கப்படும். இந்த நிலையங்களில் விரிவான ஆராய்ச்சி செய்துள்ளோம். சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தியுள்ளோம். 1965–66-ம் ஆண்டுக்குள் இந்த நிலையங்களின் எண்ணிக்கையை 200 ஆக அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். தொழு நோய் குணப்படுத்தும் வேலையில் ஏராளமான அளவில் சுயேச்சை நிறுவனங்களையும் சமூக ஊழியர்களையும் ஈடுபடுத்த உத்தேசித்துள்ளோம். இத் துறையில் பணியாற்றும் பல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துக் கூட்டாக பணி புரிய உத்தேசித்துள்ளோம். தொழு நோய் பெருவாரியாகவுள்ள பகுதிகளில் ஒவ்வொரு மருத்துவ மனையும், ஆரம்ப சுகாதார யூனிட் ஒவ்வொன்றும் தொழுநோய் கட்டுப்பாட்டு வேலைக் கேந்திரமாக அமையு

51. **பெரியம்மை.**—பெரியம்மைக்கு ஊசி போடும் முறையில் இப்போது நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதனுல் கடந்த சில ஆண்டுகளில் இந்த நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் இந்த நோய்க்கு இரையாவோரின் எண்ணிக்கையும் பெரிதும் குறைந்துள்ளது. சுகாதார அமைச்சு நியமித்த குழு ஒன்று பெரியம்மை ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:—

(அ) ஊசி போடுவர்களைப் பெருவாரியாக வேலைக்கெடுத்துக்கொண்டு அத் துறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ;

(ஆ) பெருவாரியான அளவில் ஊசி போடுவது ;

(இ) வாக்ஸின் லிம்ப் (அம்மைப் பால்) கிடைக்கும் அளவை அதிகரிப்பது.

52. **மேகநோய்.**—பெரிய நகரங்களிலும் தொழிற்பகுதிகளிலும் இமய மலை அடிவாரப் பகுதிகளிலும் மேகநோய் பலருக்கு இருக்கிறது. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இரண்டாவது திட்டக்காலத்தில் 75 மாவட்ட மருந்தகங்களையும் 8 தலைமையிட மருந்தகங்களையும் ஏற்படுத்துகிருேம். இந்த வேலைத்திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளோம்.

53. **மற்ற நோய்கள்.**—முன்கழுத்துக் கழலை நோய், கண் நோய், காலரா முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் பல வேலைத்திட்டங்கள் இத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இமயமலைப் பகுதியில் முன் கழுத்துக் கழலைநோய் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த நோயைக் கட்டுப் படுத்துவதற்காக அயடின் கூடிய உப்பினை வழங்கி வருகிருேம். இந்த நாட்டின் பற்பல பகுதிகளிலும் குறிப்பிட்ட தொகுதியினரிடையே கண் நோய் (Trachoma) பரவலாக இருக்கிறது. குறித்த பகுதிகளில் இந் நோயைக் குணப்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகளில் வெற்றி கண்டுள் ளோம். இதில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் இந் நோய கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரிவாக்க உத்தேசித்துள்ளோம். காலராவைக் கட்டுப்படுத்துவதில் சூழ்நிலைச் சுகாதார விஷயங்களை முக்கியமாகக் கவனித்து வருகிருேம்.

பொதுச் சுகாதாரப் பணிகள்.

54. பொதுச் சுகாதார நிர்வாக அமைப்பைப் பலப்படுத்துவதுடன் பொதுச் சுகாதாரப் பணிகளை அபிவிருத்தி செய்வதிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். சுகாதாரக் கல்வி, தாய்-சேய் சுகாதாரக் கவனிப்பு, பள்ளி களில் மாணுக்கரின் தேகாரோக்கியத்தைக் கவனித்துக்கொள்வது, ஊட்டச் சத்து அளிப்பதற்கான வேலைத் திட்டங்கள், பொதுச் சுகாதார ஆய்வுக் கூடங்களை அபிவிருத்தி செய்வது ஆகிய விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். சுகாதார அமைச்சிலும் 7 மாநிலங்களிலும் சுகாதாரக் கல்வி நிறுவனங்களை அமைத்துள்ளோம். வெளித் துறைப் பயிற்சி-செயல்முறைக் காட்சி நிலையங்களை அமைத்தல், சுகாதாரக் கல்வி நிறு

வனங்கள் இல்லாத மாநிலங்களிலே அவற்றை ஏற்படுத்துதல், சுகாதாரக் கல்வி நிறுவனங்களில் அவர்களுக்குப் பயிற்சியளித்தல், சமூகக் கல்வி யூனிட்டுகளை அமைத்தல், சுகாதாரக் கல்விப் பணிகளை ஏற்படுத்துதல், சுகாதாரக் கல்வி பற்றிய புத்தகங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுதல் ஆகியவை மூன்ருவது திட்டத்தில் இருக்கவேண்டிய சுகாதாரக் கல்வி வேலைத் திட்டங்களாகும். இத் துறையில், கருவுற்றவர்களையும், பால் கொடுக்கும் தாய்மார்களையும், பள்ளி செல்லும் சிறுவர்களையும், குழந்தைகளையும் விசேஷமாகக் கவனித்துக்கொள்ளவேண்டும். பள்ளிச் சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடங்களிலேயே உணவளிப்பதைப் படிப்படியாக பல இடங்களுக்கும் விஸ்தரித்துவருகிறோம். தேவையுள்ள தாய்மார்களுக்கும் சிறுவர்களுக்கும் உணவுத் துணைப்பொருள்கள் ஆடை எடுத்த பால் வடிவிலும்,விடமின் வடிவிலும் ஆரம்ப சுகாதார யூனிட் மூலம் கிடைக்கின்றன. இத் துறையில் சர்வதேச ஸ்தாபனங்கள் பலவற்றிலிருந்து, முக்கியமாகச் சர்வதேச சிறுவர் நிதியிலிருந்து நல்ல உதவி கிடைத்துவருகிறது.

பயிற்சி வசதிகள்.

55. மருத்துவப் பணியாளர்களுக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் பயிற்சி வசதிகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1951–ல் 30 ஆக இருந்தது 1961-ல் 55 ஆக உயரும். இக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை 2,500–லிருந்து 5,000 ஆக உயரும். இரண்டாவது திட்டக் காலத்தில் 14,000 மருத்துவர் பட்டம் பெறுவரென எதிர்பார்க்கிறோம். இப்போது ஏற்படுத்தியுள்ள வசதிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் இவர்களின் எண்ணிக்கை மூன்ருவது திட்டக் காலத்தில் 19,000 ஆக உயரும். தொழில் புரியும் மருத்துவர் எண்ணிக்கை 1956-ம் ஆண்டில் 65,000 ஆக இருந்தது 1961-ம் ஆண்டில் 70,000 ஆக அதிகரிக்குமென்றும் 1966-ம் ஆண்டில் 81,000 ஆகப் பெருகுமென்றும் மதிப்பிட்டுள்ளோம். இக் கால அளவில் ஒரு மருத்துவர் 6,000 மக்களைக் கவனித்துக் கொள்வது என்ற நிலை அப்படியே இருந்துவரும். கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதுதான் முக்கியப் பிரச்சினையாகும். பெரும்பாலான மருத்துவர்கள் நகரப் பகுதிகளில் தொழில் புரிவதையே விரும்புகின்றனர். மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள மருத்துவர்களே கிராமப் பகுதிகளுக்குப் போய் தொழில் புரிய உடன்படுகிருர்கள். இதனல் கிராமப் பகுதியிலுள்ள மருத்துவர்கள் பட்டணப் பகுதிகளில் வேலை செய்யும் மருத்துவர்கள் கவனித்துக் கொள்வதைவிட 5 மடங்கு அதிக மக்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகப் பல மாநிலங்களும் இப் பிரச்சினையில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றன. குறித்த காலம் கிராமப் பகுதியில் பணியாற்றினல்தான் மருத்துவத் தொழில் பார்க்கலாம் என்று நிபந்தனை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் மருத்துவர்கள் ஏராளமான அளவில் கிராமப் பகுதிகளுக்குச் செல்வர். கிராமப் பகுதியில் பணி புரியும் மருத்துவர்களுக்கு அதிக ஊதியம் அளிப்பது மூலமாகவும், அவர்கள் தனிப்பட்ட

முறையில் மருத்துவப பணி செய்யாதிருப்பதற்காக விசேஷ ஊதியம் அளிப்பது மூலமாகவும், வீட்டு வசதி, மற்ற வசதிகள் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்வதற்கு வசதிகள், உதவிகள் அளிப்பதன் மூலமாகவும் மருத்துவர்கள் கிராமப் பகுதிகளுக்குச் செல்ல ஊக்கமளிக்கவேண்டும். மருத்துவ டிப்ளமா அளிக்கும் பழக்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதும் இதற்கு ஒரு வழியாகும். அந்த டிப்ளமா பெறுபவர்கள் குறித்த கால அளவு (உத்தேசமாய மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை) கிராமப் பகுதி களில் பணிசெய்த பிறகு அவர்கள் மருத்துவப் பட்டம் பெறுவதற்கு வசதி செய்யவேண்டும்.

56. மருத்துவக் கல்வியை மூன்றுவது திட்டக் காலத்தில் விஸ்தரிப்ப தற்கான ஆலோசனைகளை இப்போது ஆராய்ந்து வருகிறோம். நான்காவது திட்டக் காலத்தில் இத் துறையில் பணியாளர் பற்றுக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க இவ்வாறு செய்வது அவசியமெனக் கருதுகிறோம்.

57. செவிலியர்களுக்கும் மற்ற துணைப் பணியாளர்களுக்கும் பயிற்சி வசதிகளை விரிவுபடுத்துவதில் முதலாவது திட்டத்திலிருந்தே அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். இது வரை ஏற்பட்ட முன்னேற்றத்தையும் மூன்றுவது திட்ட உத்தேச இலக்குகளையும் கீழே அட்டவணையில் காட்டி யுள்ளோம்.

அட்டவணை 2 : ஆண்டுதோறும் தேர்ச்சியடைவோர்.

எண்ணிக்கை.

	1951	1956	1961 (மதிப்பீடு.)	1966 (உத்தேச இலக்கு.)
1. செவிலியர் ..	1,270	2,157	2,800	4,500
2. துணைச் செவிலியர்—மருத்து வச்சி, மருத்துவச்சிகள்.	1,559	2,374	4,000	7,000
3. தாயிகள்- செவிலியர், தாயிகள்	341	1,158	1,500	7,000

58. மேலே கண்ட வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்குப பயிற்சி வசதி அளிப்பதுடன், தொழு நோய் ஊழியர்களுக்கு மறு பயிற்சியளிக்க வும், எலும்புருக்கி நோயாளிகளைக் கவனிக்கும் செவிலியர்களுக்குப் பயிற்சி யளிக்கவும், தொழிலியல் துறையில் கீழ்நிலைப் பணியாளர்களுக்கும், சுகாதாரப் புள்ளிவிவரப் பணியாளர்களுக்கும், ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், ரேடியோகிராபர்களுக்கும், மருந்துத் தயாரிப்ப வர்களுக்கும் பயிற்சி அளிக்கவும் உத்தேசித்துள்ளோம்.

நாட்டு மருத்துவ முறைகள்.

59. நாட்டு மருத்துவ முறைகளைக் குறித்த வேலைத் திட்டங்களைப் பற்றி யும் இங்கு ஓரளவு கூறலாம். இவற்றிற்கு முதல் திட்டத்தில் ரூ. 6 கோடியும் இரண்டாவது திட்டத்தில் உத்தேசமாய் ரூ. 8 கோடியும் ஒதுக்கி யுள்ளோம். நாட்டு மருத்துவம் பற்றிய வேலைத் திட்டங்களில் பயிற்சி அளிப்பது, ஆராய்ச்சி, இத் துறையில் மருத்துவப் பொருள்களைத் தரப் படுத்துவது, அபிவிருத்தி செய்வது ஆகியவை அடங்கும். சில வளர்ச்சி

வட்டாரங்களில் முதற்கண் கிடைக்கிற மூலிகைச் செடிகளைக்கொண்டு, மூலிகைச் செடிப் பண்ணை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம். நாட்டு மருத்துவ முறைகள் கிராமப் பகுதியில் பெரிதும் வழங்கி வருகின்றன. இந்த முறைகளில் கைதேர்ந்தவர்கள் இப் பகுதிகளில் நல்ல பணி புரிய முடியும். இத் துறையில் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இதனால் கிராமப் பகுதியில் இப்போதுள்ள மருத்துவ வசதிகள் ஓரளவு பெருகும்.

குடும்பக் கட்டுப்பாடு.

60. மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத திட்டங்களிலே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் முக்கிய வேலைத் திட்டமாக அமையும். இந்த வேலைத திட்டத்தில சிக்கலான அம்சங்கள் பல இருக்கின்றன. இதனால் விளையும் பயன நீண்ட காலத்தில்தான் தெரியும். இந்த வேலைத் திட்டத்தை முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் ஆரம்பித்தோம். இப்போது நல்ல முன்னேற்றம் கண்டுளளோம். 1961-ம் ஆண்டுக்குள் நகரப் பகுதிகளில் 676 நிலையங்களும, கிராமப் பகுதிகளில் 1,121 நிலையங்களும் குடும்பக் கட்டுப்பாட்டுப பிரசாரம் செய்யும். இத் துறையில் மூன்றாவது திட்டத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக சுகாதார அமைச்சு விசேஷக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இக் குழு இவ் வேலைத் திட்டத்தை விரிவாக ஆராய்ந்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தில் இருக்கவேண்டிய விஷயங்கள், அதை நிறைவேற்றிவைக்க வேண்டிய நிறுவனம், வேண்டியிருக்கும் நிதி வசதி, குடும்பக் கட்டுப்பாட்டில் அறுவை சிகிச்சை முறைக்குள்ள ஸ்தானம், சுயேச்சை நிறுவனங்களின் பணி, கருத்தடை சாதனங்களைத் தயாரித்து வழங்கல், மற்ற அம்சங்கள் ஆகியவற்றைக் குறித்து இக் குழு ஆலோசனை கூறியுள்ளது. இந்த ஆலோசனைகளை இப்போது ஆராயநது வருகிறோம். வேலைத் திட்டங்களை இன்னும் திட்ட வட்டமாக உருவாக்கவில்லை. அவற்றின் தேவைகளுக்குட்பட்டு, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு இப்போது உத்தேசமாய் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளோம். பொதுவாகச் சொல்லப்போனால், இத் திட்டத்தை அடியிற்கண்ட வகைகளில் தீவிரப் படுத்த உத்தேசித்துள்ளோம் :—

(1) விரிவான அளவில் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சமூகச் சூழ்நிலையை உண்டாக்குவது ;

(2) குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் சாதாரண சுகாதாரப் பணிகளுடன் இணைப்பது ;

(3) குடும்பக கட்டுப்பாட்டுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவது ; மருத்துவ சுகாதார நிலையங்கள் மூலம அறுவை சிகிச்சை வசதி செய்து தருதல் ; கருத்தடை சாதனங்களை வழங்கும் வசதிகள் ஆகியவை அவற்றில் அடங்கும் ;

(4) மருத்துவக் கல்லூரிகளிலும் மறற ஆசிரிய நிறுவனங்களிலும பயிற்சி வேலைத் திட்டஙகளை அபிவிருத்தி செய்வது ;

(5) அந்தந்த ஊர்களில் உள்ள முக்கியஸ்தர்களைக் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தில் பெருமளவுக்குப் பயன்படுத்திக் கொள்வது.

4. வீட்டு வசதி.

61. திட்டத்தில் அரசாங்கச் செலவு ஏற்படுகிற வீட்டு வசதித் திட்டங்கள் குறிப்பாக ஆறு ஆகும். உதவி பெற்ற தொழிலாளர் வீட்டு வசதி, குறைந்த வருமானமுடையவருக்கு வீட்டு வசதி, சேரி ஒழிப்பு, சேரி அபிவிருத்தி, நில ஆர்ஜிதமும் அபிவிருத்தியும், கிராம வீட்டு வசதி, மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி. இந்த அறுவகைத் திட்டங்களைத் தவிர மாநில அரசாங்கங்களும், ரயில்வே, தபால்—தந்தி, புனர் வாழ்வளிப்புத் துறை, பாதுகாப்பு போன்ற மத்திய அரசினர் துறைகளும் தங்கள் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்துதருகின்றன. உருக்கு ஆலைகளைச் சுற்றிலும் மற்றும் பல இடங்களிலும் புதிய நகரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பல்துறைகளில் வீட்டு வசதி செய்வதற்காக அரசாங்க நிறுவனங்கள் நல்ல பணி செய்துள்ளன. இத் துறையில் இப்போது புள்ளி விவரம் சேகரிக்க முயன்று வருகிறோம். அரசாங்கத் துறையில் வீடு கட்டப்படுவதுடன் கடந்த சில ஆண்டுகளில் தனியார் துறையிலும் பெருமளவில் வீடுகள் கட்டப்படுகின்றன. நகர வீட்டு வசதிக்கென முதல் திட்டத்தில் ரூ. 500 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 600 கோடியும் மொத்த முதலீடு செய்துள்ளதாக இந்திய ரிசர்வ் பாங்க் உத்தேசமாய் மதிப்பிட்டுள்ளது. நகரக் குடியிருப்பு வசதிகள் பெருகி வருகின்றன. இந்த நிலை மூன்றாவது திட்டத்திலும் நீடிக்கும்.

62. அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் முதலீட்டுத் திட்டங்களில் வீட்டு வசதிக்காக செய்யப்பட்ட முயற்சி மற்றெல்லாக் காலங்களிலும் விட பெருமளவு அதிகரித்துள்ளது. எனினும், இன்னும் அதிக வீடுகள் தேவைப்படுகின்றன. இன்னும் பல ஆண்டுகளுக்கு வீட்டு வசதி ஒரு பிரச்சினையாக இருந்து வருமென்பதில் ஐயமில்லை. மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் குறிப்பாக நகரப் பகுதிகளில் ஆண்டுக்கு 4 சத வீதமாக உள்ளது. மூன்றாவது திட்டக் காலத்தில் வீட்டு வசதி வேலைத் திட்டங்களை மூன்று துறைகளில் அபிவிருத்தி செய்யவேண்டும். முதலாவதாக, பொருளாதார அபிவிருத்தி, பெருந் தொழிலில்-சிறு தொழில் அபிவிருத்தி ஆகியவற்றின் பொதுவான அடிப்படையில் வீட்டு வசதித் திட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த இருபது, முப்பதாண்டுகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் கருதிப் பார்க்கவேண்டும். வீட்டு வசதி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் பரவலாக்குவதற்குமுள்ள ஆலோசனைகள் முக்கிய இடம் பெறும். இந்த புதிய அபிவிருத்திகள் காரணமாக ஏராளமான அளவில் வீடுகள் கட்ட வேண்டியிருக்கும். இத்துடன் பழங்கால வீட்டு வசதிக் குறைவை ஒப்பு நோக்குவோமானால், அது சிறிதாகத்தான் தோன்றும். இரண்டாவதாக, அரசாங்கத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றின் நிறுவனங்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்கவேண்டும். நகரமைப்புப் பெருந் திட்டங்களைத் தயாரிப்பது மிகவும் அவசியமாகும். இவற்றைத் தயாரிக்காவிட்டால், பல்வேறு நிறுவனங்கள் செய்யும் வேலையை ஒருமுகப்படுத்தி அவற்றால் விளையும் பயனைப் பெருக்கி, நீண்டகால அளவில் பொது

நோக்கங்களை முறையாக நிறைவேற்ற முடியாது. மூன்றாவதாக, வீட்டு வசதித் திட்டம் முழுவதும், அது எந்தத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சமுதாயத்தில் குறைந்த வருமானமுள்ளவரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமையவேண்டும். இந்த ஆலோசனையின் விளைவுகளை மூன்றாவது திட்டத்தின் முடிவான அறிக்கையில் விரிவாக ஆராய உத்தேசித்துள்ளோம்.

வேலைத்திட்டங்களை ஆராய்தல்

63. பல்வேறு வீட்டு வசதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக இரண்டாவது திட்டத்தில் செலவு செய்வதற்கென ரூ. 120 கோடி ஒதுக்கியிருந்தோம். 1958–59-ஆம் ஆண்டில் திட்ட நிதி ஒதுக்கீடுகளை மாற்றியமைத்த போது இதை ரூ. 84 கோடியாகக் குறைத்தோம். எனினும், இதற்குப்பின் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டம் ஒன்றை மேற்கொண்டோம். மாநில அரசாங்கங்களுடன் கூட்டாக வேலை செய்து ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் வீடு கட்டுவதற்குக் கடன் வழங்கத் தலைப்பட்டுள்ளது. குறைந்த, நடுத்தர வருமானமுள்ளவர்கள் தங்களுக்கென வீடு கட்டிக்கொள்வது சாத்தியமாயிருப்பதற்காக, வீட்டு வசதி நிதிக் கார்ப்போரேஷன்களை அல்லது கழகங்களை அமைப்பதெனக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளோம். இக் கார்ப்பொரேஷன்களை மாநிலங்கள் அமைப்பதற்கேற்ற வகையில் விரைவில் சட்டமேற்படுத்துவோம். இவ் வேலைத் திட்டங்களுக்கு ரூ. 120 கோடி செலவிடுவதென மூன்றாவது திட்டத்தில் உத்தேசித்துள்ளோம். சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு நல்ல வகையில் வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக, பின்னர் இத் தொகையை அதிகரிக்க வேண்டியிருக்கும்.

தொழிற்சாலைத் தொழிலாளருக்கு வீட்டுவசதி

64. உதவி பெற்ற தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், வீடு கட்டும் செலவில் பாதியைக் கடனாகவும் பாதியை உதவித் தொகையாகவும் மத்திய அரசினரும் மாநில அரசாங்கங்களும் சட்டப்படி அமைந்த வீட்டு வசதிக் கழகங்களுக்கும் நகராட்சிச் சபைகளுக்கும் கொடுத்து வருகிறார்கள். தொழிற்சாலைத் தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்வதற்குரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு செலவில் 25 சத வீதத்தை உதவித் தொகையாகவும் 65 சத வீதத்தைக் கடனாகவும் மத்திய அரசினர் கொடுத்து வருகிறார்கள். தொழிற்சாலை வேலையாளின் விஷயத்தில் செலவில் 75 சத வீதத்தைச் கொடுத்து வருகிறோம். இதில் 50 சத வீதம் கடனாகவும் 25 சத வீதம் உதவித் தொகையாகவும் கொடுத்து வருகிறோம். இரண்டாவது திட்டத்தில் 1 லட்சம் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். 20,000 குடியிருப்புகள் கட்டப் பட்டுவரும். இதில் குடியிருக்க ஓரளவு வாடகையைக்கூட தொழிலாளர்கள் கொடுக்க முடியவில்லை. இந்த நிலைமை இல்லாதிருந்தால், இத் திட்டத் தில் இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். இந்த நிலை இருப்ப தால் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளில் சில இன்னும்

காலியாகத்தான் இருக்கின்றன. தொழிலதிபர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் ஓரளவே ஒத்துழைத்துள்ளன. இத் திட்டத்தை இன்னும் இப்படியே விட்டு வைப்போமானால், தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டுப் பிரச்சினை தீராது. மேலும், தொழிலாளர் தொகை பெருகி வருவதால், பழைய தொழிற்சாலைகளில் தொழிலாளர் வீட்டு வசதி நிலை மேலும் மோசமாகி வருகிறது. வீட்டு வசதிக் கழகம் ஒன்று இத் திட்டத்தை அண்மையில் பரிசீலனை செய்யும். தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசாங்கங்கள் ஆகியவர்களையும் இதைக்குறித்து கலந்தாலோசிப்போம். தொழில் திறமையையும் உற்பத்தி அளவையும் பெருக்க வேண்டுமானால், தொழிற்சாலைத் தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்வது அவசியமாகும். தங்கள் தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதில் தொழிற்சாலை நிறுவனங்கள் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டிவரும். ஏற்கெனவே நிலைத்துள்ள தொழில்களில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது இன்னும் பூர்த்தியாகவில்லை. இதைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் புதிய தொழில்களில் தொழிலபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கும்போது தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு வசதி

65. குறைந்த வருமானமுள்ளவர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாநில அரசாங்கங்கள் ரூ. 6,000-க்கு மேற்படாத ஆண்டு வருமானமுள்ளவர்களுக்குக் கடன் வசதியளிக்கின்றன. இக் கடனை 30 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். நிலக் கிரயம் உட்பட வீடு கட்டும் செலவில் 80 சதவீதம் வரை நிதி உதவி வழங்குவோம். இப்படிக் கொடுப்பது வீடு ஒன்றுக்கு உயர்ந்த அளவு ரூ. 8,000 என்னும் வரையறைக்குட்பட்டதாகும். இத் திட்டத்தை 1954-ம் ஆண்டில் ஆரம்பித்தோம். இத் திட்டத்தின்கீழ் 74,000 வீடு கட்ட இதுவரை கடன் வழங்கியுள்ளோம். இதில் 2-வது திட்ட முடிவுக்குள் 60,000 வீடுகள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கிறோம். இத் திட்டத்தின்கீழ் ஏராளமானவர் கடன் கேட்கிறார்கள். மனை வசதி ஏற்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள நகரங்களில் இத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறியுள்ளது. வீட்டு வசதி நிதிக் கார்பொரேஷன் அல்லது கழகங்கள் அமைக்கப்படும்போது அவை இத் திட்டத்தின்கீழ் இப்போது அரசாங்கத்தாரிடமிருந்து உதவி பெற்று வருவோர்களுக்குப் பெருமளவில் உதவி செய்ய முடியும். ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் போன்ற நிறுவனங்களிடமிருந்து இதற்கெனக் கடன் வசதி வசவரப் பெருகுவதற்கேற்ற வாய்ப்பு இருக்கிறது. துப்புரவாளர்கள், நடைபாதை வாசிகள் முதலியவர்களுக்கு நிதி உதவி அளிக்கத்தான் வேண்டும். இவர்களுடைய வீட்டு வசதிக்காக இத் திட்டத்தில் அரசாங்க உதவித் தொகை பெருமளவில் அதிகரிக்கும். இவர்களுக்கென வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதையும் ஊக்குவிப்பது அவசியமாகும்.

சேரி ஒழிப்பும் சேரி அபிவிருத்தியும்

66. சேரி ஒழிப்பு பற்றிய ஆலோசனைக் குழு இரண்டாண்டுகளுக்கு முன் இப் பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்தது. திட்ட வேலைக் குழுவினுல் அமைக்கப்பட்ட ஆராய்ச்சிக் கோஷ்டி ஒன்றும் இப் பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்தது. நகரப் பகுதிகளில் மனிதர்கள் வசிப்பதற்கு லாயக்கற்ற சுகாதாரக்கேடான வீடுகள் 11·5 லட்சம் இருப்பதாக ஆலோசனைக் குழு மதிப்பிட்டது. நீண்ட காலத் திட்டம் நிறைவேற வேண்டுமாஞலும், இப் பகுதியிலுள்ள மக்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்காக குறுகிய கால அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியமென இக் குழு ஆலோசனை கூறியது. சுகாதார முறையில் அமைந்த கக்கூசுகள், தகுந்த வடிகால் வசதி, தீங்கற்ற குடிநீர் வசதி, நல்ல அனுகுசாலைகள், நல்ல தெரு வசதி, விளக்கு வசதி போன்ற குறைந்தபட்ச வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நகர அபிவிருத்திப் பிரச்சினையின் அங்கமாகிய சேரி ஒழிப்பைச் செயலாற்ற வேண்டும். நகர அபிவிருத்திக்குப் பெருந்திட்டங்களும், இடைக்காலத் திட்டங்களும் அவசியம் இருக்க வேண்டும். மேற்கூறிய குழுக்களின் அறிக்கைகளை அனுசரித்து, சேரி ஒழிப்புத் திட்டத்துடன் சேரி அபிவிருத்தித் திட்டத்தையும் இணைத்து, கல்கத்தா, பம்பாய், சென்னை, டெல்லி, கான்பூர், ஆமதாபாத் ஆகிய ஆறு பெரிய நகரங்களில் சேரிப் பிரச்சினையைக் கவனிப்பதற்குப் பெருமளவில் நிதி ஒதுக்க ஒப்புக்கொண்டோம். இந்த நகரங்களில் சேரி ஒழிப்புக்குக் கொடுக்கும் உதவித் தொகையைச் செலவில் 50 சத வீதத்திலிருந்து $62\frac{1}{2}$ சத வீதமாக உயர்த்திஞேம். இதில் மத்திய அரசினரின் பங்கு 25-லிருந்து $37\frac{1}{2}$ சத வீதமாக உயர்ந்தது.

நில ஆர்ஜிதமும் அபிவிருத்தியும்

67. குறைந்த வருமானம் உள்ளவரின் வீட்டு வசதி, உதவி பெற்ற தொழிலாளர் வீட்டு வசதி, சேரி ஒழிப்பு, சேரி அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவைகளை நடத்திப் பார்த்ததன் விளைவாகவும், நடுத்தர வருமானமுள்ளவர்களையும் குறைந்த வருமானமுள்ளவர்களையும் வீடுகள் கட்டிக் கொள்ள ஊக்குவித்ததில் கிடைத்த அனுபவத்திலிருந்தும் வெளிப்படையாகத் தெரிகிற விஷயம் என்னவென்ருல், இவ் வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமாஞல், மனைக்கட்டுகள் போதுமான அளவில் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். எனவே, நில ஆர்ஜிதத் திட்டம் ஒன்றை அண்மையில் அமுலுக்குக் கொண்டு வந்தோம். இதன் மூலம் மாநில அரசாங்கங்கள் தேர்ந்தெடுத்த பகுதிகளில் நிலங்களை ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்வார்கள். அப்படி அபிவிருத்தி செய்த மனைக்கட்டுகளை பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிபெற உரிமையுள்ளவர்களுக்கு கீழ்கண்ட வரிசைக்கிரமப்படி முதலிடம் அளித்து அவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவார்கள் :—(1) சேரி ஒழிப்புத் திட்டம், (2) உதவி பெற்ற தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், (3) குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம், (4) நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம், (5) மாநில

அரசாங்கப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டுவசதித் திட்டம். இத் திட்டங்களின்கீழ் வராதவர்களுக்கு விற்பனை செய்வதற்கென ஒரு சில மனைக் கட்டுகளை ஒதுக்கிவைக்க வேண்டும். இவ்வாறு ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்த நிலங்களை, புதிய நகரங்கள் திட்டமிட்ட சீரான நிலையில் வளருவதற்கு, அவற்றில் சிறு தொழில்களையும் நடுத்தரத் தொழில்களையும் அமைப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முதற்கண் மேலே கூறிய ஆறு பெரிய நகரங்களில் இவ்வாறு செய்யப்படும். அளவிலும் மக்கள் தொகையிலும் விரைவாக வளர்ந்து வருகிற நகரங்களுக்கும் இத் திட்டத்தைப் படிப்படியாக விஸ்தரிப்போம். வீட்டு வசதித் திட்டம் வெற்றியடைய வேண்டுமானால், மூன்றுவது திட்டத்தில் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டத்துக்கு முதலிடம் கொடுத்து அதை அடிப்படைத் திட்டமாகக் கருதவேண்டும். கிடைக்கும் ஆதாரத்திலிருந்து இதற்கு வேண்டிய நிதி ஒதுக்கித்தர வேண்டும்.

பெரிய நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும் பெருமளவில் நகரமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மாநில அரசாங்கங்களுக்கு உதவி செய்ய மூன்றுவது திட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டுமெனவும் உத்தேசித்துள்ளோம்.

68. பல நகரங்களில் பெருமளவு நில ஆர்ஜிதம் செய்வதற்கு சில இடையூறுகள் உள்ளன. அங்கு நில விலை ஏறி வருகிறது. நிர்வாக நடைமுறையிலும் சட்ட நடைமுறையிலும் நீண்ட காலம் செலவாகிறது. நில மதிப்பு உயர்வதைத் முதற்கண் தடை செய்ய வேண்டும். நடைமுறைகளை எளிதாக்க விரிவான முறையில் முயற்சி செய்யவேண்டும். ஆர்ஜிதம் செய்த நிலங்களைக் குத்தகை அடிப்படையிலேயே பங்கீடு செய்ய வேண்டும். அப்போதுதான், மனைக்கட்டு வாடகை மூலம் அரசாங்கத்துக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும். மனைக்கட்டு விலை தாறுமாறுக ஏறுவதும் குறையும். இந்த மனைக்கட்டு வாடகையை நில மதிப்பு உயர்வின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றியமைக்க வேண்டும். வேளாண்மை அல்லாத காரியங்களுக்கு வேளாண்மை நிலங்களைப் பயன்படுத்திஞல் அவற்றிற்கு விசேஷ வரி விதிப்பது, அபிவிருத்தி வரி விதிப்பது, காலியாக இருக்கும் மனைக்கட்டுகளுக்கு வரி விதிப்பது போன்ற வரி விதிப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது அவசியமாகும். பெரிய நகரங்களில் தனிப்பட்ட மனைக்கட்டின் அளவுக்கும் ஒருவர் வைத்திருக்கக்கூடிய மனைக் கட்டுகளுக்கும் உச்சவரம்பு ஏற்படுத்துவது அவசியமாகும்.

கிராம வீட்டு வசதி

69. கிராமப் பகுதியில் வீட்டு வசதிப் பிரச்சினையை இரண்டாவது திட்டத்தில்தான் கவனிக்க ஆரம்பித்தோம். கிராம வீட்டு வசதி அபிவிருத்தியைக் கிராமப் பகுதிகளில் பொதுவான பொருளாதார அபிவிருத்தியின் அங்கமாகவே கவனித்து வந்தோம். கிராமப் பொருளாதார அபிவிருத்தியுடன் வீட்டு வசதியும் அபிவிருத்தி அடைய வேண்டும். கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கவும் தொழில் நுட்ப

உதவி அளிக்கவும் ஏற்பாடு செய்துள்ளோம். ஷெட்யூல்டு மலை ஜாதியினர், ஷெட்யூல்டு ஜாதியினர், மற்ற பின்னிலை வகுப்பினர் ஆகியவர்களின் விஷயத்தில் உதவித் தொகை அளிக்க வேண்டியிருக்கும். இவர்களின் நலனை முன்னிட்டு அங்கங்கே ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து இதற்கு வேண்டிய தொகையை எடுத்துக்கொள்ளலாம். இத திட்டத்தின்கீழ் கிராமங்களைத் தேர்ந்தெடுக்கையில் கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த கிராமங்களுக்கு முதலிடம் அளிக்கவேண்டும்.

(1) வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளிலுள்ள கிராமங்கள் ; இந்த அபாயமில்லாத இடங்களில் கிராமங்களை நிர்மாணிக்க உத்தேசித்துள்ளோம் ;

(2) மக்கள் தொகை மிகுந்துள்ள கிராமங்கள் ; டெல்டாப் பகுதிகளிலும் மற்ற பாசனப் பகுதிகளிலும் தொழில் நகரங்களுக்கு அருகாமையிலும் உள்ள கிராமங்களில் மக்கள் தொகை மிகுந்திருக்கும் ;

(3) ஏழ்மை காரணமாகவும் வசதியற்ற கட்டிட மனைகள் காரணமாகவும் மோசமான வாழ்க்கை நிலையை உடைய பின்னிலை வகுப்பினர் உள்ள கிராமங்கள் ;

(4) நிலக் கையிருப்பு ஒருங்கிணைக்கப்பட்டுள்ள அல்லது ஒருங்கிணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்கள் ; இதனால், இக் கிராமங்களில் கிராம வீட்டு வசதி அபிவிருத்திக்காகவும் சமுதாய வசதி அபிவிருத்திக்காகவும் நிலம் கிடைக்கும் ;

(5) வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ள கிராமங்கள்.

இத் திட்டத்தின்கீழ் அக்கம்பக்கத்திலுள்ள 4 முதல் 6 கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு தொகுதியாக்கி அவைகளுக்கு வீட்டு வசதித் திட்டம் ஏற்படுத்தவேண்டும். இந்தத் திட்டங்களைப் பெரும்பாலும் "தன்கையே தனக்குதவி" என்ற அடிப்படையில் ஓரளவு உதவித் தொகையுடன் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் தொழில் நுட்ப மேற்பார்வை வசதிப்படும். கூட்டுறவு முறையில் செங்கற் சூளையும், சுண்ணாம்புக் காளவாயும், கட்டிடச் சாமான் உற்பத்தி செய்யும் வேலைச் சாலைகளும் ஏற்படும்.

70. இதுவரை இத் திட்டத்தின்கீழ் 2,000 கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம். ஏற்பட்ட பலன்களை இதற்குள் மதிப்பிட்டுவிட முடியாது. இத் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டுவதுமன்றி, ஏற்கெனவே உள்ள வீடுகளை மாநில அரசாங்கங்கள் நிச்சயிக்கக்கூடிய தரத்துக்கு உயர்த்தி அபிவிருத்தி செய்வதற்காகவும் உதவி வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுத்த கிராமங்களில் சாலைகள் அமைக்கவும், வடிகால் கட்டவும் திட்டத்தில் ஏற்பாடு செய்யவில்லை. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ளூர் முயற்சியின்மூலம் இவ் வசதிகளைச் செய்யவேண்டுமென நாம் உத்தேசித்திருப்பதே இதற்குக் காரணமாகும். உள்ளூர் கட்டிடச் சாமான்களை அபிவிருத்தி செய்வதை ஆராய்ச்சி செய்வதற்காகவும், கட்டிட

உத்திகளை ஆராய்ச்சி செய்வதற்காகவும், மாநில அரசாங்கங்கள் அமைத்துள்ள கிராம வீட்டு வசதிக் குழுக்களுக்குத் தேவையுள்ள பணியாள்களுக்கும் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தொழில் நுட்பப் பணியாளாகளுக்கும் பொறியியல் துறை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காகவும் ஆராய்ச்சி-பயிற்சி நிலையங்கள் ஆறு ஏற்படுத்தியுளளோம். மூன்றுவது திட்டத்தில் இவ் வேலைத் திட்டத்தை சமுதாய அபிவிருத்தித் திட்டத்துடன நெருங்கிய தொடர்புள்ளதாக்குவது அவசியமாகும். அப்போதுதான் செங்கல் சூளைகளை அமைப்பதிலும், கட்டிடச் சாமான்களைத் தயாரிப்பதிலும், புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கான பிரதேசத்தை விஸ்தரிப்பதிலும், சிறப்பாக நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளரின் வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் அதிகக் கவனம் செலுத்த முடியும். தொழில் நுட்ப உதவி அளிப்பதற்குரிய நிறுவனத்தை வலுப்படுத்தவேண்டும்.

வேளாண்மைத் தொழிலாளர் வீட்டு வசதிக்குரிய கிராம மனைக்கட்டுகள்

71. சில மாநிலஙகள் கடந்த சில ஆண்டுகளில் நிலச் சீர்திருத்தச சட்டம் செய்துள்ளன. கிராம மனைக்கட்டு குடியிருப்பாளர்களுக்கு அவற்றில் அனுபோகப் பாத்தியதை அல்லது முழு உரிமையை அளிக்க அச் சட்டங்களில் ஏற்பாடு செய்துள்ளது. இன்னும் பல மாநிலங்களில் இத்தகைய ஏற்பாடு செய்யப்படவில்லை. நஷ்ட ஈடு அளித்து நில உரிமை மாற்றுவதற்கு சில மாநிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் வீட்டு மனைக்கட்டில் அதில் குடியிருப்பவர்களுக்கு முழு உரிமை இருக்க வேண்டும். அவர்களுக்கு அதில் உறுதிநிலை யிருக்க வேண்டும். இதை இலவசமாகச் செய்துகொடுக்க வேண்டும் அல்லது பெயரளவுக்கு அவர்களிடமிருந்து தொகை பெற்றுக்கொண்டு செய்து கொடுக்க வேண்டும். பல மாநிலங்களில் இப்போதுள்ள நிலைமை மகிழ்ச்சி தருவதாக இல்லை. மக்கள் தொகை மிகுந்த கிராமங்களில் கிராமக் குடியிருப்பு மனையை விஸ்தரிப்பது அவசியமாகும். இருக்கும் மனைக்கட்டுகளை ஒருங்கிணைப்பது மூலம் இவ் வசதிகளைச் செய்து தராவிட்டால், இதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். கிராமச் சமுதாய நிலங்களை அல்லது புறம்போக்கு நிலங்களைக் கிராமச் சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலுள்ளோருக்கு, குறிப்பாக, நிலமில்லாதவருக்கு மனைக் கட்டு வழங்க, தாராளமாகப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

5. மக்கள் நலத் திட்டங்கள்

72. திட்டத்தில் சேர்த்துளள பெரும்பாலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சமுதாயம் முழுவதன் நன்மையை உத்தேசித்து உள்ளவையாகும். சமுதாயத்தில் குறித்த பகுதியினரின் நலனை முன்னிட்டு, ஷெட்யூல்டு மலை ஜாதியினர், ஷெட்யூல்டு ஜாதியினர், பின்னிலை வகுப்பினர் ஆகியோரின் நலனை முன்னிட்டு, திட்டத்தில் விசேஷ ஏற்பாடு செய்துள்ளோம். பொதுவாக, சமூக நல வேலைத் திட்டங்களுக்கு, குறிப்பாக மகளிர்-சிறுவர் நல வேலைத் திட்டங்களுக்குத் திட்டத்தில் ஏற்பாடு செய்துள்

ளோம். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு பற்றியே மூன்றுவது திட்டத்தில் முக்கியமாக ஏற்பாடு செய்துள்ளோம். புனர்வாழ்வு வேலைத் திட்டத்துக்காகவும் தண்டகாரண்ய வேலைத் திட்டத்துக்காகவும் உத்தேசமாய ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளோம். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயாநதோர்களுக்கென தண்டகாரண்ய வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இவ்வாறு ஒதுக்கியுள்ள தொகையை பின்னர் உண்மையில் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு ஏற்ப மாற்றியமைப்போம். பினனிலை வகுப்பினர் நலன பற்றிய பிரச்சினைகளையும், சமூக நலத் திட்டப் பிரச்சினைகளையும் அடுத்து வரும் பாராக்களில் ஓரளவு விவரித்துள்ளோம். மூன்றுவது திட்டத்தில் நிறைவேற்றிவைகக இபபோதுள்ள வேலைத் திட்டஙகளை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டுமெனவும் உததேசமாய்க் குறிப்பிட்டுள்ளோம்.

பின்னிலை வகுப்பினர் நலன்

73. பின்னிலை வகுப்பினர் நலனுக்காக மூன்றுவது திட்டத்தில் ரூ. 100 கோடி ஒதுக்கியுள்ளோம். பின்னிலை வகுப்பினர் வேலைத் திட்டத்தில் சேர்த்துள்ள பல்வேறு தொகுதியினருக்கு உத்தேசமாய் ஒதுக்கியுள்ள தொகையையும் இரண்டாவது திட்டத்தில் இவர்களைக் குறித்து எதிர் பார்க்கப்படும் செலவையும் கீழே காட்டியுள்ளோம்.

		மூன்றுவது திட்டம் உததேச நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடிக கணககில்)
ஷெட்யூல்டு மலைஜாதியினர்	43	59
ஷெட்யூல்டு ஜாதியினர்	27	32
மற்றவர்கள்	9	9
மொத்தம்	79	100

ஷெட்யூல்டு மலை ஜாதியினர்

74. ஷெட்யூல்டு மலை ஜாதியினர் பற்றிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றத்தை மலை ஜாதியினர் நல மகாநாடு பலவற்றில் ஆராய்ந்துள்ளோம். திட்ட வேலைக் குழுவினுல், மதிப்பீட்டுக் குழுவினுல் நியமிக்கப்பட்ட ஆய்வுக் கோஷ்டி ஒன்றும் இதை ஆராய்ந்தது. இரண்டாவது திட்டக் கால அளவில் மேற்கொள்ளப்பட்ட 43 விசேஷ பலநோகக மலை ஜாதியினர் வட்டாரங்களின் வேலையையும் ஆராய உள்நாட்டு அமைச்சு நியமித்த குழுவும் இந்த அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராய்ந்தது. இவற்றின் பயனுய் மூன்றுவது திட்டத்துக்குரிய வேலைத் திட்டங்கள் அடியிற்கண்ட வழி முறைகளில் இருக்க வேண்டும். அவற்றை அம்முறைகளில் வகைப்படுத்தி, தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) ஷெட்யூல்டு மலை ஜாதியினர், ஷெட்யூல்டு பிரதேசம் பற்றிய வேலைத் திட்டங்களில் கீழ்க்கண்ட முறையில் முதன்மை அளிக்கவேண்டும் :—
(i) பொருளாதார வளர்ச்சியும் செய்தித் தொடர்பும், (ii) கல்வி, (iii) பொதுச் சுகாதாரம்.

(2) பன்னோக்க மலே ஜாதியினர் அபிவிருத்தி வட்டாரங்களை, ஷெட்யூல்டு பிரதேசங்களிலும் மலே ஜாதியினர் பிரதேசங்களிலும் அமைப்பதென வரையறை செய்துகொள்ளாமல், எந்தெந்த இடங்களில் மலேஜாதியினர் அதிகம் வசிக்கிருர்களோ அங்கெல்லாம் அவற்றை அமைப்பது நல்லது.

(3) மலே ஜாதியினர் பிரதேசங்களில் நியமிக்கப்படுகிற ஊழியர்களுக்கெல்லாம் மறு பயிற்சி அளிக்க வேண்டும்.

(4) மலே ஜாதியினர் கூட்டுறவுத் துறையில் உற்சாகம் கொள்ளவும் நல்ல சூழ்நிலே உருவாக்குவதற்கும் விசேஷ நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நிலத்திலும் காட்டிலும் அவர்களுக்குள்ள உரிமையை மதித்து நடக்க வேண்டும். நிலம் விஷயமாக உள்ள உறுதி மொழி பற்றிய தற்போதைய ஏற்பாடுகளேயும் காட்டுச் சட்டங்களேயும் ஒழுங்கு முறைகளேயும் மலே ஜாதியினருக்குப் பயன்படும் விஷயத்தினையும் ஒவ்வொரு மாநிலத்திலும் மறு பரிசீலனே செய்ய வேண்டும்.

(5) திட்ட வேலேக் குழு நியமித்த ஆய்வுக் கோஷ்டி சிபாரிசு செய்துள்ளவாறு, மலே ஜாதியினர் பிரதேசங்களில் சாகுபடிக்கேற்ற நிலத்தை அளவிட்டு, வெவ்வேறு இடங்களுக்குச் சென்று சாகுபடி செய்பவர்களுக்கும் நிலமில்லாத மலே ஜாதியினருக்கும் அவற்றை வழங்க திட்டம் வகுக்க வேண்டும்; இந்த வேலேத் திட்டத்தைக் காடு வளர்ப்பு வேலேத் திட்டத்துடனும், மாற்றுச் சாகுபடி பழக்க முறைகளுடனும் ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டும்.

(6) மலே ஜாதியினர் பிரதேசங்களில் மலே ஜாதியினரை வேலேக் கமர்த்த காட்டுத் துறையினர் விசேஷ நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இயன்றவரையில் காட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களே அபிவிருத்தி செய்ய வேண்டும். நல்ல முறையில் காட்டு நிர்வாகம் நடைபெற அவசியமான ஆலோசனே கூறி தகுந்த விதத்தில் மேற்பார்வை செய்ய வேண்டும்.

(7) மலே ஜாதியினர் பிரதேசங்களில் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படவில்லே. எனவே, 6—11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்கள் அனேவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதெனினும் இலக்கு சாதாரண முறையில் இவ்விடங்களில் நிறைவேறுவதற்குப் பல கஷ்டங்கள் உள்ளன. இப் பிரச்சினேயை ஒவ்வொரு பிரதேசத்திலும் கவனமுடன் ஆராயவேண்டும். ஆசிரியர்களின் பயிற்சி, பாட புத்தகங்களேத் தயாரித்தல், மலே ஜாதியினர் மொழிகளேப் பயன்படுத்துதல், சிறுவர்களேப் பள்ளிக்குக் கொண்டு வருதல் முதலியவற்றிற்காக விசேஷ நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(8) மலே ஜாதியினர் வசிக்கும் பிரதேசங்களில் பல தொழில் நிருவனங்களே அமைத்து வருகிறோம். மலே ஜாதியினர் அபிவிருத்திக்கு

இதனால் வழி ஏற்படும். ஆனால், இத்துடன்கூடவே மலை ஜாதியினருக்குக் கல்வி கற்பிக்கவும் தொழிற் பயிற்சியளிக்கவும் தாமதமின்றிப் பெருமளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஷெட்யூல்டு மலைஜாதியினர், ஷெட்யூல்டு பிரதேசங்கள் பற்றிய வேலைத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பிட அரசியலமைப்பின் 339-வது பிரிவின்கீழ் அண்மையில் கமிஷன் ஒன்று நியமித்தோம். எதிர்காலத்தில் செய்ய வேண்டியதைப்பற்றி இக் கமிஷன் சிபாரிசு செய்யும்.

ஷெட்யூல்டு ஜாதியினர்

75. திட்ட வேலைக் குழு, மதிப்பீட்டுக் குழு நியமித்த ஆய்வுக் கோஷ்டி ஷெட்யூல்டு ஜாதியினரைக் குறித்த வேலைத் திட்டங்களை அண்மையில் ஆராய்ந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் கீழ்க்கண்ட அம்சங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

(1) ஷெட்யூல்ட் ஜாதியினரின் சமூகத் தகவின்மைகளைப் போக்குவதற்காகப் பல சட்டங்களை இயற்றியுள்ளோம். இச் சட்டங்களை அமுலாக்க, படிப்படியாக நிர்வாக ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். பொருளாதாரத் துறையில் இவர்கள் பின்தங்கியிருப்பதே இதற்குக் காரணமாகும். எனவே, ஷெட்யூல்டு ஜாதியினர் பின் தங்கிய வகுப்பினர் ஆகியோரின் வேலைத் திட்டத்தில் அவர்களுடைய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஷெட்யூல்டு ஜாதியினர் சிறு சிறு அளவில் மற்ற வகுப்பினருடன் விரவிக் கிடப்பதால் பொதுவாக மக்களின் நிலை உயர்ந்தால்தான் இவர்களுடைய நிலையும் உயரும். வேளாண்மைத் துறையிலும் மற்ற துறையிலும் இவர்களுக்கு வேலை கிடைக்க விசேஷ நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்களையும் மற்ற வேலைத் திட்டங்களையும் பின்னிலை வகுப்பினர்களின் நலனுக்கு உகந்த வகையில் செயல்படுமாறு மாற்றியமைக்க வேண்டும். இவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள விசேஷ ஷரத்துக்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(2) ஷெட்யூல்டு ஜாதியினரின் நிலை இப்போது ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. அவர்களில் ஒரு சிலர் நல்ல நிலையிலிருக்கின்றனர். இவர்களில் நல்ல நிலை அடையாதவர்களுக்கும் அதிகத் தகவின்மை உடையவர்களுக்கும் அதிக உதவி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உபகாரச் சம்பளம், பயிற்சிப் பணம் முதலியவற்றைக் கொடுப்பதில் ஷெட்யூல்டு ஜாதியினருக்குள்ளேயே இதனால் பாகுபாடு செய்ய வேண்டியுள்ளது. இவற்றைப் பெறுவதற்கு உரிமை உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மேற்கொள்ளவேண்டிய வழி வகைகளை மாநில அரசாங்கங்கள் வகுக்கவேண்டும்.

(3) பின்னிலை வகுப்பினர் மற்ற வகுப்பாருடன் சேர்ந்து ஒரே விடுதியில் இருக்கவேண்டுமா அல்லது இவர்களுக்கெனத் தனி விடுதி இருக்கவேண்டுமா என்னும் பிரச்சினையை ஆராய்ந்தோம். இவர்கள் மற்றவருடன் சேர்ந்து ஒரே விடுதியில் இருக்க வேண்டும் என்பதையே பலரும் ஆதரிக்கின்றனர். மூன்றுவது திட்டத்தில் இதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(4) அரசாங்கப் பணிக்கு ஆள் எடுப்பதில் ஒரு சில பதவிகளைப் பின்னிலை வகுப்பினர்க்கு ஒதுக்கி வைக்க வேண்டுமென்ற விதியிருந்தபோதிலும், இவர்களுக்கு ஒதுக்கி வைத்த பதவிகள் முழுமையும் நடைமுறையில் இவர்களுக்கே கிடைப்பதில்லை. அதே சமயத்தில் ஓரளவு கல்வி பெற்ற பின்னிலை வகுப்பினரில் பலரும் வேலையற்று இருக்கின்றனர். எனவே, ஒவ்வொரு பகுதியிலுமுள்ள பின்னிலை வகுப்பினரின் கஷ்டங்களை நிர்ணயித்து அறிந்துகொள்ள வேண்டும். இவ்வகுப்பினரில் கல்வி கற்றுவருபவர்களுக்கு மேற்கொண்டு பயிற்சியளிக்கவும் மறு பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவர்களில் முன்னுக்கு வரக்கூடிய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும் மற்ற உதவிகளும் பயிற்சிக்காலம் முடிவுற்று அவர்கள் வேலை பெறுகிறவரையில் தொடர்ந்து அளித்துவர வேண்டும். பின்னிலை வகுப்பினருக்குத் தொழில் நுடபப் பயிற்சி அளிப்பதிலும் தொழில் பயிற்சி அளிப்பதிலும் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.

குற்ற பரம்பரைப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட மலை ஜாதியினர்

76. குற்ற பரம்பரைப் பட்டியலிலிருந்து மலை ஜாதியினர்களை விலக்கிய பிறகு, அவர்களின் புனர்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் மாநிலங்களில் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களினுல் ஓரளவு இதுவரை பயன ஏற்பட்டுள்ளது. ஒவவொரு பகுதியிலும் இத்தகைய மலை ஜாதியினரின பிரச்சினையைக் கூர்ந்து ஆராய்ந்து மாநிலத் திட்டங்களில் விசேஷத் திட்டங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் திட்ட வேலை குழு நியமித்த ஆய்வுக் கோஷ்டியின் அடியிற் கண்ட சிபாரிசுகளைக் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்.

(1) குற்ற பரம்பரைப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட சமூகத்தினரின் புனர் வாழ்வுக்காக சீர்திருத்த-நல நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இத்துடன் சமூகக் கல்வி வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டும்.

(2) இவர்களுடைய துணிவாற்றலையும் பரம்பரைத் திறமைகளையும் கருதிப்பார்த்து அவற்றிற்கு ஏற்ற வகையில் விசேஷப் பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

(3) தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் மற்ற கூட்டுறவுச் சங்கங்களையும் அமைக்கவேண்டும்.

(4) இவர்களுக்கு அரசாங்க வேலை கிடைப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மேற்கொண்டு பயிற்சி யளிக்கவும் மறு பயிற்சி யளிக்கவும் ஏறபாடு செய்யவேண்டும்.

(5) குற்ற பரம்பரைப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட மலை ஜாதியினர் குறித்த பகுதியில் அதிகமாகக் குடியிருந்தால், அப் பகுதியில் அவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களையும் அவர்களுடைய பணபாட்டினையும் நன்குணர்ந்தவர்களாய் அவர்களுடன் நெருங்கி வேலை செய்யக்கூடிய பணியாளர் கோஷ்டி ஒன்றை உருவாக்க வேண்டும்.

சமூக நலன்

77. கடந்த ஆறு ஆண்டுகளாக, சமூகநலத் திட்டங்களைச் சுயேச்சை நிறுவனங்கள் மத்திய மாநில அரசாங்கங்களின் உதவியுடன் நிறைவேற்றி வருகின்றன. இந்த வேலைத் திட்டங்கள ஐந்தாண்டுத் திட்டத்தின் இன்றியமையா வேலைத் திட்டங்களாகி விட்டன. மத்திய மாநில சமூக நலக் கழகங்கள் மேற்கொள்ளும் நலப் பரப்புத் திட்டங்கள், சமூகச் சுகாதாரம், ஒழுக்கநெறி, பிற்காப்புப் பணிபற்றிய வேலைத்திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள், மாநில அரசாங்கங்கள் நேரடியாக மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும். வேலைத் திட்டக் குழு, மதிப்பீட்டுக் குழு நியமித்த சமூக நல ஆய்வுக் கோஷ்டி இவ் வேலைத் திட்டங்கள் செயல்படுவதை ஆராய்ந்தது. சமூக நலச் செயற் குழு ஒன்று மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டிய வேலைத் திட்டங்களைப் பற்றி அண்மையில் விரிவாக ஆலோசனை செய்தது. இக் குழுவில் அரசாங்கச் சார்பற்ற தலை சிறந்த பொது நல ஊழியர் பலரும் அங்கம் வகித்தனர்.

78. இந்த வேலைத் திட்டங்களுக்கு இரண்டாவது திட்டத்தில் ரூபாய் 19 கோடி செலவாகுமென எதிர்பார்க்கிறோம். மூன்றுவது திட்டத்தில் ரூபாய் 25 கோடி ஒதுக்க உத்தேசித்துள்ளோம். மத்திய சமூக நலக் கழகம் நாடெங்கிலும் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 4,500-க்கு மேற்பட்ட சுயேச்சை நிறுவனங்களுக்கு உதவி செய்துள்ளது. சுயேச்சை நிறுவனங்களே சமூகப் பணியின் பெரும் பகுதியை ஏற்கவேண்டும். இக் கழகம் முதற்கண் மேற்கொண்ட வேலை முறைப்படி 440 நலப் பரப்புத் திட்டங்களை ஏற்படுத்தியது. இவை ஒவ்வொன்றும் 25 முதல் 30 கிராமங்களில் செயலாற்றும். இதைத் தவிர, 370 நலப்பரப்புத் திட்டங்கள் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்துடன் கூட்டான முறையில் அமைக்கப்படும். சமூகச் சுகாதாரம், ஒழுக்கநெறி, பிற்காப்பு பற்றிய வேலைத் திட்டத்தின்கீழ் 50 அரசாங்க இல்லங்களும் 159 மாவட்ட விடுதிகளும், வரவேற்பு நிலையங்களும் அமைக்கப்படுமென எதிர்பார்க்கிறோம். சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2-வது திட்ட முடிவுக்குள் 35 காவல் விடுதிகளும் 18 சீர்திருத்தப் பள்ளிகளும், 5 பார்ஸ்டல் பள்ளிகளும், 13 சீர்திருத்த

விடுதிகளும், 25 பிச்சைக்காரர் விடுதிகளும், 30 பாதுகாப்பு இல்லங்களும் அமைக்கப்படுமென எதிர்பார்க்கிறோம். சிறைகளில் சீர்திருத்த அதிகாரிகளையும் நலக்காப்பு அதிகாரிகளையும் நியமிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

79. மேற்கொண்டுள்ள சமூக நல வேலைகளை ஆராய்ந்ததன் பயனுய், சில பொதுவான முடிவுகள் ஏற்பட்டுள்ளன. மூன்றுவது திட்டத்தை உருவாக்குவதில் இவற்றைக் கவனிக்கவேண்டும். இவற்றுள் மிக முக்கியமானவை சிலவற்றைக் கீழே சுருக்கமாகக் குறிபிட்டுள்ளோம்:—

(1) நலப் பரப்பு வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளதால் பல்வேறு நலக்காப்பு நிலையங்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத் தேவைக்காக இவற்றை நிலையாக வைத்து வரவேண்டிய ஏற்பாடுகளை மாநிலத் திட்டங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(2) சமூக நல வேலையிலுள்ள நிர்வாகப் பிரச்சினைகளை, குறிப்பாக மாநில நிலையில் சமூக நலத் துறைகளுக்கும் மாநில சமூக நலக் கழகங்களுக்கும், வட்டார நிலையில் திட்ட நிறைவேற்றுக் குழுக்களுக்கும், பஞ்சாயத்துச் சமிதிகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய ஏற்பாடுகளை, பல குழுக்களும் தங்கள் அறிக்கைகளில் சுட்டிக் காட்டியுள்ளன. மத்திய அரசாங்க அமைச்சர்களின் வேலையை ஒருங்கிணைப்பது அவசியமாகும். முக்கியமாக, சுயேச்சை நிறுவனங்களுக்கு உதவித் தொகை அளிக்கும் விஷயத்தில் இவ்வாறு செய்யவேண்டும். ஏனெனில், ஒரே நிறுவனத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுகள் நிதி வழங்கும் நிலை ஏற்படக் கூடாது.

(3) சுயேச்சை நிறுவனங்கள் சமூகநல வேலையில் வரவர முக்கிய பணியாற்றி வருகின்றன. ஏராளமான எண்ணிக்கையில் சமூக ஊழியர்களை முக்கியமாக மகளிரைப் பொதுச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளன. ஆனால், பெரும்பாலான நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லை. அவர்கள் மேற்கொண்ட வேலைத் திட்டங்களும் தொடர்ந்து நடத்தப்படவில்லை. எந்த வழிவகைகளில் சுயேச்சை நிறுவனங்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டங்களை மீண்டும் ஆராய்ந்து, நல்ல பணிபுரிய தங்கள் நிறுவனங்களை எவ்வாறு வலுப்படுத்துவது என்பதைத் திட்ட வேலைக்குழு ஆய்வுக் கோஷ்டி குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

(4) சமூக நலத் துறையில் மூன்றுவது திட்டத்திலே கீழ்க்கண்டவற்றிற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென சமூக நலச் செயற்குழு சிபாரிசு செய்துள்ளது: முதலாவதாக, சிறுவர்களின் தேவைகள்; இரண்டாவதாக, கல்வித்துறையிலும் வேலைவாய்ப்புத் துறையிலும் மகளிர் தேவைகள்; மூன்றுவதாக, உடலிலாயினும், மனத்திலாயினும், சமூகத் துறையிலாயினும், பொருளாதாரத் துறையிலாயினும் ஊனமுள்ளோரின் தேவைகள்; ஆய்வுக் கோஷ்டியின் அறிக்கையைப் பின்பற்றி, செயற்குழு கீழ்க்கண்ட

வாறு கூறியுள்ளது. சுயேச்சை நிறுவனங்கள் ஓரிடத்தில் நிறுவப் பட்டுள்ள நிறுவனப் பணிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, சமுதாயப் பணிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்போது தான் அவரவருடைய குடும்பச் சூழ்நிலையையும் சமூக அமைப்பை யும் அனுசரித்து பல்வேறு துறையினருக்கு உதவி செய்ய முடியும்.

(5) மத்திய அரசாங்கத்திலுள்ள பல்வேறு நிறுவனங்கள் சிறுவர் நலன்பற்றிய வேலைத்திட்டங்களுக்கு உதவி செய்வதில் கூட்டாக அதே வகையில் செயலாற்றுவதற்காக, அமைச்சரவைச் செய லாண்மையிலேயே ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் சமூக நலச் செயற்குழு கூறியுள்ள பயன்மிக்க ஆலோசனை ஒன்றையும் குறிப்பிடலாம். இத் துறையில் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்கள், முறைகள் ஆகியவை எவ்வளவு தூரம் பயன்படுமெனக் கண்டறிய வேண்டுமானால், ஒரு சில முன்னோடி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அத் தகைய வேலைத் திட்டங்களில் சேய் நலம் பற்றிய சகல பணிகளும் இணைவான முறையில் அமைந்திருக்கும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய பூர்வாங்க வேலையின் அங்கமாக இந்த ஆலோ சனையைச் செயலாற்ற வேண்டும்.

(6) சமூகப் பாதுகாப்புத் துறையில் கீழ்க்கண்டவற்றிற்கு முதலிடம் அளிக்கவேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளோம் :

(அ) இளைஞர்கள் குற்றம் செய்வதைத் தடுப்பதும் அத்தகைய இளங் குற்றவாளிகளைச் சீர்திருத்துவதும் ;

(ஆ) ஒழுக்கநெறி, சமூகநெறித் திட்டங்களும், விபசாரத் தடைச் சட்டத்தை அமுலாக்குவதும் ;

(இ) சீர்திருத்தப் பணியும், மேற்பார்வையிடும் பணிகளும், தொடர்ந்து கவனிக்கும் பணிகளும் ;

(ஈ) பிற்காப்புப் பணிகள் ;

(உ) பிச்சை எடுப்பதையும், நாடோடியாய் சுற்றி அலைவதையும் தடுப்பதும், அப்படிப்பட்டவர்களைச் சீர்திருத்துவதும் ;

(ஊ) சிறை நலப் பணிகள் ; குறிப்பாக மகளிர் கைதிகள் விஷயமாகவும், அவர்களுடைய குழந்தைகள் விஷயமாகவும், நலப்பணிகள்; சிறைக் கைதிகளின் புனர்வாழ்வுக்கு ஏற்ற வகையில் வேலைப்பயிற்சி ஏற்படுத்துவதும் தொழில்களைப் பரவ லாக்குவதும், நவீனப்படுத்துவதும் ;

(7) ஊனமுள்ள தொகுதியினரிடையில், குருடர்களையும் செவிடர் களையும், செவிட்டூமைகளையும், சிறு வயது முதற்கொண்டு ஊன முடையவர்களையும், சித்த விகாரமுடையவர்களையும் முதலில் கவ னிக்க வேண்டும். இவர்களின் விஷயத்தில் நிறுவனப் பணி அவ சியமென்றாலும், மற்ற வகைகளிலும் இவர்களுக்குப் பணி செய் வதை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

80. சில நகரங்களில் இரவிலே தங்குமிடங்களை ஏற்படுத்தியது அண்மையிலே ஏற்பட்ட அபிவிருத்தியாகும். மூன்ருவது திட்டக் காலத்தில் இந்த வேலைத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் ; சமூகத் திட்டத்திலும், சமூக நலவேலைத் திட்டத்திலும், வீட்டுவசதி வேலைத் திட்டத்திலும் இதற்கு ஏற்பாடு செய்துளளோம்.

81. பரஸ்பர உதவியின் அடிப்படையில் நகரப் புறங்களில் சமுதாய அபிவிருத்திக்குரிய வரம்பினை முன் அத்தியாயம் ஒனறில் கூறியுள்ளோம். டெல்லி நகராண்மைக் கழகம் மேற்கொண்ட முன்னேடி வேலைத் திட்டததிலிருந்து பயனுள்ள அனுபவம் கிடைத்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தை முதற்கண சிறிய அளவில் மற்ற நகரங்களிலும் மேற்கொண்டு அனுபவம் பெறுவதுடன், பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

மதுவிலக்கு

82. மதுவிலக்கு வேலைத்திட்டங்கள் பற்றி இரண்டாவது திட்டத்தில் ஆராய்ந்தோம். மது விளம்பரம் செய்வதை நிறுத்த வேண்டுமென்றும், பொது இடங்களிலும், அரசாங்க விருந்துகளிலும் மது அருந்துவதை நிறுத்த வேண்டுமென்றும் அதில் ஆலோசனை கூறினேம். பொது மக்கள் மது அருந்துவதைக் கட்டுப்படுத்த பற்பல மாநில அரசாங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளன ; மதுவிலக்குப் பகுதிகளை விஸ்தரித்துள்ளன ; மதுவிலக்கு நாட்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. போதை ஏற்படுத்தாத குடிவகைகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். மதுவிலக்கு மத்தியக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். இக் குழு மதுவிலக்கு அபிவிருத்தியைப் பரிசீலனை செய்யும் ; பல்வேறு மாநிலங்களில் இத் துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும்; மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை ஆராயும்.

புனர்வாழ்வளிப்பு

83. மேற்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வேலை இப்போது பெரும்பாலும் நிறைவேறிவிட்டது. எனவே, மூன்ருவது திட்டத்தில் கூறியுள்ள புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களைக் குறித்ததாகும். வீட்டு வசதி, தொழிலபிவிருத்தி, கல்வி, பயிற்சி, மற்ற திட்டங்கள் ஆகியவை இந்த வேலைத் திட்டத்தில் அடங்கும். தண்டகாரணியத் திட்டம் இத் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்ருெரு பெரிய வேலைத் திட்டமாகும். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கும் உள்ளூர் மலை ஜாதியினருக்கும் புனர்வாழ்வளிக்க இத் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். மூனருவது திட்டத்தில் இதற்கு உத்தேசமாய் நிதி ஒதுக்கியுள்ளோம். பின்னர், உண்மை வேலைத் திட்டத்தை அனுசரித்து வேண்டிய நிதி ஒதுக்குவோம்,

அத்தியாயம் 7

தொழில் நுட்ப ஆள்பலமும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

1. திட்டத்தில் பயிற்சிக்கான ஏற்பாடுகள்

ஆள்பலத் தேவையை மதிப்பிடுவதும், தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், பொருளாதார முன்னேற்றத்துக்காக மிக அவசியமான முன் நடவடிக்கைகள் ஆகும். இரண்டாவது திட்ட காலத்தில் ஆள் பலம் சம்பந்தமான ஆய்வு வேலைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது, நான்காவது திட்டங்களுக்கு வேண்டிய தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக முன்னேற்பாடான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. பயிற்சித் திட்டங்களை, பின் கண்ட இனங்களின் கீழ் வகைப்படுத்திக் கொள்ளலாம் :—

(1) தொழில் வினைஞர்கள், தொழில் நுட்பப் போதகாசிரியர்கள் உள்ளிட்ட இஞ்சினீரிங் பணியாளர்கள் ;

(2) விஞ்ஞானப் பணியாளர்கள் ;

(3) வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு ஆகியவைகளுக்கான பணியாளர்கள் ;

(4) கல்வி, சுகாதாரம், மக்கள் நலத் திட்டங்கள் ஆகியவைகளுக்கான பணியாளர்கள் ;

(5) நிர்வாகம், புள்ளிவிவரச் சேகரிப்பு சம்பந்தப்பட்ட பணியாளர்கள்.

3. இஞ்சினீரிங் பணியாளர்கள் கமிட்டி 1956-ல் பயிற்சி வசதி விஸ்தரிப்புத் திட்டத்தைச் சிபாரிசு செய்தது. பின்னர் 1958-ல் மூன்றாவது திட்டத் தேவைகளை பற்றிப் புதிதாக மதிப்பீடு செய்யப்பட்டபோது, அப் பயிற்சித் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டது. இஞ்சினீரிங் கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளின் முன்னேற்றத்தைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

இஞ்சினீரிங் பணியாளர்கள்

தொழில் நுட்ப நிறுவனங்கள்.—இஞ்சினீரிங் கல்லூரிகளும் பல தொழில் பயிற்சிப் பள்ளிகளும்.

வருஷம்.	கல்லூரிகள்.			பல்-தொழில் பயிற்சிப் பள்ளிகள்.		
	நிறுவனங்களின் எண்ணிக்கை.	வருஷத்தில் சேர்க்கப்படும் மாணவர்கள்.	பயிற்சியை முடித்துக் கொண்டவர்கள்.	நிறுவனங்களின் எண்ணிக்கை.	வருஷத்தில் சேர்க்கப்படும் மாணவர்கள்.	பயிற்சியை முடித்துக் கொண்டவர்கள்.
1950	49	4,119	2,198	86	5,903	2,478
1955	65	5,888	4,017	114	10,484	4,499
1960	97	13,165	5,310	197	24,020	10,397

4. மூன்றுவது திட்டக் காலத்தில் பல்வேறு துறைகளிலும் தேவைப்படும் இஞ்சினீரிங் பணியாளர் தொகை அளவு கீழ்க்கண்டவாறு மதிப்பிடப் பட்டுள்ளது :—

	பட்டதாரிகள்.	டிப்ளமா தாரிகள்.
வேளாண்மையும் சமுதாய நல வளர்ச்சியும்	1,000	2,300
பாசனமும் மின்சாரமும்	7,500	14,500
சிறு தொழில்கள் உள்பட கைத் தொழில்களும் கனி வளமும்.	22,300	29,700
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்	4,000	8,600
சமூக நலப்பணிகள்	4,200	1,700
கட்டுமான திட்டங்கள்	4,500	21,000
மற்றவை	2,000	2,300
மொத்தம்	45,500	80,100

மூன்றுவது திட்டக் காலத்தில் (1961–66)* பட்டதாரிகள், டிப்ளமாதாரிகள் என்ற நிலையில் பல்வேறு வகைகளில் தேவைப்படும் இஞ்சினீரிங் பணியாளர்கள் எவ்வளவு பேர், கிடைக்கக்கூடியவர்கள் எத்தனை பேர் என்பது பற்றிப் பின் வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது :—

இஞ்சினீரிங், டெக்னலஜி வகை.	பட்டதாரிகள்.			டிப்ளமா தாரிகள்.		
	தேவை.	சப்ளை. †	(+) உபரி (—) பற்றுக் குறை.	தேவை.	சப்ளை.	உபரி (+) பற்றுக் (—) குறை.
சிவில்	12,500	16,700	+ 4,200	40,000	40,000	..
மெக்கானிகள்	11,500	13,000	+ 1,500	17,500	16,500	— 1,000
எலெக்ட்ரிகள்	11,000	12,700	+ 1,700	14,000	12,500	— 1,500
டெலி-தொடர்புப் பணி ..	2,500	2,100	— 400	500	400	— 100
ரசாயனம்	2,300	2,300	..	..	..	..
உலோக இயல்	1,100	1,000	— 100	800	100	— 700
சுரங்கம்	1,800	1,500	— 300	4,000	2,500	— 1,500
மற்றவை	2,800	2,400	— 400	3,300	4,000	+ 700
மொத்தம்	45,500	51,700	+ 6,200	80,100	76,000	— 4,100

மூன்றுவது திட்டத்தில் பட்டதாரிகள், டிப்ளமாதாரிகள் தேவை பொதுப்படையாகப் பூர்த்தியாகிவிடும் என்பதையும், உபரியும் பற்றுக் குறையும் மிகச் சிறுஅளவிலேயே இருக்கின்றன என்பதையும் திட்ட நிறை வேற்றத்தின்போது இதைச் சமனுக்கிக் கொள்ளலாம் என்பதையும் காணலாம்.

5. இன்சினீரிங் பட்டப்படிப்பு என்றுல், 4 அல்லது 5 வருஷ காலம் பயிற்சி பெற வேண்டும். அதன் பின் மூன்று அல்லது நான்கு ஆண்டுக்

* புள்ளி விவரங்கள் முழுமையாக்கித் தரப்பட்டுள்ளன.

† ஏ. எம். ஐ. இ. தகுதி அல்லது அயல் நாட்டில் பயிற்சி பெற்ற சுமார் 2,000 இதர இஞ்சினீயர்களும் பட்டாரிகள் சப்ளை என்ற பிரிவின் கீழ் அடங்குவர்.

காலம் அனுபவப் பயிற்சி பெற வேண்டும். எனவே பல வருஷங்கள் முன் கூட்டியே, முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. நான்காவது திட்டக் காலத்தில் தேவைப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கை சுமார் 75,000 ஆகவும், டிப்ளமாதாரிகள் எண்ணிக்கை சுமார் 1,20,000 ஆகவும் இருக்கலாம். தற்போதுள்ள பயிற்சி வசதிப்படி 57,000 பட்டதாரிகளும் 94,000 டிப்ளமாதாரிகளும்தான் கிடைப்பார்கள். பல்வேறு வகைகளிலுமாக 18,000 இன்சினீரிங் பட்டதாரிகளையும், 26,000 டிப்ளமாதாரிகளையும் பெற மூன்றாவது திட்டத்தில் கூடுதல் பயிற்சி வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதையொட்டி, பட்டப்படிப்புக்குச் சேர்க்கப்படும் மாணவர்கள் தொகை அதிகரிக்கப்படும். படிப்படியான முறையில் பட்டப் படிப்புக்கு 5,000 பேரும், டிப்ளமா படிப்புக்கு 10,000 பேரும் கூடுதலாகச் சேர்க்கப்படுவார்கள். இது முறையான கல்வி நிலையங்களில் செய்யப்படவிருக்கும் ஏற்பாடு. இதல்லாமல் பகுதி நேரப் பயிற்சி, தபால் மூலமான பயிற்சி ஆகியன மூலம், பட்டப்படிப்புக்கு மேற்கொண்டு 1,000 பேர்களையும் டிப்ளமா படிப்புக்கு மேற்கொண்டு 5,000 பேர்களையும் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழில் வினைஞர்கள் பயிற்சி

6. மூன்றாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படவேண்டிய கைத்தொழில் திட்டங்களுக்கும், இதர வேலைத் திட்டங்களுக்குமான ஆள் தேவை பற்றி, தோராயமாகச் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி இன்சினீரிங் தொழில்களுக்கு சுமார் 7,50,000 தொழில் வினைஞர்களும், இன்சினீரிங் அல்லாத தொழில்களுக்கு சுமார் 3,50,000 பேரும் தேவைப்படலாம். 1956-ல் தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிலையங்கள் 59 இருந்தன. 10,500 பேர்களுக்கு அவற்றில் பயிற்சி வசதி இருந்தது. 1961-ல் சுமார் 152 கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கும். அவற்றில் சுமார் 42,000 பேர் பயிற்சி பெற வசதி இருக்கும். இது போக, குடி பெயர்ந்தவர்களுக்கென தனி பயிற்சி வசதிகள் உள்ளன. மூன்றாவது திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சி வசதிகள் விஸ்தரிப்புத் திட்டங்களின்படி தொழில் வினைஞர்கள் என்ற பிரிவின் கீழ் மேற்கொண்டு 55,000 பேருக்கும், தேசீய அப்பிரண்டிஷிப் திட்டத்தின் கீழ் சுமார் 14,000 பேருக்கும் பயிற்சி வசதி செய்யப்படும். பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை, மூன்றாவது திட்ட முடிவில் சுமார் 250 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டக் காலத்தில் பயிற்சி முடிந்து வெளி வரக் கூடிய மொத்தத் தொழில் வினைஞர்கள் தொகை சுமார் 2,00,000 ஆக இருக்கும். நிறுவனங்களில் தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதென்ற திட்டத்தில், தொழிற்சாலைக்குள்ளே 6 மாதம் பயிற்சி பெறவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அப்பிரண்டிஷிப் உள்பட தொழில் துறையில் பயிற்சி ஏற்பாடுகளைக் கிரமப்படுத்துவதற்கான சட்டம் இயற்ற தொழிலாளர், வேலை வசதி அமைச்சரகம் உத்தேசித்திருக்கிறது. தொழிற்சாலைகளில் ஏற்கெனவே வேலையில் உள்ள தொழிலாளர்களுக்கு தொழிலறிவு விஷயங்களைப் போதிக்க மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்

பட்டுவட்ருகின்றன. தற்போது சுமார் 3,000 பேபருக்கு இந்த வகுப்புக்களில் சேர வசதி இருக்கிறது. மாலை நேர வகுப்பு விஸ்தரிப்புத்திட்டத்தின்படி இப்படி அனுகூலம் பெறுவோர் தொகை சுமார் 15,000 ஆக உயர்த்தப் படும்.

7. ரயில்வே, தேசப் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியவைகளின் தேவைகளை அந்த இலாகாக்கள் தங்கள் சொந்த வேலைத் திட்டங்கள் மூலம் சரிக்கட்டிக்கொள்ளுகின்றன தொழில் நுட்ப அறிவு இல்லாத தொழிலாளர்களுக்கும் அறைகுறையாக தொழில் நுட்ப அறிவு உடைய தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் ஏற்பாடுகள் ரயில்வேக்களில் ஏற்கனவே உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட தகுதிகள் பெற்றில்லாத, தொழிற் சாலைத் தொழிலாளர்கள் கூட தொழில்வினைஞர் என்பதற்குரிய தேசிய சான்றுப் பத்திரம் பெறவும் ஏற்கனவே ஏற்பாடுகள் உள்ளன. தொழில் பயிற்சிக்கான தேசியக் கவுன்சில் நடத்தும் தொழில் பரீட்சைகளில் "பிரைவேட்" மாணவர்களாகக் கலந்துகொண்டு, சான்றுப் பத்திரம் பெறலாம். சில குறிப்பிட்ட தொழில்களில், பெருவாரியான நபர்கள், பரம்பரையான பயிற்சி முறை மூலமே தொழில் திறமை பெற்று விடுகின்றனர்.

இதர பயிற்சித் திட்டங்கள்

8. சிறு தொழில்கள் போர்டு, கயிறு போர்டு, மத்திய பட்டுத் தொழில் போர்டு, கைத்தறி போர்டு, கைநுட்பத் தொழில் போர்டு, கதர், கிராமக் கைத் தொழில் கமிஷன் உள்ளிட்ட அகில இந்திய போர்டுகளின் பயிற்சித் திட்டங்களைத் தவிர மாநில அரசாங்கங்களும் விசேஷ பயிற்சி வசதிகள் ஏற்படுத்தியுள்ளன. சிறு ரக கைத்தொழில்களுக்காக மாநில அரசாங்கங்கள் ஏற்கனவே பயிற்சி—உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஏற்பாட்டைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சீரமைப்புத் திட்டப்படி அந்த நிலையங்கள், முற்றிலும் பயிற்சிக்கான நிலையங்களாக மாற்றப்படும் அல்லது உற்பத்திக்கான நிலையங்களாக மாற்றப்படும். அது போக, ஏற்கனவே தொழில் வினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் வராத தொழில்களுக்கும் பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்படும். சிறு ரகத் தொழில் சர்விஸ் நிறுவனங்கள், விஸ்தரிப்பு நிலையங்கள் ஆகியவைகளில் தொழில் பயிற்சிக்கு விசேஷ வசதிகள் உள்ளன. நிர்வாகம், மேற்பார்வை, விஸ்தரிப்பு வேலை ஆகியவைகளுக்கு வேண்டிய அலுவலர்கள் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இந்த விசேஷ பயிற்சி வசதிகள் விரிவாக்கப்படும். சிறு தொழில்கள் பெருக்கத் திட்டத்துக்காக மேற்பார்வையாளர்கள் சுமார் 10,000 பேரும், நிர்வாக அலுவலர்கள் சுமார் 7,200 பேரும் தேவைப்படுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

9. மத்திய அமைச்சகங்கள் பலவும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட இலாகாக்களும் விசேஷ உள் பயிற்சித் திட்டங்கள் அல்லது அனுபவப் பயிற்சித் திட்டங்களை அனுசரிக்கின்றன. தேசீய பரிசோதனைக் கூடங்கள், அணுச்சக்தி நிறுவனம், பாசன மின்சார இலாகா, ரயில்வே, இந்திய

வானியல் ஆராய்ச்சி இலாகா, அகில இந்திய ரேடியோ ஆகியவைகளை இது சம்பந்தமாகக் குறிப்பிடலாம். தனியார் துறையிலும், அரசாங்கத் தொழில் துறையிலும் உள்ள தொழில் நிறுவனங்கள் சிலவும் இதே போல் விசேஷ பயிற்சி வசதிகளைச் செய்துள்ளன.

தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு ஆசிரியர்கள் பயிற்சி

10. டிப்ளமா படிப்புக்கான பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு, மூன்றாவது திட்டக் காலத்தில் கூடுதலாக சுமார் 4,800 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றுவது திட்டத்தில் இதற்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படும். இன்சினீரிங்கல்லூரிகளுக்கு மேற்கொண்டு சுமார் 4,600 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதிகமான அளவில் ஆசிரியர்கள் கிடைக்கச் செய்வதற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் இரண்டு வகையான பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்கள் விரிவாக்கப்படும். இவற்றுள் முதலாவது தெரிந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு "பெலோஷிப்" வழங்கப்பட்டு, அவர்களுக்கு மேற்கொண்டு பயிற்சி அளிக்கும் ஆசிரியர் பயிற்சித் திட்டமாகும். 1959-ல் 109 பெலோஷிப்புகள் அனுமதிக்கப்பட்டன. இரண்டாவது திட்டம், வெளிநாடுகளில் ஆசிரிய பயிற்சிக்கானது. இத்திட்டத்தின் கீழ் 1959-ல் 250 இன்சினீயர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

11. தொழில் வினைஞர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்கள் வகையில் மேற்கொண்டு சுமார் 8,500 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது, இரண்டு மத்திய பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளில் மொத்தம் சுமார் 300 பேர் பயிற்சி பெறலாம். 650 பேருக்கு பயிற்சி வசதி இருக்கும்படியாக அவை விரிவாக்கப்படும். பெண் போதகாசிரியர்களுக்கான மத்திய பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுவோர் தொகை 32 லிருந்து 112 ஆக உயர்த்தப்படும். மொத்தம் சுமார் 1,000 பேர்களுக்கு பயிற்சி வசதி அளிக்கக்கூடியதாக, மேற்கொண்டு நான்கு மத்திய பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் இந்த ஏற்பாடுகள் மூலம் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய பயிற்சி ஆசிரியர்கள் தொகை 1,330 ஆகும். மூன்றுவது திட்டக் காலத்தில் பல்வேறு நிறுவனங்களிலுமிருந்து பயிற்சி பெற்று வரக் கூடியவர்கள் மொத்தம் சுமார் 8,000 பேர் ஆவர். விரிவாக்கும் நடவடிக்கைகளை திட்டக்கால மத்திக்குள் முடித்துவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானப் பணியாளர்கள்

12. விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சிக் கவுன்சிலின் தேசிய பதிவேட்டில், விஞ்ஞானப் பணியாளர்களின் உத்தியோக அமைப்புப் பற்றி தகவல் தரப்பட்டுள்ளது. 1960 மார்ச்சில் தேசீய பதிவேட்டில் மொத்தம் பதிவு செய்துகொண்டிருந்தவர்கள் தொகை 57,000 ஆகும். "பொதுப் பிரிவில்" பதிந்துகொண்டுள்ள 53,000 பேரும், "வெளிநாட்டிலுள்ள

இந்தியர்" பிரிவில் உள்ள 400 பேரும் இதில் உள்ளடங்குவர். பதிவு செய்து கொண்டிருப்பவர்களைப் பின்கண்டவாறு பாகுபடுத்தலாம்:—

	பொதுப் பதிவேடு.	வெளி நாட்டிலுள்ள இந்தியர் பிரிவு.
விஞ்ஞானிகள் (சயன்டிஸ்ட்ஸ்)	17,209	1,056
தொழில் நுட்பப் பணியாளர்கள் (டெக்னலஜிஸ்ட்ஸ்) ..	3,837	359
இஞ்சினீயர்கள்	28,792	1,901
வைத்திய பணியாளர்கள்	3,228	332
நிறுவனங்கள் நிர்வாகம் (பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்.)	..	309
மொத்தம் ..	53,066	3,957

நல்ல தகுதி வாய்ந்த இந்திய விஞ்ஞானிகளையும், தொழில் நுட்பப் பணியாளர்களையும் உடனடியாக வேலையில் அமர்த்திக் கொள்வதற்காக 1959-ல் விஞ்ஞானிகள் பட்டியல் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் தங்களுக்குப் பொருத்தமான இடத்தில் முறைப்படியாக நியமிக்கப்படுவதற்கு முன்பாக உடனே வேலை பெறுவதற்கு இது வகை செய்கிறது.

13. இரண்டாவது திட்டக் காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகள், சர்வகலாசாலைகள், ஆகியவைகளின் விஞ்ஞான இலாகாக்களிலும் விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் பற்றுக் குறை ஏற்பட்டது. தேசிய பரிசோதனைக் கூடங்களுக்கும் இதர நிறுவனங்களுக்கும், பட்டப்படிப்புக்கு மேற்பட்ட படிப்புத் தேர்ச்சி உள்ள விஞ்ஞானப் பணியாளர்கள் மேலும் மேலும் அதிக அளவில் தேவைப்படுகிறார்கள். இந்தத் தேவைகளைச் சரிக்கட்டுவதற்காக, கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் சேர்க்கப்படும் விஞ்ஞான மாணவர்களில் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தற்போது மொத்தம் 9,00,000 மாணவர்களில் 2,70,000 பேர் விஞ்ஞானப் பாடங்கள் எடுத்துப் படிக்கிறார்கள். மூன்றுவது திட்ட கால முடிவில் கல்லூரிகளில் இருக்கக்கூடிய சுமார் 13 லட்சம் மாணவர்களில், 5 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் விஞ்ஞானப் பாடங்கள் எடுக்கும் படிச் செய்யவேண்டும். இதன் மூலம் விஞ்ஞான மாணவர்கள் சதவிகிதம் 30 லிருந்து 40 ஆக உயரும்.

வேளாண்மையும் கிராம நல வளர்ச்சியும்

14. மூன்றுவது திட்ட காலத்தில் மொத்தம் சுமார் 16,000 விவசாயப் பட்டதாரிகளும், 6,800 கால் நடை வைத்திய பட்டதாரிகளும் தேவைப்படுவார்கள். விவசாய, கால்நடை வைத்திய பட்டப்படிப்புக்கு உள்ள வசதிகள் விவரம் கீழே காணலாம்.—

	வருஷம்.	நிறுவனங்கள் எண்ணிக்கை.	வருஷத்தில் சேர்க்கப்படும் மாணவர்கள் தொகை.	வருஷத்தில் படிப்பை முடித்து வெளியேறுவோர்.
விவசாயப்பட்டதாரிகள்	1951	19	1,060	1,122
	1955	30	1,989	806
	1961	39	4,500	2,231

	வருஷம்.	நிறுவனங்கள் எண்ணிக்கை.	வருஷத்தில் சேர்க்கப்படும் மாணவர்களை எண்ணிக்கை.	வருஷத்தில் படிப்பை முடித்து வெளியேறுவோர் எண்ணிக்கை.
கால்நடை வைத்திய பட்டதாரிகள்.	1951	8	434	242
	1955	14	1,269	322
	1961	16	1,300	1,100

இரண்டாவது திட்டக் கால முடிவில் செய்யப்பட்டுள்ள பயிற்சி வசதிகள், மூன்றுவது திட்டத்தேவைகளைச் சரிக்கட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத் தேவைகளைப் பொறுத்தவரை சுமார் 27,500 விவசாய பட்டதாரிகளும், சுமார் 7,000 கால்நடை வைத்தியப் பட்டதாரிகளும் தேவைப்படலாம். ஆனல் மூன்றுவது திட்டக் காலத்தில், பயிற்சி வசதிகளை விஸ்தரிக்கும் வேலைத் திட்டவிவரத்தைத் தயாரிப்பதற்காக நான்காவது திட்டத் தேவைப்பாடுகள் மேற்கொண்டு பரிசீலிக்கப்படுகின்றன.

15. மூன்றுவது திட்டக் காலத்தில் பால் பண்ணை அபிவிருத்திக்காக சுமார் 3,000 தொழில் நுட்பப் பணியாளர்கள் தேவைப்படுவார்கள். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளிலிருந்து இதற்கான பயிற்சி பெற்ற நபர்கள் கிடைத்து விடுவார்கள்.

16. மீன் அளத்துறை அபிவிருத்தி வேலைகளுக்காக மொத்தம் சுமார் 2,000 பேர் தேவைப்படுவார்கள். இது சம்பந்தமாக தற்போதுள்ள பயிற்சி வசதிகள் போதுமானதல்ல. கல்கத்தா, மண்டபம், பம்பாய் ஆகிய இடங்களிலுள்ள மீன் அள ஆராய்ச்சி நிலையங்களிலும், இதர நிலையங்களிலும் வேண்டுமான பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

17. மூன்றுவது திட்டக் காலத்தில் காடுகள் பராமரிப்புக்காக 400 வனத்துறை அதிகாரிகளும், 1,100 பாரஸ்ட் ரேஞ்சர்களும் தேவைப்படுவார்கள். டேராடூனிலும், கோயம்புத்தூரிலும் உள்ள பயிற்சி வசதிகள் மூலமாக இத்தேவை சரிக்கட்டப்படும்.

18. மண் வளப் பாதுகாப்பு வேலைகள் கணிசமாக அதிகரிக்கும். மூன்றுவது திட்டக் காலத்தில் இவ்வேலைகளுக்காக சுமார் 400 அதிகாரிகளும், 2,000 உதவியாளர்களும், இதர பணியாளர்கள் சுமார் 6,000 பேரும் தேவைப்படுவார்கள். பயிற்சித் திட்ட விவரங்கள் பரிசீலனையில் உள்ளன.

19. சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வட்டார (ப்ளாக்) வளர்ச்சி அதிகாரிகள், சமூகக் கல்வி அமைப்பாளர்கள், விசேஷ பணியாளர்கள் உள்பட பல்வேறு வகை பணியாளர்களுக்கு பயிற்சி வசதி செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் கால முடிவில் கிராம நிலை ஊழியர்கள் பயிற்சிக்காக மொத்தம் 100 விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும். 1963 அக்டோபர் வாக்கில் பயிற்சி முடிந்து வரக்கூடிய கிராம நிலை ஊழியர்கள் தொகை சுமார் 50,000 ஆக இருக்கும்.

கிராம நிலைப் பெண் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 37 விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது. அந்த நிலையங்களில் குடும்பக் கலைப் பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிறுவனங்கள் எண்ணிக்கை 69 ஆக உயர்த்தப்படும். சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகத்தின் ஆதரவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய பயிற்சித் திட்டங்களில் கிராம சகாயக்குகள் உள்ளிட்ட அதிகார சார்பற்ற ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஏற்பாடும் ஒன்றுகும். இந்த வசதிகள் கணிசமான அளவில் விஸ்தரிக்கப்படுகின்றன.

20. கூட்டுறவுத் துறையில் பல்வேறு ரக பணியாளர்களுக்கான பயிற்சி வசதிகளை மூன்றாவது திட்டக் காலத்தில் பெரும் அளவில் விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பூனாவில் பயிற்சி பெறும்சீனியர் பணியாளர்கள் தொகையை 500-லிருந்து 1,400 ஆக உயர்த்துவது இத்திட்டத்தில் உள்ளடங்கியதாகும். கூட்டுறவு விற்பனை முறை, நில அடமான பாங்கி பணி போன்ற விசேஷ துறைகளில் பயிற்சி பெற்றவர்கள் தொகை இரண்டாவது திட்டக் காலத்தில் 1,700 ஆக இருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் இத்தொகை 8,000 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தி வட்டார அளவிலும், நடுவாந்திர அளவிலும் கூட்டுறவுப் பணியாளர்களைப் பெறுவதற்காக, இரண்டாவது திட்டத்தில் போதுமான பயிற்சி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஜூனியர் கூட்டுறவுப் பணியாளர்களுக்கான பயிற்சி நிலையங்களின் தொகை 60-லிருந்து 100 ஆக அதிகரிக்கப்படும். பயிற்சி பெறும் பணியாளர்கள் எண்ணிக்கை 34,000-லிருந்து 56,000 ஆக உயரும்.

கல்வி, இதர சமூக நலப் பணிகளுக்கான அலுவலர்கள்

21. மூன்றாவது திட்டத்தில் கல்வி அபிவிருத்தி வேலைகளுக்காகப் பெருமளவில் ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆரம்பப் பள்ளிகளுக்கு 420,000 ஆசிரியர்களும், மத்தியதரப் பள்ளிகளுக்கு 120,000 பேரும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 85,000 பேரும் கல்லூரிகளுக்கு 27,000 பேரும் தேவைப்படலாம். பயிற்சி பெற்ற ஆரம்ப, மத்தியதர ஆசிரியர்கள் விகிதம் இரண்டாவது திட்டக் கால முடிவில் 65 சத விகிதமாக இருப்பதை, மூன்றாவது திட்ட முடிவில் 80 சத விகிதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் விகிதம் 68 சத விகிதமாக இருப்பதை 75 சத விகிதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

22. இரண்டாவது திட்ட முடிவில் மொத்தம் 55 வைத்தியக் கல்லூரிகளும் சேர்த்துக்கொள்ளும் மாணவர்கள் மொத்தத் தொகை சுமார் 5,000 ஆகும். பயிற்சி முடிந்து வெளியேறுபவர்கள் தொகை ஆண்டு ஒன்றுக்கு 3,100-க்குச் சற்று அதிகமாக இருக்கும். மூன்றாவது திட்டத்தில் வைத்தியக் கல்வியை விஸ்தரிப்பான திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

23. சமூக நல ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான வசதிகள், இரண்டாவது திட்டக் காலத்தில் கணிசமாக அதிகரித்தன. 12 சமூக நலப் பணி பள்ளிகள் நடந்து வருகின்றன. இரண்டு வருஷ பயிற்சி அளிக்கும் இந்தப் பள்ளிகள் சராசரி ஆண்டு ஒன்றுக்கு வெளியே அனுப்பி வைக்கும் மாணவர்கள் தொகை 400-லிருந்து 450 வரை இருக்கும். வேறு ஐந்து பள்ளிகளில் வருஷம் ஒன்றுக்கு சுமார் 460 பேர் பயிற்சி முடிந்து வெளியேறுகிறார்கள். கிராம நிலை பெண் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக கஸ்தூரிபாய் காந்தி தேசிய ஞாபகார்த்த நிறுவனம் 24 நிலையங்களை நடத்தி வருகிறது. இவை எல்லாம் சமூக நலப்பணி ஊழியர்கள் பயிற்சி வசதிகளில் உள்ளடங்கியவை. பின்னடைந்த வகுப்பு மக்களிடையே, குறிப்பாக பழங்குடி மக்களிடையே (Scheduled Tribes) பணியாற்றுவதற்குத் தேவைப்படும் சீனியர் பணியாளர்களும், மேற்பார்வை அலுவலர்களும், ராஞ்சி, சிந்த்வாடா, கல்கத்தா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் பயிற்சியளிக்கப்படுகின்றனர். சமூக நலப் பணித் துறையில் ஒரு முக்கியமான அம்சம் தொகுதி நிலையிலும் சமுதாய அளவிலும் பெருவாரியான அளவில் அதிகாரச் சார்பற்ற ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க வகை செய்யவேண்டும் என்பதே. இதற்காக, தம்மிச்சையாகப் பணியாற்றும் சேவா ஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளின் உதவியைஉபயோகித்துக் கொள்ளவேண்டும்.

நிர்வாகமும், புள்ளி விவரமும்

24. தேசிய நிர்வாகக் கழகமும், பயிற்சித் துறை நெறியகமும், முசோரியில் அமைக்கப்பட்டுள்ளன. அகில இந்திய முதல் வகுப்பு மத்திய சர்வீஸ்களுக்கு அங்கு ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. ஹைதராபாத்தில் நிர்வாக அதிகாரங்கள் கல்லூரி ஏற்படுத்தியதும், தொழில் நிர்வாகப் பணியாளர் பட்டியல் முறை அமைக்கப்பட்டதும், இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இதர நடவடிக்கைகளாகும். வேலைத் திட்டங்களை அமுலாக்குவதற்காக, மூன்றுவது திட்டக் காலத்தில் பல்வேறு நிலைகளிலும் அதிகாரிகள் தேவை எவ்வளவு என்பது பற்றி மாநில அரசாங்கங்கள் விரைவில் பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது திட்டக் காலத்தின்போது ஏழு நிறுவனங்களில் வர்த்தக நிறுவன நிர்வாகிகள் பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் இரண்டு நிறுவனங்களில் கைத்தொழில் உற்பத்தி இஞ்சினீரிங்கிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. மூன்றுவது திட்டக் காலத்தில் இந்த வசதிகளை மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அகில இந்திய நிர்வாகஸ்தர் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

25. புள்ளி விவரப் பணியாளர்கள் பயிற்சி வசதிகளை அதிகரிப்பதற்காக, சமீப ஆண்டுகளில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய புள்ளி விவர நிறுவனம், இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில், அகில இந்திய பொது சுகாதார நிறுவனம் ஆகியவைகளில் பல்வேறு உள்பணி

பயிற்சிகள அளிககப்படுகின்றன. மாவட்டப புள்ளி விவர அதிகாரிகள சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களில முன்னேறற மதிப்பீடு பணி யாளர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு மாநிலப் புள்ளி விவர பீரோ பயிற்சி வசதி செய்துள்ளது. தேசீய முக்கியதததுவம் வாய்நத ஸதாபனம் என்று சட்டம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய புள்ளி விவர நிறுவனம் (இந்தியன் ஸ்டாடிஸ்டிகல இன்ஸ்டிடியூட்), விரைவில புள்ளி விவரக் கல்வியில் பி.ஏ., எம்.ஏ. பட்டப் படிப்புக்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இநத நிறுவனம், தொழில் ரீதி புள்ளி விவரப் பணியாளர்களுக்கான இரண்டு வருஷப் பயிற்சி அளிக்கிறது. வேறு பல பயிற்சிகளுக்கும் வகை செய்கிறது. கல்கத்தாவிலுள்ள சர்வதேசப் புள்ளி விவர கல்வி நிலையத்தில உள்ள வசதிகளும், புள்ளி விவர தரக்கட்டுப்பாடு பயிற்சிகளும் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். ஜன சமூகத்தின் ஆரோக்கிய நிலை ஆய்வுத் (டெமோகிராபி) துறையில், பம்பாயிலுள்ள பயிற்சி ஆராய்ச்சி நிலையம் பயிற்சி வசதிகளை அளிக்கிறது; கல்கத்தாவிலுள்ள கைத்தொழில் புள்ளி விவர பீரோ, கைத்தொழில் புள்ளி விவர பயிற்சி வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. திட்டமிட்ட அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக புள்ளி விவரத் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வேண்டுமான அளவு பணியாளர்களைப் பெறு வதற்காக, அவசியமான அளவுக்கு இந்தப் பயிற்சி வசதிகள் விஸ்தரிக்கப் படும்.

2. விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி

26. மூன்றுவது திட்டத்தில, விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சி வேலைகளின் நோக்கங்கள் பின்வருமாறு :—

1. ஏற்கெனவே உள்ள ஆராய்ச்சி நிலையங்களைப் பலப்படுத்தல் ;
2. பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி வசதிகளை விரிவுபடுத்தல் ;
3. தேசீய பரிசோதனைக் கூடங்கள், அணுசக்தி நிறுவனம், சர்வ கலாசாலைகள், தொழில் நுட்ப நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறு வனங்கள், அரசாங்க இலாகாக்களில் ஆராய்ச்சிப் பிரிவுகள, மாநில அரசாங்க பரிசோதனைக் கூடங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவைகளில் நடத்தப்படும் ஆராய்ச்சி வேலைகளுக்கிடையே நெருங்கிய ஒருமுகத் தொடர்புக்கு வழி செய்தல் ;
4. ஆராய்ச்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ; இககாரியத்திற் கென போதுமான அளவு ஆராய்ச்சி 'பெலோஷிப்புகளும்' உபகாரச் சம்பளஙகளும் அளித்தல் ;
5. விஞ்ஞான, கைத்தொழில் கருவிகள் தயாரிப்பிலும் அபிவிருத்தி யிலும் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்துவது ;
6. விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவை மக்களிடையே பரப்பி, அன்றுட சமுதாய வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு செய்ய நடவடிக்கைகள் எடுப்பது ;

27. விஞ்ஞான ஆராய்ச்சி, கலாச்சார விவகார அமைச்சரகம் மற்றும் அணுசக்தி கமிஷன் ஆகியவைகளின் ஆராய்ச்சி வேலைத் திட்டங்களுக்கு மூன்றுவது திட்டத்தில் தற்காலிகமாக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோக கல்வித் துறை; போக்குவரத்து செய்தித் தொடர்புத் துறை; தகவல் ஒலிபரப்பு; ரயில்வே; மராமத்து; வீட்டு வசதி; சப்ளை; பாசனம்; மின்சாரம்; உணவு வேளாண்மை; சுகாதாரம்; உருக்கு; சுரங்கம்; எரிபொருள்; வர்த்தகம்; கைத்தொழில் ஆகிய அமைச்சரகங்கள், இலாக்காக்கள் அந்தந்த துறைகளில் செய்யும் ஆராய்ச்சிக் காகச் செலவிடத் தனியாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சி வசதிகளை விஸ்தரிப்பதற்காக விஞ்ஞான கைத் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில், விஞ்ஞான ஆராய்ச்சி - கலாச்சார விவகார அமைச்சரகம், அணுசக்தி கமிஷன் ஆகியவை பல திட்டங்களை வகுத்துள்ளன. இத்திட்டங்கள் பூர்வாங்க முறையில் பரிசீலிக்கப்பட்டன. அடுத்த சில மாதங்களில் விரிவான பரிசீலனைகள் தொடங்கும். எல்லா அத்தியா வசிய திட்டங்களுக்கும் நிதி வசதி அளிக்கும் முறையில் அவசியமான விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கு தற்காலிக ஒதுக்கீடு ரூ. 50 கோடி திருத்தியமைக்கப்படும்.

28. முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்களும், மூன்றும் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைகளும், கீழே சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

விஞ்ஞான கைத் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில்.

29. முதல் திட்ட காலத்தில் விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் 14 தேசிய பரிசோதனைக் கூடங்களை ஏற்படுத்தியது. பௌதிகம், ரசாயனம், உலோக இயல், எரிபொருள், கண்ணாடி, மட்பாண்டங்கள், உணவு, மருந்துகள், சாலைகள், தோல், மின்ரசாயனம், கட்டிடங்கள், உப்பு, மின் அணு, தாவர சாஸ்திரம், ஆகியவற்றில் உயர்தர ஆராய்ச்சிக்கு அப்பரிசோதனைக் கூடங்களில் வசதிகள் உள்ளன. இரண்டாவது திட்டத் தின்கீழ் மேலும் 9 நிலையங்கள் நிறுவப்பட்டன. பையோ கெமிஸ்ட்ரி பரிசோதனை மருந்துகள், சுரங்கவேலை, மெக்கானிகல் இஞ்சினீரிங், பொது சுகாதார இஞ்சினீரிங், விமானக் கலை ஆராய்ச்சி முதலிய துறைகளுக்கு இவை பணியாற்றி வருகின்றன. ஹைதராபாத், ஜம்மு காஷ்மிரம், அஸ்ஸாம் ஆகியவைகளில் பிராந்திய ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தொழில் நுட்ப இயல் பொருட்காட்சிசாலை ஒன்று கல்கத்தா வில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோக மழைமேக பௌதிகம், குறைந்த சக்தி ஊது உலை நுட்பங்கள், வாயுவால் இயக்கும்மோட் டார்கள், எசன்ஸ் எண்ணெய்கள், மருந்து உற்பத்தி யந்திரங்கள், காற்றுசக்தி, பூமியதிர்ச்சி இஞ்சினீரிங் ஆகியவை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரப்பர், வர்ணங்கள், பட்டு, செயற்கைப்பட்டு, பஞ்சு, ஜவுளிகள் ஆகியவை பற்றிய கூட்டுறவு ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கும் கவுன்சில் உதவி வருகின்றது.

30. மிருக தாவர ஆராய்ச்சிக் கலை, பெட்ரோலியம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஆரய்ச்சிக்காகவும், விஞ்ஞானக் கருவிகள் அபிவிருத்திக்காகவும் மூன்ரும் திட்ட காலத்தில் புதிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும். சிமெண்ட், மைகா, வார்ப்புத் தொழில் (பவுண்டரி), ரேடியோ, மின் அணு ஆகிய துறைகளுக்காக மேற்கொண்டு கூட்டுறவு ஆராய்ச்சிப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். ஆராய்ச்சி தொகுப்பு வசதிகளும் மேற்கொண்டு விரிவாக்கப்படும்.

31. கைத் தொழில், வேளாண்மை சம்பந்தப்பட்ட கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தும் பிரச்னையும் இரண்டாவது திட்டத்தில் கவனிக்கப்பட்டது. அவைகளில் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவை வருமாறு :— உலை புகைக்கரித் துகள்களை சிமிட்டி உற்பத்திக்குப் பயன்படுத்துவது, திறந்த அடுப்பு கரிப்புகைப் பொருள்களை உரமாக்குதல், கோக் தயாரிப்பிலும் நிலக்கரி பதனம் செய்யப்படும் போதும் ஏற்படும் எல்லா உபபொருள்களையும் பூர்ணமாக அடைய வகை செய்தல், நகர சாக்கடை நீர், மலக் கழிவுகளை எரிவாயு, உரமாக மாற்றுவது, அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் இறக்குவது, கரும்புச் சக்கையை காகிதம் செய்யப்பயன்படுத்துவது, வெல்ல வண்டலைக் கொண்டு எரிசாராயம் (ஆல்கஹால்) செய்தல், விலங்கு கழிவுப் பொருள்களிலிருந்து பசையும், பிசினும் தயாரித்தல், நெல் உமி, நிலக்கடலே, ஓடு, சணல் கழிவுகள் மற்றும் அது போன்ற லிக்னோ செல்லுலோசிக் கழிவுகளைக் கொண்டு பிளாஸ்டிக், ஆக்டிவ் கார்பன் செய்தல் முதலியன. மேற்சொன்ன துறைகளிலும், வேறு துறைகளிலும் ஆராய்ச்சி வேலைகள் முன்ருவது திட்டத்தில் மேலும் அபிவிருத்தி செய்யப்படும்.

32. ஆராய்ச்சிகளின் விளைவான புதிய கண்டுபிடிப்புகள், அந்தக் கண்டுபிடிப்புகளை நடை முறையில் அனுசரித்தல் என்ற இந்த இரண்டு விஷயங்களும் இன்னும்கூட ஒன்றுக்கொன்று தொலை தூரத்தில் நிற்கின்றன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. கைத் தொழில்களும், அரசாங்க இலாக்காக்களும், புதிய கண்டுபிடிப்புகளை விரிவான அளவில் பரிசோதித்துப்பார்க்கத் தயங்குகின்றன. பரீட்சார்த்த தொழிற்சாலை வசதிகள் குறைவு. உற்பத்தி யந்திர மாதிரிகளை அமைப்பதற்கும், கட்டுவதற்கும் வேண்டிய இஞ்சினீயர்களும், இஞ்சினீரிங் ஆலோசகர்களும் போதுமான அளவு இல்லை. இதுபோன்ற காரணங்களால்தான் புதிய கண்டுபிடிப்புகள் அதிகம் பரவவில்லை. இந்தக் குறைகளைத் தீர்த்தாக வேண்டியதின் அவசியம் உணரப்பட்டுள்ளது. மூன்ருவது திட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். புதிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். தொழில் நுட்ப அலுவலர்களுக்கும் விஞ்ஞானப் பணியாளர்களுக்கும் இது சம்பந்தமாக போதிய வசதிகள் செய்து கொடுப்பது அவசியமாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சி, கலாச்சார விவகார அமைச்சரகம்

33. விஞ்ஞான ஆராய்ச்சி, கலாச்சார விவகார அமைச்சரகத்தின் கீழ் உள்ள பல்வேறு ஸ்தாபனங்களும், மூன்ருவது திட்டத்திற்கான விரிவான

வேலைத் திட்டங்களை வகுத்திருக்கின்றன. இந்தியா சர்வே, தேசிய அட்லாஸ் ஸ்தாபனம், தாவர இயல் சர்வே, விலங்கின சர்வே, பூமி தத்துவம் சம்பந்தமான மத்திய போர்டு ஆகியவை அவற்றில் உள்ளடங்கியவையாகும்.

34. ராமன் ஆராய்ச்சி நிறுவனம், போஸ் நிறுவனம், பாலியோ-பாட்டனிக்கான பீர்பால் சாஹ்னி நிறுவனம், விஞ்ஞான வளர்ப்புக்கான இந்திய சங்கம் (Indian Association for Cultivation of Science) முதலிய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், விஞ்ஞானச் சங்கங்களுக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி, கலாச்சார விவகார அமைச்சரகம் உதவி அளித்துள்ளது. முக்கியமான வேறு பல விஞ்ஞானச் சங்கங்களும், அவற்றின் ஆராய்ச்சி வேலைகளுக்காக, இந்த அமைச்சரகத்தால் உதவி அளிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி முடிவுகளையும், பல்வேறு ஆராய்ச்சிப் பிரச்னைகள் வேலைத் திட்டங்களையும் விஞ்ஞானிகளின் குழுக்கள் விவாதிப்பதற்கு ஏற்ற அரங்கங்களாக இந்தச் சங்கங்கள், தொடர்ந்து பணியாற்றிவரும்.

35. சர்வகலாசாலைகளிலும் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் அடிப்படை ஆராய்ச்சிக்குரிய வசதிகளை விஸ்தரிப்பதில் மூன்றாவது திட்டம் விசேஷ கவனம் செலுத்தும். சர்க்கார் இலாக்காக்கள், கைத்தொழில் நிறுவனங்கள் ஆகியவை அனுப்பிவைக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதிய கருவி சாதன வசதிகள் இருக்கும்படிச் செய்வதிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும். தொழில் நுட்ப நிறுவனங்களும், சர்வகலாசாலைகளும் விஞ்ஞானத் துறைகளும் மேற்கொள்ளும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் விரிவடைவதற்கு இதன் மூலம் வகை ஏற்படும். அத்துடன், ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கு இதன் மூலம் ஒரு வாய்ப்பு கிட்டுகிறது. அடிப்படை ஆராய்ச்சிகளின் முடிவுகளை, நேர்படவும், தொழிற்சாலைகளிலும் அனுசரித்துப் பார்ப்பதற்கும் வழி ஏற்படும்.

தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கார்ப்பரேஷன்

36. தேசிய பரிசோதனைக் கூடங்களிலும் இதர ஆராய்ச்சி நிறுவனங்களிலும் உருவாக்கப்பட்ட புது முறைகளைப் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக 1953-ல் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கார்ப்பரேஷன் நிறுவப்பட்டது. அந்த கார்ப்பரேஷனில் மொத்தம் 500 புதிய கண்டுபிடிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றாலும் 1959 மார்ச் வரையில் 21 கண்டுபிடிப்புகள் மட்டுமே வாணிபரீதியான உற்பத்திக்குபயன்படுத்தப்பட்டன. 46 கண்டுபிடிப்புகள் விஷயத்தில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த முறைகள் இன்னும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படவில்லை. இதுவரை ஏற்பட்டுள்ள பலன்கள் மிகச் சொற்பமாக இருப்பதை முன்னிட்டு, ஆராய்ச்சிகளின் முடிவுகளை பல்வேறு துறைகளிலும் விரிவான அளவிலும் விரைவாகவும் அனுசரிக்கும் பிரச்னை பூரணமாகப் பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

விஞ்ஞானக் கருவிகளும் இதர திட்டங்களும்

37. விஞ்ஞானக் கருவிகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மூன்றுவது திட்டத்தில் அது அமுலாக்கப்படும். இக்காரியத்துக்காக விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி கவுன்சிலானது, மத்திய விஞ்ஞானக் கருவிகள் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

38. விஞ்ஞானம், இஞ்சினீரிங், தொழில்நுட்பம் ஆகியவற்றின் பல்வேறு பிரிவுகளுக்கும் உயர்தர ஆராய்ச்சி நிபுணர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே, தேசிய ஆராய்ச்சி பரிசோதனைக் கூடங்களிலும், இதர நிறுவனங்களிலும் பயிற்சி வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உபகாரச் சம்பளம் பெலோஷிப் முதலியன இது வரை இருந்ததை விட அதிக அளவில் வழங்க வகை செய்யப்படும்.

39. இரண்டாவது திட்டகாலத்தில் 37 விஞ்ஞான மந்திர்கள் ஏற்படுத்தப்பட்டன. விஞ்ஞான அறிவை மக்களிடையே பரப்புவதில் விஸ்தரிப்பு நிலையங்களாக செயல்படுவதே இவற்றின் பணியாகும். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையங்களின் பணிகளை பரிசீலனை செய்த பின்பு, மூன்றுவது திட்டத்துக்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்படும்.

அணுசக்தி

40. மின்சார உற்பத்திக்கு அணுச்சக்தியைப் பயன் படுத்தும் விஷயமாகவும், வேளாண்மை, மிருக தாவர ஆராய்ச்சி, கைத்தொழில், மருந்து முதலியவைகளுக்கு அணு ஐஸடோப்புகளைப் பயன்படுத்துவது பற்றியும், தேவையான அளவு ஐஸடோப்புகளை உற்பத்தி செய்து அவைகளை விரிவான அளவில் பயன்படுத்தும் விஷயமாகவும் அணுசக்தி கமிஷன் கவனம் செலுத்திவருகிறது. உலகிலேயே மிகச் சிறந்த தோரியம் படிவங்கள் இந்தியாவில் தான் உள்ளன. எனவே தோரியத்தை ஆதாரமாகக் கொண்டு நாட்டில் அணு மின்சார உற்பத்திக்கு வகை செய்வது நோக்கமாகும். இதற்காக பல்வேறு கட்டங்களில் வேலைகளை நிறைவேற்றியாக வேண்டும்.

41. அணுச்சக்தி இலாகா 1956-ல் நீச்சல் குளரக அணு உலை (அப்சரா) ஒன்றைக் கட்டி முடித்தது. இதற்காக, உரேனியம் செறிந்த எரி பொருள் மட்டுமே வெளி நாடுகளிலிருந்து பெறப்பட்டது. NRX ரக கனடா—இந்தியா அணு உலை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு திட்டப்படி கனடா இதை உதவியது. இது ஐஸடோப் உற்பத்தி செய்யும் பெரிய அணு உலையாகும். வருங்காலத்தில் அமைக்கப்படும் அணு மின்சார உலைகளை அமைப்பதற்கான பூர்வாங்க பரிசோதனைகளைச் செய்வதற்காகவும், அவ்வுலைகளில் உபயோகிக்கப்படும் பொருள்களையும் சோதித்துப் பார்க்கவும் ஏற்ற வசதியுடன் இது அமைக்கப்பட்டுள்ளது. மூன்றுவது உலை, பூஜ்ய சக்தி உலை (ஜெர்லினு) என்பதாகும். அணு மின்சார உலைகளை ஸ்தூல பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய வசதி அதில் உள்ளது. இதை நிர்மாணிக்கும் வேலை

இன்னும் சில மாதங்களில் முடிந்துவிடும். 15,000 கிலோ வாட்ஸ் மின்சார உற்பத்தி சக்தியுள்ள புரோடோடைப் அணு மின்சார உலை அமைப்பு வேலை தொடங்கப்பட்டுவிட்டது. இதில் இயற்கை யுரேனியம் எரிபொருளாகவும், கன நீர் சமனப்படுத்தும் சாதனமாகவும், சேதனப் பொருள்கள் குளிர்ச்சிப்படுத்தும் சாதனமாகவும் பயன் படுத்தப்படும். இந்த புரோடோடைப் உலை நிர்மாண வேலை மூன்றாவது திட்ட காலத்தில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அமைக்கப்பட்டு விட்டால், அடுத்தபடியாக, இநதிய கட்டுமான பாணியில் பெரிய அணு மின்சார உலைகளை அமைக்க முற்படலாம்.

42. டிராம்பேயில் உள்ள அணு சக்தி நிறுவனத்தில் அணு சக்தி சம்பந்தமான ஆராய்ச்சி அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிறுவனம் 1957-ல் ஆரம்பிக்கப்பட்டதாகும். இதில் 1,200 பட்டதாரி விஞ்ஞானிகளும், இஞ்சினீயர்களும் பணியாற்றுகின்றனர். மூன்றாவது திட்ட காலத்தில் இவர்கள் தொகை 2,000 ஆக அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அணு சக்தி விஞ்ஞான தொழில் நுட்பப் பயிற்சியளிப்பதற்கு தற்போதுள்ள வசதிகள், மூன்றாவது திட்டத்தில் மேலும் விரிவாக்கப்படும். அணு சக்தி திட்ட வேலைகள் அபிவிருத்திக்காக, உயர்தரமான பயிற்சி பெற்ற நிபுணர்கள் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியாகவேண்டும். இதில் கிடைக்கும் வெற்றி அணு சக்தி அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாகும்.

43. அணு சக்தி உற்பததித் திட்டம், பல்வேறு விஞ்ஞான நெறிகளின் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. அணு சக்தி நிறுவனத்தில் கூட்டமைப்பைப் பாகுபடுத்தும் பிரிவு (Analytical Division) ரஸாயனப் பிரிவு, உலோக இயல் பிரிவு, மின் அணுப் பிரிவு, ஐஸடோப்ஸ் பிரிவு, பிராணி, தாவரக்கூறு, பையாலஜி பிரிவு போன்ற பல ஆராய்ச்சிப் பிரிவுகள் இருக்கின்றன. டிராம்பேயில் உபயோகிக்கப்படும் அநேகமாக எல்லா மின் அணுக் கருவிகளும் மின் அணுப் பிரிவில் தயாரித்து முடிக்கப்பட்டவை. தேசம் முழுவதற்குமான மின் அணுக் கருவிகளின் தேவையை சரிக்கட்டக் கூடிய விதத்தில் மின் அணுப் பிரிவு தற்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் இப்பிரிவு சுமார் ரூ. 8 கோடி பெறுமான கருவிகளைத் தயாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் ஐஸடோப்ஸ் தேவையில் அநேகமாக பூராவையுமே இந்த நிறுவனம் சப்ளை செய்கிறது. மூன்றாவது திட்டத்தில் ஐஸடோப் உற்பத்திக்கான விரிவான திட்டம் மேற்கொள்ளப்படும். அணு விஞ்ஞானம், கணிதம் ஆகியவைகளில் அடிப்படையானதும் மிக உயர்தரமானதுமான ஆராய்ச்சிகளை நடத்தும் "டாட்டா இன்ஸ்டிடியூட் ஆப் பண்டமெண்டல் ரிசர்ச்" நிறுவனம் அணு சக்தி கமிஷனின் நிர்வாகப் பொறுப்பிலே உள்ளது. பல ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதுடன் இந்த இலாகாவானது வான வெளியில் மிக உயரத்தில் காஸ்மிக் கிரணங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தவும், அதே போல் உயிரினங்களின் வளர்ச்சி, உடற்கூறு, இயல் முதலியவைகளில் ஆராய்ச்சி வேலைகளுக்கும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

இதர ஆராய்ச்சித் திட்டங்கள்

44. இந்திய அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சரகங்கள், தங்களின் கீழ் தனி விசேஷ ஆராய்ச்சி ஸ்தாபனங்களை வைத்துள்ளன. திட்டத்தில், ஏற்ற தலைப்புகளின் கீழ் இந்த வேலைத் திட்டங்களுக்கு நிதி வசதி செய்யப் பட்டுள்ளது. இந்திய வானியல் ஆராய்ச்சி இலாகா, ரயில்வே அமைச்சரகத்தின் மத்திய ஆராய்ச்சி வடிவமைப்பு தர நிர்ணய நிறுவனம், தேசீய கட்டிட நிறுவனம், கடக்வாசலாவில் உள்ள மத்திய நீர்-மின்சார ஆராய்ச்சி நிலையம், அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில், அகில இந்திய ரேடியோவின் ஆராய்ச்சிப் பிரிவு, போபாலில் உள்ள ஸ்விட்ச்கீர் அபிவிருத்தி சோதனை ஆராய்ச்சிக் கூடம் முதலியவற்றின் பணி, இது சம்பந்தமாகக் குறிப்பிடத்தக்கதாகும். பெங்களூரில் ஏற்படுத்தப்படவிருக்கும் மின்சார ஆராய்ச்சி நிறுவனமும் இந்த வரிசையில் குறிப்பிடுவதற்கு உரியதாகும்.

அத்தியாயம் 8

வேளாண்மையும் கிராமாந்திரப் பொருளாதாரமும்

வேளாண்மை உற்பத்தி.

முதலாவது, இரண்டாவது திட்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றம்.—முதலாவது, இரண்டாவது திட்டங்களின் கீழ் வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்படுகிறது :—

பண்டம்.	யூனிட்.	உற்பத்தி.					
		1949-50.	1950-51.	1955-56.	1956-57.	1957-58.	1958-59.
அரிசி*	லட்சம் டன்களில்	237	209	271	286	249	304
கோதுமை*	,, ,,	66	66	86	93	77	97
எல்லா தானியங்களும்* ..	,, ,,	484	437	549	574	530	613
பயறு வகை *	,, ,,	92	85	109	114	95	122
உணவுப் பொருள்கள்* (தானியங்களும், பயறு வகைகளும்).	,, ,,	576	522	658	688	625	735
எண்ணெய் வித்துக்கள்	,, ,,	51	51	56	62	61	70
கரும்பு (வெல்லம்)	,, ,,	49	56	60	68	69	72
பருத்தி	லட்சம் பேல்களில்.	26	29	40	47	47	47
சணல்	,, ,,	31	33	42	43	41	52

2. கனரகத் தொழில் வளர்ச்சியை பிரதானமாகக் கொண்டு துரிதமான பொருளாதார முன்னேற்றம் காணவேண்டும் என்று இரண்டாவது திட்டம் வலியுறுத்தியது. இப்படி முன்னேற்றம் ஏற்படுவதற்கு, பெருமளவில் விவசாய உற்பத்திப் பெருக்கமும் தேவைப்படும் என்பது அந்தத் திட்டத் தயாரிப்பின் ஆரம்பத்திலேயே உணரப்பட்டது. இரண்டாவது திட்ட யாதாஸ்தில் தற்காலிகமாக குறிப்பிடப்பட்டிருந்த லட்சிய அளவுகள் குறித்து, மாநில அரசாங்கங்களுடன் விரிவான பரிசீலனைகள் நடத்தப்பட்டன. அதன் பின் 1956 நவம்பரில், இரண்டாவது திட்டத்துக்கு கீழ்க்கண்ட லட்சிய அளவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன: உணவு தானியங்கள் 805 லட்சம் டன்கள் ; எண்ணெய் வித்துக்கள் 76 லட்சம் டன்கள் ; கரும்பு 78 லட்சம் டன்கள் ; பருத்தி 65 லட்சம் பேல்கள் ; சணல் 55 லட்சம் பேல்கள்.

3. மிகக் குறுகிய காலத்தில் அதிகப்பட்ச பலன் காணும்படியாக, பொறுக்கு வித்துப் பெருக்கம், உர உபயோகம், பாசனம், மண்வளப்

---

*விளைப் பயிர்கள் குறித்து புள்ளி விவரச் சேகரிப்பு, முதல் திட்ட காலத்தில்படிப்படியாக பரவலாகியது. மதிப்பீடு முறைகளிலும் அவ்வப்போது மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. மேலே அட்டவணையில் உணவு தானிய உற்பத்திகள் பற்றிய மதிப்பீடு 1956-57 வரை இந்த மாறுதல்களை அனுசரித்து அமைக்கப்பட்டவை.

பாதுகாப்பு முதலிய திட்டங்களை அமுலாக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மாநிலங்களின் விவசாயத் திட்டங்கள் இதற்கேற்ப திருத்தி அமைக்கப்பட்டன. பாசன வசதி அல்லது நிச்சயமான மழை வசதி உள்ள நெல் கோதுமை சாகுபடிப் பகுதிகளில் ஒவ்வொரு ஏக்கரிலும் பொறுக்கு வித்துக்களையும் இயற்கை உரம், தழை உரம், முதலிய உரங்களையும் பயன்படுத்துவதற்கு வகை செய்யுமாறு மாநில அரசாங் கங்களுக்கு யோசனை கூறப்பட்டது. திட்டத்தின் பின் கட்டங்களில் சிற்சில சந்தர்ப்பங்களில் கூடுதலாக சொற்ப நிதி ஒதுக்குவது அவசியமாகாலாம் என்று உணரப்பட்டது. இரண்டாவது திட்டகாலத்தில் வருஷா வருஷம் நிதி ஒதுக்கும் போது, வேளாண்மைக்கு அதிகம் வசதிகள் அளிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது. சிறிய பாசனத் திட்டங்கள் விஷயத்தில் ஆரம்ப கட்ட ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டது. நைட்ரஜன் உரங்கள் சப்ளை 1955-ல் 100,000 டன்களாக இருந்ததானது 1959-ல் 240,000 டன்களாக உயர்த்தப்பட்டது. பாஸ்பேட் உரங்கள் சப்ளை இதே காலத்தில் 13,000 டன்களிலிருந்து 55,000 டன்களாக உயர்த்தப்பட்டது.

4. வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும், பாசன வசதிகளை விஸ்தரிப்பதற்காகவும் சென்ற பத்து ஆண்டுகளில் பெருமளவு முதலீடு செய்யப்பட்டது. அப்படி ஏற்படுத்தப்பட்ட வசதிகளை பூர்ணமாகப் பயன் படுத்தச் செய்வது அவசியமாகும். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு உற்ப் பத்தி பெருக்குத் திட்டம் இருக்கவேண்டும். ஏற்படுத்தப் பட்டுள்ள பாசன வசதிகளைப் பூர்ணமாகப் பயன்படுத்துவது, வேண்டுமான முக்கிய விதை தானியங்களை கிராம நிலையில் பெருக்க ஏற்பாடு செய்வது, தேவை யான இயற்கை உரங்களையும் தழை உரங்களையும் கிராமங்களிலேயே உற்பத்தி செய்து, ரசாயன உரங்களை வினியோகிக்க வகை செய்வது ஆகியப் பணிகள் அந்த உற்பத்திப் பெருக்குத் திட்டத்தில் இடம் பெற வேண் டும். ஒவ்வொரு குடும்பமும் தனது நிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பொறுக்கு விதைகள், ரசாயன உரம், இயற்கை உரம், தழை உரம் ஆகியவைகளை உபயோகிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தைக் கொண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும், இத்திட்ட வேலைகளுக்காக, பணமாகவோ, பொருளாகவோ அல்லது இந்த இரண்டும் உள்ளதாகவோ குறுகிய காலக் கடன் உதவி அளிக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்தும், கூட்டுறவுச் சங்கமும், தேசீய நலப்பரப்பு நிறுவனமும் இதைக் கவனித்து, இந்த ஏற்பாடு நடந்து வருமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

எனவே, இதில் முக்கிய பொறுப்பு சமுதாய நல வளர்ச்சி நிறுவனங்களைச் சாருகின்றது. குடியானவர்களுக்குத் தேவையான சப்ளைகள், உதவிகள், தொழில்நுட்ப ஒத்தாசைகள் ஆகியவைகளுக்கு இந்த நிறுவனங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும். கிராம உற்பத்தித் திட்டங்களும், கூட்டுறவு அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் செயல்படுவதுமூலம், ஒவ்வொரு விவசாயக் குடும்பமும், இந்தப் பொது முயற்சியில் பங்கு கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

5. வேளாண்மை உற்பத்திக்கு, தக்க லட்சிய அளவுகளை அமைத்துக் கொள்வது சம்பந்தமாக, சென்ற ஆண்டில், மதத்தியிலும் மாநிலங் களிலும் ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மதிப்பீடு கள் பூர்வாங்கமானவையாகத்தான் இருக்க முடியும். ஸ்தல அளவில் மாவட்டங்களிலும், வட்டாரங்களிலும், கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவான வேலைத் திட்டத்துக்கு, இந்த மதிப்பீடு ஒரு ஆதார மாக விளங்கவேண்டும் என்பதே நோக்கமாகும். அனுபவ சாத்தியமாக உள்ள வசதிகள் எவை, எந்தெந்த முயற்சிகளை உண்மையில் ஒன்று திரட்டிப் பயன்படுத்தமுடியும் என்பதும் இது சம்பந்தமாக கவனிக்கப்படும். உற்பத்திப் பெருக்கத்துக்கு தேசீய லட்சிய அளவையும், மாநில லட்சிய அளவையும் கருத்தில் கொண்டு, மாவட்டம், அபிவிருத்தி வட்டாரம் ஆகியவைகளைச் சேர்ந்த க்ஷேம நலப் பரப்புப் பணியாளர்களும், கூட்டு றவுச் சங்கங்கள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து சமிதிகள் ஆகியவை களில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள உள்ளூர் தலைவர்களும் சேர்ந்து தங்கள் தங்கள் பகுதிக்கான லட்சிய அளவுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். கிராம வட்டார திட்டங்களை உருவாக்கும் போது, கீழ்க்கண்ட விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும் :—

(1) குடிமராமத்துக் கடமைகள் ; பாசன வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வயல்வழிக் கால்வாய்களை வெட்டுதல் ; ஏரிக்கரைகள் பராமரிப்பு ; ஏரி குளங்களில் தூரெடுத்தல் ; வயல் வழிக் கால்வாய்களைப் பராமரித்தல் ;

(2) அங்கீகரிக்கப்பட்ட ரக விதைகளைப் பெருக்கும் ஏற்பாடுகள்; இயற்கை உரம், தழை உரம் ஆகியவைகளை உற்பத்தி செய்து, அவை களையும் ரசாயன உர வகைகளையும் வினியோகித்தல் ;

(3) சம உயரக் கரை கட்டலும், புன்செய் சாகுபடி வேலைத் திட்டங் களும்.

குடிமராமத்துக் கடமைகளை வலியுறுத்துவது, சம உயரக் கரை கட்டுதல், புன்செய் சாகுபடி முறைகள் ஆகியவைகளால் வேளாண்மை உற்பத்தி அதிகரிக்க வழி ஏற்படும் ; அத்துடன் இந்த வேலைத் திட்டங்கள் கிராமங் களிலுள்ள உபரி ஆள்பலத்தை பயன்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும். இந்த வேலைத் திட்டங்களில் முனைப்பான கவனம் செலுத்துவது மூலம், ஒவ்வொரு பிரதேசமும் தன் அளவில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வழிகாணும்படியாக விடப்படும். ஒவ்வொரு பிரதேசத்திலும் உற்பத்தி அதிகரிப்புக்கு இடையூறாக உள்ள சங்கடங்கள் என்ன என்பது கவனிக்கப்பட்டு, அந்த இடைஞ்சல்களை நீக்குவதற்கான வேலைகள் மேற் கொள்ளப்படவேண்டும்.

6. எனவே, மூன்றாவது திட்டத்தில் விவசாய உற்பத்தியின் முடிவான லட்சிய அளவு, மேற்கண்ட வேலைகள் எல்லாம் ஏறக்குறைய முடிந்தபின் இந்த ஆண்டின் பிற்பகுதியில் தான் தெரியவரும். ஸ்தல விவசாயப் பெருக்குத் திட்டங்களை அமைத்துக் கொள்வதில் மாவட்ட, வட்டார அபி விருத்தி அதிகாரிகளுக்கு மாநில அரசாங்கம் யோசனை கூறி துணை புரிவதற்

காக, மாநில அரசாங்கங்களுக்கு சில குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்களிலிருந்து பாசன வசதிகளை அளிக்கும் கால கட்டங்கள், ரசாயன உரவகைகள் சப்ளைக்காக தற்காலிகமாக நிர்ண யிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள், சிறிய பாசன திட்டங்கள், மண்வளப் பாது காப்பு, புன்செய் சாகுபடி முறை போன்றவைகளின் பூர்வாங்க லட்சிய அளவுகள் அவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவுகள் முதலிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேலைத்திட்டம்.

7. உணவு தானியங்கள் இதர விவசாயப் பொருள்களில் உற்பத்திப் பெருக்கத்துக்கான லட்சிய அளவுகளைக் குறிப்பிடுவதற்கு முன்னால், மூன்று வது திட்டத்தில் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கியமான தொழில் நுட்பத் திட்டங்களைப் பற்றிக் கூறுவது பயனுடைய தாக இருக்கும். ஒவ்வொரு பிரதேசத்திலும் தீவிரமான முறையில் வேலை மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய திட்டங்கள் பின்வருவாறு :— (1) பாசனம், (2) மண் வளப் பாதுகாப்பு, புன்செய் முறை சாகுபடி நில மீட்சி, (3) ரசாயன உரங்கள், எருக்கள் சப்ளை, (4) நவீன கலப்பை களும், நவீன விவசாயக் கருவிகளும்.

8. **பாசனம்.**—பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களிலிருந்து, மேற் கொண்டு கூடுதலாகப் பாசன வசதி பெறக்கூடிய பரப்பளவு சுமார் 130 லட்சம் ஏக்கர். ஒரு போகத்துக்கு அதிகமாகச் சாகுபடி செய்யப் படும் பகுதிகளைக் கழித்து விட்டால், இந்தப் பரப்பளவு சுமார் 115 லட்சம் ஏக்கர் ஆகும். சிறிய பாசனத் திட்டங்கள் மூலம் மேற்கொண்டு கூடுதலாகப் பாசனம் பெறக்கூடிய நிலத்தின் பரப்பளவு குறைந்த பட்சம் 135 லட்சம் ஏக்கரிலிருந்து 140 லட்சம் ஏக்கர் வரை (மொத்தமாக) இருக்கும். இதில் சுமார் 100 லட்சம் ஏக்கர்கள் விவசாய உற்பத்திப் பெருக்கத் திட்டங்களின்கீழ் பணவசதிபெறும் பாசனத் திட்டங்கள் மூலம் பாசனம் பெறும். 35 லட்சத்திலிருந்து 40 லட்சம் ஏக்கர் வரை, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களின் கீழ் உருவாகும் பாசனத் திட்டங்களிலிருந்து பாசனம் பெறுபவையாக இருக்கும். இந்தத் திட்டங்களால் பாசனம் பெறக்கூடிய நிலத்தின் நிகரப் பரப்பளவு 120 லட்ச ஏக்கர். தேய்மானங்களையும், மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள், ஏற்கனவே உள்ள பாசன வசதிகளை ஸ்திரப்படுத்துவதையே முக்கிய நோக்கமாக கொண்டவை என்பதையும் கழித்துவிட்டுப் பார்த்தால், நாட்டில் பாசனம் பெறும் நிலத்தின் நிகரப் பரப்பளவு, இரண்டாவது திட்ட முடிவில் 700 லட்சம் ஏக்கராக இருப்பதானது, மூன்றுவது திட்ட முடிவில் 900 லட்சம் ஏக்கராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராம ஆள்பல வசதிகளைப் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான வேலைத் திட்டம் தீவிரமாக அமுலாக்கப்படுமானுல், இந்தப் பாசன வசதிகள் விஸ்தரிப்பு மேலும் அதிகரிக்க வழி ஏற்படும். அதன்மூலம் இருபோக சாகுபடியை விரிவுபடுத்தவும் , மகசூல் விகிதத்தை அதிகரிக்கவும் கணிசமான வாய்ப்பு இடைக்கும்.

9. மண் வளப் பாதுகாப்பு, புன்செய் சாகுபடி முறை, நில மீட்சி.—பாசனமில்லாத பகுதிகளில், மக்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ள வேளாண்மைப் பெருக்கத் திட்டங்கள் பொதுப்படையாக போதுமானவை அல்ல. எனவே, அப்பகுதிகளில் விரிவான அளவில் மண் வளப் பாதுகாப்பு வேலையும், புன்செய் சாகுபடிமுறைகளும் மேற்கொள்ளப்படுவது முக்கியமாகும். சம்பந்தப்பட்ட மக்கள் இந்தத் திட்ட வேலைகளில் பெருவாரியான அளவில் கலந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, பூர்வாங்க லட்சிய அளவுகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள நிலைமைகள், சாத்தியக் கூறுகளை அனுசரித்து விரிவான வேலைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் :—

	லட்சம் ஏக்கர்கள்.
மண் வளப் பாதுகாப்பு சம உயரக் கரை கட்டல்	130
நதிப் பள்ளத்தாக்கு திட்டங்கள் உள்பட இதர மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.	20
புன் செய் சாகுபடி முறைகள்	400
நில மீட்பு	10
உவர் மண் நிலங்கள், களர் (Alkaline) மண் நிலங்கள் மீட்பு	4
வெள்ளக் கட்டுப்பாடு, வடிகால், சதுப்பு	50

10. ரசாயன உரங்களும் எரு வகைகளும்.—இரண்டாவது திட்ட முடிவில் நைட்ரஜன் உர உபயோகிப்பு அளவு சுமார் 360,000 டன்களாகும் ; மூன்றாவது திட்ட முடிவில் இதை 10 லட்சம் டன்களாக (நைட்ரஜன் அளவில்) உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல பாஸ்பேட் உரங்கள் உபயோகிப்பு அளவு 67,000 டன்களாக இருப்பதை, 4 லட்சம் அல்லது 5 லட்சம் டன் வரை (P_2O_5 அளவில்) அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புற குப்பை உரம் (கம்போஸ்ட்) சம்பந்தப்பட்ட திட்டங்கள் 240 லட்சம் ஏக்கருக்கு அனுகூலமளிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தழை உர வகையில் மேற்கொண்டு கூடுதலாக 500 லட்சம் ஏக்கர் பயனடையுமாறு செய்ய வேண்டும் என்று லட்சிய அளவு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

11. விதைப் பெருக்கம்.—தரமான பொறுக்கு வித்துக்களை உற்பத்தி செய்ய விதைப் பண்ணைகளை ஏற்படுத்தும் விரிவான வேலைத் திட்டமொன்று, இரண்டாவது திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. கிரம மட்டத்தில் அவ்விதைகள் பெருக்கத்துக்காக போதுமான அளவில் தரமான விதைகள் கொடுத்துதவவேண்டும் என்பதே இத்திட்டத்தின்நோக்கமாகும். பொதுப்படையாக சமுதாய நல வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் 25 ஏக்கர் பரப்புள்ள ஒரு விதைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. ஸ்தல நிலைமைகளுக்கு ஏற்ப சில இடங்களில் இந்த அளவு மாறுபட்டிருக்கும். இரண்டாவது திட்ட முடிவில் மொத்தம் சுமார் 4,000 விதைப் பண்ணைகள் இருக்கும். மூன்றாவது திட்டத்தில் அவசியமான அளவுக்கு மேற்கொண்டு பண்ணைகள் ஏற்படுத்தப்படும். கிராம விதைப் பண்ணைகள் வழங்கும் ஆதார விதைகளிலிருந்து, கிராமங்கள் தங்களுக்கு

வேண்டிய விதைகளைத் தாங்களே பெருக்கிக் கொள்ள வேண்டும். மூன்றாவது திட்டத்தில் இது சம்பந்தமான வேலை தீவிரமாக்கப்படும். மூன்றாவது திட்ட காலத்தில் மேற்கொண்டு 15 கோடி ஏக்கருக்கு பொறுக்கு விதைகள் பயன்படுத்தவேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

12. பயிர்ப் பாதுகாப்பு.—பயிர்களை அழிக்கும் பூச்சி, பொட்டு நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிறுவனங்கள் சில மாநிலங்களில் இருக்கின்றன. மூன்றாவது திட்ட முடிவுக்குள் 7½ கோடி ஏக்கருக்குப் பயிர் பாதுகாப்பு அளிக்கும்படியாக, இந்த நிறுவனங்கள் அவசியமான இடங்களில் பலப்படுத்தப்படும். கையினால் இயக்கும் மருந்து தெளிக்கும் கருவிகளை குடியானவர்களுக்கு வழங்குவது இத்திட்டத்தில் உள்ளடங்கியதாகும்.

13. நவீன கலப்பைகளும் நவீன வேளாண்மைச் சாகுபடி கருவிகளும்.—சென்ற பத்து ஆண்டுகால வேளாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளில், நவீன விவசாயக் கருவிகளைப் பற்றியவரை ஒரு பெரிய "தொய்வு" தென்படுகிறது. நவீன விவசாயக் கருவிகள் பற்றி நிபுணர்கள் அடிக்கடி விவாதித்திருக்கிறார்கள். உழவு, அறுவடை ஆகியவைகளுக்கான நவீன கருவிகளை உபயோகிப்பதன் முக்கியத்துவம் பொதுப்படையாக உணரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இத் துறையில் காரியாம்சமான நடவடிக்கைகள் பின் தங்கியே நிற்கின்றன. நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், பல்வேறு துறைகளில் ஏக காலத்தில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு ஆராய்ச்சிக் குறிப்பு கூறுகின்றது. அதாவது :—

> "முதலாவதாக, இந்த நவீனக் கருவிகள் சிறப்பானவை என்று நிரூபிக்க வேண்டும். அதனால் உள்ள அனுகூலம் பிறகு குடியானவர்களுக்கு செய்முறையில் காட்டப்பட வேண்டும். யந்திரங்களை (கருவிகளை) தயாரிப்பதற்கு மட்டுமல்லாமல், அவற்றிற்கான உபபாகங்களையும் தயாரிப்பதற்கு முதல் போட ஒரு உற்பத்தியாளர் தயாராக இருக்கவேண்டும். இதற்காக அவருக்கு உருக்கு வழங்க வேண்டும். அந்த உற்பத்தியாளர், யந்திரக் கருவிகள் விற்பனை அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். குடியானயானவர்களுக்காக இந்த யந்திரங்களைப் பழுது பார்க்ககூடிய தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். இந்தச் சங்கிலித் தொடரான நடவடிக்கையில் ஒவ்வொரு அம்சமும் வெற்றிகரமாக இயங்க வேண்டும். இல்லையேல் வேலைத் திட்டம் முழுதுமே குலைந்துபோகும்."

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பழக்கத்திலுள்ள விவசாயக் கருவிகளைப் பற்றி இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில் கணக்கெடுத்திருக்கிறது. எருதுகளைக் கொண்டு இயக்கப்படும் விவசாயக் கருவிகளைப் பற்றி ஆராய நான்கு பிராந்திய ஆராய்ச்சி—சோதனை நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த நிலையங்களில் பல்வேறு விவசாயக் கருவிகளும்

சோதிக்கப்பட்டு, மேற்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டு, பிறகு, அவைகளை உற்பத்தி செய்யவும் சப்ளை செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்படும். மாநிலங்களுடன் கலந்தாலோசித்தபின், பெருவாரியான அளவில் உற்பதிக்காக பல விவசாயக் கருவிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை இனித்தான் செய்தாக வேண்டும். வர்த்தக, கைத் தொழில் அமைச்சரகத்தைச் சேர்ந்த விசாரணைக் குழுவினரும் இது விஷயமாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பிராந்தியங்களில் விவசாயக் கருவி உற்பத்தியாளர்களுக்கு, பொருளாதார ரீதியிலும் தொழில் நுட்ப ரீதியிலும் உள்ள சங்கடங்கள் என்ன என்று அக்குழுவினர் விசாரித்திருக்கிறார்கள்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வேலைகளின் துணைகொண்டு, விவசாயக் கருவிகள் சம்பந்தமான விரிவான அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். மூன்றாவது திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக அவ்வேலைத் திட்டம் இன்னும் சில மாதங்களில் தயாராகும். அந்தத் திட்டத்தில் கீழ்க்கண்ட அம்சங்கள் இடம்பெறும் :—(அ) ஏற்கனவே நிலைபெற்றுவிட்ட நவீன விவசாயக் கருவிகளைத் தெரிந்தெடுத்தல், செயல் முறை காட்டுதல் (ஆ) நவீன கருவிகளைத் தயாரிப்பதிலும் பழுதுபார்ப்பதிலும் கிராமக் கருமான்களுக்கும் தச்சர்களுக்கும பயிற்சியளித்தல் (இ) ஆராய்ச்சி, விஸ்தரிப்பு நிறுவனத்தினருக்கும், கருவிகளை உற்பத்தி செய்பவர்களுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுத்துவது ; உருக்கு சப்ளைக்கும், போக்குவரத்து வினியோகம் ஆகியவைகளுக்கும் இன்னும் திருப்திகரமான ஏற்பாடுகளைச் செய்வது.

ஒவ்வொரு மாநிலத்திலும் அரசாங்கம், நவீன விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்ய குறைந்த பட்சம் ஒரு நிலையத்தையாவது நடத்த ஏற்பாடு செய்யப்படும். தொழில் நுட்ப ஆலோசனை, டிசைன், ஏனைய இதர யோசனைகளுக்கு மற்ற உற்பத்தியாளர்கள், இந்த அரசாங்க நிலையங்களை அணுகுவார்கள். சமுதாய நல அபிவிருத்தி வட்டாரப் பகுதிகளில், நவீன விவசாயக் கருவி முறைகளை மேற்கொள்ளச் செய்வதற்கு கடன் உள்ளிட்ட இதர வசதிகளை அளிக்க வேண்டும். பிரதம விஸ்தரிப்பு வேலையாக இதை மேற்கொள்ள வேண்டும்.

14. தீவிர விவசாய மாவட்டத் திட்டம்.—மேலே சொல்லப்பட்ட திட்டங்களை அமுலாக்குவதுடன், வேளாண்மை உற்பத்தி பெருக்கத்துக்கான தீவிர திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படும். பாசன வசதியும், நிச்சயமாக மழை பெய்யும் வசதி காரணமாக அனுகூலமான சூழ் நிலைகளும் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இத்திட்டம் அமுலாக்கப்படும். இதில் ஆரம்பக் கட்டமாக ஒரு மாநிலத்துக்கு ஒரு மாவட்டம் வீதம் தெரிந்தெடுக்கப்படுகிறது. இந்த மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் பஞ்சாயத்துகள் ஆகியன மூலம், எல்லாக் குடியானவர்களுடனும் தொடர்பு கொள்ள தீவிரமாக முயற்சிக்கப்படும். எல்லா விவசாயக் குடும்பங்களையும் சம்பந்தப்

படுத்தும் கிராம உற்பத்தித் திட்டங்கள் அமைக்கவும் முயற்சிக்கப்படும். பாசன வசதியை உபயோகித்துக் கொள்வதில் தாமதங்களாலும், ரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள், கடன் வசதி ஆகியன போதுமான அளவில் கிடைக்காததாலும், முன்பு, சமுதாய வளர்ச்சிப் பகுதிகளின் கீழ் குறிப்பிட்டுள்ள அளவு பரப்பில்தான் விவசாய அபிவிருத்தி வேலை மேற்கொள்ள முடிந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இப்போது இந்தச் சங்கடங்களைத் தீர்த்துவிட முடியும் என்று நம்பப்படுகிறது. இந்தச் சங்கடங்களைத் தீர்த்து விட்டால் மக்களின் முழு முயற்சியையும் உற்பத்திப் பெருக்கப் பணியில் ஈடுபடுத்த வழி ஏற்படும்.

வேளாண்மை உற்பத்தியின் லட்சிய அளவுகள்.

15. மூன்றுவது திட்டத்தில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துக்கு தற்போது குறிப்பிட்டுள்ள லட்சிய அளவுகள் பின்வருமாறு :—

பண்டம்.	யூனிட்.	1958–59-ல் உற்பத்தி.	1960-61-ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி.	1965-66-க்கு மொத்த உற்பத்தி லட்சிய அளவு.	1960-61 ஐ விட 1965–66-ல் உற்பத்தி அதிககரித்த சதவிகிதம்.
உணவு தானியங்கள்.	லட்சம் டன்கள்	735	750	1000—1050	33—40
எண்ணெய் வித்துக்கள்.	,,	70	72	92—95	28—32
கரும்பு	,,	72	72	90—92	25—28
பருத்தி	லட்சம் பேல்கள்	47	54	72	33
சணல்	,,	52	55	65	18
தேங்காய் ..	காய்கள் கோடியில்.	445·5	450·0	575·0	28
பாக்கு ..	ஆயிரம் டன்கள்	85	93	100	8
முந்திரி ..	,,	69	73	150	106
மிளகு ..	,, ..	26	29	30	3
ஏலம்	,,	தகவல் இல்லை.	2·26	2·62	16
அரக்கு ..	,, ..	33	50	62	24
புகையிலை ..	,,	263	300	325	8
தேயிலை ..	லட்சம் ராத்தல்கள்	7,160	7,250	8,500	17
காபி	ஆயிரம் டன்கள்	44	45	80	78
ரப்பர்	,,	25	26·4	45	71
எல்லாப் பொருள்களும்.	,,	..	..	..	30—33

வேளாண்மைத் தொழிலில் இயல்பாக இருந்து வருகின்ற நிச்சயமற்ற நிலைகளாலும், நேர்முகமாக களத்தில் நிலைமையைக் கவனித்து விரிவான வேலைத் திட்டங்களை இனித்தான் வகுக்க வேண்டியிருக்கிறது என்பதாலும், தற்போதைய இந்த விவசாய லட்சிய அளவுகளை யூகங்களாக அல்லது தோராய மதிப்பீடுகளாகக் கொள்ளுவதே விரும்பத்தக்கதாகும். இரண்டாவது திட்டத்தின் கடைசி ஆண்டில் உற்பத்தி அளவு பற்றிய மதிப்பீடுகளும், யூகமாக குறிப்பிடப்பட்டனவேயாகும்.

16. மேலே குறிப்பிடப்பட்ட வாணிபப் பயிர்கள் சம்பந்தப்பட்ட லட்சிய அளவுகள், பல்வேறு தொழில்களின் தேவை மதிப்பீட்டையும் பல்வேறு பொருள்கள் சம்பந்தப்பட்ட கமிட்டிகள் சிபார்சு செய்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் சாத்தியமெனத் தோன்றும் உற்பத்தி அதிகரிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மூன்றாவது திட்டத்தில் செலவுகள்.

17. திட்டத்தில் வேளாண்மைக்கான செலவுகள் பல தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. வேளாண்மையும் சார்பு வேலைகளும் என்ற தலைப்பில் ரூ. 625 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமூதாய நல வளர்ச்சி கூட்டுறவு என்ற இனத்துக்கு ரூ. 400 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போக, பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கென்று ரூ. 650 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரசாயன உரங்கள் உற்பத்திக்காக சுமார் ரூ. 240 கோடி மூலதனமிடப்படும். சமூதாய நல வளர்ச்சித் திட்ட வேலைகளில் ஏற்படும் செலவில் சுமார் மூன்றில் ஒரு பகுதி, விவசாய உற்பத்திக்கே செல்லும். கிடங்கு வசதிக்கு ரூ. 25 கோடி ஒதுக்கீடு, விவசாயத்துக்கான நிதி ஒதுக்கல்களில் ஒன்றாகும். தற்போது 20 லட்சம் டன்னுக்கு கிடங்கு வசதி இருக்கிறது. மொத்தம் 50 லட்சம் டன்னுக்கு கிடங்கு வசதி செய்ய வேண்டும் என்பது நோக்கம். இதற்கான வேலை மேற் கொள்ளப்பட்டுவிட்டது. இத்துடன், தனியார் துறை விவசாயத்தில் முதலீடு செய்யும் தொகை சுமார் ரூ. 800 கோடியும் கணக்கில் கொள்ளத்தக்கது. வேளாண்மைப் பெருக்கு வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக கூட்டுறவு அலுவல் குழுவின் யோசனைகளும் கவனிக்கத்தக்கவையாகும். அதாவது கூட்டுறவு ஸ்தாபனங்களிடமிருந்து , திட்ட கால முடிவில் நிலுவையிலுள்ள தொகை மூலம், குறுகிய காலக் கடன் ரூ. 400 கோடி வரையும், நடுத்தரக் கால கடன் ரூ. 160 கோடியும், நீண்ட காலக் கடன் ரூ. 115 கோடியும் நிதி வசதி பெற வேண்டும் என்பதே கமிட்டி கூறிய யோசனையாகும்

மாநில அரசாங்கங்கள் அடுத்த சில மாதங்களில் வேளாண்மைப் பெருக்க வேலைத் திட்டங்களைத் தயாரிக்கும். அவை குறிப்பிடும் லட்சிய அளவுகள் தேவைகளையொட்டி, விவசாயத் திட்டத்துக்கான நிதி ஒதுக் கீடுகள் புனராலோசனைக்கு உள்ளாகும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஸ்தூல ஆதார வசதிகளை அதிக பட்ச அளவுக்குப் பயன் படுத்தும் வகையில் அத்தியாவசிய விவசாயத் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்க வேண்டும். திட்டக் காலத்தில் வருஷாவருஷம் நிதி ஒதுக்கும் போது, கூடுதல் உற்பத்திக்கான லட்சிய அளவுகளை அடைவதற்காக, சில குறிப்பிட்ட திட்டங்களுக்கு அவசியத்துக்கேற்ப கூடுதல் நிதி வசதி செய்யலாம்.

18. வேளாண்மை, கிராம நலம் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங் களை அமுலாக்குவதில் ஏற்படும் செலவுகளுக்கு சமீப ஆண்டுகளைக் காட்டி லும் அதிகமான பலன் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிறிய பாசன சாத்தியக்கூறுகள் பற்றி முறையான சர்வேக்கள் நடத்துவதால் அந்தந்தப் பகுதிகளில் மிக அதிகமான பலன் தரும் திட்டங்களைத்

தெரிந்தெடுக்க வசதிப்படும். இப்படிப்பட்ட சர்வேக்களை சரிவர நடத்தாததால் தான், பொருளாதார அம்சத்தையோ, தொழில் நுட்ப அம்சங்களையோ சரிவர பரிசீலனை செய்யாமல் சில சிறிய பாசனத் திட்டங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு விடுகின்றன. இரண்டாவதாக, ஒரே திட்டத்துக்கு விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழும், சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் கீழுமாக ஒன்றின் மேலொன்ருக நிதி வசதிகள் அமையும் நிலையும் ஏற்பட்டுவிடுகின்றது. மூன்ருவது திட்டத்துக்கான வேலைத்திட்டங்களை வகுப்பதில் இப்படி ஒரே காரியத்துக்காக இரண்டு வகைகளில் நிதி ஒதுக்கும் நிலைமை கூடுமானவரை நீக்கப்பட வேண்டும். மூன்ருவதாக, இரண்டாவது திட்டத்துக்கு விவசாய லட்சிய அளவுகள் 1956 நவம்பரில் நிர்ணயிக்கப்பட்ட போது எடுத்துக்காட்டப்பட்ட விஷயம் இங்கு குறிக்கத்தக்கதாகும். அதாவது சிறிய பாசனத் திட்டங்கள் என்பவை அரசாங்கத்தால் நிறைவேற்றப் படும் சிறு பாசன வேலைகள் போல ஆகிவருகின்றன ; மக்கள் அதில் பங்கு பெறுவதோ, தம்மிச்சையாக உழைப்பை அளிக்க முன்வருவதோ, அநேகமாக இல்லை என்பதே அந்த விஷயமாகும். சிறிய பாசனத் திட்ட வேலைகள் என்பவை முக்கியமாக மக்கள் திட்டங்கள் என்பது எல்லா மாநிலங்களிலும் கருதப்பட வேண்டும். பணமாகவும், உழைப்பாகவும் உள்ளூர் மக்களின் உதவி, திட்டத்தில் முக்கியமானதாக விளங்க வேண்டும் என்று அப்போது வலியுறுத்தப்பட்டது. இந்தக் குறிப்புரைகள், மண் வளப்பாதுகாப்பு, சமஉயரக்கரை கட்டல், புன்செய் சாகுபடிமுறை ஆகியவைகளுக்கும் பொருந்துவதாகும்.

19. புதிய வேலைகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்காக சென்ற சில ஆண்டுகளில் பலவிதமான மானியங்களும் உதவிகளும் அளிக்கப்படுகின்றன. இந்த உதவிகளைப் படிப்படியாகக் குறைப்பதே பொதுக் கொள்கையாக இருக்க வேண்டும். என்ன நோக்கத்துக்காக இந்த உதவித் தொகை தரப்படுகின்றது, இதை நிறுத்தும் வழி என்ன என்பது பற்றி மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் புனராலோசனை செய்யவேண்டியவர்களாகிருர்கள். இதுவரை ஏற்றுக்கொள்ளப் படாமலிருக்கின்ற, அல்லது ஏழை மக்களுக்கு நன்மை அளிக்கின்ற ஒரு புதிய கண்டுபிடிப்புக்கு அல்லது புதிய முறைக்கு ஆதரவாக உதவித் தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அளிப்பதில் நியாயம் இருக்கலாம். சென்ற சில ஆண்டுகளாக வழங்கப்படும் உதவித் தொகைகளைப் படிப் படியாக நிறுத்தும்போது, உதவித் தொகைத் தேவைப்படுகின்ற புதுத் திட்டங்களை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். வேறு வழிகளில் அந்தப் பயனை அடைய முடியாதா என்பதையும் ஒவ்வொரு விஷயத்திலும் கவனிக்க வேண்டும்.

2. சமுதாய நல வளர்ச்சி

20. சமுதாய நல வளர்ச்சித் திட்டம் எட்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. 2,900-க்கு மேற்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் அமுலாக்கப்

பட்டிருக்கிறது. 19·4 கோடிமக்கள் இதனால் பயனடைந்து வருகிறார்கள். இரண்டாவது திட்ட முடிவில் இத்திட்டம் மொத்தம் சுமார் 4 லட்சம் கிராமங்களைக்கொண்ட 3,100 வட்டாரங்களில் பரவியிருக்கும். இவற்றுள் 1,000க்கு மேற்பட்ட வட்டாரங்கள் ஐந்து ஆண்டுகளைக் கடந்தனவாகி, சமுதாய நல வளர்ச்சியில் இரண்டாவது நிலையை அடையும். சுமார் 2,040 வட்டாரங்கள் முதல் நிலையிலேயே இருந்துவரும். இத்துடன் சுமார் 500 வட்டாரங்களில் விஸ்தரிப்புப் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டிருக்கும்.. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டப்படி, சமுதாய நல வளர்ச்சித் திட்டம் 1963 அக்டோபருக்குள் தேசம் முழுதிலும் பரவிவிடும். மூன்றாவது திட்ட முடிவில் சுமார் 2,100 வட்டாரங்கள் முதல் நிலையிலும், சுமார் 2,000 வட்டாரங்கள் இரண்டாவது நிலையிலும் 1,000க்கு மேற்பட்ட வட்டாரங்கள் 10 ஆண்டுக்கால அபிவிருத்தி வேலைகளைப் பூர்த்தி செய்துவிட்டனவாகவும் இருக்கும். சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு வேலைத் திட்டங்களுக்காக திட்டத்தில் மொத்தம் ரூ. 400 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

21. ஒவ்வொரு சமுதாய நல வளர்ச்சி வட்டாரமும், முனைப்பான வேலைப் பகுதியாக இருக்க வேண்டும் என்பதே நோக்கமாகும். அரசாங்க அபிவிருத்தி வேலை நிறுவனங்கள் அனைத்தும், பஞ்சாயத்துக்களும் கூட்டுறவுச் சங்கங்களிலும் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற ஸ்தல தலைவர்களுடன் இணைந்து ஒத்துழைக்கும் இடமாக அமைய வேண்டும் கிராம மக்களின் பூரணமான முன்னேற்றத்துக்கும், துரிதமான விவசாய அபிவிருத்தி மூலம் பலமான பொருளாதார அஸ்திவாரத்தை ஸ்தாபிப்பதற்குமான திட்டத்தின் ஒரு பகுதி என்றுதான் அபிவிருத்தி வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் அலுவல்களைக் கருத வேண்டும். உள்ளூர் ஆள் பலத்தையும் இதர ஆதார வசதிகளையும் பொது நன்மைக்காகப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டும். பரஸ்பரம் முன்னேற்றம் காண்பதற்காக, மக்கள் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த இந்த இயக்கம் கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்துடனும் தொடர்பு கொள்ளுகின்றது. இந்த வழியில் மக்களிடையே நல்ல முறையான சமூக உறவும் ஒற்றுமையும் ஏற்படுகின்றன.

22. சமுதாய அபிவிருத்தி இயக்கத்தின் அடிப்படை லட்சியங்களை இன்னும் விரிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். வருஷாவருஷம் மேற்கொள்ளப்படும் கண்கூடான மதிப்பீடுகளும், சமுதாய நல வேலை மதிப்பீடு ஸ்தாபனம் மேற்கொள்ளும் விசேஷ ஆய்வு நடவடிக்கைகளும் சில உண்மைகளைப் புலப்படுத்தியிருக்கின்றன. பெரும்பாலான பகுதிகளில் திட்ட லட்சியத்துக்கும், இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கும் இடையே உள்ள இடைவெளிகளின் விவரம் தெரியவந்திருக்கிறது. தேசிய நல அபிவிருத்தி என்ற திட்டத்தின்படி சமுதாய நலப் பகுதிகளில், க்ஷேம நலப்பரப்பு பணியாளர்கள் மக்கள் சார்பு நிறுவனங்கள் உள்பட வட்டார வளர்ச்சி நிறுவனங்கள் பெரும் பொறுப்பு வகிக்கின்றன. அடுத்த சில ஆண்டுகளில் சமுதாய நல வளர்ச்சி இயக்கம் பூரணமான பலன்

அளிக்க வகை செய்ய வேண்டும். அது சம்பந்தமாக வேலை முறையைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக்கொள்ளலாம்:—

(1) முன்பின் வரிசைக் கிரமம்

(2) சமுதாய நல வளர்ச்சிப் பகுதிகளில் நிறுவன அமைப்பு முறையில் மாற்றங்கள் இருந்தால் அவை.

(3) கிராம உற்பத்தித் திட்டங்கள் அமைப்பு.

(4) திட்டமிடுவதிலும் அபிவிருத்தி வேலைகளிலும், அபிவிருத்தி வட்டாரம் ஒரு யூனிட் ஆக மேற்கொள்ளும் பங்கு.

(5) சமுதாய நல வளர்ச்சிக்காக கிராம வட்டார மாவட்ட நிலைகளில் ஜனநாயக நிறுவனங்களின் முக்கியத்துவம்.

(6) சமுதாய நல வளர்ச்சியும், வசதிக் குறைவான நிலையில் உள்ள மக்களும்.

வரிசைக் கிரமமும் ஸ்தாபனமும்.

23. கிராமப் பொருளாதாரத்தை புனர் நிர்மாணம் செய்வதில் மிக அடிப்படையான பிரச்னை, கிராம நிலையில் வேளாண்மை முயற்சிகளை ஒருங்கு திரட்டுவதேயாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்காக கிராம மக்களின் முயற்சிகளை ஒன்று திரட்டுவதில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படுகிறது என்பதைப் பொறுத்து கிராம மக்களின் இதர பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வேலை சுலபமாகிவிடும். வேளாண்மையைப் பெருக்க உதவும் ஸ்தாபனமாக சமுதாய நல இயக்கம் எந்த அளவுக்கு நடைமுறையில் பயன்படுகிறது என்பதே இன்று முக்கியக் கேள்வி. வேளாண்மைப் பெருக்க விஷயம் அந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவிட்டது. எனவே சமுதாய நல நிறுவனங்கள் இவ்வகையில் தம்மிடமுள்ள குறைபாடுகளைக்களைய எல்லா நடவடிக்கைகளும் எடுத்தாக வேண்டும். ஸ்தல மக்களின் அதிகப் பட்ச ஒத்துழைப்பின் அடிப்படையில் வேளாண்மைப் பெருக்க லட்சிய அளவுகளை அடையவும் இந்த நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும்.

24. அதே சமயத்தில் விவசாய இலாகாவும் இத்துறையில் உதவ முன்வர வேண்டும். வட்டார நிலையில் தேவைப்படும் சப்ளைகள், பயிற்சி பெற்ற ஆள் பலம், இதர தேவையான வசதிகளை சமுதாய நல நிறுவனத்திடம் ஒப்படைக்க அந்த இலாகா முன்வர வேண்டும். விவசாயத்தில் முக்கிய கவனம் செலுத்துவதில் இரண்டு வழிகள் உண்டு. முதலவது, கிராம நிலை ஊழியரானவர் முக்கியமாக, வேளாண்மை, கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகிய இவைகளில் வேலை செய்துகொண்டு போக வேண்டும். மற்ற வேலைகளைக் கவனிக்க வேண்டியவை கிராம ஸ்தாபனங்களே. கிராம நிலை ஊழியர்களுக்கு அவற்றில் மறைமுக சம்பந்தம் இருக்கலாமேதவிர, நேரடி சம்பந்தம் இராது.

இரண்டாவது, சமுதாய நல வட்டாரத்தின் வேலைத் திட்டவாரியன வரவு செலவுத் திட்டத்தில் வேளாண்மைக்கு நிதி வசதியை அதிகரிப்பதன் மூலமாக வேளாண்மைக்கு முதலிடம் தரப்பட வேண்டும். இது சம்

பந்தமான யோசனைகள் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளன. விவசாயத் துக்கென ஒதுக்கப்பட்ட தொகைகள் எக்காரணத்துக்காகவும் இதர வேலை களுக்கு மாற்றப்படலாகா. அபிவிருத்தி வட்டார பட்ஜெட்டிலிருந்து விவ சாயத்துக்கு மேலும் அதிக நிதி ஒதுக்கும்படி கூட, வட்டார வளர்ச்சி நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கலாம்.

25. கிராம நிலை ஊழியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல் பிரதேச வரம்பு, குறைக்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலம் அவர் தற்போது உள்ளதை விட இன்னும் முனைப்பான முறையில் பணியாற்ற முடியும் என்றும் சில சமயம் யோசனைகள் கூறப்பட்டன. இவ்விஷயம் மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. ஒரு கிராம நிலை ஊழியர் சராசரி 1,000-லிருந்து 1,200 குடும்பங்களுக்கு திறம்பட பணியாற்ற முடியும் என்ற பொது முடிவுக்கு வரப்பட்டது.

இந்த அடிப்படையில் கிராம நிலை ஊழியர்களின் அலுவல் வரம்பை திருத்தி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அலுவலர்கள் கிராமங்களில் கிராம மக்களில் ஒருவராக வாழ வேண்டும். கிராம மக்களின் பணிகளில் அக்கறை காட்டி, அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும். கிராம நிலை ஊழியர்களும் இதர க்ஷேம நலப் பரப்பு அலு வலர்களும் ஒரே பகுதியில் தொடர்ச்சியாக இருந்து பணியாற்றினால் தான், அதே ஊரின் மக்கள் போலாகி, குடியானவர்களேயும் அவர்களுடைய பிரச்னைகளையும் நன்கு அறிந்துகொள்ள முடியும். அதன் மூலம்தான் திருப்திகரமான பலன் காணலாம். இந்த மாதிரி நிலைமை சாத்தியமாக வேண்டுமானால், கிராம நிலை ஊழியர்களும் இதர அலுவலர்களும் அந்தந்தப் பகுதிகளில் நீண்டகாலம் இருக்கவேண்டும். உரிய வேலை உயர்வுக்காகவும் ஊதியத்திற்காகவும் இடம் விட்டு இடம் மாறவேண்டுமென்ப தில்லை, உள்ள இடத்திலேயே அவைகளை அடையலாம் என்று உறுதி யளிக்க வகை செய்யவேண்டும்.

26. திட்டங்கள் வாரியான பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதிவசதிகளைத் தவிர்த்து, எல்ல அபிவிருத்தி இலாகாக்களின் பட்ஜெட்டுகளிலிருந்தும் வட்டாரத் திட்டத்துக்கு நிதி கிடைக்கின்றது. ஒவ்வொரு வட்டாரமும், ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்காக தன் வசம் குறிப்பிட்ட அளவு தொகை வைத்திருக்க வேண்டும் என்பதற்காக திட்ட பட்ஜெட்டில் விசேஷ நிதி ஒதுக்கப்படுகிறது. ஒரே காரியத்துக்குப் பல தலைப்புகளிலிருந்து நிதி வந்து சேர்ந்துவிடா வண்ணமும் திட்ட வேலைகளில் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்வதிலும் அக்கறை காட்டப்பட வேண்டும். இதே நிலைமை பல துறைகளுக்கும் பொருந்தும். ஆனால் சமுதாய நல வளர்ச் சிப் பகுதிகளில் விவசாயச் செலவினங்களுக்கு இது விசேஷமாகப் பொருந்தும்.

கிராம உற்பத்தித் திட்டங்கள்.

27. கிராமத்திலுள்ள எல்லாக் குடியானவர்களும் சம்பந்தப்படும் விதத்தில் கிராம உற்பத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். என்னும்

விஷயம் இரண்டாவது திட்டத் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. கிராம உற்பத்தித் திட்டம் இல்லையேல், சமூக நலப் பரப்பு ஊழியர்கள் கிராமத்திலுள்ள எல்லா குடியானவர்களிடமும் தொடர்பு கொள்ளுவது என்பதும், ஸ்தல மக்களின் முயற்சிகளை திறம் பட்ட முறையில் ஒருமுகப்படுத்துவதென்பதும் சாத்தியமில்லாமல் போகும். கிராம நிலையில் வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(1) பாசன வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்துவது, பாசன வசதி அடைகிறவர்களே வயல் வழி கால்வாய்களை நல்ல முறையில் பரா மரித்து வரும்படிச் செய்தல், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துவது, பல போகம் சாகுபடி செய்யும் பரப்பை அதிகரித்தல்,

(2) பொறுக்கு விதைகளை கிராமங்களில் பெருக்குதல், பணம் கொடுத்து வாங்கச் சக்தியில்லாதவர்களுக்கு விதைகளைக் கட னுக்கு வழங்கல்.

(3) ரசாயன உரங்கள் வழங்கல்.

(4) குப்பை உரம், எரு, தழை உரம் சேகரிப்புக்கான திட்டம்.

(5) திருந்திய சாகுபடி முறைகளைக் கையாளுதல். அதாவது மண் வளப் பாதுகாப்பு, சம உயரக் கரை கட்டல், புன்செய் சாகுபடி முறை, கலப்பு முறை வேளாண்மை, பயிர்ப் பாதுகாப்பு நட வடிக்கை முதலியன.

(6) கிராமங்களில் பொது மக்கள் ஒத்துழைப்புடனும் தனிப்பட்ட முறையிலும் புதிய சிறு பாசன வேலைகளை மேற்கொள்ளு வதற்கான திட்டம்.

(7) நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தும்படிச் செய்வதற்கான வேலைத் திட்டம்.

உற்பத்திப் பெருக்கத் திட்டம் என்பது, வட்டார வேலைத் திட்டத்தையும் கிராம முயற்சிகளையும் இணைக்கும், ஒரு தொடர்ச்சித் திட்டமேயாகும். இதன் வெற்றி கீழ்க்கண்ட அம்சங்களைப் பொறுத்தது :—(1) காலாகாலத் தில் சப்ளை கிடைக்கத் தகுந்த சிறப்பான ஏற்பாடு செய்வது ; (2) தொழில் நுட்ப ஆலோசனை வகையில் கிர மவாசிகளுக்கு அளிக்கப்படும் உதவி. இந்த உதவிகள் சமுதாய நல வளர்ச்சி நிறுவனத்தின் பணிகளாகும்.

28. கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டம் இரண்டு முக்கியமான பிரிவு களைக் கொண்டிருக்கும் :—(1) கடன் வசதி, ரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள், ஆகியவற்றின் சப்ளை, பயிர்ப் பாதுகாப்பு, சிறிய பாசனத்தில் திட் டங்கள் முதலியனவற்றிற்கு உதவி ; (2) பெரிய தேக்கங்களிலிருந்து பாசன வசதியைப் பயன்படுத்திக்கொள்வதற்காக வயல் வழிக் கால்வாய் கள் தோண்டுதல், வயல் வழிக் கால்வாய்கள், கரைகள் பராமரிப்பு, சம உயரக் கரை கட்டல், கிராம ஏரி குளங்களை அமைத்துப் பராமரித்தல்,

கிராம விறகுக் காடுகளைப் பராமரித்ததல். கிராம மக்களின் அல்லது ஒரு பகுதி குடியானவர்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்ற இது போன்ற இதர திட்டங்கள் .

கிராம உற்பத்திப் பெருக்கத் திட்டம் என்பது எளிமையாக, காரிய ரீதி யானதாக கிராம மக்களால் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டம் மிகப் பிரமாத மான முறையில் தயாரிக்க வேண்டும் என்பதில்லை. கிராம நிலை ஊழியர் ஒவ்வொரு குடியானவருடனும் தனித் தனியாகக் கலந்து பரந்த அளவில் விவரங்களைத் தயாரிக்க வேண்டும் என்பது நோக்கமல்ல. உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை தயாரிப்பது அமுலாக்குவது சம்பந்தமான ஒவ் வொரு கட்டத்திலும் பஞ்சாயத்துக்கும், கூட்டுறவுச் சங்கத்துக்கும் இடையே ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். இந்த நிறுவனங்களின் பணி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இல்லாமலிருக்கலாம் என்ருலும் இவைகளிடையே ஒத்துழைப்பு அவசியம். இந்த நிறுவனங்கள், கிராம நிலை ஊழியர்கள் மற்றும் இதர சமூக நலப் பரப்பு அலுவலர்களின் யோசனைகளையும் ஒத்துழைப்பையும் கொண்டு, கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை வகுப்பதில் பிரதான பொறுப்பு ஏற்க வேண்டும்.

29. கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை முழுமையாக அனு மானிக்கவும் திட்டத்தை நிறைவேற்றுவதில் கிராம மக்கள் அல்லது பயனடைகிறவர்களின் ஒத்துழைப்பு மட்டும் தேவைப்பட்டால் அதற்கான வகை செய்யும் பஞ்சாயத்தே ஏற்ற ஸ்தானத்தில் இருக்கிறது. மற்ருெரு புறத்தில் தனிப்பட்ட குடியானவர்களுக்கு வேண்டுமான கடன், சப்ளைகள், ஆகியவைகளை கிராமக் கூட்டுறவுச் சங்கமே வழங்குகின்றது. கிராமக் கூட்டு றவுச் சங்க உறுப்பினர்கள் தொகை பரவலாக அதிகரித்து கிராமத்தி லுள்ள எல்லாக் குடியானவர்களும் உறுப்பினர்களாகும் நிலை வரும் போது, கிராம உற்பத்திப் பெருக்குத் திட்ட விஷயத்தில் இச்சங்கத்தின் பொறுப்புகளுக்கும், பஞ்சாயத்தின் பொறுப்புகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும். கூட்டுறவுச் சங்க ஒத்துழைப்புடன் பஞ்சாயத்து, கிராமத் திட்டத்தை வகுக்கின்றது. அந்தத் திட்டத்தினுள், கூட்டுறவுச் சங்க உதவியுடன் கூடிய தனிப்பட்ட குடியானவர்களின் திட்டங்கள் உண்டு. எனவே, தனிப்பட்ட குடும்பங்களின் விவசாயத் திட்டங்களை வகுப் பது என்ருல், பிரதமக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியை இன்னும் திறம் பட அமைக்க வேண்டும் என்பதே பொருளாகின்றது. அதாவது, கிராமத்தி லுள்ள எல்லாக் குடியானவர்களுக்கும் உதவும்படியாக அதன் பணி அமைய வேண்டும். அப்படி அமையும் நிலையில், தனிப்பட்ட குடியானவர் கள் தனித் தனியாகத் திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டிய அவசிய மிராது. மேலே சொல்லப்பட்ட கிராமத் திட்டங்களை அமுலாக்கும்போது, அந்த நடைமுறையில் தாகுைவே, தனிப்பட்ட குடும்பத்துக்கான திட்டங் கள் ஏற்பட்டுவிடும். கிராம திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதில் இது வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் போதுமானதல்ல. மூன்ருவது திட்டத் தில் மேலும் துரிதமான முன்னேற்றம் காண்பதற்காக கிராமநல

வளர்ச்சித் துறை அதிகாரிகள் இந்த ஆண்டில் ஒரு சில கிராமங்களில் அனுபவம் பெறுவதற்கு மாநில அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திட்டமிடுவதிலும், அபிவிருத்தியிலும் வட்டாரம்ரு ஒ யூனிட்

30. திட்டமிடுவதிலும், அபிவிருத்திவேலைகளிலும் வட்டாரத்தை ஒரு யூனிட்டாகக் கொள்ளும் பிரச்னை கொஞ்ச கலமாகவே பரிசீலனையில் வருகிறது. ஒரு சில அபிவிருத்தித் துறைகளைப் பொறுத்த வரையில் இருந்து மாநில ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதில் வட்டாரத் திட்டங்கள் வெகுவாக உதவியிருக்கின்றன. மாநிலத்தின் வருஷாந்திரத் திட்டத்தை வகுப்பதிலும் வட்டாரத் திட்டத்தின் பங்கு முக்கியமானது. திட்டத்தை நிறைவேற்றுவதில் அதன் பங்கு இன்னும் அதிகமாகும். வட்டார அளவிலும் கிராம நிலையிலும் ஜனநாயக நிறுவனங்களை அமைப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. இதையொட்டி, மாநில திட்டத்தை கீழ் மட்டத்திலிருந்து தயாரிப்பதும், வட்டாரத்தை யூனிட்டாகக் கொண்டு அத்திட்டத்தை அமுலாக்குவதும் அவசரமான பிரச்னைகளாகிவிட்டன.

கீழ்க்கண்ட அபிவிருத்தித் துறைகளைப் பொறுத்த வரையில், வட்டாரத் திட்டங்களையும், மாவட்டத் திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டே மாநில ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும் :—

(1) வேளாண்மை—சிறிய பாசனத் திட்டங்களும் இதில் சேர்ந்தது,—மண்வளப் பாதுகாப்பு, கிராமக் காடுகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை முதலியன.

(2) கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி.

(3) கிராமக் கைத்தொழில்கள்.

(4) ஆரம்பக் கல்வி, குறிப்பாக உள்ளூர் மக்கள் உதவியுடன் பள்ளிக் கட்டிட வசதிகள்.

(5) கிராமங்களில் தண்ணீர் சப்ளை, கிராமங்களில் குறைந்த பட்ச வசதிக்கான வேலைத் திட்டங்கள்—கிராமப் பகுதிகளில் சாலைகள் அமைத்து ஒவ்வொரு கிராமத்துக்கும் பக்கத்திலுள்ள சாலையுடன் அல்லது ரயில் நிலையத்துடன் பாதை இணைப்பும் இதில் அடங்கும்.

(6) கிராமப் பகுதிகளில் ஆள் பலத்தைப் பூரணமாக பயன்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள்.

31. வட்டாரத்திற்குள் மேற்கொள்ளப்படும் எல்லா சமூகப பொருளாதார நடவடிக்கைகளும் வட்டாரத் திட்டத்திற்குள் அடங்கும். வட்டார, கிராம அளவில்,வகுக்கப்பட்டதாகவும், வட்டாரத்தில் அமுலாக்கப்படும் பல் வேறு இலாகாக்களின் திட்டங்களுடன் இணைப்புக் கொண்டதாகவும், அந்த சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் இருத்தல் வேண்டும்.

வட்டாரத்தின் கீழ் வரும் முக்கியமான வேலை வகைகளாவன :—

(1) வட்டாரத்தின் வேலை வாரி வரவு செலவுத் திட்டத்தில் கண்டுள்ள இனங்கள்—அவைகளின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப ;

(2) வட்டார அபிவிருத்தி நிறுவனத்தால் நிறைவேற்றப்படுவன வும் பல்வேறு இலாகாக்களின் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனவுமான இனங்கள்

(3) சட்டத்தின்படியுள்ள கடமைகளை யொட்டி, ஸ்தல மக்கள் அல் லது அனுகூலமடைவோர்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங் கள்,

(4) பல்வேறு துறைகளில் அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக ஸ்தல மக்களிடமிருந்து அதிகமான அளவில் பங்கு பெறும் நோக்கத்துடன் வட்டார அபிவிருத்தி நிறுவனங்கள், வட்டாரத் துக்குள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்,

(5) வட்டாரத்தில் தொழில் நுட்பம் தெரியாதவர்களையும், ஓரளவு தொழில் நுட்பம் தெரிந்தவர்களையும் ஈடுபடுத்துகின்ற வேலைத் திட்டங்கள்.

மேலே (1), (2), (5) இலக்கங்களில் குறிப்பிடப்பட்ட வேலைத் திட்டங் களை வட்டார வளர்ச்சி ஸ்தாபனங்கள் நிறைவேற்ற வேண்டுமானால், வேலையை நிறைவேற்றக் கூடிய தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அந்த தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு கருவி களை வழங்கக் கூடியவையாகவும், மேற்பார்வைப் பொறுப்பு, நிதி ஏற்பாடு ஆகியவைகளைக் கவனித்துக்கொள்ளக் கூடியனவாகவும் இருக்க வேண்டும். கிராம மக்கள், சிறுகச் சிறுக தொடர்ச்சியாக (recurring income) வருமானம் பெறக் கூடிய வகையில் முதலீடுகளை அமைத்துக்கொள்ள உதவி செய்வதும், முக்கியமான ஒரு வேலையாகும்.

ஜனநாயக நிறுவனங்கள்.

32. கிராம மட்டத்தில் இயங்கிவரும் பஞ்சாயத்துக்களைத் தவிர்த்து, மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் ஜனநாயக நிறுவனங்களை ஏற்படுத்துவதற்காக பல மாநிலங்கள் ஏற்கனவே சட்டமியற்றிவிட்டன. மற்ற மாநிலங்கள் மூன்றாவது திட்ட ஆரம்பத்துக்குள்ளாக அதே போல சட்டம் இயற்றக் கூடும். ஜனநாயகச் சபைகள் மூலம் அல்லது "பஞ்சாயத்து ராஜ்யம்" மூலம் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளுவதென்பது மிக முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும். முதலாவது இரண்டாவது திட்டங்களில் பொதுவாக வலியுறுத்தப்பட்ட ஒரு முறையானது அடைந் துள்ள வெற்றியையும் இது எடுத்துக் காட்டுகின்றது. அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் பங்கு என்ன என்னும், விஷ யம் முதல் திட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. தங்கள் தங்கள் பகுதியில் நிர்வாகத்திலும், சமூக நலப் பணிகளிலும் அவை சாத்தியமான வரை அதிக அளவுக்கு பொறுப்பேற்க உதவுவதே பொதுக் கொள்கை யாக இருக்க வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது. கிராமப் பஞ்சா யத்துக்களுக்கும், மேல் மட்டத்திலுள்ள ஜனநாயக மன்றங்களுக்கும்

இடையே நெருங்கிய பிணைப்பு உள்ள வகையில், சீரான ஜனநாயக நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தை இரண்டாவது திட்டம் வலியுறுத்தியது. திட்டக் கமிட்டியால் ஏற்படுத்தப்பட்ட, சமூக நல வளர்ச்சி, தேசீய நலப் பரப்பு ஆய்வுக் குழுவானது ஜனநாயக நிறுவனங்களை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை வகுத்தது. தேசிய அபிவிருத்திக் கவுன்சில் இந்தத் திட்டங்களைப் பரிசீலித்துவிட்டு, எந்த விதமான ஜனநாயக அமைப்பானாலும் சரி கிராம ஜனநாயகமே அதற்கு அஸ்திவாரமாக இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டது. கிராம ஜனநாயகத்தை சாத்தியமாக்கக் கூடியவை கிராமப் பஞ்சாயத்து, கிராமக் கூட்டுறவுச் சங்கம் என்ற இரு நிறுவனங்களேயாகும். எனவே எந்தப் பகுதியிலாயினும் சரி, கிராம அளவில் தேவைப்படும் பல நிறுவனங்களையும் அமைப்பதே முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும். மாவட்டம், வட்டாரம், கிராமம் என்ற நிலைகளிலுள்ள ஜனநாயக நிறுவனங்கள், இணைப்பான நிர்வாகக் கட்டுக்கோப்பின் பகுதிகளைப் போல விளங்க வேண்டும். இந்த நிலைமைகளை ஆதாரமாக வைத்து, மாவட்டத்திற்குள் கிராம நிலைக்கு மேல் ஜனநாயக அமைப்பான நிர்வாகத்தை ஏற்படுத்துவதை தேசீய அபிவிருத்திக் கவுன்சில் அங்கீகரித்தது. கிராமத்தினுள் அபிவிருத்தி வேலைப் பொறுப்புக்களை மக்களின் பிரதிநிதிகளிடம் விட்டுவிடவேண்டும் என்ற பொதுக் கொள்கையையும் அது ஏற்றது. குறிப்பாக எந்த முறையில் அக்கொள்கையை அனுசரிப்பது என்பதை, ஆங்காங்கே உள்ள நிலைமைகளுக்கேற்ப மாநிலங்களே முடிவு செய்யும்படி விடப்பட்டது.

33. அரசாங்கத்தின் மேற்பார்வையில் பல்வேறு மாநிலங்கள் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளினால், வட்டாரத்திற்குள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அமுலாக்குவதில் முடிவான பொறுப்பு படிப்படியாக வட்டாரப் பஞ்சாயத்து சமிதியையே (பஞ்சாயத்து யூனியன்) சாரும். அந்தச் சமிதி கிராம மட்டத்தில் பஞ்சாயத்துக்களுடனும், மாவட்ட அளவில் ஜில்லா பரிஷத்துக்களுடனும் பணியாற்றும். மாவட்டத்திலும், வட்டாரத்திலும் ஜனநாயக நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தி வேலைகள் வெற்றி பெற வேண்டுமானால் நான்கு முக்கிய அம்சங்களைக் கவனிக்க வேண்டும். அவையாவன :—

(1) உள்ளூர் ஆள் பலத்தையும், இதர வசதிகளையும் திரட்டவும், அந்தந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், பஞ்சாயத்து சமிதியும், பஞ்சாயத்தும் என்ன முறைகளைக் கையாளப் போகின்றன என்பது ஒரு முக்கிய விஷயம்.

(2) ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத் திட்டப்படி, சரியான சமயத்தில் உதவிகளையும், சப்ளைகளையும் வழங்கும் பொறுப்பு மாவட்ட நிர்வாகத்துக்கு உண்டு. சேதாரத்தினாலோ, அல்லது பணத்தை முறை மாறி ஈடுபடுத்துவதினாலோ, நஷ்டம் நேராதபடியும் கவனித்துக்கொள்ள வேண்டும். இந்தச் சங்கிலித் தொடர்பான பொறுப்பிலிருந்து வழுவக் கூடாது.

(3) பஞ்சாயத்து சமிதிகளும், பஞ்சாயத்துக்களும் வேளாண்மைப் பெருக்கத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

(4) வசதிக் குறைவான நிலையில் உள்ள மக்கள் மற்ற மக்கள் நிலைக்கு உயரும்படியாக அவர்களது வாழ்க்கைத் தர உயர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் பஞ்சாயத்து சமிதிகளும், பஞ்சாயத்துக்களும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

பஞ்சாயத்து, கூட்டுறவுச் சங்கம், பஞ்சாயத்து சமிதி ஆகியவைகளின் உறுப்பினர்களுக்கு மாநில அரசாங்கம் ஏற்பாடு செய்யும் பயிற்சித் திட்டங்களில் இந்த அம்சங்கள் வலியுறுத்தப்பட வேண்டும். மாவட்டம், வட்டாரம், கிராமம் ஆகிய நிலைகளில் வேலைத் திட்டங்களை அமுலாக்குவதில் முதலிட வரிசைக் கிரமம் அனுசரிக்கும்படிச் செய்ய ஆரம்பக் கட்டத்தில் மேற்பார்வைக் கண்காணிப்புக்கான நிர்வாக நடைமுறைகள் கையாளப்பட வேண்டும்.

சமூக நல வளர்ச்சியும், வசதிக் குறைவான மக்களும்.

34. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், கிராமங்களிலே வசதிக் குறைவான நிலையில் உள்ள மக்களுக்கு, போதுமான அனுகூலங்கள் செய்யவில்லை என்று சமுதாய நல வளர்ச்சி வேலைத் திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு அறிக்கைகள் சுட்டிக் காட்டின. இந்த நிலைமையில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக சமீபத்தில் ஆய்வு அறிக்கைகள் கூறின. வசதிக் குறைவான மக்களுக்கு மேலும் மேலும் வசதிகள் செய்வதிலேயே சமுதாய நல வளர்ச்சி இயக்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அதன் நிதி வசதிகளும் அந்த வகையிலேயே அதிகம் ஈடுபடுத்தப்பட வேண்டும். இயற்றப்பட்டுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அமுலாக்குவதிலும் வட்டார வளர்ச்சி நிறுவனங்கள் பயனுள்ள சேவை செய்யலாம். கிராமங்களில் துணை தொழில் வசதிகளை அதிகரிப்பது, கிராமத் தொழில்களின் உற்பத்தி சக்தியையும், கிராம தொழில் வினைஞர்களின் உற்பத்தி சக்தியையும் அதிகரிப்பது, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது, அந்தந்தப் பகுதியில் ஆள் பல வசதிகளைப் பூரணமான அளவுக்கு பயன்படுத்த முயற்சிப்பது, முதலியன மூலமும், வட்டார வளர்ச்சி நிறுவனங்கள், வசதிக் குறைவான மக்களுக்கு நன்மை செய்யலாம்.

35. சமுதாய நல வளர்ச்சி வேலைகளுக்கும், கிராம தான இயக்கத்துக்குமிடையே அதிகமான இணைப்பு ஏற்படுத்த சென்ற மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் இவைகளின் பொது லட்சியம் வெகுவாக வலியுறுத்தப்பட்டது. கிராம மக்களின் சமூக நலம், வேலை வசதி, ஜீவனோபாய வசதி ஆகியவைகளுக்கு மக்களே பொறுப்பு ஏற்பதென்பது அதில் உள்ளடங்கியதாகும். கிராமங்களில் வசதிக் குறைவான மக்களின் கண்ணோட்டத்தில் இது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

3. கூட்டுறவு.

36. தேசீய அபிவிருத்திக் கவுன்சில் 1958 நவம்பரில் கூட்டுறவுக் கொள்கை பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. கிராமத்தைத் தொடக்க

யூனிட்டாகக் கொண்டு கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். கிராம மட்டத்தில் சமூக, பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்கும் பொறுப்பு கிராமக் கூட்டுறவுச் சங்கங்களையும், கிராமப் பஞ்சாயத்துக்களையுமே சார வேண்டும் என்று அத்தீர்மானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தப் பொது முறையை அனுசரித்து, கூட்டுறவு வேலைத் திட்டங்களை திருத்தி அமைத்துக்கொள்ளுமாறும் இரண்டாவது திட்டத்தின் மீதம் இரண்டு ஆண்டுகளுக்கு புதிய திட்டங்கள் வகுக்குமாறும், மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மூன்றாவது திட்ட முடிவுக்குள் எல்லாக் கிராமக் குடும்பங்களும், கூட்டுறவு அமைப்புக்களின் கீழ் வரும்படியாக கூட்டுறவு நோக்க லட்சியம் வளர்ச்சி அடைய வேண்டும் என்றும் கவுன்சில் தெரிவித்திருந்தது.

37. தேசீய அபிவிருத்திக் கவுன்சில் தீர்மானத்தில் சொல்லப்பட்ட கொள்கைகளை அனுசரித்து, மூன்றாவது திட்டத்தில் வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

(1) மக்களுடைய முயற்சி மூலம், கிராம வாழ்வில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கமுடைய சமுதாய நல வளர்ச்சி வேலைத் திட்டத்தை அமுலாக்குவதில் கூட்டுறவுச் சங்கமும் பஞ்சாயத்துமே முக்கிய ஸ்தாபனங்களாக விளங்க வேண்டும்.

(2) கூட்டுறவு அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு, கிராம விவசாயத் திட்டம்தான் அஸ்திவாரம். இதற்கு முதலிடம் தரப்பட வேண்டும்.

(3) குறுகிய கால, நடுத்தர கால கடன்கள் வழங்குவது, வேளாண்மை மற்றும் இதர உற்பத்தித் தேவைப் பொருள்களை வழங்குவது, விவசாயப் பண்டங்களுக்கு மார்க்கெட் வசதி ஆகியனவே கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கிய அலுவல்களாகும். இந்த வேலைகளுடன் கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை வகுப்பதிலும் அமுலாக்குவதிலும் கூட்டுறவுச் சங்கம் உதவ வேண்டும். உறுப்பினர்கள் மேற்கொள்ள விரும்புகின்ற ஆலோசனை வேலைகள், சமூக நல வேலைகள் ஆகியவைகளையும் மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட காரியங்களுக்காக சில கிராமங்கள் அடங்கிய ஒரு பகுதிக்கு தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கலாம். உதாரணமாக தொழிற்சாலைத் தொழிலாளர்கள் போன்றோருக்கு தனி கூட்டுறவுச் சங்கம் அமைக்கலாம். ஒரு கிராமத்திற்குள்ளாக கூட குறிப்பிட்ட நடவடிக்கையினால் பயனடைவோர் சார்பில் தனிச் சங்கங்கள் அமைக்கலாம். உதாரணமாக கூட்டுறவு பண்ணை, குழாய்க்கிணறு, மண் வளப் பாதுகாப்பு வேலை ஆகியவைகளுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தலாம்.

(4) கிராமச் சமூகத்தைத் தொடக்க யூனிட்டாகக் கொண்டு, கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்படவேண்டும். கிராமங்கள் மிகச் சிறியனவாக

இருந்தால், சம்பந்தப்பட்ட எல்லாரின் சம்மதத்தின் பேரில், சுமார் 1,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களைச் ஒன்றாகச் சேர்த்து கிராமக் கூட்டுறவுச் சங்கத்தை அமைக்கலாம். ஒரு கிராமச் சங்கம் எந்த அளவுள்ள மக்கள் பரப்புக்குப் பணியாற்றலாம் என்பதில் வளைந்து கொடுக்கக்கூடிய தன்மை இருக்கவேண்டும். ஆனால் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான கொள்கைகளான சுயமாக முன்வருகை. நெருங்கிய தொடர்பு, சமூக ஒற்றுமை பரஸ்பர கடமை ஆகியவை நிலவுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

(5) கிராம உற்பத்தித் திட்டம் இருக்கும் இடத்தில் கடன் வழங்கும் முறை, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்துடன் நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்கவேண்டும். கிராம உற்பத்தித் திட்டத்தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு குடியானவரும் ரசாயன உர சப்ளை, பொறுக்கு விதைகள் முதலியன பெறவும், அவசியமான அளவு சாகுபடி செலவுகளுக்காகவும் கடன் பெறுவதற்கு வசதி இருக்கவேண்டும்.

(6) கடன் வசதி, மார்க்கெட் வசதியுடன் இணைக்கப்படவேண்டும். இதை யொட்டி கிராமச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். உபரி விவசாய பொருள்களை விற்பதில் விற்பனைச் சங்கங்களின் ஏஜண்டுகளாக அவை பணியாற்ற வேண்டும்.

(7) கூட்டுறவு ஒரு மக்கள் இயக்கமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், கிராம, வட்டார, மாவட்ட நிலைகளில் பயிற்சியளிக்க ஒரு விரிவான வேலைத் திட்டம் அவசியம். அதிகார சார்பற்றவர்களில் பலர், இந்த இயக்கத்தை பலப்படுத்துதற்கு முன்வரும்படியான சூழ்நிலைகளும் ஏற்பட வேண்டும். மேற்பார்வை, பயிற்சி, ஸ்தாபன அமைப்பு, வளர்ச்சி, ஊக்குவிப்பு ஆகியவைகளுக்காக வட்டார அளவில் அல்லது அதற்குச் சமமான நிலையில் மேற்பார்வைச் சங்கங்களை அமைக்கவேண்டும். இந்த மேற்பார்வைச் சங்கங்களைஉ றுப்பினர்களாகக்கொண்ட மாவட்டச் சம்மேளனங்களும் மாநில நிலையில் ஒரு சம்மேளனமும் அமைக்கப்படவேண்டும்.

(8) சிக்கனம், சேமிப்புப் பழக்கத்தை படியவைப்பது, கூட்டுறவு இயக்கத்தின் முக்கியமான நோக்கமாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் கடன் தேவைகளைப் பூர்த்திச்செய்யக்கூடிய விதத்தில் அச்சங்கங்கள் வேலைத் திட்டங்களை வகுத்துக் கொள்ளும்.

38. மேலே சொல்லப்பட்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்பு, மூன்றாவது திட்டத்துக்கான கூட்டுறவு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒரு அலுவல் குழுவும், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி போர்டின் கமிட்டி ஒன்றும் பரிசீலனை செய்தன. 1959 ஜூலையில் மாநிலங்களின் கூட்டுறவு

அமைச்சர்கள் மகாநாடு செய்த சிபார்சையொட்டி கூட்டுறவு கடன் வசதி கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. கடன் வரம்புகள், கடன் கொள்கைகள், கூட்டுறவு கடன் வசதி சொசைட்டிகளின் நடை முறை பழக்கங்கள், பிரதம கூட்டுறவு சங்கங்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கு தேவையான அம்சங்கள், கிராம சொசைட்டிகளில் அரசாங்கம் பங்கு மூலதனமிடுதல் ஆகியவை உள்பட, விவசாய கடன் வசதி விஸ்தரிப்பு சம்பந்தமான பல் வேறு அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக அக்கமிட்டி நியமிக்கப்பட்டது. அக் கமிட்டியின் அறிக்கை அண்மையில்தான் கைக்குக் கிடைத்தது. எனவே இந்தப் பகுதியில் இது வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சுருக்கமான தகவலும் மூன்றுவது திட்டத்துக்கு தற்காலிகமாகக் குறிப்பிடப் பட்டுள்ள, சில லட்சிய அளவுப் புள்ளிகளும் மட்டுமே தரப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்துக்கும் கூட்டுறவு வேலை அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் வகுக்கப்படும். மாவட்ட, வட்டார, திட்டங்களின் ஒரு பகுதியாக அவை வகுக்கப்படும். மாநிலங்களின் திட்டங்கள் பரிசீலிக்கப்படும்போது தான், அபிவிருத்தி வேலை திட்டம் பற்றிய முழு விவரமும் தெரியவரும். கூட்டுறவுப் பண்ணை விஷயமாகவும் அலுவல் குழுவின் அறிக்கை அண்மையில்தான் கிடைத்தது. அந்த அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. லட்சிய அளவுகள், மற்றும் சம்பந்தப்பட்ட இதர பிரச்னைகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு கடன் வசதி.

39. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியிருந்த மொத்தக் கடன் தொகை அளவு 1950–51-ல் ரூ. 23 கோடியாக இருந்தது. 1955–56-ல் இது ரூ. 49 கோடியாகவும், 1958–59-ல் ரூ. 125 கோடியாகவும் அதிகரித்தது ; 1960–61-ல் இத் தொகை மொத்தம் ரூ. 190 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1950-51 லிருந்து 1958–59 வரை உள்ள காலத்தில் தொடக்க நிலை விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் தொகை 1,05,000-லிருந்து 1,83,000 ஆக அதிகரித்தது. அவைகளின் உறுப்பினர்கள் தொகை 44 லட்சத்திலிருந்து ஒரு கோடி 20 லட்சமாக அதிகரித்தது. இரண்டாவது திட்ட கால முடிவில் சுமார் 2 லட்சம் துவக்க நிலை விவசாய சொசைட்டிகள் இருக்குமென்றும் அவற்றின் உறுப்பினர்கள் தொகை ஒரு கோடி எழுபது லட்சமாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. விவசாய மக்களில் சுமார் 33 சத விகிதத்தினரும், மொத்த கிராம ஜனத் தொகையில் 25 சத விகிதத்தினரும் பயனடையும்படியான நிலை அப்போது இருக்கும். முதல் இரண்டு திட்டங்களின் அபிவிருத்தி வேலைகளில் குறிப்பிடத்தக்க அம்சம், பல்வேறு மாநிலங்களிலும் முன்னேற்றம் ஒரே சீராக இல்லை என்பதேயாகும். குறிப்பாக கிழக்குப் பிராந்தியத்தை சேர்ந்த மாநிலங்களைப் பொருத்த வரையில் கூட்டுறவு இயக்கம் இன்னும் பலவீனமாகவே இருக்கிறது. பல மாநிலங்களில் ஆரம்ப நிலை கூட்டுறவு சொசைட்டிகளின் வெளி நிலுவைகள் (over dues) மிக அதிகமாய் இருக்கின்றன என்பதும் குறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

40. கூட்டுறவு அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அலுவல் குழு, மேற்கொண்டு பரிசீலனைக்கு அடிப்படையாக அமையக்கூடிய பூர்வாங்க யோசனைகளைத் தந்துள்ளது. அவற்றில் அலுவல் குழு, மூன்றாவது திட்ட முடிவில் கீழ்க்கண்ட லட்சிய அளவுகள் இருக்கும்படியாக குறிப்பிட்டுள்ளது.

1. துவக்க நிலை கிராம சொஸைட்டிகள் (சேவா கூட்டுறவுகள்.) .. .. .. 2·5 லட்சம்.

2. உறுப்பினர்கள் தொகை .. .. .. 4 கோடி.

3. (அ) கிராம மக்களில் அனுகூலமடைவோர் அளவு 55 சதம்
 (ஆ) விவசாயிகளில் அனுகூலமடைவோர் அளவு 74 சதம்

4. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடன்கள்—
 (அ) குறுகிய காலக் கடன்கள் .. .. ரூ. 400 கோடி.
 (ஆ) நடுத்தர கால கடன்கள் (வெளி நிலுவையில் உள்ளவை (Loans outstanding) .. ரூ. 160 கோடி
 (இ) நீண்ட கால கடன்கள் (Loans outstanding) .. .. ரூ. 115 கோடி.

5. சராசரி உறுப்பினர்கள் தொகை 160

6. உறுப்பினருக்கு தரப்பட்டுள்ள கடன் தொகை சராசரி அளவு (குறுகிய காலம், நடுத்தர காலம்) ரூ. 120.

7. சொஸைட்டியின் சராசரி பங்கு மூலதனம் .. ரூ. 4,800

8. சொஸைட்டியின் சராசரி சட்ட பூர்வ, இதர ரிசர்வுகள். .. .. ரூ. 1,600

9. துவக்கநிலை கிராம சொஸைட்டிகள் வைத்துக் கொள்ளும் மொத்த டிபாசிட்டுகள் .. ரூ. 30 கோடி.

41. மேலே குறிப்பிடப்பட்டுள்ள லட்சிய அளவுகள் இப்படி இருக்க வேண்டும் என்று காட்டுவதாகத்தான் (Illustrative) கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் ஒவ்வொரு பிரதேசமும், மூன்றாவது திட்ட முடிவுக்குள் எல்லா கிராம குடும்பங்களையும் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவருவதென்ற லட்சியத்தை முன் வைத்து அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிற்சில பகுதிகளில், ஏற்கனவே உள்ள சொஸைட்டிகள் பலவற்றிற்குப் புத்துயிரூட்டி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம், அந்தப் பகுதிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தினாலொழிய, இந்த லட்சிய அளவை அடைய முடியாமல் போகலாம் என்று உணரப்படுகின்றது. இந்திய அரசாங்கம், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, மாநில அரசாங்கங்கள் ஆகியவைகளுக் கிடையே ஆலோசனைக்குப் பின்பு, குறுகிய கால, நடுத்தர கால, நீண்ட கால கடன் வசதிகளுக்கான லட்சிய அளவுகளைத் திட்ட வட்டமாக நிர்ண

யிப்பது சாத்தியமாகும். இதற்கிடையில் அலுவல் குழு தெரிவித்துள்ள லட்சிய அளவுக் குறிப்புகள், ஸ்தல விவசாய திட்டங்களை வகுப்பதில் மாவட்ட, வட்டார அதிகாரிகளுக்கு உதவியாக இருக்கலாம்.

கூட்டுறவு விற்பனை வசதி.

42. இரண்டாவது திட்ட முடிவில் மொத்தம் 1,900 கூட்டுறவு விற்பனை சொசைட்டிகள் அமைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இவைகள் செய்துள்ள வியாபரத்தின் அளவு கொஞ்சமாகவே இருக்கின்றது. கூட்டுற விற்பனைச் சங்கங்களை நல்ல ஸ்திரமான அடிப்படையில் அமைப்பதும், கிராம சொசைட்டிகளுடன் அவைகளைத் திறம்பட இணைப்பதும், இவற்றின் வியாபார அளவை அதிகரிப்பதுமே மூன்றுவது திட்டத்தில் முதல் முக்கிய வேலையாக இருக்கும். இரண்டாவதாக இரண்டாம் திட்டத்தில் கூட்டுறவு விற்பனை வசதி ஏற்படுத்தப்படாத பிரதேசங்களில் விற்பனைச் சொசைட்டிகள் ஏற்படுத்தப்படும். மேற்கொண்டு புதிதாக 400 சொசைட்டிகளை ஏற்படுத்த வேண்டியிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனை வசதி அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் முன் கூட்டியே திட்டவட்டமான லட்சிய அளவுகளை நிர்ணயிப்பது சாத்தியமல்ல. உபரி பொருள்களை விற்பனை சொசைட்டிகள் மூலமாக விற்பதற்கு ஏற்ற துணை ஸ்தாபனங்களாக கிராம சொசைட்டிகள் விளங்குவதற்கான நிலைமைகள் உருவாக்கப்படுவதுதான் முக்கியம். உணவு தானியங்களில் அரசாங்க வாணிபத்திட்டம் 1959 ஏப்ரலில் அறிவிக்கப்பட்டது. விற்பனையாகும் உபரி உணவு தானியங்கள் பூராவும் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்பதே அத்திட்டத்தின் நோக்கம். கூட்டுறவுச் சங்கங்களின் தரமான சேவையினாலும், உறுதியான கடன் வசதிகளாலும் அடுத்த சிலஆண்டுகளில் கூட்டுறவுவிற்பனை வசதியில் பெரும் முன்னேற்றம் ஏற்படலாம். எனவே கடன் வசதி, விற்பனை வசதிகளை இணைத்தும் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தும், பண்டக கிடங்குகள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தியும் கூட்டுறவு விற்பனை நிறுவனங்களைப் பலப்படுத்தவேண்டியது அவசியமாகும்.

கூட்டுறவு பதன தொழிற்சாலைகள்.

43. கூட்டுறவு பதன தொழிலில், குறிப்பாக சர்க்கரை ஆலை விஷயத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. 1958 வரை 38 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இவைகளில் பல சொசைட்டிகள், ஸ்தாபன அமைப்பு, நிர்வாகம், நிதி என்கிற கஷ்டமான பிரச்னைகளைச் சமாளித்தாகவேண்டியிருக்கிறது. மூன்றுவது திட்டத்தில், பெரிய அளவில் செலவு பிடிக்கும் கூட்டுறவு தொழிற்சாலைகளை அமைப்பதைவிட, கொஞ்ச அளவு மூலதனம் தேவைப்படும் அமைப்புகளை ஏற்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கருதப்படுகிறது. 50 பஞ்சு ஜின்னிங் தொழிற்சாலைகள், 50 அரிசி மில்கள், 300 அரிசி ஹல்லர்கள், 20 சணல் பேலிங் தொழிற்சாலைகள், 20 எண்ணெய் ஆட்டும் தொழிற்சாலைகள், கடலை ஓடு உடைப்பதற்கான 50 தொழிற்சாலைகள், பழங்களை டின்களில் அடைக்கும்

130 தொழிற்சாலைகள், 5 மாவு மில்கள் ஆகியவைகளை ஏற்படுத்துவது என்ற அடிப்படையை வைத்து, மேற்கொண்டு பரிசீலனைகள் செய்யலாம் என்று கூட்டுறவு அபிவிருத்தி சம்பந்தமான அலுவல் குழு கூறியிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் 20 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஸ்தாபன ஏற்பாடு, நிதி வசதி ஆகியவைகளைப் பொறுத்து இதை மேற்கொண்டு பரிசீலனை செய்யவேண்டியிருக்கும். சில, பதன தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், கிராமக் கைத்தொழில் திட்டங்களுடன் அவைகளை இணைப்பது பற்றி கவனிக்கவேண்டியிருக்கிறது. பால் பண்ணை அபிவிருத்திகான தற்காலிக திட்டத்தில், 75 பால் பதன தொழிற்சாலைகளையும், 30 கிராம (Creameries) பாலடை தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூடுமான வரை இவை கூட்டுறவு முறையில் அமைக்கப்படும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

உபயோகிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

44. உணவு தானியங்கள், மற்றும் பல்வேறு பண்டங்கள் வினியோகத்தில், உபயோகிப்பாளர் கூட்டுறவு சொசைட்டிகள் பெருமளவில் பணியாற்றமுடியும். உபயோகிப்பாளர் கூட்டுறவு சொசைட்டிகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கருத்து அடிக்கடி ஆதரிக்கப்பட்டும் இத்துறையில் ஓரளவு முன்னேற்றமும் இருந்தும்கூட குறிப்பான தெளிவான வேலைத் திட்டங்கள் இதுவரை வகுக்கப்படவில்லை. கூட்டுறவு சம்பந்தமான அலுவல் குழு, 4,000 துவக்க நிலை ஸ்டோர்களுக்கும் 100 மொத்த வியாபார ஸ்டோர்களுக்கும் உதவியளிக்கவேண்டுமெனக் கூறியிருக்கிறது. புதிய துவக்க நிலை ஸ்டோர்கள் பெரிய நகரங்களிலும் பட்டிணங்களிலும் தொழிற்சாலைப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்படும். கிராம நிலையில் சேவா கூட்டுறவுச் சங்கங்களே, மற்ற பணிகளுடன் வினியோக வேலையையும் மேற்கொள்ளலாம்.

கூட்டுறவுப் பயிற்சி

45. மூன்றாவது திட்டத்தில் கூட்டுறவு இலாகா பணியாளர்களுக்கும், வட்டார, கிராம அளவில் அதிகார சார்பற்ற ஊழியர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக, கூட்டுறவு அபிவிருத்தி அலுவல் குழு பூர்வாங்க திட்டங்களை வகுத்துள்ளது. இவ்விஷயமாக மாநில அரசாங்கங்களைக் கலந்துகொண்டு குறிப்பான திட்டங்கள் உருவாக்கப்படும்.

கூட்டுறவுப் பண்ணை முறை

46. கிராமப் பொருளாதாரத்தைப் புனா நிர்மாணம் செய்வதில் கூட்டுறவுப் பண்ணை முறையின் பங்கு பற்றி முதல் திட்டதிலும் இரண்டாவது திட்டத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பண்ணை முறைக்கு பலமான அஸ்திவாரமாக அமையக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், சுமார் 10 ஆண்டுக் காலத்தில் விவசாய நிலங்களில் கணிசமான ஒரு பகுதி கூட்டுறவு முறையில் பயிரிடும் நிலைமை ஏற்பட

வேண்டும் என்றும் இரண்டாவது திட்டத்தில் கூறப்பட்டது. மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும் விவசாய உற்பத்தியைத் துரிதமாகப் பெருக்கியாக வேண்டியிருப்பதாலும், கூட்டுறவுப் பண்ணை அபிவிருத்தி சம்பந்தமான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்துவதும், இரண்டாவது திட்டத்தில் கூறப்பட்ட லட்சியத்தை அடைய முயற்சிப்பதும் அவசியம் ஆகும். சமுதாய நல இயக்கத்தின் மூலம் விவசாய அபிவிருத்தி முயற்சியில் கிடைக்கும் வெற்றி, மற்றும் கடன் வசதி, விற்பனை, வினியோகம், பதன்படுத்தல் ஆகியவைகளில் கூட்டுறவு முறையின் முன்னேற்றம் இவற்றை முக்கியமாகக் கொண்டே கூட்டுறவுப் பண்ணை முறை வளர்ச்சியடைய வேண்டும். அந்தந்தப் பகுதியில் உள்ள உண்மையான தலைவர்கள் கீழ் மக்கள் தம்மிச்சையாக வந்து சேருகின்ற பொதுஜன இயக்கமாக, கூட்டுறவுப் பண்ணை முறை வளர்ச்சியடைய வேண்டும். கிராம மட்டத்தில் சமுதாய நல வளர்ச்சி கூட்டுறவு வேலைகளின் விளைவாக, இயல்பாக ஏற்படும் வளர்ச்சியாகவும் கூட்டுறவுப் பண்ணை விளங்கவேண்டும். அப்படி இருந்தால்தான், கிராம முன்னேற்றத்துக்கு கூட்டுறவுப் பண்ணை முறையின் உதவி கணிசமானதாக இருக்கும். தேசீய அபிவிருத்திக் கவுன்சிலின் 1958 நவம்பர் தீர்மானம், இவ்வாறாக, ஆரம்ப நிலை கடன் சொஸைட்டி விஷயத்தில் அதன் அளவுப் பிரச்னைக்கும் மீறிய முக்கியத்துவமுடையதாகிறது. கடன் வசதி செய்வது, கூட்டுறவின் ஆரம்பமேயாகும். கடன் வசதியிலிருந்து கிராம வாழ்வின் வேறு பல நடவடிக்கைகளுக்குக் கூட்டுறவு விஸ்தரிக்கப்படவேண்டும். கூட்டுறவுப் பண்ணை முறை உள்பட, கிராம வாழ்வின் எல்லா அம்சங்களையும் தழுவும்படியாக அது விஸ்தரிக்கப்படவேண்டும். சமுதாய நல வளர்ச்சி முறையிலே பிரச்னையை அணுகவும், எல்லா மக்களின் நலனுக்காகவும் பொறுப்பேற்றுக்கொள்ள கிராம சமூகம் இசையவும் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டால் கூட்டுறவுப் பண்ணை முறையின் பிரதான பிரச்னைகள் ஸ்தாபன அமைப்பும், தொழில் நுட்பமும், பயிற்சி வசதியுமேயாகும். கூட்டுறவுப் பண்ணைகளின் உள் நிர்வாகப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண தீவிரமாக முயற்சிப்பதும், கூட்டுறவு நிதி ஸ்தாபனங்கள் போதுமான நிதி உதவி அளிப்பதும், ஆரம்ப கட்டங்களில் விவசாய இலாகா கூட்டுறவு இலாகா இதர ஸ்தாபனங்கள் கூட்டுறவுச் செயல் முறைப்பற்றி வழி காட்டுவதும் அவசியமாகும்.

47. கூட்டுறவுப் பண்ணை சம்பந்தமான அலுவல் குழுவின் அறிக்கை முன்பே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பல கூட்டுறவுப் பண்ணை சொஸைட்டிகளைச் சர்வே செய்து, அந்த சர்வேயின் அடிப்படையில் அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது. கூட்டுறவுப் பண்ணை சொஸைட்டிகளின் அமைப்பு, தன்மை, உதவி அளிக்கும் வகை, வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஸ்தாபனம் ஆகியவை குறித்து அறிக்கையில் சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன. சகஜமான வழியில், கூட்டுறவுப் பண்ணை முறை துரிதமாகப் பரவுவதற்கு வழிகாட்டும் முறையில் "முன்னோடி" திட்டங்களை மேற்கொள்ளலாம் என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது. இரண்டு முக்கியமான விஷயங்களை

இங்கு குறிப்பிடுவது அவசியம். முதலாவது, கூட்டுறவு விவசாய சொசைட்டிகளுக்கு சில விசேஷ பிரச்னைகள் இருக்கின்றன என்பதும், ஓரளவு உதவியும் ஆலோசனைகளும் அவற்றிற்குத் தேவை என்பதும் உண்மையே. என்றாலும் வெளி உதவியை மிதமீறி எதிர்பார்ப்பதும், சாதாரண கிராம அபிவிருத்திக்கு மாறுபட்ட ஒரு முறையாக அதைக் கருதுவதும் இந்த இயக்கத்தின் வளர்ச்சியைக் குன்றச் செய்துவிடும். இரண்டாவதாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெருவாரியான விவசாய மக்கள் எந்த சூழ்நிலையில் வாழ்ந்து வேலை செய்து வருகிறார்களோ, அந்த சூழ்நிலைகளில் நல்ல அனுபவம் பெறவேண்டும். அப்படி அனுபவம் பெறுவதில் எந்த அளவுக்கு வெற்றி ஏற்படுகிறது என்பதைப் பொறுத்தே கூட்டுறவு முறை விவசாயத்தின் வெற்றி அமையும். இந்த அம்சங்களையும், அலுவல் குழு, மாநில அரசாங்கங்கள் ஆகியவைகளின் கருத்துக்களையும் மனதில் கொண்டு, முடிவான திட்ட அறிக்கையில் கூட்டுறவு விவசாய அபிவிருத்திக்கான விரிவான வேலைத் திட்டங்கள் குறிப்பிடப்படும்.

4 கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, மீன்அளம்

48. மூன்றாவது திட்டத்தில் கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன் அளம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் பொதுப் படையான முறையில் வகுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் விரிவான வேலைத் திட்டங்களை வகுப்பதற்கு, இது ஒரு அடிப்படையாகப் பயன்படவேண்டும் என்பதே நோக்கம். மூன்றாவது திட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கு ரூ. 50 கோடியும், பால் பண்ணை அபிவிருத்திக்கு ரூ. 40 கோடியும், மீன் அள அபிவிருத்திக்கு ரூ. 35 கோடியும் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் இவைகளில் எதிர்பார்க்கப்படும் சுமார் மொத்தச் செலவு முறையே ரூ. 26 கோடியும், ரூ. 17 கோடியும், ரூ. 9 கோடியும் ஆகும்.

கால்நடை வளர்ப்பு

49. நல்ல முறையில் கால்நடைகளை வளர்ப்பதென்பது, திறம்பட்ட விவசாய முறையின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். கால் நடைகளின் தரத்தை உயர்த்துவது, ஊட்டச் சத்துள்ள தீவனம், கால்நடை நோய்த் தடுப்பு ஆகிய நடவடிக்கைகள், கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடங்கியவை ஆகும். அனுகூலமான நிலைமைகள் இருந்தாலும்கூட, இந்தத் திட்டங்களினால் பலன் காண்பதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படும். இந்தியாவில் ஏராளமான அளவில் கிழட்டுக் கால் நடைகளும் பயனற்ற கால் நடைகளும் இருந்து வருவது விசேஷ சங்கடங்களை ஏற்படுத்துகின்றது.

50. கேந்திர கிராமங்களில் முனைப்பான கால்நடை அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடைகளின் தரத்தை உயர்த்துவது சம்பந்தமான முக்கிய வேலை அங்கு நடைபெறுகின்றது. தரங்குன்றிய திறனற்ற கால்நடைகள் பெருகுவதைத் தடுப்பதற்காக, வளர்ச்சி குன்றிய காளைகளைக் காயடிக்கும் வேலையை விரிவான அளவில் மேற்கொள்வது கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் ஒன்றாகச் சேர்க்கப்

பட்டுள்ளது. உள்ளூர்கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, ''ஜாதிப்'' பொலி காளைகளைக் கொண்டு இயற்கை முறை கருத்தரிப்புக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள் அமைப்பதும் கேந்திர கிராமப் பகுதியிலே முக்கியமான ஒரு வேலைத் திட்டமாகும். கன்றுகளை வளர்த்தல், விரிவான அளவில் கால் நடை வைத்திய வசதிகள் முதலிய நடவடிக்கைகளும் இந்த வேலைத் திட்டத்தில் உள்ளடங்கும்.

முதல் திட்டத்தில் 146 கேந்திர கிராம வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றும் எருமைகள் உள்பட சுமார் 2,000 கால்நடைகளுக்கு உதவியளிக்கக்கூடியவை. இரண்டாவது திட்டத்தில், ஒவ்வொன்றும் சுமார் 5,000 கால்நடைகளுக்கு உதவக்கூடியதான 150 கேந்திர கிராம வட்டாரங்கள் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றுவது திட்டத்தில், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட 50 நிலையங்கள், ஒவ்வொன்றும் தலா 10,000 கால்நடைகளுக்கு சேவை புரியக்கூடியவையாக விஸ்தரிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் புதிதாக 35 கேந்திர கிராம வட்டாரங்கள் ஏற்படுத்தப்படும். இரண்டாவது திட்ட முடிவில் 371 செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள் இருக்கும். விந்து சேகரிப்பு, பாதுகாப்பு, அதைப் பயன்படுத்துவது ஆகிய வேலைகளுக்காக 50 மத்திய நிலையங்களை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

51. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலால் வகுக்கப்பட்டதும், மத்திய மாநில அரசாங்கங்களால் ஏற்கப்பட்டதுமான, கால்நடை தர அபிவிருத்திக் கொள்கை, இரண்டாவது திட்டத்தில் வெளியிடப்பட்டது. வியக்தமான உழைப்பு ஜாதிகள் விஷயத்தில், அவைகளின் வேலைத்தரம் பாதிக்காமல், பால் கறக்கும் சக்தியை கூடுமான அளவு அதிகரிக்கவேண்டும் என்பதே நோக்கம். இதர கால் நடைகளைப் பொறுத்த வரையில், உயர் ஜாதி இனங்களுடன் சேர்த்து தரம் உயர்த்தி அவைகளின் கறவைச் சக்தியை அதிகப்பட்ச அளவுக்கு உயர்த்தவேண்டும் என்பதே நோக்கமாகும். இவ்வாறாக கால்நடை தர அபிவிருத்திக் கொள்கை "இரட்டைப் பயனுள்ள" கால்நடை இனங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்ய உதவும். அந்த இனங்கள் விவசாயத்துக்கு வேண்டிய நல்ல தரமான காளைகளையும் அதே சமயத்தில் நல்ல கறவை மாடுகளையும் தரக்கூடியவையாக இருக்கும்.

52. இப்போதுள்ள நிலைமையில் கால்நடைகளுக்கு சீரான தீவனங்கள் போதுமான அளவில் கிடைக்கும்படிச் செய்வதில் உள்ள கஷ்டம் எப்போதுமே உணரப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் முதல் இரண்டு திட்டங்களில் இவ்விஷயமாக காரிய சாத்தியமான நடவடிக்கை ஏதும் எடுக்க முடியவில்லை. மூன்றுவது திட்டத்தில் கால்நடைகளுக்கு போஷணைத் தீவனம் சம்பந்தமாக 30 செயல்முறை காட்டும் பண்ணைகளையும், சுமார் 1,200 கிராம செய்முறை காட்டும் யூனிட்டுகளையும், 5 ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

53. ஒவ்வொரு பிரதேசத்திலும் தகுந்த மேய்ச்சல் வசதிகளைச் செய்யவும், மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் அவசியம்

என்பது வெகு காலமாகவே உணரப்பட்டிருக்கிறது. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில் மேய்ச்சல் தரை சர்வே ஒன்றை செய்து முடித்திருக் கிறது. புல் விதைகளைச் சேகரிப்பதற்காக, சில மாநிலங்களில் சொற்ப அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்றாவது திட்ட காலத் தில் மலைப்பிரதேசங்களில் மேய்ச்சல் தரைகளை அபிவிருத்தி செய்வதற் காகவும், கிராமப் பொது நிலங்களில் மேய்ச்சல் தரை அபிவிருத்திக்காகவும் கலப்பு பண்ணை முறையை பிரபலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான திட்டங்கள், மாநில அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து வகுக்கப்படும்.

54. இரண்டாவது திட்ட முடிவில் மொத்தம் சுமார் 4,000 கால்நடை வைத்திய ஆஸ்பத்திரிகள், மருந்தகங்கள் இருக்கலாம். மூன்றாவது திட் டத்தில் எல்லா அபிவிருத்தி வட்டாரங்களும் குறைந்தபட்சம் ஒரு கால்நடை வைத்திய ஆஸ்பத்திரியை அல்லது மருந்தகத்தைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் கிராமப் பகுதிகளில் "இயங்கும் ஆஸ்பத்திரிகளுக்கும்" (மோட்டார் ஆஸ்பத்திரி) நகரப்புறங்களில் கால்நடை வைத்திய ஆஸ்பத்திரிகளுக்கும் வகை செய்யப்படும்.

55. கோமாரி நோய் ஒழிப்புக்காக முதன் முதலில் 1954-ல் பரீட்சார்த்த முறையில் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அத்திட்டம் இப்பொழுது பெருமள வுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட முடிவில் மாடுகளும் எருமைகளுமாக 890 லட்சம் கால்நடைகள், நோய் தாக்காவண்ணம் பாது காப்பு பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீதம் 370 லட்சம் கால்நடைகளுக்கு மூன்றாவது திட்டத்தில் நோய்த் தடுப்பு மருந்து ஊசி குத்தப்படும். இதர கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான வேலைகளும் மூன்றாவது திட்டத்தில் அதிகரிக்கப்படும்.

ஆடுகளும் கம்பளி அபிவிருத்தியும்

56. மாடுகளுக்கு அடுத்தபடியாக ஆடுகள்தான் நமது நாட்டின் முக்கிய மான கால்நடைச் செல்வம். தற்போது மொத்த கம்பளி உற்பத்தி ஆண் டுக்கு சுமார் 720 லட்சம் ராத்தல் ஆகும். இது பெரும்பாலும் விரிப்புகள் ரக கம்பளமாகும். நாட்டின் கம்பளி உற்பத்தியில் கிட்டத்தட்ட 50 சத விகிதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே சமயத்தில் சுமார் 230 லட்சம் ராத்தல் ஆடைகளுக்கான கம்பளம் இறக்குமதி செய்யப்படுகிறது. கம்பளி உற்பத்தியின் அளவையும், கம்பளத்தின் தரத்தையும் அபிவிருத்தி செய் தாக வேண்டியிருக்கிறது. இரண்டாவது திட்ட முடிவில் 4 ஆடு வளர்ப்புப் பண்ணைகளும் 380 விஸ்தரிப்பு நிலையங்களும் இருக்கும். இந்தப் பண்ணை களில், வெளி நாட்டு கடாக்களைக்கொண்டு இனக்கலப்பு மூலமும், உள் நாட்டின் உயர் ஜாதிக் கடாக்களைக் கொண்டும் சிறந்த தரமான செம்மறிக் கடாக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உள்ளூர் ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக, இந்த சிறந்த தர கடாக்கள், இடையர்களுக்கு வழங் கப்படுகின்றன. விஸ்தரிப்பு நிலையப் பகுதிகளில் 2,000 லிருந்து 3,000 வரை ஆடுகள் உள்ள கிராமத் தொகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, ஆட்டு

மந்தைகளின் சொந்தக்காரர்களுக்கு நாட்டு வகையைச் சேர்ந்த, அல்லது இறக்குமதி செய்யப்பட்ட, உயர்தர கடாக்கள் வழங்கப்படுகின்றன. பெருமளவில் உயர்தர கடாக்களை உற்பத்தி செய்யும் நிலையங்களாக இவை ஆக வேண்டும் என்பதே இப்பணியின் நோக்கமாகும். இந்த நிலையங்களில் ரோமம் கத்தரித்தல், தரம் பிரித்தல், மற்றும் இதர பணிகளில் நவீன முறைகள் செய்முறையில் காட்டப்படுகின்றன. மூன்றாவது திட்டத்தில் புதிதாக 6 ஆடு தர அபிவிருத்தி பண்ணைகளும் 4,000 புதிய விஸ்தரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்படும். இந்த நிலையங்கள் ஒவ்வொன்றும் 10,000 லிருந்து 15,000 ஆடுகள் வரை கவனித்துக்கொள்ளக்கூடியவையாக இருக்கும்.

57. விற்பனையில் அபிவிருத்தி காண வேண்டுமானால், ஆடுகளின் ரோமத்தைக் கத்தரிக்கும்போதே தரம் பிரித்தலும் அத்தியாவசியமாகும். தற்சமயம் சிறந்த கம்பள ரோம வகைகள், மட்டமான ரகங்களுடன் கலந்து செல்லுகின்றன. எனவே மூன்றாவது திட்டத்தில், உற்பத்தியாளர் கூட்டுறவு மூலம் நடத்தப்படுகின்ற சுமார் 300 கம்பள தரவாரி பிரிவினை, விற்பனை நிலையங்களை ஏற்படுத்தவேண்டும் என்று தற்காலிகமாக திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையங்களில் ரோமம் கத்தரித்தல், தரம் பிரித்தல், பேல் கட்டுக் கட்டுதல், இருப்பில் வைத்தல் ஆகியவைகளுக்கு வசதிகள் செய்யப்படும். மூன்றாவது திட்ட முடிவில் கம்பள உற்பத்தி சுமார் 9 கோடி ராத்தல்களாக அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோழி வளர்ப்பு

58. கிராம மக்களில் பெருவாரியானவர்களுக்கு, கோழி வளர்ப்பு, ஒரு பயனுள்ள துணைத் தொழிலாக விளங்குகின்றது. இரண்டாவது திட்ட வேலை நிரலின்படி 1960-61-ல் 5 பிராந்திய கோழிப் பண்ணைகளும் 300 கோழி விஸ்தரிப்பு—அபிவிருத்தி நிலையங்களும் இருக்கும். மூன்றாவது திட்டத்தில் 2 பிராந்திய கோழிப் பண்ணைகளை விஸ்தரிக்கவும், 2 வாத்து வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 100 கோழி விஸ்தரிப்பு நிலையங்களை மாவட்டப் பண்ணைகளாக விரிவாக்கவும் 10 சேகரிப்பு விற்பனை யூனிட்டுகளை அமைக்கவும் 60 தீவிர கோழி அபிவிருத்தி வட்டாரங்களை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக கோழி ஒன்றுக்கு சராசரி முட்டை உற்பத்தி 60 லிருந்து 70 ஆக அதிகரிப்பதும் நாட்டுக்கோழி வகைகளில் சுமார் நான்கில் ஒரு பங்கை தரம் உயர்த்துவதும் சாத்தியமாகலாம்.

பால் பண்ணையும் பால் வழங்கலும்

59. கால்நடை வளர்ப்பு வேலையையும், பால் பண்ணைத் திட்டத்தையும் சரியான முறையில் இணைத்து ஒருமுகப்படுத்துவதின் அவசியம் பொதுப்படையாக உணரப்பட்டுள்ளது. கிராமங்களின் பால் உற்பத்திக்கும், நகரங்களின் பால் விற்பனைக்குமிடையே இணைப்புண்டாக்கி அந்த அடிப்படையில் பால் பண்ணைத் தொழில் அமைக்கப்படுமானால், "இரட்டை காரியங்களுக்காக" பயன்படும் கால்நடை ரகங்கள் உருவாவதற்கு மிகவும் உதவியாக

இருக்கும். கிராமப் பகுதிகளில் பால் உற்பத்தி, சேகரிப்பு வேலைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும். பால் பதனப்படுத்துவது, பால் விற்பனை ஆகிய வேலைகளும் சாத்தியமான இடங்களிலெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே நடத்தப்படும். இந்த முறையின் மூலம், பால் வியாபாரத்தில் தற்போதுள்ள திருப்தியற்ற முறை மாறும். விஞ்ஞான ரீதியில் பால் பதனப்படுத்துவது, பாலைச் சுத்தமான முறையில் வைத் திருப்பது, திறமையான விற்பனை, பால் அதன் உப பொருள்கள் ஆகிய வைகளை இன்னும் நல்ல முறையில் பயன்படுத்துவது ஆகிய திருந்திய முறைகள் ஏற்படும். கால்நடை வளர்ப்பையும், பால் சப்ளையையும் இணைப்ப தால் விவசாயம் பொருளாதாரம் பலப்படவும், நகரப்புற மக்களுக்கு சுத்தமான பால் கிடைக்கவும் வழி ஏற்படும்.

60. நவீன பால் பதன யந்திரங்களை 36 நகரங்களில் அமைப்பதற்கு இரண்டாவது திட்டத்தில் வசதி செய்யப்பட்டிருந்தது. வருங்காலத்தில் அவைகளை விரிவாக்கவும் வசதி உண்டு. கல்கத்தா, பம்பாய், டில்லி, சென்னை, ஆமதாபாத் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள பால் பதன யந்திரங்கள் இந்த ஏற்பாட்டில் உள்ளடங்கியவை. இந்த நகரங்களுக்காக கிராமப் புறங்களில் பால் உற்பத்தி துவக்க நிலை கூட்டுறவுச் சொசைட்டிகள் அமைக்கப்படுகின்றன. பால் பதன நிலையங்களுக்கான பால், அங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வரவேண்டும். பால் செலவாகக்கூடிய நகரப்புற பகுதிகளிலிருந்து தொலை தூரத்துக்கப்பால் உள்ள பகுதிகளின் உபரிப் பாலை பயன்படுத்துவதற்காக கிராமிய கிரீம் உற்பத்தி நிலையங்கள் போன்றவை களை அமைக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட முடிவில் மூன்று கிராமிய கிரீம் நிலையங்களும் இரண்டு பால் பொருள்கள் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

61. லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களுக் காகவும், புதிய தொழில் நகரங்களுக்காகவும் மூன்றாவது திட்டத்தில் சுமார் 75 பால் சப்ளைத் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக் கிறது. முப்பது கிராமிய கிரீம் நிலையங்களையும் 8 பால் பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த வேண்டும் என்பதும் உத்தேசம். பால் பண்ணைக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காக யந்திர தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. அந்த யந்திர தொழிற்சாலையில், நாட்டில் இதுவரை உற்பத்தி செய்யப்படாத கருவி வகைகளும் தயாரிக்கப்படும். நான்கு, கால் நடைத் தீவன கலவைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுபற்றியும் ஆலோசிக்கப்படுகிறது. சில குறிப்பிட்ட பால் உற்பத்திப் பிரதேசங்களில் பால் உற்பத்தியை அதிகரிப் பதற்காக, கால் நடை தர அபிவிருத்தி முறை, தீவனம், நோய்த் தடுப்பு ஆகியவைகளில் தொழில் நுட்ப ஆலோசனைகள் கூறவும் ஏற்பாடு செய்யப்படும்.

மீன் வளம்

62. முதல் திட்ட முடிவில் சுமார் 10 லட்சம் மெட்ரிக் டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது. 1960–61-ல் இந்த உற்பத்தி 14 லட்சம் மெட்ரிக்

டன்னுகவும், 1965–66-ல் 18 லட்சம் மெட்ரிக் டன்னுகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றுவது திட்டத்தில் மீன் உற்பத்தி அதிகரிப்பில் சுமார் மூன்றில் இரண்டு பாகம், கடல் மீன் வளத்தைச் சேர்ந்ததாக இருக்கும்.

63. மீன்வள அபிவிருத்தி வேலைத் திட்டம் இரண்டு வகைப்பட்டது. ஒன்று கடல் மீன் வளம்; மற்றொன்று உள் நாட்டில் மீன் பிடிப்பு. யந்திரப்படகுகளை அமைப்பததற்காகவும், பல்வேறு கரைப்பகுதிகளுக்கு ஏற்றபடி, மீன் பிடி யந்திரப் படகுகள் அமைப்பை அபிவிருத்தி செய்வதற்காகவும், முதல் திட்ட காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. முதல் திட்ட முடிவில் 650 படகுகளுக்கு யந்திரங்கள் அமைக்கப் பட்டன. இதில் பெரும் பகுதி வேலை பம்பாயில் நடைபெற்றது. பம்பாய், கேரளம், மைசூர், சென்னை ஆகிய மாநிலங்களில் மீன் பிடி யந்திரப் படகுகள் அமைப்புத் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. ஆந்திரப் பிரதேசம், ஒரிஸா ஆகியவைகளிலும் யந்திரப் படகுகள் அமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது திட்டம் தொடங்கியதிலிருந்து சுமார் 850 படகுகளுக்கு யந்திரங்கள் பூட்டப் பட்டுள்ளன. யந்திரப்படகுகளைப் பயன்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் பயிற்சியளிப்பதற்காக, பல்வேறு மாநிலங்களிலுமாக 9 நிலையங்கள் உள்ளன. வாணிப ரீதியில் லாபகரமான முறையில் மீன் பிடிக்க உதவக் கூடிய பகுதிகளைக் கண்டறிய, பம்பாயில் உள்ள ஆழ் கடல் மீன் பிடிப்பு நிலையம் சர்வே நடத்தி வருகின்றது. அந்த சர்வேக்களின் விளைவாக, வர்த்தக முறையில் மீன் பிடி தொழில் நடத்துவது சாத்தியமாகின்றது.

64. மூன்றுவது திட்டத்தில், மீன் பிடி யந்திரப் படகுகளைக் கட்டும் திட்டம் விரிவாக்கப்பட்டு, மொத்தம் சுமார் 4,000 படகுகள் கட்டப்படும். புதிய மீன் செறிந்த பகுதிகளைக் கண்டறிவதிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், தனிப்பட்ட மீன் பிடி கம்பெனிகள் மூலமும், கடல் மீன்களைப் பிடிக்கச் செய்வதிலும் விசேஷ கவனம் செலுத்தப்படும். மீன் துறைகள், படகு நிறுத்துமிடங்கள் ஆகியவைகளை அபிவிருத்தி செய்யவும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும். மீன்களை நீண்ட தூரத்துக்கு அனுப்புவது சம்பந்தமாக குளிர்ப்பதன ரயில் பெட்டிகள் இன்சுலேட்டட் டிரக்குகள் ஆகியவைகளுக்கு வசதி செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

65. உள்நாட்டு மீன் அளங்களைப் பொறுத்த வரை சுமார் 3 லட்சம் ஏக்கர் பரப்பு உள்நாட்டு நீர் நிலைகள் சர்வே செய்யப்பட்டுள்ளன. சுமார் 13,000 ஏக்கர் பரப்பு, மீன் வளர்ப்புக்காக மீட்கப்பட்டுள்ளது. 1958–59 வரை 6 லட்சம் ஏக்கர் பரப்பில் வளர்ப்புக்கு மீன்கள் விடப்பட்டன. உள் நாட்டு மீன் அளங்கள் நிர்வாகம் சம்பந்தமாக பயிற்சிப் பிரிவும் ஏற் படுத்தப்பட்டுள்ளது. மூன்றுவது திட்டத்தில் மேற்கொண்டு சுமார் 3 லட்சம் ஏக்கர் பரப்பில் சர்வே நடத்தப்படும்; 6,500 ஏக்கர் பரப்பு, மீன் வளர்ப்புக்கு மீட்கப்படும். சுமார் 2 லட்சம் ஏக்கரில் வளர்ப்புக்கு மீன் விடப்படும்.

5 காடுகளும் மண்வளப் பாதுகாப்பும்

காடுகள்

66. நீண்ட கால அடிப்படையில் காடுகள் அபிவிருத்திக்கு வழி செய்வதும், நவீன முறைகளைக் கையாண்டு வெட்டு மர உற்பத்தியை அதிகரிப்பதும் அரசாங்கத்தின் வனத்துறைக் கொள்கையாகும். காடுகளில் போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்வது, வெட்டு மரங்களின் பாதுகாப்பு, பதன முறைகளை அதிகரிப்பது ஆகியவையும் அரசாங்கத் திட்டமாகும், புதிதாக வனங்கள் வளர்ப்பது, சர்வே செய்வது வன எல்லைகளைக் குறிப்பிடுவது, சீரழிந்த காடுகளைப் புனரமைப்பது, வனங்களில் பாதை வசதிகளை அமைப்பது, அதிகரிப்பது முதலிய வேலைத் திட்டங்கள் இரண்டாவது திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. மரங்களை வெட்டுவதிலும் வெட்டு மரங்களைப் பண்படுத்துவதில் திருந்திய முறைகளைக் கையாளுவதென்பதும் திட்டத்தின் ஒரு அம்சமாக இருந்தது.

67. ஐம்பதாயிரம் ஏக்கரில் தீக்குச்சித் தொழிலுக்கான மரங்களை வளர்க்கவும், 2 லட்சம் ஏக்கரில் கைத்தொழில்களுக்குத் தேவையான மரங்களை வளர்க்கவும் இரண்டாவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டது. இந்த லட்சிய அளவுகள் அநேகமாய் பூர்த்தி செய்யப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்பு, மரங்களை மிக அதிகமாக வெட்டியதாலும், தனியார் காடுகள் சரிவர பராமரிக்கப்படாமையினாலும் பெரும் நிலப்பரப்புகள் சீரழிந்த நிலையில் கிடக்கின்றன. அவைகளைப் புனரமைப்பு செய்தாக வேண்டும். இரண்டாவது திட்ட காலத்தில் அத்தகைய நிலங்கள் சுமார் 4 லட்சம் ஏக்கரில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இருபத்தோராயிரம் சதுர மைல் பரப்பில் சர்வே, எல்லை நிர்ணய வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரயில் பாதைகள், கால்வாய்கள், சாலைகள் ஓரத்தில் மரங்கள் நடும் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகின்றது. இரண்டாவது திட்ட முடிவில் 5,000 மைலுக்குமேற்பட்ட காட்டுச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கும். பாரம்பர்ய முறைகளினால் சேதாரங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பஞ்சாப், ஹிமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் ஆகியவைகளில் மரம் வெட்டுவதில் நவீன முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

68. விறகு பற்றுக்குறையை ஓரளவு தீர்ப்பதற்காக கிராமக் காடுகளை உண்டாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட காலத்தில் இந்த ஏற்பாட்டின் கீழ் சுமார் 20 லட்சம் ஏக்கர் பரப்பில் மிகத் துரிதமாக வளரும் மர வகைகள் வளர்க்கப்படும். கிராமங்களில் ஊர்பொது நிலங்களில், மக்களின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். அரசாங்கம் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் செடிகள், நாற்றுகளையும் கொடுத்துதவும். கிராம வாசிகளுக்கு மாற்று எரிபொருள் வசதியை இப்படி ஏற்படுத்துவதின் மூலம், சாணத்தை உரமாகப் பயன்படுத்துவதற்காக, சேமித்து வைக்க முடியும்.

69. மூன்றாவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள இதர வேலைத் திட்டங்களாவன : உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீரம், ஹிமா

சல் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகியவைகளில் 50,000 ஏக்கர் பரப்பில் 'சால்' மரங்களும் ஊசி இலை வகை (தேவதாரு) மரங்களும் வளர்க்கப்படும். மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், பீஹார் ஆகியவைகளில் 2 லட்சம் ஏக்கரில் தேக்கு சாகுபடி செய்யப்படும். பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், சென்னை, கேரளம், மற்றும் சில மாநிலங்களில் 4,50,000 ஏக்கர் பரப்பில் பலஜாதி மரங்கள்—முக்கியமாக துரிதமாக வளரும் மரங்கள் வளர்க்கப்படும். கால்வாய், சாலைகள், ரயில்பாதைகள் ஆகியவைகளின் ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம் தொடர்ந்து அனுசரிக்கப்படும். பத்து லட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள சீரழிந்த காடுகளைப் புனரமைப்பு செய்யும் வேலை மேற்கொள்ளப்படும். இத்துடன் 33,000 சதுர மைல் காட்டுப் பிரதேசத்தில், காடுகளை ஒருங்கிணைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

70. மூன்றுவது திட்டத்தில் 15,000 மைல் நீள காட்டுச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாலைகள், மாநிலத்தின் பொது சாலை அபிவிருத்தி திட்டங்களுடன் இணைக்கப்படும்.

71. மரங்களை வெட்டுவதில் திருந்திய முறைகளைக் கையாளும் வேலைத் திட்டத்துக்கு மூன்றுவது திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வன ஆராய்ச்சி நிறுவனம் பல புதிய கருவிகளை உருவாக்கியிருக்கிறது. அந்தக் கருவிகள் சோதிக்கப்பட்டு, நன்கு பயன்படக்கூடியவை என்பது நிருபணமாகியிருக்கிறது. இந்தப் புதிய கருவிகளைப் பயன்படுத்துவதற்கு, சில ஊழியர்களுக்கு ஏற்கனவே பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருவிகளை பரவலாகப் பயன்படுத்தச் செய்வதற்காக, அவைகளை அந்தப் பிரதேசத்திலேயே உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது.

72. இந்தியாவின் காடுகளில் பல்வேறு வகையான இரண்டாந்தர மரங்கள் இருக்கின்றன. இவைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தி, உரிய முறையில் பாதுகாத்து நீடித்து உழைக்கக்கூடியதாகச் செய்தால், கைத்தொழில்களுக்கான மரங்களாக இவை பயன்படும். எனவேதான் திட்டத்தில் 6 மரப் பண்பாடு, பாதுகாப்பு தொழிற்சாலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாந்தர மரங்களை தரமாகப் பண்படுத்தவும் அவைகளைச் சிறந்த முறையில் உபயோகிக்கவும், அத்தொழிற்சாலைகளுடன், பல மோட்டார் யூனிட்டுகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

73. கைத்தொழில், கட்டுமான வேலைகள் ஆகியவைகளுக்கு உருட்டு மரம், மூங்கில் போன்றவைகளின் தேவை அதிகரித்து வருகிறது. வீட்டு உபயோகத்துக்கு விறகின் தேவையும் அதிகரித்துக்கொண்டு போகிறது. மரங்களைக் குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக, தகுந்த பரிகார நடவடிக்கைகளை மேற்கொண்டாலொழிய அடுத்த 15 ஆண்டுகளில் எல்லாவிதமான மரங்களின் கிடைக்கும்

அளவு, தேவையின் அளவை விட கணிசமாகக் குறைந்து விடும் என்பது தெரியவந்தது. முதலாவது இரண்டாவது திட்டங்களில் காடுகள் அபி விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் கிடைக்கும் நன்மைகள், பல வருஷங்கள் கழித்துத்தான் அறியவரும். அத்தியாவசிய தேவைகளுக்கு உருட்டு மரங்கள் வசதியை அதிகரிப்பதற்காக சிற்சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மரங்களை வெட்டுவதில் நவீன முறைகள், மரக்கழிவுகளைப் பயன்படுத்துவதற்கான யந்திர சாதனங்கள், கூடுமான வரை கெட்டி மரங்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்கள் உபயோகித்தல், முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். விறகுக்கான மரங்களுக்காக, கிராமக் காடுகள் அமைப்பு, காடுகள் விஸ்தரிப்பு வேலைகள் தீவிரமாக்கப்படும். மூங்கில் அபிவிருத்தியில் விசேஷ கவனம் செலுத்தப்படும்.

74. மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது திட்டங்களில் காடுகள் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை வகுப்பதில் பொருளாதார விஷயம் தான் முக்கிய அம்சமாக இருக்கும். முனைப்பான காடு அபிவிருத்தித் திட்டம் மூலம், வருஷத்துக்கு வருஷம் உற்பத்தி அதிகரித்து வரும்படிச் செய்வதற்கு முயற்சி செய்யப்படும். துரிதமாக வளரும் மர வகைகளைப் பயிரிடுவது, நல்லபடியாக விளைந்து வரும் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பது, நவீன முறைகளைப் பயன்படுத்துவது, காடுகளில் போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்வது, அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் மேற்கொள்ளபபடும் கைத்தொழில் அபிவிருத்திக்கான குறிப்பான திட்டங்களுடன் வனத்துறை அபிவிருத்தியை இணைப்பது முதலியன மூலம் வனப்பொருள் உற்பத்தி அதிகரிப்புக்கு வகை செய்யப்படும்.

மண் வளப் பாதுகாப்பு.

75. **விவசாய நிலங்கள்.**—இந்தியாவில் பாசன வசதிகள் எவ்வளவுதான் அதிகரித்த போதிலும், சுமார் 14 கோடியிலிருந்து 15 கோடி ஏக்கர் வரையுள்ள பெரும் நிலப்பரப்பில், சம உயரக் கரை கட்டல், மண்வளப்பாதுகாப்பு, புன்செய் சாகுபடி முறை முதலியன மூலம்தான் உற்பத்தியை அதிகரிக்க முடியும்படியான நிலைமை இருக்கும். மண் வளப்பாதுகாப்புத் திட்டத்தை "மக்கள் திட்டமாக" மேற்கொள்ளவேண்டும் என்றும், முக்கியமாக குடியானவர்களின் ஒத்துழைப்பைக் கொண்டே அத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் இரண்டாவது திட்டத்தில் வலியிறுத்தப்பட்டது. புன்செய் சாகுபடி முறைகளை செய்முறையில் காட்ட அண்மையில் 40 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாவது திட்டத்தில் மேற்கொள்ளபபட்ட மண்வளப்பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக சுமார் 20 லட்சம் ஏக்கர் பயனடைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது திட்டத்தில், சம உயரக் கரை கட்டுவதுடன் கூடிய மண்வளப் பாதுகாப்பு வேலையை 130 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. நான்கு கோடி ஏக்கரில் புன்செய் சாகுபடி முறைகளை விஸ்தரிக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை எல்லாம்

தற்காலிக லட்சிய அளவுகளே. மாநிலங்கள் தங்கள் திட்டங்களில் ஒரு பகுதியாக இவற்றுக்கான விரிவான வேலைத் திட்டங்களை வகுக்கும். செய் முறைகள் காட்டும் வேலைத் திட்டங்களும் விரிவாக்கப்படும்.

76. **ஆற்றுப் பள்ளத்தாக்குகள்.**—கீழ்க்கண்ட காரியங்களுக்காக, ஆறு களின் நீர்ப்பிடிப் பரப்பில் காடுகளை வளர்ப்பதும், நிலங்களை அது போன்ற முறைகளில் பயன்படுத்துவதும் அவசியமாகும் :—

(அ) பாசனம், மின்சாரம், வெள்ளக்கட்டுப்பாடு முதலிய காரியங் களுக்காகக் கட்டப்பட்டனவும், பெருமளவில் பணம் செலவிடப் பட்டனவுமான நீர்த்தேக்கங்களுக்கு நீடித்த வாழுமை அளித்தல்,

(ஆ) சிறிய பாசன ஏரிகள் திறம்பட இயங்குதல்,

(இ) வெள்ளங்களைக் குறைத்தல்,

(ஈ) மண் அரிப்பைத் தவிர்த்தல்,

பக்ராநங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, ஹீராகுட் மற்றும் இதர பெரிய அணைத்திட்டங்கள சம்பந்தமாக காடு வளர்ப்பு மிக அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாகும். நதிப் பள்ளத்தாக்கு திட்டங் களின் நீர்ப்பிடிப் பரப்பில் காடுகள் வளர்ப்பது உள்பட 3 லட்சம் ஏக்கரில் மண்வளப்பாதுகாப்பு வேலை மேற்கொள்ள இரண்டாவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டது. இரண்டாவது திட்ட முடிவில் 2 லட்சம் ஏக்கரில் இந்த வேலை முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று வது திட்டத்தில் 6 லட்சம் ஏக்கர் பரப்பில் மண்வளப்பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும். ஆறுகள், கால்வாய்களின் கரைகள் பாதுகாப்புக்காக, கரையோரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம் விரிவாக்கப்படும். செடிகளையும், நாற்றுகளையும், தொழில் நுட்ப உதவியையும் அரசாங்கம் வழங்கும். கிராம மக்கள் மரங்களை வளர்த்து பராமரித்து வரவேண்டும்.

77. **பாலை நிலங்கள்.**—புல் தரைகளில் இடைவிடாமலும் அளவுக்கு மீறியும் கால் நடைகள் மேய்க்கப்பட்டு வந்ததாலும், கண்மூடித்தனமாக மரங்களை வெட்டியதாலும், நிலங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாலும், ராஜஸ்தான் பகுதியில் நிலம் பாலை ஆயிற்று. இதையொட்டி, காற்றினால் நில அரிப்பு ஏற்பட்டும், மண் வளம் குன்றியும், விவசாய உற்பத்தி குறைந்தும், பல பிரச்னைகள் ஏற்பட்டன. ராஜஸ்தான் பாலைவனத்தில் உள்ளது போன்ற பிரச்னைகள், கட்ச், உத்தரப் பிரதேசத்தின் சில பகுதி கள், பஞ்சாப் கடற்கரையோரப் பகுதிகள் ஆகியவைகளிலும் இருந்து வருகின்றன. பாங்கான முறையில் பேணி வந்தால், மிக வறட்சியான நிலையிலும் கூட, புல் நிலங்களுக்கு விரைவில் வளமூட்டலாம் என்பதை சமீபகால பரிசோதனைகள் தெளிவாக்கியிருக்கின்றன. எனவே மண் அரிப் பைத்தடுக்கவும், கால் நடைகளுக்கு வேண்டிய ஊட்டச் சத்து தீவனத்துக்கு வகை செய்யவும், புல் வெளிகள் பாதுகாப்பும் அபிவிருத்தியும் அவசிய மானதாகும். "முறை" மேய்ச்சல் உள்பட, புல் வெளிகளைப் பேணும் முறையை செய்முறையில் காட்டுவதற்காக, ராஜஸ்தானில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பாலை நிலங்களில் காடு வளர்ப்பு ஆராய்ச்

சிக்காக ஜோத்பூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையம்பற்றி இங்கு சுருக்க மாகக் குறிப்பிடுவது அவசியம். வறட்சிப் பகுதிகளில் பல்வேறு விதமான மண்ணில் காடு வளர்ப்புக்கான ஆராய்ச்சிக்காக 1952-ல் அந்த நிலையம் ஏற்படுத்தப்பட்டது. பாலை நிலங்களுக்குரிய உள்நாட்டு வெளிநாட்டு தாவர வகைகளிலும் அங்கு ஆராய்ச்சி நடத்தப்படும். இந்த ஆராய்ச்சி நிலையத் தைச் சேர்ந்த நாற்றங்காலில் தயாரிக்கப்படும் விதைகளும் செடிகளும் தாவர அரண் அமைப்பதற்காக விநியோகிக்கப்படுகின்றன. மூன்றாவது திட்டத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கரில் காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக் கிறது.

78. **மலைப்பள்ளத்தாக்கு நிலங்கள்.**—யமுனை சாம்பல், இவற்றின் கிளை நதிகள் போன்றவை பாய்ந்து வரும் நிலங்கள் மண் அரிப்புக்குள் ளாகி, சாகுபடிக்கு லாயக்கில்லாமல் ஆகி வருகின்றன. காடு வளர்ப்பு, கரை எடுத்துக் கட்டுதல், மற்றும் இதர மண்வளப்பாதுகாப்பு நடவடிக்கை கள் மூலம், அந்த நதியோரப் பகுதிகளை மீட்பது அவசியமாகும். நூற்றைம்பது சதுர மைல் பரப்புள்ள மலைப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் சர்வே நடத்தவும், உத்தரப் பிரதேசத்தில் சர்வே செய்யப்பட்ட நிலத்தில் 50 சதுர மைல் பரப்பில் நிலமீட்சி வேலைகளை மேற்கொள்ளவுமான திட்டம், தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

79. **மண்வளப்பாதுகாப்புக்காக சட்டமியற்றல்.**—சம உயரக் கரை கட்டல், மண்வளப்பாதுகாப்பு, மற்றும் இதர நில அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் நிறைவேற்றிவைப்பதற்காக, வேண்டுமான சட்டங்கள் இயற்றுவது அவசியம். ஏற்கனவே சட்டமில்லாத இடங்களில், ஆறுகளின் அல்லது ஓடைகளின் கழிகாற்பரப்புக்காகவும், பல கிராமங்களடங்கிய தொகு திக்காகவும் சம உயரக் கரை கட்டும் திட்டங்களை வகுத்துக் கொள்ளவும், ஆட்சேபம் உள்ளதா என்பதை அறிவதற்காக அத்திட்டத்தை வெளி யிடவும் மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரமளிக்கச் சிபார்சு செய்யப்பட் டிருக்கிறது. ஆட்சேபனைகள் கிடைத்த பிறகு, அவசியமானால் திட்டம் திருத்தப்பட்டு, நிறைவேற்ற வேலைகள் மேற்கொள்ளப்படும். அரசாங்க நிலங்களில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு ஆகும் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். தனிப்பட்டவர்களின் நிலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களை, இலாகா தொழில் நுட்ப அதிகாரிகளின் மேற் பார்வையில், பயனடைகிறவர்களே நிறைவேற்றிக்கொள்ளலாம். ஒரு திட்டத்தை, அத்திட்டத்தால் அனுகூலமடைவோர் நிறைவேற்றவில்லை என்றால் அரசாங்கமோ, அரசாங்கத்தின் சார்பில் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்து சமிதியோ நிறைவேற்றி வைக்கலாம். இதற்காகும் செலவு, அனுகூலமடைவோரிடமிருந்து வசூலிக்கப்படும். இதற்கான சட்டங்கள் சில மாநிலங்களில் ஏற்கனவே இருக்கின்றன. இதர மாநிலங்களும் இதே போல சட்டமியற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தியாயம் 9

பாசனமும் மின்சாரமும்

முதல் திட்ட கால ஆரம்பத்திலிருந்தே பாசனமும் மின்சாரமும் மிக முக்கியமான அபிவிருத்தித் துறைகளாக இருந்து வருகின்றன. வேளாண்மை வகைகள் பரவவும், விவசாய உற்பத்தி அதிகரிக்கவும், பெரிய, சிறிய பாசன வசதிகளை விஸ்தரித்துக்கொண்டு போவது இன்றியமையாதது. பெரிய தொழில் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானால் மின்சாரம் அத்தியாவசியமானதாகும். தாமோதர் பள்ளத்தாக்கு, பக்ரா நங்கல், ஹிராகுட், சாம்பல், துங்கபத்ரா, நாகார்ஜுன சாகர் போன்ற நதிநீர் திட்டங்கள் பாசனவசதியும் மின்சாரமும் அளித்து, அந்தப்பகுதிகளில் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் பெரிதும் உதவுகின்றன. பெருமளவில் பாசன, மின்சார வசதிகளை அபிவிருத்தி செய்வதால் விவசாயப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும், நாட்டைத் துரிதமாகத் தொழில் மயமாக்கவும் வழி ஏற்படுகின்றது.

பாசனம்.

2. நாட்டின் ஆற்று நீர் வசதிகளில் இது வரையில் ஒரு சிறு பகுதி தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீர் வசதி 1950-ல் 135.6 கோடி ஏக்கர் அடியாக இருந்தது. பூமி இயல் காரணங்களினால், அந்த வசதியில் சுமார் 45 கோடி ஏக்கர் அடி நீரை மட்டுமே பாசனத்துக்குப் பயன்படுத்த முடியும். 1951 வரை 7·6 கோடி ஏக்கர் அடி மட்டுமே, அதாவது உபயோகப்படுத்தக்கூடிய நீரில் 17 சத விகிதம் மட்டுமே பயன்படுத்தப் பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 11·9 கோடி ஏக்கர் அடி நீர், அதாவது பயன்படுத்தப்படக்கூடிய நீரில் 26 சத விகிதம் உபயோகிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் மேற்கொண்டு சுமார் 4·1 கோடி ஏக்கர் அடி நீர் பயன்படுத்தப்படலாம். இதன் மூலம் மொத்த நீர் உபயோகிப்பு அளவு சுமார் 35–36 சத விகிதமாக உயரும்.

3. முதல் திட்டத் தொடக்கத்தில் எல்லாவிதமான நீர் வசதிகளிலிருந்தும் மொத்தம் பாசனம் பெற்ற பரப்பு 5·15 கோடி ஏக்கராகும். இதில் பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் மூலம் பாசனம் பெற்றவை 2·2 கோடி ஏக்கர்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் (1975–76) பல் நோக்கு திட்டங்கள் உள்பட, பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் மூலம் 8·5 கோடி முதல் 9 கோடி ஏக்கர் வரை பாசன வசதி அளிப்பது சாத்தியமாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நீண்ட கால இலட்சியத்தை மனதில் வைத்தே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டம் உருவாக்கப்படுகிறது.

முதலாவது, இரண்டாவது, திட்ட வேலைகள்

4. முதலாவது இரண்டாவது திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள பெரிய, நடுத்தர* பாசன திட்டங்களின் செலவு மதிப்பு ரூபாய் 1,400 கோடியாகும். இவை முழுமையாக நிறைவேறிய பிறகு சுமார் 3·8 கோடி ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் திட்ட முடிவில் இத்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய் 380 கோடி. இரண்டாவது திட்ட முடிவில் மேற்கொண்டு சுமார் ரூபாய் 390 கோடி செலவிடப்பட்டுவிடும். இத்திட்டங்கள் வகையில் இன்னும் செலவிட வேண்டியிருக்கும் தொகை தற்போதைய மதிப்புப்படி சுமார் ரூபாய் 620 கோடி. இதில் ரூபாய் 160 கோடி, ஆரம்ப நிலையிலேயே உள்ள திட்டங்கள் சம்பந்தப்பட்டவை; அதாவது 2-வது திட்ட முடிவு வரைக்கும், மதிப்பிடப்பட்ட செலவில் 5 சத விகிதத்துக்கும் குறைவாகச் செலவாகும் திட்டங்களைப் பற்றியவை. இந்தத் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய திட்டங்களாகவே கருதலாம். ராஜஸ்தான் காலவாய், கண்டக், உகாய், நர்மதா போன்ற திட்டங்கள் மூன்றாவது திட்டத்துக்கு அப்பாலும் தொடரும்.

5. முதலாவது, இரண்டாவது திட்டங்களின் விளைவாக முதல் திட்ட முடிவிலும், இரண்டாவது திட்ட காலத்திலும் ஏற்பட்டுள்ள பாசன வசதிகளை கீழே அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 1 : பாசனத் திட்டங்களின் பலன்கள்.

	லட்சம் ஏக்கர்கள்		
	கால்வாய் மதகில் வெளிப்படும் நீரின் மொத்த பசான சக்தி அளவு†	உபயோகம்	
ஆண்டு முடிவு.		மொத்தம்	நிகரம்
1955—56	65	33	29
1956—57	73	41	34
1957—58	81	57	49
1958—59	96	64	59
1959—60 மதிப்பீடு	117	86	74
1960—61 எதிர்பார்க்கப்படுவது	140	105	90

மூன்றாவது திட்டத்துக்கான வேலைத் திட்டம்

6. நிறைய மூலதனமிடப்படும் பாசனத் திட்டங்களிலிருந்து குறுகிய காலத்தில் அதிகபட்ச பலன்கள் அடைவதற்கு வகை செய்வது அவசியமாகும். இந்தத் திட்டங்களினால் விளையும் நன்மைகளுக்கு, நிலங்களில் நீர் தேங்குவதினாலோ, போதிய வடிகால் வசதி இல்லாததினாலோ ஹானி

*ரூபாய் 5 கோடிக்குமேல் செலவு பிடிக்கும் பாசனத் திட்டங்கள் பெரிய பாசனத் திட்டங்கள் என்றும் ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 5 கோடி வரை செலவு பிடிக்கும் திட்டங்கள் நடுத்தர திட்டங்கள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன,

†பாசன சக்தி அளவு என்றால், கால்வாய் மதகிலிருந்து வெளிப்படும் நீரைக்கொண்டு பாசன வசதி ஏற்படுத்தக்கூடிய நிலத்தின் பரப்பு.

ஏற்படாமலும் கவனித்துக் கொள்ளவேண்டும். எனவே மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட வேலை வகைகளுக்கு உரிய முக்கியத்துவம் தரப்படவேண்டும்.

(1) இரண்டாவது திட்டத்திலுருந்து வரும் முன் தொடர்ச்சித் திட்டங்களை முடித்தல் : வயல் வழி வாய்க்கால் உள்பட குடியானவர் நிலங்கள் வரை இந்த வேலையை முடிக்கவேண்டும்.

(2) வடிகால் வசதிக்கும், நீர் தேங்குவதைத் தடுக்கவும் உதவும் திட்டங்கள்.

(3) நடுத்தர பாசனத் திட்டங்கள்.

7. முதலாவது இரண்டாவது திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களை முடிக்க இன்னும் மொத்தம் ரூபாய் 620 கோடி தேவைப்படும் என்று மேலே கூறப்பட்டது. அதில் மூன்றுவது திட்டத்துக்கு ரூபாய் 470 கோடி ஒதுக்கவும், பாக்கி ரூபாய் 150 கோடியை நான்காவது திட்டத்துக்கு மாற்றவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபாய் 470 கோடியைக் கொண்டு 140 லட்சம் ஏக்கருக்கு பாசன சக்தியை உண்டாக்க முடியும். இரண்டாவது திட்ட முடிவில் உபயோகப்படுத்தப்படாமலிருக்கும் அளவான 35 லட்சம் ஏக்கரையும் இத்துடன் சேர்த்தால் மொத்தம் 175 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி என்றாகிறது. மாநில அரசாங்கங்கள் அனுப்பியுள்ள தகவல்களின் அடிப்படையில் பார்த்தால் இந்த முன் தொடர்ச்சித் திட்டங்கள் மூலம், மூன்றுவது திட்டத்தில் கூடுதல் பாசன வசதி அளவு 125 லட்சம் ஏக்கராகும். இதன் விவரம் இணைப்பு 1-ல் காணலாம். இந்த மதிப்பீட்டில் மாநிலங்கள் பெரிய பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் கால்வாய் மதகில் தண்ணீர் விட்ட 5 வருஷங்களுக்குள்ளும், நடுத்தர திட்டங்களைப் பொறுத்த வரையில் மதகில் தண்ணீர் விட்ட இரண்டிலிருந்து மூன்று வருஷங்களுக்குள்ளும் தண்ணீரைப் பூரணமாகப் பயன்படுத்தியுள்ளன. இன்னும் தீவிரமான ஒருமுகப்பட்ட முயற்சிகள் மூலம் நீர் உபயோகத்தை மேலும் துரிதப்படுத்தலாம்.

8. பல்வேறு காரணங்களை முன்னிட்டு சில புதிய திட்ட வேலைகளை மூன்றுவது திட்டத்தில் அவசியம் மேற்கொண்டாகவேண்டியிருக்கிறது. சிந்து நதி நீர் உடன்பாட்டையொட்டி பஞ்சாப்பில் பியாஸ் நதிதேக்கத் திட்டமும், பீஹாரும் உத்தரப்பிரதேசமும் சேர்ந்து மேற்கொள்ளும் திட்டம் என்ற வகையில் உத்தரப்பிரதேசத்தின் கண்டக் திட்டமும் அத்தகைய திட்டங்களாகும். மூன்றுவது திட்டத்தில் முக்கியமாக மின்சாரத் திட்டம் என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட பல்நோக்கு திட்டங்களில் பாசனப் பிரிவு வேலைகளையும் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கிறது. பிராந்தியவாரி காரணங்களைக் கருதியும், பின்னடைந்த பிரதேசங்களின் அபிவிருத்தி கருதியும் சில புதிய நடுத்தர பாசனத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதியவேலைத் திட்டங்களுக்கு தற்காலிகமாக ரூபாய் 100 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. வெள்ளக்கட்டுப்பாடு திட்டங்களுக்காக இரண்டாவது திட்டத்தில் ரூபாய் 60 கோடி ஒதுக்கப்பட்டது. சில வடிகால் திட்டங்களும் அத் திட்டத்துக்கு உட்பட்டவை பாசன வசதி பெற்ற பகுதிகளில் நீர்மண்டிப் போய், அதனால் தீங்கு நேராமல் தடுப்பதற்கு வடிகால் வசதி செய்ய வேண்டியதின் அவசியம் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. முன் தொடர்ச்சித் திட்டங்களிலும் புதிய திட்டங்களிலும் பாசனம் பெறும் பகுதிகளில் வடிகால் அமைப்பதற்கு ஆகும் செலவு, இந்தப் பசானத்திட்டங்களின் செலவில் சேர்க்கப்படவேண்டும். நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாக பஞ்சாப்பில் நீர் தேங்கி மண்டிவிடுவது ஒரு முக்கியமான பிரச்னையாகும். வடிகால் அமைப்பு, கால்வாய்களின் கரைகளைக் கட்டுதல், பூமியடி நீரை இறைப்பதற்கான ஏற்பாடு முதலியவை உள்ளிட்ட நீர் சதுப்புத் தடுப்பு வேலைகளை மூன்றாவது திட்டத்தில் விரிவான அளவில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதே போல கேரளம் போன்ற கடற்கரையோரப் பகுதிகளில் கடலரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் கவனிக்கவேண்டியிருக்கிறது. வெள்ளக்கட்டுப்பாடு, வடிகால், நீர் சதுப்புத் தடுப்பு, கடலரிப்புத் தடுப்பு வேலைகளுக்காக மூன்றாவது திட்டத்தில் தற்காலிகமாக ரூபாய் 80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் மாநிலங்களின் திட்டங்களின் பகுதியாக அமையவேண்டியவையாகும்.

10. "பாசனம்" என்ற தலைப்பில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 650 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது (வெள்ளத் தடுப்பு, வடிகால், நீர் சதுப்புத் தடுப்பு, கடலரிப்புத் தடுப்பு ஆகிய திட்டங்கள் இந்த இனத்தில் உள்ளடங்கியவை) இந்தச் செலவு தொகை எவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பதையும், வேலைத் திட்டங்களால் ஏற்படும் பலன்களையும் கீழே அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 2: மூன்றாவது திட்டச் செலவு

வேலைத்தொகுதி	செலவு (ரூபாய்கள் கோடியில்)	கூடுதலாகக் கிடைக்கும் பலன்கள் உபயோகிப்பு அளவு (லட்சம் எக்கர்களில்) மொத்தம்.	
அ. பாசனம.—			
முன் தொடர்ச்சித் திட்டங்கள	470	140	125
புதிய திட்டங்கள	100	20	5
மொத்தம்	570	160	130
		நிகாரம்	115
ஆ. வெள்ளக் கட்டுப்பாடு, வடிகால், நீர் சதுப்புத் தடுப்பு, கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்	80	50 லட்சம் எக்கர் பயனடையும், 40, 50 மைல் நீள கடற் கரை பாதுகாக்கப்படும்.	
மொத்தம்	650		

மேலே கண்ட வேலைத் திட்டங்களுக்கு ரூபாய் 45 கோடி பெறுமான அய்ல்நாட்டு நாணய செலாவணி வசதி தேவைப்படும்.

வருமானங்கள்,

11. சமீப காலத்தில் கட்டப்பட்ட பாசன வேலைகளுக்கும் இப்போது கட்டப்பட்டு வரும் வேலைகளுக்கும், சென்ற காலத்தில் கட்டப்பட்டவைகளைப் பார்க்கிலும் செலவு மிக அதிகம். தொழிலாளர் கூலியும், சாமான்கள் விலையும் அதிகரித்திருப்பது இதற்கு ஒரு காரணம். இந்த விலையேற்ற நிலைமையினால் சப்ளைகள் கிடைப்பதற்கு அதிகக் கஷ்டமும் அதிகச் செலவும் ஏற்படுகிறது என்பது மற்றொரு காரணம். இதனாலும், பழைய, புதிய திட்டங்களைப் பராமரித்தல் நிர்வகித்தல் ஆகியவைகளில் செலவு அதிகரிப்புக் காரணமாகவும், திட்டங்களால் போதுமான அளவு லாபம் கிடைப்பதில்லை. இதன் விளைவாக, பாசனத்திட்டங்கள் அநேகமாக எல்லா மாநிலங்களிலுமே நஷ்டத்தில் வேலை செய்கின்றன, பாசனத் திட்டங்களால் நிகர வருமானம் குறைந்து வருவதை 1957 நிதிக் கமிஷன் எடுத்துக் காட்டியது. திட்டக் கமிஷன் இப்பிரச்னையைப் பரிசீலித்து, திட்டங்கள் மூலம் வருமானத்தை அபிவிருத்தி செய்வதற்காக மாநில அரசாங்கங்களுக்கு சில யோசனைகளைக் கூறியிருக்கிறது. அந்த யோசனைகளாவன :

(1) பாசனத் திட்டங்கள் மூலம் ஏற்பட்ட பாசன வசதிகளை உபயோகப் படுத்துவதைத் துரிதப்படுத்த வேண்டும்.

(2) நீர் தீர்வையைத் திருத்தி யமைக்க வேண்டும். கட்டாய நீர்வரி (செஸ்) ஏற்படுத்த வேண்டும்.

(3) அபிவிருத்தி வரி வசூலிப்பு.

12. பாசன வசதிகளைப் பயன்படுத்தல்.—பாசன வசதிகளைப் பயன்படுத்துவதற்கு, பாசனம், வேளாண்மை, நில வருவாய்த் துறை, சமுதாய நல வளர்ச்சி நிறுவனம், கூட்டுறவு முதலிய பல இலாகாக்களின் ஒருமித்த இணைப்பான முயற்சி அவசியம் கிராம மட்டத்தில் மக்களுடன் சேர்ந்து இவை பணியாற்றவேண்டும். பாசனத் திட்டங்கள் மூலம் மிக விரைவாகப் பலன்கள் காண்பதற்கு அவசியமான முக்கிய நடவடிக்கைகள் பின் வருமாறு.—

(1) மதகுக்கு தண்ணீர் வரும்போது ஏறக்குறைய அதே சமயத்தில் குடியானவர்கள் வயல்களிலும் நீர் பாய்ந்து பாசனத்துக்கு வரும்படியாக மதகு வேலைகள் கால்வாய்கள் கிளைக் கால்வாய்கள், நீர் மார்க்கங்கள் வயல் வழிக் கால்வாய்கள் ஆகியன ஒரே சமயத்தில் அமைக்கப்படவேண்டியது அவசியம்.

(2) பாசன வசதியைத் துரிதமாகப் பயன்படுத்துவதற்காக, பாசனத் திட்டத்தினால் பலன் பெறும் பிரதேசம் பூராவிலும் அபிவிருத்தி வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்ட பின் கூடுமானவரை விரைவில் அபிவிருத்தி வட்டாரங்களை ஏற்படுத்துமாறும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

(3) வாய்க்கால்கள், வயல் வழி வாய்க்கால்கள், முதலியன தோண்டுவதில் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக அவைகளின் அமைப்பை

திட்ட அதிகாரிகள், கிராம வரைப் படத்தில் குறிப்பிட வேண்டும். அனுகூலமடைகிறவர்கள் மூலம் இந்த வயல் வழி வாய்க்கால் களைத் தக்க சமயத்தில் தோண்டி முடிக்கச் செய்வதற் காக அந்த வரைப் படங்களை மாவட்ட, வட்டார அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும். கால்வாய் வேலைகள் முடியும் அதே சமயத்தில், அனுகூலமடைவோர் வயல் வழி வாய்க்கால்களையும் தோண்டி முடித்திருக்கும்படியாக எல்லா மாநிலங்களும் கவ னித்துக்கொள்ள வேண்டும். அப்படித் தோண்டத் தவறிவிடுப வர்கள் விஷயத்தில், அந்த வேலையை மேற்கொள்ளவும், செலவுத் தொகையை வசூலிக்கவும் கிராம நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

(4) வேறு பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் ஏக காலத்தில் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. மண் இயல் சர்வே, புதிய மகசூல் முறைகளை உருவாக்கவும், நிர்ணயிக்கவும் பரீட்சார்த்தப் பண்ணைகளை அமைப்பது, விஞ்ஞானபூர்வ பாசன முறைகளை குறிப்பாக சிக்கனமான முறையில் நீரைப் பயன்படுத்துவதில் செய்முறையில் காட்டுவதற்கான பண்ணைகளை ஏற்படுத்துவது, முதலிய வேலைகள் அந்த வகையைச் சேர்ந்தவை.

(5) இலாகாக்கள் தங்கள் தங்கள் துறைகளில் முன்கூட்டியே திட்ட மிட்டுக்கொள்ளுவதும் அவசியமாகும். உதாரணமாக, பாசனத் திட்டத்தைச் சேர்ந்த பகுதிகளில் பொறுக்கு விதைகள், உரங்கள் சப்ளை, உள்ளூர் எரு வசதி அபிவிருத்தி, அதிக அளவில் கடன் வசதி, விற்பனை வசதி, பண்டகசாலை, கிடங்குகள், போக்கு வரத்து வசதிகள் ஆகியவைகளை ஏற்படுத்த முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

பாசன இலாகா, கட்டுமான நடவடிக்கைகளுக்கு திட்டமிடும்போது, மேலே குறிப்பிட்ட துறைகள் சம்பந்தமான இலாகாக்களும் ஏககாலத்தில் திட்டமிடும்படிச் செய்வதற்காக, எல்லா இலாகாக்களின் பிரதிநிதிகளையும் கொண்ட அபிவிருத்திக் கமிட்டிகளை மாநில அரசாங்கங்கள் அமைத்து வருகின்றன. ஆரம்பக் கட்டத்திலிருந்தே எல்லா இலாகாக்களும் ஒன்றோடொன்று நெருங்கி கலந்தாலோசித்துப் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு இலாகாவின் திட்டத்திலும் முக்கியப் பாசனத் திட்டங்கள் சம் பந்தமாக தத்தம் வேலைகளை நிறைவேற்ற வகை செய்திருக்க வேண்டும்.

13. தண்ணீர் தீர்வை.—தண்ணீர் தீர்வை பொதுவாக நடைமுதல் செலவுகள், கடன் பாபத்துகள் ஆகியவைகளுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும். மழை பற்றுக் குறைப் பகுதியில் இல்லாத மற்ற பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் நஷ்டம் எதுவும் வரக்கூடாது. இம் முறையில் பார்க்கும்போது பெரும்பாலான மாநிலங்களில் தற்போதுள்ள நீர்த் தீர்வை குறைவு. பாசனத் திட்டங்களின் விளைவாக உற்பத்தியாகும் விளை பொருள்களின் மதிப்பு கணிசமாக உயர்ந்தும், பராமரிப்புச் செலவு

களை பெருமளவுக்கு அதிகரித்தும் இருக்கும்போதும் நீர்த் தீர்வை அதற்கேற்ப உயர்த்தப்படவில்லை. எனவே, நீர்த் தீர்வை அதிகரிக்கும் முறையில் அதைத் திருத்தி அமைப்பது அவசியம். தவிரவும், நீர்த் தீர்வை கண்டிப்பான முறையில் இல்லாத மாநிலங்களில் பாசன வசதி ஏற்படுத்தப் பட்டுள்ள நிலப்பரப்புப் பூராவுக்கும் கட்டாய நீர்த் தீர்வை விதிக்கப்பட வேண்டும். குடியானவர்கள் நீர் எடுத்தாலும் சரி, எடுக்காவிட்டாலும் சரி, இத் தீர்வை விதிக்கப்பட வேண்டும். இப்படிச் செய்தால் குடியானவர்கள் காலமறிந்து நீரைப் பயன்படுத்திக்கொள்வதற்கும் வழி ஏற்படும். விளைச்சல் அதிகரிக்கவும் இது வகை செய்யும்.

14. **அபிவிருத்தி வரி.**—அபிவிருத்தி வரி விதிப்பதற்கான சட்டம் ஏற்கனவே பெரும்பாலான மாநிலங்களில் இயற்றப்பட்டுவிட்டது. வரையறுக்கப்பட்ட வரி விகிதப்படி, வசூல் வேலை 15 வருஷத்திலிருந்து 20 வருஷம் வரைக்கும் நடைபெறும். பாசனத்துக்கு நீர்விட்ட 2 அல்லது மூன்று வருஷங்கள் ஆனதும் வசூல வேலை தொடங்குவார்கள். இந்தச் சட்ட அமுல் பின்தங்கியுள்ளது. வசூலான தொகை இரண்டாவது திட்டத் தொடக்கத்தில் குறிப்பிட்டுக்கொண்ட லட்சிய அளவைவிட மிகவும் குறைவாக இருக்கிறது. பாக்கியுள்ள மாநிலங்களில் இந்தச் சட்டம் இயற்றச் செய்வதும், சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள மாநிலங்களில் இதை அமுலாக்குவதும், இரண்டாவது திட்ட கடைசி ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய நடவடிக்கைகளாகும்.

15. புதிய பிரதேசம் ஒன்றில் ஒரு பாசன வேலைத் திட்டத்துக்கு திட்டமிடும்போது, மாநில அரசாங்க அதிகாரிகள், அத்திட்டத்தின் முக்கியாம்சங்களையும், அதனால் உள்ள அனுகூலங்களையும், அந்தப் பகுதியின் குடியானவர்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக அனுகூலம் அடைவோர் செலுத்த வேண்டிய நீர்த தீர்வையானது அபிவிருத்தி வரி ஆகியவைகளைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும். விஷயங்களை இப்படி விளக்கிச் சொல்லுவதினால், திட்டம் உருப் பெற்றதும் பாசன வசதிகளை துரிதமாகப் பயன்படுத்திக்கொள்ளுவதும், நீர்த் தீர்வை, அபிவிருத்தி வரிஆகியவைகளை அனுகூலமடைவோர் ஏற்றுக்கொள்ளுவதும் சாத்தியமாகலாம்.

16. வெள்ளக் கட்டுப்பாடு, வடிகால், சதுப்பு நிலத்தடுப்பு, கடல் அரிப்புத் தடுப்பு முதலிய திட்டங்கள் பொதுமக்கள் பங்கு பெறுவதற்கு மிகவும் உகந்த திட்டங்களாகும். இந்தத் திட்டங்களில் மண் வேலை தான் மிகுதி. இதைச் செய்வதில் மிகப் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு தொழில் நுட்ப அறிவு எதுவும் தேவையில்லை. இந்தத் திட்டங்களால் பயன் பெறும் கிராமங்களுக்கு கூடுமானவரை அருகாமையிலேயே இந்தத் திட்டப் பகுதிகள் அமைகின்றன. அனுகூலமடைவோர், இத் திட்டங்களுக்காக தம்மிச்சையாக உழைப்போ, பணமோ, இரண்டுமோ கொடுக்குமாறு தூண்டுவது முக்கியமாகும். இத்தகைய திட்டங்களில் வேலைத் திட்டங்கள் வகுக்கும்போது, திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு மக்கள் பங்கு கொள்ளும்படிச் செய்வதற்கு வகை செய்யவேண்

டியது அவசியமாகும். இந்த வேலைகளும், பாசனத் திட்டங்களும் ஸ்தல நிறுவனங்களான பஞ்சாயத்து சமிதி, கிராமப் பஞ்சாயத்து போன்ற வைகளின் நெருங்கிய ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும். சாத்தியமான இடங்களில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கலாம். கருவிகள் சப்ளை, சம்பந்தப்பட்ட இலாகாக்களிடமிருந்து காண்ட்ராக்ட்டுகள் பெறுதல், வேலையை நிறைவேற்றி வைத்தல், ஆகியவைகளை அச் சங்கங்கள் கவனிக்கலாம்.

பரிசீலனை, ஆராய்ச்சி, அமைப்பு

17. நதி நீர திட்டங்களுக்கு மிக விரிவான பூர்வாங்கப் பரிசீலனைகள் அவசியம். நீர்வள வசதி தொடர்ச்சியாகக் கிடைத்துவரும்படிச் செய்வதற்காக திட்டங்களையும், அவற்றால் பயனடையும் பகுதிகளையும் வரையறுத்துக்கொள்ள வேண்டும். அடிப்படை இன்ஜினீரிங் அளவெடுப்புகளை முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டும். முடிவான நீர்வள ஆதாரங்களையும் சாத்தியமாகக் கூடிய பாசன, பல் காரியத் திட்டங்களையும் தெளிவாக எடுத்துக்காட்டும் முறையில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் நீண்ட கால அளவில் பாசன அபிவிருத்திக்கான “ மாஸ்டர் பிளான்கள் ” தயாரிக்கப்பட வேண்டும். விசேஷப் பரிசீலனை யூனிட்டுகள் ஏற்கனவே அநேகமாய் எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. கட்டுபடியாகக்கூடிய திட்டங்களையே பொறுக்கி எடுத்து நிறைவேற்றுவதற்காக மூன்றாவது திட்டத்தில், திட்ட பூர்வாங்கப் பரிசீலனை வேலைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

18. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசன ஆராய்ச்சி வேலைத் திட்டங்களை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரீதியில் இந்த விஸ்தரிப்பு அமையும். டிசைன், கட்டுமானம் ஆகியவைகளின் நவீன உத்திகளைக் கையாண்டும், கட்டுமான சாமான்களை சரியான முறையில் தேர்ந்தெடுப்பது மூலமும், திட்ட நிர்மாண வேலைகளில் அதிக பட்ச சிக்கனத்துக்கு வழி செய்வது அவசியம். பலமாகவும், சிக்கனமான முறையிலும் கட்டுமானங்கள் அமையும்படியாக, மாநிலங்களில் போதுமான அளவு டிசைன் நிறுவனங்கள் இருக்க வேண்டும்.

மின்சாரம்

19. இந்தியாவில் கிடைக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட மூல சக்திகள் எதிலிருந்து வேண்டுமானாலும் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். அதாவது, நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, நீர் விசை, உரேனியம்-தோரியம், அணு உலைகள், எண்ணெய், இயற்கை வாயுக்கள், சுத்தமாக்கப்பட்ட வாயு ஆகியவைகளிலிருந்து மின்சார உற்பத்தி செய்யலாம். கடல் அலை விசை, காற்றின் வேகம், ஜியோ தெர்மல் விசை, சூரிய சக்தி ஆகியனவும் மின்

சார உற்பத்தியை சாத்தியமாக்கக் கூடிய சாதனங்களாகும். ஆனால், இந்த நாட்டில் மின்சார உற்பத்திக்கு இந்தச் சாதனங்கள் இதுவரை சரியாக அணுகப்படவில்லை.

20. ரயில்வேக்களுக்கோ, தொழிற்சாலைகளுக்கோ, தேவைப்படாத மட்ட ரக நிலக்கரி பெருமளவில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் நிலக்கரி சுத்திகரிப்பு ஸ்தலங்களிலிருந்தும் கிடைக்கின்றன. இந்த இடங்கள் நிலக்கரி மூலமான மின்சார உற்பத்திக்கு மிக ஏற்ற இடங்கள். ஏனெனில் போக்கு வரத்துச் சங்கடங்கள் எதுவுமில்லாமல், இந்த மட்டமான எரி பொருள் பயன்பட்டு வருகிறது. பொதுவாக நீர் மின்சாரம்தான் மிகவும் மலிவானது. ஏனென்றால் அதற்கு எரி பொருள் எதுவும் தேவையில்லை. ஆனால் நீர் மின்சார நிலையங்களை ஏற்படுத்தச் சற்று நீண்ட காலமாகும். வெளி நாட்டு நாணய வசதி அதிகம் தேவைப்படாதே தவிர, திட்டச் செலவு அதிகமாக ஆகும். தொலைதூரப்பகுதிகளில், லோடு செண்டர் களிலிருந்து மிகத் தள்ளியிருக்கும் இடஙகளில்தான் நீர்மின்சாரத் திட்டங்கள் அமைய வேண்டியிருக்கின்றது. சமீப காலத்தில் அணுசக்தி மின்சாரம், குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுள்ளது. நாட்டில் புதிய உரேனியம் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையும் உலகின் மிக வளமான தோரியம் படிவங்களும் சேர்ந்து, அணுச் சக்தி மின்சாரத்துக்கான மாபெரும் மூலாதார வசதியை ஏற்படுத்தித் தருகின்றன. நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து தொலை தூரத்தில் உள்ளனவும், எரி பொருள் செலவு மிக அதிகமாக இருப்பதும், மலிவான நீர் மின்சார வசதி கிடைக்காததுமான இடங்களில் அணுசக்தி மின்சார நிலையங்கள் (nuclear stations) அமைக்கப்படுகின்றன. எண்ணெயிலிருந்து மின்சார உற்பத்திக்கு—உள் கம்பஸ்ஷன் இஞ்சினில் டீசல் எண்ணெய் உபயோகிப்பதாயினும் சரி, கொதி கலன்களில் (பாய்லர்களில்) எரி உலை முறையிலாயினும் சரி—ஆகும் செலவு, தற்சமயம் நிலக்கரி கொண்டு அல்லது நீர் விசை மூலம் மின்சாரம் எடுக்கும் செலவைவிட மிகவும் அதிகம். தவிர டீசல் எண்ணெய் இப்பொழுது பற்றாக்குறையாக இருக்கிறது. அதை இறக்குமதி செய்யவேண்டியும் இருக்கிறது. எனவே இந்த முறையான மின்சார உற்பத்தியை, ஒதுக்குப்புறமான சில இடங்களுடனும், சிறு திட்டங்கள் அளவிலும் நிறுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

21. ஒரு பிரதேசத்துக்கு எந்த விதமான மின்சார உற்பத்தி முறை மிகவும் ஏற்றது என்று தேர்ந்தெடுக்க தாராள வசதி இருக்கிறது. அனுபவத்திலுள்ள பல முறைகளில் தகுந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தேர்ந்தெடுப்பதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் வருமாறு :—ஏற்படுத்தப்பட்டுள்ள உற்பத்தித் திறனில் ஒரு கிலோவாட்டுக்கு மூலதனச் செலவு, அயல் நாட்டு நாணய செலவாணி அளவு, கிலோவாட்—மணி உற்பத்திச் செலவு, திட்ட நிர்மாண கால அளவு, நிலக்கரிச் சுரங்க வேலை, சுத்திகரிப்பு நிலையங்கள் (வாஷரீஸ்), பாசனம்,

இயற்கை வாயு பயன்பாடு, புதிய தொழில் நுட்ப அபிவிருத்திகளை ஊக்கு வித்தல் முதலிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் இந்த மின்சாரத்தின் முக்கியத்துவம் முதலியன, நீர் மின்சாரம், நிலக்கரி மூலமான மின்சாரம், டீசல் எண்ணெய் மூலமான மின்சாரம் ஆகியவைகளுக்கு கிலோவாட்— மணி ஒன்றுக்கு உற்பத்திச் செலவு முறையே 1-2 காசுகள், 3 காசுகள், 25 காசுகள் ஆகும். அணு சக்தி மின்சார செலவு 3·5 காசுகளிலிருந்து 4 காசு வரை ஆகும். நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து தொலை தூரத்தில் உள்ள இடங்களில் நிலக்கரி மூலமான மின்சாரம் எடுக்க என்ன செலவு ஆகுமோ, ஏறக்குறைய அந்தச் செலவு அணுசக்தி மின்சாரத்துக்கு ஆகும். நிலக்கரி மூலமான மின்சார நிலையங்களுக்கு தேவைப்படும் அயல்நாட்டு நாணயச் செலாவணி அளவு, நீர் மின்சார நிலையங்களின் தேவை அளவைப் போல இரண்டு அல்லது மூன்று மடங்கு ஆகும். அணு மின்சார நிலையங்களுக்கு இந்த அயல்நாட்டு நாணய வசதி அளவு, அனல் மின்சார நிலையங்களின் தேவையைக் காட்டிலும் அதிகமாயிருக்கும். மின்சார உற்பத்திக்கான பல்வேறு முறைகளின் மாறுபட்ட தன்மைகள் காரணமாக, கீழ்க்கண்ட வழிகளில் அதிகப் பட்ச சிக்கனம் காணலாம். மின்சார இணைப்பு அமைப்பினுள் பல்வேறு மின்சார உற்பத்தி முறைகளைச் சரியான படி சீரமைத்துக்கொள்ளுவது ; குறைந்த பட்சம், உச்ச பட்சம், சீசனல் லோடு போன்ற பல ரகமான தேவைகளைச் சமாளிப்பதற்காக, கூடுமான வரை இணைப்புகளை (இண்டர் கனெக்டிங்) ஏற்படுத்திக்கொள்ளல்.

தற்போதுள்ள அபிவிருத்திகள்

22. அடிப்படைத் தொழில்கள், கனரகத் தொழில்கள் வளர்ச்சியை முக்கியாம்சமாகக் கொண்டு துரிதமாகத் தொழில்மயமாக்குவதே இரண்டாவது திட்டத்தின் நோக்கமாகும். எனவே, மின்சார அபிவிருத்தி, அதற்கேற்ப முதலிடம் பெறுகின்றது. நாட்டில் அனேகமாக எல்லாப் பகுதிகளிலுமே மின்சாரத் தேவை கணிசமாக அதிகரித்தது. மின்சார உற்பத்தி, பொதுப்படையாக தேவைக்குப் போதுமான அளவு இல்லை. இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் மொத்த உற்பத்தித் திறன் 34 லட்சம் கிலோவாட். இதில் 27 லட்சம் கிலோவாட், அரசாங்கத் தொழில் துறையிலும், தனியார் தொழில் துறையிலும் உள்ள மின்சார சப்ளை நிறுவனங்களில் உற்பத்தியானது. 7 லட்சம் கிலோவாட் தொழில் ஸ்தாபனங்கள் தங்களுக்குத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டதாகும்.

கைத்தொழில் வளர்ச்சிக்கு குறிப்பிடப்பட்ட லட்சிய அளவுகளை மனதில் கொண்டு, மின்சார உற்பத்தித் திறனை 69 லட்சம் கிலோவாட்டுக்கு உயர்த்த இரண்டாவது திட்டம் வகை செய்தது. (இதில் சுமார் 10 லட்சம் கிலோவாட் தங்களுக்காகத் தாங்களே மின்சாரம் உற்பத்தி செய்து கொள்ளும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டதாகும்). காரியாம்சத்தில் ஏற்பட்டுள்ள சாதனை இப்பொழுது 58 லட்சம் கிலோவாட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின் இணைப்பு 2-ல், முதல் திட்ட முடிவில் பல்வேறு மாநிலங்களின் மின்சார உற்பத்தி சக்தி, இரண்டாவது திட்ட

முடிவில் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி அளவு, இரண்டாது திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்கள் முடிந்தால் கிடைக்கக் கூடிய உற்பத்தி அளவு ஆகியவைகளைக் காணலாம். முதலில் நிர்ணயிக் கப்பட்டுள்ள லட்சிய அளவு அடையப்படாமல் இருப்பதற்கு முக்கிய கார ணம், இரண்டாவது திட்டக் காலத் தொடக்கத்தில் அயல் நாட்டு நாணய செலாவணி வசதியில் ஏற்பட்டிருந்த சங்கடங்களேயாகும். தவிர, பக்ரா-நங்கல், கொய்னு, ரிஹாண்டு, ஹிராகுட் இரண்டாவது கட்டம் ஆகிய பெரிய நீர்மின்சார திட்டங்களில் வேலைகள் பூர்த்தியடைவதற்கு ஓரளவு தாமதம் ஏற்பட்டதும், இந்தக் குறைபாட்டுக்குக் காரணமாகும். மூன்றுவது திட்டத் தின் ஆரம்ப வருஷங்களில் பெருமளவில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படா மல் தவிர்ப்பதற்காக ஆவன செய்யப்பட்டுள்ளது. அதாவது அதிக முக்கியமில்லாத திட்டங்கள் என முன்பு நிறுத்திவைக்கப்பட்டனவும், பாக்கி நிற்பனவுமான திட்டங்களை அமுலாக்குவதில் வெளிநாட்டு நாணய வசதிக்கான வகைகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது திட்டத்தில் முன்பு சேர்க்கப்படாத சில புதிய மின்சார வேலைத் திட்டங்களை நிறை வேற்றவும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திட்ட காலத்தில், பிராந்திய மின்சார தேவையில் சில குறிப்பிட்ட கூடுதல் தேவைக் கோரிக்கைகளை ஏற்பது சம்பந்தமாகவே இந்தப் புதிய திட்ட வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. மூன்றுவது திட்டத்தில் சில குறிப்பிட்ட மின்சார வேலைத் திட்டங்கள் பற்றி சர்வே மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்தின் கடைசி ஆண்டில் இந்த வேலை ஆரம்பமாகும்.

23. முதல் திட்டத்தில் மின்சாரத்துக்காக, பொதுத்துறையில் மொத் தம் ரூ. 260 கோடியும், தனியார் துறையில் ரூ. 32 கோடியும் செலவிடப் பட்டது. இரண்டாவது திட்டத்தில் இந்தச் செலவுத் தொகைகள் அளவு முறையே ரூ. 410* கோடியாகவும், ரூ. 37 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சொந்தமாக மின்சார உற்பத்தி நிலையங்கள் வைத் துள்ள தொழில் நிறுவனங்கள் முதல் திட்ட காலத்தில் மேற்கொண்டு ரூ. 10 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 28 கோடியும் செலவிட்டன,

உற்பத்தி சக்தி வளர்ச்சியும், மின்சார உற்பத்தி அளவு அதிகரிப்பும்.

24. மின்சார அபிவிருத்தி, கைத் தொழில் அபிவிருத்திக்கு நேரடி சம்பந்தமுள்ளது. உபயோகிக்கப்படும் மின்சாரத்தில் 75 சத விகிதத்துக்கு மேற்பட்ட சக்தி, கைத் தொழில் உற்பத்திக்கும் அதையொட்டிய காரியங் களுக்கும் பயன்படுத்தப்படுவதிலிருந்து இது தெளிவு. கனரகத் தொழில்கள் அடிப்படைத் தொழில்களுக்கு முக்கியத்துவம், மூன்றுவது திட்டத்தில் தொடர்ந்து நீடிக்கப்படுகிறது. எனவே இதையொட்டி, போது மான அளவு மின்சார சக்திக்கும் முன்கூட்டி திட்டமிடுவது அவசிய மாகிறது. பல்வேறு தொழில்களுக்கும், புதிய ரயில் பாதைகள் அமைப்

*திட்டத்துக்குப் புறம்பாக தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட நிறுவனமும், சில மாநிலங் களின் மாநில மின்சார போர்டுகளும் சொந்த நிதி வசதியிலிருந்து போட்டுள்ள **கூடுதல் மூலதனங்களைக் கணக்கில் கொண்டால் பொதுத் துறையில் மின்சாரத்துக்கான மொத்த முதலீடு சுமார் ரூ. 460 கோடியாகும்.**

புக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய அளவுகளைப் பரிசீலனை செய்த பின்பு, மூன்றாவது திட்டத்தில் மின்சார உற்பத்தி சக்தியின் அளவை 58 லட்சம் கிலோவாட்டிலிருந்து 118 லட்சம் கிலோவாட்டாக அதிகரிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. 1975–76-ல் உற்பத்தி சக்தி 3 கோடி கிலோவாட்டாக அதிகரிக்க வேண்டும் என்ற நீண்ட கால லட்சிய அளவுக்கு இது அனுசரணையானதும் ஆகும். மின்சார உற்பத்தித் திறனின் வளர்ச்சியையும், மின்சார உற்பத்தி அளவு அதிகரிப்பையும் கீழே அட்டவணையில் காணலாம் :—

அட்டவணை 3 : உற்பத்தி சக்தி வளர்ச்சியும், மின்சார உற்பத்தி அளவு அதிகரிப்பும்.

	1950-51.	1955-56.	1960-61 (மதிப்பீடு).	1965-66 (மதிப்பீடு).
3.1 உற்பத்தித் திறன் லட்சம் கிலோ வாட்டுகளில்.				
1 அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்கள்.	6	14	33	91
2 கம்பெனிகளுக்குச் சொந்தமான நிறுவனங்கள்.	11	13	15	16
3 சுயமாக மின்சார உற்பத்தி செய்து கொள்ளும் தொழிற்சாலைகள்.	6	7	10	11
4 மொத்தம்	23	34	58	118
3.2 உற்பத்தியாகும் மின்சாரம் லட்சம் கிலோவாட்ஸ் மணிகளில்.				
1 அரசாங்கத்துக்குச் சொந்தமான பொது உபயோக நிறுவனங்கள்.	21,040	45,000	1,21,000	4,22,500
2 கம்பெனிகளுக்குச் சொந்தமான பொது உபயோக நிறுவனங்கள்.	30,030	43,000	56,000	
3 சுயமாக மின்சார உற்பத்தி செய்து கொள்ளும் தொழிற்சாலைகள்.	14,680	22,000	30,000	
4 மொத்தம்	65,750	1,10,000	2,07,000	4,22,500

மின்சார உற்பத்தி வகைகளும், அவற்றின் உற்பத்தித் திறனும் கீழே காட்டப்படுகிறது:

அட்டவணை 4 : மின்சார உற்பத்தி யந்திர வகைகள் திறனளவு

வகை.	1951	1956	1961 (மதிப்பீடு).	1966 (மதிப்பீடு).
	(லட்சம் கிலோவாட்டுகளில்).			
1 நீர் மின்சார யந்திரங்கள் ..	5·6	9·4	21·0	47·5
2 நீராவி யந்திரங்கள் *	16·0	22·7	34·5	65·0
3 எண்ணெய் யந்திரங்கள் ..	1·5	2·1	2·5	2·5
4 அணு மின்சார யந்திரங்கள் ..	..	..	..	3·0
5 மொத்தம்	23·1	34·2	58·0	118·0

* சுயமாக மின்சார உற்பத்தி செய்துகொள்ளும் தொழிற்சாலைகளில் எந்த வகையான உற்பத்தி யந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன என்பது திட்டமாகத் தெரியவில்லையாகையால், அந்த உற்பத்தி பூராவும் நீராவி யந்திர (ஸ்டீம் பிளாண்ட்) உற்பத்தியில் காட்டப்பட்டுள்ளது.

மூன்றுவது திட்டத்துக்கு வேலைத் திட்டம்.

25. மூன்றுவது திட்டத்தில் மின்சார அபிவிருத்திக்கு ரூ. 975 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 925 கோடி பொதுத் துறையிலும் ரூ. 50 கோடி தனியார் துறையிலும் செலவிடப்படும். பொதுத் துறைக்கு ஒதுக்கப்படும் தொகையில், நீர் மின்சார, அனல் மின்சார (தெர்மல்) உற்பத்தித் திட்டங்களுக்கு ரூ. 580 கோடியும், அணு சக்தி மின்சாரத்துக்கு ரூ. 51 கோடியும், உரேனியம் தோண்டி எடுத்தல், இணைப்பு (பேப்ரிகேஷன்), புளுட்டோனியம் எடுக்கும் யந்திரம் ஆகியவைகளுக்கு ரூ. 24 கோடியும், மின்சாரப் போக்குவரத்து, வினியோகம், கிராமங்களுக்கு மின்சார வசதி விஸ்தரிப்பு வகைக்கு ரூ. 270 கோடியும் ஒதுக்கப்படும். இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

அட்டவணை 5 : திட்டச் செலவும், அனுகூலங்களும்

திட்ட வகை.	மூன்றுவது திட்டத்தில உத்தேசிக்கப் பட்டுள்ள செலவு ரூபாய்கள் கோடியில.	மூன்றுவது திட்ட காலத்தில் அனுகூலஙகள் லட்சம் கிலோ வாட்டுகளில்.	நாலாவது அல்லது அதற்கும் பிற்பட்ட திட்ட காலஙகளில் அனுகூலங்கள் லட்சம் கிலோ வாட்டுகளில்.
1 இரண்டாவது திட்டத்திலிருந்து மூன்றுவது திட்டத்துககு வேலை தொடர்ந்து நீடிக்கும் திட்டங்கள்.	230	24	4
2 மூனறுவது திட்டத்தில் பலன் தரக கூடிய புதிய திட்டங்கள்.	620	36	8
3 நான்காவது அல்லது அதற்கடுத்த திட்டங்களில் பலனை தரக்கூடிய புதிய திட்டங்கள்.	75	..	30
4 மொத்தம்	925	60	42

மூன்றுவது திட்டத்தின் மின்சார வேலைத் திட்டங்களுக்கு தேவைப்படும் அயல் நாட்டு நாணய செலாவணியின் அளவு சுமார் ரூ. 270 கோடியாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சுமார் மதிப்பீடு களே. மாநிலங்களின் திட்டங்கள் இறுதி வடிவம் அளிக்கப்பட்ட பின்பு, இவைகளைத் திருத்தவேண்டியிருக்கலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் மின்சார உற்பத்திச் சக்தி அதிகரிப்பு, அந்த மாநிலத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில் திட்டங்களுக்கு ஏற்ப இருக்கிறதா என்பது நுட்பமாகப் பரிசீலிக்கப்படும். பொகாரோ உருக்குத் தொழிற்சாலையின் விளைவாக மின்சாரத் தேவையைச் சரிக்கட்டுவதற்கான ஏற்பாடுகளை, "லோகத் தொழில்களும் கனி வளமும்" என்ற பிரிவின் கீழ் காணலாம்.

3,00,000 கிலோவாட்ஸ் அணுசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிலையத்தை ஏற்படுத்த மூன்றுவது திட்டத்தில் தற்போது வகை செய்யப்

பட்டுள்ளது. அணு மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்காக அணு சக்தி, கமிஷன் மேற்கொண்டு சமர்ப்பித்துள்ள திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

26. மின்சாரப் போக்குவரத்து இணைப்பு முறை, மூன்றாவது திட்ட காலத்தில் மேற்கொண்டு பலப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படும். அதன் விவரம் கீழே பட்டியலில் காணலாம் :—

அட்டவணை 6 : மின்சார போக்குவரத்து லைன்கள்

	டிரான்ஸ்மிஷன் லைன்கள் 11 கிலோவாட்டும் அதற்கு மேலும் (சர்க்யூட் மைல்கள்.)
1955–56	35,000
1960–61	70,000
1965–66	1,50,000

திட்ட காலத்தில் மின்சாரப் போக்கு வரத்து லைன்கள், சப் ஸ்டேஷன்கள் ஏற்படுத்த சுமார் ரூ. 165 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதுபோக, கிராம மின்சார வசதி விஸ்தரிப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 105 கோடியில், சப் டிரான்ஸ் மிஷன் லைன்களை அமைப்பதற்கான வசதி இருக்கின்றது.

கிராமங்களுக்கு மின்சார வசதி.

2˙. முதல் திட்ட கால முடிவில் நாட்டில் நகரங்களும், கிராமங்களுமாக மொத்தம் 7,400 ஊர்கள் மின்சார வசதி பெற்றிருந்தன. இரண்டாவது திட்ட முடிவில், மின்சார சப்ளை பெற்றுள்ள ஊர்கள் சுமார் 19,000 ஆக இருக்கும். ரூ. 105 கோடி செலவில் மேற்கொண்டு 15,000 ஊர்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்த மூன்றாவது திட்டம் வகை செய்கிறது. முதல் இரண்டு திட்ட காலங்களில் மின்சார வசதி பெற்ற நகரங்கள் கிராமங்களின் விவரம், ஜனத் தொகை அம்சத்தோடு கீழே தரப்படுகிறது. மூன்றாவது திட்ட முடிவில் எவ்வளவு ஊர்கள் வசதி பெறக்கூடும் என்பதும் குறிப்பிடப்படுகிறது.

அட்டவணை 7 : மின்சார வசதிபெற்ற நகரங்கள், கிராமங்கள்.

மக்கள் தொகை நிலை.	1951 ஜனத் தொகை கணக்கெடுப்புப்படி மொத்த தொகை	1951 மார்ச்சில் மின்சார வசதி பெற்றவை	1956 மார்ச்சில் மின்சார வசதி பெற்றவை	1961 மார்ச்சில மினசார வசதி பெற்றவை (மதிப்பீடு)	1966 மார்ச்சில மினசார வசதி பெற்றவை (மதிப்பீடு)
ஒரு லட்சம் பேர்களுக்கு மேல்	73	49	73	73	73
50,000-லிருந்து 1,00,000 வரை	111	88	111	111	111
20,000-லிருந்து 50,000 வரை	401	240	366	399	401
10,000-லிருந்து 20,000 வரை	856	260	350	756	856
5,000-லிருந்து 10,000 வரை	3,101	258	1,200	1,800	3,101
5,000-க்கும் கீழே	5,56,565	2,792	5,300	15,861	29,458
மொத்தம்	5,61,107	3,687	7,400	19,000	34,000

28. பத்திலிருந்து 100 கிலோ வாட்ஸ் வரை சக்தியுள்ள நீர் மின்சார யந்திரங்களை, மிகச் சாதாரண செலவில் அமைக்க வசதியுள்ள ஒதுக்குப் புறப் பகுதிகள் பல இருக்கின்றன. 100 கிலோ வாட்ஸ் வரை திறனுள்ள சிறிய நீர் மின்சார யந்திரங்கள், தற்போது நாட்டில் உற்பத்தி செய்யப் படுகின்றன. நீண்ட கால கண்ணோட்டத்தில் இவை டீசல் ஆல்டர்னேட்டர் செட்டுகளைவிட லாபகரமானதாகவும், பராமரிப்புக்கு லகுவானதாகவும் விளங்கும். இவைகளை வாங்கவோ அல்லது இயக்கவோ அயல் நாட்டு நாணய செலாவணி எதுவும் வேண்டியதில்லை. ஸ்தல சர்வேக்களை மேற் கொள்ளவும், அத்தகைய சிறிய யந்திரங்களை அமைப்பதில் உதவவும், மத்திய நீர், மின்சார கமிஷனில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரசாங்கங்கள் இந்த வகை மின்சார அபிவிருத்தியில் தனிக் கவனம் செலுத்தி, தகுந்த வேலைத் திட்டங்களை உருவாக்கலாம்.

29. கிராமங்களுக்கு மின்சார சப்ளைத் திட்டம் அவ்வளவு லாபகரமாக இல்லை. கிராமங்கள் ஒன்றுக்கொன்று தூரத்தில் தள்ளியிருப்பதும், மின் சாரம் குறைவாக உபயோகிக்கப்படும் நிலைமையும், கிராம மின்சாரத் தேவை, குறிப்பாக வேளாண்மைக்கான மின்சாரத் தேவை பருவத்துக்கு பருவம் மாறுபடும் தன்மையுமே இந்த நிலைமைக்கு முக்கியமான காரணங்கள். மின்சார உபயோகிப்பை அதிகரிக்கும்படிச் செய்வதற்காக, பல்வேறு விதமான பொருளாதார நடவடிக்கைகளை மாவட்டங்களில் இணைப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரதேசத் துக்கும் மிக ஜாக்கிரதையான முறையில் அபிவிருத்தித் திட்டங்களை, வகுத்துக்கொள்வது மூலம் இதைச் சாத்தியமானதாக்கலாம். அதாவது குறிப்பிட்ட பிரதேசத்தில் சிறிய பாசன வேலைகள், கருவி சாதனங்களைப் பெற கடன் வசதி, சர்விஸ் வசதி, நல்ல விதைகள், உரம், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் முதலிய பல்வேறு நடவடிக்கைகளுக்கும் வகை இருக்க வேண்டும். விவசாய, கைத் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதில் மின்சார வசதியானது அதிகபட்சம் உதவும்படியாகச், செய்ய வேண்டும். கிராமங்களில் மின்சார வசதி திட்ட வேலைகளை மேற் கொள்ளுவதற்கு இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் முன்கூட்டியே முன்னேற்பாட்டுத் திட்டம் வகுத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்து கொண்டால் வேறு துறைகளிலும் ஏக காலத்தில் நடவடிக்கை எடுக்க வகை செய்யலாம். மின்சார உபயோகிப்புக்கான வியக்தமான திட்டம், மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு அம்சமாக விளங்க வேண்டும். இதற்கான வகை செய்வதற்காக, மாநில மின்சார போர்டுகள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளுக்கும் சிறு நகரங்களுக்கும் கிடைக்கக்கூடிய மின்சார வசதி எவ்வளவு என்பதை சம்பந்தப்பட்ட மாவட்ட நிறுவனங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

மின்சார வசதி கிடைத்துள்ள அல்லது கிடைக்கவிருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராம அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆலோசனை கூறுவதற்காக ஒரு சிறு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில களுக்குச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வேலைத்திட்டங்கள் விரி

வான அளவிலும், சிறு நகரம், நகரத்தைச் சார்ந்த பகுதிகள்,கிராமத் தொகுதிகள் ஆகிய பகுதிகளுக்கு படிப்படியாக அமுலாக்கும் முறையிலும் தீர்க்கமான பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும். கூடுதல் மின்சார உற்பத்திக் கேற்ப, கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிப்பதற்காக இந்த மாவட்டத் திட்டங்களை, மாநிலத் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறை வேற்ற வேண்டும்.

இதர அம்சங்கள்.

30. 1948 ஆம் ஆண்டின் மின்சார (சப்ளை) சட்டப்படி எல்லா மாநிலங்களிலுமே சுயமாக இயங்கும் மின்சார போர்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத் துறையிலுள்ள மின்சார நிறுவனங்கள் நியாயமான அளவு லாபம் சம்பாதிப்பதும் வருங்காலத் திட்டங்களுக்கான நிதி சேமித்துக் கொள்ளுவதும் அவசியமாகும். மின்சாரப் பிரிவில் அரசாங்கத் தொழில் துறையின் முதலீடு அதிகரித்து வருவதாலும், மின்சார அபிவிருத்திக்கு மூல தனம் அதிகமாகத் தேவை என்பதாலும், மின்சாரத் தேவை அதிகரித்து வருவதினுலும், லாபமும் சேமிப்பும் மிக அவசியமானதாகின்றது.

31. மின்சார நிறுவனங்களின் பணிகளின் விளைவாக நிதி வரவினம் திருப்திகரமாக இல்லை என்று நிதி கமிஷன் 1957 ல் கூறியது. அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகள் சம்பந்தமான வட்டிப் பளுவைச் சரிக்கட்டும்படியான விதத்தில் மின்சார போர்டுகள் இயங்க வேண்டும், மாநில அரசாங்கங்கள் அதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என்றும் அது வலியுறுத்தியது. பல்வேறு மின்சார போர்டுகளின் நிதி நிலைமைகளை அண்மையில் பரிசீலனை செய்ததில், நிலைமையில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்பது தெரிந்தது. போர்டுகளின் நிதி நிலைமையில் கணிசமான அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய நடவடிக்கைகள் வருமாறு :—

(1) மின்சார உற்பத்திக்கு, மிக நல்ல முறையில் கட்டுபடியாகக் கூடிய திட்டங்களையே தெரிந்தெடுக்க வேண்டும்.

(2) நிர்மாணச் செலவுகளில் மிகுந்த சிக்கனம் அவசியம்.

(3) திட்டத்தினுல் கிடைக்கும் அனுகூலங்கள்—அந்த அனுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் காலம், இந்த இரண்டுக்கு மிடையே அதிகமான கால இடைவெளி இராவண்ணம் திட்டவேலை கட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் ;

(4) மின்சார உற்பத்தி யந்திரத்தையும் " லோடு " சக்தியையும் அபிவிருத்தி செய்யக் கூடிய முறையில் சாதனம் அமைத்து தற்போதைய உற்பத்தித் திறனை அதிகப்பட்ச அளவுக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் ;

(5) எரிபொருளில் சிக்கனமுறை, நஷ்டங்களைக் குறைப்பது முதலிய பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மின்சார நிலையங்களை (பவர் ஸ்டேஷன்) மிகத் திறமையாக நடத்த வேண்டும் ;

(6) அண்டை மாநிலங்களைச் சேர்ந்த மின்சார " கிரிட் " டுகளுடன் இணைப்புள்ள செயலாக்கம் ;

(7) " டாரிபுகள் " (Tariffs) மின்சாரக் கட்டணங்கள் ஆகியவைகளை திருத்தியமைத்தல்.

இந்த அம்சங்கள் உஷாராகப் பரிசீலிக்கப்பட்டு, வருமானத்தை அதிகரித்துக் கொள்ளத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

32. மின்சார யந்திரங்கள் கருவிகளுக்கு, இறக்குமதியை நம்பிக் கொண்டிருப்பது, துரிதமான மின்சார அபிவிருத்திக்கு ஒரு பெரிய இடையூறு என்பதை இரண்டாவது திட்டத்தின் அனுபவம் நமக்குப் புலப்படுத்தியிருக்கிறது. மூன்றுவது திட்டத்தில் கூட, யந்திரங்கள் கருவிகள் தேவையில் பெரும் பகுதிக்கு அயல் நாட்டிலிருந்து இறக்குமதியையே நம்பியிருக்க வேண்டியிருக்கும். போபாலில், முதலாவது கனரக மின்சார யந்திரங்கள் உற்பத்தி தொழிற்சாலை கட்டி முடிக்கப்படுவதுடன், மூன்றுவது திட்டத்தில் அது மேற் கொண்டு விஸ்தரிக்கப்படும். இதுபோக பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் மேற்கொண்டு மின்சாரக்கருவித் தொழிற்சாலைகளை அமைக்கவும் திட்டங்கள் உத்தேசிக்கப் பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் எல்லாம் பூர்த்தியானதும், நான்காவது திட்ட காலத்தில், ஹைட்ராலிக், ஸ்டீம் டர்பைன்ஸ், பாய்லர்ஸ், ஆல்டர்னேட்டர்ஸ், மோட்டார்கள், ஸ்விட்ச்கீர் போன்றவைகளில் நாட்டின் தேவையில் கணிசமான பகுதி பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

33. மின்சாரப் பெருக்குத் திட்டத்தின் சில அம்சங்களை, மூன்றுவது திட்ட காலத்தில் தொடர்ந்து கவனிக்க வேண்டியிருக்கும். அவை யாவன :—

(1) புதிய நீர்-மின்சார திட்டங்கள் பரிசீலனை.—தேசத்தின் நீர் மின்சார சக்தி ஆதாரம் சுமார் 4 கோடி கிலோவாட் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. மூன்றுவது திட்ட முடிவில், இதில் சுமார் 11 சதவிகிதம் தான் பயன் படுத்தப்பட்டிருக்கும். நீர் மின்சாரத் திட்டங்கள் மிக விரிவான அளவில் பரிசீலிக்கப்பட வேண்டியவை. பூர்ணமான அளவில் பரிசீலிக்கப்பட்டு முடிந்த திட்டங்கள் அதிகம் இல்லாதது, மலிவான இந்த மின்சாரம் துரிதமாகப் பெருகுவதற்கு இடையூறு ஆகும். பல மாநிலங்களில், பரிசீலனை வேலைக்கான தனி யூனிட்டுகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுவிட்டன. ஆனால் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. மூன்றுவது திட்டத்தில் இவ் விஷயமாக அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

(2) கிராமங்களில் மின்சார அபிவிருத்தி அமைப்புகளை நிர்மாணிப்பது சம்பந்தமாக, நிர்மாண கட்டளைக் குறிப்பு ஒன்றை மத்திய நீர்

மின்சார கமிஷன் ஏற்கனவே தயாரித்துள்ளது. கட்டுமான தரம் நிர்ணயிப்பதும், கட்டுமானச் செலவைக் குறைப்பதுமே இதன் நோக்கம். அனல் மின்சார நிலையங்கள் (தெர்மல்பவர் ஸ்டேஷன்), டிரான்ஸ் மிஷன் லைன்கள், சப்-ஸ்டேஷன்களை விஷயத்திலும் அதே ரீதியானநடவடிக்கை விரும்பத்தக்கதாகும்.

(3) ஆராய்ச்சி.—மின்சார உற்பத்தி, போக்கு வரத்து, வினியோகம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து, பெங்களூரில் கட்டப்பட்டுவரும் ஆராய்ச்சி நிலையத்தில், ஆராய்ச்சி வேலைகள் மேற் கொள்ளப்படும். ஸ்விட்ச் கீர் டிசைன்களைச் சோதிக்கவும், ஸ்விடச் கீர் அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாகவும் போபாலில் ஸ்விட்ச் கீர் சோதனை நிலையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

(4) லோடு சர்வே.—பல்வேறு பிராந்தியங்களிலும் லோடு தேவை பற்றி கிரமமான சர்வே மேற்கொள்ளவும், லோடு அளவுகள் குறித்து அவ்வப்போது பரிசீலனை செய்யவும், மாநில மினசார போர்டுகளும், மத்திய நீர் மின்சார கமிஷனும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(5) வடிவமைப்பு, நிர்மாணம்.—பெரிய நீர் மின்சார நிலையங்களையும் அனல் மின்சார நிலையஙகளையும் அமைப்பதில், திட்டம் வரையவும் வடிவ அமைப்பை (டிசைன்) உருவாக்கவும், கட்டுமான வேலைக் காகவும் நிபுணர்கள் ஸ்தாபனம் ஒன்றை அமைக்க வேண்டியதின் அவசியம் உணரப்பட்டுள்ளது. தற்போது அந்த வேலைகள் அயல் நாட்டு ஆலோசகர்களைக் கொண்டு செய்யப்படுகிறது. மூன்றாவது திட்ட காலத்தில் இத்தகைய நிபுணர்கள் நிறுவன அமைப்பை உருவாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

34. மின்சார நிலையங்களுக்கிடையிலும், மின்சார சிஸ்டம்களுக்கிடையிலும் பிணைப்புகள் ஏற்பட்டால், லோடை உயர்த்தியும், மாற்று யந்திரத் தேவையைக் குறைத்தும், உள்ள யந்திர வசதிகளை மிகத் திறமையாக. இயக்கியும், மின்சார சப்ளை நிறுவனங்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும் எனவே எல்லா பவர் ஸ்டேஷன்களும், சாத்தியமான வரை, ஒரு மாநில மின்சார "கிரிட்" டில் பிணைக்கப்பட வேண்டும். மாநில மின்சார இணைப்புகள் (கிரிட்) பிராந்திய அல்லது பிரதேச கிரிட்டில் இணைக்கப்படவேண்டும் இதன் மூலம் மின்சாரப் பரிவர்த்தனைக்கும், அதிகப்பட்ச அனுகூலங்கள் பெறுவதற்கும் வழி செய்து கொள்ள முடியும்.

35. பக்ரா-நங்கல், மச்கண்ட், துங்கபத்ரா, சாம்பல் முதலிய திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்களுக்குடையே ஒத்துழைப்பு இருந்து வந்திருக்கிறது. பெருமளவில் நீர் மின்சார உற்பத்திக்குரிய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, மூன்றாவது திட்ட காலத்தில் அத்தகைய ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கவேண்டும். இப்படிப்பட்ட நீர் மின்சார வசதிகளில் கணிசமான பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைகள் போன்ற பகுதிகளிலே உள்ளது.

இணைப்பு 1.

முன் தொடர்ச்சித் திட்டங்கள், நடுத்தர பாசனத் திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள்.

(ஆயிரம் ஏக்கர்கள்).

தொடர் எண்	மாநிலம்.	இரண்டாம் திட்ட முடிவில்.		மூன்றாவது திட்ட முடிவில்.	
		பாசன சக்தி.	உபயோகிக்கப் பட்டது.	பாசன சக்தி.	உபயோகிக்கப் பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	ஆந்திரப் பிரதேசம்	830	735	2,035	1,640
2	அஸ்ஸாம்	..	..	..	..
3	பீஹார்	915	720	2,840	1,980
4	குஜராத்	725	245	2,150	1,685
5	ஜம்மு காஷ்மீரம்	20	20	110	105
6	கேரளம்	370	355	540	540
7	மத்தியப் பிரதேசம்	80	60	1360	1,030
8	சென்னை	545	545	820	770
9	மகாராஷ்டிரம்	275	165	1,250	825
10	மைசூர்	780	475	1,470	1,420
11	ஒரிஸா	1,000	720	2,385	2,185
12	பஞ்சாப்	3,640	2,975	4,330	4,215
13	ராஜஸ்தான்	965	690	2,375	1,900
14	உத்தரப் பிரதேசம்	2,375	1,565	3,975	2,580
15	மேற்கு வங்கம்	1,700	1,290	2,685	2,235
16	மொத்தம்	14,220	10,560	28,325	23,110
	சுமார் (லட்சம் ஏக்கர்களில்) ..	140	105	280	230

குறிப்பு.—(1) "பாசன சக்தி" அளவு என்றால் கால்வாய் மதகிலிருந்து வெளிப்படும் நீரைக் கொண்டு பாசன வசதி ஏற்படுத்தக்கூடிய நிலத்தின் பரப்பு.

2. மேற்கண்ட புள்ளி விவரங்கள் எல்லாம் மொத்த பாசனப் பரப்பைக் குறிப்பவை; நிகரப் பரப்பை அல்ல.

இணைப்பு 2.

பல்வேறு மாநிலங்களில் மின்சார உற்பத்தித் திறன்

தொடர் எண்.	மாநிலம்.	உற்பத்தித் திறன் மெகா வாட்டுகளில். இரண்டாவது திட்டத் தொடக்கம்.	இரண்டாவது திட்ட முடிவு.	இப்போது வேலை நடை பெற்று வருகின்ற 2-வது திட்ட, திட்ட வேலைகள் பூர்த்தியானபின்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	ஆந்திரப் பிரதேசம்	180·0	303·6	482·4
2	அஸ்ஸாம்	6·6	20·0	55·0
3	பீஹார்	479·0	641·5	896·5
4	குஜராத்	300·0	405·0	445·0
5	ஜம்மு, காஷ்மீரம்	13·0	26·5	31·0
6	கேரளம்	89·0	166·0	350·0
7	மத்தியப் பிரதேசம்	140·5	305·2	450·7
8	சென்னை	167·0	582·0	732·0
9	மகாராஷ்டிரம்	508·0	788·5	1,038·5
10	மைசூர்	200·0	234·0	452·6
11	ஒரிஸா	21·0	280·6	390·1
12	பஞ்சாப்	152·0	377·4	467·4
13	ராஜஸ்தான்	71·0	169·1	265·6
14	உத்தரப்பிரதேசம்	324·0	423·0	833·0
15	மேற்கு வங்கம்	710·0	966·5	1,211·5
16	டில்லி	65·0	89·0	119·0
17	இதர யூனியன் பிரதேசங்கள் ..	7·2	11·5	11·5
18	மொத்தம்	3,433·3	5,789·4	8231·8

அத்தியாயம் 10

கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்

முதலாவது, இரண்டாவது திட்டங்களில் கிராமத் தொழில்களுக்கும் சிறுரகத் தொழில்களுக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இத் தொழில்கள் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன, அத்துடன் தேசிய பொருளாதாரத்தை விரிவான பரவல் முறையில் அமைத்துக் கொள்ள உதவுகின்றன என்பதே அதற்குக் காரணமாகும். இரண்டாவது திட்டத்தில் எதற்காக இவ்வேலைத்திட்டம் மேற் கொள்ளப்பட்டதோ, அதே லட்சியங் களுக்காகத்தான மூன்றாவது திட்டத்திலும் இவ்வேலை மேற்கொள்ளப் படுகிறது. அதாவது வேலை வசதிகள் ஏற்படுத்துவது, உபயோகப் பொருள் கள் சாதாரண உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் தேவை அதிகரிப்பது சம்பந்தமாக அத்தேவையில் கணிசமான பகுதியைச் சரிக்கட்ட வகை செய்வது, வேளாண்மையுடனும் பெரிய ரகத் தொழில்களுடனும் நெருங்கி இணைந்த முறையில், முற்போக்கான பரவல் முறை பொருளாதாரத்துக்கு வழி கோலுவது ஆகியனவே அந்த லட்சியங்களாகும். மூன்றாவது திட்டத்தில், மேலும் விரிந்த அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். கிராமப் பகுதிகளிலும் சிறிய நகரங்களிலும் இத் தொழில்களைப் பெருக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

2. வேலைத் திட்டங்கள், தொடர்ந்து கீழ்க்கண்ட கொள்கை முறையி லேயே அமையும் :

(1) மக்களின் அதிகரித்துவரும் தேவைகளைச் சரிக்கட்டுவதில், பெரிய தொழில்களும் சிறு தொழில்களும் எந்த அளவில் உதவி வருகின்றன என்பது, பல்வேறு தொழில்களுக்குமான பொது உற்பத்தித் திட்டத்தின் பகுதியாகவே கொள்ளப்படும்."

(2) சிறிய தொழில்கள், தங்கள் ஸ்தாபன அமைப்பையும், தொழில் நுட்பத் திறனையும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு உதவி செய் யப்படும்.

(3) கூட்டுறவு முறையில் தொழில் அமைத்துக்கொள்ள, குறிப்பாக கிராமப்பகுதிகளில் அவ்வாறு அமைத்துக் கொள்ள, தொழில் வினைஞர் களுக்கு உதவி அளிக்கப்படும்.

முன்னேற்றம் பற்றி பரிசீலனை.

3. கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள், சிறு ரகத் தொழில்கள் (கைத் தொழில் பண்ணைகள் உள்பட), கைவேலைப் பொருள் தொழில்கள், பட்டுத் தொழில் ஆகியவற்றின் வேலைத் திட்டங்கள் வர்த்தக-கைத தொழில் துறை அமைச்சரகத்தினுல் ஏற்படுத்தப்பட்ட 6 செயல் குழுக் களால் அண்மையில் பரிசீலிக்கப்பட்டன. சமுதாய நல வளர்ச்சித்

திட்டத்தின் கீழ் 1955-ல் மேற்கொள்ளப்பட்ட 25 கைத் தொழில் பரிட்சார்த்த (பைலட்) திட்டங்களின வேலைகளும், ஆய்வுக் குழு ஒன்றினுல் பரிசீலிக்கப்பட்டன. இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பொதுப்படையாக ஊக்கமூட்டுவதாகவே இருக்கிறது.

4. **கைத்தறியும் கதரும்.**—கைத்தறித் துணி உற்பத்தி 1950–51-ல் 74.2 கோடி கெஜமாக இருந்தது. 1960–61-ல் அது 212·5 கோடி கஜமாக அதிகரிக்கும். 1950–51-ல் சுமார் 70 லட்சம் கெஜம் கதர் உறபத்தி யாஇயது. 1960–61-ல், வழக்கமான முறையில் தயாரிக்கப்பட்ட கதரின் உற்பத்தி சுமார் 4.8 கோடி கெஜமாகவும், அம்பர் சர்க்கா நூலும் சாதாரண ராட்டை நூலும் சேர்த்து நெய்யப்பட்ட கதரின உற்பத்தி 3.2 கோடி கெஜமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1953–54 மத்தி யில் கூட்டுறவுத துறையில் மொத்தம் 6,80,000 தறிகள் இருந்தன. 1959–60 தொடக்கததில் இந்தத் தறிகள் தொகை 12 லட்சமாக அதி கரித்துள்ளது. சுமார் 30 லட்சம் கைத்தறி நெசவாளருக்கு நிறைவான வேலை வசதியும், சுமார் 10 லட்சம் பேர்களுக்கு நூல் நூற்பில் பகுதி நேர வேலை வசதியும் ஏற்படுத்தப்பட்டது. சரஞ்சம் காரியாலயங்களில் கருவிகள் உற்பத்தி அல்லது பழுதுபார்ப்பதில் தச்சர்கள், கருமார்கள் முதலியோருக்கு முழுநேர வேலைவசதி ஏற்பட்டது. இரண்டாவது திட்ட காலத்தின் பிற்பாதியில் கதர் விற்பனை விஷயமாக சங்கடங்கள் ஏற் பட்டன. கைத்தறி துணி விற்பனையிலும அவ்வப்போது மந்த நிலைமை ஏற்பட்டது. கைத்தறி நெசவாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள், விசைத் தறிகளை அமைக்கும் பணியில் அவ்வளவு முன்னேற்றம் காணவில்லை. ஏற்கனவே 13,000 விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1960–61 முடிவில், அதில் சமார் 3,500 தறிகள்தான் ஏற்படக்கூடும்.

5. **சிறுரக கைத்தொழில்கள்.**—தேனிரும்பு, உருக்கு, இரும்பு அல்லாத உலோகங்கள் போன்ற அடிப்படைக் கச்சாப் பொருள்களில் பற்றுக்குறை இருந்தும் கூட, சிறுரக கைத்தொழில்களின வளர்ச்சி நல்ல முறையி லேயே இருக்கின்றது. தையல் மிஷின்கள், மின்சார விசிறிகள், சைக்கிள், கட்டிட இரும்புச் சாமான்கள், கைவேலைக் கருவிகள் உள்பட பல தொழில் களில் உற்பத்தி 25 லிருந்து 50 சத விகிதம் வரை அதிகரித்திருக்கிறது. சில தொழில்களில் உற்பத்தி இன்னும் அதிகம். 1956-ல் மேற்கொள்ளப் பட்ட, தவணை முறையில் பணம் செலுத்தித் தீர்க்கும் திட்டத்தின் கீழ் (hire purchase scheme) தேசிய சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் ரூ. 2 கோடி பெறுமான யந்திரங்களைச் சப்ளை செய்திருக்கிறது. கைத் தொழில் பணி விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாநிலங்களிலும் சிறு தொழில் பணி நிறுவனங்கள் (small industries service units) ஏற்படுத்தப்பட்டுள்ளன. 42 தொழில் பணி விஸ்தரிப்பு நிலையங்களை நிறுவப்பட்டிருக்கின்றன. சிறு தொழிலதிபர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, தொழில் வர்த்தக நிர்வாக பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியான பல்வேறு வகை சாமான்களைப் பொறுத்த வரையில் 1953–54-ல்

அரசாங்கம் ரூ. 75 லட்சம் பெறுமான சாமான்களை வாங்கியது. 1958–59-ல் அக்கொள்முதலின் அளவு ரூ. 4.5 கோடியாக அதிகரித்திருக்கிறது. இரண்டாவது திட்ட முடிவில் சுமார் 60 கைத் தொழில் பண்ணைகள் ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றுள், மொத்தம் சுமார் 10,000 பேருக்கு வேலை அளிக்கக் கூடிய 700 தொழிற்சாலைகள் அல்லது தொழில் கூடங்கள் இருக்கும். இரண்டாவது திட்ட முடிவில் சுமார் 3 லட்சம் பேருக்கு முழு நேர வேலை வசதி ஏற்பட்டுவிடும். ஆனால் பெரிய ரகத் தொழில்களுக்குத் துணையான சிறு தொழில்கள் என்ற முறையிலும், தொழில்கள் பரவலாக அமைவதிலும், பொது உற்பத்தித் திட்டங்களை வகுத்துக் கொள்வதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. வருங்காலத்தில் இந்த அம்சத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியம். தொழில் விஸ்தரிப்புப் பணி ஸ்தபன அமைப்பையும் பலப்படுத்தியாகவேண்டியிருக்கிறது. உற்பத்தி தொழில் பயிற்சி நிலையங்கள் விஷயமாக பிரச்சினையை புதிய முறையில் அணுகவேண்டியதும் அவசியமாகும்.

6. **கிராமக் கைத்தொழில்கள்.**—தொழில் நுட்ப அறிவு குறைவாகவும், பயிற்சியும் அனுபவமும் உள்ள மேற்பார்வை அலுவலர்கள் பற்றாக் குறையாகவும் இருக்கும் நிலைமையானது, கிராமத் தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் கிராமக் கைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தை, இதர கிராம அபிவிருத்தித் திட்டங்களுடன் பிணைத்துக் கொள்ளுவதும், வட்டாரங்களிலும் கிராமங்களிலும் பணியாற்றும்படியாக திறம்பட்ட ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொள்ளுவதும் அவசியமாகும். இந்த கிராமத் தொழில்கள் கிராமத் தொழில் வினைஞர்களுக்கும், கிராமங்களில் போதிய அளவு வேலை இல்லாமல் இருக்கும் பெண்களுக்கும் ஓரளவு நிவாரணமளிக்கின்றன என்றாலும், நிறைவான ஊதியமுள்ள வேலை அளிக்கவோ, ஓரளவு பயிற்சியும் கல்வியும் உள்ள இளைஞர்களை ஆகர்ஷிக்கவோ இவற்றினால் இயலவில்லை. இரண்டாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் நிதி வசதி கொஞ்சமாகத்தான் பயன்படுத்தப்பட்டது. திறமையான தொழில் நுட்ப முறைகளைப் பரப்புவதிலோ, கச்சா பொருள்களை முறையாகச் சப்ளை செய்வதிலோ விற்பனை வசதிகளிலோ அதிகமாக எதுவும் சாதிக்கப்படவில்லை. திட்டத்தின் கடைசி இரண்டு வருஷங்களில் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. **கை வேலைத் தொழில்கள்.**—கைவேலைத் தொழில்கள் குறித்து போதுமான அளவு புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால் ஏற்றுமதியிலும் உள்நாட்டில் விற்பனையிலும் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. கடன் வசதியின்மை, தொழில் நுட்பம் தெரிந்தவர்களும் பயிற்சிபெற்ற நபர்களும் போதுமான அளவு இல்லாமை, சில அத்யாவசிய கச்சா பொருள்களில் பற்றாக்குறை ஆகிய நிலைமைகள் இத்தொழிலின் வளர்ச்சிக்கு இடையூறுகளாய் அமைந்தன.

8. **பட்டுத் தொழில்.**—1956-ல் கச்சாப் பட்டு உற்பத்தி 30.5 லட்சம் ராத்தலாக இருந்தது. 1958-ல் இந்த உற்பத்தி 33.4 லட்சம் ராத்தலாக அதிகரித்தது. 1960–61-ல் பட்டு உற்பத்தி 40 லட்சம் ராத்தலாக இருக்க வேண்டும் என்பது மத்திய பட்டுத் தொழில் போர்டு நிர்ணயித்துள்ள லட்சிய அளவு ஆகும். கச்சா பட்டு உற்பத்திச் செலவு மிக அதிகமாக இருப்பதே இத் தொழிலின் மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது.

9. **கயறு தொழில்.**—கயறு தொழிலில் முன்னேற்றம் பொதுப்படையாக மிக நிதானமாகவே இருக்கின்றது. கயிறு தொழில் விசாரணைக் கமிட்டி அண்மையில் இத்தொழில் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப் பரிசீலனை செய்தது. கயறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் ஸ்தாபன அமைப்பையும் நிதி நிலைமையையும் பலப்பட்டுத்துவதற்காக கமிட்டி கூறியிருந்த சிபார்சுகள் அமுலாக்கப்படுகின்றன.

மூன்றுவது திட்டத்துக்கான வேலைத் திட்டங்கள்.

10. மூன்றுவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கிய லட்சிய அளவுகள் வருமாறு: —

அட்டவணை : உத்தேச லட்சிய அளவுகள்.

	யூனிட்	1960–61 (எதிர்பார்க்கப் படுவது).	1965–66 (லட்சிய அளவு)
	லட்சம் கஜங்கள்.		
கைத்தறித்துணி		21,250	35,000
விசைத் தறித் துணிகள்—			
(அ) கைத்தறித் துறையில்		4,050	
(ஆ) மற்றவை			
கதர்—			
(அ) சாதாரண ராட்டை கதர்		480	
(ஆ) அம்பர் ராட்டை கதர்		320	
		26,100	
கச்சா பட்டு	லட்சம் ராத்தல்கள்	37	50
கைத்தொழில் பண்ணைகள் ..	எண்ணிக்கை.	60	360
கைத்தறிப் பிரிவில் ஏற்படுத்தப்பட வேண்டிய விசைத் தறிகள்.	,,	3,500	13,000

சிறு ரகத் கைத்தொழில்கள், கைவேலைத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் ஆகியவைகளுக்கு கூடுதல் கடன் வசதி, பயிற்சி வசதிகள், தொழில் நுட்ப உதவி, விற்பனை வசதி முதலியன அளித்து அத் தொழில்களை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

11. கிராமத் தொழில்கள், சிறுரக கைத்தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்றுவது திட்டத்தில் பொது துறையில் தற்காலிகமாக ரூ. 250 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத் தொகை பல்வேறு தொழில்களுக்கும் தற்காலிகமாக எப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பதையும் இரண்

டாவது திட்ட காலத்தில் இந்த இனங்களில் செலவு விவரத்தையும் கீழே காணலாம்.—

அட்டவணை 2.—தற்காலிக ஒதுக்கீடுகள்.

	இரண்டாவது திட்டம். (எதிர்பார்க்கப்படும் செலவு).	மூன்றாவது திட்டம். (தற்காலிக ஒதுக்கீடு).
	(ரூபாய்கள் கோடியில்).	
கைத்தறித்துறையில் கைத்தறி விசைத் தறிகள் ..	32·1	36·0
கதர், அம்பா ராட்டைக கதர், கிராமக் கைத்தொழில்கள்.	80·5	89·0
சிறு ரகக் கைத்தொழில்கள், தொழில் பண்ணைகள் ..	56·3	107·0
கைவேலைத் தொழில்கள்	5·3	8·0
பட்டுத் தொழில்	3·8	7·0
கயறு தொழில்	2·0	3·0
மொத்தம்	180·0	250·0

12. திட்டங்களைத் தயாரிப்பதில் விரிவான முறையில் வேலை செய்ய வழி செய்வதத மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக ஒதுக்கீடு களின் நோக்கமாகும். மேற்கொண்டு பரிசீலனைகள் செய்து முடிந்ததும் சில துறைகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கவேண்டி நேரலாம். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும், கிராமத் தொழில், சிறு ரகத் தொழில்கள் வளர்ச்சிக்கு ஒதுக்கும் ரூ. 250 கோடி போக, சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்கள், குடி பெயர்ந்த மக்கள் புனரமைப்புத் திட்டம், சமூக நலத் திட்டங்கள், பின்னடைந்த வகுப்பினர் நலம் முதலிய வைகளின் கீழும் சிறு தொழில் வளர்ச்சிக்கு நிதி வசதிகள் உள்ளன. ஆனால் கடன் வசதிகள் முயலியன இடைக்கும் வரையில் தேவைப்படு கின்ற நடை முதல் மூலதனச் செலவுகள், இந்தத் தொகையில் உள்ளடங்கும்.

13. கிராமத் தொழில்கள், சிறுரகத் தொழில்கள் அபிவிருத்திக்கு பாங்க் நிறுவனங்களிடமிருந்து அதிக நிதி வசதி பெறுவதற்காக, இத் தொழில்களுக்கு அளிக்கும் கடனுக்கு அரசாங்க உத்தரவாதம் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கடன் உத்தரவாதம் சம்பந்தமாக அரசாங்கம் விரைவில் மேற்கொள்ளவிருக்கும் பரீட்சார்த்தத் திட்டத்தின் கீழ், ஆரம்ப வருஷங்களில், வசூலாகாமற் போகும் கடன் பாக்கியில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். அரசாங்கத்தின் சார்பில் இந்திய ரிசர்வ் பாங்க் இத் திட்டத்தை நடத்தும். கதர், கிராமக் கைத்தொழில் கமிஷன் போன்ற நன்கு ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் ஸ்தாபனங்களிடமிருந்து நிதி வசதி பெற முயற்சிக்கலாம் என்றும், அதற்காக அவசியமானால் அரசாங்க உத்தரவாதம் அளிக்கலாம் என்றும் ஒரு உத்தேசம் இருக்கிறது.

14. பொதுத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை தவிர்த்து, தனியார் துறை சுமார் ரூபாய் 275 கோடி முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மொத்த முதலீட்டின் அடிப்படையில் பல்வேறு தொழில் திட்டங் களுமாக சேர்ந்து சுமார் 50 லட்சம் பேர்களுக்கு பகுதி நேர வேலையோ நிறைவேலையோ அளிக்கும் என்றும் சுமார் 8 லட்சம் பேர்களுக்கு முழு

நேர வேலை அளிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. கைத்தறித் தொழில், கைத்தறித் துறையில் விசைத் தறிகள், கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்கள் நிறைவேலையும், கதருக்காக கையால் நூற்கச் செய்யவும் வேலைத் திட்டம் பகுதி நேர வேலையும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் பண்ணைகள், கைவேலைத் தொழில்கள், பட்டுத் தொழில்,கயறு நூற்பு, நெசவு உள்ளிட்ட சிறு கைத்தொழில் வேலைத் திட்டங்கள் பெரும்பாலும் முழு நேர வேலை வசதியையே ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

15. இத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதில் அடிப்படை வசதிகளையும் உதவியையும் செய்து கொடுக்கவேண்டும் என்பதே வேலைத் திட்டங்களின் நோக்கமாகும். பொருளாதார அம்சத்தில் இவைகளை தன்னைக் கட்டிக்கொண்டு போகும் தொழில்களாக்குவதற்காக தொழில் நுட்ப விஷயத்திலும் ஸ்தாபன அமைப்பிலும் திறமையை அதிகரிக்க முக்கிய கவனம் செலுத்தப்படும். உதவித் தொகை, விற்பனையில் கழிவு, பாதுகாப்பான மார்க்கெட் வசதி ஆகியன படிப்படியாகக் குறைக்கப்படும். ஆக்க பூர்வ உதவிகள் மூலம் தொழிலாளரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முயற்சிகள் செய்யப்படும். தற்போதைய தொழில் நுட்பம், கருவி முதலியவைகளை அபிவிருத்தி செய்யவும் அதே சமயத்தில், உயர்தர தொழில் நுட்பம் போதிக்கவும் புதிய தொழில் கருவிகளை ஈடுபடுத்தவும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இதற்காக பொது தொழில் சர்விஸ் வசதிகள் உள்பட விரிவான தொழில் நல விஸ்தரிப்பு சர்விசையும் ஏற்படுத்த வேண்டும். தொழில் வினைஞர்கள், தொழில் நடத்துவோர், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியோருக்கு தொழிற்சாலைக்கான இட வசதி, கடன், விற்பனை, தொழில் நுட்ப ஆலோசனை முதலிய உதவிகள் அளிக்கவேண்டும். தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற இளைஞர்கள், சிறு ரகத் தொழில்களை ஜீவனோபாயமாக மேற்கொள்ளுவதற்கு, இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும். கட்டிடங்கள், நிர்வாகச் செலவு முதலியன குறைந்த பட்ச அளவிலேயே நிற்கும்படிச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். விற்பனை நிலையங்கள் விற்பனை டிபோக்கள் முதலியவைகளை ஏற்படுத்துவதிலும் விளம்பரங்கள் செய்வதிலும், முயற்சியும் செலவும் இரட்டித்துப் போகாமல் தவிர்க்க பல்வேறு போர்டுகளும் மாநில அரசாங்கமும் இந்த முறையில் பணியாற்றவேண்டும் பயிற்சி வசதிகளை ஏற்படுத்துவதில், குறிப்பாக கிராமிய தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சி வசதிகள் ஏற்படுத்துவதில் பல்வேறு மத்திய அமைச்சங்கள் மாநில அரசாங்கங்கள் ஆகியவைகளின் வேலைத் திட்டங்கள் தகுந்த முறையில் ஒருமுகப்படுத்தப்படவேண்டும்.

16. கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளும் 1958-ல் விசேஷ செயல் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்பட்டன. அதன் சிபார்சுகள் மீது அரசாங்கம் ஏற்கனவே முடிவுகளைச் செய்திருக்கிறது. முடிவுகளை அமுலாக்குவதின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பலப்படும். சிறிய தொழிலதிபர்கள் தொகை மிகுதியாக

இருக்கும் சிறு ரகத் தொழில்கள் துறையில், கைத்தொழில் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்குமாறு செய்யவேண்டும். அத்தகைய சங்கங்கள் பல இருக்கின்றன. ஆனல் அவைகளில் உறுப்பினர்கள் தொகையை அதிகரிக்கவும், அவைகளைப் பெரிய சங்கங்களில் இணைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள்.

17. பொதுத் துறை திட்டச் செலவின் கீழ் நிதி உதவி பெறும் வேலைத் திட்ட விவரங்களை போர்டுகளும் மாநில அரசாங்கங்களும் இன்னும் சில மாதங்களில் தயாரித்து முடிக்கும். இப்போதுள்ள நிலையில் அந்த வேலைத் திட்டங்களின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

18. **கைத்தறி, கதர் :—**மொத்தம் 930 கோடி கெஜம் துணி உற்பத்தி செய்யவேண்டும் என்பது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் பரவல் முறையான துணி உற்பத்தித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 350 கோடி கெஜம். பரவல் முறை துணி உற்பத்தித் துறையில் கைத்தறி, கைத்தறி துறையைச் சேர்ந்த விசைத் தறி, இதர விசைத் தறிகள், கதர் (அம்பர் ராட்டை நூல் கலந்த கதர் உள்பட) ஆகிய வகைகளுக்கு இதை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது இன்னும் முடிவாகத் தீர்மானிக்கபடவில்லை. ஆனாலும் கைத்தறி துறையில் உற்பத்தி லட்சிய அளவானது 1965–66-க்குள் 280 கோடி கெஜமாகவேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. தற்சமயம் செயலற்றுக் கிடக்கும் சுமார் 2 லட்சம் தறிகளை முனைப்பான உபயோகத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், தொழில் நுட்ப முறைகளில் அபிவிருத்தி மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கவேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தொழில் நுட்ப முறை அபிவிருத்தி என்பதில் ஓரளவு தானாக இயங்கும் தறிகளை ஏற்படுத்துவதும் உள்ளடங்கும். கைத்தறி வளர்ச்சிக்கான கூட்டுறவு அமைப்புகளை பலப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறிப் பிரிவில் விசைத் தறிகள் விஷயமாக இரண்டாம் திட்ட காலத்தில், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 13,000 விசைத்தறிகளை ஏற்படுத்துவதில் முனைப்பாகக் கவனம் செலுத்தப்படும். கதர் உற்பத்தியைப் பொறுத்த வரை பெருமளவில் கையிருப்பு தேங்கி விற்பனைச் சங்கடங்கள் நேருவதைத் தவிர்க்கும் முறையில் உள்ளநாட்டுத் தேவைகளைச் சரிக்கட்டுமளவுக்கு உற்பத்தி அதிகரிப்பை ஒழுங்குபடுத்தவேண்டும்.

19. **கிராமக் கைத்தொழில்கள் :—**கிராமக் கைத்தொழில்கள் அபிவிருத்தி விஷயத்தில் சமீப வருஷங்களில் நிறைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. மூன்றுவது திட்ட காலத்தில் இந்தத் தொழில் நடவடிக்கைகள் ஸ்திரப்படுத்தப்படும். அத்துடன் சில தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முனைப்பான வேலை மேற்கொள்ளுவதும், கிராமக் கைத்தொழில் வேலைத் திட்டங்களையும் இதர கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் ஒருமுகப்படுத்துவதும் மூன்றுவது திட்ட வேலையின் முக்கிய அம்சமாக இருக்கும்

நீண்ட கால கண்ணோட்டத்தில் பார்த்தால் தற்போது இருந்துவரும் கிராமக் கைத்தொழில் முறை மாறிவிடக்கூடும். முன்னேற்றமடைந்த கிராம மக்களின் தேவைகளைச் சரிக்கட்ட முற்படும் முறையில், புதிய தொழில் நுட்ப முறைகளை இத்தொழில்கள் மேற்கொள்ளக்கூடும். அனுபவத்தின் பயனாக, கதர் கிராமக் கைத் தொழில் கமிஷன் ஏற்கனவே சில தொழில் முறைக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. காகிதம் செய்வதற்கான கூழ் தயாரித்தல், உணவுக்கல்லாத எண்ணெய் வித்துக்களை ஆட்டுதல் வெல்லம், கண்டசாரி, பனஞ்சாற்றிலிருந்து சக்கரை தயாரிப்பு ஆகியவை களுக்கு மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது. கிராமக் கைத்தொழில்களுக்கு பரவல் முறையில் மின்சாரம் உபயோகிப்பது பற்றி மேற்கொண்டு பரி சீலிக்கப்பட்டு வருகிறது. கிராமக் கைத்தொழில்களுக்கான வேலைத்திட்டங் கள் அந்தந்தப்பகுதியின் அபிவிருத்திக்கு கணிசமாக உதவும் வகை யில் இருக்கவேண்டும். இந்த வகையில் கதர், கிராமக் கைத்தொழில் கமிஷன், அரசாங்க கதர் கிராமக் கைத்தொழில் போர்டு, மாநில அரசாங்கங்கள் ஆகியவைகளின் வேலைத் திட்டங்கள் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும்.

20. திறம்பட்ட முறையில் நடத்தப்படும் கிராமக் கைத் தொழில்கள், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும், வேலையில்லாத் திண்டாட்டம், போதிய அளவு வேலை இல்லாமலிருக்கும் நிலைமை, ஆகியவைகளைத் தீர்ப்பதிலும் பேருதவியாக இருக்கும். கிராமத் தொழில் வினைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது சம்பந்தமாக ஒரு விரிவான வேலைத் திட்டம் மூன்ரு வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும். அந்த வேலைத் திட்டத்தில், போதிய அளவு பயிற்சி வசதி, நியாயமான வட்டியுடன் சுலபமாக திருப் பித்தரக் கூடிய கடன் வசதி, தொழில் நல விஸ்தரிப்பு திட்டங்கள் மூலம் தொழில் நுட்ப உதவி, நவீன வகைக் கருவிகளைச் சப்ளை செய்வது, போதிய அளவு சப்ளை இல்லாத கச்சா பொருள்களை கொள்முதல் செய்ய வசதி, விற்பனை டிபபோக்கள் மூலம் பொருள்கள் விற்பனைக்கு உதவி, அரசாங் கத்திற்குப் பொருள்கள் கொள்முதல், அவசியமான இடங்களில் தொழில் கொட்டகைகள் முதலியவைகளுக்கு வகை செய்யப்பட்டிருக்கும்.

21. **சிறு ரக கைத்தொழில்கள்.**—மூன்ருவது திட்டத்தில் சிறு தொழில் கள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். அவையாவன. (அ) தொழில் நலப் பணிகள், பொது தொழில் சர்வீஸ் வசதிகள், தவணை முறையில் கிரயத்தைச் செலுத்தும் வகையில் யந்திரங்கள் சப்ளை, பயிற்சி வசதி, பொருளாதார ஆராய்ச்சி சர்வேக்கள் முதலியவைகளில் தற்போதுள்ள திட்டங்களை விஸ்தரிப்பது, (ஆ) தொழிலில் உள் உபயோகப் பொருள்கள், உபகரணங்கள் அபி விருத்திக்கு வகை செய்வது.

சிறு தொழில் அபிவிருத்தி வேலைகள், கூடுமான வரை மின்சார அபிவிருத்தித்திட்டங்களுடன் பிணைக்கப்படும். ஏற்கனவே உள்ள அல்லது ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரப் போக்கு வரத்து லைன்களுக்கு

அருகாமையில் பல சிறு தொழில்களை உருவாக்கவும் முயற்சிகள் செய்யப் படும். சிறு நகரங்களுக்கும் கிராமப் பிரதேசங்களுக்கும் மின்சார சப்ளையை விஸ்தரிக்கும்போது மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் மின்சாரத்தை உபயோகித்துக்கொள்வதற்கு விரிவான வேலைத் திட்டங்களை வகுத்துக் கொள்ளவேண்டும். மாவட்டம், அபிவிருத்தி வட்டாரம் சம்பந்தப்பட்ட நிறு வனங்களும் மாநில அரசாங்கங்களும் இதற்கு ஆவன செய்ய வேண்டும். தொழில் வினைஞர்கள், கூட்டுறவு அமைப்புகள், சிறு தொழில்கள் நடத்துவோர் ஆகியோருக்கு முடியுமான எல்லா வசதிகளும் அளிக்க முயற்சிக்கவேண்டும்.

22. பெரிய தொழில்களுக்கு வேண்டிய உபகாரணங்களைத் தயாரிக்கக் கூடியனவாகவும், தம்மிச்சையான முறையில், தொழில் உள்வேலைகளுக்கு உதவக்கூடியனவாகவும் சில தொழில் திட்டங்கள், இரண்டாவது திட்டத்தில் தொடங்கப்பட்டன. இந்த முறையில் பெரிய தொழில்களுக்குச் சில சங்கடங்கள் ஏற்பட்டன. அதாவது சிறிய தொழில்களிடமிருந்து சப்ளை ஒழுங்காக கிரமமான முறையில் கிடைப்பதில்லை என்றும், அந்தப் பொருள்களின் தரம் ஒரே சீராக இல்லை என்றும் கூறப்பட்டது. சிறிய தொழில்கள் தங்கள் சங்கடங்களை எடுத்துரைத்தன. போதிய யந்திரக் கருவி வகைகள் கிடைப்பதில்லை என்றும், வரைப்படங்கள், டிசைன்கள், அளவு வகைகள் முதலியவற்றைப் பெற போதிய வசதிகள் இல்லை என்றும் அவை தெரிவித்தன. வர்த்தக கைத்தொழில் அமைச்சரகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கமிட்டி ஒன்று தற்போது இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்து வருகிறது.

23. பல்வேறு சிறு தொழில்கள் குறித்து, சென்ற சில ஆண்டு களாகவே அகில இந்தியா அளவிலும், பிரதேச அளவிலும் சர்வேக்கள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக கைத்தொழில் அமைச்சரகத்தின் பொரு ளாதார விசாரணை குழுக்கள் இந்தச் சர்வே வேலையை மேற்கொண்டன. இத்தொழில்கள் வளர்ச்சி சம்மந்தப்பட்ட முக்கியாம்சங்களை மேற்கொண்டு விரிவாகப் பரிசீலித்து, வருங்கால அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை வகுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறு ரக கைத்தொழில்கள் பெரியரகத் தொழில்களுக்கு எந்த அளவுக்கு உதவ முடியும், இந்த ஏற்பாட்டின் மூலம், தொழில் வளர்ச்சியில் பரவல் முறை எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பன முக்கியமான அம்சங்கள். வருங்கால தொழி லபிவிருத்திக்கான திட்டம் வகுக்கும்போது, இந்த முக்கிய அம்சங்கள் கவனிக்கப்படும்.

முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் பஞ்சு ஜவுளிகள், விவசாயக் கருவிகள் போன்ற சில தொழில் துறைகளில், பெரிய தொழில் யூனிட்டுகளும், சிறு தொழில் யூனிட்டுகளும் எது எதை உற்பத்தி செய்ய லாம் என்று வரம்பிடப்பட்டது. சைக்கிள், தையல் மிஷின், ஸ்டோரேஜ் பாட்டரி போன்ற தொழில்கள் விஷயத்தில் தேவைகளை மதிப்பிட்ட பிறகு, பெரிய தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் தனித்தனியாக உற்பத்தி லட்சிய அளவுகள் நிர்ணயிக்கப்பட்டன. விவசாயக் கருவிகள், யந்திரங்கள்,

கைவேலைக் கருவிகள், சைகிள்கள், சைகிள் பாகங்கள், தையல் மிஷின்கள், தையல் மிஷின் பாகங்கள், மோட்டார்கள், டீசல் இஞ்சின் பாகங்கள், ரேடியோ ரிசீவர்கள், ஆம்ப்ளிபையர்கள், தோல் பதனிடுதல், மிதியடி, பழங்கள், காய்கறி பதனம், பஞ்சு ஜவுளி யந்திர பாகங்கள், மின்சார மோட்டார் (பகுதிகள்), மின்சார விசிறிகள், வர்ணங்கள், வார்னிஷ்கள், ஸ்டோரேஜ் பாட்டரிகள், விஞ்ஞான கண்ணாடி சாமான்கள், அறுவை சிகிச்சை-கணித கருவிகள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்ற தொழில்களில் இதே ரீதியில் மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

24. **தொழில் பண்ணைகள்.**—இரண்டாவது திட்ட காலத்தில் தொடங் கப்பட்டு ஆனால் முடிக்கப்படாமலிருக்கும் தொழில் பண்ணைகளைப் பூர்த்தி செய்வதற்கே முதலிடம் கொடுக்கப்படும். மூன்றாவது திட்டத்தில் பல் வேறு அளவிலுமாக சுமார் 300 புதிய தொழில் பண்ணைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவை கூடுமான வரை, நடுத்தர நகரங்களிலும் சிறு நகரங்களிலும், மின்சாரம், தண்ணீர் சப்ளை, போக்குவரத்து வசதி போன்றவை உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப்பகுதிகளிலும் அமைக்கப்படும். ஒரு கிராமிய கைத்தொழில் பண்ணை ஒரு சில தொழில் கொட்டகைகளைக் கொண்டே அமைக்கப்பட்டு விடலாம். போதுமான அளவு தொழில் வினைஞர்கள் உள்ளதாகவும், பொருளாதார முன்னேற்றம் ஏற் படுவதைத் தொடர்ந்து தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படுவதற்கு வசதி இருப்பதாயும் உள்ள இடங்களாகப் பார்த்து இந்த தொழில் பண்ணைகளை அமைக்க கவனம் செலுத்தப்படும்.

25. **கைவேலைத் தொழில்கள்.**—கைவேலைத் தொழில் பொருள்களின் தரத்தையும், விற்பனை வசதியையும் அபிவிருத்தி செய்வதே மூன்றாவது திட்டத்தில் முக்கியாம்சமாக இருக்கும். இது சம்பந்தமாக, தொழில் வினை ஞர்களுக்கு கச்சா பொருள்கள் பெற்றுக் கொடுக்கவும், நல்ல மாதிரி டிசைன்கள், கடன் வசதிகள் ஆகியவைகளுக்கு வகை செய்யவும் முயற்சிக்கப் படும். போர்டினால் ஏற்படுத்தப்பட்ட டிசைன் நிலையங்கள், உற்பத்தி பயிற்சிக்கான பரீட்சார்த்த நிலையங்கள், மாநில அரசாங்கங்கள் மேற் கொள்ளும் இது போன்ற இதர நடவடிக்கைகள் ஆகியவைகளை ஒரு முகப்படுத்த முயற்சி செய்யப்படும்.

26. **பட்டுத் தொழில்.**—மூன்றாவது திட்ட காலத்தில் கச்சா பட்டு உற்பத்திக்கான லட்சிய அளவு 50 லட்சம் ராத்தல் என்று தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முசுக்கட்டைச் செடி ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கச் செய்வது மூலமும், முசுக்கட்டை விதை ஸ்தாபன அமைப்பு மூலமும், பழைய ராட்டை வகைகளை நீக்கி, பேசின் முறையை அனுசரிப்பது மூலமும், கச்சா பட்டு உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதே மூன்றாவது திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

27. **கயறு தொழில்.**—கயறு தொழிலின் பெரும் பகுதியை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவதும், துவக்க நிலை கயறு கூட்டுறவு

சொசைட்டிகளைப் பலப்படுத்துவதும் மத்திய விற்பனை சொசைட்டிகளைப் பலப்படுத்துவதும் மூன்றாவது திட்டத்தின் முக்கிய வேலைகளாக இருக்கும். கயறு பொருள்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் கண்ணோட்டத்தில் இத் தொழிலுக்கு வேண்டுமான உதவிகள் அளிக்கப்படும். கயறு இழைகள் தர அபிவிருத்திக்காக சிறு நூற்பு யந்திரங்கள் நிறுவுவதற்கான பரீட்சார்த்த திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சாயம் தோய்த்தல், பதன முறைகள், பிரஷ் செய்தல், கயறு செய்தல், தென்னை நார், சோறு, கழிவுகளைப் பயன்படுத்துவது முதலிய அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

அத்தியாயம் 11

தொழில்களும் கனிப்பொருள்களும்

நோக்கங்களும் முதலிட வரிசைக் கிரமமும்

தேசிய வருமானத்திலும் வேலை வசதிகள் ஏற்படுத்துவதிலும் நீண்ட கால லட்சியங்களை அடையவேண்டுமானால் அடுத்த 15 ஆண்டுகளில் தேசம் துரிதமாக தொழில் மயமாவது அவசியம். அதற்கான அஸ்திவாரமிடுவதே மூன்றும் திட்ட கால (1961–66) கைத்தொழில் திட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். இதையொட்டி கனரக யந்திரத் தொழில்கள், உற்பத்திப் பொருள் தொழில்கள் ஏற்படுத்தியாகவேண்டும். தொழில் நுட்பங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தொழில் நுணுக்க வினை செயல் வகை, டிசைன்கள் அமைக்கும் திறமை ஆகியவைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் இனிமேல் வரும் திட்ட காலங்களில் மின்சாரம், போக்குவரத்து, கைத்தொழில், கனிவள உற்பத்தி ஆகிய துறைகளில் பொருளாதார முன்னேற்றமானது, தன்னைத் தானே சுதாரித்துக்கொள்வதாய், வெளி உதவி இன்றி சுயபலத்திஞல் நிற்கக்கூடிய நிலைமை ஏற்படுவதாய் இருக்க வேண்டும்.

2. ஆனல் வேறு சில அம்சங்களையும் மனதில்கொள்ள வேண்டும். நீண்ட கால தேவையை ஒட்டி கனரக யந்திரங்கள், தொழில்களுக்குத் தேவையான பதன்படுத்தப்பட்ட கச்சாப் பொருள்கள் உற்பத்தி, ஆகியவைகளைக் கவனிக்கவேண்டியிருக்கும். அதே சமயத்தில் அடுத்த 5 வருஷ காலத்துக்குத் தேவைப்படக்கூடிய பல்வேறு விதமான உற்பத்திப் பொருள்களுக்கும், மூன்ருவது திட்டம் கூடுமான வரை வகை செய்தாக வேண்டும். உள்ள வசதிகளில் பெரும் பகுதியை, வருங்கால அபிவிருத்திக்கான அஸ்திவாரமிடுவதில் செலவிடவேண்டியிருப்பதால், உபயோகப் பொருள் தேவையை பூர்ணமாக நிறைவேற்றுவதில் சங்கடங்கள் இருக்கலாம். அத்தியாவசிய தேவைகளுக்குப் பூர்ணமாக வகை செய்ய வேண்டும் என்பதே நோக்கம். ஆனல் ஆடம்பரப் பொருள்கள் அல்லது ஓரளவு ஆடம்பரத்தன்மையுள்ள பொருள்கள் விஷயத்தில் உபயோகிப்புக்கு ஓரளவு கட்டுப்பாடு தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஏனெனில் இந்த வகைப் பொருள்களை, வளர்ந்துவரும் தேவை அளவுக்குச் சமமாக உற்பத்தி செய்வதென்பது சிரமமாக இருக்கும்.

3. தொழில்கள் இயங்குவதற்குச் சரக்கு விற்பனை வாய்ப்பு இருந்தால் மட்டும் போதாது; கச்சாப் பொருள்கள், மின்சாரம், எரி பொருள், போக்குவரத்து வசதிகள் ஆகியவையும் முக்கியமாகும். எனவே, கச்சா பொருள்கள், மின்சாரம் முதலியவைகளின் சப்ளையை எந்த அளவுக்கு அதிகரிக்க முடியும் என்பதை, தொழிலபிவிருத்தித் திட்டங்கள் கணக்கில் கொண்டாகவேண்டியிருக்கிறது. இந்த சப்ளை வசதிகளைப் பொறுத்துத்

தான திட்ட அபிவிருத்தி வேலைகளும அமைய முடியும். குறிப்பாக மின்சாரமும் எரிபொருள்களும், தொழில் பெருக்கத்தை கட்டுப்படுத்தக் கூடியவை. இதன் காரணமாக, அதிகமான அளவில் மின்சாரம் தேவைப் படுகின்ற சில தொழில் முறைகளை—அவை எவ்வளவு தான் சிறந்தவை யாக இருந்தாலும் கூட, மேற்கொள்ள முடியாமல் போகலாம்.

4. இரண்டாவது திட்ட அனுபவங்களும் படிப்பினைகளும்.—அயல்நாட்டு நாணய செலாவணி சங்கடங்கள, இரண்டாவது திட்டத்தின் தொழில் முன்னேற்ற வேலைகளுக்கு ஓரளவு இடையூறு ஏற்படுத்தியபோதிலும், பொதுப்படையாக திட்டச் சாதனைகள் ஊக்கமளிப்பனவாகவே உள்ளன. ஐந்து ஆண்டுகளுக்குமாக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ. 1,094 கோடி. ஆனால் ஐந்தாண்டுகளில் மொத்த முதலீடு சுமார் ரூ. 1,450 கோடி ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் அரசாங்கத் துறை, தனியார் துறைகளின் அளவு முறையே ரூ. 775 கோடியும், ரூ. 675 கோடியும் ஆகும். அதிகரித்த செலவில் பெரும் பகுதி இரும்பு, உருக்கு விஸ் தரிப்புத் திட்டங்களுக்கு ஆனதாகும். அந்தச் செலவும், விலைவாசி தூக்கல் நிலைமை காரணமாக, முன்பு மதிப்பிட்டதை விட, கணிசமாக அதிகரித்துவிட்டது. ஒரு புறத்தில் இப்படிச் செலவு அதிகரிக்க வேறு சில திட்டங்கள் விஷயத்தில் திட்ட வேலைகளும் லட்சிய அளவுகளும் பாக்கி நின்றன. கனரக மின்சார யந்திர சாதனங்கள் திட்டம், கச்சா பிலிம் திட்டம், ரூர்கேலா ரசாயன உர தொழிற்சாலை போன்ற முக்கியமான திட்டங்கள் விஷயத்தில், இரண்டாவது திட்டத்திலேயே வேலை தொடங்கப் பட்டது என்றாலும், அயல்நாட்டு நாணய செலாவணி சங்கடம் போன்ற காரணங்களால், வேலை நிதானமாகவே நடைபெற்றது. ஸ்தூல லட்சிய அளவுகளைப் பொறுத்த வரை, இரண்டாவது திட்ட முடிவில் கைத்தொழில் யந்திர உற்பத்தியானது, முந்தி எதிர்பார்த்ததை விட குறைவாகவே இருக்கும் எனத் தோன்றுகிறது. இரும்பு உருக்கு உற்பத்தி, நைடரஜன் உரங்கள், அலுமினியம், பத்திரிகைக் காகிதம், ரஸாயன கூழ் முதலியவை களிலும் உற்பத்தி, எதிர்பார்த்த அளவைவிடக் குறைந்தது. மூன்றாவது திட்டத் தொடக்கத்திற்கு எதிர் பார்க்கப்பட்ட அனுகூலமான நிலைமை இரும்பு உருக்கு விஷயத்தில் குறைபாட்டால் கெட்டு விட்டது. தொழிற் சாலைகள் நிறுவ தாமதம் ஏற்பட்டுத்தான், இப்படி உற்பத்தி குறைந்தது என்பதல்ல. நிலக்கரி சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைப்பு விஷயத்தில் மட்டுமே கணிசமான தாமதம் ஏற்பட்டது. மற்றவைகளில் புதிய தொழில் திறனை சுமுகமாகவும், இடைவிடாமல் தொடர்ச்சியாகவும் இயங்கச் செய் வதில்தான் தாமதம் ஏற்பட்டது.

5. பின்னோக்கிப் பார்த்தால், உள்நாட்டுத் தொழில்கள் போதிய அளவு இல்லாமை, அடிப்படையான கைத்தொழில்கள் இயங்குமாறு செய்வதற்கு வேண்டிய கச்சா பொருள்கள் குறைபாடு, தொழில் நுட்ப அலுவலர்கள் போதிய அளவின்மை முதலிய நிலைமைகள் காரணமாக தொழில் விஸ் தரிப்புக்கான யந்திரங்களுக்கும் தொழில் அறிவிற்கும் மற்றும் கச்சா பொருள்களில் கணிசமான பகுதிக்கும் அயல்நாட்டை பியிருக்க

வேண்டிய ஒரு பொருளாதார அமைப்பின்கீழ், துரிதமான தொழில் பெருக்கத்திலுள்ள சங்கடங்களை இரண்டாவது திட்ட அனுபவம் நன்கு எடுத்துக் காட்டுகிறது. தொழிற்சாலைத் திட்டங்களை நிறுவிய பிறகு, அவைகளை இயங்குமாறு செய்வதற்கு வேண்டுமான கால அளவு, குறிப்பாக கனரகத் தொழில்கள் விஷயத்தில் இந்தக் கால அளவு—சாதாரணமாக எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமாகிறது என்பதும் தெரிய வந்தது.

கைத் தொழில் கொள்கை.

6. 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய தொழில் கொள்கைத் தீர்மானத்தையொட்டியே கைத்தொழில் பெருக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் இருந்தது போலவே அரசாங்க தொழில் துறையும் தனியார் துறையும் ஒன்றுக்கொன்று உதவுவதாகவும், ஒன்றன் பணியை மற்றொன்று பூர்த்தி செய்ய உதவுவதாகவும் இருக்கவேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நைட்ரஜன் உரங்கள் விஷயத்தில், அரசாங்க தொழில் துறை ஏற்கனவே ஒரு ஆதிக்க ஸ்தானத்தை வகித்துவரும் நிலைமையில் மூன்றும் திட்ட காலத்தில் தனியார் துறை, இத்தொழிலில், முன்னைவிட பெருமளவில் பங்கு கொள்ளவேண்டும் என்றும், பொதுத் துறையின் முயற்சிக்கு உதவ வேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் சாயப் பொருள்கள், பிளாஸ்டிக், மருந்துகள் உற்பத்திக்கான வேலைத் திட்டம், அரசாங்க தொழில் துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் உப பொருள்கள் உற்பத்திக்கு துணை புரிவதாக இருக்கும். இதே போல மொத்தமான ரீதியில் மருந்துகள் உற்பத்தி, முக்கியமாக அரசாங்க தொழில் துறையின் கீழ் இருக்கும், மொத்த மருந்துகளை மேற்கொண்டு பதனம் செய்யும் வேலை தனியார் துறையின் கீழும் மேற்கொள்ளப்படும்.

7. 1956-ம் ஆண்டின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இதர முக்கிய விஷயங்கள், கிராம சிறு ரகத் தொழில்களின் அபிவிருத்தியையும், பெரிய தொழில்களுடன் அவற்றை இணைப்பதையும், நாட்டின் பல்வேறு பிராந்தியங்களுக்கிடையே தொழில் வளர்ச்சியின் அளவில் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதையும் பற்றியவை. இந்த இரண்டு விஷயங்களும் பிறிதோரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. தனியார் தொழில் துறையின் வளர்ச்சி ஒரு சிலர் கையிலேயே குவிந்துவிடக் கூடிய அபாயம் இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதுபற்றி எச்சரிக்கையாய் இருப்பது அவசியம்.

தொழில் முதலிட வரிசை

8. யந்திரங்கள், யந்திர பாகங்கள், கலப்பு உலோகம், கருவிக்கான உருக்கு போன்ற உற்பத்திப் பொருள்கள், உப-பொருள்கள், கரையும் கூழ், செயற்கை ரப்பர், கார்பன் பிளாக், அலுமினியம் போன்றவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக ஏற்கனவே அமுலாக்கப்படடுவரும் திட்டங்களையும் முடிவடைந்து வருகின்ற திட்டங்களையும் பூர்த்தி செய்து

முடிப்பதே மூன்ரும் திட்ட ஆரம்ப வருஷங்களில் முக்கிய வேலையாக இருக்கும். இந்தக் கால கட்டத்தில், அந்நிய நாணயச் செலாவணி தேவையைக் குறைக்க உதவுகின்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் நமது வசதிகளை ஈடுபடுத்தவேண்டும். இந்த மாதிரி சமயத்தில் கச்சா பொருள் இறக்குமதியை பெருமளவு நம்பியிருக்க வேண்டிய ரேயான் தொழில் போன்றவைகளை அதிகம் விஸ்தரிப்பதற்கு அனுமதிப்பதென்பது சாத்தியமல்ல. ரேயான் போன்ற தொழில்களை தற்போது விஸ்தரித்தால் பராமரிப்பு வகையிலேயே அதிகமான அளவில் அயல்நாட்டு செலாவணி தேவைப்படும்.

9. கிட்டத்தட்ட சம முக்கியத்துவமுள்ள, போட்டிவகையில் உள்ள மாறுபட்ட கோரிக்கைகளை சமன்படுத்தக் கூடிய முறையில் தொழில் பெருக்கத் திட்டம் இருக்க வேண்டும். திட்டங்கள், திட்டவேலைகள் விஷயத்தில் அடுத்த சில ஆண்டுகளில் கீழ்க்கண்ட ரீதியில் முதலிட வரிசை அளிக்கப்படும்.—

(1) இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ்உத்தேசிக்கப்பட்டு தற்போது அமுலாக்கப்படுவனவும் அல்லது அயல் நாட்டு நாணய செலாவணி கஷ்டங்களால் 1957–58-ல் ஒத்திப்போடப்பட்டனவுமான திட்டங்களை நிறைவேற்றி முடித்தல்.

(2) கனரக இஞ்சினீரிங், யந்திர நிர்மாண தொழில்கள், அல்லாய்டுல், விசேஷ உருக்கு, இரும்பு உருக்கு, இரும்பு கலப்பு உலோகங்கள் சம்பந்தமான தொழில்கள் திறனை அதிகரித்தல், விஸ்தரித்தல், ரசாயன உரங்கள் உற்பத்தியை அதிகரித்தல்.

(3) அலுமினியம், கனிஜ எண்ணெய், அடிப்படை சேதன ரசாயனங்கள், அசேதன ரசாயனங்கள், உப–பொருள்கள் போன்ற, முக்கிய உற்பத்தி பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

(4) ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் திறனில், திறன் அளவுக்கும் உற்பத்தி அளவுக்கும் அதிகமான வித்தியாசம் இருக்குமானல் உற்பத்தித் திறனை பூர்ணமாகப் பயன்படுத்த வேண்டும்; அல்லது பல ஷிப்டுகளாக வேலை செய்வது மூலம் முதலீட்டில் சிக்கனம் செய்யவும், மூலதனத்துக்கு அதிக ஆதாய விகிதம் காட்டவும் முடியுமென்ருல் அதற்கான உற்பத்தித் திறனை பூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ளுவது.

(5) அத்தியாவசிய மருந்துகள், காகிதம், துணி, சர்க்கரை, தாவர எண்ணெய், கட்டிடச் சாமான்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளைச் சமாளிப்பதற்காக உள்நாட்டுக் கைத் தொழில்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

யந்திரங்கள் உற்பத்திக்கான வேலைத் திட்டம்.

10. தொழில் வளர்ச்சியானது, எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு விரைவில் தன்னைத்தானே சுதாரித்துக்கொள்ளும்படிச் செய்வதற்காக, மூன்ருவது திட்டத்திலும் அதற்கடுத்த திட்டங்களிலும் யந்தி

ரங்கள் உற்பத்தி வேலைத் திட்டத்துக்கு முக்கிய இடமளிக்க வேண்டும். இனனும் சில ஆண்டுகளில் உருக்கு சப்ளை ஏராளமான அளவில் கிடைக்கக்கூடும். கனரக யந்திரங்கள் சுரங்க யந்திரங்கள், கனரக வார்ப்பு இணைப்பு ஆலைகள். கனரக மின்சார யந்திரங்கள் திட்டம் ஆகிய பெரிய திட்டங்களுக்கு ஏற்கனவே ஏற்பாடும் செய்தாகிவிட்டது. எனவே மேற்சொன்ன முக்கியமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமயம் வந்துள்ளது. இத் துறையில் துரிதமான முன்னேற்றம் ஏற்பட வேணடுமானுல், தனிப் பட்ட பெரிய நிறுவனங்களில் டிசைன் வசதிகளை அபிவிருத்தி செய்வதும், தொழில் தொகுதிக்காக டிசைன் நிறுவனங்கள் ஏற்படுத்துவதும் அவசியமாகும். இப்பணிக்கு முதலிடம் தரப்படவேண்டும். தொடக்கத்தில், யந்திர சாதனங்கள் கட்டுமான வேலையை "வாங்கப்பட்ட டிசைன்" பிரகாரம் தான் அமைக்கவேண்டியிருக்கும் என்ருலும், கூடுமான வரை விரைவில் உள்நாட்டி டிசைன்களின் அடிப்படையில் கைத்தொழில் யந்திரங் களை அமைப்பதே நோக்கமாக இருக்கும்.

கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள்

11. கைத்தொழில் அபிவிருத்திக்கான விரிவான வேலைத் திட்டங்களை உருவாக்குவதில், முந்தின பிரிவில் சொல்லப்பட்ட காரியங்கள் விஷயமாக உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழில், கனி வள திட்டங்களுக்காக, மொத்தம் ரூபாய் 2500 கோடி ஒதுக்கவேண்டும். என்பது தற்கால உத்தேசமாகும். அதாவது அரசாங்க தொழில் துறைக்கு ரூபாய் 1500 கோடி. தனியார் துறைக்கு ரூபாய் 1000 கோடி. ஸ்தாபன நிறுவனங்கள் மூலமாக தனியார் துறைக்கு மாற்றும் ரூபாய் 50 கோடியும், அரசாங்க தொழில் துறை ஒதுக்கீட்டில் உள்ளடங்கும். தனியார் துறைக்கான ரூபாய் 1000 கோடியில் இந்த ரூபாய் 50 கோடியோ அல்லது யுத்த முற்கால தொழில்கள் சிலவற்றை நவீனமாக்கவும் புதுப்பிக்கவும் ஆன முன தொடர்ச்சி வகையில் கிடைக்கும் என நம்பப்படும் ரூபாய் 150–200 கோடியோ சேர்ந்ததல்ல.

12. பல்வேறு பெரிய தொழில்கள், கனிச் சுரங்க தொழில்களிடையே, இந்த ரூ. 2500 கோடி முதலீட்டைப் பின்வருமாறு பிரித்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

தொழில் வகை	1961–66-ல் முதலீடு ரூபாய்கள கோடியில்.
உலோகத தொழில்கள், இஞ்சினீரிங் தொழில்கள ..	1,200
ரசாயனம் அதன சாப்புத் தொழில்கள ரசாயன உரங்கள், மருந்துகள், பிளாஸ்டிக சாயப் பொருளகள், சிமிடடி, காகிதம் முதலியன.	650
ஜவுளி தொழில்கள ..	125
உணவுத் தொழில்கள்	75
கனி வளங்கள	405
மற்றவைய (அரசாங்க தொழில் திட்டங்களுக்கான வீடு வசதி காலனிகள் நகாமைப்புகள்)	45
மொத்தம்	2 500

அரசாங்க தொழில் துறை வேலைத் திட்டங்கள்.

13. அரசாங்க தொழில் துறை வேலைத் திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்திக்கொள்ளலாம் :—

(1) நிறைவேற்றப்பட்டு வருவனவும், இரண்டாவது திட்டதிலிருந்து தொடர்ந்து வருவனவுமான திட்டங்கள.

(2) வெளி நாட்டுக் கடன் வசதி ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

(3) தற்போது திட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படத்தக்க புதிய வேலைத் திட்டங்கள். இவைகளில் பெரும்பாலானவை, ஆயத்தம் முடிவடையும் தறுவாயிலுள்ளன ; ஆனால் வெளி நாட்டுக் கடன வசதி ஏற்பாடு செய்யப்படவில்லை.

(4) ஆயத்த வேலை குறைவாகவே நடந்துள்ளனவும், இது வரை வெளி நாட்டுக் கடன் வசதிக்கு வகை செய்யப்படாததுமான இதர புதிய திட்டங்கள். இந்தப பிரிவின கீழ் வரும் வேலைத் திட்டங்களை, திட்டத்தில் சேர்த்துக்கொள்வது பற்றி இன்னும் திட்டமான முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இத திட்டங்கள் குறித்து மேற்கொண்டு விவரஙகள வகுக்கப்பட்டு, மேலே (3)-வது பிரிவில் உள்ள திட்டஙகளுக்கு மாற்றுத் திட்டங களாக, திட்டததில் இவைகளைச் சேர்த்துக்கொள்ளும் விஷயம் காலக் கிரமத்தில் பரிசீலனைக்கு வரலாம். அல்லது அவசியமான அயல்நாட்டு உதவி வசதியும் உள நாட்டு வசதிகளும் கிடைத்து, மற்ற நிலைமைகளும் சாதகமாக இருக்குமானால், இவைகளைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவது ஆலோசிக்கப்படும்.

(5) யதேச்சையான முறையில் வரக்கூடிய திட்டங்கள். இவைகளை அமுலாக்கும் விஷயம் பின்னால் உருவாகும் நிலைமைகளைப் பொறுத்தது. இப்பொழுது அந்த நிலைமைகள் பற்றி திட்டமாக அனுமானிக்க இயலாது. உதாரணமாக புதிய கனிஜ எண்ணெய்ப் படிவங்கள் அகப்படுமானால் பைப் லைன்கள், எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையங்கள் முதலியவற்றை அமைக்கும் வேலைகள்.

இந்தப் பிரிவுகளின் கீழ் வரும் திட்டங்களின் பட்டியல் இணைப்பு I-ல் தரப்பட்டுள்ளது.

14. அரசாங்க தொழில் துறை பெரும் பங்கு வகிக்கும்படியான தொழில்களில், உதாரணமாக, இரும்பு உருக்கு, நிலக்கரி, கைத் தொழில் யந்திரங்கள், கனிஜ எண்ணெய்கள், பெட்ரோலியம் சுத்திகரிப்பு, இரும்புக் கனி இதர கனிகள், ரசாயன உரங்கள், அடிப்படை ரசாயனங்கள் உபபொருள்கள், அத்தியாவசிய மருந்துகள் போன்ற தொழில்களில் திட்ட மிடப்பட்டுள்ள முக்கிய அபிவிருத்தி வேலைகள் விவரம் சுருங்கிய முறையில் கீழே தரப்படுகிறது.

15. **இரும்பு, உருக்கு.**—இந்தத் துறையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு : "ரோல்" செய்யப்பட்ட லகு எஃகு, கலப்பு உலோகம், ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் உள்பட டூல் விசேஷ உருக்குகள் ("ரோல்" செய்யப்பட்டது), விற்பனைக்காக தேனிரும்பு ஆகியவைகளின் உற்பத்திச் சக்தியை அதிகரித்தல் ஆகியன. தொழில் அபிவிருத்திக்கான இந்த அடிப்படை பொருளின் உற்பத்தி லட்சிய அளவைக் குறிப்பிடும்போது, நீண்ட கால கண்ணோட்டத்தில் தேவை வளர்ச்சி, புதிய தொழில் யந்திரங்களை அமைத்த பின்பு, யந்திரத்தின் முழு உற்பத்தித் திறனுக்கு ஏற்ப, உற்பத்தி வேகம் தொடங்குவதற்கு நியாயமான கால அவகாசம், மூன்றாவது திட்டத்தின் கடைசி ஆண்டுத் தேவை முதலியவைகள் கணக்கில் கொள்ளப்படுகின்றன. 1965–66-ல் மொத்தம் சுமார் 73 லட்சம் டன் பூர்த்தி செய்யப்பட்ட உருக்கும், 15 லட்சம் டன் விற்பனைக்கான தேனிரும்பும் தேவைப்படும் என்று தற்காலிகமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கலப்பு உலோகம் (அல்லாய்), டூல் விசேஷ எஃகு ஆகியவைகளைப் பொறுத்தவரை, அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக 1965–66-ல் மொத்தத் தேவை சுமார் 2 லட்சம் டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

16. மேலே குறிப்பிட்டபடி திட்டத்தேவை இருக்க, தற்சமயம் உற்பத்தித் திட்ட வேலையானது 102 லட்சம் டன் லகு உருக்குக் கட்டிகளும், விற்பனைக்காக 15 லட்சம் டன் தேனிரும்பும், கலப்பு உலோகம் டூல், விசேஷ எஃகு வகையில் 200,000 டன்களும் உற்பத்தி செய்யவேண்டும் என்ற லட்சிய அளவோடு அமைக்கப்படுகிறது. கலப்பு உலோகம், டூல், விசேஷ உருக்கு பொறுத்த வரையில் பொதுத் துறையில் ஆண்டுக்கு 130,000 டன்கள் வரையும் தனியார் துறையில் 70,000 டன்கள் வரையும் சேர்ந்து லட்சிய அளவை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க தொழில் துறை உற்பத்தியில் ஒரு பகுதி (1965-க்குள் சுமார் 30,000 டன் டிரான்ஸ்பார்மர் கிரேடு மின்சார உருக்குத் தகடுகள்), ரூர்கேலா உருக்காலையின் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு இலாகா (ஆர்ட்னன்ஸ்) தொழிற்சாலைகளில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50,000 டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க தொழில் துறையில் மேற்கொண்டு பாக்கி நிற்பது சுமார் 50,000 டன்கள். கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கும் புதிய உருக்காலை மூலம் இதற்கு வகை செய்யப்படும். அத் தொழிற்சாலை எந்த இடத்தில் ஏற்படுத்தப்படும் என்பது திட்ட அறிக்கை கிடைத்த பிறகு, இந்த ஆண்டில் முடிவு செய்யப்படும். இந்த உருக்காலை எவ்வளவு டன்கள் உற்பத்தி செய்யும் என்பது முக்கியமல்ல, உள் நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய மிக உயர்ந்த விலையுள்ள பொருள்களை இது உற்பத்தி செய்யும் என்பதே இதன் சிறப்பு அம்சமாகும். இதன் மூலம், பெருமளவு அயல் நாட்டு நாணய செலாவணி வசதி மிச்சமாகும். இப் பொருளகள், யந்திரங்கள செய்வதற்கும், தொழிற்சாலை உற்பத்தி யந்திரங்கள் செய்வதற்கும் வேண்டியவை ஆதலால், இது முதலிடம் பெறத் தக்க தேவையாகின்றது. இந்தப் புதிய

உருக்காலைக்கு மொத்தம் சுமார் ரூ. 35 கோடி செலவாகும் என்றும் அயல் நாட்டு நாணய செலாவணி அளவு சுமார் ரூ. 20 கோடி ஆகும் என்றும் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

17. லகு உருக்கு, விற்பனைக்கான தேனிரும்பு பொறுத்த வரையில், லட்சிய அளவை அடைவதில் தனியார் துறையின் பங்கு மிகக் குறைவாகவே இருக்கும். கீழே 63-வது பாராவில் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் அரசாங்க தொழில் துறையின்கீழ், பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் ஆகிய உருக்காலைகளின் விஸ்தரிப்பு வேலைகள், மைசூர் இரும்பு உருக்கு வேலை தொழிற்சாலை விஸ்தரிப்பு, பொகாரோவில் புதிய உருக்காலை அமைப்பு முதலிய வேலைகள் மேற்கொள்ளப்படும். 1965–66-ல் பல்வேறு வகை லகு உருக்குகளின் தேவை என்ன, பல்வேறு அரசாங்க துறை தொழிற்சாலைகளில் குறிப்பாக பினிஷிங் ஆலைகளில் விசேஷ உற்பத்திக்கும் உபரி உற்பத்திக்கும் உள்ள வசதிகள் என்ன என்பதைக் கருத்தில் கொண்டு உத்தேச பூர்த்திப் பொருள் வகை உற்பத்தி அமைக்கப்படுகின்றது. அரசாங்க தொழில் துறை திட்டங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள் பின்வருமாறு :—

திட்டம்.		அபிவிருத்தித் திறன் அளவு	
		உருக்குக் கட்டிகள். (லட்சம் டன்களில்).	தேனிரும்பு
(அ) விஸ்தரிப்பு திட்ட வகையில்—			
பிலாய்	..	25	3
துர்காபூர்		16	3
ரூர்கேலா		18	—
(ஆ) மைசூர் இரும்பு உருக்குத் தொழில் சாலை விஸ்தரிப்பு		1	—
(இ) பொகாரோ உருக்குத் தொழிற்சாலை		10	3·5
மொத்தம்	..	70	9·5

இந்த வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக, முக்கிய தொழிற்சாலைகளுக்கும் இதர துணை வசதிகளுக்கும் தேவைப்படும் மொத்த முதலீடு தற்போதைய மதிப்பீட்டின்படி சுமார் 571 கோடி ரூபாய்* இந்த திட்டங்களுக்கு மூன்றாவது திட்டம், பொது விவரத்தில் சொல்லப்பட்டுள்ள ஒதுக்கீடு ரூ. 506 கோடி. தொழிற்சாலை நகரமைப்புகளுக்கான தனி ஒதுக்கீட்டிலிருந்து, இதற்கு கூடுதல் நிதி வசதி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிச் செய்தும்கூட முதலீட்டுத் தேவையில் குறிப்பாக துணை வசதிகள் சம்பந்தமான முதலீட்டுத் தேவையில் சிறிது பற்றாக் குறை ஏற்படும். அவசியமானால் காலக்கிரமத்தில், இரும்பு உருக்கு உற்பத்தி லட்சிய அளவை அடைய வேண்டியதின் முக்கியத்துவத்தை முன்னிட்டு, திட்டத்தில் தொகையை உயர்த்தவேண்டி வரலாம்.

18. குறைந்த சக்தி ஊது உலையையும், நெய்வேலி நிலக்கரி உபயோகிப்பதையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு தேனிரும்பு தொழிற்சாலை

* பொகாரோ உருக்கு ஆலைக்கான நிலக்கரி இரும்புக் கனிகள். "வெளியின—சக்தி" ரயில்வே போக்குவரத்து முதலியவைகளுக்கான முதலீடும், இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமைக்கும் விஷயமும், திட்ட பொது விவரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. காலக் கிரமத்தில் முடிவு காணும் நோக்கத்துடன், இத் திட்டம்மீது ஆயத்த வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

19. தனியார் துறையில் முக்கிய உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன் (30 லட்சம் டன் உருக்குக் கட்டி) ரீரோலிங்குக்காக சிறு அளவிலான மின்சார ஊது உலைகள் உற்பத்தி சக்தி ஆகியவை சேர்ந்து, இரும்பு உருக்கு தொழில்களின் கீழ் மொத்த உற்பத்தித் திறன் சுமார் 102 லட்சம் டன் உருக்குக் கட்டிகளாகும். இந்தக் கட்டிகளின் முடிப்பு வேலை யினால், கூடுதல் உருக்குத் துண்டுகள் உற்பத்திக்கு வழி ஏற்படும். இதன் மூலம், உருக்குத் துண்டுகள் உற்பத்தி 1960–61-ல் 7 லட்சம் டன்களாக இருப்பதானது, 1965–66-ல் 10 லட்சம் டன்களாக அதிகரிக்கும்.

பிலாயில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ள பூர்த்திப் பொருள்கள், உதாரணமாக ரயில் தண்டவாளங்கள் கனரக கட்டுமானங்கள் ஆகிய வற்றின் தேவை வரம்பினாலும், பூர்ணமான உற்பத்தி நிலையை அடைய கால அவகாசம் வேண்டியிருப்பதாலும் 1965–66-ல் உருக்குக் கட்டிகள் உற்பத்தி 95 லட்சம் டன்களாக இருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட உருக்கு உற்பத்தி அளவு சுமார் 69 லட்சம் டன்களாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. **நிலக்கரி.**—உருக்கு, அனல் (தெர்மல்) மின்சாரம், ரயில்வேக்கள் ஆகியவைதான் நிலக்கரியை பெருமளவுக்கு உபயோகிக்கும் தொழில்கள். இந்தத் தொழில்களுக்கான லட்சிய அளவுகளின் அடிப்படையில், மூன்றா வது திட்ட முடிவில் சுமார் 9·7 கோடி டன் அளவில் நிலக்கரி தேவைப் படலாம். இப்படி உயர்ந்துள்ள லட்சிய அளவை அடையவேண்டுமானால், இரண்டாவது திட்ட கடைசி வருஷத்தின் லட்சிய அளவாகிய 6 கோடி டன்னுடன் மேற்கொண்டு 3·7 கோடி டன் உற்பத்தியை அதிகரித்தாக வேண்டும். திட்ட கால முடிவில் இந்த லட்சியத்தைப் பூராவாக அடைய முடியாது என்றாலும், அந்தக்கால அளவுக்குள்ளாக, இந்த அளவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான முதலீடு போடப்பட்டாகியிருக்கும். இரண் டாவது திட்ட காலத்தில், ஏற்கெனவே உள்ள நிறுவனங்களிலிருந்து, பெரும்பாலும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்து, கூடுதல் உற்பத்திக்கு வகை செய்துகொள்ளலாம். ஆனால் மூன்றாவது திட்டத்துக் காக குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்த பக்குவ மடையாத பகுதிகளில் பல புதிய சுரங்கங்களை ஏற்படுத்தியாக வேண்டும். இதற்குப் பெருமளவில் முயற்சியும் முதலீடும் தேவைப்படும்.

21. மூன்றாவது திட்டத்தின் நிலக்கரி வேலைத் திட்டத்தில் மிக முக்கிய மான அம்சம், உருக்குத் தொழிலுக்கு வேண்டுமான "கோக்கிங்" கரியையும், ரயில்வேக்களுக்கும் மற்றும் சில தொழில்களுக்கும் தேவைப் படும் கோக்கிங் அல்லாத உயர்தரக் கரியையும் போதிய அளவு சப்ளை செய்ய வகை செய்ய வேண்டும் என்பதாகும். உருக்குத் தொழிலின் திட்டமான தேவைப்பாடு, சப்ளைக்கான வசதி நிலைமைகள், அதைப் பூர்ண மாகப் பயன்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை

கள் முதலியன குறித்து, விசேஷ கமிட்டி ஒன்று பரிசீலனை செய்து வருகிறது. இதற்கிடையில், மூன்றாவது திட்ட காலத்தில் இத் தொழிலுக்கு மேற்கொண்டு கூடுதலாகத் தேவைப்படும் கோக்கிங் நிலக்கரியின் அளவு சுமார் 110 லட்சம் டன்களாகும். கோக்கிங் அல்லாத உயர்தர நிலக்கரி வகையில் கூடுதல் தேவையின் அளவு சுமார் 100 லட்சம் டன்களாகும். கோக்கிங் நிலக்கரி விஷயத்திலும் உயர்தர நிலக்கரி விஷயத்திலும் அதிகப்படியான உற்பத்தி முக்கியமாக ஜாரியா, ராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தே ஏற்படவேண்டியிருக்கிறது. அந்தச் சுரங்கங்கள் யாவும் தற்போது தனியார் துறைவசமே உள்ளன.

இரண்டாவது திட்ட காலத்தில், தற்போதைய சுரங்கங்களிலிருந்தும், அடுத்துத் தொடர்ச்சியான பிரதேசங்களிலிருந்தும் 100 லட்சம் டன் கூடுதல் நிலக்கரி உற்பத்தி செய்ய தனியார் துறையினர் அனுமதிக்கப் பட்டனர். மூன்றாவது திட்ட காலத்தில் தனியார் துறை உதவக்கூடியது என்ன என்பது இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையி லுள்ள தனிப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்கள் தெரிவிக்கும் விஸ்தரிப்புத் திட்டங்களைப் பரிசீலனை செய்த பின்பு, அவைகளால் செய்யக்கூடிய கூடுதல் உற்பத்தியின் அளவுபற்றி மதிப்பிடப்படும். இந்தக் கூடுதல் உற்பத்தியை படிப்படியான முறையில் அடைவதற்கான வேலைத் திட்டம் வகுக்கப்படும். தனியார் துறையினர் உற்பத்தி செய்யக்கூடியது 160 லட்சம் டன்கள் என்று இப்போதைக்கு தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

22. இதர கிரேடு நிலக்கரி வகைகளில் கூடுதல் தேவையைப் பெரும் பாலும், பீஹாரிலுள்ள கரனபுரா நிலக்கரிச் சுரங்க வெளியிலிருந்தும், மத்தியப் பிரதேசம், ஒரிஸா, ஆந்திரப் பிரதேசம் ஆகியவைகளிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும்தான் பெறவேண்டும். செங்கல் சுடுவது வீட்டுக் காரியங்கள் போன்றவைகளுக்குப் பயன்படும் மட்ட ரக நிலக்கரியின் தேவை அளவை திட்டமாக அனுமானிப்பது சாத்தியமல்ல. பெரிய தொழில்களுக்குத் தேவைப்படும் உயர்தர நிலக்கரி போல இவற்றை மதிப்பிட முடியாது. ஆனால் மட்ட ரக நிலக்கரிகள் பெருமளவில் திறந்த வெளி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கிடைப்பதால் விரைவாகவும் மலி வான முறையிலும் இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். மட்ட ரக நிலக்கரி விஷயத்தில் போக்கு வரத்து வசதி செய்வதுதான் பிரதான பிரச்னையே தவிர, உற்பத்தியைப் பெருக்குவது பெரிய பிரச்னை அல்ல.

23. அதிகப்படியாகச் செய்யவேண்டிய உற்பத்தியின் அளவை அரசாங்க தொழில் துறையும் தனியார் துறையும் எந்த முறையில் பகிர்ந்துகொள்ளுவது என்பது பரிசீலனையில் இருக்கிறது. அது தவிர, சுரங்கவாரியாகவும், தரவாரியாகவும் எப்படிப் பகிர்ந்துகொள்ளுவது என்ப தையும் விரிவாகப் பரிசீலிக்க வேண்டியது அவசியம். அரசாங்க தொழில் துறையில், நிலக்கரி சம்பந்தமான வேலைத் திட்டங்களுக்கு தற்போது ரூ. 138 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, பொகாரோ உருக்காலைக் காக ரூ. 200 கோடி ஒதுக்கீட்டில், நிலக்கரி உற்பத்திக்கென்று ஓரளவு தொகை வகை செய்யப்பட்டுள்ளது.

24. ஒருங்கிணைந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்.—தற்போது அமுலாக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தின்கீழ் வருஷம் ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 2.5 லட்சம் கிலோவாட் மின்சார (தெர்மல்) உறபத்திக்கும், 70,000 டன் நைட்ரஜன் உர உற்பத்திக்கும், 380,000 டன் சுட்ட நிலககரி கட்டி உற்பத்திக்கும், அந்த பழுப்பு நிலக்கரி பயன்படுததபபடும். மூன்றும் திட்ட காலத்தில் தெர்மல் மின்சார உற்பத்தி சகதியை 4 லட்சம் கிலோவாட்டுக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத துறையின் கீழ் இதற்கான நிதி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மின்சார உறபத்தித் திட்டத்தை விரிவாக்குவதினால், சுரங் கததிலிருந்து நிலக்கரி உற்பத்தியை 35 லட்சம் டன்னிலிருந்து 48 லட்சம் டன்னுக்கு உயர்த்த வேண்டியிருக்கும். இதற்காகவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

25. **கைத்தொழில் யந்திரங்கள்.**—யந்திர வேலைத் திட்டங்களுக்கு மிக முக்கியமானதாக விளங்கும் வார்ப்பு இணைப்பு ஆலைகளை அரசாங்கத் தொழில் துறையின் கீழ் கணிசமான அளவில் ஏற்படுத்த வேண்டும் என்பது மூன்றுவது திட்ட உத்தேசமாகும். ராஞ்சியில் அமைக்கப்படும் வார்ப்பு இணைப்பு ஆலையில் 45,000 டன் உருக்கு வார்ப்புக்கும் 38,000 டன் பழுப்பு (Grey Iron) இரும்பு வார்ப்புக்கும் 70,000 டன் உருக்கு இணைப்புகளுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும். துர்க்காபூர், பிலாய், ரூர்கேலா ஆகியவைகளைச் சேர்ந்த வார்ப்பாலைகளிலும், போபால் கனரக மின்சாரச் சாதனங்கள் திட்டம் துர்க்காபூர் சுரங்க யநதிரங்கள் அமைப்புத் திட்டம், இந்துஸ்தான் யந்திரக் கருவிகள் தொழிற்சாலை ஆகியவைகளைச் சேர்ந்த வார்ப்பாலைகளிலும் மேற் கொண்டு உற்பத்தி வசதி ஏற்படும். சித்தரஞ்சன் ரயில் இஞ்சின் தொழிற் சாலையிலும் உருக்கு வார்ப்பாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் கீழ், அரசாங்கத் தொழில் துறையில் மொத்த உற்பத்தித் திறன் பின்வருமாறு :—

		எண்கள் டன்களைக் குறிக்கும்		
		பழுப்பு இரும்பு வார்ப்பு கள்.	உருக்கு வார்ப்பு கள்.	உருக்கு இணைப்பு கள்.
1 வார்ப்பு இணைப்பு திட்டம் காஞ்சி	..	38,000	45,000	69700
2 துர்க்காபூர் சுரங்க யந்திரங்கள் திட்டம் 30000 டன திறனுள்ள் சுரங்க யந்திரங்கள்	..	11,000	6000	7000
3 இந்துஸதான் யந்திர கருவி தொழிற்சாலை பெங்களூர்	..	2500	..	..
4 சித்தரஞ்சன் ரயில் இஞ்சின் தொழிற்சாலை சித்தரஞ்சன்.	..	3000	7000	..
5 உருக்கு ஆலைகள் துர்க்காபூர். பிலாய். ரூர்கேலா	}	75000	15000	..
6 மற்றவை ரயில்வே தொழிற்சாலைகளைச் சேர்ந்த வார்ப்பாலைகள் நீங்கலாக	..	6000	..	..
7 மொத்தம்	..	135,500	73000	76700

மூன்றுவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேறு பல யந்திரத் திட்டங் களுக்கும் வார்ப்புகள் இணைப்புகள் தேவைப்படும். ஆனால் இந்தத்

தேவைப்பாடுகள், தேவையைச் சரிக்கட்டுவதற்கான ஏற்பாடுகள், அதாவது மற்ற தொழிற்சாலைகளுடன் பிணைக்கப்பட்டுள்ள வார்ப்பு இணைப்பு ஆலைகள் மூலமாக அவ் வேற்பாடுகளைச் செய்வதா அல்லது சுயேச்சையான நிறுவனங்கள் மூலமாக அல்லது இரண்டின் மூலமாகச் செய்வதா என்பதுபற்றி, திட்ட அறிக்கைகள் கிடைத்தான பின்புதான், நிலைமை சரி வரத் தெரியவரும்.

26. ராஞ்சி அருகே அமைக்கப்பட்டுவரும் கனரக யந்திரத் தொழிற்சாலை, ஆண்டுக்கு 80,000 டன் உற்பத்தி செய்யக்கூடியதாக விஸ்தரிக்கப்படும் போது, உருக்கு உற்பத்தித் திறனை ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன் அதிகரிப்பதற்கான அதிகப்படி சாதனங்களில் பெரும் பகுதியை சப்ளை செய்யக்கூடிய நிலையில் இருக்கும். துர்க்காபூரில் விரிவுபடுத்தப்பட்டுள்ள சுரங்க யந்திர தொழிற்சாலைத் திட்டம் வருஷம் ஒன்றுக்கு 45,000 டன் யந்திர சாதனங்களை உற்பத்தி செய்யக்கூடிய விதத்தில் அமைக்கப் படுகின்றது. 1971 முதல் வருஷம் ஒன்றுக்கு மின்சாரம் உற்பத்தி விகிதத்தை ஆண்டுக்கு 20 லட்சம் கிலோவாட் வீதம் அதிகரிப்பதற்குப் போதுமான யந்திரக் கருவிகளைத் தயாரிக்கும்படியாக உத்தேச மூன்று கனரக மின்சார யந்திரசாலைகளும் அமைக்கப்படுகின்றன. கனரக மோட்டார்கள், ரெக்டிபையர்கள், கண்ட்ரோல் கருவிகளையும் அவை உற்பத்தி செய்யும் அனல் மின்சார யந்திரங்களுக்காக ஆண்டுத்திறன் அளவு 19,000 டன்கள் உள்ள அதிசக்தி கொதி கலன்கள் உற்பத்தி யானது மின்சாரக் கருவிகள் உற்பத்தித் திட்டத்தோடு பிணைக்கப்பட் டுள்ளது.

27. இதர கன இஞ்சினீரிங் திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை: சித்த ரஞ்சன் ரயில் இஞ்சின் தொழிற்சாலையில் உற்பத்தியைப் பலவகைப்படுத்து வதின் மூலம் மின்சார ரயில் இஞ்சின்களை அங்கு உற்பத்தி செய்ய வசதி. ரசாயன உரங்கள், ரசாயனங்கள் தொழிற்சாலைகளுக்கு அழுத்த சக்தி கலன்களையும் சம்பந்தப்பட்ட இதர கருவி சாதனங்களையும் வழங்குவதற்கான வெசல் வொர்க்ஸ், கட்டுமான இணைப்பாளர்கள் உப யோகத்துக்காக கனரக கட்டுக் கோப்புப் பாகங்களைத் தயாரிக்கக் கூடியதும், பின்னர் கனரகக் கட்டுமான இணைப்புகளையும் கிரேன்களையும் தயாரிக்கக் கூடிய விதத்தில் விஸ்தரிக்கப்படத்தக்கதுமான கனரகக் கட்டுமான தொழிற் சாலை அமைத்தல்; மூன்றாவது திட்ட முடிவில் கப்பல் கட்டுமானத் திறன் 50,000—60,000 DWT-க்கு அதிகரிக்கும்படியாக, விசாகப்பட்டினம் ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தை விஸ்தரிக்கவும், கொச்சியில் இரண்டாவது கப்பல் கட்டும் தளத்தை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

28. யந்திரக் கருவிகள் துறையைப் பொருத்தவரையில், தற்போதைய நடைமுறைத் தேவை அளவு ரூ. 20 கோடியாக இருப்பதானது, 1965–66-ல் ரூ. 50 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜலஹள்ளி ஹிந்துஸ்தான் யந்திரக் கருவிகள் தொழிற்சாலை, ஹைதராபாத் பிரகாடூல்ஸ் தொழிற்சாலை ஆகியவைகளை விஸ்தரிக்கவும் புதிய கனரக

யந்திரக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தவும் அரசாங்கத் தொழில் துறையில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த யந்திரக் கருவித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி—பாதுகாப்பு இலாகாவுக்குச் சேர்ந்த அம்பர்நாத் புரோடோடைப் பாக்டரியின் உற்பத்தி உள்பட—சுமார் ரூ. 11 கோடிக்கு உயரும் என்று மதிப்பிடப்படுகிறது. இத் தொழிலில் மூன்றுவது திட்டத்துக்கு இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீடு, ஆண்டுக்கு ரூ. 30 கோடி. எனவே சாதனை அளவு குறைவு படுகிறது. இந்த இடைவெளி, தனியார் துறையின் முயற்சிகள் மூலம் பூர்த்தி செய்யுமாறு விடப்படும். தனியார் துறையிலிருந்து கிடைக்கக் கூடியது எவ்வளவு என்பதைப்பற்றி, தொழில் துறைப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பிறகு, யந்திரக் கருவிகள உற்பத்தி லட்சிய அளவில் தக்க மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கலாம்.

29. கண்ட்ரோல் கருவிகள், சாதனங்கள் உற்பத்திக்காக, இறுதிகட்டத்தில் ரூ. 20 கோடி மதிப்பு உற்பத்தி செய்யக்கூடிய ஒரு புதிய தொழிற்சாலையை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வருங்கால வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் இத்திட்டம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதி நுட்பமான துறையைச் சேர்ந்த புதிய தொழில் இது.

30. மூக்குக் கண்ணாடிகள் உற்பத்தியானது, கருவிகள் தொழில் வகையில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விஞ்ஞான, கைத் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சிலின் மத்திய கண்ணாடி, மட்பாண்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுபவங்களையும், தொழில் செய்முறை அறிவையும் அடிப்படையாகக் கொண்டு, மூன்றுவது திட்டத்தில் இதன் உற்பத்தியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

31. மூன்றுவது திட்ட காலத்தில் அமைக்கப்படும் பல்வேறு திட்டங்களில், உச்சக்கட்ட உற்பத்தி ஏற்படும்போது, அரசாங்க தொழில் துறையில் உற்பத்தியாகும் மொத்த யந்திரங்களின் பண மதிப்பு ரூ. 200 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

32. டிசைன்கள் அபிவிருத்தி, திட்ட இஞ்சினீரிங் ஆகியவைகளின் முக்கியத்துவத்தைக் கருதி, ஹிந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட், ஹிந்திரி கெமிகல்ஸ் அண்டு பெர்ட்டிலைசர்ஸ் ஆகியவைகளில் உள்ள அடிப்படை (nucleus) ஸ்தாபனங்களை விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும், இதர யந்திரத் திட்டங்கள் சம்பந்தமாக, தக்க வகையில் இதே மாதிரியான ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இந்தத் துறையில் செயல்தர உத்தரவாதம் சம்பந்தமான வழக்கங்கள் காரணமாக தகுந்த பரிசோதனை வசதிகளைச் செய்வதும் அவசியமாகும். போபாலில் ஸ்விட்ச்கீர் பரிசோதனை டிசைன் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அதிசக்திவாய்ந்த பரிசோதனை சாலை (high voltage laboratory) மூன்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இரட்டைப் பிரச்னைகளை மேற்கொண்டு பரிசீலித்து, தேவைக்கேற்ற திட்டங்களை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்,

33. **கனிஜ எண்ணெய்.**—பெட்ரோலியம் பொருள்களின் தேவை துரித மாக அதிகரித்து வருகிறது. 1959-ல் இதன் தேவை அளவு 62·8 லட்சம் டனகளை, மூன்றுவது திட்ட இறுதியில் இத்தேவையின் அளவு 100 லட்சம் டனனுக்குக் குறையாமல் அதிகரித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அஸ்ஸாமில் டிகபோய் பிரதேசத்தில் சிறு அளவில் பெட்ரோலியம் உற்பத்தி யாகிறது என்பது தவிர, தேவை அளவில் ஏறக்குறைய முழுதுமே இறக்கு மதியிலிருநது தான் சரிக்கட்டப்படுகிறது. பெட்ரோலியம் பொருள்கள் தேவை மிகவும் அதிகரித்து வருவதாலும், இதன் இறககுமதியினுல் அயல்நாட்டுச் செலாவணி மிக அதிகமாக செலவாவதாலும், இந்த இன்றி யமையாத பொருளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முனைப்பான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அஸ்ஸாம் ஆயில் கம்பெனி, இந்திய அரசாங்கம் ஆகிய இரண்டினுடைய கூட்டு முயறசியாகிய ஆயில் இந்தியா லிமிடெட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நஹர்காடியா பிர தேசத்தில் கண்டறியப்பட்டுள்ள எண்ணெய் வளங்களைப் பயன்படுத்து வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் வருஷம் 27·5 லட்சம் டன் குரூடாயில் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குரூடாயில் உற்பத்திக்கும் போக்குவரத்துக்கும் தேவையான முத லீட்டில் பெரும்பகுதி, இரண்டாவது திட்ட காலத்திலேயே கிடைத்துவிடும். நுண்மாதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய அமைப்பு வேலை முடிக்கப் பட்டு, குழாய்கள் அமைக்கப்பட்டானதும் 1962 தொடக்கத்திலேயே குரூ டாயில் உற்பத்தியும் குழாய் மூலம் எண்ணெய் அனுப்புவதும் ஆரம்பமாகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குழாய் லைன்கள், காலக்கிரமத்தில் இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு வரும் இடமான பரூனி வரை நீடிக்கப்படும்.

34. நஹர்காடியா பகுதியில், எதிர்பார்க்கப்பட்ட அளவில் இந்திய ஆயில் லிமிடெட், முழு உற்பத்தியில் இறங்கிய பின்பும், உள்நாட்டில் குரூடாயில் உற்பத்தி பெருமளவுக்குப் பற்றுக்குறையாகவே இருக்கும். கூடுதல் உற் பத்திக்கு வகை செய்யும் முறையில் மேலும் எண்ணெய் வள ஆராய்ச்சி வேலைகளுக்காக மூன்றுவது திட்டத்தில் ரூ. 115 கோடி ஒதுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. எண்ணெய் வளம் இருப்பது மெய்ப்பிக்கப்பட்டு, உற் பத்தியை தொடங்கக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் விஷயத்தில், உற்பத்தியைத் தொடங்கவும், சுத்திகரிப்பு வசதிகளை ஏற் படுத்தவும், பைப் லைன்கள் அமைக்கவும் தேவைப்படும் கூடுதல் நிதி வசதி—அவ்வப்போது மேற்கொள்ளப்படும் தேவை மதிப்பீடுகளை யொட்டி— ஏற்பாடு செய்யப்படும்.

35. இந்தியாவில் எண்ணெய் வளங்களைத் தேடும் முயற்சியில், அயல் நாடுகளைச் சேர்ந்த எண்ணெய் வள ஆய்வாளர்கள், பரஸ்பர சம்மத, ஏற்பாடுகளின்பேரில் வந்து கலந்து கொள்ளலாம் என்று அழைப்பு விடுக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்தது. இந்த அழைப்புக்கு பதிகள்கள் கிடைத்துள்ளன. அந்த பதில்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன,

அரசாங்கத் தொழில் துறையில் " எண்ணெய் விஞ்ஞியோக ஸ்தாபனத் துக்கு " ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

36. **பெட்ரோலியம் சுத்திகரிப்பு.**—1962 தொடக்கத்தில் அரசாங்கம் முதல் தடவையாக ஓர் உற்பத்தியாளர் என்ற முறையில் இந்தத் துறையில் பிரவேசிக்கும். நுண்மதி பரூணி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து முடிக்கப்பட்டதும், உள்நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிலில் அரசாங்கத்தின் பங்கு, மொத்தத்தில் 34 சத விகிதமாகிவிடும். ஹை ஸ்பீடு டீசல் எண்ணெய் பற்றுக்குறை, மண்ணெண்ணெய், லூப்ரிகேட்டிங் எண்ணெய், பெட்ரோலியம், கோக் ஆகியவைகளில் பற்றுக் குறையைத் தீர்ப்பதென்ற கண்ணோட்டத்திலேயே, எண்ணெய் சுத்திகரிப்பை மேற்கொண்டு விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும். சுத்திகரிக்கப்பட்ட கனிஜ எண்ணெயில் மொத்தத் தேவையும், மொத்த உள்நாட்டு எண்ணெய் சப்ளையும் பின்வருமாறு (அரசாங்கத் தொழில் துறை சுத்திகரிப்பு நிலையங்கள் இரண்டும், தங்கள் முழு சக்தியின் அளவுக்கு உற்பத்தி செய்யும்போது) இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது :—

(எண்கள் ஆயிரம் டன்களில்.)

நுண்மதி பரூணி சுத்திகரிப்பு நிலையங்கள் உளபட எல்லர் சுத்திகரிப்பு நிலையங்களிலுமாக எதிர்பார்ககப்படும் உற்பத்தி.		1965 தேவை மதிப்பீடு.	பற்றுக்குறை	உபரி.
மண்ணெண்ணை	1,100	2,200	1,100	..
ஹை ஸ்பீடு டீசல் எண்ணெய்	1,300	1,800	500	..
மோட்டார் ஸபிரிட்	1,700	1.300	..	400
விமான டர்பைன எரிபொருள* A.T.F.	..	300	300	..
விமானத்துக்கான ஸ்பிரிட்	100	60	:.	40
உலை எண்ணெய் (பர்னேஸ் ஆயில்)	1,700	2,200	500	..
லைட் டீசல் எண்ணெய் L.D.O.	500	700	200	..
பிடுமென	400	700	300	..
சலல் பேட்சிங் எண்ணெய் J.B.O.	100	100	..	..
வேபரைசிங் ஆயில் **				
மினரல் டர்பனடைன் **				
சால்வெண்ட் ஆயில் **	50	100	50	..
பாரபின் வாக்ஸ்				
லூப்ரிகனட்	100	500	400	..
மொத்தம் ..	7,050	9,960	3,350	440

* விமானத்துக்கான டர்பைன் எரிபொருளின் தற்போதைய மதிப்பீ. இரசின் உறபத்திப் புள்ளி விவரங்களில் சேர்ககப்பட்டுள்ளது.

** புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து, இந்த சிறிய பொருள்களின் உறபத்தி அளவு இன்னும் மதிப்பிடப்படவில்லை.

37. மோட்டார் ஸ்பிரிட் விஷயத்தில், உற்பத்திக்கும் தேவைக்குமிடையே யுள்ள சமனற்ற நிலைமையை சமாளிக்க வேண்டிய பிரச்னை, வேறு சில நாடுகளைப் போலவே இந்தியாவுக்கும் உண்டு. உபரி மோட்டார் ஸ்பிரிட் விஷயத்தில், ஏற்றுமதியானது இதுகாறும் ஒரு போக்கிடத்தைத் தந்து கொண்டிருந்தது. ஆனால் அண்டை நாடுகளில் எண்ணெய் சுத்திகரிப்புக் கான விரிவான நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்டு வருவதால் வெளி நாடுகளில் இப்பொருளை விற்றுத் தீர்ப்பது என்பது நாளுக்குநாள் அதிகக் கஷ்டமானதாக இருக்கும்.

சமனற்ற நிலைமைக்குப் பரிகாரம் காண கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் :—

(1) நடுத்தர வடிகட்டிகள் (மிடில் டிஸ்டிலேட்டுகள்) உற்பத்தியை அதிகரிப்பதற்கான தொழில் நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள் ளல். உற்பத்தி முறையை மாற்றுவதற்கு இதில் மிகச் சொற்ப அளவு இடமிருக்கும் மண்ணெண்ணெயை எச்.எஸ்.டி. ஆகிய இரண்டிலும் பிளாஷ் பாயிண்ட் வரையறைகளை மாற்றி இந்த இரண்டு பொருள்களின் உற்பத்தியையும் அதிகரிக்கும் விஷயம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(2) ஹை ஸ்பீடு டீசல் எண்ணெய் உபயோகிப்பு அதிகரித்து வரு வதை தடுப்பதற்காக, தகுந்த நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளு வது இந்த ஆண்டில் இது ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டது.

(3) ஹை ஸ்பீடு டீசலின் தேவையைக் குறைக்கக்கூடிய வகையில் கேசோலின் உபயோகிப்பை அதிகரித்தலும் கலப்பு எரிபொருள் உபயோகத்தை அதிகரித்தலும் தற்போதுள்ள டீசல் வண்டிகள், வண்டியின் அமைப்பில் எவ்வித மாறுதலும் செய்யாமல் 10 சத விகிதம் வரை கேசோலின் உள்ள கலப்பு எரிபொருளை சுலபமாகப் பயன்படுத்தலாம்.

38. **இரும்புக் கனி.**—தற்போது பரிசீலனையில் உள்ள உருக்கு தேனிரும்பு லட்சிய அளவுக்குத் தேவைப்படும். இரும்புக் கனி சுமார் 200 லட்சம் டன்களாகும். ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய தேவைப்படும் இரும்புக் கனியின் அளவு—பைலாடிலா திட்டம் சம்பந்தமாக அண்மை யில் ஏற்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அளவையும் சேர்த்து —சுமார் 80 லட்சம் டன்களாகும். இதர நாடுகளுக்கு ஏற்றுமதி சுமார் 20 லட்சம் டன்கள் எனக் கொண்டால், ஏற்றுமதிக்காக மொத்தம் தேவைப்படுவது 100 லட்சம் டன்களாகும். இந்த தேவைகளைச் சரிக் கட்டுவதற்காக இரும்புக் கனி உற்பத்தி லட்சிய அளவு 320 லட்சம் டன் களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

39. பிலாய், ரூர்கேலா உருக்காலைகளின் தேவைகள், அவைகளுக்காக அமைக்கப்பட்டுவரும் சுரங்கங்களிலிருந்து சரிக்கட்டிக் கொள்ளப்படும். இதற்கான நிதி வசதிகள், இரு உருக்காலைகளினுடையவும் விஸ்தரிப்புக் கான ஏற்பாட்டில் வகை செய்யப்பட்டுள்ளன. துர்க்காபூர் உருக்கு ஆலை

விஷயத்தில், கூடுதலான இரும்புக்கனி சப்ளையைப் பெற கிரிம்புரு சுரங்கங்களை நாட வேண்டியிருக்கும். ஜப்பானுடன் செய்து கொண்டுள்ள ஏற்றுமதி உடன்படிக்கையை நிறைவேற்றுவது சம்பந்தமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் கிரிம்புரு சுரங்கங்களிலிருந்து, துர்க்காபூர் ஆலைக்கு கூடுதல் கனி வசதிகளைப் பெற வேண்டியிருக்கலாம். இதன் காரணமாக பைலாடிலா திட்ட லட்சிய அளவு முன்பு 40 லட்சம் டன்களாக இருந்ததானது, 60 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. திட்டத்தில் இதற்கான நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. பொகாரோவில் புதிய உருக்கு ஆலைத் தேவைகளை கிரிம்புரு பிரதேசத்திலிருந்தே முக்கியமாகச் சரிக்கட்ட வேண்டியிருக்கும். இந்தச் சுரங்கங்களின் உற்பத்தி சக்தியை 20 லட்சம் டன் அதிகரிப்பது அவசியமாக இருக்கும். இதற்கான மூலதனத் தேவை பொகாரோ உருக்கு ஆலைக்கான நிதி வசதியிலிருந்து சரிக்கட்டப்படும்.

40. **இதர கனிவளங்கள்.**—திட்டத்தில் நிதி வசதி ஒதுக்கப்பட்டுள்ள இதர முக்கிய வேலைத் திட்டங்களாவன :—

(1) கெட்ரி, டாரிபோ ஆகிய இடங்களிலுள்ள தாமிரப் படிவங்களை ஆராய்ந்து, வருஷம் ஒன்றுக்கு 10,000 டன் தாமிர உற்பத்தி கிடைக்கும்படியாக அவற்றைப் பயன்படுத்தல்.

(2) மத்தியப் பிரதேசத்தில் பன்னாவிலுள்ள வைரச் சுரங்கங்கள் அபிவிருத்தி.

(3) பைரைட் என்று சொல்லப்படும் பொன் நிமளையிலிருந்து கந்தகம் கந்தக அமிலம் தயாரிப்பதற்காக அம்ஜோரிலுள்ள பொன் நிமளைப்படிவங்களைப் பயன்படுத்தல். இத்துடன், அரசாங்கத் தொழில் துறையில் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக கனி வளங்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்திய பூதத்துவ சர்வே, இந்திய சுரங்க பீரோ ஆகியவைகளின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும்.

41. **ரசாயன உரங்கள்.**—மூன்றாவது திட்ட முடிவுக்குள்ளாக நைட்ரஜன் அளவில், 10 லட்சம் டன்னுக்குச் சமமான நைட்ரஜன் ரசாயன உரங்களையும் பி$_2$ ஓ$_5$ அளவில் 400—500,000 டன்னுக்குச் சமமான பாஸ்பேட் உரங்களையும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு வருகிறது. பி$_2$ ஓ$_5$ வகையில் தற்போது 60,000 டன்னுக்கும் குறைவாகவே தான் உபயோகப்படுத்தப்படுகின்றது. 1959-ல் உபயோகத்துக்காக நைட்ரஜன் வகையில் 2,31,000 டன்கள் தான் கிடைத்தன என்பதும் அந்தப் புள்ளி விவரங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கன.

42. அரசாங்கத் தொழில் துறையில் நைட்ரஜன் ரசாயன உரங்கள் உற்பத்திச் சக்தி 8 லட்சம் டன்னுக்கு அதிகரிக்கப்படும் என்பது தற்போதைய உத்தேசம். உற்பத்தி 10 லட்சம் டன் ஆக வேண்டும் என்ற லட்சிய அளவை அடைவதில், பாக்கி 2 லட்சம் டன்களை தனியார் துறை உற்பத்தி செய்யும். பாஸ்பேட் உர அதிகரிப்புத் தேவையிலும் பெரும் பகுதியை தனியார் துறையே உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

43. நைட்ரஜன் ரசாயன உரங்களில் தற்போதைய உற்பத்திச் சக்தி 1,44,000 டன் நைட்ரஜன் ஆகும். இது அநேகமாகப் பூராவும் அரசாங்க தொழில் துறையின் கீழ் உள்ளது. பெர்ட்டிலைசர் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் (FACT), நங்கல் ரசாயன உரத் தொழிற்சாலை ஆகியவை களின் விஸ்தரிப்புத் திட்டங்கள் பூர்த்தியானதும், இரண்டாவது திட்ட முடிவில் இந்த உற்பத்தி 2,34,000 டன்னுக அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ரூர்கேலாவிலும் நெய்வேலியிலும் இரண்டு தொழிற் சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. டிராம்பேயில் மற்றொரு உரத் தொழிற்சாலை அமைப்புக்காக யந்திரங்கள், சாதனங்களுக்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. துர்க்காபூர், நஹர்காடியா, ஆந்திராவிலுள்ள கொத் தேகூடம், ராஜஸ்தானில் ஒரு இடம் ஆகியவற்றில் உரத் தொழிற்சாலைகள் அமைப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மைசூர், குஜராத் ஆகியவைகளில் தொழிற்சாலைகள் அமைப்புக் கான இடங்கள் பரிசீலனையில் உள்ளன. பத்து லட்சம் டன் உற்பத்தி என்ற குறிக்கோள் அளவை அடைய கேற்கொண்டு இரண்டொரு தொழிற்சாலை கள் தேவைப்படலாம். இந்தத் துறையில் அடுத்த மூன்று ஆண்டுகளில் முதலீடு விஷயத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும்.

44. நைட்ரஜன்; கலப்பு ரசாயன உரங்களுக்கு தற்காலிகமாக ஒப்புக் கொள்ளப்பட்ட ரசாயன சேர்மானப் (end products) பொருள் வகை பின் வருமாறு :—

ரசாயன சேர்மானப் பொருள்கள்.	(1965–66) நைட்ரஜன் ஆயிரம் டனகளில.
அம்மோனியம் சல்பேட்	232·.0
அம்மோனியம் சல்பேட் நைட்ரேட்	211·.0
நைட்ரோ சாக், நைட்ரோ லைம்ஸ்டோன்	160,·0
நைட்ரோ பாஸ்பேட், கலப்பு ரசாயன உரங்கள்	74·.0
யூரியா	206.·0
அம்மோனியம் பாஸ்பேட்	67·0
அம்மோனியம் குளோரைடு	50•.0
மொத்தம்	1,000.·0

மேலே குறிப்பிடப்பட்டவைகளிலிருந்து நைட்ரஜன் கூடுதல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க ஒரு அளவை, கலப்பு அல்லது கூட்டு ரசாயன உரங்கள் வடிவில் அல்லது கலப்பு உரங்களும் கூட்டு உரங்களும் சேர்ந்த வடிவில் ஏற்படுத்திக் கொள்ள திட்டமிடப்படுவது தெரிய வரும். இதன் மூலம் பாஸ்பேட் (பி$_2$ ஓ$_5$) தேவையின் ஒரு பகுதியையும் பூர்த்தி செய்து கொள்ளலாம். இந்த உற்பத்தி முறையினுல் கந்தகத்துக்கும் கற்பூர சிலாசத்துக்கும் (ஜிப்சம்) அதிகம் நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படாது.

45. அடிப்படை ரசாயனங்கள், உப பொருள்கள் பூர்த்தி செய்யப் பட்ட பொருள்கள்.—கந்தக அமிலம்; அம்மோனியா, நைட்ரிக் அமிலம்,

பாஸ்பூரிக் ஆசிட் போன்ற பல்வேறு அடிப்படை ரசாயனங்கள் தயாரிக்கப் பட்டு, முடிவாக ரசாயன உரங்களாக மாற்றப்படுவதால், ஏற்கனவே விளக்கப்பட்ட ரசாயன உர அபிவிருத்தி வேலைகள் உண்மையில் இந்தத் தலைப்பின்கீழ் தான் வர வேண்டும். ரசாயன உரத் தொழிலின் சில உப பொருள்கள், ரசாயன மூலப் பொருள்களாகவும் பயன்படுகின்றன. உதாரணமாக ஊரியா மல்டிஹைட் பிசின் உற்பத் திக்கு உதவுகின்றது.

46. அரசாங்கத் தொழில் துறையின் கீழ், உருக்கு ஆலைகளில் நிலக்கரி சுடப்படுவது அதிகரிப்பதற்கேற்ப, சேதன ஹைட்ரோ கார்பன் பொருள் களை, உதாரணமாக பெனிஜீன், டோலுான், நெப்தலீன், ஆந்த்ரசீன், கெஸிலீன் போன்ற பொருள்களை எடுப்பது அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஒரு புறத்தில் இந்தப் பொருள்களையும், மற்றொரு புறத்தில் சாயப் பொருள்கள், பிளாஸ்டிக், மருந்து உற்பத்திக்கான யந்திரங்கள் ஆகியவைகளையும் இணைப்பதற்காக ஒரு பெரிய திட்டம் உத்தேசிக் கப்பட்டிருக்கிறது. அப்பெரிய திட்டத்தை அடிப்படை ரசாயனங்கள் உப பொருள்கள் திட்டம் [Basic Chemicals and Intermediates (B.C.I)] என்ற பெயரில் மகாராஷ்டிர மாநிலம் பான்வெல் அருகில் அப்டாகர்பாடே பிரதேசத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடிப் படை ரசாயனங்கள், உப பொருள்கள் திட்டமானது, மூல ரசாயனங் களை சப்ளை செய்யும் அமைப்பு என்ற முறையில், ஹைதராபாத் சானட் நகர் அருகில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்கை மருந்து திட்டத் துடன் (ரசாயன மருந்து முறை) உறுதியாக பிணைக்கப்படும். இந்த இரண்டு திட்டங்களின் விளைவாக, மூன்றுவது திட்ட காலத்தில் புத்தம் புதியதோர் துறையில், தொழில் நுட்ப செய்வினை முறையை அறிந்துகொள்ள நிறைய வாய்ப்பு ஏற்படும். பி. சி. ஐ. நிறுவனத்தின் உற்பத்தி வேலைத் திட்டத்தில் 40 சேதன மூல ரசாயனங்கள் தயாரிக்கப்படும். அதன் மொத்த உற்பத்தி அளவு 25,160 டன்கள் இருக்கலாம். காலக் கிரமத்தில் உற்பத்தியை மேற்கொண்டு 10,000 டன் அதிகரிக்கவும், வகை செய்யப்படுகிறது. உற்பத்தி நடவடிக்கைகளின் போது குளோரி னேஷன், சல்போனேஷன், ஆல்கலீன்பியூஷன், நைட்ரேஷன், ரிடக்ஷன், ஆக்ஸிடேஷன் உள்ளிட்ட பல அடிப்படை அசேதன ரசாயனங்கள் பயன் படுததப்படுகின்றன. திட்டங்களின் கீழ் உள்ள இணைப்பு யந்திரங்களில் இந்த அசேதன ரசாயனங்கள் சிலவற்றை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

47. பைரட் எனப்படும் பொன்நிமளையிலிருந்து கந்தக உற்பத்தி செய் வதற்கான திட்டம், நாட்டின் கந்தகப் பிரச்னையைத் தீர்ப்பதில் ஒரு பெரிய முயற்சியாகும். இதற்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்ட வசதிகளிலி ருந்து வருஷம் ஒன்றுக்கு 30,000 டன் கந்தக உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குத் தேவையான, பொன் நிமளை வெட்டி எடுக்கும்போது "பைன்ஸ்" உற்பத்திக்கும் வழி ஏற்படும். கந்தக அமிலம் தயாரிப்பதற்கு அந்த பைன்ஸ் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48. அத்தியாவசிய மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள்.— இந்த முக்கியமான துறையில் கீழ்க்கண்ட திட்டங்கள் அமுலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது :—

(1) ஆந்திரப் பிரதேசம் சானட் நகரில் ரசாயன மருந்துகள் உற்பத்தி (Synthetic drugs project), சல்பா மருந்துகள், வைட்டமின்கள்' பெனெசிடின், இதர ரசாயன மருந்துகள் (ஐ.என்.எச். லூமினல் குளோரோமைசின் முதலியன), உப பொருள்கள் (ஏ. எஸ். ஸி. ஆண்டுக்கு 1,500 டன் உள்பட) உற்பத்திசெய்வதற்கான திட்டம்.

(2) உத்தரப் பிரதேசம் ரிஷிகேஷ் அருகில் பெனிசிலின, ஸ்ட்ரெப் டோமைசின், க்ளோரோ இதர டெர்ட்ரேசிக்ளின்ஸ், புது ஆண் டிபயோடிக்ஸ் முதலிய உற்பத்திகள் மேற்கொள்ள ஆன்டிப யோடிக்ஸ் தொழிற்சாலை.

(3) கேரளத்தில் பைடோ-ரசாயனங்கள் உற்பத்தி சாலை, காபீன், எபிட்ரைன், டிகாடலிஸ், கிளைகோசைட்ஸ், லைடசைட்ஸ், எர்காட், ஆல்கலாயிட்ஸ், அட்ரோபைன், ஸ்கோபோலிமைன், ரிசர்பைன், பாபெய்ன், வைட்டமின் “பி” முதலியன உற்பத்தி செய்வதற் கான திட்டம்.

(4) சென்னை கிண்டி அருகே, 25 வகை கருவிகள் உற்பத்திக்கான அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை.

இந்தத் திட்டங்களை அமுல் நடத்துவது மூலம், அத்தியாவசிய மருந்துகள் நியாயமான விலையில் கிடைக்க வழி ஏற்படும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.

49. மாநில அரசாங்கங்களின் தொழில திட்டங்கள்.—இந்த தலைப் பின் கீழ் உள்ள பல திட்டங்கள், இரண்டாவது திட்ட காலத்திலிருந்து தொடர்ந்து வரும் முன் தொடர்ச்சித் திட்டங்களாகும். உதாரணமாக மைசூர் இரும்பு உருக்கு தொழிற்சாலை, ஆந்திரா பேப்பா மில்ஸ் ஆகிய வற்றின் விஸ்தரிப்பு, துர்க்காபூர் கோக உலை, நூர்ககாபூரிலிருந்து கல்கத்தா வுக்கு காஸ் பைப்பிங் முதலியவை. இத் தலைப்பில் சேர்க்கப்படுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் புதிய திட்டங்கள் பின்வருமாறு :—

நேபா மில்ஸ் உற்பத்தித் திறனை, ஆண்டுக்கு 30,000 டன் என்றிருப் பதை 60,000 டன்னுக அதிகரித்தல் ; பிரகா டூல்ஸ் உற்பத்தித் திறனை அதிகரித்தல். ஆந்திரப் பிரதேசம் கொத்தகூடத்திலுள்ள ரசாயன உரத் தொழிற்சாலை, மாநில அரசாங்க திட்டமாகக் கருதப்பட்ட போதிலும், தற்போது அதற்கான நிதி வகை மத்திய அரசாங்கத் தொழில் துறையில் செய்யப்பட்டுள்ளது.

50. மேலே குறிப்பிட்ட திட்டச் செலவுகளைத் தவிர்த்து, மூன்றும் திட்டத்தில் மாநிலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மாநில நிதிக் கார்ப்பரேஷனுக்கு நிதி உதவி தரவும், “கைத்தொழில் அபிவிருத்திப்

பிரதேசங்களுக்கு" நிதி வகை செய்யவும் ஏற்பாடு செய்தாக வேண்டியிருக்கிறது: கைத்தொழில் அபிவிருத்தி பிரதேசத் திட்டம் என்பது, தற்போது தொழில் வளத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளில் தொழில் வளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடு ஆகும். கைத் தொழிலில் பின் தங்கியுள்ள பிரதேசங்களில் கேந்திரமாக விளங்குவதும், போக்குவரத்து வசதி இருப்பனவும் அல்லது போக்கு வரத்து வசதியை சுலபமாக ஏற்படுத்தக் கூடிய நிலையில் இருப்பதுமான நிலப் பகுதிகளை அரசாங்கம் வாங்கி, அதில் தொழிற்சாலைக்கான மனை, இடவசதிகள், மின்சாரம், தண்ணீர், சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து பின்பு அவைகளை, தொழில் துவக்கும் நபர்களுக்கு விற்பனைக்கோ, நீண்ட கால குத்தகைக்கோ வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

51. மாநில அரசாங்கங்களின் ஐந்தாண்டுத் திட்டங்கள் குறித்து, அந்த அரசாங்கங்களுடன் விவாதிக்கும்போது தான் இந்த வேலைத்திட்டங்களின் நிலைமை தெளிவாகத் தெரியவரும்.

52. மொத்த ஒதுக்கீடு ரூ. 1,500 கோடியில் இதர நானுவித வேலைத் திட்டங்களுக்கு வசதிகள்.—கைத்தொழில் நிதிக் கார்ப்பரேஷனுக்கும், கைத் தொழில் கடன், முதலீடு கார்ப்பரேஷனுக்கும், கடன் வழங்குவதற்காக, திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒட்டு மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மலைத் தோட்டத் தொழில்கள், மத்திய அரசாங்கக் கைத்தொழில் திட்ட நகரமைப்புகள் (ரூ. 30 கோடி), தேசீயக் கைத்தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் (ரூ. 10 கோடி), தேசீய உற்பத்திக் கவுன்சில், இந்திய தர நிர்ணய நிறுவனம், மெட்ரிக் முறையைப் பரப்புவதற்கான நடவடிக்கைகள் (ரூ. 10 கோடி). இவை தற்காலிகமான ஒதுக்கீடுகள். திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு முன், உள்ள தேவையை அனுசரித்து இது பரிசீலிக்கப்படும்.

தனியார் துறை வேலைத் திட்டங்கள்

53. மூன்றுவது திட்டத்தில் உற்பத்திச் சக்தியையும், உற்பத்தி லட்சிய அளவையும் நிர்ணயிப்பது சம்பந்தமாக திட்டக் கமிஷன் சென்ற 8 மாதங்களாகப் பல்வேறு தொழில்களின் பிரதிநிதிகளுடன் சம்பாஷணை நடத்தியது. கூடிய சீக்கிரத்தில் இவ்விஷயமாக மேற்கொண்டும் விவாதங்கள் நடைபெறும். அபிவிருத்திக் கவுன்சில்கள் இதுவரை செய்துள்ள சிபார்சுகளும், சில குறிப்பிட்ட தொழில்களில் லட்சிய அளவுகள்பற்றி ஆராயுமாறு கோரப்பட்ட வேறு ஸ்தாபனங்களின் சிபார்சுகளும் திட்டக் கமிஷன் பரிசீலனைக்கு வந்தன. இந்திய வர்த்தகக் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனம், அசோஷியேட்டட் சேம்பர் ஆப் காமர்ஸ், அகில இந்திய உற்பத்தியாளர் ஸ்தாபனம் போன்ற நாட்டின் முக்கியமான கைத்தொழில் வர்த்தக ஸ்தாபனங்களுடனும், நிதி நிறுவனங்களின் (institutional financing agencies) பிரதிநிதிகளுடனும் விவாதங்கள் நடத்தப்பட்டன. மூன்றுவது திட்டகாலத்தில் தனியார்துறை முதலீட்டுக்குக் கிடைக்கக்கூடிய நிதி வசதிகள் போன்ற பரவலான விஷயங்கள்குறித்துப் பேசப்பட்டது.

54. இந்த அத்தியாயத்தின் முடிவில் உள்ள அட்டவணையில் (இணைப்பு II கடைசி இரண்டு பத்திகள்) மூன்றுவது திட்டத்தின்கீழ் பல்வேறு தொழில்களுக்கும் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சில தொழில்களில் ஆய்வு வேலைகள் பூர்த்தி யடையாத நிலையில் நற்சமயம் குறிப்பிடப்பட்டுள்ள இந்த லட்சிய அளவுகள் நீக்குப் போக்காகவே இருக்கும். அரசாங்கத் தொழில் துறையிலும் தனி யார் துறையிலும் மொத்த லட்சிய அளவுகள் விவரம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னல் சொல்லப்பட்ட அரசாங்கத் தொழில்துறை வேலைத் திட்டங்களுடன் சேர்த்துப்படித்தால் இணைப்பு II-ன் மூலமாக பல்வேறு தொழில் துறைகளில் தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பங்கை அறிந்து கொள்ளலாம்.

55. இரண்டாம் திட்ட காலத்தில் தனியார் துறையில் நிலையான ஆஸ்தி அமைப்புக்கு முதலீடு வசதிகளும், மூன்றும் திட்ட காலத்தில் இதே வகையில் எதிர்பார்க்கப்படும் வசதிகளும், கீழ்க்கண்ட அட்டவணையில் பொதுப்படையாகத் தரப்பட்டுள்ளன.

தனியார் துறையில் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, நிதி வசதி ஆதாரங்கள்.

(ரூபாய்கள் கோடியில்)

	இரண்டாவது திட்டக் காலம்.	மூன்றுவது திட்டக் காலம்
1 ஸ்தாபன நிறுவனங்களிடமிருந்து	85	130
2 மத்திய, மாநில அரசாங்கங்கள் நேரடி கடன் வகையில் ..	20	10
3 புதிய விரிவான வசதிகள்	120	200
4 உள் நிதி வசதிகள் (திருப்பித் தரப்படும் பாபத்துகள் நிகரம்) ..	400	610
5 வெளி தேசங்களின் நேரடி கடன் மூலதனத்தில் பங்கு ..	200	300
மொத்தம் ..	825	1,250

56. யந்திரங்களைப் புதுப்பிப்பது, நவீனமாக்குவது ஆகிய பணிகளுக்கு ஏற்படும் செலவு நீங்கலாக உற்பத்தித் தொழில்களுக்கும் சுரங்கத் தொழிலுக்கும் மூன்றும் திட்ட காலத்தில் நிகர மூலதனச் செலவு சுமார் ரூ. 1,050 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சு ஜவுளி, சணல், சர்க்கரைத் தொழில் ஆகியவைகளை நவீன மயமாக்கத் தேவைப்படும் பெரும் முதலீடு விஷயம் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது.

முக்கிய தொழில் துறைகளில் தனியார் துறை சாதிக்க வேண்டிய அபி விருத்தி வேலைகளின் முக்கிய அம்சங்கள் கீழே விளக்கப்படுகின்றன.

லகு-கன இஞ்சினீரிங் தொழில்கள்

57. தேனிரும்பு, உருக்கு ஆகியவை அதிகமாகக் கிடைக்கக்கூடிய நிலையை ஒட்டியும், யந்திரங்கள் உற்பத்தி அதிகமாக வலியுறுத்தப்படுவ தாலும், முதலீடு நிலைமைகளையொட்டி வேலை வாய்ப்புகளுக்கு அதிக இடமிருப்பதாலும் கன-லகு இஞ்சினீரிங் துறையில் பெருமளவில் அபி

விருத்தி வேலைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு உற்பத்திப் பொருள்களுக்கு லட்சிய அளவுகள் நிர்ணயிக்கப்படும். உதாரணமாக விவசாய யந்திரங்கள், கட்டுமான யந்திரங்கள் வகையில் டிராக்டர்கள், டீசல் இஞ்சின்கள், ரோடு ரோலர்கள், டம்பர்கள், ஷோவல்கள், மின்சார வினியோகத்துக்கும் அளவெடுப்பதற்குமான கருவிகள் வகையில் டிரான்ஸ்பார்மர்கள் (33 கி. வா.-வுக்கு கீழே) மின்சார கேபிள்கள், வயர்கள், வீடுகளுக்கான மீட்டர்கள், ரயில் ரஸ்தா போக்கு வரத்து சாதனங்கள் வகையில் ரயில் இஞ்சின்கள், வாகனங்கள், ரயில் பெட்டிகள்; பஸ்கள், டிரக்குகள்; சர்க்கரை, காகிதம், சிமிட்டி, ஜவுளித் தொழில்கள்; வகையில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கான பூர்ணமான யந்திர வசதிகள், சில ரசாயனத் தொழில்களுக்கான யந்திரங்கள், நீராவி கிளப்பும் கொதி கலன்கள் (பாய்லர்கள்), யந்திரக் கருவிகள், வெல்டிங் எலெக்ட்ரோட்ஸ், நீடித்த உபயோகப் பொருள்கள் வகையில் கார்கள், தையல் மிஷின்கள் சைக்கிள்கள், மின்சார விசிறிகள் முதலியன. ஆனால் இந்த லட்சிய அளவுகள், சகலமான விஸ்தரிப்பு அம்சங்களையும் குறிப்பிடுவன அல்ல.

58. இந்தத் துறையில் புதிய பொருள்கள் உற்பத்தியில் மிக முக்கியமானது பல்வேறு வகை யந்திரங்கள் தயாரிப்பேயாகும். இரண்டு பிரிவுகளில் இந்த யந்திரங்கள் உற்பத்தி செய்யப்படும். முதலாவது இக்காரியத்துக்கெனவே ஏற்படுத்தப்பட்ட துர்க்காபூர் ஏ.வி.பி. (அசோசியேட்டட் சிமெண்ட்ஸ்-விக்கர்ஸ்-பாப்காக் வில்காக்ஸ்) போன்ற நிறுவனங்கள். இந்த ஏ.வி.பி. நிறுவனம் சிமிட்டி தொழில் யந்திர சாதனங்களையும் அதிக அழுத்த சக்தி வாய்ந்த கொதி கலன்களையும் (ஹைபிரஷர் பாயலர்களையும்) தயாரிக்க ஏற்படுத்தப்பட்டதாகும். இரண்டாவதாக, ஏற்கெனவே இயங்கி வருகின்ற அல்லது ஏற்படுத்தப்பட்டு வருகின்ற இஞ்சினீரிங் தொழிற்சாலைகளின் உற்பத்தியை பலதரப்பட்டதாக்குதல். இந்த இரண்டாவதாக சொல்லப்பட்ட முறையில் புதிய யந்திர வகைகளை உருவாக்குவதற்கான முதலீட்டுச் செலவு, மற்ற வகையில் ஆகக் கூடியதைவிட கணிசமாகக் குறைந்திருக்கும். சிற்சில தொழில்களில் உற்பத்தியின் அளவைப்பார்க்கும் போது, முதலீட்டின் அளவு குறைவாகத் தோன்றுவதற்குக் காரணம் இது போன்ற நிலைமையே ஆகும். சில யந்திர உற்பத்தித் திட்டங்களில் சில வகை உறுப்புகளின் உற்பத்தியை சார்புத் தொழிற்சாலைக்கோ அல்லது உபரி சக்தியுள்ள பெரிய தொழில்களிடமோகூட, விடும் வழக்கமும் இருக்கின்றது. அத்தகைய நிலைமையில் வழக்கமான உற்பத்தி முதலீடு விகிதத்தை அனுசரிக்க முடியாது.

59. யந்திரங்கள் உற்பத்திக்காக 1965–66-க்கு குறிப்பிடப்பட்டுள்ள லட்சிய அளவுகளை எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலும், அவை ஒவ்வொன்றின் விஷயத்திலும் குறிப்பிட்டபடி, அதிகபட்ச அளவுக்கு உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு அவை செய்யப்படுவதும் அவசியமாகும். சர்க்கரை ஆலைக்கான யந்திரங்கள் உற்பத்தி விஷயத்தில், பல ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு, இணையான முறையில் பணியாற்றி, ஆலைக்கு வேண்டிய பூரா யந்திர சாதனங்களையும் அமைத்துத் தந்தன. வேறு வகை யந்திரங்களை அமைப்பதிலும் அதே முறை பயன்படலாம்.

60. சில வகை யந்திர உற்பத்தி வேலைத் திட்டங்களில் உத்தேச லட்சிய அளவின் சாராம்சம் பின் வருமாறு :—

யந்திர வகை.	யந்திரத் தொழிற்சாலையின் ஸ்டாண்டார்டு அளவு (நாளொன்றுக்கு டன்கள்).	1965–66-க்கு லட்சிய அளவு: யந்திரங்கள் எண்ணிக்கை.	1965–66-க்கு லட்சிய அளவு: மின்சாரக் கருவிகள் நீங்கலாக யந்திரங்களின் விலை மதிப்பு (ரூபாய்கள் கோடியில்).	உள் நாட்டுப் பொருள்கள். சத வீதம்
சிமிட்டித் தொழிற்சாலை யந்திரம் ..	500	6—7	4·0—5·0	90
காகிதத் தொழிற்சாலை யந்திரம்—				
(அ) பெரிய யந்திரங்கள் ..	50	4 }	6·5—7	70
(ஆ) சிறிய யந்திரங்கள்	10	4 }		
சர்க்கரை ஆலை யந்திரங்கள்	..1,000 லிருந்து 1,200 வரை கரும்பு.	14	10·0	85
பஞ்சாலையந்திரங்கள்—				
(அ) நூற்பு ஆலைகள் ..	..12,000 கதிர்கள். }	..	20·0	85
(ஆ) நூற்பு நெசவு ஆலைகள்	..12,000 கதிர்களும் 300 தறிகளும். }			
கந்தக அமில தொழிற்சாலை ..	50	10	1·3	80

61. மோட்டார் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நிறைய முதலீடு தேவையாதலாலும், உற்பத்தியை நிலை நிறுத்துவதற்கு அயல் நாட்டு நாணயச் செலவாணி தேவைப்படுவதாலும், மோட்டார் தொழில் உற்பத்தி லட்சிய அளவு பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். பாஸஞ்சர் கார்கள், வாணிப ரீதியில் ஓட்டுவதற்கான வண்டிகள் (பஸ்கள் லாரிகள்), ஜீப்புகள், மோட்டார் சைகிள்கள், ஸ்கூட்டர்கள் ஆகிய இனங்களில் தற்காலிகமாக குறிப்பிடப்பட்டுள்ள லட்சிய அளவுகள் வருமாறு :—

	உற்பத்தி மதிப்பு. (1960–61).	லட்சிய அளவு. (1965–66).
பாசஞ்சர் கார்கள் தொகை	20,000	30,000
வாணிப ரீதியில் ஓட்டும் வண்டிகள் (பஸ்கள், லாரிகள்)	28,000	60,000
ஜீப்புகள், ஸ்டேஷன் வாகனங்கள்	5,500	10,000
மோட்டார் சைகிள்கள், ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர வண்டிகள்	16,000	48,000

வாணிப ரீதியில் ஓட்டுவதற்கான வண்டிகள் என்ற லட்சிய அளவில், பாதுகாப்பு இலாகா நிறுவனம் (ordinance establishment) சப்ளை செய்யக் கூடிய 4,000 யூனிட்டுகளும் உள்ளடங்கும்.

மோட்டார் தொழில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டுமானால், மோட்டார் வண்டி உற்பத்தியாளர்களும் அதன் சார்புத் தொழில் உற்பத்தியாளர்களும் இணைப்பான முறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை

மேற்கொள்ளுவது அவசியம். மோட்டார் தொழில் சம்பந்தப்பட்ட அட் ஹாக் கமிட்டியின் 1960 மார்ச் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிபார்சுப்படி இணைப்பான அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும்.

62. அயல்நாட்டு நாணய செலாவணி வசதியில், மிதமீறிய பளு வையோ, இடைவிடாத சிரமத்தையோ ஏற்படுத்தாத வகையில், மோட்டார் வண்டிகள் உற்பத்தி லட்சிய அளவை அடைய வேண்டுமானால், உற்பத்தி யால் உள்நாட்டுப் பொருள்களின் உபயோகம் அதிகரிக்க வேண்டும். மூன்றாவது திட்ட ஆரம்பத்தில் இந்த உள்நாட்டுப் பொருள் உபயோகம் 60 சத விகிதமாக இருக்கலாம். 1965–66-ல் இது குறைந்தபட்சம் 85 சத விகிதமாக வேண்டும்.

புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது அல்லது ஏற்கனவே உள்ள உற்பத்தித் திறனை விஸ்தரிப்பது ஆகியவைகளைக் காட்டிலும், உள்நாட்டுப் பொருள் வகை உற்பத்தியை அதிகரிப்பதற்கே முதலிடம் கொடுக்கவேண் டும். வாணிப ரீதியில் ஓட்டப்படும் வண்டிகள் உற்பத்திக்கும் முதலிடம் தரப்படவேண்டியது அவசியமாகும்.

உலோகத் தொழில்கள்.

63. **இரும்பும் உருக்கும்.**—இரும்பு, உருக்குத் தொழில்களை விஸ் தரிப்பதில் பிரதான உற்பத்தியாளர்களின் பங்கானது, இரண்டாவது திட்டத்துடன் ஒப்பிடும்போது இப்பொழுது குறைவாகவே இருக்கக்கூடும். மின்சார உலைகளில், கழிவுகளை கொண்டு செய்யப்படும் உருக்குத் துண்டு களும், குறைந்த சக்தி ஊது உலைகளில் தேனிரும்பு உற்பத்தியும்தான், தனியார் துறை உற்பத்திப் பெருக்கில் முக்கிய அம்சங்களாக இருக்கும். இந்த வகையில், மூன்றாவது திட்ட முடிவில் 2 லட்சம் டன் உருக்குக் கட்டிகளும், அதே அளவு தேனிரும்பும் கூடுதலாகக் கிடைக்கும்.

64. கலப்பு உலோகம், கருவி (டூல்) உருக்கு வகையில் தனியார் துறை யானது 1965–66-ல் 70,000 டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்று லட்சிய அளவு நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப் படும் பொருள்கள், அரசாங்க தொழில் துறையில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அல்லாய், டூல், விசேஷ உருக்கு தொழிற்சாலையின் உற்பத்தியுடன் இணைந்த முறையில் இருக்க வேண்டும். சீக்கிரத்தில் இது பற்றி முடிவு கள் ஏற்படுவது விரும்பத்தக்கதாகும்.

65. **அலுமினியம்.**—இரும்பு அல்லாத உலோகங்களைப் பொறுத்தவரை யில், அலுமினியம் தனது ஆதிக்க ஸ்தானத்தை மூன்றாவது திட்டத் திலும் தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. 1965-66-ல் 82,500 டன் அலுமினிய உற்பத்தி என்ற லட்சிய அளவை கீழ்க்கண்ட வேலைத்திட்டங்கள் மூலம் அடையலாம் என

எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்காக ஏற்கெனவே சிபார்சு செய்யப்பட்டவையாகும்.

(1) ஹிராகுட்டிலுள்ள இந்திய அலுமினியம் கம்பெனியின் உற்பத்தித் திறனை, வருஷம் ஒன்றுக்கு மேலும் 10,000 டன் கிடைக்கும்படி அதிகரித்தல்.

(2) ரிஹாண்டில் வருஷத்துக்கு 20,000 டன் திறனுள்ள உருக்கும் உலை அமைத்தல் ;

(3) கொய்னாவில் வருஷத்துக்கு 20,000 டன் திறனுள்ள உருக்கும் உலை நிறுவுதல் ;

(4) சேலம் அருகில், வருஷத்துக்கு 10,000 டன் திறனுள்ள உருக்கும் உலை அமைத்தல் ;

(5) அலுமினியம் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா தொழிற்சாலையை வருஷத்துக்கு மேலும் 5,000 டன் உற்பத்தித் திறன் உள்ளதாக விஸ்தரித்தல்.

66. **துத்தநாகம்.**—மூன்றும் திட்ட கால மத்தியில் இந்தியாவில் முதல் தடவையாக துத்தநாக உற்பத்தி ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானிலுள்ள ஜாவர் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும் துத்தநாகம் கலந்த மண்ணை உருக்கி துத்தநாகம் எடுக்கும் உலைக்கூடத் தொழிற்சாலை, வருஷத்துக்கு 15,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய திறனுடன் இருக்கும். துத்தநாக உலைக் கூடம் பூர்ணமான முறையில் இயங்கிவரும்படிச் செய்வதற்காக ஈயம், துத்தநாக தாதுக்களை அதிக அளவில் தோண்டி எடுக்கும்போது, கூடுதலான அளவில் ஈய உற்பத்திக்கும் வழி ஏற்படும். துத்தநாகம் உருக்கும் உலைக்கூடத்தில், வாயுக்களைப் பயன் படுத்தி கந்தகாமில உப பொருள்தயாரிப்பு யந்திரம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கும். பாஸ்பேட் உரங்களை உற்பத்திசெய்ய அது பயன்படும்.

67. **தாமிரம்.**—மூன்றுவது திட்ட ஆரம்ப ஆண்டுகளில் "எலக்ட்ரோலிடிக்" தாமிர உற்பத்தி ஆரம்பமாகும். இந்தியன் காப்பர் கார்ப்பரேஷன், கட்சிலாவில் ஏற்படுத்தும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியவுடனே இந்த உற்பத்தி துவங்கும்.

68. **கனரக ரசாயனங்கள், ரசாயன உரங்கள்.**—நைட்ரஜன் உரங்கள் உற்பத்தியில் தனியார் துறை, இரண்டாம் திட்டக் காலத்தில் இருந்ததைவிடவும் அதிக பங்கு எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாஸ்பேட் உரங்கள் உற்பத்தியை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யும் பணியும் முக்கியமாக தனியார் துறை பொறுப்பாகவே இருக்கும் (42-வது பாராவில் காண்க).

69. கந்தகாமில உற்பத்தியில் சுமார் 65 சத விகிதம் ரசாயன உரத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கந்தகாமில மொத்த உற்பத்தி லட்சிய அளவு 15 லட்சம் டன்கள். இதில் தனியார் துறை உற்பத்தி 85-லிருந்து 90 சத விகிதம்வரை இருக்கக்கூடும்.

70. காஸ்டிக் சோடாவில் லட்சிய அளவை அடைவதற்குத் தேவை யான கூடுதல் உற்பத்தி காண்பதில் எலெக்ட்ரோலிடிக், ரசாயன முறை ஆகிய இரண்டு வழிகள் அனுசரிக்கப்படும். ஆனால் ரசாயன முறை மூலம் தற்போதுள்ளதைவிட மிக அதிகமான உற்பத்தி காணமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

71. சோடா ஆஷ் உற்பத்திப் பெருக்கத்திட்டத்தில் டென்ஸ் சோடா ஆஷ் உற்பத்திக்கும் வகை செய்யப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த வகை சோடா ஆஷ் சுமார் 160,000 டன் உற்பத்தியாகும். இந்தப் பொருள் அநேகமாகப் பூராவுமே கண்ணாடித் தொழிலுக்குத் தேவைப்படும்.

72. கைத்தொழில்களுக்கான வெடிப்பொருள் வகைகளின் லட்சிய அளவுகளை நிர்ணயிக்கும்போது, மூன்றாவது திட்டத்தில் சுரங்க வேலைகள் அதிகரிப்பு சம்பந்தமான கூடுதல் தேவைகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள் ளன. குமியா அருகில் 1959-ல் உற்பத்தியைத் தொடங்கிய தொழிற் சாலையை விஸ்தரிப்பது மூலம் இந்தக் கூடுதல் உற்பத்திக்கு வழி ஏற் படும்.

73. அரசாங்க தொழில் துறையின், அடிப்படை ரசாயன உப ரசாயன தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் மூலரசாயன சப்ளையை அடிப்படையாகக் கொண்டு சேதன ரசாயனத் தொழிலில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. உதாரணமாக, அரசாங்க மூல ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் பினால் கொண்டு பினால் பார்மல்டிஹைட், அக்டனிலைடைக் கொண்டு ஏ.எஸ்.ஸி. சல்பா மருந்துகள் தயாரிப்பு, ரப்பர் ரசாயனங்கள் உற்பத்தி முதலியவைகளுக்கு வசதி ஏற் படும். முதல் தடவையாக சிட்ரிக் (எலிமிச்சை வகை) அமிலமும், ஆக்சாலிக் அமிலமும் உற்பத்தியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ரசாயன கரைப்புக்குத் தேவையான சேதன ஈஸ்ட்டர்களை உதாரணமாக புடில் அசிடேட், பாதலிக் ஈஸ்ட்டர்ஸ் ஆகியவைகள் உற்பத்தியாவதின் மூலமும் அசிடிக் அமிலம், அசிடோன், பார்மல் டிஹைட் ஆகிய ரசாயனங்கள் உற்பத்தி பெருகுவதின் மூலமும், சேதன ரசாயனத் தொழில் பலப்படுவதற்கு வழி ஏற்படும். தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற வினில் குளோரைடு, ஸ்டைரீன் போன்ற பிளாஸ்டிக் மோனோமர்களும், செயற்கை ரப்பர் போன்ற "ஹை பிளாய்மர்களும்" இது சம்பந்தமாகக் குறிப்பிடத் தக்கவையாகும். யுத்த பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சில பெரிய தொழில்களில், தொழில் பராமரிப்புக்காகப் பயன் படுத்தப்படும் வெளி நாட்டு நாணய செலவாணியைக் குறைத்துக்கொள்வதில் இந்தப் புதிய பொருள்கள் அனைத்தும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

74. **சிமிட்டி.**—1965-66-ல் சிமிட்டி உற்பத்தி 150 லட்சம் டன் ஆக வேண்டும் என்று லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டா வது திட்டக் கால முடிவில் ஏற்படக்கூடிய உற்பத்தியைக் காட்டிலும் இது 50 சத விகிதம் அதிகமாகும். இத்தொழிலின் முன்னேற்றமும்,

காகிதம், சர்க்கரை போன்ற நிலைபெற்றுவிட்ட தொழில்களின் முன்னேற்றமும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட மத்தியிலிருந்து உள்நாட்டு யந்திரங்கள் சப்ளை அம்சத்துடன் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

75. **உபயோகப் பொருள் தொழில்கள்.**—காகிதம் (பத்திரிகைக் காகிதம் உள்பட), பஞ்சு ஜவுளிகள், ரேயான், சர்க்கரை, தாவர எண்ணெய் வகைகள் முதலியவைகளுக்கு மூன்றுவது திட்டத்தில் திட்டவட்டமான லட்சிய அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பஞ்சு ஜவுளிகள் விஷயத்தில், ஆலைகளுக்கு லட்சிய அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 580 கோடி கெஜம், பரவல் முறை ஜவுளி உற்பத்திக்கு (கைத்தறி, விசைத்தறி, கதர்) குறிப்பிட்டுள்ள 350 கோடி கெஜ உற்பத்தி அளவுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஸ்டாக் அதிகரித்துக் கொள்வது உள்பட உள்நாட்டுத் தேவை 845 கோடி கெஜத்தையும், ஏற்றுமதி லட்சிய அளவு 85 கோடி கெஜத்தையும் கொண்டு, ஜவுளி மொத்த உற்பத்தி லட்சிய அளவு வரையறுக்கப்பட்டது. காகிதம், காகித அட்டை விஷயத்தில் உற்பத்திச் சக்தியை 128 சத விகிதம் அதிகரிக்கவும் (360,000 டன்களிலிருந்து 820,000 டன்களாக அதிகரிக்கவும்) பத்திரிகைக் காகித வகையில் மூன்றுவது திட்டக் காலத்தில் தேவை அதிகரிப்பை அனுசரித்து உற்பத்தியை 4 மடங்கு பெருக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

76. இதுவரை அனுமதிக்கப்பட்ட அயல்நாட்டு நாணயச் செலவாணி பாபத்துகளின் அடிப்படையில் ரேயான், ஸ்டேபிள் பைபர் தொழில்களின் உற்பத்தித் திறன் 14 கோடி ராத்தல் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றும் திட்டக் காலத்தில் இதை 21·5 கோடி ராத்தலுக்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் தொழில்களில் முதலீடு அமைப்பைப் படிப்படியான முறையில் வகைப்படுத்திக் கொள்ளுவதில் முக்கிய கவனம் செலுத்தப்படும். சிந்தடிக் பிலமெண்டுக்குப் பதிலாக மரக்கூழ் உற்பத்தி விஷயத்திற்கு முதலிடம் தரப்படும்.

77. தாவர எண்ணெய்கள் விஷயத்தில் பருத்தி விதை எண்ணெய் உற்பத்தியை 37,000 டன்னிலிருந்து ஒரு லட்சம் டன்னுக்கு உயர்த்துவதை அடிப்படையாகக் கொண்டு வேலைத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பருத்தி விதைப் பிண்ணாக்கை, கால்நடைத் தீவனமாகவும், மற்ற பகுதிகளை (cotton linters) கைத்தொழில்களுக்கான கச்சாப் பொருளாகவும் பயன்படுத்துவதற்கான இணைப்பான முயற்சியைப் பொறுத்தே இந்த வேலைத் திட்டத்தின் வெற்றி அமையும் "சால்வண்ட் எக்ஸ்ட்ரேக்ஷன்" முறையில் எண்ணெய் உற்பத்தியை நான்கு மடங்காக்கி 160,000 டன் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தாவர எண்ணெய் வகைகள் உற்பத்தியை மேற்கொண்டு அதிகரிப்பதென்பது முக்கியமான எண்ணெய் வித்துக்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டத்தைப் பொறுத்ததாகும். ஆனால் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதில் கவனம் செலுத்துவதின் மூலம் எண்ணெய் உற்பத்தியை சிறிது அதிகரிக்க வழி ஏற்படும்.

78. வருங்காலப் பொருளாதார முன்னேற்றத்துக்கு அஸ்திவாரம் அமைக்கும் முறையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் துரிதமாகத் தொழில் மயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இரும்பு உருக்குத் தொழில்கள் ஒருபுறம் இருக்க, மற்றவைகளில் பாரம்பரிய முறையில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதைவிட, தொழில்கள் பலவகைப்பட்டு நிமிர்ந்து வளர வேண்டும் என்பதே இதன் சிறப்பான அம்சமாகும். சென்ற நான்கு ஆண்டுகளில் முதல் தடவையாகப் பல புதிய பொருள்கள் உற்பத்தியானதும், புதிய தொழில் நுட்ப முறைகளை அனுசரித்ததும், மிக நவீனமான தொழில் முறை, தொழில் நுட்ப அறிவு ஆகியவைகளைக் கற்றுக் கொண்டதும் மிகப் பயனுள்ள நடவடிக்கைகளாகும். உள்நாட்டு கச்சாப் பொருள்களை (இயற்கையான கச்சாப் பொருள்கள், பதனப்படுத்தப்பட்ட கச்சாப் பொருள்கள்) அதிக அளவில் பயன்படுத்தும்படியாக கைத்தொழில் பொருளாதாரம் அமைக்கப்பட்டு வருகின்றது. மூன்றும் திட்டத்தில், மேலே சுருக்கமாக விளக்கப்பட்ட தனியார் துறை, அரசாங்கத் துறை தொழில் திட்டங்களில், இந்த முயற்சிகள் மேலும் பலப்படுத்தப்படுவதுடன் யந்திர நிர்மாண திட்டங்களிலும் சம்பந்தப்பட்ட வேலைகளிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும். பின்னால் வரக்கூடிய ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் துரிதமான பொருளாதார முன்னேற்றம் காணக்கூடிய வகையில் தொழில் வளர்ச்சியின் கேந்திரமான அம்சங்களில் இப்பொழுது முன்னேற்றத்துக்கு வழி கோலப்படும். கைத் தொழில்களின் வளர்ச்சி அளவைக் காட்டுவதற்கு தொழில் உற்பத்திப் புள்ளி முறையே சாதாரணமாக அனுஷ்டானத்தில் இருப்பதாகும். 1950–51-ல் தொழில் உற்பத்தி வளர்ச்சிப் புள்ளி 100 என்றால், முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அது 139 ஆகியது. 1960–61-ல் அப்புள்ளி 221 ஆக உயரும் என்று மதிப்பிடப்படுகிறது. 1965–66-ல் அந்த உற்பத்திப் புள்ளி 362 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு I

அரசாங்க தொழில் துறையில் கைத்தொழில்கள், கனிவளங்கள் பிரிவில் வேலைத் திட்டங்கள்

(அ) நிறைவேற்றப்பட்டு வருவனவும், இரண்டாவது திட்டத்திலிருந்து தொடர்ந்து வருவனவுமான திட்டங்கள்.

(i) கைத் தொழில்கள் :—

மூன்று உருக்காலைகள் வேலையை முடித்தல் (பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர்.)

ரூர்கேலா ரசாயன உர தொழிற்சாலை.

ராஞ்சி, ஹடீயாவில் உள்ள கனரக யந்திர தொழிற்சாலை.

ராஞ்சி, ஹடீயாவில் உள்ள வார்ப்பு இணைப்பு கூடம்.

போபால் கனரக மின்சார யந்திரத் தொழிற்சாலை.

மருந்து தொழிற்சாலைகள்.—சானட் நகரில் ரசாயன மருந்துகள் தொழிற்சாலை ; ரிஷிகேஷ் அருகே ஆன்டிபயோடிக்ஸ் தொழிற்சாலை ; கேரளத்தில் பைடோ ரசாயனங்கள் தொழிற்சாலை ; கிண்டி அருகில் அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை.

பான்வெல் அருகில் சேதன மூல ரசாயனங்கள் தொழிற்சாலை.

ஹிந்துஸ்தான் ஆன்டிபயோடிக்ஸ் விஸ்தரிப்பு.

டிராம்பே ரசாயன உர தொழிற்சாலை.

நஹர்காடியா ரசாயன உர தொழிற்சாலை.

கொத்தகூடம் அருகே ஆந்திரா ரசாயன உர தொழிற்சாலை.

(ii) நிலக்கரி —

தேசிய நிலக்கரி அபிவிருத்தி கார்ப்பரேஷன் (நேஷனல் கோல் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன்) நிலக்கரி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்.

போஜுடி, பட்டார்தி ஆகியவைகளிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்கள்.

(iii) கனி வளங்கள் —

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்—

(அ) ரசாயன உர தொழிற்சாலை.

(ஆ) கரிக்கட்டிகளாக்கும் தொழிற்சாலை.

(இ) தெர்மல் மின்சார நிலையம்.

கிரிபுரு இரும்புக் கனி திட்டம்,

(iv) எண்ணெய் —

ஆயில் இந்தியா—குரூடு ஆயில் பைப்லைன் நூண்மதி, பரூனியில் சுத்தி கரிப்பு நிலையங்கள்.

(ஆ) வெளிநாட்டுக் கடன் வசதி ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

கன யந்திரங்கள் தொழிற்சாலை விஸ்தரிப்பு.

சுரங்க யந்திரங்கள் தொழிற்சாலை விஸ்தரிப்பு.

இரண்டாவது மூன்றாவது கன மின்சார யந்திர தொழிற்சாலைகள்.

ஹடியாவில் உள்ள வார்ப்பு இணைப்பு தொழிற்சாலை விஸ்தரிப்பு.

பிலாய் ஸ்டீல் வொர்க்ஸ் விஸ்தரிப்பு.

கன யந்திரக் கருவிகள் தொழிற்சாலைத் திட்டம்.

நுண் கருவிகள் தொழிற்சாலை.

மூக்குக் கண்ணாடித் தொழிற்சாலை.

நீலகிரி கச்சா பில்ம்ஸ் தொழிற்சாலை.

கடிகாரங்கள் உற்பத்திக்கான தொழிற்சாலை.

(இ) அயல் நாட்டுக் கடன் வசதி இன்னும் ஏற்பாடு செய்யப் படாத புதிய திட்டங்கள் (திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பவை)

(i) உருக்கு—

(அ) ரூர்கேலா உருக்கு தொழிற்சாலை விஸ்தரிப்பு.

(ஆ) துர்க்காபூர் உருக்கு தொழிற்சாலை விஸ்தரிப்பு.

(இ) அல்லாய் அண்டு டூல் ஸ்டீல்ஸ் பிளாண்ட்.

(ஈ) பொகாரோ உருக்குத் தொழிற்சாலை.

(உ) தொழில் துணை வசதிகள் [நிலக்கரி, இதர கனி, கச்சா பொருள்கள், மின்சாரம், போக்கு வரத்து. மேலே (ஈ) உடன் இணைக்கப்பட்டவை.]

(ii) இதர தொழில்கள்—

கனரக கட்டுமானங்கள் தொழில் திட்டம்.

ஹெவி பிளேட் அண்டு வெஸல் வொர்க்ஸ்.

ஜலஹள்ளி ஹிந்துஸ்தான் மிஷின் டூல்ஸ் விஸ்தரிப்பு.

போபால் கனரக மின்சார யந்திர தொழிற்சாலை விஸ்தரிப்பு—இரண்டாவது மூன்றாவது கட்டங்கள்.

ரஸாயன உரங்கள் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

விசாகப்பட்டினம், கப்பல் கட்டும் தளத்தை விஸ்தரித்தல் "டிரை டாக்" நிர்மாணித்தல்.

ஹோசிங்காபாத்தில் பாண்டு காகித ஆலை,

ரூப் நாராயண்பூர், ஹிந்துஸ்தான் கேபிள்ஸ் விஸ்தரிப்பு.

கொச்சியில் இரண்டாவது கப்பல் கட்டும் தளம்.

(iii) நிலக்கரி—

தேசீய நிலக்கரி அபிவிருத்தி கார்ப்பரேஷனின் புதிய வேலைத் திட்டங்கள்.

சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கங்கள் விஸ்தரிப்பு.

பழுது பார்த்தல் பராமரிப்புக்காக மத்திய வொர்க்ஷாப்.

மத்திய ‘ ரோப்வே ’ திட்டங்கள்.

கோக்கிங் கரி சுத்திகரிப்பு திறனை அதிகரித்தல்.

நெய்வேலி சுரங்க உற்பத்திப் பொருள் அதிகரிப்பு.

(iv) இதர கனி வளங்கள்—

பொன் நிமளை (பைரைட்ஸ்)யிலிருந்து கந்தக உற்பத்திக்கான திட்டம்.

பைலாடிலா இரும்புக்கனி திட்டம்.

சிக்கிம் தாமிர படிவங்களை பயன்படுத்தும் திட்டம்.

கெட்ரி, தாரிபோ, தாமிர படிவங்களை பயன்படுத்தும் திட்டம்.

பன்னு வைரச் சுரங்கத்தை பயன்படுத்தும் திட்டம்.

மாங்கனீஸ் கனிப் பொருள் பயன்பாடு திட்டம்.

இந்திய பூ தத்துவ சர்வே விஸ்தரிப்பு.

இந்திய சுரங்க பீரோ வேலை விஸ்தரிப்பு.

(v) எண்ணெய்—

எண்ணெய் வளங்களைக் கண்டு பிடிக்கவும் விநியோகிக்கவுமான வேலைத் திட்டங்கள்.

(vi) இதர திட்டங்கள்—

மாநில அரசாங்கத்தாரின் திட்டங்கள்.உதாரணமாக மைசூர் அயர்ன் அண்டு ஸ்டீல் வொர்க்ஸ், பிரகா டூல்ஸ், நேபா காகித ஆலை, துர்க்காபூர் கோக் உலை, கோலார் தங்கச் சுரங்க நிறுவன விஸ்தரிப்பு.

மலைத்தோட்டத் தொழில்களுக்கு கடன் உதவி.

மெட்ரிக் முறையை அமுலாக்குதல்.

தேசீய கைத்தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் வேலைத் திட்டங்கள்,தேசீய உற்பத்திக் கவுன்சில் இந்திய ஸ்டாண்டர்டு நிறுவனம் ஆகியவற்றின் வேலைத் திட்டங்கள்.

ஸ்தாபன முறையான நிதி கார்ப்பரேஷன்களுக்கு கடன் வசதி.

கைத் தொழில் நகர அமைப்புகள்.

(ஈ) காலக் கிரமத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்படுவதற்காக, ஆயத்த வேலைகள் தொடர்ந்து நீடிக்க வேண்டிய வேலைத் திட்டங்கள்,

(i) கைத் தொழில்—

ஹெவி கம்ப்ரெசர்ஸ் அண்டு பம்ப்ஸ் திட்டம்.

பேசிக் ரிப்ரேக்டரீஸ் திட்டம்.

பால் அண்டு ரோலர் பேரிங்ஸ் திட்டம்.

யந்திரக் கருவிகள் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

இரண்டாவது கனரக கட்டுமானங்கள் திட்டம்.

இரண்டாவது பிளேட் அண்டு வெஸ்ஸல் வொர்க்ஸ்.

படகுகளுக்கான மேரைன் டீசல் இஞ்சின் திட்டம்.

(ii) கனி வளங்கள்—

கனிஜ எண்ணெய்களுக்கு பைப் லைன்கள்.

லூப்ரிகேட்டிங் ஆயில்ஸ் திட்டம்.

கோக்கிங் அல்லாத நிலக்கரிக்கான நிலக்கரி சுத்திகரிப்பு நிலையங்கள்.
மிருது கோக்குக்கு குறைந்த உஷ்ணத்தில் கரியேற்றும் யந்திரங்கள்.
நெய்வேலி பழுப்பு நிலக்கரி அதி உஷ்ணமுறையில் கரியேற்றும் தொழிற்சாலை, தேனிரும்பு உற்பத்திக்கான இதர வசதிகள்.

(உ) அவசரத் தேவைகளை ஒட்டிய வேலைத்திட்டங்கள்.

புதிய எண்ணெய் வள கண்டுபிடிப்புக்காகளுக்கான புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள்.

குருடு ஆயில் பைப்லைன்கள்.

எண்ணெய் வள கண்டுபிடிப்புக்காக இண்டோ-ஸ்டான்வாக் திட்டத்திலும் எண்ணெய் உற்பத்தித் திட்ட விஸ்தரிப்புக்கான ஆயில் இண்டியா வேலைத் திட்டத்திலும் அரசாங்கம் பங்கு கொள்ளல்.

நஹர்காடியா இயற்கை வாயு பைப்பிங்.

இணைப்பு II

பெரிய ஸ்தாபனத் தொழில்கள், கனி வளங்கள் உற்பத்தியின் முன்னேற்றமும் லட்சிய அளவுகளும்.

தொடர் எண்	தொழிலின் பெயர்.	யூனிட்.	1950–51 உற்பத்தி.	1955–56 உற்பத்தி.	1960–61 மதிப்பிடப் பட்ட உற்பத்தி திறன்.	1960–61 மதிப்பிடப் பட்ட உற்பத்தி.	1965–66-க்கு லட்சிய அளவுகள். திறன்.	1965–66-க்கு லட்சிய அளவுகள். உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	அ. உலோகத் தொழில்கள்.							
1	இரும்பு உருக்கு—							
	(i) உருக்குக் கட்டிகள்	லட்சம் டன்களில்.	14*(அ)	17*(அ)	60	35	102	95
	(ii) பூர்த்தி செய்யப்பட்ட உருக்கு	,,	9·8	13	45	26	75	69
	(iii) விற்பனைக்கான தேனிரும்பு	,,	3·5	3·8	9	9	..	15
	(iv) அல்லாய் கருவி, விசேஷ உருக்கு பூர்த்தியானது).	1000 டன்கள்.	..	..	40	40	200	200
	(v) பழுப்பு இரும்பு வார்ப்புகள்	லட்சம் டனகள.	..	..	கி.இ.	கி.இ.	12	12
	(vi) உருக்கு வார்ப்புக்கள்	,,	..	..	1·0	·5	2·0	2·0
	(vii) உருக்கு இணைப்புகள்	1000 டன்கள்.	..	..	60	35	200	200
2	இரும்பு-மாங்கனீஸ்	,,	கி.இ.	கி.இ.	150	100	220	200
3	இரும்பு-சிலிகன்	,,	..	..	5	6	40	40
4	அலுமினியம்	,,	3·68	7·3	17·5	17·0	82·5	75·0

5 தாமிரம் (தீயால் சுத்திகரிக்கப்பட்டது) அண்டு எலெக்ட்ரோலிடிக்).	,,	..	7·3(அ)	7·2	7·9	18·4	18·4
6 ஈயம்	,,	..	2·2(அ)	6·0	3·5	8·5	8·0
7 துத்தநாகம்	,,	..	..	இல்லை	இல்லை	15	15

ஆ. மெக்கானிக்கல் இன்சினீரிங் தொழில்கள்.

கைத்தொழில் யந்திரங்கள் (ஆ)—							
(i) பஞ்சு ஜவுளிகள்	ரூபாய்கள் கோடியில்.	இ.இ.	4·0	10·0	9·0	22·0	20·0
(ii) சிமிட்டி	,,	..	0·34	1·1	0·8	4·5	4·5 முதல் 5·0
(iii) சர்க்கரை	,,	..	0·19	10·5	4·4	11·0 முதல் 12·0	10·0
(iv) காகிதம்	,,	..	..	0·7	..	8·5	6·5 முதல் 7·0
(v) பால் பண்ணை	,,	..	..	0·25	மிகக் கொஞ்சம்.	2·5	2·5
(vi) தொழிற்சாலைகளுக்கான கொதிகலன்கள் ..	,,	..	..	3·7	0·6	29·0	25·0
(vii) கிரேன்கள்	1000 டனகள்.	..	..	2·5	1·5	60	60
(viii) யந்திரக் கருவிகள்	ரூபாய்கள் கோடியில்.	0·29	0·72(அ)	7·0	5·5	30·0	30·0

* வார்ப்புகளுக்கான உலோகம் உள்பட.

(அ) காலெண்டர் ஆண்டைக் குறிக்கும்.

(ஆ) பஞ்சு ஜவுளி யந்திரங்களைத் தவிர்த்து, இத்தலைப்பில் உற்பத்தித்திறனும் உற்பத்தியும், அசல் யந்திரத் தேவையைப் பொறுத்தவை.

இணைப்பு II—தொடர்ச்சி.

பெரிய ஸ்தாபனத் தொழில்கள், கனிவளங்கள் உற்பத்தியின் முன்னேற்றமும் லட்சிய அளவுகளும்—தொடர்ச்சி.

தொடர் எண்.	தொழிலின் பெயர்.	யூனிட்.	1950–51 உற்பத்தி.	1955–56 உற்பத்தி.	1960–61 மதிப்பிடப்பட்ட உற்பத்தித் திறன்.	1960–61 மதிப்பிடப்பட்ட உற்பத்தி.	1965–66-க்கு லட்சிய அளவுகள் திறன்.	1965–66-க்கு லட்சிய அளவுகள் உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ஆ. மெக்கானிக்கல் இன்ஜினீரிங் தொழில்கள்—தொடர்ச்சி.							
8	கைத்தொழில் யந்திரங்கள (ஆ)—தொடர்ச்சி.							
	(ix) கன யந்திர கட்டுமானங்கள் (உருக்கு அண்டு ரசாயன யந்திரங்கள்).	1000 டன்கள்.	..	..	..	..	80	(இ)
	(x) நிலக்கரி சுரங்க யந்திரங்கள்	,,	..	..	..	..	45	30
	(xi) கனரக தகடு பாத்திர வேலைகள் ..	,,	..	..	..	..	30–40	30
9	கட்டுமான இணைப்பு (கனரக யந்திர கட்டுமான தொழிற் சாலைகள் உள்பட).	,,	..	90	500	250	1,100	1,000
10	நுண்மைக் கருவிகள்— கைத்தொழிலுக்கும் விஞ்ஞானத்துக்கும் ஆனது.	ரூபாய்கள் கோடியில்.	..	..	0·7	0·7	23	12
11	அறுவை சிகிச்சைக் கருவிகள்	லட்சக் கணக்கில்.	..	..	..	..	25	25
12	கடிகாரங்கள்	1000 கணக்கில்.	..	..	..	..	360	240
13	ரயில்வே தளவாடங்கள்—							
	(i) இஞ்சினகள்—							
	நீராவி இஞ்சின்	எண்ணிக்கை.	கி.இ.	500†	300	295	300	1,175†
	டீசல் இஞ்சின	,,	..	..	..	..	100	434†
	மின்சார இன்ஜின்	,,	..	..	..	..	60	232†
	(ii) வாகனங்கள் (நான்கு சக்கர வண்டிகள்) ..	,,	2,924	41,966†	26,000	20,000	33,500	109,866†
	(iii) பிரயாணிகள் பெட்டிகள்	,,	479	4,384†	1,300	1,210	1,420	7,837†

14 மோட்டார் தொழில் உதவி—தொழில்கள்—							
(i) கார்கள்	1,000 கணக்கில்			20	20	30	30
(ii) வர்த்தக ரீதி வண்டிகள்	,,	16·5	25	28	28	60	60
(iii) ஜீப்புகள் ஸ்டேஷன் வாகன்கள்	,,			5·5	5·5	10	10
(iv) மோட்டார் துணைப்பொருள்கள், டிரெய்லர்கள் உளபட.	,, ,,	..	..	60·7	இ.இ.	2·5	2·5
(v) மோட்டார் சைகிள்கள், ஸ்கூட்டர்கள்	,,	..	1·5	24	16	48 முதல் 60	50
15† பால் அண்டு ரோலர் பேரிங்ஸ்	லட்சங்கள்.	0·8	9	16	24	80	120 (ஈ)
16 மண் பெயர்க்கும் யந்திர சாதனங்கள்—							
(i) கிராலர் டிராக்டர்கள்	எண்ணிக்கை	..	..	..	..	600	500
(ii) டம்பர்கள், ஸ்கிரேப்பர்கள்	,,	..	..	..	..	600	500
(iii) ஷோவல்ஸ்	,,	..	..	..	..	125	100
17 ரோடு ரோலர்கள்	,,	..	..	800	350	800	700
18 விவசாயக் கருவிகள் யந்திரங்கள்—							
(i) மினசாரத்தில் இயங்கும் பம்புகள்	1,000 கணக்கில்.	34	37	184	86	184	150
(ii) டீசல் இஞ்சினகள்	,,	5·5	10	62	33	72	66
(iii) டிராகடர்கள்	,,	..	..	7·5	2·0	12·0	10·0
19 சைகிள்கள்	லட்சத்தில்.	1·0	5·1	22	10·5	22	20(உ)
20 தையல் மிஷின்கள்	எண்கள் (ஆயிரத்தில்.)	33	111	288	300	500	450(ஊ)

(இ) உண்மையான உற்பத்தியானது, உருக்கு உற்பத்தி திறன விஸ்தரிப்புத் திட்டத்துடன் இணைக்கபபடும்.

† ஐந்தாணடு காலததைக் குறிக்கும்.

(ஈ) மூனறு ஷிப்டுகளில உற்பத்தித் திறனேக் கணக்கிட்டதில்.

(உ) சிறு தொழில் துறையில் மேறகொண்டு 5 லட்சம் சைகிள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஊ) சிறுதொழில் துறையில் மேறகொண்டு 150,000 தையல் மிஷினகள உறபத்தியாகும்.

தொடர் எண்.	தொழிலின் பெயர்.	யூனிட்.	1950–51 உற்பத்தி.	1955–56 உற்பத்தி.	1960–61. மதிப்பிடப் பட்ட உற்பத்தி திறன்.	1960–61. மதிப்பிடப் பட்ட உற்பத்தி.	1965–66-க்கு லட்சிய அளவுகள். திறன்.	1965–66-க்கு லட்சிய அளவுகள். உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ஆ. மெக்கானிகல் இன்ஜினீரிங் தொழில்கள்—தொடர்ச்சி.							
21	வெல்டிங் எலெட்ரோட்ஸ்	லட்சத்தில். (Rft)	..	..	600	350	1,080	900
22	கப்பல் கட்டுதல் (ஹிந்துஸ்தான கப்பல கட்டும் தள விஸ்தரிப்பு, டிரைடாக், இரண்டாவது கபபல தளம்).	ஆயிரம ஜி.ஆர். 10	..	50†	20	20	50–60 (டி.டபிள்யூ. டி.)	50–60 (டி.டபிள்யூ. டி.)
	இ. மின்சார இன்ஜினீரிங் தொழில்கள்.							
23	மின்சார டிரான்ஸ்பார்மர்கள் (33 கி.வா.-வுக்கு கீழே).	லட்சம் (Kva.)	1·8	6·3	22	13·5	40	35
24	மின்சார மோட்டார்கள் (200 கு.ச.-வும் அதற்கு கீழும்).	லட்சம் கு.ச.	1·0	2·7	12·5	8	30·0*	25*
25	மின்சார கேபிள்கள், வயர்கள்—							
	(i) ஏ.சி.எஸ்.ஆர்.	ஆயிரம் டன்கள்.	1·7	8·7	28	18	55	44
	(ii) வி.ஐ.ஆர். அண்டு பிளாஸ்டிக் கோட்டட் ..	லட்சம் கோர் கஜங்கள்.	394	869	5,000	2,500	8,000	6,000
	(iii) பேப்பர் இன்சுலேட்டட்	மைல்கள்.	..	..	1,000	750	4,500	4,000
	(iv) டிரைகோர் கேபிள்ஸ	,,	..	525	470	470	2,000 முதல 2,500	2,000
	(v) கோக்சியல் கேபிளஸ	,,	..	..	300	300	300	300
26	மின்சார விசிறிகள்	லட்சத்தில்.	1·9	2·9	22	9	28	25
27	வீட்டு சர்விஸ மீட்டர்கள்	,,	..	2·5(அ)	6	4·5	25	21

ஈ. ரசாயனங்களும் சார்புத் தொழில்களும்.

28 ரசாயன உரங்கள்—							
(i) நைட்ரஜன் வகைகள்	ஆயிரம் டன்கள்.	9	79	234	210	1,000	1,000
(ii) பாஸ்பேட் (பி$_2$ ஓ$_5$)	,,	9	12	82	70	500	400
29 கன ரக ரசாயனங்கள்—							
(i) கந்தக அமிலம்	ஆயிரம் டன்கள்.	99	164	521	400	1,500	1,250
(ii) சோடா ஆஷ்	,,	45	81	304	240	530	450
(iii) காஸ்டிக் சோடா	,,	11	35	150	125	400	340
(iv) கேல்சியம் கார்பைடு	,,	..	3(அ)	28	20	67	60
(v) சோடியம் ஹைட்ரோசல்பைட்	,,	..	..	4	3·5	12	10
(vi) ஹைட்ரஜன் பெர்ஆக்சைடு	,,	..	..	3	2	9·5	8
30 நானாவித ரசாயனப் பொருள்கள்—							
(i) கார்பன் பிளாக்	ஆயிரம் டன்கள்.	..	..	..	..	30	30
(ii) கைத்தொழில்களுக்கான வெடி மருந்து வகைகள்—							
(அ) தகர்ப்பு வெடி மருந்துகள்	,,	..	..	5	5	20	20
(ஆ) சேப்டி ப்யூசஸ்	லட்சம் காயில்கள்.	..	..	89	70	2,50	2,50
(இ) டிடோனேட்டர்ஸ்	லட்சத்தில்.	..	..	..	..	8,00	8,00
(iii) ரப்பர் ரசாயனங்கள்	ஆயிரம் டன்கள்.	..	..	2	இ.இ.	3	3
31 சாயப்பொருள்கள்	லட்சம் ராத்தல்கள்.	..	40	192	115	224	180
32 மருந்து வகைகள்—							
(i) சல்பா மருந்துகள்	டன்கள்.	..	83(அ)	393	150	1,000	1,000
(ii) பென்சிலின்	லட்சம் மெகா யூனிட்டுகள்.	..	66	450	400	2,050	1,200

* இந்தப் புள்ளி விவரங்கள் 300-ம், அதற்குக் குறைந்த குதிரை சக்தியும் உள்ளவையைப்பற்றியவை

T.F.P.—18A

தொடர் எண்.	தொழிலின் பெயர்.	யூனிட்.	1950–51 உற்பத்தி.	1955–56 உற்பத்தி.	1960–61.		1965–66-க்கு லட்சிய அளவுகள்.	
					மதிப்பிடப் பட்ட உற்பத்தி திறன்.	மதிப்பிடப் பட்ட உற்பத்தி.	திறன்.	உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	(iii) ஸ்டிரெப்டோமைசின்	டன்கள்.	..	..	..	..	150	150
	(iv) பி.ஏ.எஸ்.	,,	..	40(அ)	126	100	400	400
	(v) சீதபேதி தடுப்பு மருந்துகள்	,,	..	6·0(அ)	74	30	75	75
	(vi) ஐ.என்.எச்.	,,	..	1·0(அ)	33	30	100	100
	(vii) சேதன மூல ரசாயனங்கள்	,,	..	..	..	..	24,000	24,000
	(viii) பைடோ ரசாயனங்கள்	,,	..	..	..	..	76·40	76·40
	(ix) பூச்சிகொல்லி மருந்துகள் டி.டி.ட்டி. ..	,,	..	284	2,800	2,800	2,800	2,800
33	பிளாஸ்டிக்குகள் (போலிதிலீன் பி.வி.சி. போலிஸ்டிரீன், மற்றவை).	ஆயிரம் டன்கள்.	..	0·7	19·2	11·5	85·0	74·0
34	(i) சோப்பு	,,	106	102 (ஸ்தாபன ரீதியான தொழிற் சாலைகளில் மட்டும்.)	254 (ஸ்தாபன ரீதியான தொழிற் சாலைகளில மட்டும்.)	380	254 (ஸ்தாபன ரீதியான தொழிற் சாலைகளில் மட்டும.)	500
	(ii) சின்தடிக டிரெட்ஜன்ட்ஸ்	,,	..	..	7·2	2·0	12·5	10·0
35	கச்சா பிலிம்கள், சினிமாடோகிராபிக் முதலியன ..	லட்சம் சதுர மீட்டர்கள்.	..	..	..	..	100	100
36	ரப்பர் பொருள் உற்பத்திகள்—							
	(i) மோட்டார் டயர்கள்	லட்சத்தில்.	..	9	17·6	15	37	30
	(ii) சைகிள் டயர்கள்	,,	..	57·8	169	140	386	310

37 செயற்கை ரப்பர்	ஆயிரம் டன்கள்.	..	..	..	..	30	30
38 (i) காகிதமும் காகித அட்டைகளும்	,,	114	187	363	320	820	700
(i) பத்திரிகைக் காகிதம்	,,	..	4·2	30	28	120	120
(iii) செக்யூரிட்டி காகிதம்	டன்கள்.	..	..	..	..	1,500	1,500
39 சிமிடி	லட்சம் டன்கள்.	27	46	100	38	150	130
40 ரிப்ரேக்டரீஸ் போர்சிலெய்ன்	,,	..	2·8	8·7	6	20	16
41 எச்.டி.எல்.டி. இன்சுலேட்டர்கள்	ஆயிரம் டன்கள்.	..	4·3	..	8·4	30	24
42 கண்ணாடி, கண்ணாடிச் சாமான்கள் (மூக்குக் கண்ணாடிகள் உள்பட).	,,	92·0	125	457	240	615	440
43 பெட்ரோலியம் பொருள்கள்	லட்சம் டன்கள்.	..	36	53	46	80	74
44 மின்சார கைத்தொழில் ஆல்கஹால்	லட்சம் காலன்கள்.	85	156(அ)	(குரூடு ஆயில்.) 450	250	(குரூடு ஆயில்.) 600	500
45 கைத்தொழில்களுக்கான காஸ்கள்—							
(i) ஆக்ஸிஜன்	லட்சம் கன அடி.	..	..	10,000	7,000	23,000	16,500
(ii) ஆசிடிலீன்	,,	..	..	1,560	1,000 to 1,100	2,500	2,000

உ. ஜவுளித் தொழில்கள்

46 பஞ்சு—							
(i) நூல்	லட்சம் ராத்தல்கள்.	11,790	16,400	21,000	19,000	22,500	22.500
(ii) துணி (மில்)	லட்சம் கஜங்கள்.	37,200	51,020	53,000	550,000	58,000	58,000
47 சணல்	ஆயிரம் டன்கள்.	892	1,150	1,200	1,100	1,200	1,100
48 ரேயான் ஸ்டேபிள் பைபர்—							
(i) ரேயான் பிலாமெண்ட்	லட்சம் ராத்தல்கள்.	4	160	523	470	1,400	1,400
(ii) ஸ்டேபிள் பைபர்	,,	..	140	480	420	750	750
(iii) ரசாயன கூழ்	ஆயிரம் டன்கள்.	..	..	..	..	100·0	90·0

தொடர் எண்.	தொழிலின் பெயர்.	யூனிட்.	1950-51 உற்பத்தி.	1955-56 உற்பத்தி.	1960-61. மதிப்பிடப் பட்ட உற்பத்தி திறன்.	1960-61. மதிப்பிடப் பட்ட உற்பத்தி.	1965-66-க்கு லட்சிய அளவுகள். திறன்,	1965-66-க்கு லட்சிய அளவுகள். உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
49	கம்பளப் பொருள்கள்—	லட்சம் ராத்தல்கள்.	180	..	..	..	..	..
	(i) வுல்லன் வொர்ஸ்டட் நூல்	,,	..	217	670	340	670	520
	(ii) கம்பளித் துணி	லட்சம் கஜங்கள்.	..	150	480	230	480	350
	(iii) வுல்டாப்ஸ்	லட்சம் ராத்தல்கள்.	..	..	100	இ.இ.	315	315
	உணவுத் தொழில்கள்							
50	உப்பு	லட்சம் டன்கள்.	27	30	39	35·5	65	54
51	சர்க்கரை	,,	11·2	18·6	22·8	22·5	30	30
52	தாவர எண்ணெய்கள்—							
	(அ) பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுப்பது	ஆயிரம் டன்கள்.	..	..	936 (பிண்ணாக்கு.)	36 (எண்ணெய்.)	2,000 (பிண்ணாக்கு.)	160 (எண்ணெய்).
	(ஆ) பருத்திக்கொட்டை எண்ணெய்	,,	..	..	415 (விதை.)	37 (எண்ணெய்.)	850 (விதை.)	100 (எண்ணெய்)
53	வனஸ்பதி	,,	153	276	434	350	550	500
	எ. கனிவளங்கள்							
54	நிலக்கரி	லட்சம் டன்கள்.	320(அ)	380(அ)	..	530	..	970
55	இரும்புக் கனிகள்	,,	30(அ)	47(அ)	..	120	..	320

குறிப்பு.—இஞ்சினீரிங் தொழில் உற்பத்தித் திறன், இரட்டை ஷிப்டு இயங்கும் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.
(அ) காலெண்டர் ஆண்டைக் குறிக்கும்.
கி.இ.—தகவல் கிடைக்கவில்லை.

அத்தியாயம் 12
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

பொருளாதார முன்னேற்றத்துக்காக திட்டங்கள் வகுப்பதில் போக்குவரத்தின் முக்கியத்துவத்தை சென்ற சில வருஷ அனுபவங்கள் நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. முதல் திட்ட கால முடிவிலும் இரண்டாவது திட்ட ஆரம்ப கட்டங்களிலும், ரயில்வேக்களிலும் துறைமுகங்களிலும் நெரிசல் கடுமையாக இருந்தது. அதற்குப் பின்பு போக்குவரத்து நிலைமையில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது என்றாலும் ரயில்வேக்களில் இன்னும் ஓரளவு கஷ்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. மேற்கொண்டு நாட்டில் துரிதமான முறையில் தொழிலபிவிருத்திகள் ஏற்படவிருப்பதை முன்னிட்டு மூன்றாவது திட்ட காலம் முழுதிலும் இந்த நிலைமை நீடிக்கக்கூடும்.

2. முதல் திட்ட காலத்தில் போக்குவரத்துத் துறையில் முக்கிய பணி, புனரமைப்பு வேலைகளேயாகும். இரண்டாவது திட்டத்தில், உருக்கு, நிலக்கரி, சிமிட்டி போன்ற அடிப்படைத் தொழில்கள் அபிவிருத்தியினால் ஏற்பட்ட தேவைகளை மனதில் கொண்டு, போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க முயற்சிக்கப்பட்டது. மூன்றாவது திட்டத்தில், மீண்டும், தொழிலபிவிருத்திகளினால் ஏற்படும் தேவைகளை மனதில் கொண்டே, வேலைத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அரசாங்கத் தொழில் துறையில் போக்குவரத்து, செய்தித் தொடர்பு வேலைத் திட்டங்களுக்காக ரூ. 1,450 கோடி ஒதுக்க வேண்டும் என்று தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரயில்வேக்களுக்கு ரூ. 890 கோடியும், சாலைகள், சாலைப் போக்குவரத்துக்காக ரூ. 268 கோடியும், கப்பல் போக்கு வரத்து, துறைமுகங்கள், உள்நாட்டில் நீர் மார்க்கப் போக்குவரத்து, கலங்கரை விளக்குகள் ஆகியவைகளுக்காக ரூ. 152 கோடியும், சிவில் விமானப் போக்குவரத்துக்கு ரூ. 55 கோடியும், தபால் தந்திக்கு ரூ. 68 கோடியும், இதர செய்தித் தொடர்புகளுக்கு ரூ. 5 கோடியும், மகிழ்ச்சிச் சுற்றுலா வகைக்கு ரூ. 5 கோடியும், ஒலிபரப்புக்கு ரூ. 7 கோடியும் செலவிடப்படும். மூன்றாவது திட்டத்தில் இந்த வேலைத் திட்டங்கள் சிலவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாமல் இருக்கலாம் என்பது உணரப்படுகிறது. குறிப்பாக சாலைகள், கப்பல் போக்குவரத்து, தபால் தந்தி ஆகிய அபிவிருத்தி துறைகளுக்கு கூடுதல் நிதி வசதி வேண்டியிருக்கும். காலக் கிரமத்தில், சந்தர்ப்ப நிலைமைகள் அனுமதிப்பதற்கேற்ப, கூடுதல் நிதி ஒதுக்குவதுபற்றி கவனிக்கப்படும்.

3. பல்வேறு போக்குவரத்து முறைகளை குறிப்பாக ரயில், சாலை, போக்குவரத்துக்களை ஒருமுகப்படுத்தும் பிரச்னைகள்பற்றி, திட்டக் கமிஷன் சென்ற சில காலமாகவே, சம்பந்தப்பட்ட அமைச்சரகங்களுடன் கலந்தாலோசித்துக்கொண்டு வருகின்றது. இப் பிரச்னைகளை ஆராய்ந்து, பல்

வேறு போக்குவரத்து முறைகளை ஒருமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து சிபார்சு செய்வதற்காக திட்டக் கமிஷன் ஒரு கமிட்டியை அமைத்துள்ளது. வருங்கால அபிவிருத்திக்கு வழி கோலும்படியாக, நீண்டகால தேவைகளை மனதில் கொண்டு சிபார்சுகள் செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிபார்சுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ரயில்வேக்கள்

4. உழைப்புக் காலம் கடந்துவிட்ட ரயில்வே உருளைத் தளவாடங்களையும், (ரோலிங் ஸ்டாக்—1 அதாவது ரயில் இஞ்சின், வாகன், ரயில் பெட்டி ஆகியவை, ரயில்வே நிரந்தர ஆஸ்திகளையும் புனரமைப்பதும், ரயில் பாதைகளின் சில குறிப்பிட்ட பிரிவுகளில் போக்குவரத்து இடைஞ்சல்களை நீக்குவதுமே, முதல் திட்ட காலத்தில் ரயில்வே அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதர துறைகளில் அபிவிருத்தித் திட்ட வேலைகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, முடிந்த அளவுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் வகை செய்யப்பட்டது. புதுப்பிக்கும் வேலை பாககிகளை முடியுமான அளவு முடித்துவிட வேண்டும் என்பதும், கூடுதல் போக்குவரத்து வசதி தேவைகளை, குறிப்பாக திட்ட காலத்தில் கனரக தொழில்கள் அபிவிருத்தி காரணமாக ஏற்பட்ட தேவைகளை, பூர்த்தி செய்ய வகை செய்வதும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். ரயில்வேக்கு வேண்டிய கருவிகள் தளவாட விஷயத்தில், உள் நாட்டு சப்ளை நிலைமையை அபிவிருத்தி செய்து, ரயில்வேக்களை கூடுமானவரை சுயதேவைப் பூர்த்தியுள்ளனவாக ஆக்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. இந்த வேலை, மூன்றும் திட்ட காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

5. ரயில்வே மூலம் 1950–51-ல் சென்ற மொத்த சரக்குகளின் அளவு 914 லட்சம் டன்கள். 1955–56-ல் இது 1,140 லட்சம் டன்களாக அதிகரித்தது. அதாவது 5 ஆண்டுகளில் சரக்குப் போக்குவரத்து சுமார் 25 சத விகிதம் உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1960–61 ஆம் ஆண்டில் சரக்குப் போக்குவரத்து 1,680 லட்சம் டன்களாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டது. 1960–61-ல் ரயில்வேயில் சரக்குப் போக்குவரத்து சம்பந்தமாக திருத்திய மதிப்பீட்டின்படி, மொத்தம் 1,620 லட்சம் டன் சரக்குகள் செல்லும். இரண்டாவது திட்ட காலத்தில் இது 42 சத விகித அதிகரிப்பைக் காட்டுகின்றது. மூன்றும் திட்ட கால முடிவில் அதாவது 1965–66 ஆம் ஆண்டில் ரயில்வேயில் சரக்குகள் போக்குவரத்து 2,350 லட்சம் டன்னாக உயரும் என்ற அடிப்படையில் மூன்றும் திட்டத்தில் ரயில்வே அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதாவது மூன்றும் திட்ட காலத்தில் அதிகப்படியாக 730 லட்சம் டன் சரக்கு ரயில் மார்க்கமாகச் செல்லும். அதாவது சரக்குப் போக்குவரத்து 45 சத விகிதம் அதிகரிக்கும். கூடு

தலான சரக்குப் போக்குவரத்தில் சுமார் 70 சத விகிதம் இரும்பு, உருக்கு, நிலக்கரி, சிமிட்டி ஆகியவைகளுக்கும், பாக்கி 30 சத விகிதம் நானாவித சரக்குகளுக்கும் ஆகும். மூன்றுவது திட்டத்தின் கடைசி ஆண்டில் போக்கு வரத்து மதிப்பீடுகள் கீழ்க்கண்ட உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவை: உருக்குச் கட்டிகள் 87 லட்சம் டன்கள் ; தேனிரும்பு 15 லட்சம் டன்கள் ; நிலக்கரி 9.5 கோடி டன்கள்; சிமிட்டி 130 லட்சம் டன்கள். உருக்கு உற்பத்திபற்றிய இந்த மதிப்பீட்டில் பொகாரோவில் ஏற்படுத்தப்படும் புதிய உருக்காலையின் உற்பத்திகள் சேர்க்கப்படவில்லை பொகாரோ உருக்கு ஆலைக்காகத் தேவைப்படும் ரயில்வே வசதிகள் சம்பந்தமாக நிதி ஒதுக்கீடுகள் உருக்குத் தொழிற்சாலையின் மொத்த ஒதுக்கீட்டில் ஒரு பகுதியாக அடங்கிவிடுகின்றது. (அத்தியாயம் 11-ல் காண்க).

நானாவித சரக்குகள் போக்குவரத்தைப் பற்றிய வரை, பஞ்சு ஜவுளி கள், சர்க்கரை , சணல் பொருள்கள், காகிதம், தேயிலை, ரசாயன உரங் கள், தாவர எண்ணெய்கள் முதலிய முக்கிய தொழில்களின் உற்பத்தி லட்சிய அளவுகளை அனுசரித்து மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. கனிப் பொருள்கள் கனிஜ எண்ணெய்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் களும், மதிப்பீட்டில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட லட்சிய அளவுகளின் அடிப்படையில், மூன்றும் திட்ட காலத்தில் நானாவித சரக்குகள் போக்குவரத்து ஆண்டுக்கு 5 சத விகிதம் அதிகரிக்கும் என்று பொதுப்படையாக மதிப்பிடப்பட்டுள்ளது. ரயில்வேக்களில் சென்ற சில ஆண்டுகளில் இவ்வகைப் பொருள்களின் போக்குவரத்து அளவைக் கவனிக்கும்போது இந்த மதிப்பீடு குறைந்தபட்ச அளவேயாகும்.

6. ரயில்களில் பிரயாணிகள் போக்குவரத்துத் திறனை ஆண்டுக்கு 3 சத விகிதம் உயர்த்த இரண்டாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டது. போக்குவரத்தில் சாதாரணமாக ஏற்படும் அதிகரிப்பைச் சமாளிப்பதற்கு மட்டுமே இது போதுமானதாக இருக்கும் என்றும், பிரயாணிகள் ரயில் களில் ஜன நெரிசல் தொடர்ந்து இருந்தே வரும் என்றும் முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டது. ரயில்களில் மொத்தம் பிரயாணம் செய்தவர்கள் விவரம் பின்வருமாறு: 1955–56-ல் மொத்தம் பிரயாணிகள் தொகை 127.5 கோடி. 1958–59-ல் மொத்தம் பிரயாணிகள் தொகை 142.2 கோடி. இதிலிருந்து, இரண்டாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் பிரயாணம் செய் தோர் 11.5 சத விகிதம் அதிகரித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இதே காலத்தில் நகரங்களின் சுற்று வட்டாரப் பகுதிகளின் ரயில் போக்கு வரத்தில் பிரயாணிகள் தொகை 17.8 சத விகிதமும் நகர சுற்றுப் புறமல்லாத பகுதிகளில் பிரயாணிகள் தொகை 7.5 சத விகிதமும் அதிகரித்துள்ளன. மூன்றும் திட்ட காலத்தில் நகர சுற்றுப்புறமல்லாத பகுதிகளில், பிரயாணி கள் போக்குவரத்தில் ஆண்டுக்கு 3 சத விகிதம் அதிகரிப்பு ஏற்பட லாம். நகர சுற்றுபுறங்களைப் பொறுத்தவரையில் ஜனப்போக்குவரத்து மிக உச்சமாக இருக்கும் நேரங்களில் முடியுமான அளவு அதிகபட்சம் வண்டி

களை விடவேண்டும் என்பது மூன்றுவது திட்டத்தின் நோக்கமாகும். பிரயாணிகள் சர்விசில் இந்த கூடுதல் வசதிகள் தற்போது ரயில்களில் உள்ள நெரிசலை கணிசமான அளவு தீர்த்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

7. மூன்றுவது திட்டத்தில் ரயில்வே அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு, ஒதுக்க உத்தேசிக்கப்படுள்ள ரூ. 890 கோடி போக, நடைமுதல் புதுப்பிக்கும் வேலைக்குக்காக ரயில்வே தேய்மான ரிசர்வ் நிதியிலிருந்து ரூ. 330 கோடி கிடைக்கும் என்று தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேய்மான ரிசர்வ் நிதியிலிருந்து கிடைக்கும் தொகை உள்பட மொத்த ஒதுக்கீடு ரூ. 1,220 கோடி, பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு கீழே குறிப்பிட்டபடி பகிர்ந்து ஒதுக்கப்படும். விரிவான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படுவதையொட்டி, இந்த ஒதுக்கீடு பின்னர் பரிசீலனைக்கு உரியது. "ஸ்டோர்ஸ் சஸ்பென்ஸ்" வகையில் ரயில்வேக்கு தேவைப்படும் ஒதுக்கீடுகள் இந்தக் கீழ்க் கண்ட புள்ளி விவரத்தில் சேரவில்லை.

அட்டவணை 1. ரயில்வே அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு நிதி வசதி

		ரூபாய் (கோடியில்.)
1	ரயில்வே உருளைத் தளவாடங்கள் (ரோலிங் ஸ்டாக்)	482
2	மின்சார ரயில் வசதி	70
3	சிக்னலிங் இதர பந்தோபஸ்து வேலைகள்	25
4	புதிய ரயில பாதைகள்	120
5	தொழிற்சாலைகள், யந்திர வகைள்	50
6	பாதைகளைப் புதுப்பித்தல்	170
7	லைன் திறன் வேலைகள் }	228
8	பால வேலைகள்	
9	இதர கட்டுமான வேலைகள்	
10	இதர மின்சார வேலைகள்	
11	ஊழியர்களுக்கு வீடு வசதியும் ஊழியர் நலமும்	50
12	ரயில்வே உபயோகிப்பாளருக்கு வசதிகள்	15
13	சாலை வசதிகள்	10
14	மொத்தம்	1220

8. ரயில்வே உருளைத் தளவாடங்களுக்கான திட்டத்தில், போக்குவரத்து அதிகரிப்பால் வேண்டப்படும் கூடுதல் தளவாடங்களுக்கும், உழைப்புக் காலம் கடந்துவிட்ட தளவாடங்களைப் புதுப்பிப்பதற்குத் தேவையான கூடுதல் தளவாடங்களுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :—

அட்டவணை 2. ரயில்வே உருளைத் தளவாட திட்டம்

	ரயில் இஞ்சின்கள்.	கோச்சிங் வண்டிகள்.	வாகன்கள்.
கூடுதல் தேவை	1,031	4,983	83,169
புதுப்பிப்பதற்கானது ..	614	2,854	26,697
மொத்தம்	1,645	7,837	109,866

வருங்காலப் போக்குவரத்து வகைமுறை குறித்து விளக்கமான தகவல் கிடைத்ததும் மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி விவரங்கள் மறு பரிசீலனை செய்யப்படுவதற்கு உரியவை. ரயில்வே உருளைத் தளவாடங்கள் தேவையைக் கணக்கிட்டபோது மூன்றாவது திட்ட முடிவில் 45 வயதுக்குட்பட்ட எல்லா இன்ஜின்களும் வாகன்களும், பிராட்கேஜில் 36 வயதுக்குட்பட்ட கோச்சுகளும், மீட்டர் கேஜில் 40 வயதுக்குட்பட்டவையும் குறுகலான பாதையில் 45 வயதுக்குட்பட்டவையும் உபயோகத்தில் வைத்துக்கொள்ளப்படும். இந்த காலவரம்பை மீறிய தளவாடங்கள் விஷயத்தில் மூன்றாந் திட்ட கால முடிவில் உபயோகத்தில் வைக்கப்படுபவைகளின் தொகை இரண்டாந்திட்ட கால முடிவில் இருந்த வயதான தளவாடங்களின் எண்ணிக்கை அளவே இருக்கும். ரயில்வே தளவாடங்கள் புனரமைப்புத் திட்டங்களை வகுத்தபோது, நிபந்தனை அடிப்படையில் மிக வயதான தளவாடங்களை நீக்கிவிடுவது சம்பந்தமாக இரண்டாவது திட்ட காலத்தில் ஏற்பட்ட உண்மையான அனுபவம் மனதில் கொள்ளப்பட்டது. கூடுதல் தளவாட தேவைகளை மதிப்பிடுவதில், ரயில்வே போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளும், திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளும் கணக்கில் கொள்ளப்பட்டன. உருக்கு ஆலைகளுக்கு நிலக்கரி, இதர கச்சாப் பொருள்களை குறிப்பிட்ட அளவு மொத்தமாகக் கொண்டு போகும் விஷயத்தில், வாகன்களின் குறைந்த பட்ச திரும்புகால் நேர அளவை அடிப்படையாகக் கொண்டு தேவைகள் மதிப்பிடப்பட்டுள்ளன. நானுவித பொருள்களின் கூடுதல் போக்குவரத்தில் சுமார், 20 சத விகிதம், நிலக்கரிச் சுரங்கங்களுக்குத் திரும்பும் காலி வாகனகளில் திரும்பும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ரவில்வே தளவாடங்கள் தேவைப்பாடு இந்த வகையில் எவ்வளவு குறைந்த அளவில் முடியுமோ அவ்வளவு குறைந்த அளவில் வைக்கப்பட்டுள்ளது.

9. ரயில்வே அபிவிருத்தி வேலைத் திட்டத்தில், ரயில் பாதைத் திறனை அதிகரிப்பதற்கான வேலைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, ஏற்கெனவே உள்ள பாதைகளை இரட்டையாக அமைத்தல் அல்லது ஓரளவு இரட்டையாக அமைத்தல், டீசல் இஞ்சின் வசதி, மின்சார ரயில், கிராசிங் ஸ்டேஷன்கள் வசதி, கூடுதலான ஒதுக்குப் பாதைகள், தள புனரமைப்பு முதலியன. ரயில் பாதைத் திறனை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை உருவாக்கும்போது, மூன்றும் திட்ட காலத்தில் ஏற்படக்கூடிய தொழில் நுட்ப முன்னேற்றங்களையும் ரயில்வே, கணக்கில் கொள்ளும் ; நிலக்கரியை ஒட்டு மொத்தமாக ஏற்றிச் செல்ல, சென்டர் பப்பர் : ப்ளர்கள் பொருத்தப்பட்ட புதிய போகி வாகன்களை முடியுமான அளவு உபயோகிக்கும். ரயில்வேக்களின் பல்வேறு பிரிவுகளிலும், வருங்கால் ரயில் போக்கு வரத்து அபிவிருத்தி எந்த வகையில் அமையும் என்பது பற்றி அதிகமான தகவல்கள் கிடைத்ததும், இந்த வேலைத் திட்டங்கள் விரிவான முறையில் அமைக்கப்படும். ரயில் பாதைகளைப் புதுப்பித்தல், பால வேலைகள், சிக்னலிங், பந்தோபஸ்து வேலைகள் முதலியவைகளுக்கும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

10. திட்ட காலத்தில் 1,200 மைல் நீளத்துக்குப் புதிய ரயில் பாதைகள் அமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. கார்வா ரோடு—ராபர்ட்ஸ் கஞ்ச், சாம்பல்பூர்-டிட்லாகார், பிமால்கார்-கிரிபுரு ஆகிய புதிய ரயில்பாதை வேலைகள் இரண்டாம் திட்டத்திலிருந்து மூன்றாவது திட்டத்துக்குத் தொடர்ந்து வருகின்றன. இவை போக, மேற்கொண்டு, கீழ்க் கண்ட புதிய ரயில் பாதைகளை அமைக்க வசதி செய்யப்பட்டுள்ளது: ஜுண்ட்-கண்ட்லா, மாதோபூர்-கத்துவா, உதயபூர்-ஹிமட் நகர், டில்லி தவிர்ப்பு லைன்கள், திவாபான்வெல்-உரான், பதர்கண்டி-தர்ம நகர், குணு-மாக்சி, ராஞ்சி-பொண்டமுண்டா, ஹிண்டுமல்கோட்-ஸ்ரீ கங்கா நகர், காஜியாபாத்-துக்காபாத், பைலாடிலா-கொடவல்சா. மூன்றாவது திட்டத்தில் நிலக்கரித் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக, இத்துடன் சுமார் 200 மைல் நீள புதிய பாதைகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

11. ரயில்வே தொழிற்சாலைகள், ரயில்வே தளங்களைத் திருத்தியமைத்தல், புதிய ரயில் பாதைகள் அமைத்தல் சம்பந்தப்பட்ட கூட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக ரயில்வே அலுவலர்களுக்கு வீடு வசதி செய்வது போக, 54,000 ஊழியர் வீடுகள் கட்டவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு வீடுகட்டுவது ரயில்வேயில் இதர கட்டிடங்கள் கட்டுவது சம்பந்தப்பட்ட விரிவான வேலைத் திட்டத்தில், நிர்மாணச் செலவில் முடியுமான எல்லாச் சிக்கனங்களும் கையாளும் விஷயம் கவனிக்கப்பட்டுள்ளது.

12. மூன்றாவது திட்டத்தில் ரயில்வே அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உருவாக்கும்போது, ரயில்வே தேவைகளில் சுயதேவைப் பூர்த்தி அம்சம் தொடர்ந்து கவனிக்கப்பட்டே வந்தது. இரண்டாவது திட்டத்தில் நாட்டில் ரயில்வே உருளைத் தளவாட உற்பத்தித் திறன் கணிசமாக அதிகரித்தது. இன்னும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்ற டீசல் இஞ்சின்கள், மின்சார ரயில் இஞ்சின்கள் போன்றவைகளை முடியுமான அளவு உற்பத்தி செய்ய மூன்றாவது திட்டத்தில் முயற்சி செய்யப்படும். ரயில்வே அபிவிருத்தித் திட்டங்களுக்கு, மூன்றாவது திட்டத்தில் அயல்நாட்டு நாணயச் செலாவணி வசதியின் தேவை சுமார் ரூபாய் 130 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது ; இரண்டாவது திட்டத்தில் இந்தத் தேவை ரூபாய் 320 கோடியாகும். உள்நாட்டு சப்ளை வசதிகளை அதிகரித்துக் கொள்ளுவதில் எந்த அளவுக்கு வெற்றி ஏற்பட்டிருக்கிறது என்பதை இது காட்டுகின்றது.

சாலைகள்

13. சாலை அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டம் 1943-ல் தயாரிக்கப்பட்டது. "நாகபுரித் திட்டம்" என்று சொல்லப்படும் அத்திட்டத்தில், சுமார் 20 ஆண்டுகாலத் தேவையை மனதில் கொண்டு, பெரும்படியான லட்சிய அளவுகள் குறிக்கப்பட்டன. 1948-ம் ஆண்டில், சொற்ப திருத்தங்கள் செய்யப்பட்ட அத் திட்டம், மொத்தம் 123,000 மைல் நீள தார் சாலை அமைப்பையும், 208,000 மைல நீள சாதாரண சாலையையும் பூர்த்தி செய்து முடிக்க வேண்டும் என்ற நோக்கமுள்ளது. முதலாவது இரண்டாவது

ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில், தார் சாலை, சாதாரண சாலை இரண்டின் விஷயத்திலும், நாகபுரி திட்ட லட்சிய அளவையும் மீறி வேலைகள் நடந்திருக்கின்றன. 1961-ம் ஆண்டில் நாட்டில் தார் ரோடுகள் 144,000 மைல் நீளமும், சாதாரண சாலைகள் 250,000 மைலுக்கு மேலும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாலமில்லாத ஆற்றுக் குறுக்குப் பாதைகள், போதிய அளவு உறுதியில்லாத சாலைகள், குறுகலான வழிகள் முதலிய குறைபாடுகள் சாலை இணைப்பு வேலைகளில் இருந்தாலும் கூட, மொத்தச் சாலைகள் விஷயத்தில் மேற்கண்டபடி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.

மாநில, மத்திய அரசாங்கங்களின் பிரதம இஞ்சினீயர்கள் 1961–81 காலத்துக்காக, மற்றொரு 20-வருஷ சாலை அபிவிருத்தித் திட்டத்தை அண்மையில் வகுத்தார்கள். அபிவிருத்தியடைந்த பகுதியிலும் விவசாய பிரதேசங்களிலும் எந்த கிராமத்தை எடுத்தாலும், 4 மைல் தூரத்துக்குள் கப்பி போட்ட சாலையும், 1½ மைலுக்குள் ஏதாவது ஒரு சாலையும் இருக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் பொதுப்படையான நோக்கமாகும். அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகள் பின் தங்கிய பகுதிகள் ஆகியவற்றின் விசேஷ தேவைகளையும் இத்திட்டம் கருத்தில் கொள்ளுகின்றது. இத் திட்டப்படி, 20 ஆண்டு முடிவில் மொத்தம் 252,000 மைல் நீள தார் சாலையும், 405,000 மைல் நீள சாதாரண சாலையும் இருக்கவேண்டும் எனபது லட்சிய அளவாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

14. இருபது ஆண்டுத் திட்டத்தில், வேலை முதலிய வரிசைக் கிரமம் பொதுப்படையாக பின்வருமாறு இருக்கும்: (அ) எல்லா ராஜபாட்டைகளிலும் பாலம் வேண்டியுள்ள இடங்களில் பாலம் அமைத்தல்; ஒரு வாகனம் செல்லும் அளவுக்காகிலும் சாலைகளில் தார்பாதை அமைத்தல்; (ஆ) பெரிய நகரங்களையடுத்த பிரதான சாலைகளை இரண்டு வாகனப் போக்கு வரத்து அளவுக்கும், அதற்கு மேலாகவும் அகலப்படுத்தப்படுதல்; (இ) பிரதான ராஜபாட்டைகள், குறைந்தபட்சம் இரண்டு வாகனப் போக்கு வரத்து வசதியோடு இருக்க வேண்டும்.

கிராமச் சாலைகளைப் பொறுத்தவரை, நல்ல பருவ நிலை தரமளவுக்கு அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே திட்டத்தின் முதல் நோக்கம் ஆகும். இந்த முதலிட வரிசைக்கிரம விஷயத்தில், சென்ற 10 ஆண்டுகளில், மாவட்ட, கிராம சாலைகளின் அபிவிருத்தியே தேவை அதிகரித்து வந்தது. இந்த மாவட்ட கிராமச் சாலைகளின் அபிவிருத்தியால், கிராமங்களில் வாழும் லட்சக் கணக்கான மக்கள் நேரடியாகப் பலனடைகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். மூன்றாவது திட்டத்தில் பல்வேறு வகை சாலைகளுக்கு லட்சிய அளவை பரிசீலிக்கும் போது, இந்த மாவட்ட கிராம சாலை தேவை, கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்தத் தேவை அம்சத்துடன், புதிய 20 ஆண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலிட வரிசைக் கிரமம், மூன்றும் திட்டத்தில் சாலை அபிவிருத்தித் திட்டத்துக்கு பொதுப்படையாக வழிகாட்டியாக

விளங்கும். ஆனாலும், நிதி வசதி குறைவாக இருப்பதின் காரணமாக 20 ஆண்டுத் திட்டத்தில் குறிப்பிட்ட விகிதத்தில் கூடுதலாகப் புதிய சாலைகள் அமைப்பதோ கூடுதலாகச் சாலைகள் அபிவிருத்தி செய்வதோ அடுத்த 5 ஆண்டுகளில் இயலாது.

15. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலை அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை வகுத்தபோது, போக்குவரத்து வசதியில் பின்தங்கிய பிரதேசங்களின் தேவை விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. அஸ்ஸாம், திரிபுரா, மணிப்பூர், ஹிமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் விஷயத்தில் மொத்த திட்டச் செலவில், சாலை அபிவிருத்தி வேலைகளுக்காக கொஞ்சம் கூடுதலாகவே நிதி ஒதுக்கப் பட்டது. வடக்கு வடகிழக்கு மலைப்பிராந்தியங்களில் சாலை அபிவிருத்தி வேலைகளுக்கும் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் மானிய உதவி அளிக்கிறது. மூன்றாவது திட்டத்தின் வேலைத் திட்டங்களில், அபிவிருத்தியடையாத பகுதிகள், மலைப்பிரதேசங்கள் ஆகியவைகளின் தேவைகள் முடியுமான வரை கவனிக்கப்படும்.

16. இரண்டாவது திட்ட காலத்தில் ஜில்லா போர்டுகள், நகராட்சிகள் ஆகியவற்றின் வேலைத் திட்டங்கள் மூலமும், சமுதாய நல வளர்ச்சி, ஸ்தல அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றின் கீழும் கணிசமான அளவில் ஸ்தல சாலை அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன. மூன்றாவது திட்டத்தின் கீழும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில், சாலை அபிவிருத்திக்கான வகை செய்யப்படும். இந்த வேலைத் திட்டங்கள் சிலவற்றின் விஷயத்தில் மக்க ளின் உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக உழைப்பு வடிவத்தில் மக்கள் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. முதல் திட்டத்தில் சாலை அபிவிருத்திக்காக ரூபாய் 155 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் சாலைகள் அபிவிருத்திக்காக ரூபாய் 250 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுபோக மேலே குறிப்பிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மூலமும் சாலை அபிவிருத்திக்காகப் பணம் செலவிடப்படுகிறது. முதல் இரண்டு திட்ட காலங்களில், நகரசபை சாலைகள் நீங்கலாக மற்ற சாலைகள் மொத்த நீளம் 50 சத விகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது 1950–51-ல் சாலைகள் மொத்த நீளம் 98,000 மைல்கள்; 1960–61-ல் இது 144,000 மைல்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றும் திட்டத்தில் சாலைகளுக்காக மொத்தம் ரூபாய் 250 கோடி ஒதுக்குவதென தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்தியசாலை நிதியி லிருந்து கிடைக்கக்கூடிய தொகையும் இதில் உள்ளடங்கும். இந்தப் புள்ளி விவரங்களை தற்காலிகமானதாகவே கருத வேண்டும். ஏனெனில், மாநில திட்டங்களில் சேர்க்கப்படும் சாலை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் விஷயத்தில், மாநில அரசாங்கங்கள் வகுக்கும் திட்டங்களைப் பொறுத்தும், மொத்தநிதி வசதி அளவுக்குள்ளாககடக்காமல், அந்த திட்டங்களுக்கு அவர் கள் அளிக்கிற முக்கியத்துவத்தை அனுசரித்துமே முடிவாகநிதி ஒதுக்கப்படும். ஒதுக்கப்படும் ரூபாய் 250 கோடியைக் கொண்டு, மூன்றாவது திட்டத்தில்

மேற்கொண்டு சுமார் 20,000 மைல் தார் சாலைகள் அமைக்கலாம். இது போக ஸ்தல சாலை அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அமைக்கப்படும் சாலைகள் வேறு உள்ளன. சாலை அபிவிருத்திக்காக மேற்கொண்டு நிதி ஒதுக்கும் விஷயம், கிடைக்கக்கூடிய ஆதார வசதிகளைப் பொறுத்து, காலக் கிரமத்தில் பரிசீலிக்கப்படும்.

சாலைப் போக்குவரத்து

18. சாலைப் போக்கு வரத்து முக்கியமாக, தனியார் துறையிடமே இருக்கும். ஆனால், பெருமளவுக்கு பிரயாணிகள் போக்குவரத்தைக் கவனிக்கின்ற, தேச உடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து சர்விஸை விஸ்தரிப்பதற்காக ரூபாய் 18 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களில் தேச உடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்தை விஸ்தரிக்கும் திட்டத்துக்கு ரயில்வேக்கள் தங்கள் பங்கை உதவவும், ரயில்வே திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. தேச உடமையாக்கப்பட்ட போக்கு வரத்து நிறுவனங்களில் திட்ட காலத்தில் மேற்கொண்டு 5,000 வண்டிகள் புதிதாகச் சேர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சாலைகள் விஷயத்தைப்போலவே சாலைப் போக்குவரத்து விஷயத்திலும், மாநில அரசாங்கங்கள், மாநில திட்டங்களில் எந்த அளவுக்கு நிதி வகை செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தே, இறுதியாக நிதி வசதி ஒதுக்கப்படும்.

19. தேச உடைமையாக்கப்பட்ட பஸ் போக்குவரத்து மூன்றும் திட்ட காலத்தில் விஸ்தரிக்கப்பட்ட போதிலும், அநேக பிரயாண சர்வீஸ்கள், தனியார் துறையிலேயே தொடர்ந்து இருந்துவரும். சாலை மார்க்க சரக்குப் போக்குவரத்து, அநேகமாகப் பூராவுமே தனியார் வசமே இன்னும் இருந்து வருகிறது. சாலைப் போக்கு வரத்துக்கு லைசென்ஸ் அளிக்கும் கொள்கையை தாராள முறையில் அமைக்க சமீப காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அயல் நாட்டு நாணயச் செலாவணி சங்கடங்கள் காரணமாக புதிய வண்டிகள் கிடைப்பது குறைந்து விட்டதினால் இரண்டாம் திட்ட காலத்தில் சாலைப் போக்கு வரத்தில் துரிதமான முன்னேற்றம் ஏற்பட முடியவில்லை. ஆயினும் கூட, 1950–51-லிருந்து 1960–61 வரை, சென்ற 10 ஆண்டுகளில், தேசத்தில் வாணிப ரீதியில் இயக்கப்படும். வண்டிகள் தொகை கிட்டத்தட்ட இரு மடங்காகியிருப்பதாக மதிப்பிடப்படுகிறது. கீழ்க்கண்ட அட்டவணை அதைப் புலப்படுத்தும் :—

அட்டவணை 3—வாணிப ரீதியில் இயக்கப்படும் வண்டிகள்

(ஆயிரத்தில்).

	பஸ்கள்.	சரக்கு வண்டிகள் (லாரிகள்).	மொத்தம்.
1950–51	34·4	81·9	116·3
1955–56	46·5	119·1	165·6
1960–61 (மதிப்பீடு).	54·0	150·0	204·0

மூன்ரும் திட்ட காலத்தில் வாணிப ரீதி சாலைப் போக்கு வரத்து எந்த அளவுக்கு அபிவிருத்தியடையும என்பது பெரும்பாலும் நாட்டின் மோட்டார்த் தொழிலின் உற்பத்தித் திறனைப் பொறுத்ததே யாகும். மோட்டார் தொழில் சம்பந்தப்பட்ட அட்ஹாக் கமிட்டி, இவ்விஷயமாகச் சிபார்சு செய்துள்ள லட்சிய அளவுகள், கைத்தொழில் பற்றிய அத்தியாயத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. வருங்கால சாலைப் போக்குவரத்து அபிவிருத்தி, நாட்டின் இதர போக்கு வரத்து வசதிகள் சம்பந்தமாக பூரா கொள்கையையும் ஆராய்ந்து வரும் போக்கு வரத்து கொள்கை இணைப்புக் கமிட்டியின் சிபார்சுகளை யொட்டி, இந்த லட்சிய அளவுகள் மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

கப்பல் போக்குவரத்து

20. முதல் இரண்டு திட்ட காலங்களில் நாட்டின் கப்பல் வசதி கணிசமாக அதிகரித்தது. 1950-51-ல் கப்பல் வசதியின் மொத்த நிறை 3·91 லட்சம் ஜி.ஆர் டி-யாக இருந்தது. முதல் திட்ட முடிவில் இது 4·80 லட்சம் ஜி.ஆர். டி-யாக உயர்ந்தது. அயல் நாட்டு நாணயச் செலாவணி சங்கடங்கள் இருந்தபோதிலும் கூட, இரண்டாவது திட்ட கால முடிவுக்கு 9 லட்சம் ஜி. ஆர். டி. என்று நிர்ணயிக்கப்பட்ட லட்சிய அளவு பூர்ணமாக நிறைவேறிவிடும் என்று தெரிகிறது. இந்தியாவின் கடல் வாணிபத்தில் சுமார் 8 லிருந்து 9 சதவிகிதம் வரை, சரக்குகளை இந்தியக் கப்பல் கொண்டு செல்வதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. முதலாவது, இரண்டாவது திட்ட கால முடிவில் கரையோர வர்த்தகத்திற்கும், கடல் கடந்த வர்த்தகத்திற்குமான கப்பல் வசதி நிலைமை பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4. கப்பல் வசதி (லட்சம் ஜி. ஆர். டி.

	1950–51.	1955–56.	1960–61. (மதிப்பீடு).
கரையோரக் கப்பல்கள் ..	2·17	2·40	2·92
கடல் கடந்து செல்லும் கப்பல்கள்.	1·74	2·40	6·13
மொத்தம் ..	3·91	4·80	9·05

முதல் திட்ட காலத்தில் கப்பல் வசதிஅபிவிருத்தி திட்டங்களுக்காக ரூபாய் 18·7 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் இந்த வகையில் ரூபாய் 54 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஒரு நடவடிக்கை கப்பல் தொழில் அபிவிருத்திக்கான காலாவதியாகாத நிதி (NonLapsing) நிறுவியதேயாகும். கப்பல்கள் வாங்க, கப்பல் கம்பெனிகளுக்கு கடன் உதவுவதே இந்த நிதி அமைப்பின் நோக்கம்

21. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக, தேசிய கப்பல் தொழில் போர்டு (நேஷனல் ஷிப்பிங் போர்டு) லட்சிய அளவைச் சிபார்சு செய்திருக்கிறது. கடல் கடந்த வாணிப கப்பல் வசதியில் 10·8 லட்சம் டன்களும் கரையோர வாணிப கப்பல் வசதியில் 3·4 லட்சம் டன்களுமாக 1965–66-ல் மொத்தம் 14·2 லட்சம் டன் அளவை அடைய வேண்டும் என்று அந்தச் சிபார்சில் கூறப்பட்டது. இந்த லட்சிய அளவை அடைவதற்காக கூடுதலாக வாங்க உத்தேசிக்கப்பட்டிருப்பது 5·2 லட்சம் ஜி.ஆர்.டியாகும். உழைக்கும் கால அளவைக் கடந்த கப்பல்களைப் புதுப்பிக்கும் வகையில் மொத்தம் தேவைப்படுவது 1·7 லட்சம் ஜி.ஆர்.டி. என போர்டு மதிப்பிட்டுள்ளது. இந்த வேலைகளுக்கு மொத்தம் ரூபாய் 118·8 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கப்பல் கம்பெனிகள் தங்கள் சொந்த வசதிகளிலிருந்து போட்டுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படும் ரூபாய் 14 கோடியும் இதில் அடங்கும். மூன்றாவது திட்டத்தில் கப்பல் தொழில் அபிவிருத்திக்காக, இப்போதைக்கு ரூபாய் 55 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்துடன், கப்பல் அபிவிருத்தி நிதியிலிருந்து ரூபாய் 4 கோடி கிடைக்கக்கூடும். இந்த நிதி வசதிக்கு ஏற்ற வகையில் கப்பல் கம்பெனிகள் தங்கள் பங்கில் உதவும் தொகை சுமார் ரூபாய் 7 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்குள்ளாக, திட்ட காலத்தில் புதுப்பிக்கும் வேலைகளையும் கவனித்துக் கொண்டு சுமார் 2 லட்சம் ஜி.ஆர்.டி. புதிதாகச் சேர்த்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படிக் கூடுதலாக வந்து சேரும் கப்பல்களில் பெரும்பாலானவை கடல் கடந்த வாணிபத்துக்காக பயன்படுத்தப்படும். கப்பல் தொழில் அபிவிருத்தித் திட்டத்தில் அபிவிருத்தி என்பது, பெருமளவுக்கு இக்காரியத்துக்கான அயல்நாட்டு உதவியைப் பொறுத்தே உள்ளது. கப்பல் தொழிலுக்கு மேற்கொண்டு நிதி ஒதுக்கும் விஷயம், திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு முன்பாக பரிசீலிக்கப்படும்.

துறைமுகங்கள்

22. இரண்டாவது திட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில் துறைமுகங்களில் அதிக நெரிசல் இருந்தது. துறை முகங்களின் திறனை அதிகரிக்கவும், இரண்டாவது திட்டத்தில் தொழிலபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக, கன ரக யந்திர சாமான்களை பெருமளவில் இறக்கிக் கொண்டு வருவதற்கான வசதிகள் செய்யவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. சாமான்களை இறக்குவதற்காக "ஓவர்சைடு டிஸ்சார்ஜ்" வசதி, கூடுதல் யந்திரக் கருவி சாதனங்களை அமைத்தது ஆகியன அந்த நடவடிக்கைகளில் குறிப்பிடத் தக்கவையாகும். பல்வேறு துறைமுகங்களில் குறிப்பாக கல்கத்தா, சென்னை, விசாகப்பட்டினம், கொச்சி ஆகியவைகளில் கப்பல் நிற்குமிட வசதிகளை அதிகரிப்பதற்காக, இரண்டாவது திட்டத்தில் சில பெரிய வேலைத் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. 1950–51-ல் முக்கிய துறைமுகங்கள் மொத்தம் 2 கோடி டன் சாமான் போக்கு வரத்தைச் சமாளித்தன. 1955–56-ல் இந்தச் சக்தி இரண்டரைக் கோடி டன்களாக

உயர்ந்தது. 1957–58-ல் முக்கிய துறைமுகங்கள் மொத்தம் 3·1 கோடி டன் சாமான் போக்குவரத்தைச் சமாளித்து வேலைத் திறனில் உச்ச நிலை காட்டின. ஏற்கெனவே, நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் பூர்த்தி யானதும், முக்கிய துறைமுகங்கள் மூன்றும் திட்ட காலத்தில் மொத் தம் 4·1 கோடி டன் சாமான் போக்குவரத்தைச் சமாளிக்கக் கூடும்.

23. மூன்றும் திட்ட காலத்தில், துறைமுகங்களின் ஏற்றுமதி, இறக்கு மதி சக்தியை அதிகரிப்பதை விட, தற்போதைய துறைமுக வசதிகளைப் பாதுகாப்பதும் அபிவிருத்தி செய்வதுமே முக்கிய நோக்கமாக இருக்கும். ஹுக்ளி நதியில் மணல் மேடிட்டு ஆழம் குறைந்து வரும் நிலைமை காரண மாக மணல் வாரி யந்திர வேலைகளில் விரிவான பயிற்சிக்கான விசேஷ வேலைத் திட்டங்கள் அண்மையில் கல்கத்தா துறைமுகத்தில் மேற்கொள்ளப் பட்டன. மூன்றும் திட்டத்தில் இந்த வேலைகளுக்காக நிதி ஒதுக்கப்படும். கல்கத்தா அருகே ஹால்டியாவில் துணைத் துறைமுகம் ஒன்றை அமைக்கும் யோசனையும், மூன்றுவது திட்டம் சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலனையில் உள்ள இதர முக்கிய திட்டங்கள் பின்வருமாறு : பம்பாயில் பிரதான துறைமுக வழியில் யந்திர முறையில் மணல் வாருதல் ; கப்பல் செப்பனிடுந் துறைகளை எல்லா வசதிகளும் இருக்கும்படியாக புதுப்பித்தல், சென்னையில், தண்ணீரில் நிறுத்தி செப்பனிடும் துறை வேலைகளை முடிப் பது, தொழிற்சாலைகளைத் திருத்தியமைத்து அபிவிருத்தி செய்வது, விசா கப்பட்டினத்தில் மேற்கொண்டு கப்பல் நிற்குமிடங்களை அமைப்பது, கனிப் பொருள்களை எடுத்துப் போடுவதில் யந்திரங்களைப் பயன்படுத்தல், கண்ட லாவில் கடல் அடிப்பாகத் தடைகளை அகற்றுவதற்கான பயிற்சித் திட்டம்.

24. இரண்டாவது திட்டத்தில், துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்காக மொத்தம் சுமார் ரூபாய் 60 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மூன்றுவது திட்டத்தில் பெரிய துறைமுகங்களுக்கும் சிறிய துறைமுகங்களுக்குமாக ரூபாய் 85 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக் கிறது. துறைமுகங்களின் சொந்த நிதி வசதிகளிலிருந்து கிடைக்கும் தொகையும் இதில் உள்ளடங்கியது.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

25. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி வசதி ஒதுக்கப்பட்ட மிக முக்கியமான வேலைகளில் கங்கா, பிரம்மபுத்திரா போர்டு மேற் கொண்ட பரீட்சார்த்த திட்டமும், மேற்குக் கரை கால்வாய்கள் அபிவிருத் தியும், பண்டுவில் சிறிய துறைமுக வசதி வேலையும் குறிப்பிடத் தக்கவை யாகும். வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்நாட்டு நீர் மார்க்கப் போக்கு வரத்தை நடத்தும் முக்கிய ஸ்தாபனத்தினரான ஜாயிண்ட் ஸ்டீமர் கம் பெனியார், மிகப் பழைய பாணியிலும், நைந்து போயும் உள்ள ஸ்டீமர்களை நீக்கிவிட்டு, தங்கள் போக்குவரத்து அமைப்பை முற்றிலும் நவீன மயமாக்க சென்ற ஆண்டில் ஒரு வேலைத் திட்டம் வகுத்துள்ளனர்.

26. உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து அபிவிருத்திக்காக, இரண் டாவது திட்டத்தில் மொத்தம் ரூபாய் 75 லட்சம் செலவாகும் என்று

மதிப்பிடப்பட்டிருக்கிறது ; ஆனால் மூன்றாவது திட்டத்தில் உள் நாட்டு நீர்வழிப் போக்கு வரத்து அபிவிருத்திக்காக ரூபாய் 6 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டு நீர் வழி போக்குவரத்து கமிட்டி அண்மையில், உள்நாட்டு நீர் வழி போக்குவரத்துப் பிரச்னையை விரிவாகப் பரிசீலனை செய்தது. அக்கமிட்டியின் சிபார்சுகளைக் கருத்தில் கொண்டு மூன்றாவது திட்டத்துக்கான விரிவான வேலைத் திட்டம் வகுக்கப்படும். பரிசீலனையில் உள்ள சில முக்கிய வேலைத் திட்டங்கள் வருமாறு :— முக்கியமான ஆறுகளின் நீர்வளங்களை அளவெடுத்தல் ; பிரம்மபுத்ரா நதிக்காகவும் சுந்தர்பான்ஸ் பிரதேசத்துக்காகவும் மணல்வாரி யந்திரக் கருவிகளை வாங்குதல் ; சுந்தர்பான்ஸ் பகுதியில் நாட்டுப் படகுகளைச் செலுத்து வதற்கான திட்டம், அஸ்ஸாமில் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கான வசதிகள், சில மாநிலங்களில் குறிப்பாக கேரளம், ஒரிஸா போன்றவை களில் படகு செல்லும் கால்வாய்கள் அபிவிருத்தி.

கலங்கரை விளக்குகள்.

27. பல புதிய கலங்கரை விளக்குகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள வற்றை திருத்திப்புதுப்பிக்கவும், இரண்டாவது திட்டத்தில் உத்தேசிக்கப் பட்டது. இரண்டாவது திட்ட வேலை ஆரம்பமானதிலிருந்து, 65 புதிய கலங்கரை விளக்குகளும், மற்றும் ரேடியோ மூலமான அபாய அறிவிப்பு, அதிசக்தி ரேடியோ டிரான்ஸ்மிஷன் செட்டுகள், ஒளி உள்ள அல்லது ஒளியற்ற மிதப்புகள் உள்ளிட்ட சில கப்பல் உதவி சாதனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஐம்பது கலங்கரை விளக்குகள், மற்றும் ராடார், ரேடியோ மூல மான அபாய அறிவிப்பு, மூடுபனி சமிக்ஞைகள், ஒளி மிதப்புகள் ஆகிய வைகளை அமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் கல்கத்தாவில் இரு டெக்கா நேவி கேட்டர் செயின்களையும், கலங்கரைவிளக்கு ஒர்க் ஷாப்பையும் ஒரு பரிசோதனைக்கூடத்தையும் அமைப்பதற்கான வேலைகளும் நடைபெற்று வரு கின்றன. இரண்டாவது திட்டத்தில் கலங்கரை விளக்குத் திட்டங்களுக்குகாக மொத்தச் செலவு மதிப்பு சுமார் ரூபாய் 2·73 கோடி. மூன்றாவது திட்டத் தில் கலங்கரை விளக்கு துறைக்காக ரூபாய் 6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு முதலிடம் தரப்படும். மூன்றும் திட்ட காலத்தில் பல கலங்கரை விளக்குகள் ஏற்படுத்தப்படும்.

சிவில் விமானப் போக்குவரத்து

28. சிவில் விமானப் போக்குவரத்து, துரிதமான வளர்ச்சியடைந்தி ருக்கிறது. விமான சர்வீஸ்கள் தேச உடமையாக்கப்பட்ட வருஷமாகிய 1953-க்கும் 1959-க்கும் இடையில், விமானங்கள் மூலம் ஏற்றிச் செல்லப் பட்ட பிரயாணிகள் தொகை 4·0 லட்சத்திலிருந்து 7·2 லட்சமாக உயர்ந் துள்ளது. விமானங்கள் மொத்தம் பறந்த தூரம் 1·92 கோடி மைலி லிருந்து 2·49 கோடி மைல்களாக அதிகரித்தது. ஏற்கனவே உள்ள

பல விமான நிலையங்களைப் புதுப்பிக்கவும் அபிவிருத்தி செய்யவும் அத்துடன் இரண்டு விமான கார்ப்பரேஷன்களின் விமானங்கள் தொகையை அதி கரிக்கவும் இரண்டாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டது. விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மேற் கொள்ளப்பட்ட வேலைகளில் முக்கிய மானது, சாந்தா க்ரூஸ், டம் டம், பாலம் ஆகிய விமான நிலையங்களை, ஜெட் விமானங்கள் வந்து போகும்படியாக அபிவிருத்தி செய்ததாகும். விமான கார்ப்பரேஷன்களில் இந்தியன் ஏர் லைன்ஸ் இரண்டாம் திட்ட காலத்தில் மேற்கொண்டு 10 வைகவுண்ட் விமானங்களை வாங்கியது; டகோட்டாக்களுக்குப் பதிலாக அமர்த்துவதற்கென 5 போக்கர் பிரண்ட் ஷீப் விமானங்களுக்கு ஆர்டர் கொடுத்தது ; ஏர் இந்தியா இன்டேர் நேஷ னல் 5 சூபர் கான்ஸ்டலேஷன் விமானங்களை வாங்கியது ; 4 போயிங் ஜெட் விமானங்களுக்கு ஆர்டர் கொடுத்தது.

29. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிவில் விமானப் போக்கு வரத்துக்கு ரூபாய் 55 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் விமான நிலைய வேலைகளுக்காக ரூபாய் 22 கோடியிலிருந்து ரூபாய் 25 கோடி வரையும் இரு விமானக் கார்ப்பரேஷன்களுக்காக ரூபாய் 30 கோடியிலிருந்து 33 கோடி வரையும் வழங்கப்படும். பல்வேறு விமான நிலையங்களில் நவீன சாதனங்கள் அமைப்பது, சில புதிய விமான நிலயங் களையும் கிளைடர் தளங்களையும், விமானம் இறக்குமிடங்களையும் ஏற்படுத் துவது முதலிய வேலைகளுக்கு திட்டம் வகை செய்யும். இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பரேஷன், டகோட்டா விமானங்களை மாற்றிச் கொள் வதற்கும், ஏர் இந்தியா இன்டர் நேஷனல் கூடுதல் ஜெட் விமானங்கள் பெறுவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

செய்தித் தொடர்பு

30. முதல் இரண்டு திட்ட காலங்களில் செய்தித் தொடர்பு வசதிகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. 1950-51-க்கும் 1960–61-க்கும் இடையில் தபாலாபீஸ்கள் தொகை மொத்தம் 36,000-லிருந்து 75,000–ஆக வும், பொது டெலிபோன் நிலையங்கள் தொகை 338-லிருந்து 2,250–ஆகவும், தந்தி ஆபீஸ்கள் 3,600-லிருந்து 6,300-ஆகவும், டெலிபோன் கனெக்ஷன் கள் 168,000-லிருந்து 475,000-ஆகவும் அதிகரித்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மூன்றும் திட்ட காலத்தில் மேற்கொண்டு 20,000 தபாலாபீஸ்கள், 2,000 தந்தி ஆபீஸ்கள் ஏற்படுத்தவும், மேற்கொண்டு 2 லட்சம் டெலிபோன் கனெக்ஷன்கள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. டெலிபோன் இலாகாவின் வேலைத் திட்டம் "கோக்சியல் கேபிள்கள்" போடும் திட்டத்தை நீடிக்கவும் வகை செய்கின்றது. நாட்டின் முக்கியமான நக ரங்களுக்கிடையே டெலிபோன் சர்வீஸை நவீனமயமாக்கவும் அபிவிருத்தி செய்யவும் இத்திட்டம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தபால் தந்தி துறைக்கு ரூபாய் 68 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அந்த இலாகாவின் புதுப் பிக்கும் ரிசர்வ் நிதி (Renewals Reserve Fund)-யிலிருந்து கிடைக்கும் நிதியும் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படும்.

31. முதலாவது, இரண்டாவது திட்டங்களில் செய்யப்பட்ட முயற்சிகளின் பயனாக, தபால் தந்தி இலாகா, தனது சாதனத் தேவைகளில் பெரும்பகுதியை உள்நாட்டு உற்பத்திகளிலிருந்தே பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது திட்ட காலத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக இதற்கு சிறு அளவில் மட்டுமே அந்நியசெலாவணி தேவையாக இருக்கும்.

32. கடல்கடந்த நாடுகள் செய்தித் தொடர்பு, இந்திய வானியல் துறை, வயர்லஸ் திட்ட இணைப்பு ஆகிய பணிகளுக்காக மூன்றாவது திட்டத்தில் ரூபாய் 5 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு திட்ட காலங்களில், கடல் கடந்த நாடுகளுடன் செய்தித் தொடர்பில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 26 கம்பியில்லாத் தந்தி சர்வீஸ்களையும் 24 ரேடியோ டெலிபோன் சர்வீஸ்களையும் 12 ரேடியோ போட்டோ சர்வீஸ்களையும் இலாகா நடத்தி வருகின்றது. விமானப் போக்குவரத்துக் கம்பெனிகள், வியாபார நிறுவனங்கள் ஆகியவைகளின் நன்மைக்காக, குத்தகை முறையில் சில செய்தித் தொடர்பு வழிகளையும் (leased circuit) இலாகா ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. மூன்றும் திட்ட காலத்தில் இந்த சர்வீஸ்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப்படும். மேற்கொண்டு கருவி சாதனங்கள் வாங்கவும் அலுவலக கட்டிடம், குடியிருப்புக் கட்டிடங்கள் ஆகியவைகளைக் கட்டவும் வகை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

33. வானியல் துறை சம்பந்தமாக முக்கியமான விமான நிலையங்களின் வானிலைத் தகவல் பிரிவுகளில், புயல் சின்னங்களை அறியும் ராடார்களையும் இதர கருவி சாதனங்களையும் அமைத்து அவைகளை நவீன மயமாக்குவதற்காக, முதல் இரண்டு திட்ட காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமிர்தசரசில் ஒன்றும் வீரவாலில் ஒன்றுமாக இரண்டு புதிய வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இலாகாவின் தொழில் நுட்ப சர்வீஸ்களை அபிவிருத்தி செய்ய நவீன கருவி வசதிகள் ஏற்படுத்துவதே மூன்றாவது திட்டத்தில் முக்கிய வேலையாக இருக்கும். உயர் மட்ட ஜெட் விமானங்கள், இந்தியா வழியாகச் செல்லுவதில் உதவி செய்வதற்காக, மேலும் பல நிலையங்களில் நவீன சாதனங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இலாகாவின் கருவி சாதனத் தேவைகளில் ஓரளவுக்கு சுய தேவைப் பூர்த்தி காணும் நோக்கத்துடன் இலாகாவின் தொழிற்சாலைகளையும் பரிசோதனைக் கூடங்களையும் விரிவுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உல்லாசச் சுற்றுப் பிரயாணங்கள்

34. இந்தியாவுக்கு வரும் அயல் நாட்டு உல்லாச சுற்றுப் பிரயாண யாத்ரீகர்கள் தொகை சமீப வருஷங்களில் கணிசமாக அதிகரித்திருக்கிறது. இந்த மகிழ்ச்சிப் பயண யாத்ரீகர்கள் மூலமாக அயல் நாட்டு செலாவணி வருமானம் 1950-ல் ரூபாய் 4·2 கோடியாக இருந்ததானது, 1958-ல் ரூபாய்

17·5 கோடியாக அதிகரித்துள்ளது. உள்நாட்டிலும் மகிழ்ச்சிச் சுற்றுப்பிரயா ணங்கள் அதிகரித்துள்ளன. முக்கியமான டூரிஸ்ட் நிலையங்களில் தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி, கேளிக்கை வசதிகள் ஆகியவை அமைத்துக் கொடுக்க இரண்டாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டது, இந்தத் திட்டம், அயல் நாட்டு நாணய செலாவாணியை சம்பாதிக்க உதவு கிறது என்பதால், உல்லாச சுற்றுப் பிராயண வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்துக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருக்கிறது.

ஒலிபரப்பு

35. ஒலி பரப்புத் துறையில் சென்ற பத்து ஆண்டுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதல் திட்டத்தில், ஒவ்வொரு மொழிப் பிரதேசத்திலும் குறைந்த பட்சம் ஒரு ஒலிபரப்பு நிலையம் ஏற்படுத்தப் பட்டது. அதன் மூலம் மொத்த ஒலி பரப்பு நிலையங்கள் 26 ஆயின. இரண்டாவது திட்ட முடிவில் இவற்றின் தொகை 28 ஆக உயர்ந்தது. உள்ள சர்வீஸ்களை எந்த அளவுக்கு விரிவாகப் பணியாற்றச் செய்ய முடி யுமோ அந்த அளவுக்கு விரிவாகப் பணியாற்றச் செய்வதும், அயல்நாட்டு ஒலிபரப்பு சர்வீஸ்களை பலப்படுத்துவதுமே இரண்டாவது திட்டத் தின் நோக்கமாக இருந்தது. உள் நாட்டில் ஒலிபரப்பு வசதிகளை இன் னும் திறம்பட்ட முறையில் அமைப்பதற்காக நடுத்தர அலை ஒலிபரப்பு சர் விசை விரிவுபடுத்தவும், முன் கூட்டி ஒலிப்பதிவு செய்து கொள்ளும் ஏற் பாடுகளை பலப்படுத்தவும், மூன்ருவது திட்டத்தில் வகை செய்யப்படுகிறது. அயல் நாட்டு ஒலிபரப்பு சர்விஸ்களை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய வும் மூன்ருவது திட்டத்தில் வகை செய்யப்படுகிறது. பம்பாயில் டெலி விஷன் சர்வீஸ் ஏற்படுத்துவதற்காகவும் கொஞ்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. இரண்டாவது திட்ட முடிவில் கிராமப்பகுதிகளில் சமுதாய நல ரேடியோ செட்டுகள் தொகை 72,000 ஆக உயர்ந்து விடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. மூன்ருவது திட்டத்தில் இவ்வேலை தொடர்ந்து மேற்கொள்ளப் படும்.

பொருள் குறிப்பு

அ

பக்கம்

அடிப்படைக் கல்வி .. 43, 119
அணு உலை .. 166
அணுசக்தி .. 166
அணு சக்திக் கமிஷன் .. 163, 166, 167
அணு மின்சாரம் .. 217, 218
அதிக வேலை வாய்ப்பு .. 38, 98
அபிவிருத்தி குன்றிய பொருளாதார அமைப்பு .. 77
அபிவிருத்தி வரி .. 212
அப்ஸரா .. 166
அமெரிக்க ஏற்று மதி இறக்குமதி பாங்க் .. 56, 57
அரக்கு .. 95, 176
அரசாங்கத் துறையில் முதலீடு .. 33, 51, 55
அரசாங்கத் தொழில் முயற்சியும் தனியார் முயற்சியும் 2, 3
அரசாங்க நிர்வாக நெறிமுறைக் கோட்பாடுகள் .. 2, 4
அரிக்கப்பட்ட நிலங்கள் .. 205
அலுமினிய உற்பத்தி .. 261, 262
அலுமினியம் .. 23, 42, 261

ஆ

1 ஆசிரியர்கள்—
- அ.—ஆசிரியர் பயிற்சி .. 126-127
- ஆ.—ஆசிரியர் தேவை .. 158
- இ.—ஆரம்பப் பள்ளி ஆசிரியர் .. 160
- ஈ.—உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் .. 160
- உ.—சம்பள வீத உயர்வு .. 126-127
- ஊ.—நடுத்தரப் பள்ளி ஆசிரியர் .. 160

ஆதாரங்களைச் சேகரித்தல் .. 9
ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் .. 191
ஆராசி வேலைத் திட்டக் குழு .. 91
ஆராய்ச்சித் தொகுப்பு வசதிகள் .. 164
ஆரம்பச் சுகாதார நிலையங்கள் .. 44
ஆரம்பச் சுகாதார யூனிட்டுகள் .. 131
ஆள்பல வசதிகள் .. 13
ஆள் பலம் .. 54, 77
- அ.—பயன் படுத்தல் .. 13, 44
- ஆ.—வசதிகள் .. 186

ஆற்று நீர் வசதிகள் .. 206

பக்கம்

இ

இடம் பெயர்ந்த மக்களின் புனர் வாழ்வு 144, 145, 152
இடைத் தரகர் முறையை ஒழித்தல் 109, 110-111
இநதியன் ஏர்லைஸ் 292
இந்தியச் சமூகப் பணிக் கழகம் 74-75
இந்தியச் சிறுவர் நலக் கழகம் 74-75
இந்திய நில ஆராய்ச்சி சர்வே 11,91
இந்தியப் புள்ளி விவர நிறுவனம் 91
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 11
இரண்டாவது திட்ட நிதி ஆதாரங்கள் 55
இரண்டாவது திட்டத்தில் விஞ்ஞான அபிவிருத்தி .. 27
இரும்புக் கனி 252
இரும்பும் உருக்கும் 40-41, 93-94 261, 270
இளங் குற்றவாளிகள் 92, 151
இறக்குமதி 92
இறக்குமதித் தேவைகள் 65-66
இறக்குமதி பராமரிப்பு 61-62
இறக்குமதியால் பண வீக்கம் அதிகரித்தல் 59

உ

உணவுத் தானிய உற்பத்தி 39, 169
உணவுத் தானிய உற்பத்தி அதிகரிப்பு 17, 169
உணவுத் தானியங்கள் 176
உணவுத் தானிய உற்பத்தியில் தன்னிறைவு 13
உணவுத் தானியங்களை உபயோகித்தல் 40
உணவுத் தானியப் பெருக்கத்துக்கான முதலீடுகள் .. 241
உணவுப் பொருள் அபிவிருத்தி 172
உபயோகப் பொருள் உற்பத்திப் தொழில் 264
உபயோகிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 193
உபரி நிலங்களை மீண்டும் பங்கிடுதலும் அவற்றில் குடிய மர்த்தலும். 109
உயர் நிலைக் கல்வி 115-116, 119-121
உர உற்பத்தி இலக்குகள் 41
உரங்களை உபயோகித்தல் 22, 40, 173
உரங்கள் சப்ளை 173
உலக பாங்கு 57
உலோகத் தொழில், என்ஜினீரிங் தொழில்கள் .. 261
உல்லாசச் சுற்றுப் பிரயாணங்கள் .. 239-294
உள் நாட்டு ஆதாரங்கள் 9-10

	பக்கம்
உள் நாட்டு நீர் வழிப் போக்கு வரத்துக் கமிட்டி	290—291
உள்நாட்டு நீர்வழிப் போக்கு வரவு	290
உள்நாட்டு மீனவள அபிவிருத்தி	200
உள்ளூர் அபிவிருத்தி வேலை	78—79
ஊ	
ஊட்டச் சத்து	127,134,135
ஊதிய போர்டுகள்	106—107
ஊதியங்கள்	106—107
ஊனமுள்ள தொகுதியினர்	151
எ	
எடுத்துக்கொண்ட நிலத்துக்கு நஷ்டஈடு அளித்தல்	110-111,112
எண்ணெய	267
எண்ணெய் வித்துக்கள்	169,176
எதிர்காலச் சகாய நிதி	56
எரு உற்பத்தி	173
என்ஜினீரிங் திட்டங்கள்	258—259
என்ஜினீரிங் தொழில்கள்	96,258
என்ஜினீரிங் பணியாளர்கள்	124,153
என்ஜினீரிங் பயிற்சி	153—154
என்ஜினீரிங் இயந்திர உற்பத்தித் தொழில் திட்டங்கள்.	258
ஏ	
ஏரி, குள பராமரிப்பு	80
ஏர்-இந்தியா-இன்டர் நேஷனல்	292
ஏற்றுமதிக் கட்டுப்பாடு	92, 93
ஏற்றுமதி மூலம் கிடைக்கும் தொகை	62, 63
ஏற்றுமதியின் வாய்ப்பு	51,62 92-93,94
ஏற்றுமதியை ஊக்குவித்தல்	9—10,6[illegible] 2-94
ஒ	
ஒருங்கிணைந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்	246—247
ஒருங்கிணைந்த அபிவிருத்தி	2
ஒலிபரப்பு	26,279,294
ஒலிபரப்பு நிலையங்கள்	294
ஒழுக்க அறிவு	123

கங்கை பிரம்மபுத்திரா போர்டு 290
கச்சாப்பட்டு 24
கச்சா பிலிம் உற்பத்தி 276
கடல்கலந்த பகுதிகளுடன் செய்தித் தொடர்பு 294
கடல் மீன் வள அபிவிருத்தி .. .. 199—200
கடிகாரத் தொழில்கள் 272
கட்டாய இலவசக் கல்வி 88,115,117
கட்டுப்படியாகாத நில உடைமைகள் 110
கட்டுமானச் செலவில் சிக்கனம் 67,72,74,76
கண்டக் திட்டம் 203
கதர் 24,229
கதர்-உற்பத்தி லட்சிய அளவு 229
கதர்-கிராமக் கைத்தொழில் கமிஷன் .. .. .. 232—233
கதர் நிதி ஒதுக்கீடும் செலவும் 230
கதர் விற்பனை 227
கதரும் கைத்தறியும் 227
கப்பல் அபிவிருத்தி நிதி 288
கப்பல் போக்குவரத்து 288
கம்பளம் 191
கம்பெனி நிர்வாகப் பிரச்சினைகள் 16
கயிறுத்தொழில் 42,229,230 235.236
கயிறுத் தொழில் போர்டு 93
கருவிகள் .. .. 23—24
கலங்கரை விளக்குகள் 279,291
கல்வி அபிவிருத்தி 26
கல்வி இலக்குகள் 116
கல்வித் திட்டச் செலவு 115
கல்வி வேலைத் திட்டங்கள் 115
கலால் வரி 96
கனரக யந்திரங்கள் .. .. 240—241
கனரக ரசாயனங்கள், ரசாயன உரங்கள் 262
கனரக ரசாயனங்கள், ரசாயன உரங்களுக்கான மூத லீடுகள். 241
கனிப்பொருள்கள் .. .. 252—253,266
கனிஜ எண்ணெய் .. .. 249—250
கஸ்தூரிபாய் காந்தி நினைவு டிரஸ்டு 75

கா

காகிதம் 42,256
காடுகள் 200,201

	பக்கம்
காடுகள் அபிவிருத்தி	200,201
காடு வளர்ப்பு	78,80,146. 204,205
காட்டுச் சாலைகள்	201,202
காந்தி நினைவி நிதி	74
காப்பி	95.176
காப்பி போர்டு	93
கால்நடை அபிவிருத்தி	195
கால்நடை மருத்துவ ஆஸ்பத்திரிகள்	197
கால்நடை மருத்துவக் கல்லூரி	27
கால்நடை மருத்துவ வசதிகள்	197
கால் நடை வளர்ப்பு	195,196,197
கிராம உற்பத்திப் பெருக்குத் திட்டம்	182–183
கிராமக் காடுகள்	184
கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்	188
கிராமக் கைத்தொழில்கள்	228
கிராமக் கைத்தொழில்கள் நிதி ஒதுக்கீடு	230
கிராமக் கைத்தொழில்கள் பயிற்சி வசதிகள்	233
கிராமங்களுக்கு மின்சார வசதி	14,15,219
கிராமச் சாலைகள்	81
கிராம தானம்	113.187
கிராமத்தில் ஆள்பலம்	77–82,88
கிராமத் தொழில்களும், சிறுதொழில்களும்—	226
(அ) கிராமத் தொழில்கள், கடன்கள்	230
(ஆ) கிராமத் தொழில்கள், திட்டச் செலவுகள்	230
(இ) கிராமத் தொழில்கள், நிதி ஒதுக்கீடு	230
(ஈ) கிராமத் தொழில்க்ள், லட்சிய அளவுகள்	229
(உ) கிராமத் தொழில்கள், வேலைத் திட்டங்கள்	232
(ஊ) கிராமத் தொழில்கள், வேலை வசதிகள்	230,231
கிராம நிலை ஊழியர்கள் பயிற்சி வசதிகள்	159–160
கிராமப் பஞ்சாயத்துக்கள்	185
கிராமப் பகுதியில் தண்ணீர் வசதிகள்	129
கிராமப் பகுதியில் வீட்டு வசதி	142–143
கிராமப் பள்ளிகள்	81
கிராம மின்சார வசதிக்கான மாவட்டத் திட்டங்கள்	220
கிராம மின்சார வசதிக்குச் சிறிய நீர் மின்சார யூனிட்டுகள்	220
கிருமி முரணி மருந்துகள்	24

பக்கம்

கு

குடிசைத் தொழில் உற்பத்தி வேலைத் திட்டங்கள் .. 42
குடி மராமத்துப் பொறுப்புகள் 79, 171
குடிவார முறை சீர்திருத்தம் .. .. 109—112
குடும்பக் கட்டுப்பாடு 44, 127–128, 137
குடும்ப நில உடைமை 112
குத்தகைக்காரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுதல் .. 111—112
குத்தகையை முறைப்படுத்துவதும் குறைப்பதும் .. 109
குறைந்தபட்ச ஊதியம் 106
குறைந்த பட்ச வசதிகள் 81
குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு வசதி .. 138,139 140,142
குற்ற பரம்பரைப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட மலை ஜாதியினர் 148

கூ

கூட்டுறவு .. .. 188—195
கூட்டுறவு இயக்கம் 22
கூட்டுறவுக் கடன் வசதி 190
கூட்டுறவு காமன் வெல்த் .. .. 2—3
கூட்டுறவுச் சங்கங்கள் .. .. 78—79
கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி 191
கூட்டுறவு சர்க்கரை ஆலை .. .. 192—193
கூட்டுறவு செயற்குழு 190
கூட்டுறவு நிர்வாகக் கழகங்கள் 105
கூட்டுறவு நிறுவனங்கள் 189
கூட்டுறவு பண்ணை .. .. 190, 193—195
கூட்டுறவு பயிற்சி 189, 193
கூட்டுறவு பண்ணை செயற்குழு 190
கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 192
கூட்டுறவு விற்பனை வசதிகள் 192

கே

கேந்திர கிராமத் திட்டப் பகுதிகளில் கால் நடை வளர்ப்பு. 195-196
கேந்திர கிராமத் திட்ட முதலிரண்டு திட்டங்களில் முன்னேற்றம் 196

பக்கம்

கை

கைத்தறித் துணி உற்பத்தி லட்சிய அளவு 229
கைத்தறித் தொழில் 232
கைத்தறி நிதி ஒதுக்கீடு 230
கைத்தொழில் கருவிகள் 248
கைத்தொழில்களுக்கான கச்சாப் பொருள்கள் 237
கைத்தொழில்களுக்கான காஸ்கள் 277
கைத்தொழில்களுக்கான இயந்திரங்கள் 247–249
கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 193-231
கைத்தொழில் முதலிட வரிசைக் கிரமம் 239–240
கைத்தொழில் வேலைத் திட்டம் 241
கைவேலைத் தொழில்கள் 228, 235
கைவேலைத் தொழில்களுக்கு நிதி ஒதுக்கீடு 230
கைவேலைத் தொழில் பயிற்சி 235
கைவேலைப் பொருள்கள் வடிவமைப்பு 235

கோ

கோமாரி ஒழிப்பு 197
கோழி வளர்ப்பு 198
கோசித் திட்டம் 84

ச

சணல் 169, 176
சணல் பேல் கட்டும் யந்திரம் 192–193
சணல் பொருள்கள் 96
சதுப்பு நிலங்கள் 212
சரக்குப் போக்குவரத்து 287
சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன் 56, 57
சர்வதேச நிதி நிறுவனம் 62
சம உயரக் கரை கட்டல் 80, 171, 182.205
சம்பல் திட்டம் 84
சமூகக் கல்வி 22, 23
சமூகப் பொருளாதார கண்ணேட்டம் 109
சமூக நலச் செயற் குழு 149
சமுதாய அபிவிருத்தி இயக்கம் 21, 179
சமுதாய அபிவிருத்தி இயக்கம் பரவியுள்ள பகுதிகள் .. 178, 179
சமுதாய நலத்துடன் கிராம தான் வேலை இணைப்பு .. 187

பக்கம்.

சமுதாய நல வளர்ச்சி 14. 15, 40, 147, 152, 159 178, 179
சமுதாய நல வளர்ச்சித் திட்டம் 75, 81, 187
சமுதாய நல வளர்ச்சிப் பகுதிகள் 179, 180
சமூக நலத்திட்ட பயிற்சி வசதிகள். 159-160
சாயப்பொருள்கள் 241

சாலைகள்— 284

(அ) அபிவிருத்தி திட்டங்கள் 284-287
(ஆ) நிதி ஒதுக்கீடும் செலவும் 286

சித்தரஞ்சன் ரயில்வே என்ஜின் தொழிற்சாலை .. 247, 248
சிமிட்டி 23-24, 42, 241, 263, 264, 279
சிவில் விமானப் போக்குவரத்து 291, 292
சிறிய பாசனத் திட்டங்கள் 40, 79, 80

சிறு தொழில்கள்—

(அ) அபிவிருத்தி 24, 42, 226
(ஆ) ஒதுக்கீடும் செலவும் 24, 233
(இ) நிர்வாகம் 230

சிறு தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வசதிகள். 227
சிறு தொழில் பணி நிலையங்கள் 101
சிறு தொழில் பயிற்சித் திட்டங்கள் 24
சிறு தொழில்கள் மூலம் கூடுதல் வேலை வசதிகள் .. 231
சிறுவர் நலன் 230
சீரான பிரதேச வளர்ச்சி 151
சுகாதாரம் .. .. 82 முதல் 91
சுகாதாரத் திட்டம் 127-137
சுகாரதரத் திட்டச் செலவு விவரம் 127, 128
சுகாதார முதல் தேவைகள் 128
சுத்திகரிக்கப்படாத எண்ணெய் 34,41
சுரங்க ஆராய்ச்சி நிலையம் 91
செய்தித் தொடர்பு 292
செய்தித் தொடர்பு வசதிகள் 293
செயல்முறை பொருளாதார தேசீயக் கழகம் 91
செயற்கை முறையில் கருத்தரிப்பு நிலையங்கள் 1966
செலவில் சிக்கனம் .. .. - 66
சுயேச்சை நிறுவனங்கள் 75

பக்கம்

சேமிப்பு 52-53
சேரி ஒழிப்பு 75,138,141
சைக்கிள் 24,227
சொந்த நிலமுள்ள குடியானவர்கள் 110

டி

டி—டி—ட்டி. 24
டீஸல் என்ஜின்கள் 23
டீஸல் எண்ணெய் 25,26
251

த

தண்டகாரண்யத் திட்டம் 144-145,152
தண்ணீர்-மின்சக்தி ஆராய்ச்சி மத்தியக் கழகம் 11,91
தண்ணீர் வழங்கலும் துப்புரவும் 128-131
தந்தி வசதிகள் 25-26
தபால்-தந்தி 70,71
தபால் மூலம் கல்விப் பயிற்சி 155
தரமான நிர்வாகம் 99
தழை உரம் 170,173
தனியார் துறை முதலீடு 15-16,61,257
கனிப் பொருள்கள் 60-61,237
கிராமக் கைத்தொழில்களும் சிறு தொழில்களும் .. 60-61
கையிருப்புச் சாமான்கள் 60
பெரிய தொழில்களும் நடுத்தரத் தொழில்களும் .. 61
மின்சக்தி 60,213
முதலீடு 51,60,61
வீட்டு வசதி 60
வேளாண்மை 60
தாமிரம் 253,262
தாய்-சேய் நலம் 127
தாவர எண்ணெய்கள் 95
தாவர எண்ணெய் வித்துக்கள் 95
திட்ட ஆதாரங்கள் 52-54,55
திட்ட கருத்தரங்குகள் 76
திட்டச் செலவு 1,2,3,4, 11, 19,51
திட்ட வேலை மதிப்பீட்டு நிறுவனம் 91
தீக்குச்சித் தொழில் 201
தீவன வசதிகள் 196-197
துத்தநாகம் 262

பக்கம்

துர்காபூர் உருக்கு ஆலைகள் 244
துவக்கக் கல்வி 14,15,43,115
.. .. .. 116,116—119
துறைமுகங்கள்— 289
அபிவிருத்தித் திட்டங்கள் 289-290
செலவுகள் 290
தேங்காய் 176
தேசீய அபிவிருத்திக் கவுன்சில் 17-18,72
தேசீய ஆராய்ச்சிக் கூடங்கள் .. .. 86—87
தேசீயக் கப்பல் போர்டு 289
தேசீய நிர்வாகக் கழகம் 161
தேசீய மாணவர் படை 76
தேசீய வருமானம் 4-5,6-7,9.11
13,20,51,52
தேசீய வருமானத்தில் எதிர்பார்க்கப்படும் உயர்வு 9,11,37,38,52
தேசீய வளர்ச்சி 1
தேயிலை 93,95
தேனிரும்பு 96
தையல் யந்திரங்கள் 24,42
தொத்து நோய்க் கட்டுப்பாடும் ஒழிப்பும் 127-134
தொழில் உற்பத்திப் புள்ளி 265
தொழில் திட்டங்கள் 85,86,256
257
தொழில் துறை ஒழுங்கு நியதி 103,104
தொழில் துறை நிதிக் கார்ப்பொரேஷன் 15-16
தொழில் துறை வெடிமருந்துகள் 24,263
தொழில் துறை வேலை வாய்ப்பு .. ..
தொழில் பண்ணைகள் 229,235
தொழில் விளைஞர்கள் பயிற்சி 155
தொழில் பரவல் முறை 265
தொழிலமைக்கும் இடங்கள் 85,88
தொழிலாளர்—
கல்வி 88-89,105
கூட்டுறவுச் சங்கங்கள் 73,74,108,185
நலன் 105,106,108
வீட்டு வசதி 139-140
தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றுவதும் மதிப்பிடுவதும். 104
தொழிலாளர் நலக் கொள்கை 82-83,103,239
தொழிலாளர் ஆராய்ச்சி 108

பக்கம்

ப

பக்ரா-நங்கல் திட்டம் 84
பஞ்சாயத்துக்கள் 78-79
பஞ்சாயத்து சமிதி 69-70,78,80 186
பஞ்சாயத்து ராஜ்யம் 185

பட்டுத் தொழில்—

உற்பத்தி லட்சிய அளவு 229,235
பள்ளிக்கூடங்கள் 26
பல்கலைக் கழகக் கல்வி 43-44, 115, 121-122
பற்றுக்குறை நிதி முறை .. .. 57 59.
பற்றுக்குறை நிதி முறையின் விளைவுகள் 57
பற்றுக்குறை நிதிமுறையின் தீங்கற்ற அளவு 57
பதப்படுத்தப்படாத பதப்படுத்தப் பட்ட தோல் வகைகள் .. 95
பயறு வகைகள் 94-95
பயன்படுத்தாத ஆள்பலம் 54
பயிர்ப் பாதுகாப்பு 174
பரிசுப் பத்திரங்கள் 56
பருத்தி 95, 169. 176, 277,
பருத்தி உற்பத்தி இலக்குகள் 39
பருத்தித் துணி வகைகள் 96, 264
பல நோக்கப் பள்ளிகள் 120
பலநோக்க மலைஜாதியினர் வட்டாரங்கள் 145
பலபோக சாகுபடி 182
பழங்கள் 94-95, 192-193
பாக்கு 176
பாசனம் 77, 78, 172
பாசன ஆராய்ச்சித் திட்டம் 213
பாசன ஆராய்ச்சி வேலைகள் 213
பாசனத் திட்டச் செலவுகள் 209
பாசனத் திட்டங்கள் 206–213
பாசனத் திட்ட வடிவமைப்பு நிறுவனம் 213
பாசன நன்மைகள் 210
பாசன வசதிகளைப் பயன்படுத்துதல் 206
பாரதீய ஆதிமஜாதி சேவக சங்கம் 75
பாரத சாரணர் படை 76

பக்கம்

பாரத சேவக சமாஜம் 76
பால் உற்பத்தியும் பால் பொருளகளும் 199
பால் பண்ணை 198–199
பால் பண்ணை அபிவிருத்தி 199
பால் பண்ணைக கருவிகள் உற்பத்தி 199
பாஸ்பேட் உரம் 40, 253
பிச்சைககாரர் விடுதிகள் 150
பிலாய் உருக்கு ஆலை 244
பி.எல். P.L. 480 உடன் படிக்கை 56, 57, 62,64
பின்னிலை வகுப்பினர் 144,145, 161
பின்னிலை வகுப்பினர் நலன் 14, 15, 145
புகையிலை 96
புல்வெளிகள 204
புன்செய்ச் சாகுபடி முறை 40. 171, 173,2 03
பூதானம் 113
பெஞ்ச்-மாரிக் சர்வே 91
பெடரோலியம் பொருள்கள் 251
பெட்ரோலியம் 251
பெரிய தொழில்களும் சிறிய தொழில்களும் 61
பெரிய பாசனத் திட்டங்கள் 40
பொகாரோ உருககு ஆலை 244
பொதுக் கல்வி 43, 115
பொதுச் சுகாதாரம் 134, 135
பொதுச் சுகாதாரப் பணிகள் 127–128, 134, 135

பொது நிர்வாகம்—

திறமை 69
பயிற்சி 69

பொதுமககள ஒததுழைப்பு 74
பொதுமக்களிடமிருந்து வாங்கும் கடனகள் 55,56
பொருளாதார அமைப்பு 9–10
பொருளாதாரக் கொள்கை 1–2
பொருளாதார அபிவிருத்தி 1.2,7

பக்கம்

போக்குவரத்துக் கொள்கை— 279
இணைப்புக் கமிட்டி 279-280
அபிவிருத்தி 25
திட்டச் செலவு 43, 279
போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் கமிட்டி 279.280
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் 25,43,279
போதிய வேலையின்மை 98,99

ம

மகளிர் கல்வி 116-117
மகளிர்-சிறுவர் நலன் 150-151

மக்கள் தொகை—
இறப்பு வீதம் 5-6
பிறப்பு வீதம் 5-6
வளர்ச்சி வீதம் 5-6
மக்கள் நலத் திட்டங்கள் 144-149
மக்கள் நலப் பரப்புத் திட்டங்கள் 180-181
மக்கள் நலப் பரப்புப் பணிகள் 181
மண்ணெண்ணெய் உற்பத்தி மதிப்பீடு 251
மதுவிலக்கு 152
மத்திய சமூக நலக் கழகம் 75
மத்தியப் பணிகள் 161,162
மத்தியப் புள்ளி விவர நிறுவனம் 56
மலைத் தோட்டத் தொழிலாளருக்கு வீட்டு வசதி 138
மலைஜாதிப் பகுதிகள் 146
மலைஜாதி மொழிகள் 146
மர வகைகள் 202
மருத்துவக் கல்வி 44,136
மருத்துவப் பணியாளர்கள் 135-136
மருத்துவ மனைகள் 26,128, 131-132, 158
மருத்துவ முறைகள் 136-137
மருத்துவக் கல்லூரிகள் 26
மருந்துச் சரக்குகள் உற்பத்தித் திட்டங்கள் 256
மற்றப் பயிர்கள் அபிவிருத்தி 21

பக்கம்

மாணவர் துணைப் படை 76
மாவட்டத் திட்டங்கள் 184–185
மாவட்ட நிர்வாகம் 185–187
மாவு மில்கள் 192–193
மிளகு 95
மின்சக்தி 25, 213
மின்சார உற்பத்தி 23, 213-215
மினசாரக் கேபிள்கள் 274
மின்சார போக்குவரத்து லைன்கள் 219
மின்சார போர்டுகள 221
மின்சார நிறுவனம் 70, 71
மின்சார நிறுவனங்களின் முதலீடு 218
மினசார யந்திர சாதனத் திட்டஙகள் 238
மீனள இலட்சிய அளவுகள் 199–200
மீன் உற்பத்தி 95, 199-200
மீன்பிடி பயிற்சி வசதிகள் 159
மீன் வளம் 95, 199–200
மீன் வள அபிவிருத்தி 199
முதலாவது, இரண்டாவது திட்டச் செலவுகள் 19
முதலீட்டுப பொருளகள் 23–24
முதியோர் கல்வி 122–123
முதலிட வரிசைக் கிரமம் 180–181
முதலீட்டு வீதம் 249
முந்திரி 176
மூலதனத்தைச் சேகரித்தல் 77
மூனறாவது திட்ட நிதி ஆதாரங்கள் 55
மைகா 96
மோட்டார் 24, 42, 260, 261
யந்திரக் கருவிகள் 22–23: 24, 41
யந்திரக் கருவிகள் தொழிற்சாலை 248
யந்திரங்கள் 22–23, 41, 247
யந்திர நிர்மாணத் தொழிற்சாலை 247
யந்திர நிர்மாண வேலைத் திட்டங்கள் 240–241

ர

ரசாயன உரங்கள் 182, 253 254
ரசாயன உரங்களுக்கான முதலீடு 241

பக்கம்

ரசாயனத் தொழில்கள் 241, 254, 255, 263, 275
ரசாயனப் பொருள் அபிவிருத்தி 22-23
ரப்பர் 176
ரயில்வே— 280
அபிவிருத்தித் திட்டங்கள் 280
என்ஜின், பெட்டிகள், வாகனங்கள் 232
கொடுக்கும் பங்கு 55
தேய்மான நிதி 232
நிதி ஒதுக்கீடும் செலவும் 232
புதிய பாதைகள் 284
மின்சார மயமாக்குவது 283
ரயில்வேக்களில் முதலீடு 70-71
ரீஹாண்டுத் திட்டம் 41
ரூர்கேலா உருக்கு ஆலை 244
ரேயான் ஸ்டேபில் பைபர் 277

வ

வனத்துறை பணியாளர் தேவைப்பாடு 159
வடிகால் வசதிகள் 78, 173
வட்டாரம் திட்ட யூனிட் ஆதல் 184
வட்டார வளர்ச்சி நிறுவனம் 78, 79 180, 181 184
வர்த்தகம்—
உறவுகள் 97
ஒப்பந்தங்கள் 93
சங்கங்கள் 105-106
வர்த்தக-நிறுவன-நிர்வாகிகள் பயிற்சி 161
வரவு-செலவுத் திட்டப் பற்றுக்குறை 53, 57
வரி விதிப்பில் அதிகரிப்பு 58
வரி விதிப்பு—
அதிகப்படி வரி விதிப்பு 18, 58
மத்திய மாநிலங்கள் பங்கு 58-59
வரி விதிப்பு வரம்புகள்— 59
தேசீய வருமானத்தில் வரி விதிப்பு சத வீதம் 58-59
மூன்றுவது திட்டக் காலத்தில் வரி விதிப்பு இலக்குகள் .. 55-56, 58-59
வரி விதிப்புக் கொள்கையும் நடவடிக்கையும் 16,17,96,97
வருமானத்திலும் செலவிலும் ஏற்றத்-தாழ்வுகள் 13-16